# தமிழ்ப் பல்கலைக்கழகம்

**தஞ்சாவூர் - 613010**

**மற்றும்**

# அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

## உலக மகளிர் நாள்

## பன்னாட்டுக் கருத்தரங்கச் சிறப்பிதழ்

ISSN: 2582–399X Peer reviewed journal.www.aranejournal.com

**தொகுதி 1**

**நாள் 08.03.2023**

**தொகுப்பாசிரியர்கள்**

**முனைவர் ச. கவிதா**
**பேராசிரியர், இந்திய மொழிகள் மற்றும் ஒப்பிலக்கியப் பள்ளி,**
**தமிழ்ப் பல்கலைக்கழகம்**

**முனைவர் ச. சங்கீதா**
**இணைப் பேராசிரியர், சமூக அறிவியல் துறை,**
**தமிழ்ப் பல்கலைக்கழகம்**



முனைவர் **வி. திருவள்ளுவன்**
துணைவேந்தர்
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

## வாழ்த்துரை

மகளிருக்கான சமத்துவம், சுயச்சார்பு மற்றும் முன்னேற்றம் தொடர்பானவற்றை முன்னெடுத்து, பெண்களின் வளர்ச்சியை மேம்படுத்தும் வகையில் மகளிர் நாள் விழா ஒவ்வொரு ஆண்டு மார்ச் 8 அன்று உலகம் முழுவதும் கொண்டாடப்பட்டு வருகின்றது. நமது பல்கலைக்கழகத்தில் இவ்விழாவினை ஒரு கொண்டாட்டமாக மட்டுமல்லாமல் அறிவார்ந்த நிலையில் கருத்தரங்கமாக 'உலக மகளிர் நாள் பன்னாட்டுக் கருத்தரங்கம் - 2023' என ஆக்கபூர்வமான வகையில் நடத்தியுள்ள ஒருங்கிணைப்பாளர்கள் நால்வருக்கும் என் வாழ்த்துக்களும் பாராட்டுக்களும்.

கருத்தரங்கத்தோடு விழாவை முடித்துவிடாமல், அதை ஒரு பன்னாட்டு இணைய ஆய்விதழோடு இணைந்து சிறப்பிதழாக, அழகான கட்டமைப்புடன் வெளியிட்டுள்ளனர். இதில் பன்னாட்டு ஆய்விதழின் வெளியிட்டாளரும் ஒரு மகளிர் என்பது கூடுதல் சிறப்பு. பெண்களின் சிறப்பையும் வளர்ச்சியையும் எடுத்துரைக்கும் விதமாக மேற்கொள்ளப்பட்ட இம்முயற்சியானது தமிழ்ப் பல்கலைக்கழகம், மகளிர் மேம்பாட்டுக்கு உறுதுணையானது என்பதை உலகத்துக்குப் பறைசாற்றும் விதமாகவும் பல்கலைக்கழகத்தை மேம்படுத்தும் செயலாகவும் இருப்பதைக் கண்டு மகிழ்ச்சியடைகிறேன். மிகக் குறுகிய காலத்தில் இந்த பன்னாட்டுக் கருத்தரங்கத்தையும் ஆய்விதழையும் ஒருங்கிணைப்பாளர்கள் உருவாக்கியுள்ளனர்.

இருந்போதிலும் 100க்கும் மேற்பட்ட தரமான தமிழ், ஆங்கிலக் கட்டுரைகள் இந்த நூலுக்கு வலுசேர்த்துள்ளன. இலங்கை, மலேசியா, சிங்கப்பூர், கனடா என வெளிநாடுகளில் இருந்தும் இவ்விதழுக்குக் கட்டுரைகள் வந்துள்ளன. இக்கட்டுரைகளை உலகமெங்கும் உள்ள ஆய்வாளர்களும் மாணவர்களும் படித்து அதற்கான மதிப்பீட்டைப் பெற்றுப் பயனடையும் வகையில் இப்பன்னாட்டுக் கருத்தரங்கினை ஒருங்கிணைத்த பேராசிரியர்கள் நால்வருக்கும் மீண்டும் எனது பாராட்டுக்களும் வாழ்த்துக்களும்.

துணை வேந்தர்



முனைவர் **சி. தியாகராஜன்**
பதிவாளர் (பொ)
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

## வாழ்த்துரை

உலக அளவில் பெண்களின் வளர்ச்சியைப் போற்றும் வகையிலும் தடைகளைத் தாண்டி இயங்குவதற்குப் பெண்களுக்கு மேலும் ஊக்கமளிக்கும் வகையிலும் ஆண்டுதோறும் கொண்டாடப்படும் மகளிர் நாள் விழா இந்த ஆண்டு நமது பல்கலைக்கழகத்தில் உலக மகளிர் நாள் பன்னாட்டுக் கருத்தரங்கம் - 2023' என்ற நிகழ்வாக நடைபெற்றுள்ளது. அதற்காக இக்கருத்தரங்கில் ஒருங்கிணைப்பாளர்களுக்கு எனது வாழ்த்துகள்.

இவ்விழாவினையும் பன்னாட்டுக் கருத்தரங்கினையும் நான்கு மகளிர், வெவ்வேறு துறை சார்ந்த பேராசிரியர்கள் இணைந்து ஒருங்கிணைத்திருப்பதை எண்ணி மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். நாளிதழின் சிறப்புப் பக்கங்கள், ஊடகங்கள், ஆய்விதழ்கள், கருத்தரங்குகள் என ஆய்வாளர்கள் தங்கள் ஆய்வுரைகளை எழுதுவற்கான களங்கள் பெருகியுள்ள இக்காலகட்டத்தில் ஆய்வாளர்கள், தமிழ் ஆர்வலர்கள், பேராசிரியர்கள் ஆகியோரிடம் ஒரு பொருண்மை சார்ந்து ஆய்வுக் கட்டுரைகளைப் பெற்றுத் தொகுப்பாக வெளியிடுவது என்பது சற்று கடினமான செயலெனினும் அதனை எளிதாக, மிகக் குறுகிய காலகட்டத்தில் பெற்றுப் பன்னாட்டுக் கருத்தரங்கமாக நிகழ்த்தியும் ஆய்விதழை வெளியிட்டும் இருக்கின்ற இருக்கருத்தரங்க ஒருங்கிணைப்பாளர்களின் திறமை பாராட்டுதற்குரியதாகும். அறிவுத்தளம் சார்ந்த மகளிரின் வளர்ச்சி மற்றும் அனுபவப் பகிர்வாகத் திகழும் இருக்கருத்தரங்கச் சிறப்பிதழ் உலக மக்கள் அனைவருக்கும் இணையவழியில் சென்று சேர்ந்து இப்பன்னாட்டுக் கருத்தரங்கத்தின் நோக்கத்தை நிறைவு செய்ய இருப்பது இரட்டிப்பு மகிழ்ச்சியாகும். அனைத்து மகளிர்களுக்கும் உலக மகளிர் தின நல்வாழ்த்துகளைத் தெரிவிப்பதுடன் இக்கூட்டு முயற்சிக்கு வித்திட்ட அனைவரையும் பாராட்டி மகிழ்கிறேன்.

பதிவாளர் (பொ)

## தொகுப்பாசிரியர் உரை

வணக்கம்!

மகளிர் நாள் விழா-2023ஐ, பன்னாட்டுக் கருத்தாங்கமாக நிகழ்த்துவதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறோம். நாங்கள், தோழியர் நால்வரும் இணைந்து மகளிர் நாள் விழா-2023, பன்னாட்டுக் கருத்தரங்கம், மின்னிதழுக்கான கட்டுரைத் தொகுப்பு வெளியீடு முதலிய வற்றை ஆக்கப்பூர்வமாக, சிறந்த முறையில் நிகழ்த்த ஒப்புதலும் நல்லாதரவும் வழங்கிய எங்களது தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் மாண்பமை துணைவேந்தர் மற்றும் பதிவாளர் அவர்களுக்கு எங்களது வணக்கத்தையும் நெஞ்சார்ந்த நன்றியினையும் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறோம். மிகக் குறைந்த நாளில் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த கருத்தரங்க அறிவிப்பு மற்றும் அழைப்பினை ஏற்று நூற்றுக்கும் மேற்பட்ட கட்டுரைகள் வரப்பெற்றன. அவற்றை எழுதி, வழங்கி இந்தப் பன்னாட்டுக் கருத்தரங்கம் மற்றும் மின்னிதழ் வெளியீட்டிற்குப் பேராதரவு அளித்த பேராசிரியப் பெருமக்கள், ஆய்வாளர்கள், தமிழ் ஆர்வலர்கள், மாணவர்கள் அனைவருக்கும் இதயம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம். இந்த பன்னாட்டுக் கருத்தரங்கத்தினை எங்களோடு இணைந்து நடத்துவதற்கும் இதனை ஓர் இணைய இதழாகத் தமது அரண் பன்னாட்டு இதழில் வெளியிடப் பல்வகையிலும் துணைநின்ற அரண் பன்னாட்டு இணைய மின்னிதழின் பதிப்பாசிரியரும் பண்பார்ந்த தோழியுமாகிய முனைவர் பிரியா கிருஷ்ணன் அவர்களுக்கு கோடானகோடி நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம். மகளிர் என்ற ஒற்றைப் பொருண்மையை மையப்படுத்திய பல்வேறு ஆய்வுக் கட்டுரைகள் வரப்பெற்றன. அவற்றில் தகுதியுடையவற்றையெல்லாம் தொகுத்து, இதழாக வெளியிட்டுள்ளோம். பன்னாட்டு மின்னிதழில் பதிவேற்றம் செய்யப் படவுள்ள மகளிர் தொடர்பான பல்வேறு பொருண்மைகளில் அமைந்த இக்கட்டுரைகள் ஆய்வாளருக்கும் ஆய்வுலகிற்கும் எதிர்காலத்தில் பெண்ணியம் தொடர்பான மேலாய்வு களுக்கான தரவுகளாகவும் அமையும் என்பதில் பேர் உவகை அடைகிறோம்.

நன்றி!

முனைவர் **ச.கவிதா**
முனைவர் **ஜெ.தேவி**
முனைவர் **ச.சங்கீதா**
முனைவர் **செ.த. ஜாக்குலின்**

## பொருளடக்கம்


| வ. எண் | கட்டுரையின் தலைப்பு | கட்டுரையாளர் பெயர் | பக்கம் எண் |
|---|---|---|---|
| 1 | காவலில் மகளிர் | K. சுகுமாரன் | 1 |
| 2 | கனல் நாவல் புலப்படுத்தும் பெண்ணியமும் உயர் சாதியின் ஆணாதிக்கமும் | ரெ. ரேகா<br>முனைவர் கா.கோ. அனிதாகுமாரி | 5 |
| 3 | பெண்ணுரிமை போராளி வேலுநாச்சியார் | முனைவர் கோ. அறிவழகி | 9 |
| 4 | புலம்பெயர் தமிழர்களின் வாழ்வியலில் இலக்கியப் படைப்புகளில் பெண்கள் | ச. தென்பாண்டி | 13 |
| 5 | பெண் சமத்துவமின்மையும் சமத்துவத்தை அடைவதற்கான வழிமுறைகளும் | முனைவர் ச. இராஜகுமாரி | 21 |
| 6 | கலைக்கோவில் கண்ட தேவி | முனைவர் செ. கற்பகம் | 28 |
| 7 | மணிமேகலை எடுத்துரைக்கும் நடனச்செய்திகள் | முனைவர் சைலஜா இளஞ்செழியன் | 37 |
| 8 | நஞ்சை மனிதர்கள் நாவலில் பெண்கள் | டோனிஷா. சோ | 42 |
| 9 | பல துறைகளிலிருந்து பெண்ணியம் | ஞா. சௌபர்ணிகா | 47 |
| 10 | சுவடிக்கணித எடுத்துரைப்பில் பெண்ணியச்சமத்துவம் | முனைவர் த. கண்ணன் | 52 |
| 11. | பண்பாட்டு நோக்கில் மலையாளி பழங்குடிப் பெண்கள் | த.சிவக்குமார்<br>முனைவர் ச. கவிதா | 59 |
| 12. | மலையாளச் சிறுகதை காட்டும் சமுதாயச் சிக்கல்கள் | த.தேவகி | 68 |
| 13. | பெண்ணிய நோக்கில் நாட்டுப்புறத் தாலாட்டுப் பாடல்கள் | முனைவர் தி. குமார் | 72 |
| 14. | தமிழ் இலக்கியங்களில் பெண்களின் நிலை | யூசுப்ஷெரிப்.ந | 77 |
| 15. | பாவையர் காட்டும் பக்திநெறி | முனைவர் ந.செ.கி. சங்கீத்ராதா | 81 |
| 16. | பெண்களின் முன்னேற்றத்தில் டாக்டர் ஜெ.ஜெயலலிதாவின் பங்கு | முனைவர் நா. மாலதி | 89 |

| | | | |
|---|---|---|---|
| 17. | ‘கிரவுஞ்சப் பட்சிகள்’ எனும் கன்னட மொழி பெயர்ப்புச் சிறுகதைகளில் பெண்களின் அவலங்கள் | முனைவர் ப. இராஜேஷ் | 95 |
| 18. | தமிழ்ப் புதினங்களில் இடப்பெயர்ச்சியும் பெண்களும் | புஷ்பவள்ளி. ப | 101 |
| 19. | உதயணன் பார்வையில் பெண்ணியம் | ப. ராகவி | 108 |
| 20. | அகநானூற்றில் மகளிர் தொழில்கள் | பா. சத்யா | 115 |
| 21. | நவீன வேளாண்மையில் பெண்ணியம் | மா. இன்பகனி | 120 |
| 22. | பெண்ணதிகாரம் (கல்வெட்டுகள் ஒரு சிறப்புப் பார்வை) | முனைவர் மா. பவானி | 126 |
| 23. | தேவித் தெய்வங்கள் | மு. மீனாட்சி | 135 |
| 24. | மக்கள் சாதன ஊடகமும் சமூகப் பாலினமும் | ரா. ஜெயஸ்ரீ | 140 |
| 25. | பெண் ஒரு பன்முகப் பார்வை | ரா. ரேவதி | 144 |
| 26. | பாலின சமத்துவத்திற்கான புதுமைச் சாதனங்கள் | லெ. சிவதீபா | 150 |
| 27. | அம்பையின் பெண்ணியப் புனைவுகள் | முனைவர் வே. கண்ணதாசன் | 157 |
| 28. | பெண்ணியம் மறந்ததும் மறைத்ததும் | முனைவர் ஜெ. தேவி | 164 |
| 29. | சமண சமயத்தில் பெண்ணின் நிலை | நீலகேசி.ஜெ. | 169 |
| 30. | அம்பை சிறுகதைகளில் பெண்ணிய சமூகமும் எழுச்சியும் | ஜெ.கிருத்திகா | 175 |
| 31. | அகநானூற்றில் மகளிர் தொழில்கள் | ஷைனி.ப | 181 |
| 32. | புறநானூற்றில் பெண்களின் வீரம் | முனைவர்பா.அனுராதா | 189 |
| 33. | பெண்கல்வி போராளிகள் | முனைவர் ரா. பிரியா | 195 |
| 34. | மையத்தைக் கலைக்கும் விளிம்பின் குரல் | ஜா. ரோஸ்லின் அனிஷா | 199 |
| 35. | தமிழ்ப்புனைவில் பெண் விடுதலைக்கான முதல்குரல்: முத்துமீனாட்சி | ஜெ.சுடர்விழி | 203 |
| 36. | அற இலக்கியங்களில் பெண்கள் நிலை | முனைவர் ரா.பரிமளா | 210 |
| 37. | சங்க இலக்கியங்களில் பெண்கள் | முனைவர் S. ஜெயக்குமாரி | 218 |

| | | | |
|---|---|---|---|
| *38.* | முகமற்றவர்களின் முகம் | முனைவர் இரா.காமராசு | *223* |
| *39.* | தமிழ்வழிக் கற்பித்தலில் பல்லூடகங்களின் பங்கு | முனைவர் ச. சைமன் | *227* |
| *40.* | புறநானூற்றில் மகளிர் நம்பிக்கைகள் | சே.மலையரசன் | *236* |
| *41.* | பெண் மரபும் மீறலும்: ஆர்.சூடாமணி படைப்புகளை முன்வைத்து | மு.சுகன்யா | *240* |
| *42.* | பூபாளத்திற்கொரு புல்லாங்குழல் என்னும் கவிதை நூலில் காணப்படும் சமுதாயக் கருத்தாடல்கள் | முனைவர் அ.இராஜராஜேஸ்வரி | *244* |
| *43.* | வெண்பாற் புலவர்களின் மரபுமீறியப் பெண்ணியச் சிந்தனைகள் | *Dr. V. Rilbert Janarthanan* | *249* |
| *44.* | வினயா தன்வரலாற்றில் குடும்பத்தில் பெண்களின் நிலை | அ. சரண்யா | *254* |
| *45.* | அகநானூற்றில் மகளிர் தொழில்கள் (மானுடவியல் நோக்கில்) | பா. சத்யா<br>முனைவர் ஆ. நளினி | *261* |
| *46.* | பாரதியாரும் பெண் சொல்லாக்கமும் | முனைவர் இரா.இந்து | *266* |
| *47.* | திலகவதி புதினத்தில் பெண்ணியக்கூறுகள் | முனைவர் இரா. திலகம் | *273* |
| *48.* | சங்க இலக்கியத்தில் பெண்களின் வாழ்வியல் | எ. ஷஹீலா, | *279* |
| *49.* | மலேசியத் தமிழ்ச் சிறுகதைகள் தொகுப்பு நூலில் பெண் கதாபாத்திரப் பதிவுகள் | எம். சேகர் சிங்கப்பூர்.<br>முனைவர் ச. கவிதா | *285* |
| *50.* | பாலின சிறார் விளையாட்டும் சிற்றுணவும் | க. அன்பரசு<br>மரு. பெ. பாரதஜோதி | *291* |
| *51.* | தொல்காப்பியத்தில் பெண்சார் சிந்தனைகள் | முனைவர் க.உமாராணி | *295* |
| *52.* | திருநங்கையரின் உறவுமுறைகள் | அமரேஸ் க. | *301* |
| *53.* | கல்வியில் பெண்கள் | முனைவர் க. சங்கர் | *306* |
| *54.* | நிர்வாகத் துறையில் பெண்கள் | முனைவர் க. சங்கர் | *311* |
| *55.* | இயல் இசையின் முன்னோடி காரைக்கால் அம்மையார் | க.ஹரிநாத் | *314* |
| *56.* | பெண்கள் பலசாலிகள் | முனைவர் கா.கண்ணகி | *319* |
| *57.* | பெண்களின் வாழ்வியலில் தெங்கு | கா.செல்வகணபதி | *325* |

| | | | |
|---|---|---|---|
| *58.* | இலக்கியத்தில் மகளிரின் பொருளாதாரத் தொழில்கள் | கா.முத்து மீனாள் | *332* |
| *59.* | 'கவர்னர் பெத்தா' என்னும் சிறுகதை சித்தரிக்கும் சமூகத்தில் பெண்கள் நிலை | கி.ஷீபா | *338* |
| *60.* | திருக்குறள் களவியல் காட்டும் தலைவியின் பண்புகள் | முனைவர் கு. சந்திரன் | *346* |

# காவலில் மகளிர்

K. சுகுமாரன், M.Sc.,M.A.C.G.T.DA.,
*143/1, திருக்கயிலை இல்லம், கோபால் நகர், திண்டுக்கல்.*

**முன்னுரை**

"எழுதரிது முன்னம் எழுதிய பின்னர்
பழுதற வாசிப்பரிது பண்பாய் - முழுதுமதைக்
கற்பரிது நற்பயனைக் காண்பரிது கண்டக்கால்
நற்பரிது நிதானந் நிலை" - ஔவையார் தனிப்பாடல்

எழுதுதல் அரிதான செய்கையாம் முன்னம் எழுதியதன் பின்னர் அதனைப் பழுதின்றி வாசிப்பது அரிய செயலாம். வாசித்தாலும் பண்புடன் அதனை முற்றவும் கற்றல் அரிதாகும். கற்றாலும் நற்பயனைக் காணல் அரிது. அதனைக் கண்டுவிட்டாலும் அந்தநிலையில் தளராது நிற்கும் திண்ணம் நிலை மிகவும் அரிதாகும் என பொருள்படும்.

"கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக" - குறள் 391

ஒருவன் கற்றற்குரிய நூல்களை ஐயம், திரிபு ஆகிய குற்றங்கள் நீக்கக் கற்க வேண்டும். அங்ஙனம் கற்றபிறகு அவைக் கூறிய ஒழுங்கு, அறநெறிகளைக் கடைபிடித்து நடக்க வேண்டும் என்பதே கல்வியின் நோக்கமாகும். 'கண்டதைப் படித்தவன் பண்டிதர் ஆவான்' என்ற பழமொழி கூற்றும் உண்டு. 'கற்றது கைமண் அளவு கல்லாதது உலகளவு' என்று ஔவையார் கூற்றும் உண்டு. இதெல்லாம் மனதில் நிறுத்தி தன் கல்வித்திறமையை மேம்படுத்தி வரும் ஆட்சி அமைப்பு, கட்டமைப்பு சிறந்த நிர்வாகத்தில் முதன்மை பெரும் என்பது திண்ணம்.

**காவல்**

காவல் என்பது அரண், கவசம், காத்தல் என்று பொருள்படும். சமூகத்தில் வாழக்கூடிய அனைத்து மக்களும் அன்புடனும், அரவணைப்புடனும், அமைதியுடனும், தனிமனித பாதுகாப்பு, சொத்துக்குப் பாதுகாப்பு இந்தக் குறிக்கோளில் அறத்தை அடிப்படையாகக் கொண்டதே காவல்துறை இயக்கமாகும். கட்டுப்பாடுடன்கூடிய சுதந்திரம் எப்போதும்

அனுபவிக்க முடியும் என்ற கட்டமைப்பின் மூலம் இந்திய அரசியல் சாசனம் 1950ம் ஆண்டு, ஜனவரி 26-ந்தேதி வெளியிடப்பட்டது. அதன்கீழ் மூன்று மிகப்பெரிய குற்றவியல் முறைச்சட்டம் 1973, இந்திய தண்டனைச் சட்டம் 1860, இந்திய சாட்சிய சட்டம் 1872ல் கொண்டு வரப்பட்டது. பிற்காலத்தில் அதன் உறுதுணையாகச் சிறப்பு உள்ளூர் சட்டங்கள் பல கொண்டு வரப்பட்டன.

## பெண்ணின் பெருமை

பெண்ணைப் பெற்ற குடும்பத்திற்கு தான் பெருமை தெரியும் என்பது போல் "மங்கையராய்ப் பிறப்பதற்கு மாதவம் செய்திடல் வேண்டும் என்கிறார் பாரதியார். பெண் என்றாலே பூவை, பெண், மடவோள், மாது, மாயோள், மானினி, பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம்பெண், அணங்கு, ஆடவள், ஆட்டி, இளம்குடி, இளையாள், காந்தை, காரிகை, கோதை, சிறுமி, சுரிகுழல், தையல், நல்லாள், நாரி, நுண்ணிடை, பாவை, வனிதை, வஞ்சி, மாதங்கி, நங்கை, எனப் பல பெயரிட்டு குறிப்பிடுவர். இந்தியாவில் பெண்ணைப் பெருமைப்படுத்த கங்கா, யமுனா, காவேரி, கோதாவரி, நர்மதா என பல நதிகளும், பெண்ணைச் சக்தியாகக்கொண்டு ஆதிபராசக்தி, காளி, மாரி, பார்வதி, துர்க்கா, மகாலெட்சுமி என பல பெயரில் தெய்வ வடிவத்தில் வணங்கப்படுகின்றனர். பெண் என்றாலே மென்மையானவர்கள், பொறுமையானவர்கள், இரக்கம், கருணை மிக்கவர்ககள் எனப் போற்றப்படுவதுண்டு. மாதா, பிதா, குரு, தெய்வம். இதில் முதல் குருவாக பெண் தெய்வமாக விளங்குவது அம்மா என்பதும், அதன்பின் தந்தையும் ஏனைய வழிகாட்டு குருக்கள் எல்லாம் சேர்ந்ததுதான் தெய்வம் என்கிறார் வேதாத்திரி மகரிஷி.

## மங்கையா் திலகம்

"நானிலத்தில் மார்தட்டும் ஆடவர்கள்
சுவை வாழ்விற் கடைத்தேறத் தக்க தான
சூட்சுமமும் பெண்களிடம் அமைந்த தன்றோ" - பாரதிதாசன்

கூற்றுக்கு இணங்க மங்கையர் திலகமாகப் பலர் இன்றைய தினத்தில் எல்லாவற்றிலும் புகுந்து கொடி கட்டி சாதித்து வருவதைப் பார்க்க முடிகிறது.

"புயத்துரை வலிய ரேனும் பொறையொரும் பொருந்தி வாழ்தல்
சயத்துரை அறனும் அஃதே என்றிவை சமையச் சொன்னான்."

கம்பராமாயணம் யுத்த காண்டம் 90 அங்கதன் தூது. அதாவது தோள் வலிமை இருப்பவராயினும் பொறுத்துப்போவதும், பொருந்தி இருப்பதும் வெற்றிக்கான வழியாகும். அதுவே அறமாகும்.

## காவல்துறை துவக்கம்

இந்திய துணைக்கண்டத்தில் முதன்முதலில் பிரிட்டிஷ் அரசால் 1858ம் ஆண்டு காவல்துறை தொடங்கப்பட்டது. இதற்குத் தந்தையாக இருந்தவர் லார்டு கார்னிவல்ஸ்

என்பவர் ஆவார். 1937ல் முதன்முதலில் திருவிதாங்கூர் சமஸ்தானத்தில் பெண்கள் காவல்துறையில் சேர்க்கப்பட்டனர். அடுத்த சாதனையாகக் கேரளத்தில் கொல்லங்கோட்டில் முழுதும் மகளிர் காவலர்களைக் கொண்ட காவல்நிலையம் 1973ல் தொடங்கப்பட்டது.

தமிழகத்தில் 1973ல் கலைஞர் ஆட்சிக்காலத்தில் ஒரு பெண் உதவி சார்பு ஆய்வாளர், ஒரு தலைமைக்காவலர், இருபது பெண் காவலர்கள் என்று சென்னையில் மகளிர் காவல்நிலையம் தொடங்கப்பட்டது. பின்னர் ஆட்சிக்கு வந்த செல்வி.ஜெயலலிதா அவர்கள் 1992ல் சென்னை ஆயிரம் விளக்கில் முழுதும் பெண்களைக் கொண்ட அனைத்து மகளிர் காவல்நிலையம் தொடங்கப்பட்டது. அதன்பின் இப்போது தமிழகம் முழுவதும் 222 அனைத்து மகளிர் காவல்நிலையம் உருவாக்கப்பட்டுள்ளது.

## பெண்ணைக் காக்கும் நோக்கம்

பொதுவாக நமது சமுதாயத்தில் பெண்களுக்குக் கருவில் இருந்து கல்லறை வரை பிரச்சனைகள் தொடர்ந்துகொண்டே வருகின்றது. இதிலிருந்து மீட்டெடுக்க அனைத்து மகளிர் காவல்நிலையம் செயல்படுகிறது. பெண்களுக்கு எதிரான குற்ற வகைகளில்

1. குற்றமுள்ள கொடுமைகள்: கற்பழிப்பு, திருடுதல், கொலை செய்தல்,
2. வீட்டைச்சார்ந்த கொடுமைகள்: வரதட்சணை இறப்பு, மனைவியை அடிப்பது, பாலியல் பலாத்காரம், விதவைகள், வயதான முதியோர்களைக் கொடுமைப்படுத்துவது.
3. சமூக குற்றங்கள்: மனைவி, மருமகள்களின் பெண் சிசு அழிப்பு, கொடுமை செய்வது, சொத்தில் பங்கு தர மறுப்பது, இளம் விதவைகளை உடன்கட்டை ஏற கட்டாயப் படுத்துவது, மருமகளிடம் அதிகமான வரதட்சணை கேட்டு கொடுமைப்படுத்துவது. வற்றிலிருந்து விசாரித்து நீதி, நேர்மையுடன் காப்பாற்றப்படும் என்ற நோக்கம் கொண்டவை யாகும்.

## பெண்களின் முக்கிய பங்களிப்பு

இந்தியாவின் முதல் ஐபிஎஸ் பெண், இயக்குநர் திருமதி.கிரண்பேடி ஆவார்கள். இவரது பணி பாராட்டுக்குரியதைப் போன்று கிரேனால் போக்குவரத்தைச் சீர்செய்த பெருமை படைத்ததால் திருமதி.பேடி பின்னாளில் கிரண் பேடியாக எல்லாராலும் புகழப் பெற்றார். தமிழகத்தின் முதல் ஐபிஎஸ் என்ற பெருமை படைத்தவர் திருமதி.திலகவதி. இவர் சொல்லாற்றல், எழுத்தாற்றல் உள்ளவர் . பல நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார். பல உயரிய வெகுமதியும் பெற்றுள்ளார். தமிழநாட்டில் தற்போதுள்ள வடக்கு, தெற்கு, மேற்கு, சென்ட்ரல் நான்கு காவல்துறை தலைவரை உள்ளடக்கியதில் முதன்முறையாக பெண் இயக்குநராக கேரளா, பாலக்காட்டைச் சேர்ந்த வீரப்பெண்மணி திருமதி.லத்திகா சரண் திறமையாகத் தமிழக காவல்துறையைக் கையாண்டு சிறப்படையச் செய்தார்.

தமிழகத்தின் இப்போது 33 காவல் மாவட்டம், 248 உட்கோட்டம், 293 வட்டம், 2019 காவல்நிலையம், 27 புறக்காவல் நிலையம் செயல்படுகிறது. இதில் பெண்கள் தற்போது கூடுதல் இயக்குநர் -2, காவல்துறை தலைவார்-4, காவல்துறை துணைத்தலைவர்-12, காவல் கண்காணிப்பாளர் -37, கூடுதல் காவல் கண்காணிப்பாளர்-9, காவல் உதவி கண்காணிப்பாளர்,

துணை கண்காணிப்பாளர் -16, ஆய்வாளர் -986, சார்பு ஆய்வாளர் -1551, தலைமைக் காவலர் -3227, காவலர்கள் -13394 பேர்களும் ஆக மொத்தம் 19,238 பேர் சிறப்பாகப் பணியாற்றி வருகிறார்கள். முதல் பெண் சார்பு ஆய்வாளர் என்ற பெருமையில் திருமதி. கே.பிரித்திகா யாசினி பாராட்டுக்குரியவராவார்.

பெண்களுக்கு எதிரான குற்றங்களில் சிறப்புக் கவனம் செலுத்தவும், பாலியல் சார்ந்த புகார்களைத் தெரிவிக்க ஆண் காவலர்களிடம் பெண்கள் தயக்கம் இருந்த நிலையில் இந்த மகளிர் காவல்நிலையங்கள் சிறப்பைப் பெற்றன. இது பெண்ணின் மனது பெண்ணுக்குத்தான் தெரியும்" என்ற கருத்தை எடுத்துக் கொள்ளலாம். இது சமுதாயத்தில் பெண்ணின்மீது அதிக அக்கறை கொண்ட செயலாகும்.

**முடிவு**

காவலர்கள் என்றால் மனிதாபிமானம் உடையவர்கள், நேர்மையானவர்கள், பொதுத்தொண்டு செய்பவர்கள். மக்கள் காவல்துறை நமக்காகவும் நம் பாதுகாப்பிற்காகவும், நலனுக்காகவும் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்ற எண்ணம் கொள்ள வேண்டும். சில செயல்பாடுகளை வைத்து கீழ்த்தரமான எண்ணம் கொள்ளக்கூடாது. இவர்கள் நம் குடும்பத்தில் ஒருவராக தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் என்ற கருத்தில் கொள்ள வேண்டும். அவர்களை அவமானப்படுத்துவதோ, ஏசுவதோ, தீங்கு விளைவிப்பதோ நமக்கு நாமே தீங்கு ஏற்படுத்தும் செயலாகும். காவல் துறை தன் பணியினைச் செய்யவிடாமல் செய்யும் செயல் சமூகத்திற்கு நாம் இழைக்கும் தீங்காகும். அரசியல்வாதிகளும் காவல்துறையைச் சுதந்திரமாகச் செயல்படுத்த முற்படவேண்டும். உயரிய இலட்சியத்தில் கட்டமைக்கப்பட்டது காவல்துறை. அவர்களின் பங்கு மக்களுக்குத் தொண்டு செய்வது, பாதுகாப்பு அளிப்பது, அமைதியான வாழ்க்கை மக்கள் வாழ வழிவகுத்துக்கொடுப்பதாகும்.

"சிறைக்காக்குங் காப்பு எவன் செய்யும் மகளிர்
நிறை காக்கும் காப்பே தலை - குறள் 57

மகளிரை காவல் வைத்துக்காக்கும் முறை என்ன பயனைச் செய்யும்? அவர்கள் நிறை என்னும் பண்பால் தம்மைத்தாம் காக்கும் காவலே சிறந்தது. பெண்களைப் பெருமை கொள்ளும் நாடே சிறந்த நாடாகும். அதில் இந்தியா பெருமை கொள்வது மகளிர் காவலே என்றால் அது மிகையாகாது.

# கனல் நாவல் புலப்படுத்தும் பெண்ணியமும் உயர் சாதியின் ஆணாதிக்கமும்

ரெ. ரேகா
முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர்,
தமிழ் ஆய்வு மையம், தமிழ்த்துறை, தெ. தி. இந்துக்கல்லூரி, நாகர்கோவில்.

## முன்னுரை

பெண்ணியம் என்னும் சொல் இன்று உலகளாவிய பயன்பாட்டில் உள்ளது. உலகில் உள்ள அனைத்துப் பெண்களின் சமத்துவத்தை அடிப்படையாகக் கொண்டு எழுந்த இயக்கம் பெண்ணிய இயக்கமாகும். ஆணாதிக்கம் அனைத்து சமூக பெண்களிடமும் கோலோச்சி நின்றாலும் தலித் இனப்பெண்களுக்கு உயர் சாதி ஆணாதிக்க வர்க்கத்தால் இழைக்கப்பட்ட இன்னல்கள் ஏராளம். சாதி வெறி கொண்ட கயவர்களால் தலித் பெண்களின் மானம், குடும்பம், கல்வி, ஆடை, உயிர் போன்றவை எவ்வாறெல்லாம் சூறையாடப்பட்டது என்பதைக் 'கனல்' நாவலின் வழி பெண்ணிய நோக்கில் ஆராயும் விதமாக இக்கட்டுரை படைக்கப்பட்டுள்ளது.

## தலித் இலக்கியம்

'தலித்' என்ற மராட்டியச் சொல்லுக்கு 'உடைந்து போனவர்கள்' என்று பொருள். எழுபதுகளில் மராட்டியத்தில் வசிக்கும் ஒடுக்கப்பட்ட மக்களும் இந்திய வரலாற்றில் சாதி முறையில் ஒடுக்கப்பட்ட இனங்களைச் சேர்ந்த மக்களில் சிலரும் தங்களைத் 'தலித்' என்று அழைத்துக் கொள்ள தொடங்கினர். பின்னர் இப்பெயர் ஒடுக்கப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு நிலைத்து விட்டது என்று பிரிட்டானிக்கா கலைக்களஞ்சியம் கூறுகிறது. தாழ்த்தப்பட்டவர்கள், மலைவாழ் மக்கள், உழைக்கும் மக்கள், நிலமற்றவர்கள், ஒடுக்கப்பட்டவர்கள் ஆகியோரைப் பற்றிய நாவல், சிறுகதை, கவிதை போன்ற இலக்கிய வகைகள் 'தலித் இலக்கியங்கள்' என்று அழைக்கப்படுகின்றன.

## பெண்ணியமும் தலித் பெண்ணியமும்

பெண் விடுதலை இயக்கத்தின் செயல்பாடுகளுள் பெண்ணியத் திறனாய்வும் ஒன்றாகும். இத்திறனாய்வு முறை இங்கிலாந்து, அமெரிக்கா போன்ற மேலை நாடுகளில் தோற்றம் பெற்று பிற நாடுகளிலும் பரவியது.

**''பெண்ணியம் என்பது பெண்களுக்கான உரிமைகளைப் பெற்று தருவது மட்டுமல்ல சமூகத்தையே மாற்றியமைக்க முயல்வதாகும்''** 1 என்கிறார் சார்லட் பன்ச்.

**''பெண்களின் தாழ்நிலையை ஆராய்ந்து அதை மாற்ற மேற்கொள்ளப்படும் வழிமுறைகளே பெண்ணியம்''** 2 என்கிறார் கார்டன்.

**''பெண்ணியம் என்பது பெண்கள் பாலின பாகுபாட்டால் அனுபவிக்கும் தனிப்பட்ட பொருளாதாரத் துன்பங்களை எதிர்த்து மேற்கொள்ளும் இயக்கமே''** 3 என்று வரையறுக்கிறார் புட்சன்.

இருபதாம் நூற்றாண்டின் இறுதியில்தான் பெண்ணியம் என்ற சொல் தமிழில் வழங்க தொடங்கியது. இதற்கு அச்சாரம் பாரதியின் பெண்ணுரிமை ஆகும். **''ஆணுக்கொரு நீதி பெண்ணுக்கொரு நீதி என்ற சமூக நீதி முறையும் ஆண் உயர்ந்தவன் பெண் தாழ்ந்தவள் என்ற கருத்தும் சங்க காலம் முதல் தமிழர் சமூகத்தில் காணப்படுகின்றன. இவைக் காப்பிய காலங்களில் மேலும் வலிமையுற்று பெண்களின் நிலை வீழ்ச்சியுற காரணமாயின.''** 4

ஆணாதிக்க வலையில் சிக்கிய எல்லா தரப்பு பெண்களிடமும் அடிமைத்தனம் வேரூன்றி இருந்தாலும் தலித் பெண்களின் வாழ்வியல் நிலை மிக மிக கொடுமைகள் நிறைந்ததாகவே அமைந்துள்ளதைக் காண முடிகிறது. தலித் பெண்களின் பிரச்சனைகளும் அனுபவங்களும் நிச்சயமாக தலித் ஆண்களின் பிரச்சனைகளில் இருந்தும் அனுபவங்களில் இருந்தும் வித்தியாசப்பட்டுள்ளதால் தான் 'தலித் பெண்ணியம்' என்ற கருத்தாக்கமே உருவாயிற்று என்று அ. மாக்ஸ் குறிப்பிட்டுள்ளார்.

## குடும்பம்

**''குடும்பம் என்னும் அமைப்பானது ஓர் ஆணும் பெண்ணும் அவர்களுடைய சமுதாய மரபுப்படி மணவாழ்வில் ஈடுபடும் நிலையால் மட்டுமே தோன்ற முடியும். அவ்வாறு இணைந்தால்தான் அவர்கள் குடும்பமாக ஏற்றுக் கொள்ளப்படுவார்கள்'' 5**

குழந்தைப்பேறு முடிந்த நிலையில் தன் மனைவியை தனிமைப்படுத்திவிட்டு ஒரு வேலைகளும் செய்து கொடுக்காமல் உயர் சாதியைச் சேர்ந்த ஏமானின் வீட்டிற்குக் குழந்தை பிறந்த செய்தியை அறிவிக்கச் சென்ற இசக்கிமாடனை மனைவி சின்னாள் கோபப்பட்டு திட்டுகிறாள். இதனை நாவலின் இவ்வரிகள் புலப்படுத்துகிறது. **''காத்தால எங்கேயோ போயிட்டு இப்ப வந்தீரு வீட்டுக்கு உமக்குதான் யாரும் இல்லாத வீடு. ஒற்றைப்பட்ட இந்த வீட்டில் ஒருத்தி பிள்ளை பெற்றிட்டு கிடக்கா அவளுக்குத் துணைக்கும் யாரும் இல்ல. கொறச்சு நேரம் உட்கார்ந்து எதையாவது செய்து கொடுப்போம்கிற விவஸ்தையே இல்லாம எங்கையோ போயிட்டு வாறிரு''** 6

சின்னாளின் வார்த்தைகளைக் கேட்டுக் கொண்டு நின்ற ஏமானின் வேலைக்காரன் பண்டாரம் அதை ஏமானிடம் கூறவே அவர், **''எடே..... சாணாட்டிக்கு இத்தனை அகம்பாவம்**

**உண்டாகான் பாடுல்லபோ. அவள தல்லேண்டடத்து தல்லி இருத்தேண்ட இடத்து இருத்தியிருந்து எங்கில் இவள் இங்கன பறயுல்லா''** 7

இவ்வரிகள் தலித் பெண்கள் தங்கள் வாழ்வின் அவல நிலையை எடுத்துரைக்கக் கூட தகுதியற்றவர்கள் என்ற உயர் சாதி ஆண்வர்க்க அடக்கு முறையை உணர்த்துகிறது.

**மானம்**

"மக்கள் தம்முடைய வாழ்க்கைக்கு உயர்ந்த நோக்கங்களாகக் கொண்டுள்ள கொள்கை களுக்குக் குறைவு வந்துவிடக் கூடாது என்று எண்ணுகிற உணர்ச்சிக்கு 'மானம்' என்று பெயர் " என்று நாமக்கல் இராமலிங்கம் அவர்கள் கூறுகிறார். நல்ல குடும்பத்தைச் சார்ந்தவர்கள் மானம் என்னும் பண்பை ஒரு மதிப்புமிக்க உடைமையாக கருதி வாழ்வார்கள். மானத்தைக் காப்பாற்ற உயிரையும் விட்டுவிடுவர். இதனை திருக்குறள்,

**''மயிர்நீப்பின் வாழாக் கவரிமான் அன்னார்**
**உயிர்நீப்பர் மானம் வரின்''** 8

என்று கூறுகிறது. இசக்கிமாடனுக்குப் பெண் குழந்தை பிறந்துள்ளது என்பதை அறிந்த இசக்கி கிழவர், **''இந்தக் கிராமத்தில பெண்கள் மானத்தோடு வாழ முடியுமா?''** 9 என்று கூறி அழுகிறார்.

திருமணமான முதல் நாளே அக்கிராமத்தில் உள்ள தலித் பெண்கள், உயர் சாதியைச் சேர்ந்த ஏமானோடு படுக்க வேண்டும் என்ற வழக்கத்தை உயர்சாதி ஆண் வர்க்கம் ஏற்படுத்தி பெண்களின் மானத்தை சூறையாடியதை இவ்வரிகள் உணர்த்துகிறது. **''புருசன் கட்டிட்டுவந்த பெண் ஏமான்மாருக்கு முதராத்திரியில முந்தானை விரிக்கணும்னு விதி இருக்கா?''** 10

'கனல்' நாவலில் வரும் இவ்வரிகள் ஒரு தலித் பெண்ணின் உள்ளக்குமுறல்.

கீழ்ச்சாதி பெண்களை அரசர்கள் வரவழைத்து ஆசை தீர்ந்ததும் சத்திரத்தில் வைப்பாட்டியாக வைப்பதையும் அங்கே நம்பூதிரி, பிராமணன், நாயன்மார்கள் பணம் வாங்காத வைப்பாட்டியாக அவர்களைப் பயன்படுத்துவதையும் இந்நாவல் எடுத்துரைக்கிறது.

'கனல்' நாவலில் சின்னாளின் தாத்தா, தன் இரண்டு பெண் பிள்ளைகளையும் அரசன் பார்க்க விரும்புவதாகக் கூறி ஆள் அனுப்பியதும் தன் பெண் பிள்ளைகள் மானங்கெட்டு விபச்சாரி வாழ்க்கை வாழ வேண்டாம் என்று கருதி தன் பெண் பிள்ளைகள் இருவரையும் வெட்டி தானும் வெட்டி இறந்த செய்தியை இந்நாவல் கூறுகிறது.

**காதல்**

காலத்தால் அழிக்க முடியாத ஒன்று காதல். "இரண்டு கண்கள் சந்தித்து முட்டி மோதி ஒளியில் கலக்கின்றன. அதுவே காதலாகிறது " என்று சக்திதாசன் குறிப்பிடுகிறார். 'கனல்' நாவலில் உயர் சாதியைச் சார்ந்த மகாதேவனுக்கு தலித் பெண்ணான பொன்னியிடம் காதல் வருகிறது. மகாதேவனுக்கு பொன்னி தாகம் தணிய தண்ணீர் கொடுக்கிறாள். அதனை வாங்கிக் குடிக்கிறான் மகாதேவன். இதனை அறிந்த மகாதேவனின் மாமாவான ஏமான், **''பள்ளு, பறயன், சாணான்மாராடா என்ற மக்கள்? எடோ இவன்மார் நம் குலத்தை அழிக்க வந்தன்மார்**

**நினக்கு அறியாமோ?''** *11 என்று கொதித்து எழுகிறார். தலித் பெண்களுக்கு உயர் சாதி ஆடவர்களைக் காதலிக்கும் உரிமை மறுக்கப்பட்டதை இவ்வரிகள் தெளிவுபடுத்துகிறது.*

**பாலியல் வன்முறை**

*பெண்களுக்கு எதிராக பாலியல் வன்முறை என்பது நீண்ட கால வரலாறாக அமைந்துள்ளது. 'கனல்' நாவலில் பாலியல் வன்முறைக்கு ஆளான பாக்கியம் என்னும் கதாபாத்திரத்தின் கூற்றாகத் தலித் பெண்களிடம் அறங்கேறிய பாலியல் வன்முறை அறிய முடிகிறது.*

**''நான் வயசுக்கு வந்ததும் என்னடைய அப்பனும் அம்மயும் ஏமானுக்க வயலில ஜோலிக்குக் கூட்டிட்டு போனாங்க. ஏமானுக்கு எனக்க முலைக்க மேல ஒரே கண்ணு. ஒரு நாளு என்ன அந்நாளுக்க வீட்டில வரச்சொல்லி என்ன கெடுத்திட்டாரு. எனக்கு ஏமானை எதிர்த்திட்டு எதவும் செய்ய முடியல்ல நான் கரைஞ்சிட்டேயிருந்தேன். ஏமான் என்னிடம், ''இது எல்லாம் வலிய காரியம் இல்லா, ஏமான அனுசரிச்சு போகேண்டது நிங்ஙளுட கடமையானு. இந்தா பத்து பணம். நீ இதை நின்ற அச்சன்றடுத்து கொடுத்து யாரிட்டங்கிலும் பிடிச்சு கொடுக்கான் பறயு ''சொன்னாரு''** *12*

*இது மட்டுமல்லாமல் ஏமானின் வாரிசை வயிற்றில் சுமந்த தலித் பெண்ணின் குழந்தையைக் கள்ளிப்பால் கொடுத்த சம்பவத்தைப் பற்றியும் இக்கதையில் கூறப்பட்டுள்ளது. இச்சம்பவங்கள் தலித் பெண்களுக்கு ஏற்பட்ட பாலியல் வன்முறையை எடுத்துரைக்கும் சிறந்த ஆதாரங்கள் ஆகும்.*

**ஆடை**

*'ஆள் பாதி ஆடை பாதி' என்பது முதுமொழி. ஆனால் அந்த ஆடை தலித் பெண்களுக்கு மறுக்கப்பட்ட நிலையை 'கனல்' நாவல் கூறுகிறது. உயர்சாதி ஆண்வர்க்கம் மேலாடை அணியாக தலித் பெண்களின் மார்பகங்களைப் பற்றி பேசும் ஆபாச வார்த்தைகள் இவர்களின் தலித் பெண்ணிய ஒடுக்கு முறையைச் சுட்டிக்காட்டுகிறது.* **''எடோ பண்டாரம் வெறுதே பறயருது. ஈ இசக்கிமாடன்ற பாரியா சின்னாள் தளதளன்னு இருப்பா? இவ ஈகுளத்தில் இறங்கி வெள்ளம் எடுத்து தலையில் வைச்சிட்டு போகும்போ அவளுக்க இரண்டு முலைகளும் திராட்சை குலை ஆடுவது போல் ஆடும்.''** *13 தலித் இனப்பெண்களுக்கு மேலாடை மறுக்கப்பட்டது. இவர்கள் உயர் சாதியினருக்கு முன் மார்பகங்களைக் காட்டி மரியாதை செய்ய வேண்டும் என்ற வழக்கம் இருந்திருக்கிறது. இதற்கு எதிராக நடைபெற்ற போராட்டமே 'தோள் சீலைப் போராட்டம்' ஆகும்.*

**முடிவுரை**

*பெண்ணின் பிரச்சனைகளை அதாவது தலித் பெண்ணிய பிரச்சனைகளைக் 'கனல்' நாவலின் ஆசிரியர் மிக அழகாகப் படைத்துள்ளார். இந்த நாவலின் வழி உயர்சாதி ஆணாதிக்கத்தால் தலித் பெண்கள் அனுபவித்த கொடுமைகளை அறிந்து கொள்ள முடிகிறது.*

# பெண்ணுரிமைப்போராளி வேலுநாச்சியார்

முனைவர் கோ. அறிவழகி
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
பான்செக்கர்ஸ்மகளிர்கல்லூாி, தஞ்சாவூர்.

சுதந்திரப்போரில் முதல் முழக்கமிட்ட களப்போராளி இந்தியாவிலேயே முதல் பெண்மணி வேலுநாச்சியார்தான். இழந்த மண்ணைமீட்ட ஒரே தமிழ்ப்பெண்ணும் இவர்தான். வாழ்வின் சுவை என்பது படுக்கை அறையிலும், கணவனின் பாதங்களிலும் இல்லை. போராடுவதிலும், சகமனிதர்களின் தோழமையிலும்தான் என்பதை தன் அரசியல் தந்திரங்களின் மூலம் நிலை நாட்டியவர் வேலுநாச்சியார். சாதி உணர்வுகளால் இழைக்கப்பட்ட கொடுமைகளையும், பெண்களின் மீதான ஆணாதிக்க வன்கொடுமைகளையும், சவுக்கடிக்கொண்டு மீண்ட பெண்மாதரசி இவரே. குறிப்பாக ஏழைப்பெண்களுக்கு ஏற்பட்ட இடும்பைகளை அகற்றிய ஆற்றல்வாய்ந்த பேரரசியாக வாழ்ந்து காட்டியவர். பெண்களின் உரிமை மீட்கப் பாடுபட்ட சக்தி, அரசியலிலும், பெண் உரிமை மீட்பிலும் அவர் கொண்ட நிலையினை இந்தக்கட்டுரை பேசும்பொருளாக எடுத்துள்ளது.

சங்கஇலக்கியம் ஒரு கருத்துக்கருவூலம் ஆகும். சங்கச்சமுதாயம் புலவர்களுக்கு கொடுத்திருந்த உரிமைகள் அவர்கள் பாடல்களின் வழியாக அறியப்படுகிறது. பெண்பாற்புலவர்கள் சமுதாயத்தில் பெற்றிருந்த சிறப்பு, அக்காலப் பெண்கல்வியிலும், கலையிலும் மேம்பட்ட நிலையை எடுத்துரைக்கிறது. பெண்கள், மன்னர்களுக்கு அறிவுபுகட்டும் நெறியுடையவராய், அரசியல்தூதர்களாக, உணர்வோடு செயலாற்றியுள்ளனர். 41 பேர் பெண்பாற்புலவர்கள்;. சங்கஇலக்கியத்தில் சான்றுகளாக இருக்கின்றனர். அஞ்சாநெஞ்சமும் பொய்யாநாவும் கொண்டு விளங்கிய பெண்பாற்புலவர்கள் பதினெட்டுபேர் புறநானூற்றில் இடம்பெற்றுள்ளனர். மானத்துக்காகப் போராடி மடிந்த ஏராளமான மறக்குலபெண்டியீர்கள் தமிழகத்தில் உண்டு. ஒரு பானைசோற்றுக்கு ஒரு சோறு பதம் என்ற பழமொழிகேற்ப மன்னர் குலமாணிக்கம் வீரத்தமிழச்சி வேலுநாச்சியார்.

ஆங்கில ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் போராடிய பெண் வேலுநாச்சியார்தான். வீரத்திலும் கலைகளிலும் பாலின சமத்துவத்தை அடையமுயலும் சமூகமாகவே நம் தமிழ்ச் சமூகம் இருந்து வருகிறது. வீரமும்; வெற்றியும் வேண்டிகொற்றவையை வழிபட்ட மரபு நம்முடையது.இங்கு பெண்பாற்புலவர்களின் அறிவுக்கூர்மை போற்றத்தக்கது. அந்நியர்களிடமிருந்து தன் நாட்டை வெற்றிகரமாக மீட்டெடுத்து அரியணை ஏறி ஆண்ட ஒரே வீரமங்கை வேலுநாச்சியார். செல்லமுத்து சேதுபதிக்கும் முத்தாத்தாள் நாச்சியாருக்கும் மகளாகப் பிறந்தார் வேலுநாச்சியார். கல்வி கேள்விகளில் சிறந்துவிளங்கினார். ஆணுக்கு நிகராகக் கல்வியிலும், வீரத்திலும் சிறந்துவிளங்குவதைப் பார்த்து ஆச்சரியப்பட்டனர். பன்மொழி புலவராக விளங்கிய வேலுநாச்சியார் தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், உருது, ஆங்கிலம், பிரெஞ்சு, சமஸ்கிருதம் ஆகிய மொழிகளை நன்கு கற்றுஉணர்ந்தவர். இலக்கியங்களை நன்றாக ஊன்றிப்பயின்றவர். குதிரையேற்றம், வாள்சண்டைப் போன்ற போர்பயிற்சிகளையும் கற்றவர். பருவம் அடைந்ததும் முத்துவடுகநாதருக்குத் திருமணம் செய்து வைக்கப்பட்டார். தஞ்சை மராட்டியர் படையெடுப்பு, மதுரைநாயக்கர் படையெடுப்புகளைச் சிவகங்கைநாடு எதிர்கொள்ள வேண்டியிருந்தது. முத்துவடுகநாதருக்கு நல்லமனைவியாகவும், ஒருபெண்குழந்தைக்கு நல்லதாயாகவும் இருந்து வந்துள்ளார்.

'கொண்டகணவன்உயிர்குடித்தகொடூரப்பறங்கியர்சிரமம்அறுத்துசிவகங்கைமீட்பேன்' என்று காளையார்கோயிலில் சபதம் ஏற்றார். கணவனையும், நாட்டையும் ஒரே நேரத்தில் இழந்து நின்றார் வேலுநாச்சியார். ஆங்கிலேயரை எதிர்கொள்ள வேண்டுமென்றால், அதே அளவுசக்திகொண்டஇன்னொருவர்உதவவேண்டும்என்றுதிட்டமிட்டார்வேலுநாச்சியார். ஐதர்அலியின் உதவியை நாடினார் வேலுநாச்சியார். இவர் நடத்திய போரில் பக்கபலமாக நின்றவர்கள் மருதுசகோதரர்கள். உலகையே பழிவாங்கும் ஆங்கிலேயப் படையை எதிர்த்து நாட்டை மீட்டெடுக்க துடிக்கும் வேலுநாச்சியாரின் வீரத்தைக்கண்டு ஐதர்அலி அசந்து போனார். நவாப் அரசு பயந்து போனது. மருதுசகோதரர்களின் வீரம், வேலுநாச்சியாரின் தந்திரம் மக்கள் புரட்சி இவற்றின் காரணமாக நவாப் அரசு முடிந்தது. சிவகங்கை அரண்மனையில் மீண்டும் மறவர் கொடி ஏற்றப்பட்டது. மருதுசகோதரர்களின் தியாகம், வீரம்இவற்றின் துணையோடு கி.பி.1780ம் ஆண்டு வேலுநாச்சியார் சிவகங்கைச் சீமையின் மகாராணியானார். கணவன் இறந்துவிட்டால் உடன்கட்டை ஏறும்வழக்கம் இருந்த அந்தகாலத்தில், கணவனைக் கொன்றவர்களைப் பழிவாங்கியதோடு மட்டுமில்லாது இழந்த நாட்டைமீட்க 8 ஆண்டுகள்யுத்தம்நடத்தி வெற்றிகண்ட வீராங்கனை வேலுநாச்சியார்.

இராமநாதபுரம் அரண்மனையில் பிறந்து, வளர்ந்த வேலுநாச்சியார், சிவகங்கை அரண்மனையின் மருமகளானார். அடுத்தநாள் வேளைதிடலில் பெருங்கொண்டிருந்தாள். குதிரையைக் கண்டதும் வேலுநாச்சியார் மகிழ்ச்சியடைந்தார். குதிரையின் அருகில் சென்று ஓட்டிப்பார்க்கலாமா? மன்னரை நோக்கினார். பார்வையைப் புரிந்துகொண்ட மன்னர் ஓட்டிப்பார்க்கலாமா? என்ற பாவனையை அறிந்தார். நொடிப்பொழுதில் குதிரையின் மீதுஏறினார். குதிரை மெதுவாக நடந்தது. சில பணியாட்களும் குதிரையைத் தொடர்ந்து சென்றனர். அதன் அடிவயிற்றில் தம் கால்களால் குதிரையின் வேகத்தை வேலுநாச்சியார்அதிகப்படுத்தினார். சிவகங்கை நகரை தாண்டிய குதிரை அருகில் இருந்த காட்டில் புகுந்தது.

கண்ட திசைகளில் எல்லாம் சீறிப்பாய்ந்தது. ஒரே நாளில் உலகத்தில் பாதியைப் பார்த்துவிட வேண்டும் என்ற எண்ணமிருப்பதுபோல் வேலுநாச்சியார் செயல்கள் இருந்தன. முதலில் துள்ளிய குதிரை, போகப்போக சோர்வு சொந்தம் கொண்டது! தோல்வியை ஒப்புக்கொள்பவரை மன்னித்து மறப்பதும் மாவீரர்களின் மாண்பு! தோற்றுப்போன குதிரையை வேலுநாச்சியார் தடவிக்கொடுத்தார். அதன் தீரத்தைப் பாராட்டும் வகையில் குதிரையின் முகத்தில் செல்லமாக ஒரு முத்தம் பதித்தார்.

வேலுநாச்சியாரின் கைகளைத் தனது நாக்கால் தடவிக் கொடுத்தது குதிரை தன்னுடைய நன்றி உணர்ச்சியை வெளிப்படுத்தியது. ஒரு பெண்ணின் அழுகுரல் கேட்டது வேலுநாச்சியார் அந்த திசையை நோக்கிப் பார்த்தார். குதிரையை ஒரு மரத்தில் கட்டினார். குரல்வந்த திசையில் வேலுநாச்சியார் மெதுவாக நடந்தார். அதுகாட்டின் இறுதிப் பகுதி.

அந்தக் காட்டின் ஓரத்தில் ஒரு கிராமம் அந்தக் கிராமத்திற்கும் காட்டிற்கும் இடையில் ஒரு திடல். திடலில் ஆண்களும் பெண்களுமாகப் பெருங்கூட்டம். அந்தக்கூட்டத்தின் நடுவில் ஒரு பெரும்புள்ளி, அவருக்கு எதிரில் கைக்குழந்தையுடன் ஒரு பெண். அந்தப் பெண் அழுதுகொண்டிருந்தாள். அந்தப் பெண்ணிற்கு சற்று தூரத்தில் ஆள் ஒருவன் நின்றுகொண்டிருந்தான். அங்குநடப்பதை அறிந்துகொள்ள வேலுநாச்சியார் விரும்பினார்.

அந்தக் கூட்டத்தின் அருகில் உள்ள மரத்தின் பின்புறம் மறைந்து கொண்டார். நேற்று இரவு 9 மணி இருக்கும். நமது கண்மாய்க்குச் சென்றிருந்தேன். அதை நான் கண்டித்தபோது இவள் என்னைத் திட்டினாள். இதற்குரிய தண்டனையை இவள்பெற வேண்டும் என்று அந்தத்தடியன் சொல்லி முடித்தான். பொய்யான குற்றச்சாட்டு தம்மீது ஏவப்பட்டதைக்கண்டு அந்தப்பெண் துடித்தாள்.

அய்யா! இவர் பலநாட்களாக கெட்ட எண்ணத்தில் என்னைச் சுற்றி வந்தார். ஏழைசாதியில் பிறந்து. மானத்தோடு வாழ்கிறேன். என்னை இவர் விருப்பத்திற்கு உடன்படச் சொல்லி நேற்று இரவு எங்கள் படித்துறையில் நான் தண்ணீர் எடுத்துக் கொண்டிருந்தபோது, இவர் கட்டிப் பிடித்தார். நான் இவரை கீழே தள்ளினேன். இவற்றை எல்லாம் கரையில் இருந்து நாகமுத்து அய்யா பார்த்துக் கொண்டு இருந்தார். உண்மை வெளிப்பட்டு ஊர்சிரிக்குமே என்ற அச்சத்தினால் என்மீது வீண்பழியைச் சொல்லி என்னைப் பழிவாங்க உங்கள் முன் நிற்க வைத்து விட்டார் என்றாள் மருதாணி. இதைஅறிந்துவேலுநாச்சியாரின் முகம்மாறியது.

- முத்தையாகண்மாய்க்கு ஏன் சென்றான்?
- மருதாணி, நடந்தவற்றைச் சொன்னதும் முத்தையா தலைகுனிந்தது ஏன்?
- நாகமுத்து,முத்தையாவின் கூட்டாளியாக ஏன் இருக்கக்கூடாது?
- இதுபோன்ற வினாக்கள் வேலுநாச்சியாரை உண்மையின் அருகில் கொண்டு சென்றது?

சவுக்கு இப்போது உத்தரவுக்குக் காத்திருந்தது. தமது இடுப்பில் செருகியிருந்த சவுக்கை வேலு நாச்சியாரின் கரங்கள் பற்றின. முரட்டுக் குதிரையை அடக்க முயன்ற போதுகூடப் பயன்படாத சவுக்கு. இங்கே பயன்பட ஆரமித்தது. முத்தையாவைப் புரட்டி

எடுத்தது, அவனது இரத்த நாளத்தைத் தொட்டுப் பார்த்தது வேலு நாச்சியாரின் சவுக்கு. இன்னதென்று புரியாமல் கூட்டம் விழித்தது. தவறு செய்தவன் மட்டும் குற்றவாளி அல்ல. அந்தத்தவற்றை மறைப்பவனும் குற்றவாளிதான் என்று மீண்டும் வேலுநாச்சியாரின் சவுக்கு நாகமுத்துவையும் பதம்பார்த்தது.

நாகமுத்து, மருதாணி சொன்னது உண்மைதான். முத்தையா, அவளைப் பாலியல் வல்லுறவுச் செய்ய முயன்றதும் உண்மைதான். முத்தையா கொடுத்தப் பணத்திற்காகத்தான் நான் பொய் சொன்னேன். இளவரசர் முத்துவடுகநாதர் குதிரையில் இருந்து குதித்து, வேலுநாச்சியார் கரங்களை அன்புடன் பற்றினார். வேலுநாச்சியாரின் சினம் தணிந்தபாடில்லை. நீ இல்லாமல் நாங்கள் அரண்மனைக்குத் திரும்பினால், அப்பாவின் கோபத்தை எங்களால் எதிர்கொள்ள முடியாது என்று கூறினார். இளவரசர் முத்துவருகநாதரின் மனைவி வேலுநாச்சியார் சவுக்கடி நடத்தியவர் என்பதை அறிந்து வியந்து நின்றது. மருதாணி கலங்கிய நிலையில் வேலுநாச்சியாரின் முன்விழ அதைத்தடுத்து நிறுத்திய வேலுநாச்சியார், இந்த இருவரையும் மொட்டை அடித்து, கரும்புள்ளி செம்புள்ளி குத்தி, கழுதைமீது ஏற்றி ஊர்த்தெருக்களில் உலவவிடுங்கள்.

அப்பொழுதுதான் அடுத்தவன் மனைவிமீது ஆசைப்படுபவர்களுக்கும், பணத்திற்காகப் பொய் சொல்பவர்களுக்கும் புத்திவரும்! என்று தன்னுடைய தீர்ப்பையும் வேலுநாச்சியார் தெரியப்படுத்தினார். ஊர்ப்பெரியவர்களும் சரி என்பதுபோல் தலையாட்டி வணங்கினர். சிவகங்கை மன்னரும் மற்றவர்களும் காத்திருப்பார்கள் என்ற நினைவு வந்ததும் முத்துவடுகநாதர் புறப்பட்டார். வேலுநாச்சியார் மட்டும் திரும்பித் திரும்பிப் பார்த்துக்கொண்டே சென்றார். மருதாணி அங்கு சிலையாக நின்றாள். இடுப்பில் இருந்த அவளது குழந்தை மட்டும் தன் பூவிதழ் விரித்து புன்னகை சிந்தியது. அந்தச் சிரிப்பு வேலுநாச்சியாரின் நெஞ்சில் ஒட்டிக்கொண்டது.

அரசியல் விடுதலை, பெண்ணுரிமை, சாதிமதமோதல்களால் மானுடம் பிரச்சனை களை வளர்க்கிறது. அதற்கு எவ்வாறு முற்றுப்புள்ளி வைப்பது என்பதுதான்.

# புலம்பெயர் தமிழர்களின் வாழ்வியலில் இலக்கியப்படைப்புகளில் பெண்கள்

ச. தென்பாண்டி
முதுகலைத்தமிழ்இரண்டாமாண்டு, இலக்கியத்துறை,
தமிழ்ப்பல்கலைக்கழகம், தஞ்சாவூர்

## முன்னுரை

புலம்பெர்தமிழர்எனப்படுவோர்இந்தியாமற்றும்இலங்கையைப்பூர்வீகமாக கொண்டிருந்து ஏனைய நாடுகளுக்குப் புலம்பெயர்ந்த தமிழர்களைக் குறிக்கின்றது. புலம்பெயர்தமிழர் என்பது TAMIL DIASPORA என்று கூறுவர். இந்தச் சொல்லானது யூதமக்களில் புலம்பெயர்ந்தவர்களைக் குறிக்கும் சொல்லாகத்தான் முதன்முதலில் பயன்படுத்தப்பட்டது. குடிப்பெயர்தலைக் குறிக்க மைக்ரேசன், டிஸ்ப்ளேஸ்மெண்ட் என்னும் இருசொற்களும் ஆளப்படுகின்றன. மைக்ரேசன் என்பது ஒரு நாட்டைவிட்டு இன்னொரு நாட்டுக்குப் பெயர்தல் என்பதாகும். டிஸ்ப்ளேஸ்மெண்ட் என்பது ஒரேநாட்டுக்குள் நிகழும் இடப்பெயர்ச்சி ஆகும்.

தமிழகம், இலங்கையில் இருந்து தோராயமாக 3,300,000 மக்கள் புலம்பெயர்ந்து இருக்கிறார்கள். இதில் அதிகபட்சமாக மலேசியா நாட்டிற்கு 1,396,000 கோடி மக்கள் புலம்பெயர்ந்து இருக்கின்றார்கள். மேலும், ஐரோப்பா, லண்டன், அமெரிக்கா, தென்னாப்பிரிக்கா, கனடா, சிங்கப்பூர், தாய்லாந்து, பிரான்ஸ், பிஜி, ஜெர்மனி, இந்தோனேசியா, சுவிட்சர்லாந்து, ஆஸ்திரேலியா, இத்தாலி, நெதர்லாந்து, நார்வே போன்ற பல உலக நாடுகளுக்குப் புலம்பெயர்ந்து இருக்கிறார்கள். ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னரே குடியேறியவர் பிற இனத்தவருடன் கலந்து விட்டனர். ஏனையோர் சமகாலத்தில் தமிழ்நாட்டிலிருந்துஇடம்பெயர்ந்தனர். புலம்பெயர்ந்தோர் அடையாளம் புராதன மரபுரிமையில் தமிழ்மொழியில், தமிழ்இலக்கியத்தில் வேரூன்றி, தற்போதும் உயிர்த்துடிப்பான கலாச்சாரத்தில் காணப்படுகிறது. இப்படியாகப் பலதரப்பட்ட மக்கள் ஏதோகாரணங்களுக்காகவும்,சூழ்நிலையினாலும் புலம்பெயர்ந்து செல்கின்றனர். அப்படிப் புலம்பெயர்ந்தவர்களுள் இலக்கிய ஆக்கம் உலகுக்கு உணர்த்தும் பெண்களைப்பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

## புலம்பெயர் இலக்கியம்

தமிழர்கள் புலம்பெயர்ந்து வாழ்ந்தது பற்றித் தமிழ் இலக்கியங்களில் குறிப்புகள் மிகுதியாகக் கிடையாது. பூம்புகார் நகரைப் பற்றிக் குறிப்பிடும்போது

"பதிஎழுஅறியாப்பழங்குடிமக்கள்" அங்கு வாழ்ந்ததாக இளங்கோவடிகள் கூறுகிறார். அதாவது அந்த நகரத்தை விட்டு மக்கள் இடம்பெயரவே மாட்டார்களாம்! பழங்காலத்தில் சாதுவன் போன்ற வணிகர்கள் பலர் வெளிநாடுகளுக்குச் சென்று வியாபாரம் செய்தச் செய்திகள் கிடைக்கின்றன. ஆனால், அவர்கள் அந்தந்த நாடுகளிலேயே தங்கிப் புலம்பெயர்ந்து வாழ்ந்ததற்கான குறிப்புகள் இல்லை. ஆனால், பழம்தமிழகத்தில் யவனர், சோனகர் போன்ற பிறநாட்டினர் வந்து வாழ்க்கை நடத்திவந்ததற்கான ஆதாரங்கள் இருக்கின்றன. இப்படிப்பட்ட புலம்பெயர் 'மாக்களைச்' சங்கஇலக்கியம் குறிப்பிடுகிறது.

அண்மைக் காலத்தில் ஈழத்திலிருந்து இடம்பெயர்ந்த தமிழ்மக்களுக்குத்தான் புலம்பெயர் இலக்கியம் உண்டு. முதன் முதலில் புலம் பெயர்ந்தவர்களைப் பற்றிச் சிறுகதை எழுதியவர் புதுமைப்பித்தன். நாற்பதுகள்,ஐம்பதுகளில் சில சிறுகதைகள் வந்துள்ளன. ப. சிங்காரம் என்னும் எழுத்தாளர் தமது இருநாவல்களில் மலேசியாவில் புலம்பெயர்ந்து வாழும் தமிழர்களின் வாழ்க்கையினைப்பற்றி எழுதியுள்ளார். அகிலனின் "பாய்மரக்காட்டினிலே" போன்ற நாவல்களும் புலம்பெயர்ந்தவர்கள் பற்றியவைதான். பர்மா தமிழர்களைப்பற்றி மு.வ. "பெற்றமனம்" என்ற நாவலை எழுதியுள்ளார்.

## புலம்பெயர்ந்தவர்களுள்பெண்கள்

தமிழகம், ஈழத்தில் இருந்து பல பெண்டீர்கள் புலம்பெயர்ந்து அனைத்துத்துறைகளிலும் வல்லுநர்களாகவும், வல்லவர்களாகவும் இருந்து வருகிறார்கள். அப்படிப்பட்டவர்கள் இலக்கியங்களில் தங்கள் பங்களிப்பாகப் பல நாவல், கவிதை, கட்டுரை, மொழிப்பெயர்ப்பு எனப் பல தனித்திறன்களில் கொடிக்கட்டிப் பறந்து வருகின்றனர். குறிப்பாக நளாயினி தாமரைச்செல்வன், அருண்விசயராணி, சந்திரவதனா செல்வக்குமாரன், சந்திராஇரவீந்திரன், இராஜேஸ்வரிபாலசுப்பிரமணியம், சந்திரகௌரி சிவபாலன், ஆதிலட்சுமிசிவக்குமார், வாஸந்தி போன்றோர் குறிப்பிட தகுந்தவர்கள்ஆவர். சுஜாதா குஜராத்தில் பிறந்து பிரிட்டனில் வாழ்பவர். இவர்மங்கீசேடோஸ்,ஸ்டிங்கிங்ரோசஸ் போன்ற நூல்களை எழுதியுள்ளார். தஸ்லிமாநடரீன் பற்றி அறியாதவர் குறைவு.

வங்காளதேசத்தில் பிறந்து அகதியாகச் சுற்றி வருபவர். இவருடைய முக்கியநாவல் 'லஜ்ஜா' என்பதாகும். சியாம் செல்வதுரை இலங்கையில் பிறந்து கனடாவில் வாழ்பவர். இவருடைய முக்கியமான நாவல் பன்னிபாய். ஜீன் அரசநாயகம், இலங்கையில் பிறந்து புலம்பெயர்ந்த தமிழ்ப்பெண்கவிஞர் ஆவார். உலகில் புலம்பெயர்ந்த எழுத்தாளர்களில் முக்கியமாகப் பென்ஆக்ரி, செர்கேபேகஸ், ஏரியஸ்டாப்மேன், ழான்ஜோர்டன், இல்மஸ்குனே, மிலன்குண்டேரா, வோலேசோயிங்கா, தர்வேஸ்மஹமூத் என்றுபலர்உள்ளனர். சில பெண் கவிஞர்களைப்பற்றி கீழே காண்போம்.

**நளாயினிதாமரைச்செல்வன்**

இவர் 1968ல் சிறுப்பிட்டியில் பிறந்து சுவிட்சர்லாந்தில் வாழும் புலம்பெயர் பெண் கவிஞர் ஆவார். இவர் சிறுகதை எழுத்தாளர், நூல்விமர் சகர் என பன்முகதன்மைக் கொண்டவர். இவர் நங்கூரம் (கவிதை-2005), உயிர்த்தீ(கவிதை-2005) எனப்பல நூல்களை எழுதியுள்ளார்.

"தலையில் காக்கா எச்சம்
தற்செயல் நிகழ்வு
தடை தாண்டு"
"களைப்பைக்காட்டும்
மூச்சை வெறு
உடல் எடை குறை
துள்ளித்திரி நோயில் லாவாழ்வு"
"மழையில் நனை
வழி நீர்கரை
புதிதாய்ப் பிற"

**அருண்விஜயராணி**

இவர் 1954 யாழ்ப்பாணத்தில் பிறந்து இப்போது ஆஸ்திரேலியாவில் வசித்து வருகிறார். ஈழத்துஎழுத்தாளுமைகளுள் இவரும் ஒருவர். 1972ல் 'இந்துமாணவன்' என்ற பாடசாலை மலரில் 'அவன்வரும்வரை' என்ற தனது முதலாவது சிறுகதையை எழுதினார். மெல்பர்ன் தமிழ்ச்சங்கம் இவரது பணிகளுக்கு 2005ல் விருது வழங்கி கௌரவித்துள்ளது. கன்னிகா தானங்கள் (சிறுகதைதொகுதி) தமிழ்ப் புத்தகாலயம் வெளியிட்டு சிறப்பித்துள்ளது.

**சந்திரவதனாசெல்வகுமாரன்**

இலங்கையின் பருத்தித் துறையில் பிறந்து தற்போது ஜெர்மனியில் வசிக்கும் ஈழத்து எழுத்தாளர் சந்திரவதனா செல்வக்குமாரன் ஆவார். இவர் ஈழத்தின் சூழலைத் தன்னுடைய நூல்களில் படம் பிடித்து காட்டியவர். இவர் எரிமலை, களத்தில் ஈழமுரசு, ஈழநாடு, குமுதம், இளங்காற்று, புலம், பெண்களுக்கான இதழ்கள் (சக்தி, பெண்கள்சந்திப்புமலர்), உயிர்ப்பு, பூவரசு (சஞ்சிகை), வெற்றிமணி, முழக்கம், தங்கதீபம், வடலி, குருத்துமாத இதழ், செம்பருத்தி (சஞ்சிகை), இணைய இதழ்கள் (யாழ், சூரியன், பதிவுகள், அக்னி), திண்ணை, யுகமாயினி போன்ற ஈழத்தின் பல பத்திரிக்கைகள், சஞ்சிகைகள், இணைய இதழ்கள் போன்றவற்றில் இவருடைய படைப்புகள் வெளிவந்து இருக்கின்றன.

இவர் மனஓசை சிறுகதைத் தொகுப்பு (2007), அலையும் மனமும் வதியும் புலமும் (2019), நாளையப் பெண்கள் சுயமாகவாழ (2019) போன்ற பல நூல்களை எழுதியுள்ளார். அது மட்டுமல்லாமல் தீட்சண்யம் (கவிதைத்தொகுப்பு-2009), தொப்புள்கொடி (நாவல்-2009), மூனாவின் நெஞ்சில்நின்றவை (2019),மூனாவின்கிறுக்கல்கள் (2019), மறந்து போகமறுக்கும் மனசு(2019), பெருநினைவின் சிறுதுளிகள்(2020) போன்ற பல நூல்களைப் பதிப்பித்துள்ளார்.

"பெண்ணே நீ இன்னும் பேதைதானே!" என்னும் தலைப்பில் இவர் பெண்ணின் நிலையைக் கீழ்கண்டவாறு எடுத்துக் கூறுகிறார்.

"மஞ்சளில் தாலிகட்டிவேலி என்பார்!
மலரினைத் தலையில் வைத்து மலரே என்பார்!
சொல்லினை அம்பாய் எய்து துடிக்காதே என்பார்!
வேரினில் குத்திவிட்டு வாடாதே என்பார்!
கையினில் தீயைத் தந்து தீயாதே என்பார்!
கண்ணிலே கையை விட்டுக் கலங்காதே என்பார்!
புண்ணினைக் கிளறிவிட்டு புளுங்காதே என்பார்!
மண்ணினைத் தாங்குவாள் போல் பொறுமைகாரி என்பார்!
நுண்ணிய உணர்வுகள் உனக்கேன் என்பார்!
பெண்ணெனப் பிறந்ததற்காய் இன்னும் என்ன சொல்வார்!
பேதைதானே நீ பேசாதே என்பாரா?"

இவ்வாறா கதம் கவிதை மூலம் பெண்ணின் நிலையை எடுத்துக் கூறுகிறார்.

**சந்திரா இரவீந்திரன்**

ஈழத்தின் ஆத்தியடி பருத்தித் துறையில் பிறந்து தற்போது பிரித்தானியாவில் வாழ்ந்து வருபவர் ஈழத்து எழுத்தாளர் சந்திராஇரவீந்திரன் அவர்கள். இவர் 1981ல் "ஒரு கல்விக்கிரகமாகிறது" என்ற முதல் சிறுகதை மூலம் படைப்புலகிற்கு அறிமுகம் ஆனவர்.

ஈழத்தில் வாழ்ந்தக் காலத்தில் இவரின் பல சிறுகதைகள் இலங்கைப் பத்திரிக்கைகள், சஞ்சிகைகளான வீரகேசரி, தினகரன், ஈழமுரசு, ஈழநாடு, முரசொலி, சித்திரன், மல்லிகை, தமிழ்ஒலி, அமிர்தகங்கை போன்றவற்றிலும், பின்னர்புலத்தில், பாரிஸ்ஈழநாடு, எரிமலை, ஊடறு(பெண்கள்இதழ்), யுகமாயினி போன்றவற்றிலும் மேலும், பிரித்தானியத்தமிழர் நலன்புரிச்சங்கத்தின் வெளியீடுகளான "யுகம்மாறும்கண்ணில்தெரியுதுவானம்" ஆகிய தொகுப்புகளிலும், திண்ணை, பொங்குத்தமிழ், கீற்று ஆகியஇணையத்தளங்களிலும், தமிழ்நாட்டிலிருந்து வெளிவரும் 'காலச்சுவடு' இதழ்களிலும் வெளியாகியுள்ளன. இவரின் கவிதைகள் பல வானொலிகளிலும், சஞ்சிகைகளிலும், இணைய இதழ்களிலும் வெளியாகி இருக்கின்றன.

1986ல் யாழ் இலக்கியவட்டமும், ஈழமுரசும் இணைந்து நடத்திய "இரசிகமணி நினைவுக் குறுநாவல்" போட்டியில் இவரது "நிச்சயிக்கப்படாத நிச்சயங்கள்" என்னும் குறுநாவல் இரண்டாம் பரிசு பெற்றதுடன், பலரின் பாராட்டுகளுடன், அந்நாவல் அதே ஆண்டில் "ஈழமுரசு" பத்திரிக்கையில் தொடராகவும் வந்தது.

1993ல் யோகநாதன், சுந்தரலட்சுமி ஆகியோரால் தொகுக்கப்பட்ட, இந்த நூற்றாண்டின் சிறுகதைகள் தொகுப்பான "வெள்ளிப்பாதசரம்" தொகுப்பில் இவரின் "தரிசுநிலத்து அரும்பு" சிறுகதையும் இடம் பெற்றது. 1988ல் இலங்கை யாழ்ப்பாணம் பருத்தித்துறையில் யதார்த்தா இலக்கிய வட்டத்தினர் வெளியிட்ட "நிழல்கள்" சிறுகதை, குறுநாவல் தொகுப்பு இவரது முதல் நூலாகும்.

*1992ல் பிரான்சிலிருந்து வெளிவந்து கொண்டிருந்த "பாரிஸ் ஈழநாடு" எனும் பத்திரிக்கை நடத்திய சிறுகதைப் போட்டியில் இவரின் படைப்பான "அக்கினியில் கருகும் ஆத்மாக்கள்" சிறுகதை தங்கப்பதக்கம் வென்றது.*

*இவரின் குறிப்பிடத்தக்க நூல்கள் தொகுக்கப் பெற்று 2011ல் "நிலவுக்குத்தெரியும்" என்ற தொகுப்பு நூல் தமிழ்நாட்டில் வெளியானது.இவரின் படைப்பிலக்கியப் பணியைப் பாராட்டி சர்வதேச அமைப்புகளான தடாகம் கலை இலக்கிய கல்வி அமைப்பும், கலாச்சார சமூக அபிவிருத்தி அமைப்பும் முறையே கவின் கலைமாமணி விருது-2015, தமிழ்ச் சுடர்விருது-2018 போன்ற விருதுகள் வழங்கிச் சிறப்பித்தது.*

*"விழிகள்" என்னும் தலைப்பில் அவர் எழுதிய கவிதைகள் உள்ளத்தை வருடி செல்கின்றன.*

*"பேரிருளில் புதைந்து கிடக்கிறது சுவர்களற்ற அறை!*
*ஓசைகளில் வாழ்கிறது உருவமிட முடியாமனம்!*
*உணர்வுகளைப் பிசையும் பெயரறியா வாசனைகள்!*
*காலடியில் அதிரும் பூமி!*
*விழித்த படியேதூங்கும் ஒளியறியா விழிகள்!"*

*"கணங்களை உயிர்ப்பிக்கும் ஸ்பரிசங்கள்!*
*இதயத்தின் கோடியில் சுடரும் ஒளித்துளிகள்!*
*அழுவதும் சிரிப்பது மறியாதிறந்த உதடுகள்!*
*காதுகளைச் சுற்றிக்கிடக்கிறதுஅவளறியா உலகம்!"*

*"வியப்புகளின் சமுத்திரம்*
*வேடிக்கைகளின் பெருநிலம்*
*சூரியன் அற்றவானம்*
*கறுப்பு நட்சத்திரங்கள்*
*கற்பனை அம்புலி*
*கவிதைகளால் நிறைகிறது*
*அவள்உலகம்!"*

## இராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம்

*1943ல் அக்கரைப் பற்றுவில் பிறந்தவர்தான் எழுத்தாளர் இராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம்.1970 முதல் இலண்டனில் வசித்து வருகிறார். சிறுகதைகள், நாவல்கள், திரைப்படங்கள் என்று பன்முகத்தன்மைக் கொண்டவர். மருத்துவ நூல்கள், ஆராய்ச்சிநூல்கள் முதலானவற்றையும் சிறுகதை, நாவல் முதலிய ஆக்க இலக்கியங்களையும் படைத்துள்ளார்.*

*தில்லையாற்றங்கரை (1987), உலகமெல்லாம் வியாபாரிகள்(1991), தேம்ஸ் நதிக்கரையில் (1992), பனி பெய்யும் இரவுகள்(1993), வசந்தம் வந்து போய்விட்டது(1997), ஏக்கம்(1997), அரைகுறை அடிமைகள்(1998), அவனும் சில வருடங்களும்(2000), இலையுதிர் காலத்தின் ஒரு மாலை நேரம் (2002) போனற நாவல்களை இவர் எழுதியுள்ளார்.*

"தாயும்சேயும்" என்ற மருத்துவ நூலை 2002ல் வெளியிட்டார். "உங்கள் உடல் உளம் பாலியல் நலம்" பற்றிய மருத்துவ அறிவியல் வகையைச் சேர்ந்த நூலை 2003ல் வெளியிட்டார். "தமிழ்க்கடவுள் முருகன் வரலாறும் தத்துவமும்"எனும் நூலை 2000ல் வெளியிட்டார். "ஒருகோடைவிடுமுறை" என்ற நூலினை 1981ம் ஆண்டு வெளியிட்டார். இது இரண்டு பாகங்களைக் கொண்ட நாவலாகும். இவ்வாறாக இவரைப்பற்றி அறிந்து கொள்ளலாம்.

### சந்திரகௌரி சிவபாலன்

இலங்கையின் ஏறாவூரில் 1960ல் பிறந்து ஜெர்மனியில் புலம்பெயர்ந்து வாழ்ந்து வருபவர் எழுத்தாளர் சந்திர கௌரி சிவபாலன் அவர்கள். எழுத்துலகில் இவரது முதலாவது படைப்பானது, தினகரன் பத்திரிக்கையில் 1986ல் "யானை உரியும் உமையாள் அச்சமும்" என்னும் தலைப்பில் வெளியானது.

அதன்பிறகு 'கௌசி' என்னும் புனைப்பெயரில் கவிதைகள், சிறுகதைகள், ஆன்மீகச் சிந்தனைகள், பாடல்கள் போன்ற ஆக்கங்களை இலங்கை தேசியபத்திரிக்கையிலும், மண், தமிழ்நேசம் போன்ற சஞ்சிகைகளிலும், இலண்டன் தமிழ்வானொலியிலும் எழுதி வெளியிட்டுள்ளார். "என்னையே நானறியேன் (2013)" என்னும் நாவல் இவருடைய குறிப்பிடத்தக்க படைப்பாகும்.

மாற்றங்கள் எனும் தலைப்பில் இவர் படைத்த ஒரு கவிதை பின்வருமாறு;

"கல்லுங்கத்தியால் வாளும்வான் குண்டாய்
மனிதன் கண்டது மாற்றம்
நடையில் நடந்தின்று நாடு கடந்து
படையாய்த் தொடர்வது பறக்கும் மாற்றம்
மாற்றங்கள் தொடர்கிறது உலகில்-மனிதன்
நாலு பேரோடு நாமும் பழகி நல்லவராய் நாம் வாழ
மாற்றங்கள் காணவேண்டும்-ஐயோ
மாற்றங்கள் காணவேண்டும்யாம்"

### ஆதிலட்சுமிசிவகுமார்

சமூக முனைப்புள்ள ஈழத்துப் பெண் எழுத்தாளர், பாடலாசிரியர். சிறுகதைகள், நாவல்கள், கவிதைகள், கட்டுரைகள், விடுதலைப்பாடல்கள், வானொலிநிகழ்ச்சிகள், விமர்சனங்கள், நாடகங்கள் என்று பலத்தளங்களிலும் ஒரு சமூகவிடுதலை நோக்கிய எழுத்துப் போராளியாக இயங்கிக் கொண்டிருந்தவர். 1990லிருந்தே புலிகளின் குரல் வானொலியின் நிகழ்ச்சித் தயாரிப்பாளராகவும் இருந்தவர். தற்சமயம்புலம் பெயர்ந்து சுவிட்சர்லாந்தில் வாழ்ந்து வருகிறார்.

1982லிருந்து எழுதி வரும் இவர் மே 20, 1982ல் "உரிமையில்லா உறவுகள்" என்ற முதல் சிறுகதை மூலம் இலங்கை வானொலி வாயிலாக ஆதிலட்சுமி இராசையாவாகத் தமிழ் இலக்கிய உலகிற்கு அறிமுகமானார். இவரது படைப்புகள் எரிமலை, வெளிச்சம்,

ஈழநாதம், சுட்டும்விழி, சரிநிகர், ஞானம், வைகறை, வெள்ளிமலை, கவிதை, நாற்று, யாத்ரா போன்ற பத்திரிக்கைகளிலும், சஞ்சிகைகளிலும், இணையதளங்களிலும் வெளியாகியுள்ளன. இன்றும் பல ஊடகங்களில் வெளியாகிக் கொண்டிருக்கின்றன. இவரின் தமிழ்ப்பணியைப் பாராட்டி 1998ல் விடுதலைப்புலிகள் இயக்கத்தின் தலைவர் வே.பிரபாகரன் "தங்கவிருது" வழங்கி சிறப்புச் செய்தார்.

இவரின் சில நூல்கள்

1. புயலை எதிர்க்கும் பூக்கள் (சிறுகதைத்தொகுப்பு - 1990)
2. என் கவிதை (கவிதைத்தொகுப்பு - 2000)
3. மனிதர்கள் (சிறுகதைத்தொகுப்பு - 2006)
4. புள்ளிகள் கரைந்தபொழுது (நாவல் - 2018)

அதுமட்டுமல்லாமல் இவரது கதைகளிலிருந்தும் சில குறும்படங்கள் உருவாகி இருக்கின்றன.

1. வேலி - நிமலா(இயக்கம்)
2. உண்மை - ரகுபாப்(இயக்கம்)

இவரின் "காணமற் போனவனின் நினைவு" என்னும் தலைப்பில் இவர் எழுதிய கவிதை பின்வறுமாறு;

"விழிகள்கரைகின்றன
விரல்கள் நடுக்க முறுகின்றன
தூக்கம் தொலைந்து இங்கே
வெகு நாட்களாகின்றன.........

கண்களை மூடாமலே உன்முகம்
கண்களில் வழிகிறது
கடந்து போன காலத்தின் ஒவ்வொரு
கணமும் மின்னலாக.........

நினைந்து நிதம் உருகி
நெஞ்சம் வெடித்துரைய
அடுத்தவர்கள் அறியாமல்
கிடக்கிறது என் துயரம்.........

புலம்பலெனமுகம் சுளிப்போர்
மத்தியிலே மனம் சிதற
பொத்திவைத்த கனவெல்லாம்
பொசுங்கிப் போன தடாமகனே..........

பாலை வனத்தினிலே
பூத்த ரோஜா வேபசும் தளிரே

பாசத்தை என்மீது பொழிந்தாயே
பார்த்த விழி பூத்ததை நீஅறியாயே.........."

மனிதனின் மேம்பட்ட வாழ்வை மெருகேற்றிடவும் இன்னும் மேம்பட செய்வதும் இலக்கியங்களே.காலச்சூழலுக்கு ஏற்ப எழுத்தாளர்கள் கவிதை, கட்டுரை, சிறுகதை, நாவல் எனப் பலத்தளங்களில் தன்படைப்பாளுமையை வெளிப்படுத்துவர். படைப்புலகில் அதிகம் தன் பங்கினை விதைப்பவர்கள் ஆண்களாக இருந்தாலும்கூட அதற்கு சரிநிகராகப் பெண்களும்தன் ஆளுமையையும், படைப்பாக்கத்திறனையும் வெளிப்படுத்தி வருகின்றனர். வறுமை, படையெடுப்புபோன்ற காரணங்களால் சிலர்நாடுவிட்டுநாடு புலம்பெயர்ந்து செல்வர். அவர்களும் தன் நாட்டில் நடந்த நிகழ்வுகளைத் தன் படைப்புகளில் வெளிப்படுத்திக் காட்டுவர். மேற்குறிப்பிட்டவாறு புலம்பெயர் இலக்கியம் என்ன என்பது பற்றியும், புலம்பெயர்ந்து சென்ற எழுத்தாளர்களைப் பற்றியும், அவற்றுள் பெண் கவிஞர்களைப் பற்றியும் இக்கட்டுரையில் கண்டோம்.

# பெண் சமத்துவமின்மையும் சமத்துவத்தை அடைவதற்கான வழிமுறைகளும்

முனைவர் ச. இராஜகுமாரி
தமிழ்த்துறை உதவிப் பேராசிரியர்,
மலங்கரை கத்தோலிக்கக் கல்லூரி, மரியகிரி, களியக்காவிளை,
கன்னியாகுமரி மாவட்டம்.

## முன்னுரை

மனித குல வரலாற்றின் தொடக்கத்தில் பால்வேறுபாடுகள் இல்லை. நிர்ணயமான திருமண உறவுகளும் இல்லை. பெண் நிகராக மட்டுமல்ல. மேலே போய்த் தலைமை தாங்குபவளாகவும் இருந்திருக்கிறாள். "அக்காலகட்டத்தில் ஆண்களும் பெண்களும் உற்பத்தி உழைப்பில் ஒன்றாக ஈடுபட்டு கூடி வாழ்ந்தனர். அன்றைய மானுடம் தன்னை நிலைநிறுத்த இந்த கூட்டு வாழ்க்கை தேவையானதாக இருந்தது. இவ்வாறு கூட்டமாக வாழ்ந்ததால் குழந்தைகள் தங்கள் தகப்பனை அறியாமல் தாயை மட்டும் அறிந்திருந்ததாலும் பெண்களும் ஆண்களைப் போல உற்பத்தி உழைப்பில் ஈடுபட்டிருந்ததாலும் சமுதாய தலைமை அன்று பெண்ணிடமே இருந்தது. ஏறத்தாழ தொடக்கக்காலம் இவ்வாறே அமைந்திருந்தது. இதனைத் 'தாய்வழிச் சமூகம்' என்பர். சமூகவியலாளர் இச்சமுதாய அமைப்பில் பெண் உரிமைப் பெற்று வாழ்ந்தாள். இங்கே 'பெண்ணியம்'என்ற தலைப்பில் நடைபெறும் பன்னாட்டுகருத்தரங்க கட்டுரையில் 'பெண் சமத்துவமின்மையும் சமத்துவத்தை அடைவதற்கான வழிமுறைகளும்' தலைப்பை சற்று ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## பாதுகாப்பு என்னும் மாயை

ஒரு பெண் தனியாக வெளியிடங்களுக்குச் செல்வதையும், இரவுநேரங்களில் பயணிப்பதையும், கிராமப்புற மக்கள் மட்டுமின்றி அறிவாளிகளாகவும் பெரியோர்களாகவும் கருதப்படுகின்ற பலரும் கூட பாதுகாப்பு கருதி நல்லது என்றே அறிவுறுத்துகின்றனர்.

பெண்கள் வேலைக்குச் செல்லும் இடங்களில் பாதுகாப்பு இல்லை. பயணிக்கும் போதும் பாதுகாப்பு இல்லை. ஆலயங்களில், விழாக்களில், கடை வீதியில், கடைகளில், கூட்ட நெரிசலில், குடும்ப விழாக்களில் என்று எங்கேயும் பாதுகாப்பு இல்லை எனக் காண்கிறோம் கேள்விப்படுகிறோம்.. இல்லையென்றால் அதற்கு யார் பொறுப்பு? வீட்டுக்குள்ளே கூட பாதுகாப்பற்ற சூழல்தானே உருவாக்கப் பட்டிருக்கிறது. சரி செய்யப்பட வேண்டியது பெண்களையா? இந்த ஆதிக்கச் சமூகத்தையா?

தன்னைத்தானே காத்துக் கொள்ள முடியாத ஒன்றை தான் பாதுகாக்க வேண்டும். அது பொருட்களாகவோ, பிராணிகளாகவே, கூண்டிலடைக்கப்பட்ட விலங்கு அல்லது பறவையாகவோ இருக்கலாம். இத்தகைய கருத்திலேயே பெண் பாதுகாக்கப்பட வேண்டி, உடல்வலிமையும் மனவலிமையும் குறைந்தவள் என்ற மாயை ஒளிந்திருக்கிறது.

## பிறப்பு முதல் இறப்பு வரை

பிறக்கின்ற பருவத்திலிருந்து இறக்கின்ற பருவம் வரை எந்த காலத்திலும் பெண்ணைச் சகமனுசியாகப் பார்க்கவோ, பழக்கவோ, உடன் உறவாகப் பக்குவப்படுத்தப்படவோ இல்லை என்பதே உண்மை. தானும் சக மனுசிதான் என்றுஉரிமை பேசுகின்றபெண்விடுதலை, பெண்ணியம் பேசுகின்ற பெண்களை அடங்காப்பிடாரிகளாகவே சமூகம், உறவுகள், ஊடகங்கள், இலக்கியங்கள் சித்தரிக்க முயல்கின்றன. “பெண் சமுதாய உழைப்பிலிருந்து பிரிக்கப்பட்டு, இல்லப் பணிப்பெண் ஆக்கப்பட்டதால் மெல்ல மெல்ல அடிமை நிலையை அடைந்தாள். அவளது சிந்தனை வாழ்க்கை. முறை அனைத்தும் ஆடவர்களால் தீர்மானிக்கப்பட்டன. மேல்சாதிக்காரர்களுக்காகவே தாழ்த்தப்பட்டவர்கள் படைக்கப்பட்டார்கள் என்னும் கருத்து வலிமை பெற்றது.

ஆடவர்கள் அவர்களை நடத்திய முறையும் அவ்விதமாகவே அமைந்திருந்தது. பாதுகாப்பு என்ற பதத்திலிருந்து அது ஓர் உயிரற்ற பொருள் உணர்வற்ற உயிர், இரண்டாம் தரமாக வேறு யாருக்காகவோ உருவாக்கப்பட்டவள் போன்ற கருத்தாக்கங்கள் வலுப்பெறுகின்றன.

## பெண் பற்றிய கருத்தாக்கங்கள்

ஆதிக்க சக்திகளின் நலன்களுக்கு உகந்த வகையில் ஆதிக்க சக்திகளால் உருவாக்கப்பட்ட கற்பிதமே பெண் பற்றிய கருத்தாக்கங்கள். ஆண் பெண் என்ற இருபாலரின் உரிமைகளைச் சமமாக நோக்காமல் ஆணுக்கு ஒரு நீதியும், பெண்ணுக்கு ஒரு நீதியும் கற்பித்தது. அதுவே ஒட்டு மொத்த சமூக நலனுக்குமான நீதி என்பது போல ஒரு மாயத்தோற்றத்தை உருவாக்கி ஆண்களை மேனிலையில் வைத்து பெண்களை அடிமைப்படுத்தி ஆண்களின் நலனையும், சுதந்திரத்தையும் பாதுகாப்பதே இன்றைய பெண் பற்றிய கற்பிதமாக உள்ளது.

இவ்வாறு சமூகம் சார்ந்த பார்வை பொது வாழ்வின் பங்கேற்பு எதுவும் தேவையில்லாமல் பணிவிடை புரிந்து, தாலிக்கயிற்றோடும் கற்புச் சுமையோடும் பெண் வாழ வேண்டும் என்ற கருத்தாக்கங்களே அன்று முதல் இன்று வரை பெண்ணை ஆட்சி

புரிந்து வருகின்றன. ''ஒரு காலத்தில் உயர்வாக இருந்த பெண்ணை மதமும், புராணங்களும், கோட்பாடுகளும் தற்போது மீடியாவும் சேர்ந்து அடிமைப்படுத்துகின்றன என வாசுகி குறிப்பிடுவதும் நாம் சிந்திக்க வேண்டியவை ஆகும்.

## ஊடகப் பதிவுகளில் பெண்

மனித உணர்வுகள் பரிமாறிக் கொள்வதில் ஊடகங்களின் பங்கு மிகவும் இன்றியமையாதது. இன்று ஊடகங்கள் இன்றி எதுவும் இல்லை என்ற அளவிற்குச் சமூகம் வளர்ந்து வருகிறது என்றாலும் பெண்களின் நிலையை இழிவுப்படுத்தும் வகையிலேயே அமைகின்றது. பெண்ணின் அழகு என்பது உடல் வடிமைப்பை வைத்தே அளவிடப்படுகிறது. அறிவார்ந்த செயல்பாடுகளையும் கற்றுத்தேர்ந்த கருத்தினையும் கொண்ட பெண்கள் அழகியலுக்கு அப்பாற்பட்டவர்களாகவே கருதப்படுகின்றனர். ஆற்றல் மிகுந்த பெண்களையும், சாதனைப் பெண்களையும் அழகியலுக்கு அப்பால் வைத்து பார்க்கின்ற நிலையே உள்ளது.

அழகு என்பதில் ஆர்வம் ஏற்படுத்துவதும், அழகு தானே முக்கியம், முதன்மையானது போன்ற எண்ணங்களுக்கு மிகப்பெரும் சதியாக வியாபார நிறுவனங்களின் இலாப வெறியே மேலோங்கி நிற்கிறது. இதன் வெளிப்பாடு தான் அழகிப் போட்டிகளை நடத்தி பேரழகியாக அறிவித்து அவர் மூலமாக தங்களின் இராசயன அழகுப்பொருட்களை விற்று கொள்ளையடிக்க விளம்பரம் செய்ய பயன்படுத்துவது போன்றவை அரங்கேற்றப் படுகின்றன. நாடுகளின்அரசுகள்இதற்குத் துணை போகின்றன என்பது தான் வரலாறு.

இத்தகைய செயல்பாடுகள் கவர்ச்சி விளம்பரங்கள், நிகழ்ச்சிகள், போட்டிகளில் கவனம் செலுத்த வைத்து, உலகுசார் நிகழ்வுகளான அரசியல், பொருளாதார, அறிவியல் பூர்வமான மனநிலையிலிருந்து விலகி நிற்க செய்து, தனது அழகு, பிறரது அழகு, எது அழகு, எது அழகில்லை, அழகுக்காக என்ன பயன்படுத்துகிறார்கள் என்ற ஆராய்ச்சியிலேயே பொழுதைக் கழிக்கிறார்கள்.

இவையெல்லாம் இயல்பான இயற்கையான பெண்களின் மனநிலை தான் என்று ஒரு கட்டமைப்பை உருவாக்க முயலும் முதலாளித்துவ இலாப வேட்கை சமூகம் தான் இதற்கு காரணம்.

## முதலாளித்துவ ஆணாதிக்கம்

பெண்கள் அழகுப்பதுமைகள், அவர்களுக்கு ஆற்றல் குறைவு என்று அவர்களுக்கு ஆதரவாகப் பேசுவது போல் பேசி அவர்களை மேலும் அடிமை நிலைக்கு கொண்டு செல்லத் துடிக்கும் முதலாளித்துவ ஆணாதிக்கத்தனத்தைப், பெண்கள் பல நேரங்களில் ஏற்பதும் ஆதாரிப்பதும் அறியாமையின் அல்லது தெளிவின்மையின் வெளிப்பாடு என்றே கூற இயலும். பொறுப்போடும், திறம்பட செயலாற்றும் மனவலிமையும் இயற்கையாகப் பெண்களிடம் இருப்பவை. ஆனால் கட்டமைப்போ அவள் வலுவற்றவள் என்று தான் உருவாக்கிய கற்பனையைப் பெண்களின் மீதும் அவள் நேரிடும் சமூகத்தின் மீதும்

திணிக்கின்றது. சிறுவயதிலேயே உப்பும் உவர்ப்புமற்ற மெல்லிய உணவு வகைகள் பெண்களுக்கும், கடினமான காரமான உணவு வகைகள் ஆண்களுக்கும் என்றும் மனங்களில் பதிய வைத்து, அவர்களின் ஆசைகளுக்கு ஏற்ப ஆணாதிக்க மனப்பாங்கை ஏற்கும் அளவுக்குக் கட்டமைத்துக் கொள்கின்றனர்.

## பாரம்பரிய போர்வைகள்

ஆண் பெண் சமம் என்ற மனநிலையில் பெரும்பாலான குழந்தைகள் வளர்க்கப்படுவதில்லை. குழந்தைப் பருவத்திலிருந்தே ஊட்டப்படுகின்ற உணவு முதற்கொண்டு உணர்வுகள் அனைத்துமே ஆண் பெண் வேறுபாட்டை உணர்த்திக் கொண்டே இருக்கின்றன. உடல்வலிமை குன்றியவள் பெண், பாதுகாக்கப்பட வேண்டியவள், ஆணின் விருப்பு வெறுப்பு அறிந்து சேவைகள் செய்ய கடமைப்பட்டவள், வீட்டுக்குள் உள்ளவற்றைப் பார்த்தால், பராமரித்தால் போதுமானது.

வெளியுலக நாட்டு நிகழ்வுகள் பற்றி அக்கறை பெண்ணுக்கு தேவை இல்லை போன்ற உணர்வுகள் குழந்தைகள் மீது வலிந்து திணிக்கப்படுகின்றன. கல்லானாலும் புல்லானாலும் போன்ற சொலவடைகள் இத்தகைய பழமைகளை அடிமைத்தனங்களைப் பாரம்பரியங்கள், மரபுகள் என்ற போர்வையில் நியாயப்படுத்தி பேணிக்காத்து வருகின்றன.

இன்றைய காலத்திலும் உழைத்து பொருளீட்டும் பெண்களைக் குடும்பத் தலைவியாகவும், உழைக்காமல் சோம்பித்திரியும் ஆண்களைக் கணவனாகவும் கொண்ட குடும்பங்களிலும் ஆதிக்கமும் அதிகாரமும் காட்டுவதற்கு ஆண்களும், அடிமைகளாக வீட்டு வேலைகள் அனைத்தையும் இழுத்து போட்டு செய்து சாவதற்கு எவ்வித தயக்கமும் பெண்கள் காட்டுவதில்லை. இத்தகைய அனுபவங்களில் வளர்கின்ற குழந்தைகள் ஆணென்றும் பெண்ணென்றும் இல்லாத ஆதிக்க அடிமை மனநிலையிலேயே உருவாகி விடுகின்றனர். இது வாழையடி வாழையாகத் தொடர்ந்து கொண்டே வருகின்றது.

## பிரபலங்களால் உருவாக்கப்படும் உடை கலாச்சாரம்

ஆணெனினும் பெண்ணெனினும் அவரவர் உடைகளை அவரவர் விருப்பு வெறுப்புகளின்படி அணிந்து கொள்ளவோ அல்லது அணியாமல் தவிர்க்கவோ உரிமை உண்டு. ஆனால் எதை அணிய வேண்டும் எதை அணியக் கூடாது என்று நம்மால் தீர்மானிக்க முடிவதில்லை. சந்தையில் எது கிடைக்கின்றதோ அதையே நாம் பயன்படுத்தியாக வேண்டியுள்ளது. வெப்பம், பனி குளிர்களிலிருந்தும், மானத்தை மறைக்கவும் உடைகள் பயன்பட்டன. அழகைக் காட்டவும் கூட்டவும் உடைகள் பயன்பட்டன. தற்காலத்தில் அலங்காரப் பொருளாக உடைகள் பயன்படுகின்றன.

தத்தம் உடலுக்குப் பொருத்தமான உடைகளைத் தேர்வு செய்வது ஓர் அற்புதமான கலை. இது ஆணுக்கும் பெண்ணுக்கும் பொருந்தும். வேறொருவர் அணிந்திருக்கும் அலங்கார உடையைப் பார்த்து நானும் இதுபோல் அணிந்து கொள்ள வேண்டுமென்று உந்தப்படுவது இயல்பே. எனினும் அவருக்குப் பொருத்தமாக இருக்கும் ஆடை நமக்கும்

பொருத்தமாகவே இருக்க வேண்டும் என்ற கட்டாயம் இல்லை என்ற உண்மை நிலை பலருக்குத் தெரிவதில்லை. அதைத் தெரிந்து கொண்டாலும் இலாப வெறி கொண்ட சந்தைகளே அவற்றை தீர்மானிக்கின்றன. இறுக்கமான அல்லது தளர்வான உடைகளில் யாருக்கு எது பொருத்தமானது என்றும் எந்த உடை கண்ணைக் கவரும் அல்லது உறுத்தும் என்றும் யாரும் யாருக்கும் சான்றளிக்கவே முடியாது. சந்தையில் கிடைக்கும் துணிகளில் பெண்கள் பயன்படுத்தும் பெரும்பாலான துணிகள் உள்ளாடைகள் கண்ணாடி போல் தெரியும் உடைகளே மலிவான விலையில் அதிகமாகக் கிடைக்கின்றன.

ஆண்கள் பயன்படுத்தும் சட்டை, கால் சட்டைகள் மெல்லியதாக இருப்பதில்லை. இதைச் சந்தை தான் தீர்மானிக்கிறது. ஒரு பெண் உறுதியான கெட்டியான உடையைத் தேர்வு செய்து ஜீன்ஸ், காட்டண் போன்ற உடைகளை அணிந்து கொண்டால் நாகரிகம், கலாச்சாரம் அழிந்தது என்று கூப்பாடு போடவும் ஒரு கூட்டம் புறப்பட்டு விடுகின்றது. இங்கே அழகு, அலங்காரம், ஆபாசம், அருவருப்பு, அலங்கோலம் என்பவை அனைத்தும் அவரவர் பார்வை, மனநிலையைப் பொறுத்தே அமைகின்றது.

காலுக்கு மேலும் அரைக்கு கீழும் மட்டுமே உடை என்று மேலாடை அணிய உரிமையற்ற பெண்கள், தண்ணீர் சுமக்கும்போது மார்பு மறைந்துவிடக் கூடாதென்று இடுப்பில் சுமக்காமல் தலையில் தான் சுமக்க வேண்டும். மார்பின் அளவைப் பொறுத்து அரசுக்கு வரி செலுத்த வேண்டும் என்றெல்லாம் கட்டாயப்படுத்தப்பட்டு துன்புறுத்தப்பட்ட பெண்களும், தலைக்கும் மீசைக்கும் மயிருக்கும் வரி செலுத்திய ஆண்களும் வாழ்ந்த சமூகமே நமது சமூகம்

**பிற்போக்குத்தனமான சிந்தனைகள்**

பாரம்பரியம் என்ற பெயரில் மிகவும்பிற்போக்குத்தனமான சிந்தனைளும், செயல்பாடுகளும் ஊக்குவிக்கப்படுகின்றன. குறிப்பாக ஆண்கள் மட்டுமே உழைத்து பொருள் ஈட்டிய காலத்தில் குடும்ப பராமரிப்பு வீட்டு வேலைகள் பெண்களின் பொறுப்பாக இருந்தது. ஆனால் இன்றைய காலத்தில் பெண்களும், உழைத்து பொருள் ஈட்டும் பணியைச் செய்தாலும். அதே வீட்டில் ஒய்வெடுத்துக் கொண்டோ, பொழுது போக்கிக் கொண்டோ உதவி செய்யும் மனநிலையே இல்லாமல் ஆண்கள் இருக்கும் போக்கு அதிகமாகக் காணப்படுகிறது.

பெண்கள் செய்யும் வீட்டுப் பணிகளை பகிர்ந்து கொள்கின்ற ஆண்களை கேலிப் பொருளாக்கப்படுகின்ற சூழலும், திரைப்படங்கள், தொலைக்காட்சித் தொடர்கள், தேநீர் விடுதிகளில் பேசுபொருளாகின்றன. இதனால் உதவி செய்யும், பணிகளை பகிர்ந்து கொள்ளும் மனநிலையில் இருப்பவர்களும் ஒதுங்கிக் கொள்ளும் சூழலை இந்த ஆதிக்கச் சமூகம் உருவாக்கி விடுகின்றது.

**ஆணாதிக்கப் பெண்டிர்**

ஆணாதிக்க மனநிலையை ஏற்றுக்கொண்ட பெண்கள் தான், தாங்களும் அடிமையாகி

தங்கள் பிள்ளைகளையும் அடிமைகளாகவே பெரும்பாலும் வளர்க்கின்றனர்.

கணவனை இழந்த எத்தனையோ பெண்கள் தங்கள் பிள்ளைகளைத் திட்டமிட்டு நல்ல கல்வி வேலை வாய்ப்புகளுக்கு வழிகாட்டி ஆளாக்கும் நிலையைப் பல இடங்களில் காண்கிறோம். இவர்களில் பெரும்பாலானோர் நல்ல மனப்பாங்குடன் பிள்ளைகளை வளர்த்தாலும், இவர்களில் ஆணாதிக்க மனநிலை இல்லாமல் இருந்தாலும் சமூக வழக்கங்களின் படியே குழந்தைகளை வளர்க்க நேரிடுகிறது. தாங்கள் பட்ட துன்ப துயரங்களை நினைத்து அவை பிள்ளைகளுக்கு நேரிடக் கூடாது என்று நல் விழுமியங்களோடு வளர்ப்பவர்களும், நம்மைப் போன்றே பிள்ளைகளும் இருக்க வேண்டும், விடுதலை பெறக்கூடாது, சமூக நியதி, தலையெழுத்து போன்ற மூடத்தனங்களைத் தமதாக்கிக் கொண்டு வாழ்ந்து மடிந்து விடுகின்றனர்.

இந்த இடத்தில் தான் மாமியார் மருமகள் பிரச்சனைகள், பொதுநிகழ்வுகளில், பிரச்சனைகளில் ஈடுபடுகின்ற குரல் கொடுக்கின்ற பெண்கள் மற்ற பெண்களால் ஆதிக்க மனநிலையிலான வசைமொழிகளைக் கேட்க நேரிடுகிறது.

தம் சொந்தக் குடும்பத்து ஆண்கள் ஊக்குவித்தாலும் பிறர் கண்களுக்கும் பிற பெண்களுக்கும் சகித்துக் கொள்ளவோ, ஏற்றுக் கொள்ளவோ முடிவதில்லை.

**தீர்மானிக்கும் ஆற்றல் - அதிகாரம்**

பொருளீட்டும் பெண்களும் தங்களின் மீதான, பயன்பாட்டுப் பொருட்களின் மீதான, ஈட்டிய பொருளின் மீதான தீர்மானிக்கும் அதிகாரத்தைத் தங்கள் குடும்பத்து ஆண்களின் பொறுப்பிலேயே விட்டுவிடுகின்றனர். வீட்டுக்குள்ளேயே முடிவெடுக்கும், கருத்துக்கூறும் வாய்ப்பு ஏற்பட்டால் கூட அதைப் பயன்படுத்தாமல் ஒதுங்கிக் கொள்ளும் நிலையும் காணப்படுகின்றது. இதற்குக்காரணம் நாமாக எதையாவது செய்து தோல்வி கண்டுவிட்டால் நாளை ஏளனத்துக்கு ஆளாகி விடுவோம் என்ற அச்ச உணர்வு மற்றும் துணிச்சல் இன்மையே ஆகும். கல்வியும், வேலைவாய்ப்பும் பட்டங்களும் பெற்ற பெண்களும் இதில் விதிவிலக்கு அல்ல என்றே கூறமுடியும்.

**சமத்துவத்திற்கான வழிமுறைகள்**

- தகவல் தொடர்பு ஊடகங்களில் பெண்களின் தனித்துவம், ஆளுமை போன்ற பண்புகள் முன்னுக்கு வரவேண்டும்.
- பெண்ணுக்கு உபதேசம் பெண்மையின் இலக்கண வரம்புகள், விதிக்கப்பட்ட மரபு மீறாமல் இருப்பது, வீட்டுப்பிரச்சனைகள் பெண்களுக்குரியது, சமூகப் பிரச்சனை ஆண்களுக்குரியது போன்ற பெண் பற்றிய கருத்தாக்கங்களை மாற்றுவது.
- பாரம்பரியம் என்ற பெயரில் மிகவும் பிற்போக்குத்தனமான சிந்தனைகளும் செயல்பாடுகளும் கொண்ட சமூக நிலையில் மாற்றம் தேவை.
- சமூக, பொருளாதார, கலாச்சார முறையில் அதிக, அளவில் பாதிக்கப்படுவதும், அழிக்கப்படுவதும், அலைக்கழிக்கப்படுவதும் பெண்களே என்பதைப் பெண்களுக்கு உணர்த்துதல் வேண்டும்.

- மனநிலையில், சமூகத்தில், அடிப்படையில், அறியாமையில் மாற்றம் தேவை "அரசும் சமூக இயக்கங்களும் ஆற்றி வரும் பணிகளால் பெண்களின் வாழ்வில் வரவேற்கத் தக்க மாற்றங்கள் நிகழ்ந்து வருகின்றன எனினும் அவையனைத்தும் புறத்தோற்றங்களே ஆகும். பெண் விடுதலைக்கான அடிப்படை மாற்றங்கள் முழுமை அடையும்போது தான் மானுட விடுதலையும் முழுமை பெற முடியும்" எனவே முழு மனித விடுதலையைப் பெண் விடுதலையோடு இணைத்து பார்ப்பதே பொருத்தமானதாகும்.

தகவல் தொடர்பு ஊடகங்களில் பெண்களின் தனித்துவம், ஆளுமை போன்ற பண்புகள் முன்னுக்கு வரவில்லை. ஆணைச் சுற்றியே அவளது சிந்தனை செயல்பாடுகள் அமைகின்றன. பெண்ணுக்கு உபதேசங்கள், பெண்மை என்பதற்கே இலக்கண வரம்புகள், பெண்ணுக்குத் தான் கற்பு, பெண் கொதித்தெழக்கூடாது, சமூகப் பிரச்சனைகளில் தலையீடு ஆண்களுக்குரியவை, வீட்டுப்பிரச்சனைகள் பெண்களுக்குரியவை, விட்டுக்கொடுப்பது, அனுசரிப்பது, அடங்கி நடப்பது, விதிக்கப்பட்ட மரபுகளை, மீறாமல் இருப்பது என்பது நல்ல பெண்களுக்கு அடையாளம் என்ற கருத்தாக்கங்களே அன்று முதல் இன்று வரை பெண் சித்தரிப்பாக அமைகிறது. திரைப்படம், தொலைக்காட்சித் தொழில் ஒரு வியாபாரம் என்பதற்காக இலாபம் கருதி எதை வேண்டுமானாலும் எப்படி வேண்டுமானாலும் காட்டுவது என்ற போக்கை ஏற்க முடியாது. பாரம்பரியம் என்கிற பெயரில் மிகவும் பிற்போக்குத்தனமான சிந்தனைகளும் செயல்பாடுகளும் கொண்ட சமூக நிலையில் மாற்றம் தேவை. சரிபாதி பெண்களைப் பற்றிய பிற்போக்கு எண்ணங்களை மாற்றும் பொறுப்பு நமது கைகளில் என்பதை உணர்வோம். வரும் தலைமுறைக்கு உணர்த்துவோம்.

# கலைக்கோயில் கண்ட தேவி

முனைவர் செ.கற்பகம்,
இணைப்பேராசிரியர்,
இசைத்துறை, தமிழ்ப்பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

உலகக் கலை வரலாற்றில் பரதநாட்டியத்திற்குத் தனிச்சிறப்பிடம் உண்டு. இத்தகைய பரதக்கலை கூத்தர், விறலி, பாணர்களால் வளர்க்கப்பட்டு, தேவதாசிகளால் சிறப்புடன் போற்றப்பட்டது. இக்கலையை ஆலயத்தை விட்டு அரங்கக்கலை வடிவம் கொடுத்தவர்கள் பலர். இவர்களில் பரதநாட்டியக்கலையை உலகறியச் செய்தவரும், குறிப்பிட்ட வகுப்பினர் மட்டுமே ஆடிய பரதக்கலையை அனைவருக்கும் பரவலாக்கி, ஆடலரங்குகளில் புதுமை, உடை ஒப்பனைகளில் மாற்றங்கள், அபிநய முறைகளில் புதுமைக்கண்டவர் பத்மவிபூஷண் ருக்மணி தேவி அருண்டேல் ஆவார்.

## பிறப்பு

ருக்மணி தேவி சமஸ்கிருத அறிஞரும் பொறியாளருமான மதுரை நீலகண்ட சாஸ்திரிக்கும் திருவையாற்றைச்சேர்ந்த சேஷம்மாளுக்கும் ஆறாவது பிள்ளையாக 29.02.1904ம் ஆண்டு மதுரையில் பிறந்தார். பிரும்ம ஞானசங்கத்தைத் தோற்றுவித்த அன்னிபெசன்ட் அம்மையாரிடம் இவரது குடும்பத்தினர் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தனர்.

பழைய சம்பிரதாயங்களை இறுக்கமாகப் பின்வற்றி வந்த பிரமாணக் குடும்பத்தில் பிறந்த இவர், பின்னாளில் புரட்சிப்பெண்ணாக மாறி சம்பிரதாயங்களை எல்லாம் தாண்டி ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த பிரம்மஞானியும், சிறந்த கல்வியாளருமான ஜி.எஸ். அருண்டேலைத் திருமணம் செய்து கொண்டார்.

## திருமணம்

1920ம் ஆண்டில் ஜார்ஜ் சிட்னி அருண்டேல் என்பவரை இங்கிலாந்தில் இருந்து கல்வி, இதர பணிகளில் தனக்கு உதவிபுரிவதற்காக அன்னிபெசன்ட் அம்மையார் இந்தியாவிற்கு அழைத்தார். அன்னிபெசன்ட் அம்மையார் அளித்த தேநீர் விருந்தில் ஜார்ஜ் அருண்டேலும்

ருக்மணியும் கலந்து கொண்டனர். இருவர் உள்ளமும் ஈர்க்கப்பட்டு அன்னிபெசன்ட் அம்மையாரின் அனுமதியோடு திருமணம் செய்து கொண்டனர். அப்பொழுது ருக்மணிக்கு வயது பதினாறு, 1920ம் ஆண்டு அருண்டேல், ருக்மணி தேவியின் திருமணம் நடந்து 'ருக்மணி தேவி அருண்டேல்' ஆனார்.

**பாலே நடனப் பயிற்சி**

1926ம் ஆண்டில் தன் கணவர் அருண்டேலுடன் ஆஸ்திரேலியாவுக்குச் சென்றிருந்த ருக்மணி தேவி உலகப்புகழ்ப்பெற்ற ருஷ்ய பாலே நடனக்கலைஞர் அன்னாபாவ்லோவாவின் நடனத்தைக்கண்டு பாலே நடனத்தின் பால் ஆர்வம் கொண்டு அன்னாகாவ்லோவாவிடமும் அக்குழுவைச் சேர்ந்த கிளியோநோர்டியிடமும் நடனம் கற்றார். பாவ்லோவா இந்திய பாரம்பரிய நடனமானச் சதிர் நடனத்தைக் கற்குமாறு ருக்மணியை அன்புடன் கேட்டுக்கொண்டார்.

ருக்மணி தனது சிறுவயதிலேயே கலைகளில் நாட்டம் கொண்டவராக இருந்தார். ஆனால் அந்தக் காலக்கட்டத்தில் 1900களில் இளம் பெண்கள், பாட்டு, நடனம் கற்றுக் கொள்வது சமூகத்தில் ஓர் இழுக்காகக் கருதப்பட்டது. ஏனெனில் பாட்டு மற்றும் நடனம் போன்றவைத் தேவதாசிகள் என்று அழைக்கப்பட்ட சமூகத்தினரால் மட்டுமே செய்யப்பட வேண்டியது என்ற எண்ணம் பரவியிருந்தது.

**பரதக்கலைப்பயிற்சி**

ஆஸ்திரோலியாவிலிருந்து தமிழகம் திரும்பிய ருக்மணி தேவி பந்தணைநல்லூர் மீனாட்சி சுந்தரம் பிள்ளையின் மாணவிகளும், கல்யாணி அம்மாளின் மகள்களான இராஜலட்சுமி, ஜீவரத்தினம் நடன நிகழ்ச்சியினைக் கண்டு தாமும் முறையான சதிர் நடனம் கற்க ஆசை கொண்டார்.

அக்காலத்தில் புகழ்ப்பெற்ற சதிர் நடனக்கலைஞரான மயிலாப்பூர் கௌரி அம்மாளிடம் ஆரம்பப் பயிற்சியினைக் கற்றார். இதற்கு ருக்மணியின் கணவரான அருண்டேலும், அன்னையும், சகோதரர்களும் உறுதுணையாக இருந்தனர். முதலில் கௌரி அம்மாளிடமும், பின்னர் உயர்பயிற்சியினைப் பந்தநல்லூர் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்களிடமும் கற்றார். ருக்மணி சதிர்கலையில் அழகியல், ஆன்மீகத்தன்மை நிறைந்துள்ளதனை அறிந்து அக்கலை போற்றி பாதுகாக்கப்பட வேண்டும் என்று நினைத்தார். தேவதாசிகள் மட்டுமே பயின்ற நிலையினை மாற்றிட முனைந்தார். அக்காலத்தில் சதிராட்டத்தில் சிருங்கார ரசமே மிகுந்திருந்தது. இந்நடனம் பார்வையாளர்களை மகிழ்விப்பதை மட்டுமே குறிக்கோளாகக் கொண்டிருந்தது. ருக்மணிதேவி அந்த நிலையிருந்து மேலெழுந்து, ஆன்மீகத் தன்மையினை வெளிப்படுத்தி, அக்கலையினை அனைவரும் சுவைப்பதொடு மட்டுமல்லாமல் தொடரவும் வழி செய்தார்.

சதிர் என்ற பரதநாட்டியம் சமூகத்தில் உள்ள பலரும் பயிலவேண்டிய ஒன்று என்பதில் திண்ணமாக இருந்தார். அக்காலத்தில் பரதநாட்டியத்தைப் பிராமணக் குடும்பத்தைச் சேர்ந்த ஒரு பெண் ஆடுவது நினைத்துப்பார்க்க முடியாததாக இருந்தது. அவர் நாட்டியம்

கற்பதை அனைவரும் எதிர்த்தனர். ருக்மணி மிகவும் இரகசியமாகத் தான் பரதத்தைக் கற்றுக் கொண்டார். இக்கலையின் மீது கொண்ட ஆர்வத்தைக்கண்ட கணவர் அருண்டேல் இக்கலையைக் கற்க ஏற்பாடு செய்ததாகவும், இதனை அனைவரும் எதிர்த்தனர் என்றும் அவரே கூறியுள்ளார்.

**ஆடல் அரங்கேற்றம்**

பரதக்கலையில் நன்கு தேர்ச்சிப்பெற்றவுடன் 1935ம் ஆண்டு நடைபெற்ற பிரம்ம ஞான சங்கத்தின் வைர விழாவில் இவரின் நாட்டிய அரங்கேற்றம் நடந்தது. இவர் இக்கலையைப் புனிதமான கலை என்றும் ஆன்மீகக்கலை என்றும் கருதினார். இதனால், தமது நடனக் கச்சேரிகளைச் 'சதிர் கச்சேரி' என்று அழையாது 'பரதநாட்டியக் கச்சேரி' என்றழைத்தார்.

அக்காலத்தில் பரதத்தை ஆபாசக் கலையாகக் கருதியவர்களிடம் ருக்மணி அவர்கள் நீங்கள் ஒருமுறை வந்து இந்த நாட்டியத்தைப் பாருங்கள். ஆபாசமாகத் தோறினால் மீண்டும் வரவேண்டாம் என்று கேட்டுக்கொண்டார். ஆனால் அங்கே வந்து அவருடைய நாட்டியத்தைப் பார்த்தவர்கள் இக்கலையில் பக்திச்சுவை மிளிரக்கண்டு தங்கள் எண்ணத்தை மாற்றிக் கொண்டனர். ஆடல் திறன்களைக் கற்க பலரையும் அழைத்தார்.

**கலாசேஷத்திர நிறுவன உருவாக்கம்**

1934ம் ஆண்டு அன்னிபெசண்ட் இறந்தார். இறந்த அடுத்த ஆண்டு ருக்மணி தேவி பெசன்ட் தியோசாபிகல் உயர்நிலைப்பள்ளியையும், மேனிலைப்பள்ளியையும் நிறுவினார். 1936ம் ஆண்டு அவர் கலாசேஷத்திரா என்ற நிறுவனத்தைத் தோற்றுவித்தார்.

கலாசேஷத்ரா என்கிற இசை, நாட்டியம், நுண்கலை நிறுவனம் 1936ல் தோற்றுவிக்கப்பட்டது. இது தியாசாபிகல் குழுவினராலும் ருக்மணிதேவி அவர் கணவர் ஜார்ஜ் அருண்டேல் அவர்களாலும் தொடங்கப்பட்டது.

ருக்மணி தேவி அவர்கள் கலைத் தாகத்தைத் தீர்க்கும் வகையிலும், கற்கவும், கற்பிக்கவும் 1936ல் சென்னையில் கலாசேஷத்திராவைத் தொடங்கினார். "தென்னிந்திய சாந்தி நிகேதன்" எனப் புகழ்ப்பெற்று விளங்கிய கலாசேஷத்திரா நாட்டியப்பள்ளியின் முதல் மாணவி இராதா பர்னியர். இவர் பிற்காலத்தில் கலாசேஷத்திராவின் தலைவராகவும் பணியாற்றினார்.

குறிப்பாகப் பரதநாட்டிய பாரம்பரியத்தை வளர்ப்பதற்காக அர்ப்பணிக்கப்பட்ட ஓர் இந்திய கலை நிறுவனமாக மாறியது. பின்னர் உயர்நிலைப்பள்ளி, மேனிலைப்பள்ளியையும் கலாசேஷத்திராவுடன் இணைத்து கலாசேஷத்ரா அறக்கட்டளையாக மாறியது.

கலாசேஷத்ரா உருவாக்கத்திற்கு முன்பு ருக்மணி அவர்கள் முதலில் சர்வதேச கலைக்கழகம் என்ற கலைக்கூடத்தை அமைத்தார். இதற்கு ஓர் இந்தியப் பெயர் சூட்ட விரும்பிய ருக்மணி தேவி சமஸ்கிருத அறிஞர் சுப்பிரமணிய சாஸ்திரிகளின் ஆலோசனையின் படி 'கலாசேஷத்ரம்' என்று பெயரிட்டார்.

கலாசேஷத்திராவின் முதலாவது கூட்டம் 06.01.1936ம் ஆண்டு கூடியது. இதற்குக் 'கலாசேஷத்திரம்' எனப் பெயரிடப்பட்டது. கலாசேஷத்திரம் கலைகளின் புனிதமான இடம் என்று கூறியதோடு இந்நிறுவனம் தோற்றுவித்ததற்கானக் காரணத்தையும் குறிப்பிட்டுள்ளார்.

"நான் இதனை நிறுவிய காரணம் யாதெனில் சுதந்திரத்தை நோக்கி இந்தியா விழித்தெழும்போது அதன் ஆன்மாவின் வெளிப்பாடும் ஒருங்கிணைந்தே ஏற்படவேண்டும். ஆன்மாவின் வெளிப்பாடு பண்பாடு மூலமே ஏற்படும்" என்று கூறினார்.

**இந்நிறுவனத்தின் நோக்கங்கள் இரண்டு,**

1. உண்மையான கலைகளிடையே ஒற்றுமையை வலியுறுத்தல்.
2. தனி மனித தேசிய ,சமய, சர்வதேச வளர்ச்சியில் கலைகளின் பங்களிப்பு அமையும் வகையில் அதற்கு உழைத்தல்.

என்ற கொள்கைகளைக் கொண்டு இந்நிறுவனம் செயல்பட்டதால், இது ஒரு சர்வதேச நோக்குள்ள கலைநிறுவனம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கலாசேஷத்திராவின் மூலம் பரதநாட்டியம் தமிழரின் நாட்டியம் என்றும், தமிழ் மரபில் வந்த நாட்டியம் என்றும், பந்தணைநல்லூர் பாணியில் வந்த நாட்டியம் என்றும் உணரவைத்துள்ளது. அகில உலக மக்களால் விரும்பப்படும் மிகச்சிறந்தது இந்திய நாட்டியம் என்பதொடு, நாட்டிய உலகில் சென்னைப் பாணி என்ற "கலாசேஷத்ரா பாணியைக்" கண்ட நிறுவனமாகவும் திகழ்கிறது.

டி. பாலசரஸ்வதி, தேவதாசி சமூகத்தைச் சேர்ந்த மற்ற நடனக்கலைஞர்களின் முயற்சியின் அடிப்படையில் கோயில்களிலிருந்த பரதநாட்டியத்தைப் பொதுவெளியில் கொண்டு வர, ருக்மணிதேவி கலாசேஷத்ராவில் பாடத்திட்டத்தை உருவாக்கினார்.

இந்நிறுவனத்திற்குப் பெயர் சூட்டியவர் சுப்பிரமணிய சாஸ்திரியாவார். இவர் பேத்தி சாரதா இந்நிறுவனத்தின் முதல் மாணவியாவார். இவருடன் இராதா, லீலாவதி போன்றோர் கற்றனர். இவர்களில் இராதா, ருக்மணி தேவியின் நெருங்கிய உறவினர் ஆவார்.

சாரதா, இராதா என்கிற மாணவியைக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்நிறுவனம் 78 ஆண்டுகளில் பல்லாயிரக்கணக்கான கலைஞர்களை உருவாக்கியுள்ளது.

**கலைக்கோயில்**

கலாசேஷத்ரா குருகுல முறையில் கல்வி கற்பிக்கும் நிறுவனமாகும். இயற்கைச் சூழலோடு அமைந்திருக்கக்கூடிய இவ்விடம் இந்தியக்கலைகளைக் கற்பிக்கும் நிறுவனமாகும். இயற்கைச் சூழலோடு அமைந்திருக்கக்கூடிய இவ்விடம் இந்தியக் கலைகளைக் கற்பிக்கும் மிக உன்னதமான இடமாக அமைகிறது. இங்கிருந்து பயின்ற பலர் மேதைகளாகவும், கலைக் கற்பிக்கும் ஆசிரியர்களாகவும் விளங்கி வருகின்றனர். தொன்மையான பரதக் கலையையும், இசையையும் கற்றுக் கொள்ள இந்தியாவின் பல்வேறு மாநிலங்களிலிருந்தும், வெளிநாடுகளிலிருந்தும் இங்கு வருகின்றனர். இந்நிறுவனத்தின் வாயிலாக நாட்டியம்,

இசை, நுண்கலை பாடங்களில் பட்டயப் பாடப்பிரிவுகள் பயிற்சியளிக்கப்படுகின்றன. இசை, நாட்டிய மேல் பட்டய வகுப்புகளும் கற்பிக்கப்படுகின்றன. இந்நிறுவனத்தின் தற்போதைய இயக்குநராக திருமதி. ரேவதி ராமச்சந்திரன் பணியாற்றி வருகிறார். மிகச்சிறந்த கலைக்கோயிலாக விளங்கி வருகிறது.

### கூத்தம்பல அரங்கு

பரதக்கலைக்குரிய "கூத்தம்பலம்" என்ற அரங்கு இங்கு உள்ளது. ருக்மணி தேவியின் நாட்டியம் பற்றிய ஆழ்ந்த சிந்தனையை வெளிப்படுத்தும் நிலையில் இவ்வரங்கு அமைக்கப்பட்டுள்ளது. இக்கூத்தம்பலம் என்கிற அரங்கு மரபுவழிவந்த அரங்காகவும், கலைக்கோர் எடுத்துக்காட்டாகவும் விளங்குகிறது. இவ்வரங்குகளில் மிகச்சிறந்த நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன. இக்கூத்தம்பலம் பற்றி ருக்மணிதேவி குறிப்பிடும் பொழுது, " கோயிலில் இருந்து வெளியேற்றப்பட்ட இந்நாட்டியக்கலை இவ்வம்பலத்தின் மூலம் கோயில் சூழலை உணர வைக்கும் நிலையில் அமைக்கப்பட்டது" என்கிறார்.

இந்நிறுவனம் தமிழ், சமஸ்கிருதம், தெலுங்கு ஆகிய மொழிகளில் 25க்கும் மேற்பட்ட நாட்டிய நாடகங்களை உருவாக்கி உலகெங்கிலும் அரங்கேற்றியுள்ளது. நாட்டிய நாடகங்களில் சமகால நுட்பத்தினைப் புகுத்தி புதிய வடிவில் நாட்டிய நாடகங்களை வடிவமைத்தார். இவர்களின் நாட்டிய நாடகங்களில் குமார சம்பவம், சாகுந்தலம், கீதகோவிந்தம், இராமாயணம், ஆண்டாள் சரித்திரம், குற்றாலக்குறவஞ்சி, தமயந்தி சுயம்வரம், புத்தர் அவதாரம் போன்றவற்றைக் குறிப்பிடத் தக்கனவாகும். இந்திய இதிகாசமான இராமாயணத்திலிருந்து ஆறு நாட்டிய நாடகங்களை உருவாக்கி புதுமை செய்துள்ளனர்.

### இசைப்படிப்பு

கலாசேஷத்திராவில் நாட்டியப் படிப்புடன் இசைப்படிப்பும் தொடங்கப்பட்டது. இந்நிறுவனத்தில் முதலில் டி.பசுபதி, இராமன், இலட்சுமணன் மூவரும் இசை கற்றனர். இங்கு சங்கீத சிரோண்மணி பயிற்சி வகுப்பைத் தொடங்கிய பொழுது, புகழ்ப்பெற்ற இசைவாணர் டைகர் வரதாச்சாரியார் முதல்வராகப் பணியாற்றினார்.

ருக்மணிதேவியின் கலாசேஷத்திராவில் புகழ்ப்பெற்ற கலைமேதைகளான டைகர் வரதாச்சாரியார், காரைக்குடி சாம்பசிவ அய்யர், மைசூர் வாசுதேவாச்சாரியார், வீணைகிருஷ்ணமாச்சாரியார், பூதலூர் கிருஷ்ணமூர்த்தி போன்றோர் ஆசிரியர் களாகப் பணியாற்றினார்.

### நடன அரங்கில் செய்த புதுமைகள்

நடன அரங்கில் நட்டுவனார் உள்ளிட்ட இசைக்குழுவினர் ஆடுபவரின் பின்புறமாக முன்னும் பின்னுமாக நடனமணியுடன் கூடவே நடந்து வருவார்கள். இது சதிர் கச்சேரி முறையாகும். ருக்மணிதேவி இந்த வழக்கத்தை மாற்றிப் பாடுபவர், நட்டுவனார், பக்க

வாத்தியக்காரரர் ஆகியோரை நடனம் நிகழும் மேடையின் வலது புறத்தில் அமரச்செய்து வாசிக்க வைத்தார். இது இக்கலையில் ஏற்பட்ட முக்கிய மாறுதலாகும். இம்மாறுதலுக்குப் பின்னரே நாட்டியக் கச்சேரிகளில் பக்க இசைக்கலைஞர்கள் அமர்ந்து இசைக்கும் மரபு தோன்றிற்று.

**உடைகளில் அரங்குகளில் மாற்றம்**

தேவதாசிகளில் சதிராடியபொழுது சேலையும், தொள தொளவென்ற கால்சட்டையும், அழகான நகைகள் பலவற்றையும் அணிந்திருந்தனர். இவை ஆடும் பொழுது பார்ப்பதற்கு அழகாக இல்லாதலால் பாரம்பரிய சிற்பக்கலைகளின் உதவியாலும், இத்தாலிய உடை நிபுணர் திருவாட்டி காஸன் உதவியாலும் நாட்டிய உடையை வடிவமைத்தார். தற்காலம் வரை இவ்வுடைகள் நாட்டியக் கலைஞர்களால் பயன்படுத்தப்பட்டு வருகின்றன மேலும், மேடையின் பின்புலத்தை மாற்றி பிரோயினியம் (மேற்புறம் மற்றும் பக்கவாட்டில் மூடிய) வகையான மேடைதான் நாட்டியத்திற்கச் சிறந்தது என எண்ணி மேடையமைப்பினை மாற்றினார்.

நாட்டிய மேடைகளில் ஒளி அமைப்பு சிறந்த முறையில் அமைய வேண்டும். அதனால் மேற்கத்திய நாடகக்கலைஞர்களான கான்ராட்வோல்ட்ரிங், அலெக்ஸ் எல்மோர், மேரி எல்மோர் போன்ற கலைஞர்களின் உதவியால் மேடை ஒளியமைப்பினை மாற்றி அமைத்தார். உலகின் சிறந்த அனைத்துக் கலைகளுக்கும் இணையானது இந்தியாவின் ‘சதிர்’ என்று அறிந்து அதற்கு ‘பரதநாட்டியம்’ என்ற பெயரினையும் சூட்டினார்.

**கைத்தறி நெசவு உற்பத்தி**

ருக்மணிதேவி அவர்கள் இந்தியாவின் பாரம்பரியக்கலைகளில் முழுமையான ஆர்வம் கொண்டிருந்தார். 1937 ம் ஆண்டு இந்திய அரசின் உதவியோடு நலிவடைந்த நெசவுத்தொழிலினை ஊக்குவிக்கும் பொருட்டு சில நெசவு ஆலைகளை நிறுவினார். பல்வேறு கண்கவர் வண்ணங்களில் அழகிய வேலைப்பாடுகளுடைய கைத்தறி ஆடைகளைத் தயாரிக்கச் செய்தார். கமலாதேவி சட்டொபத்யாயவின்உதவியொடு துணிகளுக்கு இயற்கையான சாயங்களைப் பயன்படுத்தும் முறையினைக் கற்று, அத்தொழிற்சாலைகளில் பயன்படுத்தினார். மேலும் கலம்கரி துணிகளில் பல்வேறு வேலைப்பாடுகளில் செய்து கைத்தறி நெசவுத்தொழிலையும், தொழிலாளர்களையும் பாதுகாத்து வந்தார்.

1978ல் கலாசேஷத்ராவில் இந்தியாவின் பாரம்பரிய ஜவுளி அச்சிடும் கலையைக் ‘கலாம்கரி மையம்’ (பென்கிராப்ட்) என்ற பெயரில் புதுப்பித்தார் .

**விலங்குகளின் மீது அன்புக் கொள்ளல்**

ருக்மணிதேவி அவர்கள் விலங்குகளின் மீது பேரன்பு கொண்டவராக விளங்கி, நாட்டின் வனவிலங்கு பாதுகாப்புத் துறைத்தலைவராகவும் செயல்பட்டார். மாநிலங்களவையில் விலங்குகள் வதைத் தடுப்புச் சட்ட முன் வரைவுத் தாக்கல் செய்யக்

*காரணமாக இருந்தார். பின்னால் அரசே சட்டம் இயற்ற முன்வந்ததும் முன்வரைவைத் திரும்பப் பெற்றுக் கொண்டார்.*

*ருக்மணிதேவி விலங்குகளின் நலனில் அக்கறை கொண்டு சேவையாற்றி யமைக்க விக்டோரியா மகாராணி இவருக்கு வெள்ளிப்பதக்கம் வழங்கி கௌரவித்தார். ருக்மணிதேவி, விலங்குகளைப் பற்றிக் கூறும் பொழுது, "நான் விலங்குகளின் தோழி, என் நண்பர்களை எப்பொழுதும் நான் சாப்பிடுவதில்லை" என்று கூறியுள்ளார்.*

*பல வெளிநாடுகளுக்குச் சென்றுள்ள ருக்மணி தேவி எண்ணற்ற உலக அமைப்புகளில் இடம்பெற்றிருந்தார். **1937**ம் ஆண்டில் நெதர்லாந்திலுள்ள பன்னாட்டுப் பிரம்மஞான சபையின் (தியாசபிகல் சொசைட்டி) உறுப்பினராகப் பணியாற்றிய அவர், தன் வாழ்நாள் முழுதும் அந்தப் பொறுப்பை வகித்தார்.*

### மாநிலங்களவை உறுப்பினர்

***1952** மாநிலங்களவை உறுப்பினராக நியமிக்கப்பட்டார்.*

*ஏப்ரல் **1952**, மீண்டும் **1956** ஆகிய இரு ஆண்டுகள் இந்திய நாடாளுமன்றத்தின் மாநிலங்களவையில் பணியாற்ற நியமனங்களைப் பெற்றார். இராஜ்ய சபாவின் முதல் இந்தியப் பெண்ணாக நியமனம் பெற்றார்.*

***1977**ம் ஆண்டு பிரதமராகப் பொறுப்பேற்ற மொரார்ஜி தேசாய், ருக்மணி தேவியை நாட்டின் குடியரசு தலைவராக்க வேண்டும் என்று விரும்பினார். ஆனால் அந்த அரிய வாய்ப்பை ருக்மணிதேவி மறுத்துவிட்டார். கலை, கலைச் சார்ந்தவற்றிற்காகப் பணிபுரிவதே தன் விருப்பம் என்று கூறி அப்பதவியினை ஏற்க மறுத்தார். அவ்வாறு பதவியேற்றிருந்தால் குடியரசுத்தலைவரான முதல் தமிழர் என்ற பெருமையைப் பெற்றிருப்பார்.*

### விருதுகள்

*ருக்மணிதேவி அவர்கள் இந்திய கலாச்சாரத்திற்கு அவர் ஆற்றிய சேவைகளை அங்கீகரிக்கும் வகையில் **1956**ம் ஆண்டு இந்திய அரசின் உயரிய விருதான பத்மபூஷண் விருது பெற்றார். **1957**ல் சங்கீத நாடக அகாடமி விருதையும், மத்திய அரசின் காளிதாஸ் சம்மன் விருதினையும் பெற்றார்.*

### மறைவு

*சென்னை அடையாற்றில் பிரம்மஞான சபையில் அவருடன் பணியாற்றிய தத்துவஞானி ஜே. கிருஷ்ணமூர்த்தி மறைந்த ஒரே வாரத்தில் பிப்ரவரி **24, 1986**ம் ஆண்டு ருக்மணி தேவியும் மறைந்தார்.*

*ருக்மணி தேவியின் மறைவின்பொழுது, ஆளுநர் எஸ்.எல். குரானா, முதல்வர் எம். ஜி.ஆர் போன்ற தலைவர்கள் எல்லாம் நேரில் சென்று அஞ்சலி செலுத்தினர். முன்னாள் பிரதமரான மொரார்ஜி தம் இரங்கற் குறிப்பில் தாம் ருக்மணி தேவியைக் குடியரசுத் தலைவராக்க விரும்பிதை நினைவு கூர்ந்துள்ளார்.*

**கலாசேஷத்ரா நிகர்நிலைப்பல்கலைக்கழகம்**

கலாசேஷத்ரா சென்னை அடையாற்றில் பிரம்மஞான சபையின் தோட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டது. அன்னிபெசன்ட் அம்மையார், டாக்டர் சி.பி. இராமசாமி ஐயர், ஸ்ரீசுப்பிரமணிய சாஸ்திரி போன்ற பெரியோர் உறுதுணை செய்தனர்.

ருக்மணி அவர்கள் 1936ம் ஆண்டு நிறுவிய கலாசேஷத்ரா நிறுவனம் 1962 இல் சென்னையில் உள்ள திருவான்மியூரில் இடம்பெயர்ந்து தற்பொழுது கலாசேஷத்ரா அறக்கட்டளையின் கீழ் ஒரு நிகர் நிலைப் பல்கலைக்கழகமாக 100 ஏக்கர் வளாகத்தில் செயல்பட்டு வருகிறது.

இந்திய பாராளுமன்றம் கலாசேஷத்ரா அறக்கட்டளையைத் "தேசிய முக்கியத்துவம் வாய்ந்த நிறுவனம்" என்று அறிவித்தது. இது ஜனவரி 1994ல் நிறைவேற்றப்பட்ட ஒரு சட்டமாகும். பிப்ரவரி 29, 2004 அன்று கலாசேஷத்ரா, உலகின் பிற இடங்களில் விரிவுரைகள், கருத்தரங்குகளை நடத்தியது. அவரது பிறந்த 100வது ஆண்டு விழாவைக் மிகச்சிறப்பாகக்கொண்டியது.

பிப்ரவரி 29 அன்று புதுதில்லியில் உள்ள லலித் கலா கேலரியில் ருக்மணியின் வாழ்க்கைக் குறித்தப் படக்காட்சி அறிமுகப்பட்டது. அதே நாளில் முன்னாள் குடியரசுத்தலைவர் ஆர்.வெங்கட்ராமன் எழுதிய முன்னுரையுடன், முன்னாள் குடியரசுத்தலைவர் ஏ.பி.ஜே. அப்துல்கலாம் புகைப்பட வாழ்க்கை வரலாற்றையும் சேர்த்து வெளியிட்டனர். 2016ம் ஆண்டில் ருக்மணி தேவியின் 112 வது பிறந்த நாளின் நினைவாக கூகுள் நிறுவனம் அவரது புகைப்படத்தை வெளியிட்டு பெருமைப்படுத்தியது. அந்த மாதத்தின் பிற்பகுதியில் கலாசேஷத்ரா அறக்கட்டளை அதன் 80வது ஆண்டு விழாவைக் கொண்டாடியது. "ருக்மணி தேவியை நினைவூட்டுதல்" என்ற தலைப்பில் இசை, நடன விழாவைக் கொண்டாடினர். 2017ல் சர்வதேச மகளிர் தின விழாவில் கூகுள் நிறுவனத்தால் ருக்மணிதேவி சிறப்பிக்கப்பட்டுள்ளார். ருக்மணி தேவியின் சீரிய பணியினைப் பாராட்டி இந்திய அரசு 1987ம் ஆண்டு அவர் பெயரில் நினைவு தபால் தலை வெளியிட்டுள்ளது.

கலாசேஷத்ராவிற்கு வரும் மாணவர்கள் இளம் வயதில் நாட்டியம், இசைக் கற்க ஆரம்பித்து மேல் பட்டயம் பெற்ற பட்டதாரிகளாகச் சிறந்த கலைஞர்களாக , ஆசிரியர்களாக வெளியேறுகின்றனர்.

இந்நிறுவனத்தின் சார்பில் மிகச்சிறந்த கலைவிழாவான ஆண்டு விழா ஒவ்வோர் ஆண்டும் பிப்ரவரி மாதத்திலும் நடத்தப்படுகின்றது. பிப்ரவரி மாதத்தில் மூன்று நாட்கள் ருக்மணி தேவியின் பிறந்தநாள் விழா கொண்டாடப்படுகிறது. ஏழை மாணவர்கள் பயிலும் வகையில் குறைந்த கட்டணத்தில் உதவித்தொகையும் அளிக்கப்படுகின்றது. கலைகள் தொடர்பான நூல்கள் இங்கே பாதுகாக்கப் படுகின்றன. கலைகளின் மூலம் இந்தியப் பண்பாட்டை மேம்படுத்திப் புனிதமாக்கும் மிகச்சிறந்த கலைக்கோயிலாகக் கலாசேஷத்ரா விளங்கி வருகிறது.

இந்நிறுவனத்தின் மூலம் பரதநாட்டியம், இந்திய நடனங்களைப் பயின்று நாட்டிய ஆசிரியர்களாக இன்று விளங்கி வருபவர்கள் பலர் உள்ளனர். பந்தணைநல்லூர் சொக்கலிங்கம், காரைக்கால் தண்டாயுதபாணி பிள்ளை, வசந்த லட்சுமி நரசிம்மாச்சாரியார், பத்மபூஷணம்

வி.பி. தனஞ்சயன், சாந்தா தனஞ்செயன், புதுவை ஜெயஸ்ரீ நாராயணன் போன்றோர் பலர் உள்ளனர்.

தற்கால நாட்டிய நாடகங்களை உருவாக்கும் கலைக்கூடமாகக் கலாசேஷத்ரா விளங்குகிறது. இந்தியப் பண்பாட்டு மரபுகளைத் தழுவி பக்தி மார்க்கத்தில் முகிழ்த்த நாட்டிய நாடகங்களாகப் புதுமையையும் நுட்பத்தையும் தழுவிய நிலையில் உருவாக்கி கலாசேஷத்ரா பாணியில் அரங்கேற்றி வருகின்றனர். ருக்மணி தேவி அமைத்துக் கொடுத்த தடத்தின் வழிச்சென்று பழமையான மரபுக்கும் காலத்துக்கேற்பப் புதுமையான அரங்க வடிவங்களையும் கொண்டு இந்நிறுவனம் மிகச்சிறப்பாக விளங்கி வருகிறது. மிக உன்னதமான இசை மரபைத் தாங்கி வளர்ந்து வருகிறது.

காலம் முழுவதும் பரதத்தின் அசைவுகள் ஒவ்வொன்றும் அறிந்தோ, அறியாமலோ ருக்மணிதேவி அருண்டேலின் பெயரைச் சொல்லிக் கொண்டிருக்கும். ஏனெனில் ருக்மணி தேவி இல்லாவிட்டால் இன்று பரதத்தில் சில புதுமைகள் இருந்திருக்குமா? என்பது சந்தேகமே. பரதத்திற்குப் பெருமை தேடித்தந்து உலகக்கலையாக்கிய அம்மையாரின் விழுமிய செயற்பாடுகளை எண்ணி எண்ணி வணங்குவோம் வாரீர்.

# மணிமேகலை எடுத்துரைக்கும் நடனச்செய்திகள்

முனைவர். சைலஜா இளஞ்செழியன்
சிரேஷ்ட விரிவுரையாளர், நடனத்துறை

யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம், இலங்கை.

**முகவுரை**

செந்தமிழ்காவியங்கள் என்ற வரிசையில் ஐம்பெரும்காப்பியம், ஐஞ்சிறுகாப்பியங்கள் சிறப்பிடம் பெறுகின்றன. ஐம்பெரும்காப்பியங்களாகச் சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, வளையாபதி, குண்டலகேசி என்பன விளங்குகின்றன. இதனை,

"சிந்தாமணியம்சிலப்பதிகாரம்படைத்தான்
கந்தாமணிமேகலைபுனைந்தான் - கந்தா
வளையாபதிதருவான்வாசகனுக்கீந்தான்
திளையாதகுண்டலகேசிக்கும்''

என்று திருத்தணிகைஉலா குறிப்பிடுகின்றது. பதினெட்டாம் நூற்றாண்டுவரை ஐம்பெருங் காப்பியங்கள் வரையறுக்கப்பட்டவில்லை. இந்த ஐந்து நூல்களில் சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி என்ற மூன்றுமே இன்று கிடைக்கும் நூல்களாகின்றன. சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய இரட்டைக்காப்பியங்கள் ஒன்பதாம் நூற்றாண்டுக்கு முற்பட்டவை என்றும் சிந்தாமணியும், வளையாபதியும் ஒன்பதாம் நூற்றாண்டுக்குரியது என்றும் குண்டலகேசி பத்தாம் நூற்றாண்டுக்குரியது எனவும் குறிப்பிடப்படுகின்றது.

மணிமேகலை எனும் காவியமானது மணிமேகலை ஸ்ரீமணிமேகலை என்றாகி நவமணிகளால் அமைக்கப்பெற்ற இடைஅணியாகிய மேகலையைக் குறிக்கின்றது. மணிமேகலை, சிலப்பதிகாரத்தோடு இணைந்து அமைகின்ற காப்பியமாகும். மணிமேகலை, கோவலனின் மனைவியாகிய மாதவியின்மகள். கோவலன் இறந்தவுடன் மாதவி

பௌத்தசமயத் துறவியாகிறாள். தனது மகள் கணிகையர் குலத்தில் இருத்தல்கூடாதுஎன்று கருதி மணிமேகலையையும் துறவியாக்குகின்றாள்.

ஆசிரியப்பாக்களாலான மணிமேகலை முப்பது காதைகளைக் கொண்டமைந்தது. காண்டங்கள் இல்லை. சிலப்பதிகார மொழிநடைக்கும், கவிதை அமைப்பிற்கும் பல நிலைகளில் மணிமேகலை வேறுபட்டு உள்ளது எனப்படுகின்றது. மணிமேகலையின் மிகப்பெரியசிறப்பு "அட்சயபாத்திரம்: உலகஉயிர்கள் அனைத்தின் பசியைப் போக்கியது. அட்சயப்பாத்திரமாகும்.

மணிமேகலைக்காப்பியமானது மணிப்பல்லவத்தின் புத்தபீடிகை உண்டு என்பது அதனை வணங்குவோர் முன்னைய பிறப்பினை அறிவர் என்றும், இயமன் உயிர்களைக் கொண்டுபோதல் உண்மைஆதலினால் அறம் செய்தல் வேண்டும் எனவும் அரசன் செங்கோல் தவறின் நிகழும்நிகழ்ச்சிகள், பசியின் கொடுமை, உணவு கொடுப்போர் சிறப்பு, பசுக்கொலைபாவம், உடம்பின்தன்மை, புலால்உண்ணாமை, கள்ளுண்ணாமை ஆகிய தீயசெயல்களைக் கண்டிக்கின்றது. இந்நூல் தமிழில் தோன்றிய முதல் சமயக்காப்பியம். மணிமேகலையாகும். உலகநீதிகளைப் பௌத்தமதக் கொள்ளைகளினூடாக வெளிப்படுத்துகின்றார் நூலாசிரியர்.

### மணிமேகலையில் நடனச் செய்திகள்

மணிமேகலையில் நடனச்செய்திகளாகப் பலகருத்துக்கள் காணப்படுகின்றன. நடனம் பற்றிய செய்திகளை மட்டும் அறிவதே இக்கட்டுரையின் நோக்கமாகின்றது.

ஊரலர்ஊரைத்தகாதையில்மாதவியும்மணிமேகலையும்இந்திரவிழாவிற்கு செல்லாததால் மாதவியின் தாய் சித்திராபதி மனம் வருந்துகின்றாள். மாதவியின் தோழி வயந்தமாலையை அழைத்து இந்திரவிழாவில் நடனமாட வேண்டிய மணிமேகலை வராததை நினைத்து ஊரார் பழிகூறியதை மாதவிக்குக் கூறும்படி சொல்லி அனுப்புகிறார். மாதவி மாபெரும் பத்தினியான கண்ணிகியின் மகள் மணிமேகலை தவத்திற்குரியவள். பரத்தமை தொழிலுக்கு உரியவள் அல்லள் என்றும் அதனால் அவள் அங்கு வரமாட்டாள், தானும் அறவண அடிகளின் திருவடிகளில் வீழ்ந்து நல்லறம் கேட்டேன். அவர் எனக்கு துறவறம் பற்றி தெளிவுப்படுத்தினார். ஆகவே நானும் வரமாட்டேன் என்று தாயிடம் கூறும்படி தோழியை அனுப்புகின்றாள். இதனை,

> "பென்நேர் - அனையாய்! புகுந்தது கேளாய்;!
> உன்னோடுஇவ்வூர் உற்று ஒன்று உண்டு கொல்?
> வேத்தியல் பொதுவியல் என்று இருதிறத்துக்
> கூத்தும் பாட்டும் தூக்கும் துணிவும்" (மணி: 2:16-19)

எனும் பாடலடியினூடாக 'வேந்தியல்' எனும் அரசருக்கு ஆடும் கூத்தும், 'பொதுவியல் 'எனும்அனைவர்க்கும்ஆடும்கூத்தும், தூக்கு எனும் தாளங்களின் வழியேவரும் செந்தூக்கு முதலிய ஏழுதூக்குகள் என்றும், 'துணிவு' எனும் தாளஅறுதி என்றும் விளக்கியுள்ளது. வேத்தியல், பொதுவியல் எனும் இருவகைக் கூத்தினையும் குறிப்பதுடன் தாள முடிவினைக்

கூறும் 'துணிவு' எனும் சொல் பயன்பட்டுள்ளமையும் அறிய முடிகின்றது.

"மலர் வனம்புக் ககாதை"யில் மணிமேகலையும் சுதமதியும் வீதி வழியே உவவனம் செல்லும் வழியில் பல்வேறு காட்சிகளைக் காண்கின்றனர். அக்காட்சிகளில் ஒன்றாய் விராடநகர் பேடிவேடம் கொண்டு சென்ற அர்ச்சுனைச் சூழ்ந்துமக்கள் ஆரவாரம் செய்தனர்.

"இகந்த வட்டுடை எழுது வரிக்கோலத்து
வாணன் பேர் ஊர்மறு கிடைத்தோன்றி
நீள்நிலம் அளந்தோன் மகன்முன் ஆடிய
பேடிக்காலத்தும் பேடுகாண்குநரும்" (மணி 3:122-125)

எனும் அடியினூடாகப் பதினொருவகை ஆடலில் பேடியாடலை வாணன் என்னும் அசுரனுடைய பெரியசோ என்னும் நகரத்தின் வீதியில் நின்று உலகளந்த உத்தமனின் மகனான காமள்முன்னர்அடியபேடு எனும் கூத்தினை சிலர் கண்டு நின்றனர்" என்று குறிப்பிடப்படுகின்றது. பதினோர் வகை ஆடலில் பேடி அடல் இங்கு விளக்கப்படுவதைக் காண முடிகின்றது.

'துயில் எழுப்பியகாதையில்' பூம்புகார் இந்திர விழாவில் நிகழ்ச்சிகள் இரவில் நிறைவடைந்து, அரங்கில் இயலாசிரியர் முதலான ஆசிரியரோடு நின்று அவிநயம் போன்றவற்றைக் காட்டி ஆடல்மகளிர் உறங்கியது போலவே குழல், யாழ், குயிலுவக் கருவிகள் எல்லாம் காலமுதிர்ச்சியால் உறங்கினர் என்பதனை

"அகல்மனை அரங்கத்து ஆசிரியர் - தம்மோடு
வகை தெரிமாக்கட்கு வட்டணைகாட்டி
ஆடல் புணர்க்கும் அரங்கு இயல் மகளிரின்
கூடிய குயிலுவக் கருவிகண் - துயின்று" (மணி 7: 42 - 45)

என்று எடுத்துரைக்கின்றது. இப்பாடலில் நடனம் ஆடுவதற்கு அரங்கங்கள் இருந்தன என்றும் வட்டணைகாட்டி என்று கைச்செயல்பாட்டினையும் குறிப்பிடப்பட்டுள்ளது.

"உதயகுமரன் அம்பலம்புக் ககாதை"யில்
"நாடவர் காணநல் அரங்கு ஏறி
ஆடலும் பாடலும் அழகும் காட்டி" (மணி 18: 104 - 105)

நாட்டில் உள்ளோர் பார்க்கும் வண்ணம் நல்ல முறையில் நாடக அரங்கில் ஏறி ஆடலும் பாடலும், அழகும் புலப்படுத்தினர் எனக்கு கூறப்பட்டுள்ளது.

"கச்சிமாநகர்புக்ககாதை"யில் வேத்தியல், பொதுவியல் எனும் இருவகைக் கூத்துக்களின் இயல்புகளை அறிந்த கூத்தியர் வாழும் வீதி இருந்தாக அறியமுடிகின்றது.

இதனை

"வேத்தியல் பொதுஇயல் என்று இவ்விரண்டின்
கூத்து இயல்பு அறிந்த கூத்தியர்மனுகும்"

எனும் பாடலடியினூடாக இருவகைக் கூத்துக்களை அறிந்து கற்றுணர்ந்த கூத்தர் கூத்தியர்களுக்கு என்று தனித்த வாழிடங்கள் இருந்ததாக மணிமேகலை மூலம் அறியக்கிடக்கின்றது.

நாடகக்கணிகையர் இருந்ததை
"கூத்தியல்மடந்தையர்" (மணி18 : 6)

என உதயகுமரன் அம்பலம்புக்க கதையிலும்

"ஆடும்கூத்தியர்அணியேபோல
வேற்றுஉர்அணியோடுவந்தீரோ?என" (மணி12 : 51 - 52)

அறவணர்த் தொழுத காதை நாடக அரங்கில் கூத்தியர் கொள்ளும் உருமாற்றம் போல இப்போது வேறுகோலத்துடன் இங்கு வந்தீரோ? என்றும் ஆடல்மகளிர் வாழ்ந்ததை எடுத்துரைப்பதைக் காணமுடிகின்றது.

மேலும் "ஊரவர்உரைத்தகாதை"யில்
"நாடக மகளிர்க்கு நன்கனம் வகுத்த
ஓவியக்கொந்நூல் உரைநூல் கிடக்கையும்"(மணி2 : 30 - 31)

எனும் பாடலடியினூடாக நாடகக் கணிகையார்க்கு என நல்லமுறையில் வகுக்கப்பெற்ற புகழ்மிக்க ஓவிய நூலில் கூறப்பட்டனவும் கற்றவர்கள் எனவும்,

"ஒருதனி ஓங்கிய திருமணிக்காஞ்சி
பாடல்சார் சிறப்பில் பரதத்துஓங்கி
நாடகம் விரும்ப நன்னலம் கவினி" (மணி18 : 56 - 58)

எனும் "உதயகுமரன் அம்பலம் புக்க காதையில் கூத்தின் இலக்கணத்தைக் கூறும் பரதம் எனும் நூல் இருந்தது என்று அறிய முடிகின்றது.

"ஆபுத்திரன்நாடு அடைந்த காதை"யில்
"அரவுஏர் அல்குல் அருந்தவமடவார்
உரவோற்கு அளித்த ஒருபத்து ஒருவரும்
ஆயிரம் கண்ணோன் ஆவிநயம் வழூஉக்கொள
மாஇருஞாலத்து தோன்றிய ஐவரும்
ஆங்குஅவன் புதல்வனோடு அருந்தவன் முனிந்த
ஓங்கிய சிறப்பின் ஒருநூற்று நால்வரும்
திருக்கிளர் மணிமுடித்தேவர் கோள்தன் முன்
உருப்பசி முனிந்த என் குலத்து ஒருத்தியும்
ஒன்று கடைநின்ற ஆறுஇரு பதின்மர் இத்
தொன்று படுமாநகர்த் தோன்றிய நாள் முதல்" (மணி24 : 7 - 16)

எனும் பாடலின் பகுதியினூடாக உரவோற்கு அளித்த நாடகக்கணிகையர் பதினொருவர் (11), இந்திரன் கணிகையர்ஐவர் (05), சயந்தன் கணிகையர் நூற்றிநால்வர்; (104), உருப்பசி முனிந்த கணிகை ஒருவர் (01) என நூற்றி இருபத்தொருவர் (121) நாட்டியக் கணிகையர் நாட்டியத்தை வளர்த்தனர் என்றும் வழிவழியாகக் கணிகையர் வந்தனர் எனவும் தெளிவாக விளங்க முடிகின்றது. இதனைப் "பாம்பின் படம் போன்ற அடிவயிற்றினை உடைய பெண்கள் வலிமைமிக்க இந்திரனுக்குப் பெற்றளித்த பதினொருவர், ஆயிரம் கண்ணோனாள இந்திரன்முன் ஆடிய நடனத்தில் குற்றம் உண்டாக அதனால் பூமியில் வந்து பிறந்தவர் ஐவர், இந்திரன் மகனான சயந்தனுடன் அருந்தவ முனிவனான அகத்தியனால் சாபமிடப்பட்ட பெண்கள் நூற்றுநால்வர்.

அழகு விளங்கும் மணிமுடைய தேவர் கோமான் முன்சாபமிடப் பெற்ற என் குலத்தைச் சார்ந்த உருப்பசியாகிய ஒப்பற்றவளும் ஆகியநூற்று இருபத்தொருவரும் இந்த பழைமையான நகரில் வந்து பிறந்தனர்" எனக் குறிப்பிட்டுள்ளமை இங்கு வழி வழியாகக் கணிகையர் நாட்டியத்தில் சிறந்து விளங்கியுள்ளமை தெளிவாகின்றது.

மேலும் கதை தழுவாத பாட்டுக்களின் பொருள் தோன்றக் கைகாட்டி அபிநயம் செய்யும் முறையும் இருந்தது எனவும், கதை தழுவி வரும் கூத்தும் இருந்ததாக

"ஆடல் கூத்தினோடு அவிநயம் தெரிவோர்
நாடகக் காப்பியம் நன்னூல் துனிப்போர்" (மணி9 : 80 - 81)

"சிறைக்கோட்டம் அறக்கோட்டம் ஆக்கியகாதை"யில் வேந்தன் ஆடல் மகளிருடன் பொழில் விளையாட விரும்பினான். அம்மகளிர் ஆடலாகிய கூத்தினோடு பாட்டின் பெயருக்கு ஏற்ப அபிநயம் காட்டுதலை தெரிந்தவர்கள். நாடகக்காப்பியமாகிய நல்ல நூல்களை ஆராய்ந்தவர்கள் எனும் சிறப்புடைய ஆடல் மகளிருடன் தேவலோகத்து வேந்தனான இந்திரனைச் சென்று பொழில்விளையாடி மகிழ்ந்தான் வேந்தன் என விளக்குகின்றது.

இவ்வாறான மணிமேகலைத்துறவு என்றும் அழைக்கப்பெறும் இக்காப்பியம் பௌத்தமதக் கொள்கைகளை நீதிவழி வெளிக்காட்டிய போதும் இந்நூலில் நடனம் பற்றிய செய்திகள் இடம் பெற்றுள்ளன. கூத்துநடனம், நாட்டியம், அபிநயம், நாடகம் என்று சொற்கள் பல இடங்களில் இடம் பெற்றுள்ளன. அத்துடன் பதினொருவகை கூத்தில் பேடி ஆடலையும் துடிஆடலையும் எடுத்தியம்புகின்றது. நாடகநல்லூர் எனும் சொல்நாடகத்திற்கு எனத் தனித்த நூல் இருப்பதையும் வேத்தியல், பொதுவியல் என இருவகைக்கூத்து இருந்ததாகவும் தாள முடிவினைக்கூறும் 'துணிவு' எனும் சொல் பயன்படுத்தியமையும் நடனம் செய்வதற்கு அரங்குகள் இருந்ததினையும் நடனம் செய்கின்ற பெண்களும் ஆண்களும் வாழ்வதற்குத் தனித்தனி வீதிகள் இருந்ததாகவும் ஓவியத்தையும் நடனப்பெண்கள் கற்றிருந்ததாகவும் பாரதகண்டத்துடன் 'பரதம்' என்று சொல்லும் இடம்பெற்றமையும் 121 நடனக்கணிகையர் மரபுவழியாக வந்து நடனத்தினை வளர்ந்தனர் எனவும் அறியமுடிகின்றது. சிலப்பதிகாரத்தைத் தொடர்ந்துவந்த மணிமேகலையானது இரட்டைக்காப்பியம் என்று அழைத்தமைக்கமைய சிலப்பதிகாரத்துடன் நடனச்செய்திகள் நின்றுவிடாது மணிமேகலை துறவுபூண்டபோதும் மணிமேகலையில் நடனச்செய்திகள் தொடர்ந்தும் இடம்பெற்றுள்ளமை சிறப்பிற்குரியதே ஆகும்.

# நஞ்சை மனிதர்கள் நாவலில் பெண்கள்

டோனிஷா.சோ,
முழுநேர முனைவர்பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை,
அன்னை வேளாங்கண்ணி கல்லூரி தொலையாவட்டம் - 629 152.

சமுதாய மக்களில் பெரும் எண்ணிக்கையில் இன்று பெண்கள் உள்ளனர். அவர்களின் வாழ்வானது ஏதோ ஒன்றின் அடிப்படையில், பன்னெடுங்காலமாக அடிமைப்பட்டு கொண்டுதான் இருக்கிறது. நமது சமூகம் ஒவ்வொரு கணத்திலும், பெண்களின் பிரச்சனைகளை வெளிப்படுத்திக் கொண்டே தான் இருக்கிறது. ஒரு சமூகத்தின் வளர்ச்சியானது பெண்கள் கையில்தான் உள்ளது. ஆணாதிக்கத்தின் பொருட்டு, அடிமைகளாகத் தங்களது வாழ்வைப் பயத்துடனே வாழ்கின்ற பெண்களைப் பற்றியும், ஆணாதிகாரத்தை எதிர்த்து வாழ முயல்கின்ற பெண்களைப் பற்றியும் 'நஞ்சை மனிதர்கள்' நாவல் கூறுகிறது. நஞ்சை மனிதர்கள், நாவலில், படைக்கப்பட்டுள்ள பெண்களைப் பற்றி இக்கட்டுரை ஆராய்கிறது.

## பெண்கள்

ஓர் உயிரின் தோற்றத்திற்கும், வளர்ச்சிக்கும் முக்கியக் காரணியாக இருப்பவளே பெண். ஆண்களை விட, உடல் வலிமை இல்லாதவர்களாக இருந்தாலும், மன வலிமை உடையவர்களாக காணப்படுகின்றனர்.

**''மங்கையராகப் பிறப்பதற்கே - நல்ல**
**மாதவம் செய்திட வேண்டும்''** (பெண்ணின் உரிமைகள். பா.1)

என பெண்ணாய்ப் பிறப்பதற்குப் பெருமைப்பட வேண்டும் என்று கவிமணி பாடியுள்ளார். பெண்குழந்தை என்றால், கள்ளிப்பால் கொடுத்து கொல்லும், இவ்வுலகில் பெண்ணாகப் பிறந்தால் பெருமைப்பட வேண்டும் என்று பதிவு செய்தமை பெண்களின் பெருமைகளைக் குறித்த முழக்கமாக உள்ளது.

பெண்கள் பல்வேறு பண்பியல் சார்ந்த சிறப்புகளைக் கொண்டுள்ளனர். பெண்களுக்கே உரிய பண்புகளை,

**''அச்சமும் நாணும் மடமும் முந்துறுதல்**
**நிச்சமும் பெண்பாற்குரிய''** (தொல்-களவு-நூற் - 8)

என்ற நூற்பாவின் வழி அறியலாம்.

அச்சம், மடம், நாணம் இவையெல்லாம் பெண்ணுக்குரிய பண்புகள் என களவியலில் தொல்காப்பியர் குறிப்பிட்டுள்ளார். மேலும் பெண்களுக்கு எனச் சிறப்பாக உடையது கற்பு. இதனைத் திருவள்ளுவர்,

**''பெண்ணின் பெருந்தக்க யாவுள கற்பென்னும்**
**திண்மை உண்டாகப் பெறின்''** (குறள் - 54)

என்கிறார். இதிலிருந்து கற்பு எனப்படும் உறுதிநிலை இருக்குமானால் பெண்ணைவிட பெருமையுடையது வேறொன்றுமில்லை என்பது புலனாகிறது.

## பெண்மையைச் சுட்டும் பெயர்கள்

தமிழில், அணங்கு, இளம்பிடி, காரிகை, கோதை, தையல், பாவை, மகடூ, மடவரல், நங்கை போன்ற பிற சொற்களும், பெண்களைக் குறிக்கும் சொற்களாக அமைகின்றன.

## நஞ்சை மனிதர்கள்

சோலை சுந்தர பெருமாளின் நாவல்களுள் ஒன்று நஞ்சை மனிதர்கள். இந்நாவல், பெண்களின் வாழ்வியலை உண்மைத் தன்மையோடு பதிவு செய்துள்ளது. பெண்கள் தங்கள் கணவனால், எவ்வாறெல்லாம் ஒடுக்கப்பட்டார்கள் என்பதனையும், பெண்களின் மனபோராட்டங்களையும் இந்நாவல் விளக்குகிறது. மூன்று தலைமுறை பெண்களின் வாழ்வியலையும் தெளிவுபடுத்தியுள்ளது.

நாவலில் 5 பெண்கள் முதன்மை கதைமாந்தர்களாகவும், 32 பெண்கள் துணை கதைமாந்தர்களாகவும் படைக்கப்பட்டுள்ளனர்.

## நீலாயதாட்சி

சாதி, மதம், இனம், மொழி, நிறம் எனப் பல்வேறு வேறுபாடுகளின் காரணமாக மக்கள் ஒதுக்கப்படுகின்றனர். நிறத்தால் ஒதுக்கப்படுகின்ற மக்கள் மனத்தளவில் பெரும் பாதிப்புக்கு உட்பட்டவர்களாகவே வாழ்கின்றனர்.

நாவலில், சோமுப்பிள்ளையின் மனைவி நீலாயதாட்சி. தனது நிறத்தினால், கணவனால் ஒதுக்கப்பட்டவளாகவும், ஒடுக்கப்பட்டவளாகவுமே வாழ்கிறாள்.

**''நீலாயதாட்சியும் நெருப்பக் குளிப்பாட்டினாப்ல ..................**
**நெறம் தானே கருப்பு'' (ந.ம.ப-16)**

என்ற வரிகளினூடாக, நீலாயதாட்சி நிற அடிப்படையில் விளிம்பு நிலையில் தள்ளப்படுவதை உணர முடிகிறது.

கணவனால் அவனது தேவைக்கு மட்டுமே பயன்படுத்தும் ஒரு பொருளாகவே இருக்கிறாள். கணவனைப் பார்க்கவும், அவனிடம் பேசவும் பயந்து வாழ்பவளாகக் காட்சிப்படுத்தப்பட்டுள்ளாள். இதனை,

**''தன்னோட புருஷன் மொகத்தத்தான் முழுசா பாத்திருக்குமா இந்த நீலாயதாட்சி? புருஷன் பேச்ச எதிர்த்து ஒரு வார்த்தை பேசத்தான் நெஞ்சில் ஈரம் ஏது?''** *(ந.ம.ப-20)*

*என்ற வரிகள் புலப்படுத்துகின்றன. ஆணாதிக்கத்தின் காரணமாக ஏற்படும் பெண்களின் அச்சம் கலந்த மன உணர்வுகளையும் படைப்பாளர் சித்தரித்துள்ளார்.*

**''ஏ....நீலா!ன்னு. கூப்புட்டாப்போதும். அது கையில எது இருந்துச்சோ, இல்லையோ போட்டுட்டு ஓடிப்போயி ஏன்னு கேட்டுப்புடும் இல்ல.... அவரு கையில் எது கெடைச்சிச்சே அத எடுத்து சரியா பதம் பாத்துடுவாரு... ரெத்த விளாரு தான்...''** *(ந.ம.ப-32)*

*என்ற, வரிகள் வாயிலாக, நீலாயதாட்சி கணவனால் எவ்வாறு, அடிமைப்படுத்தபட்டாள் என்பது தெளிவாகிறது.*

**சாத்தனூர் லலிதாம்பா**

*பெண்கள் அடிமைப்பட்டு வாழ்ந்த காலங்கள் மாறி, ஆணுக்கு நிகராக வாழ முற்படுகின்றனர். கணவனுக்கும், பிள்ளைகளுக்கும் தொண்டாற்றிக்கொண்டு மட்டும் வாழும் பெண்களின் மத்தியில், சமூக நலனில் அக்கறை கொண்டவர்களாகவும், தன் அடையாளத்தைப் பதிக்கும் முனைப்பு உடையவர்களாகவும் பெண்கள் வாழ்கிறார்கள்.*

*"நஞ்சை மனிதர்கள்" நாவலில் சாத்தனூர் லலிதாம்பா முற்போக்கு சிந்தனையுடையவளாக இருக்கின்றாள். குழந்தைத் திருமணத்தினாலும் கணவனின் இறப்பினாலும் துன்பப்பட்டாள், இதனை*

**''பாலு குடுச்சப் பல்லு தேயிரத்துக்குள் கட்டிக்கிட்டப் புருஷன் கொளத்துல விழுந்து பொக்குன்னுப் போயிட்டான்''** *(ந.ம.ப-15)*

*என்ற வரிகளின் வாயிலாக, அறியமுடிகிறது.*

*கணவனை இழந்த பின்பு, சோமுப்பிள்ளையின் இரண்டாம் மனைவியாக மாறினாள். நீலாயதாட்சியின், மகன் வெள்ளைச்சாமியைத் தன் மகன் போல வளர்த்தாள் என்பதனை,*

**''சாத்தனூருக்குச் சக்களாத்தியாப் புள்ளையான வெள்ளைச்சாமி பெத்த ஆயாக்கிட்டக் கூட அவ்வளவு ஒட்டுறவா இருக்க மாட்டான். அதுவும், அவன உள்ளங்கைக் குள்ளயே வச்சி பொத்திப் பொத்தி தான் வளத்துச்சி''** *(ந.ம.ப-எ-11)*

*இதிலிருந்து குடும்பத்தினை வழிநடத்துவதில் பெண்களின் பங்கு வெளிப்படுகிறது.*

**அங்கம்மா**

*திருமணத்திற்குப் பிறகு, பெண்களுக்குப் பிறந்த வீடு என்றால், மிகுந்த சந்தோஷம். யாரிடமும் பிறந்த வீட்டின் பெருமையை விட்டுக் கொடுக்க மாட்டார்கள்.*

*நாவலில், வெள்ளைச்சாமியின் மனைவி அங்கம்மா. இவர்கள் காதல் செய்து, வீட்டினரின் விருப்பப்படியே திருமணம் செய்து கொண்டனர். தன் தங்கையின் திருமண ஏற்பாடுகள் நடந்தபோது, வீட்டுக்கு மூத்த மாப்பிள்ளை என்ற முறையில், தன் கணவருக்குத்*

தன் வீட்டார் எந்த மதிப்பும், மரியாதையும் வழங்கவில்லை. தாயினால், புறக்கணிக்கப் பட்டாள். அதன் பிறகு, அவளது குடும்பத்தினரோடு எந்த விதமான தொடர்பும் இல்லாமல் போனது. இதனை

**''...ஊம் என் தலையெழுத்து போலவே நடக்கட்டும். நம்ம ரெண்டு பக்கமும் கெடந்து அடிச்சிக்கிட்டு லோலுபட வேண்டியிருக்கு. காலத்துக்கும் இதுதான் நடக்கப் போவுது பொறந்த இடம் சரியா வர்றவரைக்கும் பொறந்த ஊட்ல அடிவைக்க வேண்டாம்... பொறந்த எடத்துக்குப் போயி பெத்த ஆயி அப்பன அன்னாந்து பாத்து மூணு வருஷமாச்சு''** (ந.ம.ப-125)

என்ற நிகழ்வின் வாயிலாக அறியமுடிகிறது.

அங்கம்மாவின் தாத்தா, கோவிந்தசாமிப்பிள்ளையின் திட்டத்தால், மாமனார் சோமுப்பிள்ளையை வெட்டிக் கொன்றனர். இதனை, அவளால், தாங்க முடியவில்லை. இதனால், மனமுடைந்த அங்கம்மா, தற்கொலை செய்யலாம் என்று முடிவு எடுத்தாள்.

**''அங்கம்மா மனச விட்டுட்டா......அரளிமரத்தில உள்ள கொட்டைய பறிச்சாந்து அரைக்கும் போது சாத்தனூரு கண்ணுல பட்டுட்டா...''** (ந.ம.ப-180)

என்ற வரிகள், அங்கம்மாவின் மனப்போராட்டத்தைப் புலப்படுத்துன்றன.

### சாவித்திரி

பெண்கள் அடிமைத்தளையிலிருந்து விடுபட்டு சாதனைப் படைக்க முற்படுகிறார்கள் என்று கூறினாலும், இன்றும் பலதலைமுறைகள் தாண்டினாலும் பெண்களை அடிமைப்படுத்தி வாழும் நிலை இருந்துகொண்டுதான் இருக்கிறது.

நாவலில், மூன்றாம் தலைமுறையில் வருபவள் சாவித்திரி. குப்புசாமியின் மனைவி நீலாயதாட்சியை போன்று, கணவனால் ஒடுக்கப்பட்டு, கணவனைப் பார்த்து பயந்து வாழ்பவள்.

கணவன் குப்புசாமிக்கு வேறு பெண்களோடு தொடர்பு இருந்தது, என்பதனை அறிந்தும், அவனுக்குப் பணிவிடை செய்பவளாக இருக்கிறாள். குப்புசாமி சொத்துக்களையும் நகைகளையும் விற்று அவனது விருப்பம்போல வாழ்ந்தான். சாவித்திரி கர்ப்பமாக இருந்தாள். இந்நிலையில் பிள்ளைகளுக்கு நல்ல தாயாகவே அவள் இருந்தாள். குப்புசாமி எவ்வளவு கொடுமைப்படுத்தினாலும். அவள் யாரிடமும் அவனை விட்டுக் கொடுத்து பேசவில்லை என்பதனை,

**''புருஷன் இத்தன கொடுமை செஞ்சாலும், அவன யாரு ஒண்ணு சொல்லிரும் சாவித்திரியால தாங்க முடியிலத்தான்''.** (ந.ம.ப-ப-196)

என்ற வரிகள், தெளிவுபடுத்துன்றன. கணவன், குப்புசாமியால் சாவித்திரி கொல்லப்பட்டாள், இதனை,

**''சாவித்திரியை விசும்பி தள்ளி விட்டான். அவ மாருமல்லாக்க போயி விழுந்து அலறிட்டா.. சாவித்திரிக்கு வயித்திலஅடிப்பட்டதால் மூச்சிப்பேச்சி இல்லாம சரிஞ்சிட்டா''**

என்னும் வரிகள், வாயிலாக அறியலாம்.

**காயத்திரி**

பெண்களுக்குக் கல்வி உரிமை மறுக்கப்பட்டிருந்த காலம் மாறி, பெண்களும் கல்வி கற்கலாம் என்ற நிலை உருவானது.

நாவலில், கல்வி கற்கின்ற பெண்ணாகக் காயத்திரி படைக்கப்பட்டுள்ளாள். மேலும், பெண்கள் ஆண்களைக் கண்டு பயந்து இருந்த நிலையும் மாறி ஆண்களின் தீயசெயல்களைப் பார்த்து, கேள்வி கேட்கும் பெண்ணாக இருக்கிறாள்.

''**காயத்திரி அறையில் உக்காந்து படிக்கிற**
**சத்தம் நல்லாவே கேக்கிறது..''** (ந.ம.ப-190)"

என்ற வரிகள் காயத்திரி கல்வி கற்றாள் என்பதனைப் பலப்படுத்துகின்றன.

தாயின் மீது கொண்ட அன்பினாலும், தந்தையின் மீது கொண்ட வெறுப்பினாலும் தனது பெயரை மாற்றிக் கொண்டாள் என்பதனை,

''குப்புசாமி காயத்திரிங்கிற பெயரை மாற்றி சாவித்திரி காயத்திரிங்கிற பெயர் அங்கீகரிக்கப்பட்டு.. அரசிதழில் வெளிவந்துள்ளது''

என்னும் வரிகளின் வழியாக அறியமுடிகிறது.

**தனபாக்கியம்**

பெண்களைப் பகடைக்காயாக மாற்றி பிறர் வாழ்வில் விளையாடும் நபர்களும் உண்டு.

தனபாக்கியம், தனது தந்தையின் பகடைக்காயாக இருக்கிறாள். தந்தையின் சொல்லுக்கு கட்டுப்பாடு தனது கணவனையும், தனது மகளையும் மருமகனையும் தனக்கு, கீழ்படிய வைக்க முயன்றாள். துணிச்சல் மிகுந்தவளாக இருந்தாள். தனது மகள் அங்கம்மாவின் மேல் கோவம் கொண்டு, அவளைப் புறக்கணித்தவளாகக் காணப்பட்டாள்.

''**தனபாக்கியத்துக்கு மூக்குப் பொடைச்சிக்கிட்டு... வரவு செலவு எல்லாத்தையும் அப்பாரு கையில கொடுத்துட்டாள். தன் புருஷனை எப்படி எல்லாம் வசங்கட்ட முடியுமோ அப்படி பேசி அவர மடக்கி இடுப்பில் கட்டிக் கொண்டாள்..''** (ந.ம.ப-151)

இவ்வரிகள், தனபாக்கியத்தின் பண்பிளைச் சுட்டி காட்டுகின்றன.

**முடிவுரை**

பெண்கள் இல்லாத சமுதாயம் வளர்ச்சி அடையாது என்று பெண்ணின் பெருமையைக் கூறினாலும் இன்றும் பெண்கள் பல்வேறு நிலைகளில் ஒடுக்கப்படும் நிலை தான் காணப்படுகிறது. அதிலும், பாலியல் முறையில் பெண்கள் அதிகமாகத் துன்புறுத்தப்படுகின்றனர். நாவலில், நீலாயதாட்சியும், சாவித்திரியும் கணவனால் தான் ஒடுக்கப்பட்டனர். அங்கம்மா தனது குடும்பத்தினரால் ஒடுக்கப்பட்டவளாக இருக்கிறாள். லலிதாம்பாவும், காயத்திரியும் முற்போக்கு சிந்தனை உடையவர்களாகப் படைக்கப்பட்டுள்ளனர். இவ்வாறு நஞ்சை மனிதர்கள் நாவலில் பெண்களின் வாழ்வியலை ஆசிரியர் தெளிவுறப் பதிவுசெய்துள்ளார்.

# பல துறைகளிலிருந்து பெண்ணியம்

ஞா. சௌபர்ணிகா,
ஆராய்ச்சியாளர், மானுடவியல், பழங்குடி மக்கள் ஆய்வு,
தமிழ்ப்பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

இறைவன் படைப்பில் ஆணும் பெண்ணும் இரு சமமான உயிரிகளாகும். இரண்டு உயிரிகளும் மானுட சமுதாயத்தை உருவாக்குகின்றன. மானுடத்தின் உயர்ந்த பண்பு மனிதனை மனிதனாக மதிக்கும் பண்பாகும்.

பொதுவாகச் சமூகவியல் கோட்பாட்டின்படி ஒத்த தகுதியுடைய இரு கூறுகளிடையே எப்பொழுதும் முரண்பாடுகள் தோன்றிக்கொண்டே இருக்கும். இதனால் தான் ஆண் பெண் என்ற இரண்டு உயிரிகளுக்கிடையே அவைத் தோன்றிய காலம் முதல் போராட்டம் நிகழ்ந்து கொண்டே இருக்கிறது.

பெண்ணிய இயக்கம் மேலை நாடுகளில் தோன்றியது என்றாலும்,பெண்ணிய சிந்தனையின் தடம் இன்று நேற்று தோன்றியது அன்று.புராண காலத்திலேயே கூட அது இருந்துள்ளது. இதற்குச் சான்றாகச் சிவன் பார்வதிக்குத் தன் உடம்பில் பாதியைக் கொடுத்த நிலையை சுட்டலாம். இத்தன்மை ஆணுக்குப் பெண் சமம் என்பதை வலியுறுத்துகின்றது. ஆணுக்கு சமுதாயம் நல்கும் அனைத்து உரிமைகளும் பெண்களுக்கும் கிடைக்க வேண்டும்.

சமூக நோக்கில் சமத்துவம் நிறைந்த சமுதாய அமைப்பை உருவாக்க வேண்டும் என்ற நோக்கின் அடிப்படையில் தான் ‘பெண்ணியம்’ என்ற இயக்கம் இயங்கிக் கொண்டிருக்கின்றது. இந்நோக்கில் பெண்ணியம் என்பது ஓர் இயக்கமாக உலகின் பல இடங்களிலும் தோன்றி வளர்ச்சி பெற்று வருகிறது.

தாய் வழி சமூகத்தின் மரபுகளைக் கொண்ட நாம் அதிகமான பெண் தெய்வங்களை வணங்கக் கூடியவர்கள் தமிழ்நாட்டில் அதிக அளவில் காணப்படுகிறது, இயல்பிலேயே பெண்களை நாம் வணங்கக் கூடியவர்கள் அவர்களின் வழிகளில் நடந்து வந்தவர்கள். வேட்டையாடி சமூகமாகத் திரிந்தவர்களை விவசாய குடிகளாக மாற்றியது பெண்களின் சிறந்த கண்டுபிடிப்பு விவசாயம்தான்.

**மொழி:**

*மொழியை வளர்க்கும் மாண்பு ஆடவர்க்கு மட்டுமே உரித்தானது என்ற நிலை தமிழ் மொழியிலிருந்த கலப்பை சரி செய்ய ' தனித்தமிழ் அகராதியை' உருவாக்கியதோடு மொழியை தூய்மைப்படுத்த தந்தையரால்தொடங்கப்பட்ட தனித்தமிழ் இயக்கத்திலும் பெரும்பங்கு வகித்தவர் நீலாம்பிகை அம்மையார் அவர் மட்டுமா இந்தி எதிர்ப்பு போராட்டத்தில் களம் இறங்கி போராடிய பெண்களின் மொழிப்பற்றினை என்னவென்று சொல்ல... என்னே! அவர்களின் மொழிப்பற்று!!!...*

**இலக்கியம்:**

*மக்களைச் சீர்படுத்தி நல்வழியில் வாழ வழிகாட்டியாய் அமையும் இலக்கியங்களில் சங்ககாலம் முதலே பெண்கள் ஆதிக்கம் செலுத்தி வருகின்றனர். " சங்ககாலத்தில் ஔவையார், காவற்பெண்டு தொடங்கி தற்காலத்தில் இராஜம்கிருஷ்ணன் என்று அவர்களின் பட்டியல் நீண்டு கொண்டே செல்கிறது. தமிழில் மட்டுமின்றி உலக அளவில் இவர்களின் சாதனைகள் கொஞ்சமல்லவே. கருப்பின மக்களின் உரிமைக்காகப் போராடி அவர்களின் துயரத்தை உலகுக்கு வெளிச்சப்படுத்தியதோடு நோபல் பரிசு வென்ற முதல் கருப்பின பெண்மணியாய் ஜொலிக்கும் 'டோனி மோரிசன்' போன்றோர் மொழியைச் சிறப்படைய செய்வதோடு மட்டுமின்றி இன விடுதலைக்காகப் போராட இலக்கியங்களை ஆயுதமாய் கொள்வது எத்தகு சிறப்பு மிக்கதன்றோ?*

**சமூகம்:**

*குறிப்பிட்ட பகுதியில் வாழும் மக்கள் எவ்வித பாகுபாடும் இன்றி ஒற்றுமையுடன் வாழச் செய்து அச்சமூகத்தைப் பிறவற்றிலிருந்து வேறுபடுத்தி காட்டுவதில் தனிச்சிறப்பு பெற்றவர்கள் பெண்கள். அவர்களின் சமூக விடுதலைக்காக மட்டுமின்றி நாட்டின் விடுதலைக்காகவும் போரடிய அவர்களின் தியாகம் அளப்பறியதல்லவா! ஆங்கிலேய ஆட்சியை எதிர்த்துப் போராடி உயிர்த்தியாகம் செய்த "ஜான்சி ராணி, தில்லையடி வள்ளியம்மை முதல் தேவதாசி முறையை எதிர்த்துப் போராடிய மூவலூர் ராமாமிர்தம் மட்டுமின்றி உலக அளவில் ஒடுக்கப்பட்ட, கல்வி மறுக்கப்பட்ட மேரி மெக்லியோட் பெத்யூன் என்று சமூக மாற்றத்தில் இவர்களின் பங்கு அளப்பறியதல்லவா?*

**அரசியல்:**

*மிகப்பெரிய யானைக்கூட்டத்திற்கு ஒரு பெண் யானையே தலைமை தாங்கி வழிநடத்தி செல்லுமாம். அதுபோல பெண்கள் பல சிறப்பு பண்புகளை பெற்றிருந்தாலும் அவர்களின் தலைமைப்பண்பு தனிச்சிறப்பு பெற்றதாகவே திகழ்கின்றது. அவர்கள் குடும்பத்திற்கு வழிகாட்டியாய் செயல்படுவதுடன் நாட்டினையே சிறந்த முறையில் வழிநடத்தி நல்லாட்சி செலுத்தி வளமடைய செய்திருக்கின்றனர். உதாரணமாக இந்திரா காந்தி அம்மையார் பிரதமராக இருந்தபோது நாட்டில் பல முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டதுடன் ஒரு நாட்டிற்கே விடுதலைப் பெற்றுத் தந்த அவரின் தைரியத்தை*

மதிப்பிட அளவுகோல் தான் உண்டோ? மதராஸ் மாகாணத்தில் முதல் பெண் சட்ட மன்ற உறுப்பினராய்ப் பொறுப்பேற்று சமூகத்தில் பல மாற்றத்தை ஏற்படுத்திய டாக்டர் முத்துலட்சுமி அம்மையாரின் சேவையை மறக்க முடியுமா?

தமிழ்நாட்டின் வளர்ச்சியில் பெண்களின் அரசியல் பங்களிப்பு முக்கியமானது. அதுவும் அக்காலத்தில் இருந்த தேவதாசி முறை ஒழிப்பு, இரு தார மணம் முறை ஒழிப்பு, குழந்தைத் திருமண முறை ஒழிப்பு போன்ற சமூகத்தீமைகளை அகற்றுவதற்காக இவர்கள் மேற்கொண்ட அரசியல் செயல்பாடுகள் இன்றியமையாதவை. தமிழுக்காகவும் பெண் கல்வி, கலப்பு மணம், விதவைகள் மறுமணம் ஆகியவற்றுக்காகப் போராடியவர் கரந்தை தருமாம்பாள் அம்மையார்.

1940 வரை தமிழாசிரியர்களுக்கு மதிப்பே இல்லை. மற்ற பாட ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் ஊதியத்தில் பாதியோ அதற்குக் குறைவாகவோதான் தமிழாசிரியர்களுக்கு வழங்கப்படும். இதை எதிர்த்து தமிழாசிரியர்களுக்கும் மற்ற ஆசிரியர்களுக்குச் சமமான ஊதியம் வழங்கப்பட வேண்டும் என்று தொடர்ச்சியான போராட்டங்களை முன்னெடுத்தார். அப்போராட்டங்களுக்கு இவர் வைத்த பெயர் இழவு வாரம். போராட்டத்தின் பலனாகத் தமிழாசிரியர்களுக்கு நியாயம் கிடைத்தது.

1938ல் சென்னையில் தமிழ்நாட்டு பெண்கள் மாநாடு என்ற மிகப்பெரிய மாநாட்டை நடத்தினார். இம்மாநாட்டில்தான் ஈவெராவை ‘பெரியார்’ என்று அழைத்தார்கள். அதுவே பின்பு அவரின் அடையாளமாகிப் போனது. திராவிட இயக்கத்தோடு சேர்ந்து இந்தித் திணிப்பிற்கு எதிரான பேராட்டத்திலும் கலந்துகொண்டு சிறை சென்றிருக்கிறார்.

இவர்களைப் போல் நாகம்மை, மணியம்மை, ருக்மணிதேவி லட்சுமிபதி, குஞ்சிதம் குருசாமி, நீலாவதி அம்மையார் என்று எத்தனையோ பெண்கள் தமிழ்நாட்டிற்குக் குறிப்பிடத்தகுந்த அரசியல் பங்களிப்பைச் செய்திருக்கிறார்கள். தற்காலத்திலும் கனிமொழி, ஜோதிமணி, தமிழிசை சௌந்தர்ராஜன் போன்ற பெண்கள் அரசியலில் சிறப்பான பங்காற்றுகிறார்கள்.

**கல்வி, மருத்துவம்:**

அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பெதற்கு என்றிருந்த நிலையை மாற்றி "பெண்கள் கல்வி கற்றாலொழிய சமூகத்தில் மாற்றங்கள் ஏற்படாது" என உரைத்து விழிப்புணர்வூட்டிய பெரியார் போன்ற சமூக சீர்திருத்தவாதியால் எட்டாக்கனியாய் இருந்த கல்வி எளிதில் கிடைக்க வழிவகை செய்யப்பட்டது. இப்போது ஆண், பெண் இடையிலான கல்வி இடைவெளியும் நெருங்கி தொடங்கியுள்ளது. கல்வியில் ஏற்பட்ட இதுபோன்ற மாற்றத்தால் பெண்கள் அனைத்து துறைகளிலும் கோலோச்சுகின்றனர். அரசும் பெண் கல்வியை ஊக்குவிக்க பல நலத்திட்டங்களை உருவாக்கியுள்ளது.

பெண்கள் மருத்துவராவதை, மருத்துவ உலகமே விரும்பாத நிலையில், டாக்டர் முத்துலட்சுமி அவர்கள் இந்தியாவின் முதல் பெண் மருத்துவராகி, அடையாறில் இலவச புற்றுநோய் சிகிச்சை, ஆராய்ச்சி மையம் அமைத்து சேவை புரிந்தார். இவரைப்போல ஐடாஸ்

சோபியா ஸ்கட்டர் என்பவரும் வெளிநாட்டில் பிறந்தாலும் இந்தியாவில் மருத்துவம், சுகாதாரத்தினைப் பற்றி முழுமையாகக் கற்று சேவை புரிந்து வந்தார்.

**காவல்துறை:**

ஆங்கிலேயரால் காவல்துறை உருவாக்கப்பட்டாலும் அரசின் விழிப்புணர்வு, நிதியுதவி, இடஒதுக்கீடு போன்ற காரணத்தால் பெண்கள் முக்கிய பங்கு வகிக்கின்றனர். இந்தியாவின் முதல் பெண் இந்திய காவல் பணி அதிகாரி கிரண்பேடி, தமிழ்நாட்டில் முதல் பெண் ஐபிஎஸ் அதிகாரி திலகவதி அவர்கள், சமூகத்திற்குப் பல வகையில் சேவையை செய்துள்ளனர். முதல் திருநங்கை போலீஸ் அதிகாரியாகப் பிரித்திகா யாசினி நியமிக்கப்பட்டுள்ளார். இதுபோன்ற பெண் காவலர்கள் சமுதாயத்திற்கு வேலி போல செயல்பட்டு காக்கின்றனர்.

**கலைகள் மற்றும் பண்பாடு:**

கலைகள், பண்பாடு ஒரு சமூகத்தின் நீண்டகால பாரம்பரியத்தைக் குறிக்கும், குறியீடுகளாகக் செயல்படுகின்றன. கலைகள் உழைக்கும் மக்களின் உடல், மனச்சோர்வை போக்கும் வடிகால்களாக உள்ளன. இவ்வகையான கலைகளில் ஒன்றான இசைக்கலையில் பெயர் பெற்ற பெண்கள் பலர் இருந்தாலும் நம் நினைவருபவரில் முன்னிலை வகிப்பவர் "இசைப் பேரரசி எம் எஸ் சுப்புலட்சுமி" அவர்களே. நடனக் கலையில் சிலப்பதிகார காலம் முதல் பெண்கள் (மாதவி) பலர் இருந்தாலும், திருநங்கையரும் நடனத்திற்கு புகழ் சேர்ப்பது கிரீடத்தின் மேல் அமைந்த மைல் கல் போன்றது. அவர்களில் மிக முக்கியமானவரான நர்த்தகி நடராஜ புகழேனியின் உச்சிக்கொம்பில் இருப்பவர் அழகிய நடனம் இவர் சேர்ந்த சமூகத்திற்கு மட்டுமின்றி இந்திய நாட்டிற்கே பெருமையளிப்பதல்லவோ.

**விடுதலை போராட்டம்:**

ஆங்கிலேயரை எதிர்த்து போராடிய சிவகங்கையை மீட்ட முதல் பெண்மணி வீரமங்கை வேலு நாச்சியார் நமக்குத் தெரியும், அதே வேலுநாச்சியாரின் படையில் குயிலி என்ற பெண் வெள்ளைக்காரனின் ஆயுதக் கிடந்தை மனித வெடிகுண்டாக மாறி தகர்த்த வரலாறும் உண்டு.

சிவகங்கை இராணி வேலு நாச்சியார் ஆட்சிக்காலம் கி.பி 1780 - கி.பி 1783 சிவகங்கை தலைநகரான காளையார்கோயிலை கிழக்கிந்திய கம்பெனியின் படை முற்றுகையிட்டபோது சிவகங்கை மன்னர் முத்துவடுகநாதத்தேவரின் மனைவியான வேலுநாச்சியார் வீரத்தோடு எதிர்த்ததன் மூலம் தமிழக மகளிர் வீரத்தில் குறைந்தவர்கள் இல்லையென்பதை நிரூபித்தார். ஆங்கிலேய ஆதிக்கத்துக்கு எதிராகப் போராடிய முதல் இந்தியப் பெண்மணி என்ற பெருமையும் வேலுநாச்சியாருக்கே உரித்தாகும்.

இராணி லட்சுமிபாய் வட இந்தியாவின் சான்சி நாட்டின் இராணி. 1857 இந்தியக் கிளர்ச்சியில் பெரும் பங்காற்றி இந்தியாவில் பிரித்தானியரின் ஆட்சிக்கு எதிராகக் கிளர்ந்து

எழுந்தோர்களின் முன்னோடி பிரித்தானியருக்கு எதிராகப் படைகளைத் திரட்டினார். 1857ம் ஆண்டு, முதல் விடுதலைப் போரில் தீவிரமாக குதித்தார்.

**முடிவுரை:**

மேற்கண்ட இவை அனைத்தும் பெண்களுக்கு எளிதில் கிடைத்த வெற்றி அல்ல! பல தலைவர்கள், பல பெண்கள் செய்த தியாகத்தினால் அவர்கள் நடத்திய அரசியல் போராட்டத்தினால் இந்த இடத்துக்கு வந்து சேர்ந்துள்ளோம். இந்த இடத்தை நாம் பெற பல நாட்களும் பல்வேறு போராட்டங்களும் நடந்தேறி உள்ளன, ஆகவே நாம் இந்த இடத்தில் இருந்து அடுத்த இடத்தை செல்வதற்கான வழிகளைப் பெறுவதற்கு நாமும் கல்வி, அரசியல், என்று அனைத்து துறைகளிலும் நாம் முன்னேற வேண்டும், ''பெண்களின் முன்னேற்றம் மட்டுமே நாட்டின் முன்னேற்றத்திற்கு உதவும்'' மனித வளத்தில் ஆண்களின் சரிபாதியாக இருக்கும் பெண்கள் என்று வளர்ச்சி அடைகிறார்கள் அன்றே ஒரு நாட்டின் முழுமையான வளர்ச்சியைப் பெற முடியும்.

# சுவடிக்கணித எடுத்துரைப்பில் பெண்ணியச்சமத்துவம்

முனைவர் த. கண்ணன்
பேராசிரியர், அரிய கையெழுத்துச் சுவடித்துறை,
தமிழ்ப்பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

கணக்கதிகாரம், ஏரம்பம், கிளராலயம், அதிசாகரம், கலம்பகம், திரிபுவனதிலகம், கணிதரத்தினம், சிறுகணக்கு முதலான பல கணக்கு நூல்கள் அறியப்படுகின்றன. அவற்றுள் கணக்கதிகாரம், ஆஸ்தானகோலாகலம், எனும் கணக்கு நூல்களே சுவடிக் கணித நூல்களாகக் கிடைக்கின்றன.

கணக்கதிகாரம், ஆஸ்தானகோலாகலம் என்பன தமிழ்ச்சிந்தனை மரபில் கணிதத்துறை பெற்றிருந்த பண்பட்ட வளர்ச்சியை எடுத்துரைக்கும் நூல்களாகும். இவற்றுள் கணக்கதிகாரம் எனும் கணிதநூலை, கொறுக்கையூர் காரிநாயனார் இயற்றியுள்ளார். இந்நூலாசிரியரைப் "பொன்னி நன்னாட்டுப் பொருந்தியபுகழோன்... புத்தன்புதல்வன் காரியென்பவனே" என்று சிறப்பிக்கிறது இந்நூலின்பாயிரம். "எண்ணென்ப ஏனையெழுத்தென்ப" (குறள்.) என்ற குறட்பாவின் அடிப்படையில் நோக்குகின்றபொழுது, எழுத்தைவிட எண்ணிற்கு முக்கியத்துவம் அளித்துள்ள தமிழர் மரபைக் காணமுடிகிறது. எல்லாக் கலைகளுக்கும் எண் அடிப்படையாக விளங்குவதால் எண்முன் வைக்கப்பட்டிருக்க வேண்டும். பண்டையக் காலத்தில் ஆசிரியர்களைக் 'கணக்காயனார்' என்றே அழைத்துள்ளனர். அத்தகைய சிறப்புப் பெற்ற தமிழ்க்கணக்குநூல் எடுத்துரைப்பின் வழியாக உணரப்படும் பெண்ணியச்சமத்துவத்தை இக்கட்டுரை எடுத்துரைக்கிறது.

## கணக்கதிகார எடுத்துரைப்பு

நிலம், பொன், நெல், அரிசி, கல், கால் என்ற ஆறுவழிக் கணக்குகளையும் அறுபது செய்யுள்களால் விளக்கும் இந்நூல் மகடூஉ முன்னிலையாக அமைந்துள்ளது. அவ்வளவில் பெண்ணை முன்னிலைப்படுத்திய எடுத்துரைப்பு முறைகளில் அமையும் தமிழ்நூல்நெறி

இந்நூலிலும் பின்பற்றப்பட்டுள்ளன. இவற்றுள் பெண்ணியச் சமத்துவத்தை விளக்கும் விதமாக இதன் எடுத்துரைப்பு முறைகள் உள்ளன.

## மகடூஉ முன்னிலை

கணக்கதிகாரச் செய்யுட்கள் மகடூஉ முன்னிலையாக அமைந்துள்ளன. அவ்வாறான மகடூஉ விளியின் வழியாக, பெண்ணிய நோக்கு அறிப்படுகிறது.

"நேரிழையாய்" (1:2), "நன்னுதலாய்" (3:3), "கொற்றவேற்கண்ணாய்" (4:2), "திருமாதேதேனே" (6:4), "திரண்டஇளமுலையாய்" (7:4), "ஆழித்திருவே" (10:2), "கொஞ்சுகிளி மொழியே" (11:2), "பெய்வளையாய்" (15:2), "ஏந்திழையீர்" (19:2), "தோழி" (21:2), "மானனையாய்" (22:2), "திருமாதே" (23:2), "நெய்த்திருள் சுருண்ட கூந்தல் நெறிமயிற் சாயலாளே" (24:2), "ஒண்ணுதலாய்" (26:2), "அதிராதே" (27:2), "மானனையாய்" (28:2), "செறிகுழலாய்" (36:2), "தேமொழி" (37:2), "ஓதரிய மேனித் திருவனையாய்" (38:2), "வடிவுடையமாதே" (53:2), "பொற்றொடியாய்" (54:4), "சேயிழையாய்" (59:1), "வாணுதலாய்" (63:3), "மாதே" (64:2)

என்பனவாகக் கணக்கதிகாரத்துள், மகடூஉமுன்னிலை அமைகிறது. இவற்றைப் பெண்ணிய நோக்கில் ஆராய்கின்றபொழுது,

- பெண்ணிற்கான மொழி, இனிமை பொருந்தியதாகக் குறிக்கப்படுகிறது. அந்நிலையில் பெண்மொழி தேன் போன்று இனிமை உடையது என்பதை, "திருமாதேதேனே" (6:4), என்றும்,"தேமொழி"(37:2),என்றும் கிள்ளைமொழியாக இனிமை செய்வதை, "கொஞ்சுகிளி மொழியே" (11:2), என்றும் குறிப்பிடுவதன் வழியே அறியமுடிகிறது.
- பெண்அணிகலன்களால் அழகு பெறுவதை, கணக்கதிகாரம் விளிச்சொற்கள் பதிவிடுகின்றன. அவற்றுள், "நேரிழையாய்" (1:2), "பெய்வளையாய்" (15:2), "பொற்றொடியாய்" (54:4) என்பன குறிப்பிடத்தக்கனவாக உள்ளன. நேரிழையாய் என்ற விளியை விளக்கும் கழகப்பதிப்பின் உரை, "மேன்மையாகச் செய்யப்பட்ட அணிகலன்களை அணிந்தவளே" என்றுரைக்க, சுப்பிரமண்யசுவாமி அவர்கள் பதிப்பில் காணப்படும்உரை, "நேர்மையாகிய ஆபரணத்தைத் தரித்தவளே" என்றுரைக்கிறது. இவ்வுரைவேறுபடுகளின்வழி, பெண்ணிற்கான ஆணிகலன், நேர்மை என்ற ஆபரணமே என்ற கருத்தியல் வெளிப்படுவது விளங்கும்.
- பொதுநிலையில்விளிக்கும்கணக்கதிகாரத்துச்சொற்களுள், "மாதே" (64:2), "திருமாதே" (23:2), "வடிவுடையமாதே" (53:2) என்றுரைப்பதையும் "தோழி" (21:2) என்றுரைப்பதையும் காணமுடிகிறது. இதன்வழி பெண்ணைத் தோழியாக நோக்கும் சமநோக்குப் பார்வை இதன்வழி உணரப்படுகிறது.
- பெண்ணை மென்மைத் தன்மையுடன் நோக்கியதை, "மானனையாய்" (22:2), (28:2), என்று விளிப்பதன் வழியே அறியமுடிகிறது.

## முத்துக்கணக்கு

முத்துக்களை விற்பனை செய்யும் வியாபாரி ஒருவர், தனது முத்துக்களுக்கான

விலையை எடுத்துரைத்துப்பதும் அதனை ஓர் அரசன் பெற்றுக்கொள்வதுமான போக்கில் சிலகணக்குகள் எடுத்துரைக்கப்படுகின்றன.

முதல் முத்தின்விலை ஒரு பணம் என்றும் இரண்டாவது முத்தின் விலை இரண்டு பணம் என்றும் மூன்றாவது முத்தின் விலை மூன்று பணம் என்றும் சுட்டும் முத்து வியாபாரி. இவ்வாறே ஒன்பது முத்துக்கள் உள்ளன என்றுகூற, அதனை அரசன் மூன்று சரிபாக முத்துக்களின் எண்ணிக்கையும் விலையும் ஒரே அளவினதாகப் பெறும்நோக்கில் இக்கணக்கு அமைகிறது. அரசன் தனது வேண்டுகோளின்படி, வியாபாரி முத்துக்களைப் பிரித்து அளிக்கும் அறிவுநுட்பமே இக்கணக்காக அமைகிறது. இக்கணக்கின் விவரம் கீழ்வருமாறு.

$9X0.5=4.5$, அதனுடன் அரையைக்கூட்ட 5 ஆகிறது. இந்த ஐந்தை முத்து ஒன்பதுடன் பெருக்குகின்றபொழுது $9 X 5 = 45$, என்றாகிறது. எனவே மொத்தமாகப் பெறப்படும் ஒன்பது முத்துக்களின் கூடுதல்பணம் 45 ஆகும்.

இக்கணக்கை எடுத்துரைக்கும் கணக்கதிகாரம், அரசனுக்கு மனைவியர் மூவர் என்றும் அவர்களுக்காக வாங்கப்படும் இந்த முத்துக்கள் அவர்களுக்குள் காணப்படும் சமத்துவத்தை மேம்படுத்தும்விதமாக அமைய வேண்டும் எனக்கருதியதையும் அதனடிப்படையில் அரசன், எனக்கு மனைவியர்மூவர், அவர்களுக்கு முத்தும் பணத்தின் மதிப்பும் சமமாக அமையும்படி இவற்றைத் தருமாறு வியாபாரியைக் கேட்டுக்கொள்வதாகவும் எடுத்துரைக்கப்படுகிறது.

இதனடிப்படையில் அரசனின் மனைவியர் மூவருக்குமான சமஅளவிலான பங்கீட்டு முறையை வியாபாரி கீழ்வருமாறு விளக்குகிறார்.

| மனைவிகள் | முத்துக்களின் ஒதுக்கீடு |
|---|---|
| முதல் மனைவி | முதல் முத்தும், ஒன்பதாவது முத்தும்.<br>இந்த இரண்டு முத்திற்கான பணம் 10 |
| இரண்டாவது மனைவி | இரண்டாவது முத்தும், எட்டாவது முத்தும்.<br>இந்த இரண்டு முத்திற்கான பணம் 10 |
| மூன்றாம் மனைவி | முன்றாவது முத்தும், ஏழாவது முத்தும்.<br>இந்த இரண்டு முத்திற்கான பணம் 10 |

மேற்கண்டவாறு ஒதுக்கப்பட்ட முத்துக்கள் தவிர்த்து, எஞ்சி இருக்கும் முத்துகள் மூன்று. அதாவது நான்காவது முத்து, ஐந்தாவது முத்து, ஆறாவது முத்து என்றமூன்று. இந்த மூன்று முத்துக்களின் மொத்தப்பணம் 15.

இவற்றுள் முதல் மனைவிக்கு ஆறாவது முத்தைக் கொடுக்க, முதல் மனைவி பெற்றது மூன்று முத்துக்கள், அவற்றின் மொத்தப்பணம் $10 + 6 = 16$

இரண்டாவது மனைவிக்கு நான்காவது முத்தைக் கொடுக்க, இரண்டாவது மனைவி பெற்றது மூன்று முத்துக்கள், அவற்றின் மொத்தப்பணம் $10 + 4 = 14$

மூன்றாவது மனைவிக்கு ஐந்தாவது முத்தைக் கொடுக்க, மூன்றாவது மனைவி பெற்ற முத்துக்கள் மூன்று, அவற்றின் மொத்தப்பணம் $10 + 5 = 15$.

மேற்கண்டவற்றுள்மூன்றுமனைவியருக்கும்மூன்றுமுத்துக்கள்கொடுக்கப்பட்டபோதும் அவற்றின் பணமதிப்பு சமஅளவாக அமையவில்லை. முதல் மனைவிக்குக் கொடுத்த பணமதிப்பு-16, இரண்டாம் மனைவிக்குக் கொடுத்த முத்தின் பணமதிப்பு-14, மூன்றாம் மனைவிக்குக் கொடுத்த முத்தின்மதிப்பு-15. இந்நிலையில், முதல் மனைவிக்குக் கொடுத்த ஒன்பதாவது முத்தை இரண்டாம் மனைவிக்கும், இரண்டாம் மனைவிக்குக் கொடுத்த எட்டாவது முத்தை முதல் மனைவிக்கும் கொடுக்க, மூவருக்கும் கொடுத்த முத்தின் எண்ணிக்கை மூன்றாகவும், பணமதிப்பு சமஅளவில் 15 ஆகவும் அமைகிறது. இதற்கான சக்கரம் கீழ்வருமாறு,

| | | |
|---|---|---|
| 1 | 8 | 6 |
| 2 | 9 | 4 |
| 3 | 7 | 5 |

இவ்வாறே முத்துக்கணக்கை விரிவுபடுத்திக் கூறும் கணக்கதிகாரம், 25 முத்துக்களைப் பங்கிட்டுக் கொடுக்கும் கணக்கில், அரசன் "எனக்கு மனைவிமார்கள் **ஐந்துபேர்** இருக்கிறார்கள். அவர்கள் ஐவருக்கும் முத்துஞ் சரியாக விலையுஞ்சரியாக நீயே பங்கிட்டுக் கொடு" என்றுரைப்பதாகவும் அதற்கான சக்கரத்தை,

| | | | | |
|---|---|---|---|---|
| 5 | 9 | 13 | 17 | 21 |
| 25 | 4 | 8 | 12 | 16 |
| 20 | 24 | 3 | 7 | 11 |
| 15 | 19 | 23 | 2 | 6 |
| 10 | 14 | 18 | 22 | 1 |

என்றுரைக்கிறது. அவ்வாறே, 49 முத்துக்களைப் பங்கிட்டுக் கொடுக்கும் கணக்கில், "ஓ வணிகனே எனக்கு மனைவிமார்கள் **ஏழுபேர்கள்** இருக்கிறார்கள். எவருக்கும் ஏற்றத் தாழ்ச்சியில்லாமல் ஒரே தன்மையாக, விலையுஞ்சரிப்பட முத்துஞ்சரிப்பட நீயே பங்கிட்டுக் கொடுப்பாயாக" என்றுரைப்பதாக எடுத்துரைத்து, அதற்கானசக்கரத்தைக் கீழ்வருமாறு குறிப்பிடுகிறது.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 7 | 13 | 19 | 25 | 31 | 37 | 43 |
| 49 | 6 | 12 | 18 | 24 | 30 | 36 |
| 42 | 48 | 5 | 11 | 17 | 23 | 29 |
| 35 | 41 | 47 | 4 | 10 | 16 | 22 |
| 28 | 34 | 40 | 46 | 3 | 9 | 15 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 21 | 27 | 33 | 39 | 45 | 2 | 8 |
| 14 | 20 | 26 | 32 | 38 | 44 | 1 |

என்றுரைக்கிறது. இதன்வழி, கணிதமும் மனைவியர் என்ற நிலையில் பெண்களுக்குள் பாகுபாடு இன்றி, சமஅளவில் நோக்கப்பட்டதையும் அறியமுடிகிறது. இவ்வாறே ஒன்பது மனைவியர்களுக்கு முத்துக்களும் பணமதிப்பும் சமஅளவில் பங்கிடுவதற்கான சக்கரம் கீழ்வருமாறு அமைகிறது.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | 17 | 25 | 33 | 41 | 49 | 57 | 65 | 73 |
| 81 | 8 | 16 | 24 | 32 | 40 | 48 | 56 | 64 |
| 72 | 80 | 7 | 15 | 23 | 31 | 39 | 47 | 55 |
| 63 | 71 | 79 | 6 | 14 | 22 | 30 | 38 | 46 |
| 54 | 62 | 70 | 78 | 5 | 13 | 21 | 29 | 37 |
| 45 | 53 | 61 | 69 | 77 | 4 | 12 | 20 | 28 |
| 36 | 44 | 52 | 60 | 68 | 76 | 3 | 11 | 19 |
| 27 | 35 | 43 | 51 | 59 | 67 | 75 | 2 | 10 |
| 18 | 26 | 34 | 42 | 50 | 58 | 66 | 74 | 1 |

ஒரே எண்ணிக்கையிலான முத்துக்கள், ஒரே மதிப்பிலான பணம் என்ற நோக்கிலான இக்கணித முறையின் எடுத்துரைப்பில் மனைவியர்களுக்குச் சமஅளவில் அளிக்குமாறு எடுத்துரைக்கப்பட்டுள்ளது. இதனால், மனைவியர் பலராகியபொழுதும் அவர்களுக்கான சமநோக்கு அவசியம் என்பதையே காட்டுகிறது.

மேற்கண்ட கணித முறைகளில் முத்துக்களின் மதிப்பு 25, 49, 81, என்ற முறையில் அமைந்தன. இவை ஒற்றைப்படையில் 5, 7, 9 என்ற எண்களின் பெருக்கத் தொகையாகும். இந்நிலையில் 4, 6, 8 என்றவாறு முடிவுறும் இரட்டைப்படை எண்களின் பெருக்கத் தொகையாகவரும் 16, 36, 64 என்ற மதிப்பிலான எண்களுக்கான சக்கரம் கீழ்வருமாறு அமைகிறது.

16 முத்துக்களை நான்கு மனைவியர்களுக்குச் சமமாகப் பங்கிட்டுக் கொடுக்கும் முறைக்கான சக்கரம் கீழ்வருமாறு அமைகிறது.

| | | | |
|---|---|---|---|
| 1 | 2 | 15 | 16 |
| 3 | 4 | 13 | 14 |
| 5 | 6 | 11 | 12 |
| 7 | 8 | 9 | 10 |

*36* முத்துக்களை ஆறுமனைவியர்களுக்குச் சமமாகப் பங்கிட்டுக் கொடுக்கும் முறைக்கான சக்கரம் கீழ்வருமாறுஅமைகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 34 | 35 | 36 |
| 4 | 5 | 6 | 31 | 32 | 33 |
| 7 | 8 | 9 | 28 | 29 | 30 |
| 10 | 11 | 12 | 25 | 26 | 27 |
| 13 | 14 | 15 | 22 | 23 | 24 |
| 16 | 17 | 16 | 19 | 20 | 21 |

*64* முத்துக்களை எட்டு மனைவியர்களுக்குச் சமமாகப்பங்கிட்டுக் கொடுக்கும் முறைக்கான சக்கரம் கீழ்வருமாறு அமைகிறது.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 61 | 62 | 63 | 64 |
| 5 | 6 | 7 | 8 | 57 | 58 | 59 | 60 |
| 9 | 10 | 11 | 12 | 53 | 54 | 55 | 56 |
| 13 | 14 | 15 | 16 | 49 | 50 | 51 | 52 |
| 17 | 18 | 19 | 20 | 45 | 46 | 47 | 48 |
| 21 | 22 | 23 | 24 | 41 | 42 | 43 | 44 |
| 25 | 26 | 27 | 28 | 37 | 38 | 39 | 40 |
| 29 | 30 | 31 | 32 | 33 | 34 | 35 | 36 |

இவற்றால் கணிதவிளக்குதற்கு எடுத்துக்கொண்ட பொருண்மையில் பெண்ணியச்சம நோக்கு எனும் கருத்தியல் கலந்திருப்பதைக் காணமுடிகிறது.

## முடிவுரை

கணக்கதிகாரம் என்பது தமிழரின் கணக்கியல் அறிவுத் திறனுக்குச் சான்றாக அமையும் நூலாகும். சுவடிக் கணிதங்களைத் தன்னுள்கொண்டுள்ள இக்கணித நூலின் கணித நுண்ணறறிவுத் திறன்கள் நன்கு வெளிப்படுத்தப்படாமல் உள்ளன. இந்நூல் மகடூஉ முன்னிலை எனும் எடுத்துரைப்பில் அமைகிறது. மகடூஉ முன்னிலையில் அமையும் பெண்மை சுட்டிய விளிகளின் வழியாகப் பெண்ணியப் பார்வை விளங்குகிறது. ஒற்றைப்படை, இரட்டைப்படை எண்களின் பெருக்கத்தொகைகளைச் சமநோக்கில் பங்கிடும் கணிதமுறைகளில் மனைவியர் பலராகியபொழுது, அவர்களுக்கு அளிக்கப்பட வேண்டிய சமநோக்கு எனும்கருத்தியலை இந்நூலிள் காணமுடிகிறது. இக்கட்டுரையில் தரப்பட்டுள்ள கணக்குகள் ஒருபக்கத்தின் கூட்டுத்தொகைகள் சமமாக அமைவன. இக்கட்டடங்களுள் கீழிருந்துமேல், மேலிருந்துகீழ், இடமிருந்துவலம், வலமிருந்துஇடம், கோணம், நான்குகோணம் என்றவாறு கூட்டினாலும் அதன் கூட்டுத்தொகைகள் ஒரே மாதிரியாக வரும் கணக்குக்கள் மாயச் சதுரங்கள் என்றழைக்கப்படும். மாயச்சதுரங்கள் குறித்தும் கணக்கதிகாரத்துள் கணக்குகள் உள்ளன.

# பண்பாட்டு நோக்கில் மலையாளி பழங்குடிப் பெண்கள்

த.சிவக்குமார்
முனைவர் பட்ட ஆய்வாளர், இந்தியமொழிகள் மற்றும் ஒப்பிலக்கியப்பள்ளி
தமிழ்ப் பல்கலைக்கழகம் - தஞ்சாவூர்.

முனைவர் ச. கவிதா
நெறியாளர்
பேராசிரியர், இந்திய மொழிகள் மற்றும் ஒப்பிலக்கியப் பள்ளி,
தமிழ்ப் பல்கலைக்கழகம் - தஞ்சாவூர்.

தமிழகத்தில் கிழக்குத் தொடர்ச்சி மலைகளில் பெரும்பாலும் மலையாளிப் பழங்குடியினர் வாழ்கிறார்கள். வேலூர் மாவட்டம் தொடங்கி இராமநாதபுரம் மாவட்டம் வரை நீண்டு செல்லும் இதன் தொடர்ச்சியில் பல்வேறு மலைகள் உள்ளன. ஜவ்வாதுமலை, ஏலகிரிமலை, கல்வராயன்மலை, சித்தேரிமலை, சேர்வராயன்மலை, சிட்லிங்மலை, வாச்சாத்திமலை, ஜல்லுத்துமலை, கோதுமலை, கஞ்சமலை, நரகமலை, கூசமலை, பச்சைமலை, பாலமலை, கொல்லிமலை, பழனிமலை, சிறுமலை, கரந்தமலை எனக் கிழக்குத் தொடர்ச்சி மலைகள் விரிந்து செல்கின்றன. மலையாளிப் பழங்குடிகள் அனைவரும் கிழக்குத் தொடர்ச்சி மலைகளில் தான் வாழ்கிறார்கள். மலையாளி என்னும் சொல் 'மலையை ஆளுதல்' என்னும் பொருளைத் தருகிறது. கேரளத்தில் வாழும் மலையாளிகளுக்கும் தமிழகக் கிழக்குத் தொடர்ச்சி மலைப் பகுதிகளில் வாழும் மலையாளிகளுக்கும் எத்தகைய தொடர்பும் இல்லை.

தமிழகத்திலுள்ள பழங்குடிகளின் தொன்மைகளை முன் வைத்து இவர்களை மூன்று வகையினராக வகைப்படுத்தலாம். முதலாவது பல நூற்றாண்டுகளுக்கு முன் சமவெளிகளிலிருந்து மலைப்பகுதிகளுக்குக் குடியேறிய பழங்குடிகள். சமவெளிகளிலிருந்து குடியேறாமல் நீண்ட நெடுங்காலமாகவே தத்தம் பகுதிகளில் மண்ணின் மைந்தர்களாக

வாழும் முதுகுடிகள். வரலாற்றுக்கும் முற்பட்ட காலத்திலிருந்தே இத்துணைக் கண்டத்தின் இனக்கூறுகளைத் தனித்துவமாகக் கொண்டிருக்கும் தொல்குடிகள். இதில் முதலாவது வகையில் மலையாளிப் பழங்குடி மக்களைப் பொருத்திப் பார்க்க வேண்டியுள்ளது. ஏனெனில் இவர்களின் வாய்மொழி வழக்காறு இவர்களின் இடப்பெயர்வு வரலாற்றை உறுதி செய்வதாக உள்ளது. அதாவது வெகு காலத்திற்கு முன்பு தாங்கள் காஞ்சிபுரத்தில் இருந்து மலைக்குக் குடியேறியவர்கள் என்று கூறுகின்றனர். அடுத்ததாக இக்கட்டுரையானது மலையில் வாழும் மலையாளிப் பழங்குடி மக்களின் வாழ்வியல் நிலையைக் குறிப்பாகப் பெண்களின் வாழ்க்கை முறை, சடங்கு சார்ந்த நிகழ்வுகள் மற்றும் கால மாற்றத்தால் ஏற்பட்டு வரும் பண்பாட்டு கலாச்சார மாற்றங்கள் பற்றி விவரிக்கிறது.

**வாழ்வியல் சார்ந்த சடங்குகள் - பூப்படைதல்**

பெண் ஒருத்தி முதல்முறையாகப் பூப்படையும் பொழுது தனி குடிசையில் தங்க வைத்து ஒன்பது நாட்கள் தீட்டு கடைப்பிடிக்கின்றனர். அவள் முதலில் பூப்படையும் பொழுது முதல் சடங்கு செய்யும் உரிமை தாய்மாமனுக்கே முன்னுரிமை அளிக்கப்படுகிறது. மற்ற மாதங்களில் பூப்படைந்த நாளில் ஐந்து நாட்கள் தீட்டுச் சடங்காகக் கடைபிடிக்கப்படுகின்றன. அதன் பின் ஆறு மாதத்துக்குள் பெண்களுக்கு திருமணமும் நிச்சயம் செய்கின்றனர்.

புறநானூற்றுப் பாடல், மகட்பாற் காஞ்சித்துறைப் பாடல் பூப்படைதல் குறித்து பதிவு செய்கிறது. சங்க காலம் முதல் இன்று தொல்குடி சமூகத்தின் வாழ்வினூடாக இருப்பதை கீழ்க்காணும் புறநானூறுப் பாடல் வழி அறியமுடிகிறது.

**"பாரி பறம்பின் பனிச்சுனை போல**
**காண்டற் கரியளாகி மாண்ட**
**பெண்மை நிறைந்த பொலிவோடு மண்ணிய**
**துகில்விரி கடுப்ப நுடங்கி தண்ணென**
**அகில்ஆர் நறும்புகை சென்ற டங்கிய**
**கபில நெடுநகர்க் கமழும் நாற்றமொடு**
**மனைச் செறிந்தனளே வாணுதல்"** புறநானூறு(337:6:12)

பெயர் குறிப்பிடப்படாத ஒரு மறக்குடிச் சிற்றரசனின் மகள் பூப்பு அடைந்ததால் பிறரால் காண்பதற்கு அரியவளாகப் பெண்மை நிரம்பிய பொலிவோடு நன்கு வெளுத்து மடித்த துகில் போல அகலின் நறும்புகை கமழும் கபில நிற வீட்டிற்குள் மனைச் செறிக்கப்பட்டாள் என்று இப்பாடல் பதிவு செய்துள்ளது.

**நிச்சயதார்த்தம்**

சங்க காலத்தில் திருமணத்தை வதுவை, வரைவு, மணம், மன்றல் என்று குறிப்பிட்டனர். திருமணத்தின் முதல் சடங்காகக் கொடுப்போர், கொள்வோர் ஆகியோரின் பரிமாற்றம், மன நிம்மதி ஆகியவை அமைகின்றன. இதனை,

**கற்பெனப் படுவது கரணமொடு புணர**
**கொளற்குரி மரபின் கிழவன் கிழத்தியை**
**கொடைக்குரி மரபினோர் கொடுப்பக் கொள்வதுவே** (தொல். கற்.1)

என்னும் நூற்பா விளக்குகிறது. மணமகளின் வீட்டார், தம் மகளைத் திருமணம் செய்ய எண்ணியதன் பின்னர் மனம் உவந்து மணமகனுக்கு வதுவை செய்து தரவேண்டும் என்பதை,

**யானுங் காதலென் யாயும்நனி வெய்யள்**
**எந்தையுங் கொடீஇயர் வேண்டும்** (குறுந்.51)

என்னும் குறுந்தொகை அடிகள் விளக்குகின்றன. இப்பாடலில் தலைவி ஒருத்தியை அவள் விரும்பிய தலைவனுக்குத் தந்தையும் தாயும் திருமணம் செய்து கொடுக்க முன்வருகின்றனர். திருமணம் நடைபெறும் முன்னர் நிச்சயதார்த்தம் என்னும் முறைமையும் நடைபெற்றது. இந்நிச்சயதார்த்தம் என்பது கொடுப்போர், கொள்வோர் இருவரின் எண்ணங்களையும் உறுதி செய்துகொள்ளுதல் என்னும் மரபாகும். சங்க காலத் திருமணங்கள் பெரும்பான்மையாகக் கொடுப்போர், கொள்வோர் சம்மதத்துடன் நடைபெற்றவை என்பதை அறிய முடிகிறது.

மலையாளி பழங்குடி திருமணமும் பெண்ணின் தாய்மாமன் அனுமதி பெற்ற பிறகே நிகழும். திருமணத்திற்கு முன் நிச்சயதார்த்த நிகழ்வுகள் நடைபெற்ற பின் பெண் தன் விரும்பம் போல எதிர்காலக் கணவன் வீட்டில் வாழும் உரிமை உடையவளாக இருக்கிறாள். திருமணம் முதலில் பெண் வீட்டில்தான் நடைபெற்றது. ஆனால் காலப்போக்கில் இந்நிகழ்வு ஆண்கள் வீட்டில் நிகழ்கிறது. அதேபோல திருமணச் சடங்கு பத்து நாட்கள் பிறகு, ஐந்து நாட்கள் என்று குறைந்து இப்பொழுது இரண்டு நாளாகக் குறைந்துவிட்டது. பெண் வீட்டார் ஆண் வீட்டாருக்குப் பத்து மரக்கால் சாமை அல்லது வேறு சிறுதானியம் தருகின்றனர். இன்று சாமைக்குப் பதில் அரிசியும் தரப்படுகிறது. அதேபோல் ஆண் வீட்டார் திருமணம் முடிந்த பிறகு பெண் வீட்டாருக்கு நாற்பது கிலோ பன்றிக் கறியை சமைத்து விருந்து தருவது கட்டாயம். இது மலையாளி பழங்குடியினருக்கே உரித்த பண்பாட்டு மரபாக இன்றும் காணப்படுகிறது.

**திருமணம்**

"சங்க காலத் திருமண முறைப் பற்றியும், முதல் இரவு பற்றியும், அகநானூற்றின் இருபாடல்கள் (86, 136) விரிவாக விளக்குகின்றன. திருமணம் நடந்த நல்ல நாள் பார்க்கும் வழக்கம் இருந்தது. "தீய கோள்களின் தொடர்பு நீங்கப் பெற்ற நல்ல நாளும், 'நிலவை உரோகினி அடைந்த நல்ல நேரமும் திருமணத்திற்குத் தெரிந்தெடுக்கப்பட்டிருந்தன. பூவும், நெல்லும் சொரிந்த நீரில் மணமகள் நீராடப்பட்ட பின்னர் திருமணம் நடைபெற்றது. இந்நீரை முகந்து கொண்டு வருவதற்கும், அதை வாங்கி மணமகளின் தலையில் ஊற்றுவதற்கும் மங்கல மகளிரும் ஈடுபடுத்தப்பட்டமை காண்கிறோம். திருமண நாளன்று அரிசியும், உளுந்தும் கலந்த பொங்கல் உணவு அனைவருக்கும் அளிக்கப்பட்டது."

பழங்குடி பெண் திருமணமான தன்னுடைய கணவரோடு வாழ விருப்பம் இல்லையெனில், தன் சமூகத்தைச் சேர்ந்த வேறு ஒரு ஆண் மகனைத் திருமணம் செய்து கொண்டு வாழலாம். ஆனால் இவ்விருவருக்கும் பிறக்கும் குழந்தை முதல் கணவரிடமே ஒப்படைக்கப்படும். இங்கு விதவை மறுமணம், மறு மணத்திற்கும் அனுமதி உண்டு. பெண்

ஒருத்தி தன் விருப்பம் போல் வேறு ஒரு சாதியைச் சேர்ந்த ஆணை திருமணம் செய்து கொண்டால் கட்டாயம் சாதி விலக்கம் செய்யப்படுவாள். இதற்கு மாறாக ஆண் மகன் வேறு சாதியோடு பெண்ணைத் திருமணம் செய்து கொண்டால் காலப்போக்கில் ஆண்களை ஏற்றுக் கொள்கின்றனர்.

## கருவுறுதல் நிகழ்ச்சி

கருவுறுதல் என்பது, "சூல்", என்று குறிக்கப்படுவதும், ஒரு பெண் முதன் முதலில் கருவுறுதல் ‘தலைச் சூல் அல்லது கடுஞ்சூல்’ எனவும்; குறைப்பிரசவம் இயல்பு மீறிய செயலாகவும் கருதப்பட்டது. முழுகாலக் கர்ப்பம் ‘நிறைசூல்’ எனவும் அழைக்கப்பட்டது. இது போல குறுகிய காலக் கருச்சிதைவு ‘உறுப்பில் (உறுப்பு + இல்) பிண்டம்’ என்றழைக்கப்படுவதை,

**’’சிறப்பில் சிதடும் உறுப்பில் பிண்டமும்’’ (புறம்: 28-1)**

என்று புறத்தில் குறிப்பிடப்படுகிறது.

பூப்பு எய்திய மூன்று நாட்களும். தலைவி, தலைவனைப் பிரிந்து உறைவாள். மகப்பேறு நிகழும் இல்லத்தினை ஈனில் (குறுந்தொகை - 85) என்று குறித்தனர். இலங்கையில் இச்சொல் இன்றும் வழக்கிலுள்ளது. மகப்பேறு அடைந்தவுடன் சின்னாளளவு சிற்சில மகளிர்க்கு அல்குல் பக்கமெங்கும், வரி வரியாகத் தோல் விரிவடையும். இதனை வரித்திவலை ‘அல்குல்’ என்று குறித்தனர் (நற். 370). சூல் முதிர்ந்து அசையும் இயல்புடைய நிறைசூல் மகளிர் மார்பகம் பருத்துப் பால் கட்டியிருக்கும். மகவு ஈன்றபின் வெண்கடுகை அரைத்து நெய்யுடன் கலந்து உடம்பில் பூசிக்கொள்வர். (நற். : 370).

குழந்தைப் பிறப்பினைத் தீட்டு சார்ந்த மங்களகரமான சடங்கு என்கிறார் அந்தேதாணிகுட் ‘‘21 பெண் கருவுயிர்த்தல் ,குழந்தை பெறுதல் பற்றிய செய்திகளும் அவைத் தொடர்பான சடங்குகளும் சங்க இலக்கியத்தில் பாடப்பட்டுள்ளன. வீட்டில் குழந்தை பிறந்தால், குழந்தை பெற்ற பெண்ணின் தலையில் வெண்சிறுகடுகைத் தடவித் தலைமுழுக் கட்டும் நிகழ்வைச் செய்தனர். இதனை,

"திருந்து இழைமகளிர் விரிச்சிநிற்ப
வெற்உற விரிந்த அறுவை மெல் அனைப்
புனிறு நாறு செவிலியொடு புதல்வன் துஞ்ச்
ஐயவி அணிந்த ரெய்யாட்டு ஈராணிப்
பசுரெய் கூர்ந்த மென்மை யாக்கைச்
சீர்கேழு மடந்தை ஈர்இமை பொருந்த" (நற்.பா-40)

என்ற பாடலடிகள் வழி அறிய இயலும். வீட்டில் குழந்தை பிறந்தால், பிறந்த குழந்தையைப் பெற்றத்தாய் ஆகியோரைப் பேயிடமிருந்து காக்க ஐயவி பூசுதலைச் சங்ககால மக்கள் சடங்காகச் செய்தனர்.

மலையாளி பழங்குடி பெண் கருவுற்ற நாளில் இருந்து எந்த விதமான சடங்குகளையும் செய்வதில்லை. குறிப்பாக ஐந்தாவது மாதம், ஏழாவது மாதம், சீமந்தம் போன்ற நிகழ்வுகள்

எதையும் நிகழ்த்துவதில்லை. ஆனால் பெண்ணின் முதல் பிரசவம் கட்டாயம் தாய் வீட்டில் தான் நடைபெறும். குழந்தை பேற்றின்போது வலி ஏற்படாமல் இருக்கவும் சுகப்பிரசவம் நடக்கவும் இச்சமூகத்திலே உள்ள வயது முதிர்ந்த பெண் ஒருத்தி மந்திரம் கூறி ஒருவகையான எண்ணையைத் தடவுகின்றனர். குழந்தை பிறந்த பின்பு ஐந்து நாட்கள் தீட்டாகக் கருதுகின்றனர். தீட்டுக் கழித்து விட்ட பின் குழந்தைக்குப் பெயர் சூட்டுகின்றனர். முதலில் பெண் குழந்தையாக இருந்தால் பெரும்பாலும் 'ரேணுகா' என்று குலத்தெய்வ பெயரும், ஆண் குழந்தையாக இருந்தால் 'ராமன்' என்றும் பெயர் வைக்கின்றனர். மற்றபடி எந்த விதமான சடங்குகளும் நிகழ்த்துவது இல்லை. பெண் விருப்பப்பட்டால் இரண்டாவது குழந்தை பிறப்பையும் தாய் வீட்டில் பெற்றுக் கொள்ளலாம். பெண் குழந்த பிறந்தால் வீட்டில் செல்வம் வளரும் என்ற நம்பிக்கை மலையாளி பழங்குடியினரிடம் நம்பிக்கையாக இருக்கிறது.

### தாய்த்தெய்வம்

பழந்தமிழர் தாய்த்தெய்வ வழிபாட்டில் மிக இன்றியமையாத இடம், கொற்றவை வழிபாட்டுக்கு உண்டு. பழந்தமிழர் வழிபட்ட பல்வேறு பெண்தெய்வங்கள் பற்றிய குறிப்புகள் சங்க அகப்புற இலக்கியங்களில் ஆங்காங்கே சிதறிக்கிடக்கின்றன. அத்தகு குறிப்புகளைத் திரட்டி ஒருங்கு வைத்து ஆய்கையில் சங்க இலக்கியங்களில் இடம்பெறும் பெண்தெய்வங்கள் கன்னித்தெய்வங்கள், தாய்த்தெய்வங்கள் என்று இருவேறு நிலைகளில் குறிப்பிடப்பட்டாலும் அவைத் தாய்த்தெய்வங்களே. பி.எல்.சாமி அவர்களின் கூற்று இக்கருத்துக்குத் துணை நிற்பதாகும். "தாய்த் தெய்வத்தைத் தாயாகவும் கன்னியாகவும் உருவகப்படுத்திக் கூறுவது மிகப்பழங்காலத்திலிருந்தே மரபாக உள்ளது. அவளை எல்லாரையும் பெற்ற தாயாகக் கருதுவதும் அழியாக் கன்னியாகக் கருதுவதும் சுமேரியா, எகிப்து, சீரியா, இந்தியா ஆகிய நாடுகளின் பழைய நாகரிகங்களில் காணப்படுகின்றது." ஆக சங்க இலக்கியங்கள் குறிப்பிடும் கடல்கெழு செல்வியும் (அகம். 370) கானமர் செல்வியும் (அகம். 345) தாய்த்தெய்வங்களே. சங்க இலக்கியங்களில் இடம்பெறும் தாய்த் தெய்வங்கள் பற்றிய குறிப்புகள், அத்தெய்வம் காட்டை இருப்பிடமாகக் கொண்டவள் என்ற பொருளிலேயே கையாளப்பட்டுள்ளன. பதிற்றுப்பத்தில் இடம்பெறும் 'அயிரை' என்ற தெய்வம் மலையை இருப்பிடமாகக் கொண்டது. கடல்கெழு செல்வியைத் தவிர பிற இடங்களிலெல்லாம் காடு, மலை, மலைச்சாரல், மலைச்சுனைச் சார்ந்தே தாய்த்தெய்வங்கள் பழந்தமிழ் இலக்கியங்களில் பதிவாகியுள்ளன.

மலையாளி பழங்குடிகளிடையே பெரும்பாலும் தாய்த்தெய்வ வழிபாட்டு முறையே காண முடிகிறது. தாய்த்தெய்வம் ரேணுகாம்பாள். இவைச் செதுக்கப்பட்ட உருவமாக இல்லாமல் வெறும் கற்சின்னங்களின் அமைப்பாகவே இருக்கிறது. சிறு தெய்வ வழிபாட்டு முறையையும் காணமுடிகிறது. இவையும் கற்சின்னமாகவே உள்ளது. கோயிலில் திருவிழா நடைபெற வேண்டுமானால் 'கணியன்' என்பவர் குறிபார்த்து நாளைக் கணித்து தருகிறார். அதன் பிறகே கோயில் திருவிழாக்களுக்கு ஏற்பாடு நடக்கிறது. இதில் பெண்களின் பங்கே அதிகம்.

விழா என்கின்ற பெயரில் பரவலாகப் பொங்கலையே பிரதானமாகக் கொண்டாடு கின்றனர். ஜவ்வாதுமலை மலையாளிகளிடம் பொங்கல் விழா என்பது முக்கிய நிகழ்வாகக் கருதப்படுகிறது. குறிப்பாக இம்மக்களிடம் புராணங்களின் தாக்கம் பரவலாக உள்ளது. உதாரணமாக மலையில் பஞ்சபாண்டவர்கள் வாழ்ந்ததாகவும், மகாபாரதப் போர் ஏற்பட்டதாகவும் சில இடங்களைக் குறிப்பிடுகின்றனர்.

## பெண் மருத்துவம்

ஆண்கள், பெண்கள், குழந்தைகள் முதல் முதியோர் அனைவருக்கும் நோய்களுக்குத் தேவையான மருந்துகளை இயற்கை மூலிகையின் மூலமே பெற்றுக் கொள்கின்றனர். மருத்துவத்தைப் பொருத்த வரை ஆண்களை விட பெண்களே திறமை வாய்ந்தவர்களாக இருக்கின்றனர். குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமானால் பெண்களின் மாதவிடாய்க் காலங்களிலும் பெண்களின் பிரசவ காலங்களிலும் பெண்களின் பங்களிப்பு முக்கியமாக உள்ளது. ஒவ்வொரு வீட்டிலும் உள்ள வயதான பெண் மூதாட்டியே பிரசவத்தைப் பார்க்கின்றார்.

நோவு, நோதல்' போன்ற சொற்கள் நோயைக் குறிக்கின்றன. நோயை அறிந்து குணப்படுத்துபவரை 'மருத்துவர்' என்று அழைக்கிறோம். நோயுற்றோரின் உடல்நிலையை அறிந்து, அதற்குத் தகுந்தாற் போல பழங்கால தமிழ் மருத்துவர்கள் மருந்து கொடுக்கின்றனர். இதனை,

"பொருந்தியன் வேட்ட பொருளவின் நினைத்த சொல்
திருந்திய யாக்கையுடன் மருத்துவன் ஊட்டிய மருந்து" (கலி.17)
என்று கலிதொகைப் பாடல் எடுத்துறைக்கிறது.
"அரும்பிணி உறுநர்க்கு வேட்டவை கொடாஅது
மருந்து ஆய்ந்து கொடுக்கும் அறவோன்" (நற்.136)

இங்கு நோயினை அறிந்து, அதற்கேற்ற மருந்து கொடுத்த மருத்துவர்களை 'அறவோன்' என்று கூறிய செய்தி புலப்படுகிறது.

பிறர் நோயும் தம்நோய் போல் போற்றி அறன்அறிதல்
சான்றவர்க்கு எல்லாம் கடன்" (கலி.22)

இவ்வரிகளில் நோயாளிக்குச் சிகிச்சையளிக்கும் மருத்துவர், தன்னையே நோயாளி யாகப் பாவித்துச் சிகிச்சையளிக்க வேண்டுமென்று கூறப்பட்டுள்ளது.

## விவசாயம்

சங்ககாலம் என்பது கைத்தொழில்கள், பட்டறைத் தொழில்கள், கப்பல் தொழில், வணிகம் முதலியன நன்கு வளர்ச்சியடைந்து கொண்டிருந்த காலமாகும். இந்த அனைத்துத் தொழில்களுக்கும் ஆதாரமாகவும், அடிப்படையாகவும் வேளாண்மைத் தொழில் இருந்தது. அந்தவகையில் சங்ககாலத்தில் வேளாண்மை பெண்னே முதல் முதலாக வேளாண்மைத் தொழில் ஈடுப்பட்டவள் என்பதை மனிடவியளார்களின் கூற்று ஆகும். அந்தவகையில்

கீழ்க்காணும் சங்க இலக்கியம் பாடல் வரிகளில் வேளாண்மை குறித்த வகைகள் பற்றி தெளிவுப்படுத்துகிறது.

நாற்று நடுதல்,(பெரும் பாணா 211-12)
களையெடுத்தல்,(பதி 19)
பயிரைக் காத்தல்,(புறம் 344)
அறுவடை செய்தல்,(அகம்116;மதுரைக்110)
தானியங்களைப் பதப்படுத்தல்(பட்டின22-23)

என்று வேளாண்மையின் முக்கிய தொழில்களைச் செய்தார்கள்.

விளைச்சலின் முழுப்பயனையும் அடைய பயிர்களை விலங்குகள், பறவைகளிடமிருந்து காக்க வேண்டும். குறிஞ்சி நிலத்தில் மகளிர் தினைப்புனம் காப்பதன் மூலம் இதைச் செய்தனர். 'கிளிகடி' எனும் கருவியாகிய தட்டையைக் கொண்டு ஒலியெழுப்பியும், தழலினைச் சுற்றியும் தினைப்புனம் காத்தனர். (குறிஞ்சி41-44;அகம்118, 242;குறு217; நற்22,57,102,128; ஐங்குறு281)

ஆதிப்பொதுவுடமை சமூகத்தில் வேட்டையாடுதல் பிரதான தொழிலாக இருந்தது. அதே போல் இவர்களும் குறிப்பிட்ட காலம் வரை வேட்டைச் சமூகமாக இருந்தனர். ஒருபுறம் இவை நிகழ்ந்தாலும் மறுபுறம் வேளாண்மை செய்யும் சமூகமாகவும் இன்று வாழ்ந்து வருகின்றனர். ஆண்களுக்கு நிகராக பெண்கள் வேளாண்மைத் தொழிலில் ஈடுபட்டு வருவதைக் காணமுடிந்தது. உதாரணமாகப் பெண்கள் ஏர் உழுதல், விதை விதைத்தல், நாற்று நடுதல், பயிரிடுதல், அறுவடை வரை என்று அனைத்து காலங்களிலும் ஆண்களுக்கு நிகராக பெண்கள் உடல் உழைப்பில் ஈடுபடுகின்றனர். உழவுகளில் பசு மாடுகளையும் பயன்படுத்து கின்றனர். தற்காலத்தில் ஏற்ப வேளாண்மையில் நவீன கருவிகள், இயந்திரங்கள் பயன்படுத்தி வருகின்றனர்

## இறப்பு நிகழ்ச்சி

இறந்தவர்கள் அனைவரும் புதைக்கும் பழக்கத்தையே கொண்டுள்ளனர். இவர்கள் இறந்தவர்களின் நினைவாக 'அமாவாசை' போன்றவற்றை வணங்குவதில்லை. ஆவி, ஆன்மாவில் முழு நம்பிக்கை உடையவர்களாக இருக்கின்றனர். சில ஆவி நன்மையும், சில ஆவி கெட்டதையும் செய்யும் என்று நம்புகின்றனர். உதாரணமாக வெளியில் ஒரு நபர் இறந்து விட்டால் அவர்களின் வீட்டில் துக்க சோறு உணவு உண்டால் கூட இவர்களின் மூதாதையர் ஆவி இவர்களை கொடுமைப்படுத்தும் எனவும், மேலும் இவர்களுக்கும் இவர்கள் வீடுகளில் உள்ள விலங்குகளுக்கும் நோய் உண்டாகும் என்றும் நம்புகின்றனர். அதேபோல் இவர்களில் யாராவது ஒருவர் வெளிஇடத்தில் இறந்து விட்டால் அவருடைய ஆன்மாவை மீண்டும் அவர்கள் வாழ்ந்த பகுதிக்கு கொண்டு வர 'பதி' போடுதல் என்ற நிகழ்வைச் செய்கின்றனர். இதன் மூலம் இறந்தவரின் ஆன்மா மீண்டும் அதே இடத்திற்கு வந்துவிடுவதாக நம்புகின்றனர். இறந்தவர்களை அழைத்து குறிகேட்கும் மரபு மலையாளிப் பழங்குடி மக்களுக்கு உண்டு. இறந்தவர்களின் ஆன்மாவை மீண்டும் அழைக்கும் மரபு வருடம் ஒருமுறையோ, அல்லது இரு முறையோ நிகழும்.

உலகில் தோன்றிய உயிர்கள் அனைத்தும் உயிர் துறப்பது இயற்கை. விலங்குகள், பறவைகள் உட்பட அனைத்து உயிர்களும் தனது கூட்டத்தைச் சார்ந்த உயிரின் மறைவைக் கண்டு துயரப்படுவதைக் காணமுடிகிறது. மனித சமூகமும் அதற்கு விதிவிலக்கல்ல. ஒவ்வொரு பகுதியிலும் வாழ்கின்ற மனிதர்கள் இந்த இறப்பினை ஒட்டி ஒவ்வொரு வகையான சடங்குகளைப் பின்பற்றி வருகின்றனர். இவை பற்றிய குறிப்புகள் சங்க இலக்கியங்களிலும் இடம் பெற்றுள்ளன. சேரமன்னன் கணைக்கால் இரும்பொறை போரில் தோல்வியடைந்தான். வெற்றி பெற்ற சோழன் செங்கணான், சேரனைக் குடவாயில் கோட்டத்துச் சிறையில் அடைத்தான். அப்பொழுது கடுமையான நீர்த்தாகத்தால் சிறைக்காவலரிடம் தண்ணீர் கேட்டான் இரும்பொறை. அவன் காலம் தாழ்த்தித் தண்ணீர் கொண்டு வந்ததால் வருந்திய சேரன் தண்ணீர் அருந்தாமலேயே உயிர் நீத்தான் அப்போது தன்னுடைய நிலைக்குத் தானே இரங்கிப் பாடியதாக இப் புறநானூற்றுப் பாடல் அமைந்துள்ளது.

**"குழவி இறப்பினும் ஊன்தடி பிறப்பினும்,**
**ஆள் அன்று என்று வாளின் தப்பார்;**
**தொடர்ப் படுஞமலியின் இடர்ப் படுத்து இரீஇய**
**கேள் அல் கேளிர் வேளாண் சிறுபதம்**
**மதுகை இன்றி, வயிற்றிதுத் தீத் தணிய,**
**தாம் இரந்து உண்ணும் அளவை**
**ஈன்மரோ, இவ் உலகத்தானே?"**

இப்பாடல் பழங்காலத்தில் மன்னர்கள் போரின்போது விழுப்புண்பட்டு மடிவதையே பெருமையாகக் கருதினர் என்பதற்குத் தகுந்த சான்றாகத் திகழ்கிறது. மேலும் சேரன் கணைக்கால் இரும்பொறையின் மானமிகு வாழ்வையும் எடுத்தியம்புகிறது. பாடலில், 'பிள்ளை இறந்து பிறந்தாலும் - தசைப் பிண்டமாகப் பிறந்தாலும் - அல்லது பிறந்த குழந்தை இறந்தாலும் அதனையும் ஒரு நபராகவே கருதி உயர்வு தருவர். அந்த இறந்த குழந்தையின் உடலையும் வாளால் பிளந்து வடுப்படுத்தி அடக்கம் செய்வர். அதேபோன்றே மன்னராக இருப்பவர் போரில் பகைவரின் வாளால் வடுப்பட்டு இறந்திடல் வேண்டும். அவ்வாறு இன்றிப் பிழைத்து விட்டால் நாயைச் சங்கிலியால் பிணைப்பதைப்போன்று விலங்கு பூட்டித் துன்புறுத்துவர் பகைவர். அத்தகைய பகைவரிடம் நீரை இரந்து கேட்டு வயிற்றுத் தீயை தணிக்க வேண்டாம். இவ்வுலகில் அத்தகைய இழிந்த இயல்புடையவரை அரசர்களும் பெறுவார்களோ! என்று பாடியுள்ளார் சேரமான் கணைக்கால் இரும்பொறை. இதன்மூலம் சிறு குழந்தை இறந்தாலும் சரி, குழந்தை இறந்து பிறந்தாலும் சரி இறுதிச் சடங்கின்போது அவற்றிற்கு வடு ஏற்படுத்திப் புதைக்கும் முறை இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட நம் தமிழ்ச்சமூகத்தில் இருந்துள்ளமையை அறியமுடிகிறது.

## தொகுப்புரை

மலையாளிப் பழங்குடி மக்களிடம் பெண் குழந்தை பிறப்பதால் செல்வம் சேரும் என்ற நம்பிக்கை நிலவுகிறது. அதனாலேயே குலதெய்வமாக நாச்சியம்மாள், காளியம்மாள், திக்கியம்மன், பலினியம்மன் முதலான தெய்வங்களைக் குலதெய்வங்களாக வழிபடுகின்றனர். தங்கள் வீட்டில் பிறக்கும் பெண் பிள்ளைகளுக்கு மேற்கண்ட தெய்வத்தின் பெயர்களைச்

சூட்டி மரபைப் பேணுகின்றனர். இன்றும் அவ்வழக்கம் பெண்களின் பெயர்களாகச் சூட்டப்பட்டு இருப்பதைக் காணமுடிகிறது.

பூப்புநிலை, வீட்டிற்கு அழைத்தல், தாய்மாமன் சீர், பொலக்குறிச்சி (மாதவிடாய் காலத்தில் தங்கும் குடிசை) திருமணம், சேவைதிருமணம் (உடன்போக்கில் திருமணம்) பரிசம், மறுமணம் என்று பன்னெடுங்காலமாகப் பின்பற்றப்பட்டு வரும் சடங்குமுறை இன்று பழங்குடி மக்களிடம் அழிந்து வருகிறது. மலையாளிப் பழங்குடிப் பெண்களின் வாழ்வியல் நிலை என்பது பாகுபாடின்றி சமத்துவமாக வாழும் சூழல் அமைந்திருக்கிறது. உதாரணமாகச் சொல்ல வேண்டும் என்றால் ஒத்த வயது வந்தவர்களை மட்டுமே மணமக்களாகத் தேர்ந்தெடுக்கின்றனர். ஆண், பெண் மறுமண வாழ்வு ஏற்றுக் கொள்ளப்படுகிறது. சேவை திருமணம் என்ற முறை பொருளாதார சூழல் கருதி உடன்போக்குத் திருமணம் அங்கீகரிக்கப்படுகிறது. பெற்றோர் சம்மதமின்றி திருமணம் நடந்ததாலும் ஊர் பெரியவர்கள் வழி அந்த மணமுறையை அங்கீகரித்துப் புரியவைக்கின்றனர். ஆனால் தற்கால சூழல், பொருளாதர இடம்பெயர்வு போன்றவற்றினால் அவர்களது பண்பாட்டு கூறுகளில் பல அதிவுகள் ஏற்பட்டுள்ளதை கள ஆய்வின் வழி அறிய முடிகிறது. ஒருவகையில் அவர்களின் மூட நம்பிக்கை ஒழிந்து இன்றைய வாழ்வியல் முறைகளுக்கு ஏற்ற ஒரு மாறுதல்கள் நிகழ்ந்தாளும் அவர்களிடையே பன்னெடுங்காலமாக வழக்கில் இருந்த தொல்குடி வாழ்வியல் எச்சங்களும் அழிந்து போகும் சூழல் தவிர்க்க முடியாத ஒன்றாக இருக்கிறது. பழங்குடி மக்களின் பண்பாட்டு விழுமியங்களை முழுதுமாக ஆய்வுசெய்ய பழைய ஆய்வு முறைமையை மட்டும் கருத்தில் கொள்ளாமல் சமூக பண்பாட்டு மானிடவியல் நோக்கில் அகத்தாருடன் இணைந்து பழங்குடி மக்களின் வாழ்வியல் கூறுகளைப் பதிவு செய்ய வேண்டிய கடமை இன்றைய ஆய்வாளர்களின் கடமை ஆகும்.

# மலையாளச் சிறுகதை காட்டும் சமுதாயச் சிக்கல்கள்

த. தேவகி
முனைவர் பட்ட ஆய்வாளர்,
இந்திய மொழிகள் மற்றும் ஒப்பிலக்கியப்பள்ளி
தமிழ்ப்பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

சமூகம் என்பது ‘மக்கள் குழுமனிதர்களின் கூட்டம்’ என்று பொருள் கொள்ளப்படுகிறது. சமூகம் தனிமனிதனால் உருவாக்கப்பட்டதல்ல, தனிமனிதர் களின் கூட்டுமுயற்சியினால், ஒன்று கூடி உருவாக்கப்படுகிறது. மனிதன் தன் உணர்வுகளை, கருத்துக்களைக் கொடுத்தும், பெற்றும் கற்றும் தன்னைப் பிறருடன் ஈடுபடுத்திக் கொள்கின்றான். தனிமனிதன் தனது ஒற்றுமை உணர்வினால் ஒன்று கூடியும், முரண்பாடுகளால் மாறுபட்டும் உணர்வுகளால் வேறுபடுகின்றபோது தோன்றுகின்ற அமைப்புகளைச் சமூகம் என்று குறிப்பிடுகின்றனர். காலம் காலமாக வளர்ந்து வரும் மனித குலத்தின் குணநலன்களை, வாழ்க்கை முறைகளை வெளிப்படையாகவோ, மறைமுகமாகவோ இலக்கியங்கள் சுட்டிச் செல்கின்றன. ஒவ்வொரு காலகட்டத்திலும் இலக்கியங்களின் பாடுபொருள்களிலும் வடிவ அமைப்பிலும் சில கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்ட போதிலும், படைப்பாளி தன் படைப்பில் தன் காலச் சமுதாயத்தைப் பிரதிபலிக்காமல் இருந்ததில்லை. தனித்துச் செயல்பட இயலாத, குழு உணர்வுடைய மனிதனே இலக்கி படைப்பின் அடித்தளமாகிறான். ஆகவே, படைப்பாளியும் சமுதாய அங்கத்தினன் ஆவான். இதுபோன்ற சிக்கல்கள் தமிழ்ச் சிறுகதைகளில் மட்டும் காணப்படவில்லை. எம்.டி.வாசுதேவன் மலையாளத்தில் எழுதிய சிறுகதை ‘திருவாளும் காற்சிலம்பும்’ அதனை தமிழில் புஷ்பவேணி கோவி என்பவர் மொழிப்பெயர்த்துள்ளார். இச்சிறுகதையின் வழியாக மலையாளச் சிறுகதைகளிலும் இதுபோன்ற வறுமையான சூழல் நிலவி இருக்கின்றது என்பதை இக்கட்டுரையின் வழிக் காணலாம்.

## சமுதாயம் - சொல்லாராய்ச்சி

தமிழ் மொழியகராதி 'சமுதாயம்' என்பதற்குக் "கூட்டம், சங்கம், பின்னணி, ஊர்ப்பொது" போன்ற பல்வேறு பொருள்களைத் தருகிறது. ஆங்கிலம் - தமிழ் அகராதியொன்று "கூட்டு வாழ்வுக்குழு, மன்னாயம், நட்புக்குழு, சேர்க்கை, தோழமை, தொகுதி, குடிமை, பண்புடையோர் குழு" என்று சமுதாயத்தைப் பற்றி குறிப்பிடுகிறது. இவ்வாறு சமுதாயம் என்ற சொல் பல பொருள்களால் விளக்கப்படுகிறது.

## சமுதாயம் பற்றி அறிஞர்கள் கருத்து

'ராபர்ட் ரெட் பீல்ட்' என்பவர், 'சிறிய சமூகம்' தமது நூலில் தனிநபர். மக்கள் கூட்டம், நாடு, நாகரிகம் எனப் பலவகை உருவில் மனித இனம் காட்சி அளிக்கிறது என்று குறிப்பிடுகின்றார். இத்தகைய, மனித இனம் ஒன்று கூடி வாழ்வதற்கும், வாழ்க்கையின் பயன்களை ஒருவருக்கொருவர், பிறரோடு, தாமும் பகிர்ந்து கொண்டு துய்ப்பதற்கும் ஏற்ற சூழ்நிலையைக் கொண்டிருப்பின் அந்த மக்கள் கூட்டம் சமூகம் எனப்படும் என்று வி. ஏ. வாசுதேவராஜீ கருகிறார்.

"சமூகம் மனிதவர்க்கத்தினால் உருவது" "சமூகம் மக்களின் திரள்" என்று தமிழ்ச்சொல் விளக்க அகராதி பல்வேறு சமூக நிறுவனங்களின் ஒருங்கிணைப்பாக விளங்கும் சமூக கட்டமைப்பு ஆகும்"

சமூகவியலின் அடிப்படைக் கோட்பாடுகள் என்ற நூலில், "சமுதாயம் என்பது நோக்கங்களின் முழுமையையும் உள்ளடக்கிய சமூகக்குழு" எனப்படுகிறது. "வரையறுக்கப்பட்ட ஒரு பரப்பின் கீழ் வாழும் மக்களுடைய சமூக வாழ்க்கையின் முழுமையான அமைப்பே சமுதாயம்" என்று எஸ்.கே.பாஸ்கர் கிஸ்பர்ட் விளக்கம் தருகிறார்.

## சமுதாயப் பார்வையும் சிறுகதையும்

"ஒரு பிரச்சினையைப் புரிந்து கொள்ள அந்தப் பிரச்சனையை மட்டும் தனித்துவப்படுத்திச் சிந்திப்பது ஒரு வகை. அதே பிரச்சனையைப் புரிந்து கொள்ள அதனுடன் நேர்முகமாகவும் மறைமுகமாகவும் தொடர்பு கொண்டுள்ள சமுதாயத்தின் மொத்த நிகழ்வில் - இயக்கத்தில் - அந்தப் பிரச்சனையை நிறுத்தி வைத்து ஆய்வு செய்வது மற்றொரு வகை. இந்த இரண்டாம் வகை ஆய்வே சமுதாயப்பார்வை" என்கிறார் மேலாண்மை பொன்னுச்சாமி.

"சமுதாயத்தை ஊடுருவிப் பார்க்கும் பார்வை. மனித சமுதாயம் என்பது சாதி, மத, பொருளாதாரத்தைத் தன்னகத்தே கொண்டது. அவைகளுக்கு இடையில் நடக்கும், நல்லவைகள், கெட்டவைகள், பயன்கள், தேவையானவைகள், தேவையற்றவைகள் என்று பலவற்றையும் அறிவதே சமுதாயப் பார்வை" என்கிறார் எஸ். முருகேசன்.

"தேசப் பொருளாதாரச் சிதைவுகளினால் மக்களின் உயிர் வாழ்க்கை நிலையும் நாகரிகமும், கலாச்சாரமும், மனிதத்தன்மையும் மட்டுமல்ல, கிராமக் குடும்பங்களின் உள்மனசுகளும் அசுரத்தனமாய் சிதைக்கப்பட்டு அலைக்கழிக்கப் படுகின்றன"

**வறுமைப் பிரச்சனை**

வறுமை இன்று நேற்றல்ல. தொன்றுதொட்டே சமுதாயத்தைப் பிடித்து ஆட்டுகின்ற ஒன்றாகவே இருந்து வருகிறது.

"குடிப்பிறப்பு அழிக்கும்; விழுப்பம் கொல்லும்
பிடித்த கல்விப் பெரும் புணை விடுவும்
நாணணி களையும் மாணெழில் சிதைக்கும்
பூண் முலை மாதரொடு புறங்கடை நிறுத்தும்
பசிப்பிணி என்னும் பாவி"

என்று பசிக்கொடுமையைப் பற்றிச் சாத்தனார் மட்டுமல்ல சங்கப் புலவர்கள் பலரும் பாடியுள்ளமையை நமது முற்கால இலக்கியங்கள் எடுத்துக் காட்டுகின்றன. பண்பாட்டு வறுமை, புத்தியின் வறுமை போன்ற இதர வறுமைகளைத் தவிர்த்து, இங்குப் பொருளாதார வறுமைப் பற்றிப் பேசப்படுகிறது.

"பொருளாதார, ஏற்றத்தாழ்வுக்கும் மனித வாழ்வின் அவலத்திற்கும் இன்றைய சமூக அமைப்பே முழுமுதற் காரணம், உழைப்பின் மீது மதிப்பு வைத்து வாழத் துடிக்கும் மக்களுக்கும் கூட இந்தச் சமுதாயம் வாழ்வளிக்க அவர்களது வயிற்றுப் பாட்டுக்கு வேலை தர முன்வரவில்லை"

"இன்னாமையின் இன்னாதது யாதுஎனின் இன்மையின்
இன்மையே இன்னா தது"

என்று வறுமையை விடக்கொடிது, எது? என்று வினவ வறுமையை விட வறுமையே கொடிது என்று கூறிடும் வள்ளுவர்,

"இன்றும் வருவது கொல்லலோ நெருநலும்
கொன்றது போலும் நிரப்பு"

என்று வறுமை ஏழைகளைப் படுத்தி வைக்கும் பாட்டை வெளிப்படுத்துகிறார்.

**சிறுகதைச்சுருக்கம்**

எம்.டி.வாசுதேவன் நாயர் புதிய தலைமுறையைச் சார்ந்த எழுத்தாளர்களில் குறிப்பிடத்தக்க ஒருவர். அவருடைய திருவாளும் காற்சிலம்பும் புகழ் பெற்ற ஒரு சிறுகதை. அதில்வரும் ராமகுருப் என்னும் சாமியாடி இருபது வருடங்களாகத் தேவியைச் சேவித்து வருகிறான். நேர்மையுடன் நெறிதவறாமல் வாழ்ந்து வருகிறார். எனினும் தேவியின் அருள்மட்டும் அவனுக்குக் கிடைக்கவில்லை. அவன் குடும்பமே வறுமையில் வாடுகிறது. மூத்தமகன் ஊரில் உள்ள கழிசடைகளுக்கு எல்லாம் தலைவனாகி வீட்டைவிட்டுச் சொல்லாமல் கொள்ளாமல் ஓடிப்போகிறான். ஒரே மகளான அம்மிணியோவை சூரியன் தாக்குதலுக்கு ஆளாகின்றாள். காலம்காலமாகத் தேவியை கதியென்று கிடக்கும் அவன்முன்னால் வாழ்க்கை ஒரு கரடுமுரடான பிரச்சனையாக நிற்கிறது.

"ஒன்றும் முடியாத நிலையில் அவன்தேவியின் திருவாளையும் காற்சிலம்பையும் ஏந்தி இரந்து வாழ முற்படுகிறான். அப்போது அவமானத்தின் பிடியில் சிக்கி வருந்துகிறான். எல்லா

வகையான வசதிகளோடும் வாழ்ந்துவரும் கோயில் பூசாரியிடம் கடன் கேட்டு பார்க்கிறான். அவரும் கையை விரித்து விடுகிறார். இரண்டு தலைமுறை கடந்துதான் கையை வந்தடைந்த தேவியின் திருவாளையும் காற்சிலம்பையும் நாணுஆசாரியிடம் பழைய வெங்கலத்திற்கு விலை பேசுகிறான்." (15) (மலையாளசிறுகதைகள், எம்.டி.வாசுதேவன்நாயர்,ப.230)16

மனிதர்களிடம் இருக்கும் கடைசி நம்பிக்கையே கடவுள்தான் என்று கூறாலம். அது அனைத்திற்கும் அப்பாற்பட்ட சக்தி. அவரால்தான் நம்பமுடியாக ஆச்சிரியங்களும் அதியங்களும் நடப்பதாக காலங்காலமாக மக்கள் நம்பிக் கொண்டிருக்கின்றனர். அப்படிப்பட்ட கடவுளால் தன்னுடைய மகளுக்கு இவ்வளவு பெரிய சோதனை வந்து விட்டதே இனிமேல் இந்த தேவியை வணங்குவதால் தன்மகளை எப்படி காப்பாற்ற முடியும்? என்று வெறுத்து, அதனுடைய திருவாளையே விற்று தன்னுடைய குடும்ப வறுமையையும், தன் மகளை நலமுடனும் காப்பாற்ற வேண்டும் என்று எண்ணும் அளவுக்கு அவனின் வறுமை கழுத்தை நெறிக்கும் சூழ்நிலையில் இருக்கிறது. இறுதியாக அவர் கூறியது, இதை எல்லாம் நிறுத்துக் கணக்கு பார்த்து பணத்தை எடு என்னும் ராமகுருப்பின் பேச்சைக் கேட்ட நாணு ஆசாரி மட்டுமல்ல கதையைப் படித்து வரும் நாமும் பேச்சிழந்து நிற்பதுபோல் இருக்கிறது.

இச்சிறுகதையை படிக்கும் போது கடவுளை நம்பி இருந்தாலும் எப்போதுமே நல்லவர்களைத்தான் சோதிக்கிறது. தன்னுடைய வறுமைக்காக வேறு வழியில்லாமல் தெய்வத்தின் பொருளையே விற்க வேண்டிய சூழ்நிலைக்குத் தள்ளப்படுகிறார்கள். மனிதர்களை நம்பியும் எந்த பயனும் இல்லாத நிலையில் கடவுளை நம்பும் பட்சத்தில் அவர்களும் கைவிட்டால் அவன் வறுமையை எப்படி போக்குவது என்று தெரியாத நிலையில்தான் களவு, பொய் சொல்லுதல் போன்ற செயல்களில் ஈடுபட ஆரம்பிக்கிறான். ஏழைகள் மட்டுமே இதுபோன்ற வறுமையில் இருக்கிறார்கள். ஏழைகள் இன்னும் ஏழைகளாகவே இருக்கிறார்கள், பணக்காரர்கள் இன்னும் பணக்காரர்களாக வேமாறிக் கொண்டு இருக்கிறார்கள் அதனால்தான் ஏழைகள் தங்களுடைய வறுமையின் காரணமாக இதுபோன்று கடவுள் பொருளையே திருடிவிற்க முற்படுகிறார்கள். நம்சமூகத்தில் இன்றைக்கும் ஏழைகளின் நிலைமை இதுவாகவே இருக்கிறது.

# பெண்ணிய நோக்கில் நாட்டுப்புறத் தாலாட்டுப் பாடல்கள்

முனைவர் தி. குமார்,
இணைப்பேராசிரியர், முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை
அரசு கலைக் கல்லூரி, சிதம்பரம்.

நாம் பொருட்களால் சூழப்பட்டிருக்கிறோம் என்பதைவிட, அந்தப் பொருட்கள் குறித்த கருத்துக்களால் நிரப்பப்பட்டுக் கிடக்கிறோம். மனிதர்களுக்கான வாழ்க்கை இப்படித்தான் விதிக்கப்பட்டிருக்கிறது; இப்படிப் புரிந்துகொள்வதே ஒருவகையான விடுதலையுணர்வு அடைவதை நோக்கி நகர்வதுதான். என்ற க.பஞ்சாங்கம் அவர்களின் கூற்றினை நன்கு ஆராய்வோமானால், நாம் கொண்டிருக்கின்ற கருத்துக்கள், எண்ணங்கள் அனைத்தும் நம்முடைய கருத்துக்களோ, எண்ணங்களோ இல்லை, அவை ஏதோ ஓர் உள்நோக்கத்துடன் ஏதோ ஒரு ஆதிக்க சக்தியினால் நம் உள்ளத்தில் திணிக்கப்பட்டவை என்பது புலனாகும். இக்கருத்தின் அடிப்படையில் தமிழக நாட்டுப்புற மக்களின் ஆண்குழந்தை: பெண்குழந்தை தாலாட்டுப் பாடல்களை இக்கட்டுரை ஆராய்கின்றது.

தாய்மை, உலகிற்கு வழங்கிய முதல் இலக்கியப் பரிசு ஸ்ரீதாலாட்டு|. இது உலகிற்குப் பொதுவான கலை; தமிழகத்திற்குத் தனிச்சிறப்புத் தரும் கலை - என்ற கூற்றே தாலாட்டுப் பாடல்களின் சிறப்பினை உணர்த்தும். எனினும் நாட்டுப்புற தாலாட்டுப் பாடல்கள் மூலம் தாய் என்பவள் ஆணாதிக்க மொழியை; கருத்தாடல்களை; எண்ணங்களைக் குழந்தையின் ஆழ்மனதில் பதிவு செய்கிறாள் என்பதைக்கூர்ந்து ஆராய்ந்தால் அறியலாம். இராபர்ட் பிரிட்ஜ் என்ற மனவியல் துறைப் பேராசிரியர்,

மனிதன் காண்பன, கேட்பன அனைத்தும் அவன் கவனித்தாலும் கவனிக்காவிட்டாலும், அவனுடைய மூளையிற் பதிவாகி விடுகின்றன. சில செய்திகள் ஆழப்பதிவதும், சில அரைகுறையாகப் பதிவதும், அவனுடைய இயல்பு, பழக்கம், பண்பாடுகளைப் பொறுத்திருக்கிற தென்றாலும் பதிவாவது மட்டும் தவறுவதில்லை. மனிதன் மூளையில் கல்வி ஸ்ரீபதிவாவது|

ஒரு தன்மையாக இருந்தாலும் ஸ்ரீவெளிப்படுவது| அவனது சூழலாலும் தன்மையாலும் வேறுபட்டு விடுகிறது. ஸ்ரீபதிவு| மனித உடற்கூற்றின் இயற்கை. ஸ்ரீவெளிப்பாடு| மனிதப் பண்பின் வேறுபாடு களால் வரும் விளைவு எனக் கூறுகிறார்.

குழந்தைப் பருவத்தில் தாலாட்டுப் பாடல்களின் பதிவு பசுமரத்தாணி போலப் பதியும். அதுவும் பாதி உறக்கத்தில் இருக்கும்போது கேட்கும் கருத்துக்கள் மனத்தில் இன்னும் ஆழமாகப் பதிவதாக உளவியல் அறிஞர்கள் கூறுகிறார்கள். இதைத்தான் ஸ்ரீதொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டில்| என்ற பழமொழி கூறுகிறது. ஆகவே, குழந்தைப் பருவத்தில் தாய் பாடும் தாலாட்டில் காணப்படும் ஸ்ரீஇசை| குழந்தையின் உறக்கத்திற்குப் பயன்படுவது என்றால், அதில் காணப்படும் ஸ்ரீஇயல்| உள்ள(ம்) உருவாக்கத்திற்குப் பயன்படுகிறது என்கிறது உளநூல். உறங்கப்புகும் நிலையிலோ அல்லது பாதி உறக்கத்திலோ பாடப்படும் தாலாட்டுப் பாடல்களின் இசை வடிவமும் கருத்துக்களும் குழந்தைகளின் ஆழ்மனதில் பதிபவை எனலாம்.

தாலாட்டே குழந்தைக்கு வழங்கப்படும் முதல் கல்வியாகும். இப்படி வழங்கப்படும் கல்வியில் பால் வேறுபாட்டோடு தாலாட்டுப் பாடல்களின் இசை வடிவத்தையும் கருத்துக்க ளையும் குழந்தைக்குத் தாய் வழங்குகிறாள் என்பதைத் தாலாட்டுப் பாடல்கள் மூலம் தெளிவாக உணரலாம்.

தாலாட்டுப் பாடல்களில் ஆண் என்பவன் உலக வாழ்வோடு நெருங்கிய தொடர்புடையவனாகவும், முதன்மைப் பாத்திரமாகவும் வடிவமைக்கப்படுகிறான். ஆண் மகவைப் போருக்கு அனுப்பிப் பெருமிதம் கொள்பவளாகவும், ஆண் குடும்பத்தின் பெருமையைக் காப்பவனாகவும் ஆண் தாலாட்டுப் பாடல்கள் வெளிப்படுத்துகின்றன. ஆனால், பெண் மகவுக்குப் பாடப்படும் தாலாட்டுப் பாடல்கள் எல்லாம் குலப்பெருமைக்குப் பழி வராமல் வீட்டுக்குள்ளே வாழ வேண்டும் என்பன போன்றவையாகவே உள்ளன. இதை,

பெண் தாலாட்டுப் பாடல்களில் ஒரு சில மட்டுமே பெண் குழந்தையைப் போற்றுவதாக அமைந்துள்ளன. மிகப் பெரும்பாலான பாடல்கள் பெண் குழந்தையைப் போற்றவில்லை (செங்கோ வரதராசன், மேற்குத் தமிழக நாட்டுப்புறவியல் ஓர் ஆய்வு, ப.179) என்ற கூற்றின் மூலம் அறியலாம்.

**ஆரி ஆரி ஆராரோ எஞ்சாமி**
**உன்னால் பொருந்தி விட்டார் உன் மாமன்**
**உன் மாமன் குடுத்தாச்சு என்சாமி உனக்கு**
**மலையேறி மேயுதங்கே என்சாமி உனக்கு**
**கறைவிக இரநூறு**
**கண்ணெருமை முன்னூறு**
**வெள்ளியிலே வீசு கவுறு உனக்கு**
**வெங்கலத்தால் பால்குடம்....**
**அவிலாயன் செட்டிமகன் என்சாமி நீ**
**பந்தலிலே வந்திறங்கு உன்ர**
**கம்பிளியெ முன்னெ விரி கண்ணே நீ**
**கனத்த செமை பின் இறக்கு நீ**

**கும்பிட்டோ எந்திரம்மா என் செல்வமே நீ**
**கொணமுள்ள மாமனுக்கு நீ**
**தெண்டனிட்டு எந்திரம்மா நீ**
**தெய்வநலம் பாட்டனார்க்கு**

*என்று ஆண்குழந்தையைத் தாலாட்டும்போது தேவையானப் பொருட்களைப் பட்டியலிடுகிறாள் தாய். மேலும், ஆண்குழந்தையைப் பற்றிக் கூறும்போது என்சாமி, கண்ணே, என் செல்வமே எனப் பலவாறு உயர்வுடன் விளிப்பதையும் காணலாம்.*

**காலிலொரு பூடுசுங்க**
**கையிலொரு கெடிகாரங்க**
**வெரலிலொரு மோதரங்க**
**மகராச தூரி தூரி தூரோ...**
**மதுரையிலெ குதரெ வாங்கி**
**மல்லிகெப்பூ சீனிகட்டி**
**அடிக்கறாரே மன்னராஜன்**
**ஆத்துமணல் தூள் பறக்க**
**ரோரி ரோரி ரோரோ**

*என்ற பாடலில் ஆண் குழந்தையின் அணிகலன்கள் மற்றும் ஊர்தியைப் பற்றி கூறப்படுகிறது. மேலும், இப்பாடலிலும் மகராச என விளிப்பதைக் காணலாம். மேலும்,*

**கோட்டுப் போட்டு நீ கண்ணே**
**கோயமுத்தூர் போகும் போது**
**ஈரோடு போகும் போது**
**இருவறமா அங்கே வெப்பாட்டியா ரோரி...**

*தன் மகனின் வெப்பாட்டித் தொடர்பு பற்றி கூறுகிறது. மேலும், ஒரு தாய் தன் மகன் கோட்டுப் போட்டுக் கொண்டு பல பெண்களின் தொடர்புடன் வாழ்வதைப் பெருமையாகக் கருதியதாக மேற்காணும் பாடல்வழி அறியலாம். மேற்காணும் கருத்துக்களைக் கொண்டதாகவே இக்கால தாலாட்டுப் பாடல்களும் அமைந்துள்ளன எனலாம். இதை,*

**வேலெடுக்கும் மரபிலே**
**வீரம் செறிந்த மண்ணிலே**
**பால் குடிக்க வந்தவனே**
**நடையைக் காட்டு - வரும்**
**பகைவர்களை வென்று விடும்**
**படையைக்காட்டு**

*எனவும்,*

**கருவினில் வளரும் மழலையின் உடலில்**
**தைரியம் வளர்ப்பாள் தமிழன்னை**
**களங்கம் பிறந்தால் பெற்றவள் மானம்**
**காத்திட எழுவான் அவள் பிள்ளை**

*எனவும் கண்ணதாசன் பாடியுள்ள ஆண் குழந்தை தாலாட்டுப் பாடல்கள் மூலம் அறியலாம்.*

*நாட்டுப்புறப் பாடல்களில் காணப்படும் பெரும்பான்மையான பெண் தாலாட்டுப் பாடல்கள் பெண்களைப் போற்றுபவையாகக் காணப்படவில்லை. பெண்குழந்தையைப் போற்றிப் பாடப்பட்டிருக்கின்ற பாடல்கள் கூட 'இளம்பிறை', 'வானத்துமீன்', 'வானத்துத்*

தேவதை| என இயற்கைப் பொருட்களோடும் தெய்வத்தன்மையுடனும் இணைத்தே போற்றப்படுகின்றன. குறைந்தபட்சம் பெண்குழந்தைகளின் விருப்பங்கள் கூட இப்பாடல்களில் வெளியிடப்படு வதில்லை எனலாம். அப்படியே வெளியிட்டாலும், 'உணவு சமைப்போமா', 'சேலை சாயம் போடுவோமா' என்பன போன்ற விருப்பங்களே காணப்படுகின்றன. அவை,

**மானத்து மீனாகும் என்ர கண்ணே நீ**
**மழைக்காலு எளம்பொறையோ ஆச்...**
**..............................................................**
**வானத்திலுள்ள தேவதியோ என்ற அம்மிணிக்கு த்ரா... ஆச்**
**ஆரடுச்சுந் தானழுதே என்ர கண்ணே நீ**
**தாயாரு மடிமேலே.**

எனவும்,

**நல்ல நல்ல நெல்லரிசு**
**நயமான பச்சரிசி**
**உங்குலாமா ரெண்டு பேரும்... ராரி**

எனவும்,

**அஞ்சு ரூபா சீலெடுத்து**
**ஆயிரம் ரூபா சாயங்கட்டி**
**சாயங்களா பத்தாதுண்ணு**
**சாஞ்சுபக்கம் நிண்ணழுதா ரோரி...**

எனவும் அமையக் காணலாம். இப்பாடல்கள் எல்லாம்,

ஒரு பெண் எப்படி இருக்க வேண்டும் என்பதை ஓர் ஆண்தான் தீர்மானிக்கிறான். இதனால் பெண்ணின் இயக்கம் கூட ஆணின் பார்வை சார்ந்த இயக்கமாக இருந்து வருகின்றது. பெண் எந்த நிலையிலும் தனித்துச் செயல்பட இயலாத சூழலுக்கு அவள் உடல்தான் முதற்காரணியாக இருப்பதால் தீவிரவாதப் பெண்ணியவாதிகள் பெண்ணின் உடல்சார்ந்த அதிகாரத்தைப் பெண்களே கொள்ள வேண்டும் என்ற பெண்ணியலாளர்களின் கூற்றை வெளிப்படுத்துவனவாக அமைகின்றன எனலாம். கண்ணதாசனும் தமது பெண் தாலாட்டுப் பாடல்களில்,

**பெண்ணுக்கோ நாலு குணம்**
**பிள்ளைக்கோ நூறு குணம்**

எனவும்,

**பிறந்தபோது அழத்தொடங்கும் பெண்குழந்தை - அவள்**
**பெரியவளாய் ஆன பின்பும் முடிவதில்லை**
**அழாவிட்டால் குழந்தையிடம் ஆவியில்லை - அது**
**அழவில்லையேல் பெற்றவர்க்கு அமைதியில்லை (குடும்ப)**
**கைக்குழந்தையாயிருந்தால் அன்னையின் அடிமை - அவள்**
**கன்னியாக இருந்தபோது மானத்தின் அடிமை**
**கணவன் வீடு சென்றபோது நாயகன் அடிமை - எதிர்**
**காலத்தில் தான் ஈன்றெடுத்த குழந்தையின் அடிமை**

எனவும் பாடுவதன் மூலம் அடிப்படையில் பெண்களுக்கு அழுவதைத்தவிர வேறு எந்தச் செயலையும் செய்ய இயலாது என்பதைப்போல தாலாட்டை அமைத்துள்ளது

சிந்திக்கத்தக்கதாகும். தாய் சேய் உறவு நிலையின் எல்லாக் கட்டங்களிலும் பெண் என்பவள் ஆணுக்கு அடிமை ஊழியம் செய்கிற இரண்டாம்தரப் பாத்திரமாகவே தாலாட்டுப் பாடல்கள் மூலம் குழந்தைக்குத் திணிக்கப்படுகிறது எனலாம்.

பிள்ளை பெறுவதும், பிள்ளையை வளர்ப்பதும் போர்க்களத்தில் போரிடத் தயார்ப்படுத்துவதும், ஆண் குழந்தை முதன்மை பெறுவதும், பெண் குழந்தை உடைமைப் பொருளாகக் கொள்ளப் பெறுவதும் ஆகிய இத்தாய் - சேய் உறவு முறைகள் எல்லாமே குடும்பம் என்கிற நிறுவனத்தை அதிகார அரசுக்குப் பணி செய்யும் ஒரு முறையில் அமைக்கிற முயற்சிதான் என்பது புலனாகும் என்ற க.பஞ்சாங்கம் அவர்களின் கூற்றோடு ஆராய்வோமானால்... இருவர் கொள்ளும் காதலைவிட, உடன் பிறந்தவர் கொள்ளும் வாஞ்சையைவிட, நாடு இனம் மொழியிற்படியும் பற்றுதலை விட, ஏன் உலகளக்கும் அருளினையும் விட பிள்ளைப் பாசமே ஆழமானது, வலிமை மிக்கது, உணர்ச்சி மயமானது. இத்தகைய தாயும் சேயும் என்ற உறவுப் பிணைப்பிலே பிறந்த இயற்கைக் கலைதான் தாலாட்டு எனப் புகழப்படும் தாலாட்டுப் பாடல்கள் ஆணாதிக்க மொழியையும் கருத்தையும் குழந்தை மீது திணிக்கும் கருவியே எனலாம். எனவே ஒரு பெண்ணின் மனத்தை வடிவமைப்பதில் தாலாட்டுப் பாடல்கள் முதன்மை வகிக்கின்றன. அப்படி ஆணின் விருப்பத்தையே ஒருதாய் தனது பெண்குழந்தையை அடிமைப்படுத்தும் வேலையைத் தாலாட்டுப் பாடல்களிலேயே தொடங்கிவிடுகிறாள் எனலாம்.

# தமிழ் இலக்கியங்களில் பெண்களின் நிலை

யூசுப்ஷெரிப் ந
முனைவர் பட்ட ஆய்வாளர்,
புதுவைப் பல்கலைக்கழகம்,

"பெண்மையாவதுயாது? பொறுமை, தியாகம், பிறர்நலம், இரக்கம். அழகு, ஒப்புரவு, தொண்டு முதலானவைகள் அமைவது பெண்மை எனப்படும்." என்கிறார் திரு.வி.க. பெண்மை என்பது பெண்களின் பண்புநலனை, உருவநலனை வெளிப்படுத்தும் சொல்லாக அமைந்துள்ளது. பெண்என்பவள்அழகியல்வெளிப்பாட்டினையும், பண்பு நலன்களையும் அமைய சமூகம் எதிர்நோக்கும் வகையில் ஆண்கள் வரையறுத்த இலக்கணமாக அமையப் பெற்றது.

*போட்டியுணர்வு, செயலாண்மை, தற்சார்பு, பகுத்தறிவு முதலானவைகள் ஆண்மை மதிப்புகள் என்றும் ஒத்துப்போதல், அடக்கவுணர்வு, சார்ந்துநிற்றல், உணர்வுவயப்படல் என்பவைகள் பெண்ணின் மதிப்புகள் என்று குறிப்பிடப்பட்டிருந்தது. இவ்வாறு கூறப்பட்ட மதிப்புகள் ஆண், பெண் இருபாலருக்கும் பொதுவானதாக இருந்தாலும் பெண்ணுக்கென்று சில பண்பு நலன்களை ஒதுக்கீடு செய்து வைத்திருந்தது சமூகம். இவற்றிற்கெல்லாம் மேன்மையாகவும், மேலாகவும் கருதப்பட்டு வலியுறுத்தப்பட்டதுதான் 'கற்பு'. இதுபெண்ணியல் பாகக்கொள்ளப்படுகிறது. கற்புடைமை தனிப்பெரும் பண்பாகவே காட்டப்படுகிறது.

"பெண்மை","பெண்ணியல்பு" இவைகளிலிருந்து வேறுபட்டு "பெண்ணியம்" என்ற சொல்வழக்கில் பயிலத் தொடங்கி விட்டது. இப்பெண்ணியம் புதிய சமூகச்சூழலில் பெண்களைப் பற்றிய புதிய பார்வையின் அடிப்படையில் எழுந்துள்ள கோட்பாட்டினைக் குறிப்பதாகிறது. பெண் விடுதலை என்ற முயற்சியின் விளைவாக, பெண்ணியல்துறை, பெண்ணியத்தத்துவம், பெண்ணியம் ஆகியன தோன்றின.

தமிழ் இலக்கியங்களில் பெரும்பான்மை இலக்கியங்கள் பெண்களை மையமாகக் கொண்டே அமைத்திருக்கின்றார்கள் இதற்குக் காரணம் இல்லாமல் இல்லை. அறம், பொருள், இன்பம், வீடுபேறு என்று சொல்லப் பெறும் வாழ்க்கை நிலையில் ஆண், பெண் இருவரும் சேர்ந்து வாழும் வாழ்க்கைதான் முழுமை நிறைந்ததாகும். அதனால்தான் வள்ளுவப்பெருந்தகை வாழ்க்கைத் துணைநலம் என்னும் அதிகாரத்தில்.

**"தற்காத்துத்தற் கொண்டான் பேணிதகை சான்ற**
**சொற்காத்துச் சோர்விலாள் பெண்"** *(குறள்: 56)*

இதையே தொல்காப்பியரும் கூறியிருப்பதைக் காணமுடிகிறது.

**"பிறப்பே குடிமை ஆண்மையாண்டோ**
**டுருவுநிறுத் தகாம வாயில்**
**நிறையே யருளே உணர்வொடு திருவென**
**முறையுறக் கிளந்த ஒப்பினது வகையே"** *(தொல்.மெய்ப். 25)*

மனித வாழ்வில் ஆண், பெண் இருவருக்கும் சம உரிமை, சமநிலை என்பது சங்ககாலத்திலேயே இருந்த நிலைதான் என்பதைத் தொல்காப்பியம் வழியாக அறியமுடிகிறது. பெண்ணியம் என்பது பெண்களுக்கான முழு சுதந்திரம், கல்வி, வேலைவாய்ப்பு, பொருளாதாரம் சமூகஅங்கீகாரம் இவை அனைத்தும் பெண்களாகவே ஏற்படுத்திக் கொள்கின்ற நிலைதான் பெண்ணியம் என்பதாகும். கல்வி சொத்துரிமை, காதல், திருமணம், மறுமணம் குழந்தைப்பேறு இவைகளை பெண்களே தீர்மானிக்கும் நிலைதான் பெண்விடுதலை என்கின்றோம்.

தமிழ் மொழியின் முதல் இலக்கண நூலாகிய தொல்காப்பியம், பெண்களின் கற்பு குறித்து சில நூற்பாக்களைக் கொண்டுள்ளது. அவற்றில் பெண்களின் கற்புகுறித்து,

**உயிரினும் சிறந்தன்று நானே நாணும்**
**செயிர்தீர்க் காட்சிகற்பு சிறந்தன்று" எனவும்,**
**''உயிரினும் சிறந்தன்று காமமும் நற்பால் ஒழுக்கமும்**
**மெல்லிய பொறையும் நிறையும்''**

எனவும் வரும் நூற்பாக்கள், கற்பு என்பது பெண்கள் கடைப்பிடிக்க வேண்டிய இன்றியமையாத பண்பு என்கின்றன. ஆனால் ஆணின் புறத்தொழுக்கம் பற்றியோ அல்லது கற்பு என்பது ஆணுக்கும் பெண்ணுக்கும் உரியது என்றோ சொல்லப்படவில்லை. இவ்வாறு இதனை நோக்கும் பொழுது, கற்பு என்பது பெண்களுக்கு மட்டுமே உண்டு என்பதையும் ஆணுக்கு அவ்வாறு இல்லை என்றும் அறிய முடிகிறது.

சங்கஇலக்கியம் 'மக்கள்இலக்கியம்' என்பர். அந்தவகையில் குறுந்தொகையில் தலைவன், தலைவி ஆகியோர் உறவுகள் எவ்வாறு இடம் பெறுகின்றன என்று, கணவனை, மனைவி உயிருக்கு இணையாக போற்ற வேண்டும் என்று கீழ்கண்ட பாடல்மூலம் காணும்பொழுது,

**வினையே ஆடவர்க்கு உயிரே வான்நுதல்**

**மனையுறை மகளிர்க்கு ஆடவர் உயிர்"** (குறுந்.135)

என்ற குறுந்தொகைப் பாடல் தலைவிக்குத் தலைவன்தான் உயிர் என சித்தரிக்கின்றதே அன்றி தலைவனுக்குத் தலைவி உயிர் என்று கூறவில்லை. எனவே, இப்பாடல்களை நோக்கும்போது தலைவி இரண்டாம் இடத்திலேயே வைக்கப்பட்டு, தலைவனே முதலிடத்தில் நின்றுபெருமை பெறுவதை ஒருசில சங்கப்பாடல்களின்மூலம் நாம் காணமுடிகிறது. சங்ககாலத்தில் வாழ்ந்த பெண்கள் இலக்கியம், கலை, போர் எனப் பல்வேறு நிலைகளிலும் குறிப்பிடத்தக்க அளவில் பங்கு வகித்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. சங்க இலக்கியத்தில் பெண்ணின் உரிமை தடை செய்யப்படவில்லை. பெண்கல்வி, கேள்வி ஞாலத்தில் புலமை பெற்றிருந்தனர்.

**மணக் கொடைக் கொடுமை இல்லை" - எனவும்,**

**"நல்லிற் பாவையன்ன நல்லோற்கணவன்" எனவும்,**

**மறுவில் கற்பின் வாணுதல் கணவன்"**

என்றும் பெண்ணுக்குப் பெருமைத் தேடித் தரும் வகையில் சான்றோர்கள். குறிப்பிட்டுள்ளனர்.

தமிழ் இலக்கிய வரலாற்றில் பெண்கள் குறிப்பிடத்தக்க இடத்தைப் பெற்றிருந்தனர். 'பெருமையும்வரனும் ஆடு உமேன்' என்று பெருமையும், வலிமையும் ஆணுக்குரிய பண்பு களாகவும், 'அச்சம் நாணும், மடமும் முந்துறுதல் நிச்சமும் பெண்பாற்குரியது' என்ற குணங்கள் பெண்மைக்குரிய பண்புகளாகவும் சொல்லப்பட்டுகின்றன. இதன்வழி ஆணுக்கு வன்மையும், பெண்ணுக்கு மென்மையும் கற்பிக்கப்பட்டுள்ளதை அறிய முடிகிறது.

சங்ககாலத்திற்குப் பிறகு சமணமும், பௌத்தமும் செல்வாக்கு பெற்றபோது பெண்ணை இழித்துப் பேசின. பெண்களுக்கு வீடுபேறு இல்லை. ஒரு பாவப்பிறவி என்று ஏசின. இந்நிலை சைவத்தாலும், வைணவத்தாலும் முண்டிக்கப்பட்டு, அடியார்கள் பெண்ணைப் போற்றினர். பல்லவர் காலத்தில் பலதார மணமும், பெண்கள் உடன்கட்டை ஏறுதலும், கைம்மை நோன்பும் நிறைவேறின. "பெண்களை அடிக்கலாம், கொடுமைப்படுத்தலாம். ஆண் விரும்பினால் தள்ளிவிடலாம், எவ்வளவு கொடுமை செய்தாலும் மனைவி பொறுத்துக் கொள்ள வேண்டும்" என்ற மனுவின் கோட்பாடு பரவியது. அடுத்து, சோழர் காலத்தில் பெண்கல்வி போற்றப்படவில்லை. ஔவையாரைத் தவிர வேறுபெண் புலவர்களை அறிய முடியாது. பெண்கள் வீட்டுக்குள் அடைபட்டுக் கிடந்தனர். உரிமைகள் குறைவாக இருந்தன.

பல்லவர்கள் காலத்தில் தொடங்கிய பெண்களுக்கு எதிரான குழந்தை மணம், கைம்மை நோன்பு, உடன் கட்டை ஏறல் போன்ற மரபுகள் சோழர் காலத்திலும் பெரிதும் இடம்பெற்றன. விஜயநகர மன்னர்கள், மனுக் கோட்பாட்டாளர்கள் பெண்களை ஆடவரின் போகப்பொருளாகவே கருதினர். ஆங்கிலேயர்கள் காலத்தில், கிறித்துவ சமயப் பெரியார்கள் பெண்கள் முன்னேற்றத்தில் கருத்தூன்றினர். கி.பி. ஏழாம் நூற்றாண்டில்தான் பெண் சமூகம் வீழ்ச்சி அடையும் நிலை தொடங்கியது. பெண்கல்வி என்பதே ஆங்கிலேயருடைய பரிச்சயத் "கல்வியில்லை உரிமையில்லை" என்ற நிலையைக் கடைத்தேற்ற வழியின்றி விழிக்கும்போது,

**"புல்லென்றே நினைக்கிறீர் மனைவிமாரைப்**

**புருஷர்களின் உபயோகம் - பெரிதென்கின்றீர்"**

என்ற பாரதிதாசனின் பாடல் வரிகளே நினைவுக்கு வருகிறது.

பெண்ணினம் தன்னை உணர்ந்து, அறிவின் துணை கொண்டு சமூக மாற்றத்திற்கும் ஏற்றத்திற்கும் காரணமாக விளங்க வேண்டும். என்பதனை,

**''அடுக்களை துடைப்பதும்**
**படுக்கையை விரிப்பதும்**
**அது பெண்ணின் தொழில் இல்லையே!**
**சரித்திரம் படைக்கவும்**
**தரித்திரம் துடைக்கவும்**
**வருவதில் பிழையில்லையே''**

(வைரமுத்து - திரைப்படப் பாடல்கள் - தொகுதி - ப.197) என்ற கவிதை பெண்கள் சமூகத்தில் விழித்தெழ வழிகாட்டுகிறது.

பெண்களுக்கு எதிரான போக்குகளைக் களையவும், அவர்களுக்கான உரிமைகளை வென்றெடுக்கவும் சமூகக் களத்தில் போராட முன்வர வேண்டும். பெண்களைப் பாலியல் முறையில் வன்புணர்வு கொள்ளும் ஆணாதிக்கத்தை எதிர்த்துக் குரல் கொடுக்க வேண்டும்.

உலகில் உள்ள அனைவரும் பெண்ணை இரண்டாம் பட்சத்தில் வைத்துள்ளனர். அவ்வகையில், தமிழ் இலக்கியத்திலும் ஆணின் கையே ஓங்கி இருப்பதை இங்குக் காணமுடிகிறது. இதனை முற்றிலும் ஏற்கவும் முடியாது. ஒரு சில இடங்களில் இப்படி இருந்தாலும் பல்வகைப்பட்ட இலக்கியத்தில் பெண்களின் மேன்மை சிறப்பாகச் சொல்லப்பட்டு உள்ளது.

எவ்வாறாக இருப்பினும், பெண் என்பவள் பூப்போன்றவள் என்றும், மென்மையானவள் என்றும் ஆண் சமூகம் கருதுகிறது. பெண்ணை ஒரு போகப் பொருளாகவே ஆண் சமூகம் நினைக்கிறது. பெண் என்பவள் ஆணைச் சார்ந்தே இருக்க வேண்டும் என்ற மாயத்தோற்றத்தைக் காட்டுகிறார்கள்.

இதையும் தாண்டி, நாம் இன்று பல்வேறு துறைகளில் வளர்ச்சி அடைந்தாலும் பெண்களின் பங்கு அதில் சரிவிகிதமாக உள்ளது. எனவே, பெண் என்பவள் உலகில் முதன்மை பெறுபவள்.பெண்களின் வளர்ச்சியைத் தடுப்பது ஆண் சமூகமாக சில இடங்களில் காண முடிகிறது. இன்று உள்ளாட்சித்துறையில் தொடங்கி இந்தியாவின் உயர்ந்த பதவி வரை பெண்கள் இருக்கிறார்கள். அதில் பெண்களின் சுதந்திரம் என்பது பாதியளவே. அப்பதவியின் மூலம் பெண்ணை அடையாளப்படுத்திக் கொண்டு அங்கு ஆள்வது ஆண் இனமே என்று அறிய முடிகிறது.

# பாவையர் காட்டும் பக்திநெறி

முனைவர் ந.செ.கி.சங்கீத்ராதா
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
தியாகராசர் கல்லூரி, மதுரை.

பெண் என்றாலே பேணும் தன்மையுடையவள். தன்னை மட்டுமல்ல தன்னைச்சார்ந்த அனைத்தையும் காக்கும் பண்புடையவள். அன்பின் அடையாளம், கற்பின் அணிகலன், தியாகத்தின் பிறப்பிடம், பொறுமையின் இருப்பிடம், மதி நலம் வாய்ந்தவள், அநீதியை எதிர்ப்பவள் என்றெல்லாம் பெண் சிறப்பிக்கப்படுவது வெறும் அலங்காரச் சொற்கள் அல்ல. அவை அவளுக்கான அடையாளச்சொற்கள். அதனால்தான் "பெண்ணின் பெருந்தக்க யாவுள" என்றார் வள்ளுவப் பெருந்தகை. ஒவ்வொரு பெண்ணும் ஒரு ஜீவநதி!. உயிர்களை, உலகத்தை உருவாக்கி காக்கும் பெரும் சக்தி! அதனால்தான், "பெண்மை வாழ்க வென்று கூத்திடுவோமடா! பெண்மை வெல்க என்று கூத்திடுவோமடா" என்றார் பாரதி!

தமிழ் இலக்கியங்களில் குறிப்பாகப் பக்தி இலக்கியங்களில் பெண்ணின் பதிவுகள் எண்ணிக்கையில் குறைவாக இருப்பினும் அவர்களது எண்ணங்கள், செயல்பாடுகள் மிக்க உயரத்தை நோக்கியே உள்ளன. பெண் என்பவள் பக்தி செய்வதோடும் மட்டுமல்லாமல் தன்னைச் சார்ந்தவரைப் பக்தி செய்வதற்கும் ஆற்றுப்படுத்துபவளாகவே காணப்படுகிறாள். எனவே, பெண்களின் பக்திநெறி பற்றிய ஆய்வுக்களத்தினை இக்கட்டுரை விரித்துச் செல்கின்றது.

### வளவர்கோன் பாவை

தென்னகத்தில் சைவம் தழைத்தோங்கி இருப்பதற்கு அடிநாதமாக விளங்கியவர் மங்கையர்க்கரசியார். "பாண்டிமா தேவி, பங்கயச்செல்வி, வளவர்கோன் பாவை என்றெல்லாம் திருஞானசம்பந்தரால் போற்றப்பெற்றவர். மதுரையை ஆண்ட நின்ற சீர் நெடுமாறன் மனைவி மங்கையர்க்கரசி சோழநாட்டு நங்கை பிறந்தது சோழநாடு என்றாலும் புகுந்தது பாண்டியநாடு. தொன்று தொட்டு சைவ மரபில் சிவனை வழிபாடு செய்து வரும் குலத்தில்

தோன்றிய பெண்மணி. பாண்டிய நாட்டில் தம் கணவன் சமணத்தைத் தழுவியிருப்பது கண்டு வேதனையுற்றார். கணவனுக்கு எதிர்ப்பாகவும் இல்லாமல் சைவத்தையும் விட்டு விலகாமல் இரு முரண்பட்ட துருவங்களில் பயணித்துக்கொண்டு பக்தியினால் பாண்டியனையும் பாண்டிய நாட்டையும் மாற்றிய மாதரசி!.

சைவர்களுக்கு திருநீறு தரிப்பது என்பது சிவ நாமத்தை உச்சரிக்கும் " சிவாய நம'' என்ற மந்திரம் போன்றது. அத்தகையத் திருநீற்றை நெற்றியில் அணிந்தால் கணவனுக்கு எதிராகும் என்று திருநீற்றை மார்பிலும் வயிற்றிலும் தரித்துக்கொண்டு சைவ மரபினை வழுவாமல் போற்றிக் கடைபிடித்த மங்கையார். "மன்னன் உயிர்த்தே மலர்தலைஉலகம்'' என்பதற்கேற்ப மன்னன் மட்டுமல்ல பாண்டியநாடும் சமணர்களின் சூழ்ச்சியினால் சிக்குண்டு கிடந்தது. தனது கணவனையும் நாட்டையும் சமணத்திலிருந்து மீட்டெடுக்கும் வழியைத் தேடினார். திருஞானசம்பந்தர் பாண்டிய நாட்டுக்கு அடுத்த திருமறைக்காட்டிற்கு வந்திருந்ததை அறிந்து அமைச்சர் குலச்சிறையாரை அனுப்பி 'நாளும் தமிழ் பரப்பும் திருஞானசம்பந்தப்பெருமானை'' அழைத்துவரச் செய்தார். சமணர்களின் மந்திர தந்திரங்களைச் சிவனருளால் முறியடித்து, மங்கையர்க்கரசி கணவனை மட்டுமல்ல பாண்டிய நாட்டினையும் சைவ சமயத்திற்கு மடை மாற்றம் செய்திட்டார்.

**''தற்காத்து தற்கொண்டான் பேணி தகைசான்ற**
**சொற்காத்து சோர்விலாள் பெண்''** (குறள்.56)

என்பதற்கேற்ப சைவமரபிலிருந்து வழுவாது தன்னையும் தன் கணவனையம் தனது நாட்டையும் சமணத்திலிருந்து மீட்டெடுத்தது மிகப்பெரிய சமயப்புரட்சியாகும். மங்கையர்க்கரசியின் சமயப்புரட்சியினால் நமக்கு கிடைத்த மற்றொரு பேறு "திருநீற்றுப் பதிகம்'' ஆகும். தன்னலம் கருதாது கணவன் உள்ளிட்ட மக்கள் அனைவரையும் திருநீற்றின் மகிமையை உணரச் செய்தார். மங்கையர்க்கரசியாரின் இந்த எழுச்சியான செயலால்தான் சமணர்களோடு அனல்வாதம், புனல்வாதம் செய்து "மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெலாம்'' என்பதற்கேற்ப திருஞானசம்பந்தப் பெருமான் சைவநீதியைப் பரணியில் பறைசாற்றுவதற்கு மங்கையர்க்கரசியார் ஒரு வித்தாகத் திகழ்ந்தார்.

## பேணும் அம்மை

"பிறந்த மொழிபயின்ற பின்னெல்லாம் காதல் சிறந்து நின் சேவடியே சேர்ந்து நின்றேன்'' என்பதற்கு வரைவிலக்கணமாகத் திகழ்ந்தவர் காரைக்கால் அம்மையார். பிறந்த நாள் முதற்கொண்டு வளர்ந்த நாள் முழுதுமே சிவனையே சிந்தித்திருந்த சிவபக்தை புனிதவதியார். மங்கைப் பருவம் எய்தி மணமகனை அடைந்த பின்பும் சிவசேவையை விடாது செய்து வந்தவர். திருமணத்திற்குப் பின்பும் சிவனடியார்களுக்கு விருந்தோம்பி அவர்களுக்கு வேண்டிய பொன்மணிகளைக் கொடுத்து சிவநாமம் வழிபட்டு வந்தவர் புனிதவதியார். ஒரு சமயம் கணவன் கொடுத்த இரண்டு மாங்கனிகளில் ஒன்றை சிவனடியார்க்கு அமுது படைத்தார். மற்றொன்றை கணவருக்கு அமுதாக இட்டார். மாங்கனி சுவையில் மீளாத பரமதத்தன் மற்றொரு கனியையும் கேட்டான். அங்கேதான் சிக்கல்! சுவை நன்றாக உள்ளது மற்றொரு கனியையும் கொண்டு வா என்றான். கணவன் ஆசைப்பட்டு கேட்டதை

நிறைவேற்றுவதே மனைவியின் கடமை.இல்லை என்று உண்மையைச் சொல்லியிருக்கலாம். ஆனால், அம்மையின் பக்திதிறனை மெய்ப்பிப்பதற்காகவே அய்யன் அரங்கேற்றிய நாடகம் இது எனலாம்.தன் மனைவி சிவனருளால் மாங்கனி பெற்றதை அறிந்த பரமதத்தன் இறையருள் பெற்ற பெண்மணியோடு இணைந்து வாழ்வதைத் தவிர்த்தான். அம்மையை மறந்து மற்றொரு பெண்ணை மணந்து அடுத்த கட்ட வாழ்விற்குச் சென்றான். நீண்டநாள் கணவன் வரவுக்காக காத்திருந்த அம்மை கணவன் வாழ்விடம் தெரிந்து உறவினர்களுடன் சென்றார்.

அங்கு பரமதத்தன் தம் கணவனாக வராமல் வேறொரு பெண்ணின் கணவனாக, ஒரு பெண் குழந்தையின் தந்தையாக குடும்பத்துடன் வந்திருப்பதைக் கண்டு அறிந்து அதிர்ந்தார். எல்லாவற்றிற்கும் மேலாகத் தம் கால்களில் கணவன் விழுவதைக் கண்டு விலகிச் சென்றார். அத்தருணத்திலே உலகப் பற்றுகளிலிருந்தும் தம்மை விலக்கிக் கொண்டார்.உடன் ஈசனிடம் வேண்டி இளமையும் அழகும் நீங்கி எலும்பு உருகொண்ட பேய் வடிவத்தினைக் கேட்டுப் பெற்றார். சிவனை வழிபடுவதற்காகக் கயிலைக்குச் சென்ற அம்மை, எம்பெருமான் ஈசனிருக்கும் தலத்தில் என் காலடி படக்கூடாது என்று தலையாலே நடந்து சென்ற தலையாயஅம்மை.

பக்தி இலக்கிய வரலாற்றில் எந்தவொரு அடியவரும் செய்திடாத அரிய செயல் இது.திருநாவுக்கரசுப் பெருமான் கயிலையை அடைய பெருமுயற்சி செய்தும் முடியவில்லை. கயிலைக் காட்சிதான் கிட்டியது. ஆனால் அம்மை தம் பக்தியால், ஆதியும் அந்தமுமில்லா கண்ணுதலான் பெருமானே "நம்மை பேணும் அம்மை'' என்றழைத்த பெருமைக்குரியவர் காரைக்கால் அம்மையார். சிவாலயங்களில் உள்ள அறுபத்து மூன்று நாயன்மார்கள் சிலைகளும் நின்ற நிலையில்தான் இருக்கும். காரைக்கால் அம்மை மட்டுமே அமர்ந்த நிலையில் காணப்படுவார். அம்மை மட்டுமே சிவனின் நடனத்தை திருவாலங்காட்டில் காணும் அருள் பெற்றவர்.

**"பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல்**
**உன்னை மறவாமை வேண்டும்**
**அரவா நீ ஆடும்போது உன் அடியின் கீழ்**
**நான் அமர்ந்திருத்தல் வேண்டும்"**

இது அம்மையின் சிவபக்திக்கு கிடைத்த பெரும் பேறாகும்.இது மட்டுமன்று பின் வந்த அடியார்களுக்கெல்லாம் அந்தாதி, பதிகம் பாடுவதற்கு அடிகோலியவர்.காரைக்கால் அம்மையார் இயற்றிய "அற்புதத் திருவந்தாதி"தான் முதல் திருவந்தாதி நூல். அதேபோல் "திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம்" என்று பெயரிலே "மூத்த" என்பதைக் கொண்டது இந்நூல்தான் முதல் பதிக நூலாகும்.

பிறப்பிலே சிவபக்தி கொண்ட அம்மை திருமணப்பந்தத்திற்குப் பின் இல்லறக்கடமையில் கட்டுண்டார் எனினும் சிவசேவையே சிந்தித்திருந்தார். அந்த இல்லறக்கட்டு விடுபட்டவுடன் இறைவன் மேல் கொண்ட பக்தியானது கரைபுரண்ட வெள்ளமாகப் பெருக்கெடுத்து ஓடியது.புறத்தோற்றத்தையும் புற உலகினையும் நீக்கி ஈசன் குடிகொண்டிருக்கும் மனத்தே அகவயப்பட்டவரானார். பெண் தன்னை அழகுடன்

வெளிப்படுத்தவே விரும்புவாள். இங்கு அம்மையின் அழகு ஈசன் குடிகொண்டிருக்கும் மனமே ஆகும் அதனால்தான் தமது இறைபக்தியால் இறைவனே "அம்மை'' என்றழைக்கும் பேறு பெற்றாள்.

## தமயனை நல்கிய தமக்கை

"அப்பர்'' என்று போற்றப்படும் திருநாவுக்கரசுப்பெருமானை சைவத்திற்கு நல்கிய நங்கை நல்லாள்! பெற்றோரையும் இழந்து மாலை சூடவிருந்த மணமகனையும் இழந்து துக்கம் தாளாமல் உயிர்விடத் துணிந்தவர். அச்சமயம் தம்மை இறுகப்பற்றிய தன் தம்பியின் கரங்களைக் கண்டு கண்ணீர் மல்கி அவ்வெண்ணத்தைக் கைவிட்டார். தம்பிக்காகவே இந்த தமக்கை உயிர்வாழ்ந்தார்.திலகவதியாரின் தோற்றத்தையும், பண்பு நலன்களையும், பக்தி சிறப்பினையும் சேக்கிழார் மிக அருமையாகப் பதிவு செய்துள்ளார். தனது தம்பி சமண சமயத்தைத் தழுவியதை அறிந்து வருந்தி சைவத்திற்கு மாற்றியருளும்படி சிவனிடம் கண்ணீர் மல்க வேண்டினார். தமக்கையின் வேண்டுதல் வீண் போகவில்லை. சிவனால் ஆட்கொள்ளப்பட்டு திருநாவுக்கரசுப்பெருமான் சமணத்திலிருந்து சைவத்திற்கு மனம்கொண்டார்.'நீண்டநாட்களாகத் தாயைத் தேடி அலைந்த கன்று, தாயைக் கண்டு கொண்ட பக்தியும் பரவசமும் கொண்டு'' சைவநெறியில் ஒழுகினார்.

"என் கடன் பணி செய்து கிடப்பதே'' என்ற தாரக மந்திரத்தை தரணிக்கு உயிர்த்துச் சென்றவர் நாவுக்கரசர் பெருமான். எப்பொழுதும் தோளில் உழவாரப் படையுடன் காட்சி தருபவர் திருநாவுக்கரசர்.அப்பர்பெருமான், கோயிலில் குளம் வெட்டுதல், மரம் நடுதல், சோலை வளர்த்தல், கோயிலில் வளர்ந்துள்ள முட்புதர்களை நீக்கி புற்களைச் சீரமைத்தல், கல்லும் முள்ளும் உள்ள கரடுமுரடான பாதைகளைச் சீர்செய்து அடியவர்கள் நடப்பதற்குத் தகுந்த பாதைகளாக மாற்றுதல் போன்ற தொண்டினை ஆற்றினார்.

திருநாவுக்கரசரின் உழவாரப்பணிக்கு வித்திட்டவர் தமக்கை திலகவதியார். திலகவதியார் மற்றையவர்போல் பெறுமனே ஆலயம் சென்று இறைவழிபாட்டில் மட்டும் ஈடுபடவில்லை. கோயில் தூய்மையையும் பேணினார். கோயிலில் பெருக்குதல், மெழுகிடுதல், அலகிடுதல், சுத்தம் செய்தல் போன்ற பணிகளைச் செய்து வந்தார். உள்ளத்தூய்மையால் இறைவனுக்கும், உடல் உழைப்பால் கோயிலுக்கும் தொண்டு செய்து வந்தார்.இப்பண்பே திருநாவுக்கரசு பெருமானிடம் ஒட்டிக்கொண்டது. அதனால்தான், பின்னாளில், அப்பர்பெருமான் கோயில்களில் உழவாரப்பணி செய்து வரலானார். ஆக, முதன்முதலாக ஆலயத்தூய்மைப் பணிக்கு வித்திட்ட பெண்மணி திலகவதியார்.

## சூடிக் கொடுத்த சுடர்க்கொடி

"வேதமனைத்துக்கும் வித்து'' என்று போற்றப்படும் திருப்பாவையை அருளிச்செய்தவர். பெரியாழ்வார் வளர்த்தெடுத்த பெண்பிள்ளை ஆண்டாள்.தந்தையைப் போலவே ஆண்டாளும் கண்ணனிடம் பேரன்பும் பெரும்பக்தியும் கொண்டு ஒழுகினார். வளர்ந்து மங்கைப் பருவம் எய்திய பிறகும் "மானிடர்க்கென்று பேச்சுப்படி வாழகில்லேன்"

என்று மறுத்துரைத்த பெண்மணி!. அரங்கனை அடைவதற்கு ஆண்டாள் மேற்கொண்டதே "பாவை நோன்பு" ஆண்டாளின் பக்திநெறி என்பது ஆண்டாள் மட்டுமே அரங்கனை அடைந்து இன்புறும் நிலை அன்று. பக்தி செய்விப்பதற்குத் தோழிகள் அனைவரையும் அழைத்தாள்.தோழிகள் அனைவரையும் பக்திமார்க்கத்திற்கு ஆற்றுப் படுத்தினாள். இதன் உள்ளார்ந்த தத்துவமே "உலகிலுள்ள ஜீவாத்மாக்களைப் பரமாத்வாவோடு சேர்த்துவிப்பதே" இதன் நோக்கமாகும். அடியார்கள் எல்லாம் அவரவர் இறைவனை அடைவதற்கான வழி தேடிச்சென்றனரே அன்றி யாரையும் அழைத்துச் செல்லவில்லை. ஆனால் ஆண்டாள் எல்லாரையும் அழைத்துச் சென்றாள்.பக்தி இலக்கிய வரலாற்றைத் திரும்பிப் பார்த்தால், எந்தவொரு இறையடியாரும் செயலாற்றாத ஒன்றை ஆண்டாள் செய்து காட்டியிருக்கிறாள் எனத் தெரியவரும். மற்றொன்று, "நோன்பு" என்ற ஒரு கருத்தாக்கத்தைக் கொண்டு வந்ததே ஆண்டாள்தான். அதுவரை நீராடல், அம்மாவாடல், பாவையாடல் என்றெல்லாம் பல பெயர்களில் சங்க இலக்கியங்களில் குறிப்பிடப்பட்ட இறைவழிபாட்டினைப் "பாவை நோன்பு" என்று வடிவமைத்தவள் ஆண்டாள்.

நோன்புக் காலத்தில் செய்யக்கூடியன, செய்யக்கூடாதன பற்றியும் எடுத்துரைக்கிறாள். பெண்கள் மார்கழி நீராடுவதற்கு மட்டுமன்று, மக்கள் வாழ்வதற்காகவும் நாட்டில் நன்கு மழை பொழிய வேண்டுகிறார்.ஆண்டாளின் இறை பக்தி இறைவனைப் போற்றிப் பாடும் துதியாக மட்டும் அமையவில்லை.பாவை நோன்பு வழிபாடு வாயிலாக அறக்கருத்துக்களையும் சமூகத்திற்கு எடுத்தியம்புகிறார்.

**"செய்யாதென செய்யோம் தீக்குறளைச் சென்றோதோம்**
**ஐயமும் பிச்சையும் ஆந்தனையும் கைாட்டி**
**உய்யுமா றெண்ணி உகந்தேலோர் எம்பாவாய்!"** (திருப்.3)

தன்னிடம் வந்து இரப்பவர்களுக்கும் இல்லாதவர்களுக்கும் வேண்டுனவற்றை அளிப்பதற்கு அறிவுறுத்துகிறார். ஔவையும் "ஐயமிட்டு உண்" (ஆ.சூ.) என்றே உரைக்கிறார். தமிழ்ப் பக்தி இலக்கிய வரலாற்றில் பெண்களுக்கென்று தனி ஒரு பக்தி இலக்கியமாகத் திருப்பாவை திகழ்கின்றது என்றால் அது மிகையல்ல. ஆண்டாள் தமிழ் மேல் கொண்ட பற்றினால் தனது நூலுக்கு இட்ட பெயர் "சங்கத்தமிழ் மாலை" என்பதேயாகும்.

அரங்கன் மேல் கொண்ட ஆண்டாளின் பக்தி இன்றும் தொடர்கிறது. இன்றைய தினத்தில் திருப்பதி பிரமோற்சவம், திருவரங்கம் உற்சவம், மதுரை கள்ளழகர் வைபவம் அனைத்திலும் ஆண்டாளின் சூடிக் கொடுத்த மாலையே அரங்கனை அலங்கரிக்கின்றது. ஆண்டாள் சூடிக் கொடுத்த மாலையே அரங்கன் மனமுகந்து ஏற்பான் என்பது இன்றும் நாம் காணலாகும் பேறாகும்.

**"எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும் உற்றோமே ஆவோம்**
**உமக்கே நாம் ஆட்செய்வோம்"** (திருப்.27)

என்ற ஆண்டாளின் விடாமுயற்சியே அவளை அரங்கனிடம் சேர்த்தது. பெரியாழ்வாரின் பெண்பிள்ளை இறைவன் மேல் கொண்ட பக்தி வைராக்கியத்தால் இறைவனையே ஆட்கொண்டு தெய்வமாக உயர்ந்து நமக்கு அருள்புரிகின்றாள்.

## ஏடு தந்த மங்கை

"தஞ்சை பெருவுடையார் கோயில்'' இராஜராஜசோழனின் இறைபக்தியை உலகிற்குப் பறைசாற்றும் பெருமிதம். உலகிலோர் வியந்து நோக்கும் தஞ்சைப் பெரிய கோபுரம், ஒரே கல்லால் மூடப்பட்ட மேல் விமானம், நிழல் கீழே விழாத கோபுர அமைப்பு, கருவறையில் வீற்றிருந்து அருள்பாலிக்கும் மிகப்பெரிய ஆவுடையார், கோயிலில் எங்கிருந்து பார்த்தாலும் காட்சிதரும் உயர்ந்த நந்தியம் பெருமான் என்று தமிழரின் ஆகச்சிறந்த கட்டிடக்கலைக்கு பதச்சான்றாகும். இத்தகைய வரலாற்றுச் சிறப்புமிக்க தஞ்சை பெருவுடையார் கோயிலினைக் கட்டிய பெருமை மன்னன் இராஜராஜ சோழனையே சாரும். ஆனால், இதற்கெல்லாம் வித்தாக இருந்தவர் இராஜராஜசோழனின் தமக்கை குந்தவைப் பிராட்டியார் என்பதை மறந்து விடக்கூடாது.!

நாடு, மக்கள், அரசியல், போர் படை என்று புறச்சூழலில் சிக்குண்டிருந்த சகோதரனின் கவனத்தைத் திசை திருப்பி சைவத்தின்பாலும், சமயத்தொண்டின்பாலும் திசைதிருப்பியவர் குந்தவைப்பிராட்டி!. சைவசமயக் குரவர்களையும் சிவன்மேல் அவர்கள் பாடிய பதிகங்களையும் எடுத்துரைத்து அந்தத் தெய்வீகப் பனுவல்களைத் தொகுத்து அருளும் பொறுப்பினைச் சகோதரனிடம் அளித்தார். மேலும் சகோதரனுடன் தில்லை சென்று பதிக ஏடுகளைச் சகோதரன் வாயிலாக மீட்டெடுத்தார்.

**''ஏடு தந்தானடி தில்லையிலே -அதைக்**
**காண வந்தேன் அவன் எல்லையிலே''**

என்று பக்தியுடன் பாடி பரவசமடைந்தார். செல்லரித்திருந்த ஏடுகளையெல்லாம் மேலும் செல்லரித்திடாமல் காத்து, சமயக்குரவர்களின் தேவாரப் பதிகங்களைத் தேடிக் கொணர்ந்து செப்பனிட்டு சீர்திருத்தப் பணிக்கு வித்திட்டவர் குந்தவை பிராட்டி!. அதன் விளைவே இன்று நம்மிடையே சைவத்திருமுறையாம் "பன்னிருதிருமுறை'' என்னும் பக்திப் பனுவல் மலரந்து மணம் பரப்பிக்கொண்டிருக்கின்றது. குந்தவைப் பிராட்டியார் எப்பொழுதும் சகோதரனுக்கு அரசியலிலும், ஆன்மீகத்திலும் அரணாக விளங்கியவர். ஒரு மரத்தின் கிளைகள், இலைகள் வெளியே தெரியும்.ஆனால் வேர்கள் வெளியே தெரியாது. அதனால்தான் "மனையறத்தின் வேர்'' என்றார் சேக்கிழார் பெருமான். பெண்ணிற்கு பக்திநெறி இறைவனை அர்ச்சிப்பது மட்டுமன்று, இறையாக்கப்பணியில் தன்னை அர்ப்பணிப்பதும்கூட என்பதற்குச் சான்றாகத் திகழ்ந்தவர் குந்தவைப் பிராட்டியார்.

## பதி பக்தியர் - பெருங்குணத்தாள்

தமிழின் முதல்காப்பியமாம் சிலப்பதிகாரத்தின் தலைவி.கணவன் தன்னைவிட்டு விட்டு மாதவியின் பால் சென்றுவிட்டான் என அறிந்தும் கணவனை வெறுக்காத காரிகை. கணவன் மீது கொண்ட அளவற்ற அன்பினால், நம்பிக்கையால் கணவனின் வரவை எதிர்நோக்கி காத்திருந்தவள்.கண்ணகியின் நம்பிக்கை வீண் போகவில்லை.கோவலன் தன் தவறை உணர்ந்து கண்ணகியைத் தேடி வந்தான். இருவரும் இணைந்து புதிதாக வாழ்வினைத் தொடங்கலாம் என்றிருக்கையில், மதுரையில் வஞ்சக பொற்கொல்லனால் 'கள்வன்' என

வீண்பழி சுமத்தப்பட்டு அரசனால் கொலைகளப்பட்டான் கோவலன். இதனை அறிந்த கண்ணகி, தன் கணவன் கள்வனல்ல 'நிரபராதி' என்பதை அறிவுப்பூர்வமாக ஆதாரத்தோடு நிரூபித்தாள். மேலும் கணவனை இழந்த துயரம் தாங்காது தன் கற்பின் திறத்தால் மதுரையை எரித்தாள்.

கண்ணகியின் கற்பின் தீ தீயோர்களையெல்லாம் கொளுத்தியது. "பேசாமடந்தை'' என்று சிறப்பிக்கப்படும் கண்ணகி தன் கணவன் குற்றமற்றவன் என்பதை நிரூபிக்க நீண்ட வழக்குரைக்கிறாள். கண்ணகியின் கற்பின் திறம் சூரியனையும் சாட்சி சொல்ல வைக்கின்றது. எல்லாவற்றிற்கும் மேலாக மதுராபுரி தெய்வமே அவள் பின்னாடி கைகட்டி வந்தது என்கிறார் இளங்கோவடிகள். சாதரணப் பெண்ணான கண்ணகி தன் கற்பின் திறத்தால் வையத்தார் போற்றும் "பத்தினி தெய்வமாக''க் கோயில் கொண்டு மக்களால் வணங்கிப் போற்றப்படுகிறாள்.

**பாவை மறைத்த பாவை**

கணவன் கண் இழந்தவன் எனத் தெரிந்தும் தன் கண்களையும் துணிகளால் கட்டிக் கொண்டவள்.உலகில் அனைத்தையும் காணத்துடிக்கும் மக்களுக்கிடையில், கணவன் காணாத உலகத்தை இவளும் காணப்பெறவில்லை. இவளின் கற்பின் சக்திதான் திருதராஷ்டிரனையும் அவனது மகன் துரியோதனனையும் காத்தருளியது. காந்தாரியின் கண் பார்வை படாத துரியோதனனின் தொடைப் பகுதி மட்டுமே பலவீனமானது. அதுவே அவனுக்கு கூற்றாகவும் அமைந்தது. கணவனுக்காகப் பார்வையை மறைத்துக்கொண்ட வாழ்ந்து காட்டிய காந்தாரி போல் மனைவிக்காக எதையும் தியாகம் செய்த எந்தவொரு ஆணும் வரலாற்றிலோ, இதிகாசத்திலோ இடம்பெறவில்லை என்பதே உண்மையாகும்.

**கற்பின் கனலி**

சீதாப்பிராட்டியை "தவம் செய்த தவம்'' என்று கம்பர் சிறப்பிப்பார். நிலத்திலிருந்து தோன்றியவள். மனதில் கொண்ட இராமனையே மணாளனாக அடைந்தவள். சீதையை அரண்மனையில் விட்டுவிட்டு காட்டிற்குச் செல்ல முயன்ற இராமனிடம் "நின் பிரிவினும் சுடுமோ பெருங்காடு'' என்று கூறியவள். மேலும், இராமன் இருக்கும் இடமே சீதைக்கு அயோத்தி'' என்றவள். இராமனை பிரிதறியா வாழ்க்கையினள். அத்தகைய சீதாப்பிராட்டியைக் கடத்திச் சென்றவன் இராவணன். சீதையைத் தீண்டுவதற்கு அஞ்சி சீதை தங்கியிருந்த பர்ணசாலையோடு பெயர்த்துக்கொண்டு போய் இலங்கை அசோகவனத்தில் வைத்தான். அந்த இராவணனை அழிக்கும் ஆற்றல் பெற்றிருந்தும் அமைதி காத்தாள் சீதை. ஏனெனில் கணவனின் வீரத்திற்கு இழுக்கு வந்துவிடும் என்று ஆற்றியிருந்தாள்.

**''எல்லை நீத்த உலகங்கள் யாவும்**
**என் சொல்லினால் சுடுவேன்**
**தூயவன் வில்லிற்கு மாசு என்று நீக்கினேன்''**

என்று பொறுமையே ஆயுதமாகக் கொண்டு, கற்பினை அணிகலன்களாக் கொண்டு திகழ்ந்தவள் சீதை.

## நிறைவுரை

பெண்களின் பக்தி என்பது நீரிலிட்ட உப்பைப் போன்றது. கரைந்துவிடுமே அன்றி கண்களால் காண முடியாது. பெண்ணுக்குத் துறவு இல்லை. ஏனெனில் பெண் பெண்ணாக வாழ்வதே ஒரு துறவு நிலைதான்!.தனக்காக அவள் வாழ்தல் இல்லை என்றே கூறலாம். பெண், அன்னை பராசக்தியின் சொரூபம். "பெண்கள் அனைவரும் அன்னை பராசக்தி சொரூபமாகவே எனக்குத் தென்படுகிறார்கள்'' என்கிறார் சுவாமி இராமகிருஷ்ணர். பெண் தனது செயல் மேம்பாட்டினால் உலகத்தாரால் "தெய்வம்'' எனப் போற்றப்படுகிறாள். பெண்மையைப் போற்றாத நாட்டிற்குத் தெய்வங்கள் மேன்மையைத் தருவதில்லை. அதனால்தான் சீதாப்பிராட்டியை - "என் பெருந்தெய்வம்'' என அனுமன் போற்றி நிற்கின்றான். மங்கையர்க்குத் தனி அரசி எங்கள் தெய்வம் என்று வணக்கம் வைக்கிறார் தெய்வச்சேக்கிழார். வெளியே தெரியாத வேர்கள் பலர் பெரிய புராணத்தில் உள்ளனர்.

பெண்களின் பக்தி இலக்கியக் களத்தினை உற்றுநோக்கும்போது, தனது கணவனையும் நாட்டையும் சைவத்திற்கு மாற்றுப்படுத்திய மங்கை, தனது சகோதரனை சைவத்திற்கு நெறிப்படுத்திய நங்கை, தோழிகளை அழைப்பதன் வாயிலாக ஜீவாதாமாக்களையெல்லாம் பரமாத்வோடு சேர்த்துவித்த சுடர்க்கொடி, இல்லறம் விடுத்து இறைவனடி சேர்ந்த அம்மை, இறை வழிபாட்டில் மட்டுமன்றி இறையாக்கப்பணியிலும் தம்மை அர்ப்பணித்த சோழனின் தமக்கை போன்றோரின் செம்மாந்த இறைபக்தியினையும் அதேசமயம், கணவனே கண்கண்ட தெய்வம் என்றிருந்த அன்றைய பெண்களின் பதிபக்தியும் மறுப்பதற்கில்லை. தனது கணவன் குற்றமற்றவன் என்பதை நீண்ட வழக்குரைத்து சான்றோடு மெய்ப்பித்த பொற்பின்செல்வி!, தனது கணவனுக்காகப் பார்வையை மறைத்து ஒளியை இருளாக்கிக்கொண்ட காந்தார மங்கை, தனது அளப்பரிய ஆற்றலை கணவன் வில்லின் ஏற்றத்திற்காக அடக்கி வைத்திருந்த சீதை நல்லாள் போன்றோரின் பதிபக்தியையும் உய்த்துணர முடிகின்றது.

# பெண்களின் முன்னேற்றத்தில் டாக்டர் ஜெ.ஜெயலலிதாவின் பங்கு

முனைவர் நா.மாலதி,
உதவிப் பேராசிரியர், நாட்டுப்புறவியல் துறை,
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

## முன்னுரை

"தமிழகத்தின் தலைவியே தென்னாட்டின் புதல்வியே சமுதாயக் கொள்கைகள் கோரிக்கைகள் நிறைவேற்றிக் கொண்டாடும் உள்ளமே அரசியல் அறனாக ஆட்சித் திறமே மறவாது தமிழினம் இறவாத புகழுடைய சாதனைகள் தமிழகத்திற்கே"

மறைந்த முன்னாள் முதல்வர் செல்வி ஜெயலலிதா ஜெயராம் அவர்கள் தமிழகத்தின் முதல்வராகவும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் நிரந்தரப் பொதுச்செயலாளராகவும், இன்னும் பல துறைகளிலும் கோலோச்சியவர். பன்முக ஆளுமை கொண்ட இவர் இரும்புப் பெண்மணியாக உலகப் புகழ் பெற்று விளங்கினார்.

எம்.ஜி.ஆருக்குப் பிறகு அ.இ.அ.தி.மு.க. கட்சியின் தன்னிகரில்லாத தலைவராகவும், தமிழகத்தின் நீண்ட நாள் பெண் முதலமைச்சராகவும், எம்.ஜி.ஆருக்கு அடுத்தபடியாக மாபெரும் மக்கள் தலைவராகவும் திகழ்ந்தார். தமிழகத்தின் முதல்வராக ஆறு முறை பதவி வகித்த ஒரே பெண் என்ற பெருமை பெற்ற பெரும் தலைவர் ஜெ.ஜெயலலிதா ஒருவரே. அவரது வாழ்க்கை வரலாறு, சாதனைகளைப் பற்றி மேலும் விரிவாக இக்கட்டுரை யில் காணலாம்.

## பிறப்பு மற்றும் கல்வி

ஜெ.ஜெயலலிதா அவர்கள் 1948ம் ஆண்டு, பிப்ரவரித் திங்கள் 24ம் நாளன்று மைசூரில் பிறந்தார். இவருடைய பெற்றோர் ஜெயராமன் - வேதவல்லி ஆவர். இவருடைய

தாயார் திரைப்படத்திற்கு நடிக்க வந்த பின்னர் ‘சந்தியா’ என்று பெயர் மாற்றிக் கொண்டார். மைசூர் நீதிமன்றத்தில் அரசு மருத்துவராகப் பணியாற்றியுள்ளார்.

இவர்களுடைய மூதாதையர்கள் தமிழகத்தைப் பூர்வீகமாகக் கொண்டவர்கள். இவர் இரண்டு வயதில் தன் தந்தையை இழந்தார். அதன்பிறகு இவருடைய அம்மா மற்றும் தாய்வழித் தாத்தா வாழ்ந்த பிஷப் காட்டன் பெண்கள் உயர்நிலைப் பள்ளியில் கல்வி பயின்றார். வெள்ளித் திரையில் அவருடைய தாயாருக்கு நடிக்க வாய்ப்புக் கிடைத்ததால் அவர் சென்னை சென்றார். சென்னையிலுள்ள சர்ச் பார்க் பிரசண்டேசன் ஆங்கிலக் கல்வி நிலையத்தில் கல்வியைத் தொடர்ந்த இவர், பின்னர் ஸ்டெல்லா மேரீஸ் கல்லூரியில் படித்தார்.

தனது குழந்தைப் பருவத்திலேயே கல்வியில் சிறந்து விளங்கிய இவர், சட்டம் படிக்க வேண்டுமென ஆர்வம் கொண்டார். ஆனால் விதி இவருக்கென்று வேறு திட்டங்களை வகுத்திருந்தது. குடும்ப நிதிக் கட்டுப்பாட்டின் காரணமாக அவருடைய தாயார் அவரைத் திரையுலகில் நடிக்க வற்புறுத்தினார். 15 வயதில் அவர் முன்னணிக் கதாநாயகருடன் அறிமுகமானார். அதுவே அவருடைய புகழ் பெற்ற திரைப்படத் தொழிலுக்கு ஆரம்பமாக இருந்தது. அரசியலுக்கு வருவதற்கு முன்பாக இவர் 120க்கும் மேற்பட்ட தமிழ், தெலுங்கு, கன்னட மொழித் திரைப்படங்களில் முன்னணிப் பாத்திரங்களில் நடித்திருந்தார்.

**மனமும் மாயையும் வரலாறு**

மறைந்த தமிழக முதலமைச்சர் ஜெ.ஜெயலலிதா அவர்களின் வாழ்க்கை வரலாற்று நூலை ‘ஜெயலலிதா மனமும் மாயையும்’ என்ற தலைப்பில் மூத்த எழுத்தாளரும் இதழாளருமான வசந்தி எழுதியுள்ளார். காலச்சுவடு பதிப்பகம் இந்நூலை வெளியிட்டுள்ளது. சில வருடங்களுக்கு முன்பாக ஜெயலலிதாவின் வரலாற்றை வசந்தி ஆங்கிலத்தில் எழுதி வெளியாகவிருந்த நிலையில், அதனை எதிர்த்து நீதிமன்றம் சென்றார் ஜெயலலிதா.

அதை அடுத்து அந்த நூலின் வெளியீடு தடைசெய்யப்பட்டதோடு இன்னும் வெளிவராமலே இருக்கிறது. இந்நிலையில் இப்போது நேரடியாகத் தமிழில் எழுதப்பட்ட இந்நூலின் நீண்ட நாட்கள் திரட்டிய தரவுகளின் மூலம் ஜெயலலிதாவின் அறியப்படாத பல பக்கங்களையும் முன் வைக்கிறார் வசந்தி. எம்.ஜி.ஆர். ஏற்பாடு செய்யும் பணிகளில் ஜெயலலிதாவுடைய ஆதரவாளர்களுக்கு முக்கியப் பொறுப்புகள் கொடுக்கப்பட்டன.

**திராவிட இயக்கப் போராளி**

**"குடிதழீஇக் கொலோச்சும் மாநில மன்னன்**
**அடிதழீஇ நிற்கும் உலகு"** (குறள் : 544)

என்றார் திருவள்ளுவர். இக்குறளுக்கேற்ப எல்லாத் தரப்பு மக்களின் உள்ளங்களையும் தழுவியதோடு எண்ணிலடங்கா முன்னேற்றத் திட்டங்களை முனைப்போடு செயலாக்கி உலகம் தழுவக்கூடிய புகழ் மணத்துக்கு உரியவராக நிமிர்ந்து நின்றார். இந்தியாவின் மைய அரசிடம் கோரிக்கைகளைப் பீரங்கி முழக்கமாக எழுப்பியவர். இவர் தமிழக மக்களிடம் பல இரசிகர்களையும், தொண்டர்களையும் பெற்றுள்ளார். இவரை மக்கள் ‘புரட்சித் தலைவி’ ‘பொன்னியின் செல்வி’ ‘காவிரி தந்த கலைச் செல்வி’ ‘இதய தெய்வம்’ எனப்

பல்வேறு பெயர்களால் அழைக்கின்றனர். நான்கு வயதுச் சிறுமியாக இருந்தபோதே இவர் பரதநாட்டியத்தில் பயிற்சி பெறத் தொடங்கி விட்டார். மோகினி ஆட்டம், கதக்களி ஆட்டம், மணிப்புரி நடனம் ஆகிய நாட்டியக் கலைகளிலும் நன்றாகத் தேர்ச்சி பெற்றார்.

இவர் கால ஓட்டத்தில் இந்தியா முழுதும் நூற்றுக்கணக்கான பரதநாட்டிய நிகழ்ச்சிகளை நடத்திப் பெருமை பெற்றார். அந்த நிகழ்ச்சிகளின் மூலமாகக் கிடைக்கும் கூடுதலான ஆதாயப் பணத்தைத் தன்னலம் இல்லாமல் பொதுமக்களின் நலன்களுக்காக நன்கொடைகள் வழங்கும் நற்பண்பையும் இந்தக் கலைகளின் கனிமச் சுரங்கம் நிலை நாட்டி வந்துள்ளார். சிறிய வயதிலேயே கர்நாடக இசையில் சீரிய முறையில் பயிற்சி பெற்றார். **1982** சூன் மாதம், **4**ம் நாள் புரட்சித்தலைவி செல்வி ஜெ.ஜெயலலிதா அவர்களை முதல் முதலில் எம்.ஜி.ஆர். அவர்களுடைய கட்சியில் உறுப்பினராக இணைத்தார். **1983** சனவரி **28**ம் நாள் திராவிட இயக்கக் கட்சியின் கொள்கைப் பரப்புச் செயலாளராக இவர் அமர்த்தப்பெற்றார். **1983** பிப்ரவரி **20**ம் நாள் திருச்செந்தூர்ச் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலில் அ.இ.அ.தி.மு.க.கழக வேட்பாளரை ஆதரித்து முதல் முறையாகத் தேர்தல் பிரச்சாரம் நிகழ்த்த எம்.ஜி.ஆர். அவர்களால் இவர் அனுப்பி வைக்கப்பட்டார். வழக்கமாக வீட்டைவிட்டு வெளியே வராத அவர், வீடு வீடாகச் சென்று வாக்குகள் சேகரித்து வியக்கத்தக்க அளவில் எம்.ஜி.ஆர்.ஐ வெற்றி பெறச் செய்தார்.

### வரலாற்றுச் சாதனைகள்

**1984**ம் ஆண்டுமுதல் **1987**ம் ஆண்டு வரை நாடாளுமன்ற மாநிலங்களவையில் உறுப்பினராக இருந்தார். இந்தத் திராவிட இயக்க அரசியல் வீராங்கனை அப்போது தமிழ்நாட்டின் மின்சாரத் தட்டுப்பாடு உட்பட பல்வேறு சிக்கல்கள், நெசவாளர்களின் துயர நிலைமைகள், சிங்களர் ஆட்சியில் சிதைக்கப்படும் ஈழத்தமிழர்களின் அடிப்படை மனித உரிமைகள், ஜம்மு காஷ்மீர் மாநிலத்தில் வன்கொலை வாதிகளின் அட்டூழியங்கள் இப்படி எத்தனையோ பிரச்சினைகள் பற்றியெல்லாம் அழுத்தாமான வாதங்களை அடுக்கியிருக்கிறார். பக்கவாத நோயினால் பாதிக்கப்பட்ட எம்.ஜி.ஆர். அமெரிக்காவில் சிகிச்சை பெற்றுக்கொண்டிருந்த நிலையில் அதே ஆண்டு நாடாளுமன்றத்துக்கும், சட்டமன்றத்துக்கும் **1984**ம் ஆண்டு டிசம்பர் திங்களில் தேர்தல் நடைபெறும் என்று தேர்தல் ஆணையம் அறிவித்தது. ஜெயலலிதா அவர்கள் ஆண்டிப்பட்டித் தொகுதியில் பல இடங்களில் மக்களை நேரில் சந்தித்தும் மேடைப் பேச்சுகள் மூலமும் இவர் வாக்குகளைச் சேகரித்தார்.

இதனால் புரட்சித்தலைவர் ஆண்டிப்பட்டித் தொகுதியில் வெற்றி பெற்றார். **1985** பிப்ரவரித் திங்கள் **12**ம் நாள் தமிழ்நாட்டிற்குத் திரும்பினார். **1986** சூலைத் திங்கள் **13, 14** நாள்களில் மதுரை மாநகரில் எம்.ஜி.ஆர். மன்ற மாநாடு, அ.இ.அ. தி.மு.கழகப் பொதுச் செயலாளர் என்னும் நிலையில், புரட்சித் தலைவர் அவர்கள் விடுத்த அன்புக் கட்டளைப்படி நடைபெற்றது. அப்போது அந்த மன்றத்தின் மாபெரும் பேரணியைத் தொடங்கி வைக்கும் வாய்ப்பினைப் புரட்சித்தலைவி அம்மா அவர்களுக்கே அளித்துப் பெருமைப்படுத்தினார் எம்.ஜி.ஆர். ஜெ.ஜெயலலிதா அவர்கள் கொண்டு வந்த தொட்டில்

குழந்தைத் திட்டத்துக்காக ஐ.நா. சபையில் கைதட்டப்பெற்ற இந்தியாவைச் சார்ந்த முதல் பெண் முதலமைச்சர் இவர் மட்டுமே.

1992ம் ஆண்டு முதலமைச்சராக இருந்தபோது பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டத்தை அறிமுகப்படுத்தினார். அந்தத் திட்டத்தில் ஒரு குடும்பத்தில் ஒரே ஒரு பெண் குழந்தை மட்டும் இருந்தால், அப்பெண் குழந்தையின் பெயரில் வங்கியில் 50,000 வைப்புத் தொகையும், இரண்டு பெண் குழந்தைகள் இருந்தால் ஒவ்வொரு பெண் குழந்தை பெயரிலும் தலா 25,000 வைப்புத் தொகையும் இருப்பு வைக்கப்பட்டு, 20 ஆண்டுகள் கழித்து வட்டியுடன் அத்தொகை வழங்கப்படும். இத்திட்டத்தின் வழியாகக் கிடைக்கும் தொகை, ஏழைப் பெண்கள் உயர்கல்வி, திருமணம் போன்ற எதிர்காலத் தேவைகளுக்கு உதவியது. லட்சக்கணக்கான பெண்கள் இத்திட்டத்தால் பயனடைந்தனர்.

மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு நிதி உதவிதிட்டம், தி.மு.க. அரசால் கொண்டுவரப்பட்ட திட்டம் என்றாலும், இளநிலைப் பட்டம் அல்லது டிப்ளமோ படித்த ஏழைப் பெண்களுக்குத் திருமண உதவித் தொகையாக ரூ. 50,000 மற்றும் தாலிக்கு 4 கிராம் தங்கம், படித்த ஏழைப் பெண்களுக்குத் திருமண உதவித்தொகையாக ரூ. 25,000 மற்றும் தாலிக்கு 4 கிராம் தங்கம் என அதை உயர்த்தியவர் ஜெயலலிதா. 2016ம் ஆண்டு ஆறாவது முறையாக முதல்வராகப் பொறுப்பேற்றபோது இத்திட்டத்தில் வழங்கப்பட்ட உதவித்தொகையுடன், தாலிக்கு வழங்கும் தங்கத்தின் அளவினை 8 கிராமமாக உயர்த்தி வழங்கினார். ஜெயலலிதா இத்திட்டத்தின்படி ஆண்டுக்குப் பல ஆயிரம் பெண்கள் பயன் பெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

## தொட்டில் குழந்தைத் திட்டம்

பெண் குழந்தைகளை வளர்ப்பதைச் சுமையாகக் கருதி அதிக அளவில் பெண் சிசுக்கொலை நடைபெற்று வருவதைத் தடுக்கும் வகையில் 1992ம் ஆண்டு ஜெயலலிதா கொண்டு வந்த சிறந்த திட்டம் 'தொட்டில் குழந்தை திட்டம்' இத்திட்டத்தின் மூலம், பிறந்த பெண் குழந்தையை வளர்க்க முடியாத சூழலில் உள்ள பெற்றோர் அதை அரசின் பாதுகாப்பில் ஒப்படைக்க வழி செய்யப்பட்டு, அந்தக் குழந்தைகள் அரசு, ஆதரவற்றோர் இல்லங்களால் வளர்க்கப்படுவார்கள். இத்திட்டத்தால் தமிழகத்தில் பெண் சிசுக்கொலையின் எண்ணிக்கை கணிசமாகக் குறைந்தது குறிப்பிடத்தக்கது.

## விடாய்க் கால அணையாடை (சானிட்டரி நாப்கின்) வழங்கும் திட்டம்

பெண்களுக்கு இலவசமாக விடாய்க் கால அணையாடை வழங்கும் திட்டத்தை 2012ம் ஆண்டு, மார்ச் மாதம் தொடங்கி வைத்தார் ஜெயலலிதா. இந்தத் திட்டத்தின்படி கிராமங்களில் உள்ள 10 முதல் 19 வயது வரையிலான இளம் பெண்கள், மாணவிகள், இல்லத்தரசிகள் மற்றும் சிறைச்சாலையில் இருக்கும் பெண் கைதிகளுக்கும் இலவச விடாய்க் கால அணையாடை வழங்கப்படுகின்றன. இத்திட்டம் பெரும் வரவேற்பை பெற்றதுடன், பெண்களுக்கு ஏற்படும் சுகாதாரப் பிரச்சனைகளுக்கு நல்லதொரு தீர்வாக அமைந்தது.

### பெண்களுக்கான உடல் எடை பரிசோதனைத் திட்டம்

*ஒவ்வொரு ஊரிலும் உள்ள அரசு அங்கன்வாடி மையங்கள் மூலம் குழந்தைகள், வளர் இளம் பெண்கள் கர்ப்பிணிப் பெண்கள், பாலூட்டும் தாய்மார்கள் ஆகியோரது உடல் எடையைக் கண்காணித்து, அவர்களது ஆரோக்கியத்தை உறுதிசெய்ய ஊட்டச்சத்து மாவு வழங்கும் திட்டத்தைக் கொண்டு வந்தார் ஜெயலலிதா.*

### மகளிர் சுய உதவிக்குழு திட்டம்

*கிராமப்புற, நகர்ப்புறப் பகுதிகளில் வசிக்கும் ஏழை, எளிய, நடுத்தரப் பெண்கள் சுயமாக முன்னேறவும், சுயத்தொழில் செய்து வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக்கொள்ளவும் அவர்கள் மகளிர் சுய உதவிக்குழுத் திட்டத்தின் மூலம் கடனுதவி பெற வழிவகுத்தார் ஜெயலலிதா. இந்திய அளவில் அதிகப் பெண் சுயத்தொழில் முனைவோர் உள்ள மாநிலமாகத் தமிழகம் முதலிடம் பிடித்ததில், இத்திட்டத்திற்குப் பெரும் பங்கு உண்டு.*

### அம்மா குழந்தைகள் நலப்பரிசுப் பெட்டகம்

*அரசு மருத்துவமனைகளில் குழந்தை பெற்றுக் கொள்ளும் தாய்மார்களுக்கும் குழந்தைகளுக்கும் அரசின் பரிசாக வழலைக் கட்டி, பொம்மை, துண்டு, சிகைக்கழுவி, குழந்தைகளுக்கான ஆடை உட்பட 16 பொருட்கள் வழங்கும் 'அம்மா குழந்தைகள் நல பரிசுப் பெட்டகம்' என்ற புதிய திட்டத்தை 2015ம் ஆண்டு, மார்ச் மாதம் அறிமுகப்படுத்தினார் ஜெயலலிதா.*

### பாலூட்டும் தாய்மார்களுக்குத் தனி அறைத்திட்டம்

*பாலூட்டும் தாய்மார்கள் பயணங்களில், பொதுவெளிகளில் தங்கள் குழந்தைகளுக்குப் பசியாற்ற முடியாத தவிப்பைக் கருத்தில் கொண்டு, அனைத்துப் பேருந்து நிலையங்கள், மக்கள் அதிகமாகக் கூடும் இடங்களில், தாய்மார்கள் பாலூட்டுவதற்கு என பிரத்தியேகத் தனியறைகளை அமைத்துக் கொடுத்தார் ஜெயலலிதா. பல குழந்தைகளின் அழுகையும் தாய்மார்களின் இயலாமையும் தணிந்தது.*

### அம்மா மகப்பேறு சஞ்சீவித் திட்டம்

*அம்மா மகப்பேறு சஞ்சீவித் திட்டத்தின் வழியாக, மகப்பேறுக் காலத்தில் பெண்களின் ஆரோக்கியத்தைக் காக்க 11வகை மூலிகை மருந்துகள் அடங்கியிருக்கும் மருத்துவக் குணமுள்ள மூலிகைகள் கொடுக்கப்படும். மசக்கையில் வரும் வாந்தி, மயக்கத்தைக் கட்டுப்படுத்துதல் தொடங்கி, மகப்பேறு மாதம்வரை கர்ப்பிணிப் பெண்ணுக்கு ஏற்ற மூலிகைகளைத் தருவதுதான் இத்திட்டம்.*

## வெற்றிப் பெண்மணி தந்த விருதுகள்

*வீர, தீரச் செயல் புரியும் பெண்களைக் கௌரவிக்கும் வகையில், ஆண்டு தோறும் சுதந்திர தினத்தன்று 'கல்பனா சாவ்லா' விருதுடன் ரூ 5 லட்சம் பரிசுத் தொகை மற்றும் தங்க முலாம் பூசப்பட்ட பதக்கம் வழங்கியது ஜெயலலிதா தலைமையிலான தமிழக அரசு. மேலும், சமூகச் சீர்திருத்தம், மகளிர் மேம்பாடு, மதநல்லிணக்கம், மொழித்தொண்டு, கலை, அறிவியல், பண்பாடு, கலாச்சாரம், பத்திரிக்கை, நிர்வாகம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் தொண்டாற்றும் பெண்களைக் கௌரவப்படுத்தும் வகையில், ஒவ்வோர் ஆண்டும் இந்தத் துறைகளில் சிறப்புடன் பணியாற்றும் பெண்களில் ஒருவரைத் தேர்ந்தெடுத்து, அவருக்கு அந்த ஆண்டு சர்வதேச மகளிர் தினத்தையொட்டி ஒரு லட்சம் ரூபாய் ரொக்கம், 8 கிராம் எடையுள்ள தங்கப் பதக்கம், சான்றிதழ், பொன்னாடை அடங்கிய 'அவ்வையார் விருது' வழங்கி ஊக்கப்படுத்தினார் ஜெயலலிதா.*

*இதைத் தவிர டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு கால நிதி உதவித் திட்டம் தி.மு.க. அரசால் கொண்டுவரப்பட்டிருந்தாலும். கர்ப்பிணிப் பெண்கள் ஆரோக்கியமான உணவுகளை உண்டு, ஆரோக்கியமாகக் குழந்தையைப் பெற்றெடுக்கும் வகையில், அவர்களுக்கு மகப்பேறு கால உதவியை 18,000 ஆக உயர்த்தினார் ஜெயலலிதா.*

*பெண்களின் பிரச்சினைகளைத் தீர்க்க மகளிர் காவல் நிலையம், இளம்பெண்களின் திருமணத்திற்குத் தாலிக்கு தங்கம், குறைந்த விலையில் அம்மா குடிநீர், அம்மா உணவகங்கள், ஏழை கர்ப்பிணிகளுக்கு வளைகாப்பு,விலையில்லா மிக்ஸி, கிரைண்டர், மின்விசிறி,அம்மா மகளிர் சிறப்பு உடல் பரிசோதனை திட்டம்.*

*பெண்கள் ஜெயலலிதாவை நேசித்தார்கள் பெண்களுக்காக வாழ்வில் ஒளி ஏற்றிய நன்றிகளை இந்த வரலாறு நின்று சொல்லும்.*

## தொகுப்புரை

*புரட்சித் தலைவி செல்வி ஜெ.ஜெயலலிதா அவர்கள் திரைப்படம், மொழி ஆளுமை, படைப்பாற்றல், அரசியல், நிர்வாகம் ஆகியவற்றில் திறன் வாய்ந்தவர். இவர் தமிழகத்தின் மக்கள் மனதில் நீங்காத இடத்தைப் பிடித்திருக்கின்றார். தமிழக அரசின் கலைமாமணி விருது பெற்றவர். பாட்டு, நடனம், பேச்சு, கலைகள் எனப் பன்முகத்திறமை கொண்டவர். இவரைப்போல் பெண் ஆளுமையைக் காண்பது அரிது.*

# ‘கிரவுஞ்சப் பட்சிகள்’ எனும் கன்னட மொழிபெயர்ப்புச் சிறுகதைகளில் பெண்களின் அவலங்கள்

முனைவர் ப. இராஜேஷ்
இணைப்பேராசிரியர், மொழிபெயர்ப்புத்துறை
தமிழ்ப்பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

தற்காலத்தில் இலக்கியங்கள் காட்டும் வாழ்க்கைமுறைகள் வெற்றிப் பெறுவதற்கு மொழிபெயர்ப்பு ஒரு காரணம் எனலாம். மூல மொழியிலுள்ள படைப்புகள் பெறுமொழியில வரும்போது பல்வேறு செய்திகளை, அதாவது, ஒவ்வொரு மொழியிலிருந்து கிடைக்கும் பண்பாடுகள், கலாச்சாரங்கள், இன்றையைப் பெண்களின் நிலைகள், அக்காலத்தில் சமூகத்தில் ஏற்பட்ட கசப்புகள், இனிமையான உணர்வுகள் ஆகியனவற்றை அறிந்து கொள்ளமுடிகிறது. இவைகளின் அடிப்படையில் கன்னட மொழியில் கதை, கவிதை, நாவல், கட்டுரை, குழந்தை நாடகம் போன்றனவற்றைப் பிறமொழிகளில் மொழிபெயர்க்கும் பணிநடைபெற்று வருவதைக் காணலாம். கன்னட மொழிபெயர்ப்பாளர்களில் மொழிபெயர்ப்பு மற்றும் படைப்பு பணியினைச் செய்து வருகின்றவர் வைதேகி அவர்கள். இவருடைய மூலப்படைப்பான ‘கிரவுஞ்சப் பட்சிகள்’ எனும் சிறுகதைத் தொகுப்பினை ஜெயந்தி அவர்கள் தமிழ்மொழியில் மொழிபெயர்த்துள்ளார். அவருக்கு 2009ம் ஆண்டு சாகித்திய அகாதெமி விருது கிடைத்தது. இச்சிறுகதை உலக அளவில் சிறப்பிடம் பெற்றதாகும். இக்கட்டுரையில் ‘கிரவுஞ்சப் பட்சிகள்’ எனும் கன்னடமொழிபெயர்ப்புச் சிறுகதைத்தொகுப்பில் இடம்பெற்றுள்ள ‘பெண்களின் அவலங்கள்’ எனும் தலைப்பில் செய்திகள் ஆராய்ந்து தரப்பட்டுள்ளன.

## பெண்ணின் உணர்வும் அனுபவமும்

‘கிரவுஞ்சப் பட்சிகள்’ எனும் சிறுகதையில் விசாகாபெஹன் என்ற பெண் சுதந்திரப் போராட்டத்தில் பங்கெடுத்தவர். தேசத்தந்தை காந்திஜியோடு சுதந்திரப் போராட்டத்தில்

பங்கெடுத்தவர். இந்தியா சுதந்திரம் அடைந்த பிறகு அகதிகளின் மறுவாழ்விற்கும் பெண்களின் முன்னேற்றத்திற்கும் பாடுபட்டவர். இப்பெண் தளராத வயதிலும்பெண்களின் அவலத்தைத் துடைப்பதற்காகப் பல்வேறு வழிகளைக் íயாண்டு வந்துள்ளார். அதாவது,ஆண்கள் மட்டும் கல்விக்கற்றால் போதாது, பெண்களும் கல்வி கற்கவேண்டும் என்பதில் உறுதியாய் இருந்தவர் பாரதி. எனவேதான்,

**’’பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்**
**பாரினில் பெண்கள் நடத்தவந்தோம்**
**எட்டு மறிவினில் ஆணுங்கிங்கே பெண்**
**இளைப்பில்லை காணென்று கும்மியடி’’**

என்று பெண்கள் விடுதலைக்கும்மி இசைத்தவர் பாரதி. ஞானம், நல்லறம், வீர சுதந்திரம் முதலியன நற்குடிப் பெண் பேணும் குணங்கள் என்றும், நாணமும் அச்சமும் நாய்கட்கு வேண்டும் என்று கூறினார்.அவ்வடிப்படையில் விசாகாபெஹறன் செயல்பட்டு வந்துள்ளதைக்‘கிரவுஞ்சப் பட்சிகள்’ சிறுகதைத் தொகுப்பின் வாயிலாக உணர்ந்து கொள்ளமுடிகிறது. மேலும்,அருந்ததி எனும் பெண் விசாகாபெஹறன் அவர்களிடம் பேட்டிக் கண்ட போது, அவளின் இளமைக்காலம், காந்தியோடு கொண்ட தொடர்பு, சுதந்திரக் காலக்கட்டத்தில் ஏற்பட்ட நெருக்கடிகள், பெண்களுக்கு ஏற்பட்ட இழப்புகள், அவலங்கள் ஆகியனவற்றைத் தெளிவுப்படுத்தியதையும் உணர்த்துகிறார். உதாரணமாக, "அவரின் இளமைக்காலம், பிறந்து வளர்ந்த நினைவுகள், அன்றைய நாட்டு நடப்பு, சுதந்திரப் போராட்ட நாட்கள் என ஒவ்வொன்றையும் அவர் கூறியவிதம் ஒரு தனிரகம். எப்படிப்பட்டப் பேச்சு. அப்படியிருக்கனும். எந்த இடத்திலும் அநாவசிய வர்ணனை கிடையாது.

எதையும் மிகைப்படுத்திச் சொல்லவில்லை. அனுபவத்தின் பாரங்களை, ஆச்சரியம் மேம்படுத்தும் வகையில் மிகப் பொருத்தமாக தன்சிறை அனுவங்கள், சந்தித்த போராட்ட வீரர்கள், காந்திஜியுடன் தான்நேருக்கு நேர் விவாதித்த சில கருத்துக்கள், கருத்து வேறுபாடுகள், ஒரு மனிதரிடமிருந்து மற்றொருவருக்கு ஒரு நிகழ்விலிருந்து மற்றொன்றுக்கு என்று அவர் தங்கு தடையின்றி சொல்லிக் கொண்டு போனவிதம். அப்பப்பா... இவையனைத்தும் நமக்கு மிக வேண்டியவையே" என்பதியின் வாயிலாக உணரலாம். ஆக, பெண் என்பவள் அனுபவத்தின் சாராம்சம் மட்டுமின்றி போராடும் உணர்வு கொண்டவள் பெண் எனக்கூறலாம்.

சுதந்திரத்திற்குப் பிறகு பெண்களின்நிலை இந்தியா சுதந்திரம் அடைந்த பிறகு இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு ‘லட்சுமி நாராயணா’ என்ற ‘அஸ்நார்ணபட்டர்’ காசியில் ஹோட்டல் நடத்தி வந்தார். அப்போது, ஒரு நாள்ஒரு கும்பல் இவருடைய வீட்டின் உள்ளே நுழைந்து அவரை அடித்து துன்புறுத்தி, கீழே தள்ளி அவருடைய மனைவியைக் கடத்திச் சென்றனர். வீட்டின் உள்ளே நுழைந்து பெண்ணைக் கடத்திச் சென்றபிறகு எந்த ஆண்களும் பெண்ணைக் காப்பாற்றும் முயற்சியில் செயல்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. பின்னர் கடத்தப்பட்ட பெண்ணின் துன்பத்தினையும் சிறுகதை வாயிலாக வெளிப்படுவதைத் தெளியலாம். இதனை,

"இப்படி இருக்கும் போது பூரிக்காக வானலியில் எண்ணெய் காய்ந்து கொண்டிருந்தது. பிசைந்த மாவு ஒரு பக்கம், பாஜி தயாராகிருந்தது. அச்சமயம் ஒரு கும்பல் உள்ளே வந்தது. யாரும் தெரியாதவர்கள் இல்லை. தினம் வரும் வாடிக்கையாளர்களே. ஆனால் அன்று அவர்களின் அவதாரமே வேறு. அதைத்தட்டி, இதைத்தட்டி எல்லாவற்றையும் கொட்டி, வீசி இறைத்து என்னவென்று, நான் நிதானிக்குமுன் என்னையும் பிடித்துத் தள்ளியதில் எண்ணெய் பாத்திரத்தில் விழாது தப்பியது புண்ணியந்தான். அப்படியே உள்ளே போனவர்கள் அங்கே மோர் கடைந்து கொண்டிருந்த 'லட்சுமியம்மாவை' அலக்காகத் தூக்கிச் சென்றனர்." என்பதின் வாயிலாகக் காசியில் சென்றால் மோட்சம் கிடைக்கும் நிலைமாறி துன்பம் பெருகும் என்பதாக அமைகிறது. சுதந்திரம் பெற்றப் பிறகு இவ்வாறான நிகழ்வு மிக மோசமானதாக அமைந்தது. இந்தியாவில் பிரிவினை, சாதி, மதக்கலவரங்கள் நடைபெற்றக் காலத்தில் முதலில் பாதிப்படைவது பெண் என்பதைச் சுட்டிக்காட்டுவதாக அமைகிறது. "நாட்டுப் பிரிவினையின் போது நடந்த வகுப்புவாத கலவரங்கள், போராட்டங்கள், ரத்த ஆறு என எல்லாவற்றையும் தன் கண்களால் கண்டதை அப்படியே விவரித்துக் கொண்டு, வகுப்புக் கலவரங்களில் உயிர் இழந்து, நரகவேதனையை அனுபவித்து, வெந்து சுண்ணாம்பான காணாமல் போன நிமிடத்தில் தலையெழுத்து மாறிப்போன, தடம் புரண்ட, பகல், இரவு என்றில்லாது கணவன், மக்களைப் பிரிந்து சின்னா பின்னமான பெண்களின் அவல நிலைமைகளைத் தன் சோகக்குரலில் கண்முன்னே நிறுத்தினர்." என்பதின் வாயிலாக இந்தியாவில் பல்வேறு போராட்டம் நடைபெற்று வந்தது என்பதையும், அப்போதேல்லாம் பெண்கள் பாதிப்படைந்துள்ளனர் என்பதையும் உணர்த்துவதாக அமைகிறது. சமூகத்தில் பெண்கள் எதிர்கொள்ள நேர்கிற பல்வேறு சிக்கல்களை அனுதாபத்துடன் அணுகி மனிதநேயத்துடன் எழுதிவருவதை அறியமுடிகிறது. மேலும்,இப்படைப்பினுள்'விசாகா பெஹன்' என்பவர் லெட்சுமி அம்மாளையும், இவர்களைப் போல் பல பெண்களைய்யும் துன்பத்திலிருந்து மீட்டெடுத்ததையும் சுட்டிக்காட்டுகின்றாள்.

**ஆணாதிக்கப் போக்கும் மாற்றமில்லா மனநிலையும்**

பண்டைய காலம் முதல் தற்காலம் வரையிலும் ஆணாதிக்கப் போக்கு நிறைந்து காணப்படுகிறது, சமூகத்தில் நடைபெறும் நல்நிகழ்வுகளுக்குத்தான் (ஆண்) என்றும், தீய நிகழ்வுகளுக்குப் பெண் என்றும் காரணம் சொல்லலுகின்ற தன்மைகள் ஏராளம் கிடைப்பதைச் சிறுகதைகளிலும் உணரமுடிகிறது, சான்றாக,"அரசின் சார்பாக இப்படிப்பட்ட பெண்களை இரண்டு பக்கங்களிலிருந்தும் மீட்டெடுத்து வருகையில் வருடம் முடிந்தே விட்டது. யார், யார் எவரெவர் வீட்டில் அடைக்கலம் ஆனார்களோ? எந்தெந்த முகாம்களில் இருந்தனரோ? அவர்களை மீட்க வந்த எங்களைப் பார்த்து ஆதங்கப்பட்டனர். பாலியல் வன்முறைக்கு ஆளானவர்கள். வயிற்றுப்பிழைப்பிற்காக வேசியானவர்கள், குழந்தைப் பெற்றவர்கள், கர்ப்பிணிகள் என இரண்டு பக்கமும்பாதிக்கப்பட்டிருந்தனர். நம்மவர்களை இங்கு வாருங்கள் என்று அழுத போது வருவதற்குப் பயப்பட்டனர். சாப்பாடு, உடையெல்லாம் கிடைக்கிறது என்று அங்கேயே சம்மதப்பட்டனர் சிலர்." என்னும் செய்திகளின் வாயிலாக அறியலாம்.

லெட்சுமி அம்மாள் அருந்ததியிடம் கூறும்போது, பட்டரிடம் தான் அழுது புரண்டதாகவும், ஆனால், பட்டர் தன்னை அழைத்துச் செல்லவிருப்பமில்லை என்பதையும் குறிப்பிட்டுள்ளார். அதாவது," சிரித்தார் லட்சுமியம்மா. ஏன் தெரியாமல்? என்னைப் பார்க்க வந்திருந்தாரே. அவரைப்பார்த்தவுடன் காட்டாற்று வெள்ளமாய் அழுதேனே! அய்யோ அம்மா, விடுதலை கிடைத்தது என்று அழுது அழுது ..... அழும் போதே கூப்பிடலாமென்றும், இன்னும் சிறிது நேரத்தில் அழைத்துக் கொண்டு போவார் என்றிருக்கையில் ஹீம் இல்லை! கூப்பிடவேயில்லை. ஆச்சரியத்தோடு கண்ணை, மூக்கை நன்றாகத் துடைத்துக் கொண்டுபார்க்கிறேன். தோள் மேல் போட்டிருந்த துண்டை உதறித் தலையில் போட்டுக் கொண்டு எழவு வீட்டிலிருந்து போவது போல திரும்பியே பார்க்காமல் போனாரே. இவள் யாரென்று எனக்குத் தெரியாதென்னு சொன்னாராம்!. என்னால் அதை நம்பமுடியாமல் அவர் பின்னால் ஓடி அழுது மன்றாடினேன்...." என்னும் செய்திகளின் வாயிலாகப் பெண்ணின் ஏக்கத் தவிப்பு, தனிமைத்துன்பம் ஆகியனவற்றை மைப்படுத்துவதாக அமைகிறது. அதாவது, கணவன் தன்னுடைய மனைவி எனத் தெரிந்து கொண்டபிறகும் மனைவியை அழைத்துச் செல்லாமல் கண்டும், காணாமல் செல்வது ஆணாதிக்கத்தின் உச்ச நிலையினைச் சுட்டிக்காட்டுகினறார்.

சமூகத்தில் சாதி, மதங்களைக் கடந்து அன்பை மட்டும் பார்த்து பழகி, தனிமையிலும் இனிமையாகவும் வாழ்ந்த பெண்களுக்கு இவ்வுலகமும் வெற்றி உலகம் என்றும், வெற்றி உலகத்தில் யாரேனும் ஒருவர் ஆறுதலாக அமைந்தால் இவ்வுலகத்தை வெல்லலாம் என்பதை நடப்பியல் செய்திகள் உணர்த்தகிறது.மேலும்,"ஒரு கணக்கில் ஜாதி, மதம் பார்க்காமல் கிடைச்ச அன்பை விட்டுக் கொடுக்காம, மனசைக்கல்லாக்கி அங்கேயே இருந்தவங்க ஜெயிச்சுட்டாங்க." மேலும்," முணு முணுத்துக் கொண்டேஎன்னை ஆச்சரியமா பார்த்து 'எனக்கு மட்டும் இந்த அம்மா கிடைக்காம இருந்தா நான் என்னைக்கோ தூக்கில தொங்கியிருப்பேன்." என்னும் செய்திகளின் மூலமாக அறியலாம்.

'மோதல்'எனும் சிறுகதையில் அழகு வாய்ந்த பெண் ஒருவர் எப்பொழுதும் புன்னகையோடும், அழகாகவும் இருந்தாள். அவள் பேருந்தில் ஏறியவுடன் நடத்துனர் கோபத்தோடும் கடுகடு என சத்தம் போட்டும் அந்தப் பெண்ணைப் பலமுறை சீண்டல்களோடு சென்ற விதத்தைக் காணும் போது, பேருந்தில் ஏறிய மற்றப் பெண்களுக்கு எரிச்சல் ஊட்டுவதாகும் அமைந்தது. அதுமட்டுமின்றி திரும்ப, திரும்ப அந்தப் பெண்ணிடம் நடத்துனர் நடந்து கொண்டவிதம் மோசமாக இருந்தது.

உதாரணமாக," இப்போது அவள்கால் மாற்றி கண்டக்டர் பார்வையில் பட்டும் படாமல் நின்றாள். சிரிப்பு இழையோடியது. முகம் தெரியவில்லை. புகைந்து கொண்டிருக்கும் புகை மூட்டத்தில் திடீரென எழும் தீச்சுவாலை போல எரிச்சலுடன் அவளைத் தாண்டிச் செல்ல எத்தனித்தாலும் அவனின் பார்வையில் தப்பவில்லை. மௌனமாய்க் கடந்து செல்ல என்ன ஆகுமோ அவனுக்கு. அதனால் கத்திக் கொண்டே "எவ்வளவுபேரு ஏறியிருக்காங்க. பஸ்ல ஏறினவுடனே சீட்டு வேணுமாம் வரும் போதே சீட்டை குண்டியில் கட்டிட்டு வந்திருக்கக்கலாமே" என்று சீறினான்.

இதைக்கேட்டுக் கண்டக்டரின் இருக்கையிலிருந்தவன் தலையைத் தூக்கிச் சிரித்தான.; அவன் சொன்னவிதம் அப்படி இருந்தது. இதற்காகக் காத்திருந்தது போல் மேலும், சிலர் சிரித்தனர். பயணிகளில் ஒருத்தி, " சீட்டுன்னா என்ன? இப்போ முப்பத்து மூணு சதவிகிதம் ஒதுக்கீடு இருக்கு சாமி எங்களுக்கும். ஹீம்!."என்னும் செய்திகளின் வாயிலாக நடத்துனர் கொச்சையாகப் பேசியதற்கு ஆணாதிக்கமிக்க ஆண்கள் ஏளன சிரிப்பும்; பேருந்தில் பயணிறத்த பெண்கள் குமுறுவதையும் அறியலாம். மேலும், பேருந்தில் பயணித்த புன்னகைத்த பெண் மிக அமைதியாகவும், புன்னகையுடனும் பொறுமையுடனும் இருந்ததை அறியமுடிகிறது. மேலும்,

"தற்சமயம் இருக்கைகள் காலியாயிருந்தாலும் உட்காரவில்லை. பயம், குழப்பம், வியப்பு, பதிலேதும் கிடைக்காது என்று தெரிந்தும் கேள்விகளைக் கேட்டுக் கொண்டே வாசல் பக்கம் அவசரமாக ஓடும் பயணிகளைப் பார்த்தக் கொண்டு கம்பீரமாக நின்றாள்.

'மேடம், நீங்க அவங்கிட்ட நல்லா மோதியிருக்கணும். ஏன் சும்மா இருந்தீங்க? என்றாள் ஷோபனா, கடைசியில் சும்மா இருக்க முடியாமல்.

அவள் எங்கள் எல்லாரையும் தீர்க்கமாக ஒரு பார்வை பார்த்தாள். (கனிவா, சோதனையா, வருத்தமா, அலட்சியமா என்னடி இது லலிதா) மெதுவாக உள்ளுக்குள் சிரித்துக் கொண்டாள்." என்னும் செய்திகளின் வாயிலாக உணருவதைக் காணலாம்.

இன்றைய காலத்தில் எல்லா அரசு மற்றும் தனியார் பேருந்துகளில் நடத்துனரின் செயல்பாடு 'மோதல்' கதையில் வருவது போல நிகழ்வுகளும் பார்க்க முடிகிறது. காரணம் பயணிகளின் போக்கு, சீட் இருக்கு என்று சொல்லி ஆள் ஏற்றுவதும், ஏறியபிறகு இல்லை என்பதும், கேள்விக் கேட்டால் சண்டைப் போடுவதும், சில்லறைக் காசுக்கேட்டால் அதற்கும் சண்டையிடுவதும் போன்ற நிகழ்வுகள் மனித நேயமில்லாத உறவினைச் சுட்டிக்காட்டுவதாக அமைகிறது. மேலும்," ஒர் இடம் இல்லாமலா கொடுக்கலாம் என்று கூறினான்.

இந்த யுக்தி அதிகப் பயணிகளை ஏற்றுவதற்காக என்று தினசரி வருகிறவர்களுக்குத் தெரியும். "இடம் இருக்கு தருகிறேன்" என்று சொன்னபின்புதான் அவள் எங்கள் பின்னால் பஸ்சில் ஏறினாள். ஆனால், இருக்கைப் பற்றிய எண்ணமேயன்றி கண்டக்டர் டிக்கெட்டை அவளிடம் கொடுத்த போது தனக்கு உட்கார இடம் கேட்டாள். உடனே அவன்.' என்ன? என் இடத்தைக் கொண்டுவிட்டு நான் நிக்கணுமா? என்ன நினைச்சி ஏறுறீங்க? கண்டக்டர் நின்னுட்டே சாகணுமா? காலங்காத்தாலே எழுந்து வேலைக்கு வந்தா ஒரே கரைச்சலாப் போச்சி" என்று கத்தினான்." என்னும் செய்திகளின் வாயிலாகப் பெண்ணை அவமானப்படுத்தும் செயலாக அமைந்தது.

'திறக்காத பக்கங்கள்' எனும் கதையில் 'சுகன்யா' என்ற பெண்ணைப் பல காரணங்கள் கூறி முதலிரவு நடத்தவிடாமல் துன்பப்படுத்தும் ஆண்சமூகமும், குடும்பத்தில் வயது முதிர்ந்த பெண்களும் செய்யும் செயல்களை நோக்கினால் மனம் குமுறுவதையும், சமூகத்தில் மிகவும் மோசமான மனநிலையில் உள்ளவர்ளை அடையாளம் காணமுடிகிறது.

ஒரு மாதமாகிவிட்டது கடிதம் வந்தது ஆள் வரவில்லை. சாந்திமுகூர்த்தம்; முடியாமல் மனைவி வீட்டுக்குப் போவது அவ்வளவு சரியில்லை என்றாளாம் அவனின் தாய். சுகன்யா ஒன்றும் விவரம் தெரியாதவளில்லை. எனக்கு இங்கு இருக்க முடியாது. அங்கே வருகிறேன்." என்றுகடிதமெழுதி விட்டு ஒருநாள் கிளம்பியே விட்டாள்.

உண்மை என்னவென்றால் இங்கே கேட்பவர்கள் கேள்விகளுக்குப் பதில் சொல்ல முடியாமல் போனதுதான். இதெல்லாம் சகஜம். சுற்றியிருப்பவர்களால்தான் இந்த நினைப்பை மறக்க முடியவில்லை. சம்பந்திகளை விட வேலைக்கரரர்கள்கூட என்ன சுகன்யாம்மா? கணவன் வீட்டுக்கு எப்பப் போறீங்க?" எனக் கேட்டும்போது வீட்டிலுள்ள அனைவருக்கும் சங்கடமாயிருக்கும்" என்பதின் வாயிலாகத் தெளியலாம். இவ்வாறு கன்னடமொழிபெயர்ப்புச் சிறுகதைத் தொகுப்பான'கிரவுஞ்சப் பட்சிகள்' என்பதின் வாயிலாகப் பெண்களின் அவலங்கள் நிறைந்துள்ளதை அறியமுடிகிறது,

# தமிழ் புதினங்களில் இடம்பெயர்ச்சியும் பெண்களும்

புஷ்பவள்ளி. ப
முனைவர் பட்ட ஆய்வாளர், இந்திய மொழிகள், ஒப்பிலக்கியப்பள்ளி,
தமிழ்ப்பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

'தாய்நாடு' என்று பெண்மையை முன்னிலைப்படுத்திச் சிறப்புச் செய்வது நம் தேசம். தமிழ்த்தென்றல் திரு.வி.க. அவர்கள் பெரும்பாலான கையெழுத்துச் சுவடிகளில் 'பெண்மை, தாய்மை, இறைமை, நம்நாட்டு செல்வம்' என்று பெண்மையைப் போற்றியதை இலக்கியங்கள் வழியாக நாம் அறியலாம். காப்பியக் கண்ணகியைப் பத்தினித் தெய்வமாகவும், புனிதயாத்திரை (காரைக்காலம்மையார்) வழிபடு தெய்வமாகவும் அருந்ததியை (விண்மீன்) கற்புக் கடவுளாகவும் போற்றி வருகிறோம். வாழ்வாங்கு வாழ்ந்து வையகம் போற்றும் பெண்டிர், தமிழினத்திற்கு என்றும் பெருமை சேர்த்துள்ளனர்.

அத்தகு சிறப்புமிகு பெண்மை, கடந்த நூற்றாண்டுகளைக் காட்டிலும் தற்காலச் சூழலில் தம் பங்கினைச் சிறப்புற நல்கி, வளர்ச்சியை நோக்கி முன்னேறிக் கொண்டிருப்பதைக் காணலாம். அவர்களின் சிந்தனைகள் வீட்டிற்குள்ளேயே முடக்கப்பட்ட நிலையினின்று மீண்டு வெளியுலகில் ஆக்கச் செயல்களில் ஈடுபட்டு சாதித்து வருவதைக் காணமுடிகிறது. கல்வி, கலை, கலாச்சாரம், பழக்கவழக்கங்கள், ஆன்மீகம், அரசியல், பொது வாழ்க்கை, விஞ்ஞானம், இல்லறம் ஆகிய அனைத்திலும் பெண்களின் பங்களிப்பு வியத்தகு அளவில் சிறப்புற்றிருப்பதை அறியமுடிகிறது. மகளிரின் இத்தகு வளர்ச்சிப் பின்னணியில் பல்வேறு இயக்கங்களும், சமூக சீர்திருத்தவாதிகளும், சட்டங்களும் இருந்துள்ளதை வரலாற்றின் வழி அறியமுடிகிறது.

இத்தகைய சிறப்பு வாய்ந்த பெண்களின் பங்கை வாழ்வின் வளமைக்காக ஒரு இடத்தை விட்டு மற்றொரு இடத்திற்கு இடம்பெயரும் வாழ்வை மையமிட்ட புதினமான வைரமுத்துவின் கள்ளிக்காட்டு இதிகாசம், சூரியகாந்தனின் பூர்வீக பூமி, சு. தமிழ்செல்வியின் கீதாரி முன்னிறுத்தி ஆய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

### இடப்பெயர்ச்சி

இடப்பெயர்ச்சி என்பது மனிதன் தேவைக்கருதி ஓர் இடத்தை விட்டு மற்றொரு இடத்திற்குத் தற்காலிகமாகவோ, நிரந்தரமாகவோ வாழ்வை வளப்படுத்திக் கொள்ளச் செல்வதாகும். நாடோடி வாழ்வை வாழ்ந்த மனிதன் வளமான பகுதிகளில், தன் குடியிருப்பை அமைத்து, நிலைத்த வாழ்வை ஏற்படுத்தினான். ஆனாலும், மனிதன் நாடோடிப் பண்பை மாற்றிக்கொள்ள இயலவில்லை. மனிதன் சூழ்நிலைக்கு உட்பட்டவன். "தனிமனிதனோ, சிறுகூட்டம் ஒன்றோ தம் இருப்பிடத்தை நிலையான ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு மாற்றிச் செல்வதை இடப்பெயர்வு (*Migration*) என்பர். ஒரு நாடுவிட்டு பிற நாட்டிற்கு குடிப்பெயர்வு, நிலையான நோக்கத்துடன் குடிப்பெயர்வது (*Permenent movement*) உள்நாட்டில் இடப்பெயர்வது, குறிப்பிட்ட தொலைவு இடம்பெயர்வு ஆகியவையும் இடப்பெயர்வில் அடங்கும்" என்று வாழ்வியற்களஞ்சியம் குறிப்பிடுகிறது. இடம்பெயர்ந்து செல்வதற்குக் காரணங்கள் பல இருக்கும் தொலைவு முக்கியமல்ல என்பது மதிப்பிடத்தக் கதாகும்.

### குடும்பத்தில் பெண்கள்

பெண்களின் நிலை வீட்டிற்குள்ளேயே முடக்கப்பட்ட நிலையை மாற்ற வேண்டும். அவர்களின் சிந்தனை வெளியுலகிலும் தொடர வேண்டும் என்று குரல் கொடுத்த முக்கியமானவர்களில் பாரதியாரும் ஒருவர். குடும்ப அமைப்பில் ஆணுக்குப் பெண் அடிமை என்ற நிலையை மாற்ற விரும்பினார். அதுவரை நம் தேசம் கண்டிராத புதுமைப் பெண்களைக் காணவிரும்பினார்.

**"ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்வதால்**
**அறிவு லோங்கி இவ்வையப் தழைக்குமாம்"**

(பாரதியார் கவிதைகள், ப.580)

என்று வலியுறுத்தியவர்.

**"பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்**
**பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்"** (பாரதியார் கவிதைகள், ப.579)

என்று பெண்களின் கல்வி வளர்ச்சி பற்றியும் குரல் கொடுத்தவர் பாரதியார் ஆவார். நிவேதா தேவியையும், திலகரையும் தம் வாழ்வியல் குருவாகவும் அரசியல் குருவாகவும் ஏற்றவர். பெண்மையை போற்றிய பாரதியின் வாழ்விலும் பெண்ணானவள் முக்கிய பங்கு வகிக்கிறாள்.

### பாரதிதாசன்

தம் கருத்துக்களைப் புரட்சி சிந்தனையாக வெளியிட்ட இவர்,

**"பெண்ணடிமை தீருமட்டும் பேசுந் திருநாட்டும்**
**மண்ணடிமை தீர்ந்து வருதல் முயற்கொம்பே"**

(பாரதிதாசன் கவிதைகள், ப.195)

என்று பெண்ணடிமையின் தீங்கை வெளிப்படுத்தியுள்ளார். பெண் கல்வியைப் பற்றி அதிகம் சிந்தித்தவர்.

**''கல்வியில் லாத பெண்கள்**
**களர்நிலம்! அந்நிலத்தில்**
**புல்விளைந் திடலாம்; நல்ல**
**புதல்வர்கள் விளைதல் இல்லை**
**கல்வியை உடைய பெண்கள்**
**திருந்திய கழனி அங்கே**
**நல்லறி வுடைய மக்கள்**
**விளைவது நவிலவோ நான்''**

*(பாரதிதாசன் குடும்ப விளக்கு. ப. 69-70)*

*மேற்கண்ட கருத்துக்களின் வழி பெண்கள் நிலை சமூகத்தில் சிறப்பானதாகவும் மதிப்பு மிக்கதாகவும் பார்க்கப்படுவதை அறியமுடிகிறது.*

*குடும்ப அமைப்பின் மேன்மைக்குப் பெண்ணின் பங்கு முக்கியமான ஒன்றாகக் கருதப்படுகிறது. வாழ்வில் மேன்மை அடைய பெண்ணின் ஒத்துழைப்பு மிகவும் அளப்பரியதாகும். மாமியார்-மாமனார்; கணவன்-மனைவி; குழந்தைகள் ஆகிய உறுப்பினர்களைக் கொண்டதாகக் குடும்ப அமைப்பு காணப்படுகிறது. இதில் பெண் குடும்பத்தின் அச்சாணிப் போன்றவள். வாழ்க்கைச் சக்கரம் சூழல அவளின் தேவை அத்தியாவசியமானது.*

*ஆண் குடும்பத்தின் பொறுப்பாளியும் தலைமையும் கொண்டவனாக இருந்தாலும் அவனை வழிநடத்தக்கூடியவளாகப் பெண் திகழ்கிறாள். குடும்பத்தினருக்கு வேண்டிய பணிவிடைகளைச் செய்து நிர்வாகத் திறமைகளைச் சரிவர ஆற்ற பெண்ணின் பங்கு முக்கியமானதாக அமைகிறது. காலங்காலமாகச் சம்பாத்தியம் ஆணின் பொறுப்பு என்ற நிலையை சற்றே மாற்றம் பெற தொடங்கி பெண்களும் வேலை வாய்ப்பிலும் வருமானம் ஈட்டுதல் போன்ற பணிப்பகிர்வும் பணப்பகிர்வும் மேற்கொள்கின்றனர்.*

*ஆணின் பொருள் ஈட்டும் சுமையைப் பெண் பகிரும் அளவுக்குப் பெண்ணின் சமையல் சுமையை ஆண் முழுவதும் பகிரத் தொடங்காத ஒரு சூழல் தற்காலத்தில் காணப்படுகிறது. கல்வியறிவும் பொருளாதார தன்னிறைவும் பெண்கள் ஓரளவு பெற்றிருந்தாலும், பெண்களே பெண்களின் முன்னேற்றத்திற்கு எதிரிகளாக உள்ள நிலைமைகளையும் காணமுடிகிறது. அது வீட்டில் மாமியார், நாத்தனார் என்ற வடிவங்களிலும், அலுவலகங்களில் பணிபுரியும் சக பெண்டிராலும் பல்வேறு இன்னல்களை உருவாவதை காணலாம். உறவுகளை இணைக்கும் இணைப்புச் சங்கிலிகளாக இருக்கும் பெண்கள் மருமகளாக மனைவியாகப் அமைந்து குடும்பத்தை வளப்படுத்தும் வளமைக்குறியீடாக அமைகிறாள்.*

### பெண்களும் மரபுகளும்

**''அச்சமும் நாணமும் முந்துறுத்தல்**
**நிச்சமும் பெண்பாற்குரிய''** *(தொல்.களவி. 96)*

*என்பது பெண்ணிற்கான இலக்கணமாயும்,*

**''பெருமையும் உரனும் ஆடுஉ மேன''** *(தொல்.களவி. 95)*

**வினையே ஆடவர்க்குயிர்''**

**மனையுறை மகளிர்க் கவ்வாடவர் உயிர்''** (குறுந். 135)

என்பவை ஆணிற்கு வகுக்கப்பட்ட இலக்கணமாயும் தமிழ்ச் சமுதாயம் வகுத்துள்ளது. மேலும்,

**''தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்**

**பெய்யெனப் பெய்யும் மழை''** (குறள். 55)

**''எத்திணை மருங்கினும் மகடூஉ**

**மடன்மேல் பொற்புடை நெறிமை இன்மையான்''**

(தொல்.பொருள்.நூ. 981)

எந்தவொரு செயலின் பொருட்டும் கடல்கடந்து செல்லுதல் மகளிர்க்கு வழக்கமில்லை. (மூந்நீர் வழக்கம் மகடூவோடு இல்லை) இவ்வாறாகப் பெண்கள் மீதான மதிப்பு மரபுவழி கொண்டதாக அமைந்தாலும் பெண்களின் நிலை பெண் தற்காலத்தில் அனைத்து துறைகளிலும் கடல்கடந்து செல்லக்கூடிய ஒரு சூழலைக் காணமுடிகிறது. 'பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும் பாரினில் நிகழ்த்த வந்தோம்' என்ற வரிகளுக்கு ஏற்ப பெண்கள் அனைத்துத் துறைகளிலும் தற்போது சிறந்து விளங்குவதைக் காணமுடிகிறது.

பெண்கள் தன் திறமைகளைப் பல்வேறு விதமாக வெளிப்படுத்தினாலும் குடும்பம், சமூகம் என்ற கட்டுக்குள் இன்னும் சிக்குண்டுதான் இருக்கின்றனர். திருமணத்திற்குப் பிறகான வாழ்க்கையில் பெண் தன்னுடைய குடும்பத்தையும், தன்னைச் சார்ந்த சமூகத்தையும் சார்ந்து வாழ வேண்டிய சூழலுக்கு உட்படுகிறாள்.

**''தற்காத்து தற்கொண்டான் பேணித் தகை சான்ற**

**சொற்காத்துச் சோர்விலாள் பெண்''** (குறள்-56)

**''மனைத்தக்க மாண்புடையன் ஆகித்தற் கொண்டான்**

**வளத்தக்காள் வாழ்க்கைத்துணை ''** (குறள் -51)

என்ற குறளின் வரிகளுக்கு ஏற்ப தன் குடும்பத்தையும் கணவனையும் பேணிக்காப்பதில் பெண்ணிற்கு அதிக பங்கு உண்டு. தன்னுடைய குடும்ப வருமானத்திற்கும், சூழலுக்கும் ஏற்ப வாழக்கூடிய கற்றாழைப் போன்றவள் பெண். கற்றாழை எந்தச் சூழலில் நட்டுவைத்தாலும் வளர்ந்துவிடும். வாழ்க்கை பிழைப்பிற்காகச் செல்லும் தன் கணவனின் சூழலைத் தனது வாழ்க்கையாகவும், சூழலாகவும் பார்க்கும் நிலை புதினங்களில் கட்டமைக்கப்பட்டிருக்கிறது. இவ்வாறான பெண்களின் பங்கு இடம்பெயர்தல் வாழ்வில் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது என்பதைப் பின்வருமாறு புதினங்களின் வழி ஆராயப்படுகிறது.

## முருகாயி (கள்ளிக்காட்டு இதிகாசம்)

கள்ளிக்காட்டு இதிகாசம் நாவலில் துணை பெண்பால் பாத்திரமாக அமைந்தது முருகாயி. பேயத்தேவரின் பதினெட்டாவது வயதில் மயில் கழுத்து நிற பாவாடைக் கட்டி பச்சை தாவணியுமாக முருகாயி நிற்கிறாள். முடிவெட்டும் தொழில் செய்யக்கூடிய குடும்பத்தில் பிறந்தவள் முருகாயி. அவள் மீது பேயத்தேவருக்குக் காதல் ஏற்படுகிறது.

ஒரு முறை ஊர் பொதுக்கிணற்றில் முருகாயிக்காகப் பேயத்தேவர் தண்ணீர் எடுத்துக் கொடுத்ததற்காகப் பஞ்சாயத்துக்கூடி பேயத்தேவரைத் தண்டிக்கிறது. ஊரில் உள்ள அனைவரும் பேயத்தேவரையும் முருகாயியையும் பற்றி தவறாகப் பேசுகிறார்கள் இருவருக்கும் காதல் தீவிரமாகிறது. முருகாயி குடும்பம் ஊரை விட்டு வெளியேறி விடுகிறது. அவருக்கு வேறு ஒருவருடன் திருமணம் முடிந்து அவரும் இறந்துவிட தாய் தந்தையிடம் தஞ்சம் அடைகிறாள் முருகாயி. அவளது தந்தை வெள்ளையனும் தாய் மாரியம்மாளும் இறந்துவிடுகின்றனர்.

அனாதையாக நின்ற முருகாயியை அழைத்துக் கொண்டு வந்து தன் மனைவி அழகம்மாளிடம் ஒப்படைக்கிறார் பேயத்தேவர். முருகாயியைப் பேயத்தேவரின் மகள்கள் பேரப்பிள்ளைகளைப் பராமரிப்பது மட்டுமல்லாமல் விவசாயத் தொழிலுக்கு உதவி செய்துகொண்டு அவரது வீட்டிலேயே தங்கவைக்கிறார். முருகாயி கதாப்பாத்திரம் கள்ளிக்காட்டு இதிகாசம் புதினத்தில் துணைநிலை கதாப்பாத்திரமாக இருப்பினும் கதையை நகர்த்திச் செல்ல முக்கியமானதாக அமைவதோடு முதனிலை கதாபாத்திரமான பேயத்தேவரின் நற்பண்பை எடுத்தியம்பும் பாத்திரமாக அமைகிறது எனலாம். பேயத்தேவரின் இடப்பெயர்வு வாழ்வில் முருகாயி மிகவும் முக்கிய பங்குவகிக்கிறாள். வாழ்வின் அனைத்து நிலைகளிலும் உடன் பயணிப்பவளாக அமைகிறாள். பெண் தன்னுடைய நிலை தாழ்ந்தபோதும் தன்னைச் சுற்றி இருப்பவர் நலனில் அக்கறை உடையவளாகப் படைக்கப்பட்டிருக்கிறாள்.

### பொன்னம்மாள்

சூர்யகாந்தனின் ‘பூர்வீக பூமி’ புதினத்தில் கோவையில் இருந்து மைசூர் செல்லும் பழனியப்பனின் மனைவி பொன்னம்மாள் கணவனுக்குச் சரிசமமாக உழைக்கும் பெண்ணாகப் படைக்கப்பட்டிருக்கிறாள். கணவன் மைசூருக்குப் பிழைப்புத்தேடி செல்ல நினைத்தவுடன் எந்தவித மறுப்பும் கூறாமல் தானும் தனது சிறு குழந்தைகளான சரஸ்வதி, கலாமணி ஆகிய இரு குழந்தைகளையும் தன்னுடைய தாய்த் தந்தையிடம் விட்டுவிட்டு மைசூர் செல்லத் தயாராகிறாள். அங்குச் சென்று கணவனுக்கு அனைத்து விதங்களிலும் ஒத்துழைப்பு கொடுக்கும் விவசாயப் பெண்மணியாக

**’’தற்காத்து தற்கொண்டாள் பேணி தகைசான்ற**
**சொல்காத்து சோர்விலாள் பெண்’’** (குறள்-56)

என்ற திருக்குறள் வரிகளுக்கு இலக்கணமாகத் திகழ்கிறாள். மற்றவர்களின் முன் தன் கணவனைப் தாழ்ந்து செல்வதைப் பிடிக்காத ஒரு பெண்ணாக விளங்குகிறாள். "அன்றைய வேலைகளைச் செய்து முடித்த பின்போ அல்லது வெளியிடங்களுக்குச் சென்று சொன்ன வேலைகளை முடித்துவிட்டு வந்த பின்போ நஞ்சப்பனிடம் கைகட்டி நின்று கூலியாட்களைப் போல் இவர்கள் இருவரும் கணக்கு ஒப்புவிக்கும் கோலத்தைப் பொன்னம்மா வருத்தத் தோடும் கோபத்தோடும் பார்த்து வருபவளாக அமைகிறாள்." (சூர்யகாந்தன், பூர்வீக பூமி, ப. 52)

பெண்ணானவள் புகுந்த வீட்டிற்கு வந்த பிறகு தான் எவ்வளவு வறுமையில் வாழ்ந்தாலும் தன் கணவனை என்று மற்றவர் முன்னிலையில் அவமானப்படவோ,

தாழ்த்தவோ விடமாட்டாள். தன் குடும்ப நலனிலும் கணவர், குழந்தைகள் என்ற நிலையில் பலமடங்கு உயர்வுக்காக உழைப்பவளாக, அதேநேரத்தில் தன் சொந்த வீட்டையும் விட்டுக் கொடுக்காத ஒரு பெண்ணாகப் பழனியம்மாள் திகழ்கிறாள்.

"தன் பூர்வீகத்தை விட்டுவிட முடியாமலும், இங்கிருந்து மீண்டு மறுபடியும் அங்கேயே போய்விட முடியாமலும் சிக்குண்டு பிழியப்பட்டதன் விளைவுதான் இவளை இப்படித் துரும்பாக இளைக்கப் பண்ணிவிட்டது. ஆனாலும் வைராக்கியத்தோடு உழைத்துக் கொண்டிருந்தாள்."

பெண்களுக்கு எப்பொழுதுமே தன்னுடைய குடும்ப வாழ்வில் அதிக் அக்கறை உண்டு. தன் சொந்த இடத்தைவிட மேன்மையான ஒரு வாழ்க்கை அமைகிறது என்றால் அதற்கு முன் நிற்பவளாகப் பெண் அமைகிறாள். அதனால் தான் பெண் ‘குடும்ப விளக்கு’ என்று பாரதிதாசன் குறிப்பிடுகிறார். பழனியப்பன் வாழ்வில் பொன்னம்மாளின் பங்கு அளவிடற்கரியது.

**கரிச்சா**

சு.தமிழ்ச்செல்வியின் ‘கீதாரி’ புதினத்தில் நாடோடிகளைப் போல ஊர் ஊராகச் செல்லும் கீதாரிகள், வாழ்க்கையில் கரிச்சா என்ற பெண்ணின் பங்கு மிகவும் முக்கியமான ஒன்றாகக் கருதப்படுகிறது. தன் கூடவே வளர்ந்த இராமு கீதாரியின் வளர்ப்பு மகன் வெள்ளைச்சாமியைத் திருமணம் செய்துகொள்கிறாள் கரிச்சா. திருமணத்திற்கு முன்பே வெள்ளைச்சாமியைச் சித்தப்பா என்று கூறிக்கொண்டிருந்த கரிச்சா பின் வயதுக்கு வந்த (பூப்படைந்த) பிறகு வெள்ளைச்சாமி உடனே தங்கும் சூழலிலும் தன்னுடைய கற்பு மாறாத பெண்ணாக இருக்கிறாள். வெள்ளைச்சாமியுடன் இருப்பதாலே அவளுக்குத் திருமணம் தடைப்படுகிறது. பெண் பார்க்க வந்தவர்கள்,

"கம்முனாட்டி வளர்த்த பொண்ணாருந்தாலே தீட்டுத் துணிய பாத்துப்புட்டுதான் முடிவச் சொல்லுவம். இந்தப் பெண்ணு வயசிக்கி வந்த பிற்பாடும் பொம்புலி தொணயிரலாம் வயச்சிப்பயகொட தனியாருந்துருக்கு. எப்படி நாங்க நம்புறது? அவம்புள்ளய வயத்துவ வச்சிக்கிட்டு யாம் மயங்கிட்ட தாலிய கட்டிக்கிட்டுன்னு வச்சிக்கிடுங்க யாருக்குத் தெரியும்? ஒரு மாசம் முந்திபிந்தி ஆனாலும் ஆவட்டும் குளிக்கிற கெடுவுல சொல்லிவுடுங்க ஆம் பொண்டாட்டிய வரச்சொல்லுரேன். தீட்டுத்துணிய பாத்துட்டுத்தான் சம்மதத்தச் சொல்லுவம்" என்று கரிச்சா மீதான சந்தேகம் வந்தபடியான பேச்சு வளர்ப்பு தந்தையான இராமு கீதாரிக்குப் பிடிக்காது வெள்ளைச்சாமியையே கட்டிவைக்க முடிவு செய்கிறார்.

ஆனால் வெள்ளைச்சாமி ஆட்டுக்கிடை போட வெளியூர் சென்றிருந்த காரணத்தால் அவன் வைத்திருக்கும் தடிக்கம்புக் கொண்டு திருமணம் செய்து கொள்கிறாள். இந்த காலத்தில் பெண்கள் திருமணம் நிச்சயிக்கப்பட்டு வருடகணக்கில் பேசி பழகிய பிறகே திருமணம் செய்துகொள்கின்றனர். இராமு கீதாரி சொன்ன உடனே வெள்ளைச்சாமி வராமலே தடிகம்புக்குத் தாலிக்கட்டிக்கொண்ட கரிச்சா கீதாரியின் வாழ்வில் ஒரு முக்கிய பங்காக அமைகிறாள். கீதாரியுடனான வெள்ளைச்சாமி வாழ்வில் கரிச்சா இறுதியாக

இறந்துவிடுகிறாள். இடம்பெயர்ந்து வாழும் கீதாரி வாழ்க்கையில் கரிச்சாவின் பங்கு மிகவும் போற்றத்தக்கது. எங்கெல்லாம் கிடை அமைக்கிறார்களோ அங்கெல்லாம் தானும் தன்னுடைய சமையல் பாத்திரங்களை எடுத்துக்கொண்டு செல்லும் பெண்களைக் கீதாரி சமூகத்தில் காணமுடிகிறது.

**முடிவுரை**

பெண்களின் எதிர்காலம் பற்றிய எதிர்பார்ப்பு என்பது மிகவும் நுட்பமானது. எதிர்காலத் திட்டமிடல் ஆண்களை விட பெண்கள் மிக ஆழமாகவும், வளமாகவும் சிந்திக்கக் கூடியவர்கள். அந்த வகையில் வாழ்க்கையின் சில துன்பங்களையும், துயரங்களையும் மறந்து புதிய எதிர்பார்ப்புடன் செல்லும்போது அந்த இடம் எதிர்ப்பார்ப்பிற்கேற்ப அமைய வில்லை என்றால் வாழ்க்கையில் பலவித ஏமாற்றங்களைச் சந்திக்க வேண்டியுள்ளது. இத்தகைய சூழலிலும் பெண் தன்னுடைய வாழ்க்கையில் வளமை ஏற்படவும் குடும்பத்தின் முன்னேற்றத்திற்கு துணை நிற்பவளாக அமைகிறாள் என்பதை இவ்வாய்வின் மூலம் அறியலாம்.

# உதயணன் பார்வையில் பெண்ணியம்

ப. இராகவி
உதவிப்பேராசிரியர் (தமிழ்த்துறை),
பான்செக்கர்ஸ் மகளிர் கல்லூரி, தஞ்சாவூர்.

உதயண குமார காவியமானது ஐஞ்சிறுங்காப்பியங்களில் ஒன்றாகும். இக்காப்பியத்தின் நாயகன் உதயணன் ஆவார். ஆணாதிக்கம் தலைதூக்கியிருந்த காலகட்டத்தில் காப்பியங்கள் எழுதப் பெற்றன என்பதை நம்மால் மறுக்க இயலாது. எனினும் பல்வேறு காப்பியப்படைப்புகளில் பெண் பாத்திரங்களும் உரிய நிலையில் காப்பிய சுவைக்காகவும், காப்பிய நடப்பிற்காகவும் இணைக்கப் பெற்றுள்ளன. அவ்வகையில் பெண்ணிய வாசிப்பை மையப்படுத்தி எழுந்த காப்பியங்களில் ஒன்றான உதயணகுமாரகாவியம் பெண்ணை முதன்மைப் பாத்திரமாகப் பாவித்துப்பதிவு செய்துள்ளது. இக்காப்பியத்தில் இடம் பெறும் பெண் பாத்திரங்களான வாசவத்தை, பதுமாவதி, மானனீகை, விரிசிகை, சாங்கியத்தாய் ஆகியோரின் நடப்புகள், அவர்களின் பண்புகள், அவர்கள் சித்தரிக்கப்பட்ட விதங்கள் ஆகியவை பெண் சமுதாய இயல்புகளை நாம் எளிதில் அறிந்து கொள்ளும் வகையில் இக்கட்டுரையானது அமைகிறது. இதனை விரிவாகக் காணலாம்.

**வாசவதத்தை:**

இவள் உதயணின் முதல் பட்டத்துத்தேவி. அழகிலும், குணத்திலும் சிறந்தவள். பெண் பாலர்குரிய கலைகளில் மிகப் பயிற்சியுள்ளவள். யாழிசை, மாலை தொடுத்தல், சிற்பவேலை ஆகியவற்றில் இவளுக்கு மிகுந்த பயிற்சியுண்டு. இவைத் தவிர, கலை ஈடுபாடு, காதல் வாழ்வு, அதிகார உணர்வு ஆகியவற்றின் அடையாளமாக விளங்கியவள். உதயணனிடம் யாழ் கற்றுக்கொண்டிருக்கும்போது, அவனிடம் காதல்மிக்குண்டவள்.

" வேந்தன்தன்மக்கட்கெல்லாம்
வேல்முல்பயிற்றுவித்தும்"

என்ற பாடலில் வாசவதத்தை அறிமுகமாகின்றாள். பந்துகில் உடுத்திய இடையை உடையவள். கயல் மீன்களைப் போன்ற கண்களைக் கொண்டவள், மூங்கில் போன்ற தோளினை உடையவள் என்ற நிலையில் அழகு சார்ந்து வாசவதத்தை அறிமுகப்படுத்தப்படுகிறாள். இவளின் அறிமுகம் தன் உடன் பிறந்த ஆண் பிள்ளைகளின் அறிமுகத்தைக் காட்டிலும் வேறுபட்டது என்பது இப்பாடலின் முன்னிரண்டு அடிகளைக் கண்டாலே தெரிய வருகிறது. வேந்தன் தன்மக்கட்கெல்லாம் என்று ஒரே அடியில் அழகு, கவர்ச்சி முதலியன இல்லாமல் மகன்கள் அறிமுகமாகின்றனர். ஆனால் மகள் அழகுடன் அறிமுகமாகின்றாள். அச்சமயம் வேற்றரசர் அவளை மணம் பேசி வருகின்றனர். மன்னன் அவர்களை ஏற்றுக் கொள்ளாமலும் எடுத்தெறியாமலும் இருந்து வந்தான். வந்தவர்கள் எல்லாரும் தத்தையைத் தமக்கே தருவான் என்று எதிர்பார்த்து, ஏங்கிக் கொண்டிருந்தனர். இதனைச் சாங்கியத்தாய் அறிந்ததும், வாசவதத்தையின் உள்ளத்தைத் தெரிந்து கொள்ள விரும்பி, நடப்பதைக் கூறினாள். அவளோ பொறியற்றபாவை போலக் கலங்கி, உடல் நடுங்கி விம்மி அழுதாள். அம்மா நீ கூறுவது உண்மையானால், அச்செயலை என்தந்தை, உயிர் வாழ்கின்ற ஏனைய மகளிரிடையே செய்ய வேண்டும். யானோ மெல்லிய ஆடையால் தூக்கிட்டுக் கொண்டு இறந்து போவேன்' என்று அரற்றி, அறுபட்ட மாலையில் முத்துகள் சிதறுவது போன்று அவள் கண்ணீர்த் துளிகளைச் சிதறினாள் என்றும் கூறப்படுகிறது. ஆகவே வாசவதத்தை உதயணனிடம் காதல் கொண்ட நிலையில் வேறொருவருக்கு மணம் என்று பேச்சுப்படின் உயிர் வாழமாட்டேன் என்று அன்பு மிகுந்தவளாகப் பழிக்கு நாணுபவளாக விளங்கியவள் என்பது குறிப்பிடத்தக்கது.

**''வென்றிவேல் கண்ணினாளும் வெகுண்டரை செப்புகின்றாள்**
**கன்றியகாமம் வேண்டாக்காவல போகஎன்றாள்.''**

என்ற நிலையில் ஊடல் கொண்டு உதயணின் மற்றொரு பெண்ணிடத்துள்ள காதலைக் கடிந்துரைக்கிறாள். இந்த ஊடலும் உதயணனால் தணிவிக்கப்படுகிறது. இதன் காரணமாக ஊடுதல் என்பது பின்னால் கூடுவதற்கான வழி என்ற மரபு இங்கு பின்பற்றப்பட்டுள்ளது என்பது தெரிய வருகின்றது. இது போன்று மானனீகை என்ற பந்தாடும் கலைவல்ல பெண்ணை மணக்கும் போதும் அவள் ஊடுகிறாள்.

**''பிடிமிசைமாதர்போந்துபெருமணக்கோயில்புக்கார்**
**கடிமலர்க்கோதைமன்னன்காவிநன்விழிமானனீகை**
**இடிமின்னிநுசப்பினாளைஇன்புறப்புணர்ந்திருப்பத்**
**துடியிடைத்தத்தைகேட்டுத்தோற்றியசீற்றத்ததானாள்''**

என்ற பாடலில் மீளவும் வாசவதத்தை ஊடுகிறாள். மீண்டும் அவளின் ஊடல் தணிவிக்கப்படுகிறது. பின்பு ஒரு மகனைச் சுமந்த நிலையில் வான்வெளியில் பறக்கும் ஆசை வாசவதத்தைக்கு வருகின்றது. அதனையும் விருப்பத்துடன் முடித்து வைக்கிறான் உதயணன். பின்னாளில் தன் மகன் நாரவாகனன் காந்தருவலோகத்தைத் திறமுடன் ஆளவழி செய்து அமைதியடைகிறாள் வாசவதத்தை. இவளுக்கு ஊடலும் மறுப்பும் உதயணனால் மாற்றுவிக்கும் அளவிற்கு எளிமை உடையன. ஆனால் உதயணன் திருமணம் செய்து கொண்ட பெண்கள் வாசவதத்தையுடன் வாழ்க்கையைப் பகிர்ந்து கொண்டவர்கள் என்பது இங்குக் கருதத்தக்கது.

**பதுமாவதி:**

இவள் தருசக அரசனின் தாயின் சகோதரி உதயையோடையின் மகள். தந்தை காசிராசன். இவளைத் தருசகனின் தாய்வளர்த்து வந்தாள். தருசகன் தங்கை என்று கூறப்பட்டவள். கல்விகேள்விகளில் சிறந்தவள். தனக்கு அனுகூலத்தையே தேடுபவள். இவளின் பெயர் பதுமை, பதுமாவதி எனவும் வழங்கப் பெறும் என்பர். மேலும், அவள் காதல் ஓவியமாக விளங்கினாள்.

**''பருவமிக் கிலங்கும் கோதைப் பதுமைதேர் ஏறிவந்து**
**பொருவில் காமனையே காணப்புர வலன்கண்டு கந்து**
**மருவும் வாசவதத்தைத் தான்வந்தனள் என்றுரைப்பத்**
**திருநகர் மாதும்கண்டு திகைத்துளம் கவன்று நின்றாள்''**

என்ற இப்பாடலில் பதுமாபதி அறிமகமாகின்றாள். பார்ப்பதற்கு அவள் வாசவதத்தைப் போல இருப்பதாக உதயணன் மனம் எண்ணுகின்றது. இருப்பினும் வாசவதத்தைக்கும், பதுமாவதிக்கும் வேறுபாடு இருப்பதாகச் சுட்டி அவ்வேறுபாட்டை வாசவதத்தையின் ஊடல் தீர்க்கும் நேரத்தில் எடுத்துரைக்கிறான்.

**''ஊடியதேவி தன்னை உணர்விலும் ஒளியினாலும்**
**நாடினின் றனக்கன் னாடாநந் தினையல்லள் என்றான்''**

என்ற பாடலில் வாசவதத்தைப் பத்மாபதியைவிடச் சிறந்தவள் என்கிறான் உதயணன். பெண்களின் அணுக்கம் வேண்டிய போது வேண்டிய அளவில் ஏற்றியும் இறக்கியும் சொல்வது ஆண்களின் இயல்பு என்றும் அதனை நம்பி ஏமாறுவது பெண்களின் தன்மை என்றும் இதன் வழி அறிய முடிகின்றது. இதற்குப் பின்பு வாசவதத்தைபோல் தானும் உதயணனிடம் யாழ் கற்றுக் கொள்ள வேண்டும் என்று எண்ணுகிறாள் பதுமாவதி. பணியும் உள்ளம் கொண்டவள். இராஜமாதாவாகும் சிறப்பினைப் பெற்றவள். ஆதலால் இவள் உதயணின் இரண்டாவது பட்டத்துத் தேவியாகிறாள். அன்பிலும் பண்பிலும் உயர்ந்தோங்கியவள் என்பது அறியக் கிடக்கின்றது.

**மானனீகை:**

கோசலத்து அரசன் மகளான இவளின் இயற்பெயர் வாசவதத்தை தாய்வ சுந்தரி பாஞ்சாலராசன், கோசலத்தரசனை வென்று அவனது அந்தப்புரத்திலிருந்து கவர்ந்த சென்ற மங்கையர்களுள் இவளும் ஒருத்தி. பிறகு அவன் பட்டத்துத் தேவியின் பணிப் பெண்ணாக இருந்த போது, அவனைக் கொன்ற உதயணன் கொண்டு வந்த மகளிரோடு இவளும் கொண்டு வரப்பட்டு வாசவதத்தையின் பணிப் பெண்ணாக இருந்தவள். ஒருநாள் வாசவதத்தையின் இருப்பிடத்தில் பந்தாடும் போட்டி நடைபெற்றது. அதில் ஆரியை என்ற பெண் மூவாயிரம் பந்துக்ளை இட்டு அவற்றைக் கொண்டுப் பந்தாடினாள். இதனைவிடயார் நன்றாக ஆடமுடியும் என்ற எண்ணம் அவள் மனதில் இருந்தது. இவளைத் தோற்கடித்த எண்ணிவாசவதத்தைதன் தோழியரைப் பார்த்தாள். அவளின் தோழிகளுள் ஒருத்தி மானனீகை. அவள் இப்போட்டியில் கலந்து கொள்ள முன்வந்தாள்.

**''ஒருவரும் ஏற்பார்இன் றியோர்ந்து அவள்நெஞ்சம் கூர்ந்து**
**திருநுதல் மாதுநொந்து சிறப்பின்றி இருந்த போழ்தின்**
**மருவுகோ சலத்து மன்னன் மகளுவ வரிவைநாமம்**
**சுரிகுழல் மானனீகை சொலற் கருங்கற் பினாளே''**

என்ற இப்பாடலில் மானனீகை அறிமுகமாகின்றாள். இவளின் பந்தாட்டத்தைக் கண்டு உதயணன் மோகிக்கிறான். உதயணின் உள்ளத்தைப் பந்தாடியவள். அழகு, கலை, பொறமை போன்றவற்றின் உருவமாக விளங்கியவள் என்றும் கூறுவர். ஆகவே இவளும் அரசிக்குரிய பண்புகளைப் பெற்று உதயணனுக்கு மூன்றாவது அரசியாகிறாள் எனக் கருதமுடிகிறது.

**விரிசிகை:**

இவள் இராசரிஷியின் மகள். இளமைப் பருவத்திலேயே உதயணனால் மாலைச் சூட்டப்பெற்றுப்பின்பு அவனால் மணம் செய்து கொள்ளப்பட்டவள். இவளே இரண்டாவதாக மணந்து கொள்ளப்பட்டவள் என்றாலும் இவளை உதயணன் நான்காவது வேள்வி முறைப்படி மணந்து கொள்ளுகின்றான்.

**''தேவியர்மூவர்கூடத்தேர்மன்னன்சேர்ந்துசெல்நாள்**
**காவின்முன்மாலைசூட்டிக்காரிகைகலந்துவிட்ட''**

கற்பில் சிறந்தவள் என்றும் கானகத்தில் மான்களுக்கு இடையில் மானாகவும் மயில்களுக்கிடையில் மயிலாகவும், அன்னங்களுக்கு இடையில் அழகிய அன்னமாகவும் விளங்கிய சகுந்தலை போன்று விரிசிகை விளங்கியவள். மன்னர் மகளாக வாழ்ந்திருக்க வேண்டிய இவள், முனிவர் மகளாகவளர்ந்தாள்.மன்னன் மனைவியா கவாழும்சிறப்பினைப்பெற்று, அன்பு, அமைதி ஆகியவற்றின் மறுஉருவமாக விளங்கியவள் என்றும் கூறப்பட்டுள்ளமையால் துறவிமகள அரசியானாள் என அறியலாகிறது.

**சாங்கியத்தாய்:**

இவளின் இயற்பெயர் தெரிந்திலபார்ப்பனகுலம். கோசம்பி நகரம், இவளின் கணவன் இளமையிலேயே இவளை விட்டு நீங்கியது பற்றி இவளுக்கு ஒழுக்கத்தவறு ஒரு பொழுது உண்டாகியது. அதனால், அதிகாரிகளுடைய கட்டளையால் முனையாற்றில் இவளை வீழ்த்திவிடுவதற்குச் சிலர் கொண்டு செல்வதைக் கண்ட உதயணன், இரங்கி விடுவித்துத்துத் தீர்த்த யாத்திரை செய்யும்படி அனுப்பினாள். அதன்படி இவள் கங்கையாடி இமயமலையில் சென்று இரண்டு ஆண்டுகள் அங்கே தங்கி, அங்குள்ள பெரியோரால் சமயவி கற்பங்களை அறிந்து கன்னியாகுமரியில் நீராடுவதற்கு யாத்திரையாளரோட அங்கிருந்து புறப்பட்டு உஞ்சை நகருக்கு வந்தாள். இவளுடைய கல்வி, அறிவு முதலியவற்றை அறிந்த பிரச்சோதனன் தன் பட்டத்துத் தேவிஸ்ரீமதிக்கு நீதிகள் முதலியவற்றைச் சொல்லும்படி இவளை நியமித்தான்.

**பெண்ணியவாசிப்பில் கதைத்தலைவன் உதயணன்:**

இவன் காப்பிய நாயகன். சதானிகன் - மிருகாபதி ஆகியோரின் மகன். சூரிய உதயத்தின் பொழுது பிறந்தமையால் உதயணன என்னும் பெயர் பெற்றவன். அழகிலும் அறிவிலும் சிறந்தவன். கல்வி, போர்ப் பயிற்சி, இசை முதலிய சிறப்பியல்புகள் பலவற்றாலும் ஒப்பற்று விளங்கியவன். அரசர்க்கு அரசன் ஏகச்செங்கோலினன். இளமைப் பருவத்திலேயே பலவகைக்கலைகளையும் பழம் பிறப்பில் செய்த தவத்தால் முற்றக் கற்றுத் தேர்ந்தோன். யாழ்விச்சையில் வல்லுநன். வில் வித்தையில் சிறந்தவன். அதைக்கற்பித்தலிலும் உயர்ந்தவன். அதனால் ஆசான் தேசிகன் என்னும் சிறப்புப் பெயர் பெற்றவன். யாழ்வீச்சில் சிறந்தவனானாலும் அமைச்சர்களால் நல்வழிப்படுத்தப்படுபவன். விஞ்சை வீரன் என்று புகழப்பட்டவன். கேள்விச்செல்வம் அமையப் பெற்றவன். யானையை அடக்கும் ஆற்றலிலும், யானை இலக்கணத்தை நன்கு அறிதலிலும், யானைப் பேச்சிலும் வல்லவன். யாழிற்குரிய மரங்களின் இயல்பையும் நரம்புகளின் இலக்கணங்களையும் இவன் நன்கு அறிந்தவன். வியக்கவைக்கும்படி கண்ணி கட்டுதலிலும், வாழைக் குருத்தில் நகத்தினால் பொய்கை முதலிய பலவகையான சித்திரங்கள் பொறித்தல் முதலியவற்றிலும் வல்லவன். மந்திர வித்தையிலும் வல்லவன். அறப்போரிலும் மறப்போரிலும் பேராற்றல் உடையவன். வல்வில்லியென்று பாரட்டப்படுபவன்.நன்றியறிவில் சிறந்தவன் எனப்படுகிறது. மேலும், உதயணன் அகமுக ஆளுமை பெற்றவன். தெய்வ அம்சம் பெற்றவன். எளிய உணர்வுகள் கொண்ட விலங்குகளையும் நேசிக்கும் சாதாரண மனிதனாக கலையாற்றல், வீரம், பயணம், முடிவெடுத்தல் போன்றவற்றில் சிறந்தவனா கப்பல சாதியினரையும் தொடர்பு கொண்டவனாகக் கவிஞரால் படைக்கப்பட்டுள்ளான் எனக் கூறப்படுகிறது.

> **''இழந்த தன் நிலத்தையும் எளிமையும் நினைத்திலன்**
> **கழிந்தறமம் மெய் மறந்து கங்குலும் பகல் விடான்''**

என்ற இப்பாடல் உதயணின் காமத்தியல்பை எடுத்துரைப்பதாக உள்ளது. வாசவதத்தையின்பால் ஆறாக்காதல் கொண்டவனாகவும் உதயணன் படைக்கப் பெற்றுள்ளான். உதயணன் தன் மனைவியைக் காணாது வருந்தும் பாத்திரமாகப் படைக்கப் பெற்றுள்ளான். இவ்வளவில் பெண்ணின்பம் நுகர்பவனாகவும் அதற்காக ஏங்குபவனாகவும் உதயணன் பாத்திரம் அமைந்துள்ளது. உதயணகுமார காவியத்தைப் படைத்தவர் யார், அவர் எப்பாலினர் என்று தெரியாத நிலையில் மேற்கண்ட ஆண் சார்புக் கருத்துகளால் உதயணகுமார ஆசிரியர் ஆணாகத்தான் இருப்பார் என்ற முடிவிற்கும் வர முடிகின்றது. மேலும் பெண்களை தன் இச்சைக்கு இசையும் படியும் பாரபட்சமின்றி நான்கு மனைவியரையும் சமமாக நடத்து தலையும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது பெண்களை மதித்து நடத்துதலிலும், அங்கீகாரம் தருவதிலும் எவ்வித குறையும் உதயணன் இழைக்கவில்லை என்பது தெரிய வருகின்றது. அதனால் நான்கு மனைவியலும் ஒரே மாளிகையில் ஒன்றாய் வாழ்ந்தும், இறுதியில் ஒன்றாகவே துறவும் மேற்கொண்டிருப்பர் என்று நம்மால் உறுதி கூற இயலுகிறது.

## உதயணன் மனைவிகளுடன் துறவெய்தல்

துறவு என்பது பற்று அறுத்தல் என்னும் பொருள் உடையது. மனிதன் நிலவுலக வாழ்வினின்று பற்றற விளங்குவதற்குத் துறவே அடிப்படை. அத்துறவே பிறவிப் பிணி நீங்கும் நிலை. ஆதலாலே அறிவுடையோர் மனிதப்பிறவியில் அன்புடனும் அறத்துடனும் வாழ்ந்து துறவை மேற்கொள்வர். துறவை எய்துவரே வீடு பேறடைவர் என்பது சமயமரபு. சமயநெறி மனித வாழ்வில் வாழ்வை நன்கு உணர்ந்த அறிவுடையோர் துறவு நெறியில் ஈடபட்டுப் பிறவியைத் துறக்கின்றனர். இத்தகுதுறவு நெறியைப் பின்பற்றியே உதயணகுமாரகா வியத்தில் உள்ள சதானிகன், விக்ரன். உதயணன், அவனின் தேவியர் நால்வர், அவனின் நண்பர்கள் முதலானோர் ஒழுகினராவர்.

உதயணன்தன் அரசை, தன்புதல்வன் நரவாணனிடம் ஒப்படைத்து மகிழ்ந்து தவமேற்கொள்ள விரும்பி, தன்தேவியர் நால்வரை அழைத்து, யான்அழகிய இம்மனை வாழ்க்கையைத் துறந்துதவ மேற்கொண்டு செல்வேன். ஆகலின் நீவீர் வேண்டுவதுயாது? கூறுமின்? என்ற கேட்க, மின் போன்ற நுண்ணிடையையுடைய அத்தேவிமார் தாமும், புரவலனே! எமக்கும் தவத்தின் மேற்செல்வதெபொருளாகும். ஆகவேநும் முடனே வந்துயாமும் எமக்காகும் குற்றமற்ற சிறந்ததவத்தையே மேற்கொள்வோம் என்று கூறினர். இதில் தேவியர் நால்வரும், அமைச்சர் நால்வரும் (யூகி, உருமண்ணுவா, இடபகன், வயந்தகன்) ஆகிய எண்மரும் உதயணனுடன் சென்று தரும வீரர் என்னும் முனிவர் உறையும் வளமிக்க நல்லமலர்ப் பொழிலைவலமாக வந்துமிக்க அருளைப் பொழிகின்ற அம்முனிவர் திருவடிகளிலே வீழ்ந்து அன்புடன் வணங்கித்த வந்தரவேண்டினர். அம்முனிவர் பெருமானும் இவர்க்குத் துறவறம் உணர்த்தற்குரியகாலமும் இஃதேயாம் என்று துணிந்து, உலகத்தைப் பற்றி உண்டாகும் நன்ஞான மும்நற்காட்சியையும் நல்லொழுக்கம் முதலிய ஒழுக்கத்தையும் சிறப்றவே நன்கு அவர்களுக்கு உணர்த்தினார்.

பிறகு அம்மன்னர் முதலியோர் தவக்கோலம் தாங்கினர். ஆராய்ந்தால் உதயணன் தந்தை போன்றே தவநெறிப் பூண்டான் என்பதும், அவனுக்கு உண்மையாக இருந்து தொண்டு புரிந்ததுணைவியர், அமைச்சர் ஆகியோரும் தவநெறியைப் பின்பற்றினர் என்பதும் குறிபிடத்தக்கதாகும்.

## முடிவுரை:

தமிழன்னையின் அணிகலன்களாகத் தமிழ்க் காப்பியங்கள் விளங்குகின்றன. ஐஞ்சிறுகாப்பியங்களுள் உதயணகுமாரகாவியம் பெருங்கதையின் நிறைகதையாகும். ஆகவே மேற்குறித்த கதைமாந்தர்கள் உதயணகுமாரகாவியத்தில் உதயணனுக்குப் பெரும்பங்காற்றியுள்ளவர்கள் என்பதும், இவனுக்கு ஏற்பட்ட நிமித்தங்களும் நிகழ்வுகளும் இவனின் இன்பவாழ்வுக்குச் சற்றுத்தடைகளைத் தந்து பின்பு அரசன் எனும் நிலைத்த புகழை அடைய வேண்டியும்; பிற்பகுதி வாழ்வில் துறவு நெறிமேற்கொள்வதற்கும் எவ்வாறு பெண்கள் ஆதரவாகவும், தூண்டுகோலாகவும் இருந்தனர் என்பதை அறிந்து கொண்டோம். மேலும் ஆண்களின் சொல்கேட்கும், நடக்கும் சிந்தனை உடையவர்களாகவே இக்காப்பிய

பெண்கள் படைக்கப் பெற்றுள்ளனர் என்பதும் இங்கு பெறப்படும் முடிவுகளுள் ஒன்றாகும். ஆகையால் மற்றக்காப்பியங்களைக் காட்டிலும் இக்காப்பியத்தில் பெண்ணியம் நிறைய ததும்பப் பெற்றுள்ளது என்பதே இக்கட்டுரையின் மூலம் கண்டறியப்பட்ட உண்மையாகும்.

# அகநானூற்றில் மகளிர் தொழில்கள் (மானுடவியல் நோக்கில்)

பா. சத்யா
முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழாய்வுத்துறை,
பிஷப் ஹீபர் கல்லூரி திருச்சிராப்பள்ளி.

வினையே ஆடவர்க்கு உயிரென வினைமேற்கொள்ளல் ஆடவர் கடமையாகக் கூறப்பட்டாலும், சங்க காலத்தில் மகளிரும் தாம் வாழ்ந்த நில இயல்பிற்கு ஏற்ற வகையில் தொழில் செய்துள்ளனர். தம் வாழ்க்கைக்கும் தன் குடும்பத்திற்கும் வேண்டிய பொருளீட்டுவதில் ஆர்வமும், முயற்சியும் உழைப்பும் உடையவராய்ப் பொறுப்புணர்ச்சியுடன் வாழ்த்துள்ளனர்.

குறிஞ்சி முதல் நெய்தல் முதலான ஐவகை நிலங்களிலும் பொருட்களை உற்பத்தி செய்யும் பணியில் பெண்களின் பங்கும் குறிப்பிடத்தக்கதாக இருந்தது. பசும் பாலில் இருந்து கிடைக்கும் பொருள்கள் மட்டுமின்றி, மீன், நெல், உப்பு போன்ற பொருட்களின் விற்பனையில் பெரும்பாலும் பெண்கள் ஈடுபட்டனர். சங்க இலக்கியமான எட்டுத்தொகை அக நூல்களில் பெண்கள் தொழிலில் காட்டும் ஈடுபாடு பற்றியும் வணிக உற்பத்தியில் பெண்களின் பங்கு பற்றியும் மானுடவியல் வாயிலாக இனி விரிவாக காணலாம்.

**வியாபாரம்**

இலக்கியங்களில் உள்ள மகளிர் எந்தந்த இடங்களில் எந்தந்தப் பொருட்களை விற்றால் அதிக லாபம் கிடைக்கும் என்ற வியாபார நுணுக்கத்தைப் பெண்கள் அறிந்திருந்தனர். இளம் பெண்கள் முதல் வயது முதிர்ந்தவர் வரை அனைத்து பருவத்தினரும் வணிகத்தில் ஈடுபட்டிருந்தனர்.

## தினைப்புனம் காத்தல்

*சங்க இலக்கியத்தில் பெண்கள் தினைக் கதிர்களை பறவைகள் கவரா வண்ணம் காவல் காத்த செய்திகள் இலக்கியத்தில் பல பாடல்கள் மூலம் பதிவு செய்யப்பட்டுள்ளது. தினைப்புனம் காவல் காக்க இளமகளிரை அவர்களின் பெற்றோர்களே அனுப்பி வைத்தனர் என்பதை,*

**''வரு குறி செய்த வரையகச் சிறு தினைச்**
**செவ் வாய்ப் பாசினம் கடீஇயர், 'கொடிச்சி''!**
**அவ் வாய்த் தட்டையொடு**''1 (நற்.134)

*என்று நற்றிணை பாடல் கூறுகின்றது. மலைக்குகையின் மேல் அமைக்கப்பட்ட பரணியில் அமர்ந்து கிளிகளை ஓட்டியதை*

**''களிறு அணந்து எய்தாக் கல்முகை இதணத்து,**
**சிறு தினைப் படுகிளி எம்மொடு ஓப்பி**''2 (அகம் 308)

*என்று அகநானூற்றின் பாடல் வரிகளில் காணப்படுகின்றது. மேலும்*

**''அமை அறுத்து இயற்றிய வெவ்வாயத் தட்டையின்**
**நறுவிரை ஆரம் அறஎறிந்து உழுத**
**உளைக்குரல் சிறுதிணை கவர்தலின்,கிளைஅமல்**
**பெருவரை அடுக்கத்துக் குரீஇ ஒப்பி**''3 (அகம்-388)

*என தினைக்கதிர்களை உண்ணவரும் பறவைகளை ஒட்டும் மென்மையான தொழிலைச் செய்தனர் என்றாலும் வேங்கை மரத்தின் உயரமான பரண் அமைத்திருந்தனர் இதன் மூலம் அங்கு விலங்குகளின் செயல்பாடுகள் இருந்திருக்கின்றன என்பதும் அவற்றிற்கு அஞ்சாத நிலையில் சங்ககாலப் பெண்கள் தினைப்புனத்தை காவல் காத்தனர் என்பதை அகநானூற்றுவியலின் மூலம் அறிய முடிகின்றது.*

*சில சமயங்களில் வேங்கை மரத்துக் கவட்டின் இடையே பரண்கட்டி பரண்மேல் புலித்தோலை வேய்ந்தார்கள். அப்பரணுக்குக் கழுது, இதணம், பணவை எனப் பல சொற்கள் வழக்கில் இருந்தன. இதன் மேல் விழும் வேங்கைப் பூக்களைப் பார்த்துப் புலியென யானைகள் மிரளும் என்பதையும் அறிய முடிகின்றது.*

*இரவில் குறமகன் தினைப்புனம் காக்க, பகற் பொழுதில் குறமகளிர் பரணிலிருந்து தினைப்புனம் காத்தனர் என்பதை நற்றிணையின் 389வது பாடல் விளக்குகிறது.*

*சங்க இலக்கியங்கிளில் குறமகளிர் தினைப்புனம் காவல் காத்ததைப் பல பாடங்கள் விவரிக்கின்றன. "சங்க இலக்கியத்தில் திணை வரும் 80 இடங்களில் ஆண்கள் தினைக்காவல் புரிந்தமை 6 இடங்களில் மட்டுமே இடம் பெற்றுள்ளது. பெண்கள் தினைப்புனம் காத்தமை 29 இடங்களில் பேசப்பட்டுள்ளது. ஏனல் வரும் 43 இடங்களில் ஆண் காவல் 8 இடங்களிலும், பெண் காவல் 26 இடங்களிலும் பேசப்பட்டுள்ளன. ஆக 55 இடங்களில் பெண்கள் தினைப்புனம் - காவலில் ஈடுபட்டிருந்த மாதையன் அவர்கள் தம் ஆய்வுக்கட்டுரை வழி அறியலாம்.*

## காட்டெரிப்பு வேளாண் தொழில்

சங்க இலக்கியங்களில் கானக்குறவர் பெண்களின் பங்கு முக்கியமானது. காட்டெரிப்பு வேளாண்மையில் பெண்கள் விதைத்தல் தொடங்கி களையெடுத்தல், தினைக்காத்தல், உணக்கல், கிழங்குகழ்தல், அறுவடை வரை எல்லாவற்றிலும் முக்கிய பங்கு பெற்றிருந்தனர் என்பதை அகநானூற்றின் 194-வது பாடலில் விளக்குகின்றது. காட்டெரிப்பு வேளாண்மையில் பெண்கள் பெற்றிருந்த முக்கியத்துவமானது உழுது பயிரிடும் நீர்ப்பாசன வேளாண்மை ஏற்பட்ட பின்னரே குறைந்து போனது.

## மீன் விற்றல்

நெய்தல் திணையில் உள்ள பரதவர் பெண்கள் பார்ப்பவர்களுக்கு வியப்பைத் தரும் அளவிற்கு ஏராளமான மீன்களை அனமையில் உள்ள ஊருக்குள் எடுத்துச் சென்று வாணிகம் செய்துவிட்டு அதற்கு ஈடாகத் தமக்குத் தேவையான பிறபொருள்களைப் பெற்று வந்தனர் என்பதை,

> **''திமிலோன் தந்த கடுங்கன் வயமீன்**
> **தழைஅணி அல்குல் செல்வத் தங்கையர்,**
> **விழவுஅயர் மறுகின் விலைஎனப் பகரும்.''**5 (அகம் 320)

என்ற அகநானூற்றின் பாடல் குறிப்பிடுகின்றது. தம் தமையன்மார் பிடித்து வந்த மீன்களைத் தம் பேச்சுத் திறத்தால் கூவி விற்பவள் என்பதை அறிந்து கொள்ள முடிகின்றது. மேலும், மீன் பிடிக்கும் தொழிலில் ஆடவர் மட்டுமின்றி பெண்களும் ஈடுபட்டுள்ளமையை அகநானூறு பின்வருமாறு சுட்டிக்காட்டுகின்றது.

> **''நாண்கொள்நுண் கோலின் மீன்கொள் பாண்மகள்**
> **தான்புனல் அடைகரைப் படுத்த வராஅல்''**6 (அகம்-216)

என்கின்றது. இவ்வரியின் மூலம் நெய்தல் நிலப் பெண் புனலை அடுத்த கரையில் வரால்மீனைப் பிடித்தக் குறிப்புக் கிடைப்பதனால் மீன்களை விற்கும் திறமை மட்டும் அல்லாது மீன்களை பிடிக்கும் நுணுக்கமும் அறிந்தவளாகவும் இருந்திருக்கின்றாள் என்பதை அறிந்துக் கொள்ள முடிகின்றது.

## ஆடை வெளுக்கும் தொழில்

சங்க கால மக்கள் தூய்மையான ஆடைகளை உடுத்தப் பெரும் உதவியாக இருந்தவர்கள் பெண்களே ஆவர். இவ்வகையான மகளிரை புலைத்தி, புலைத்தியர் என்று அழைக்கப்பட்டனர்.

இப்பெண்கள் உவர்நிலத்தில் கிணற்றைத் தோன்ற அங்குக் கிடைக்ககூடிய நீரில் நாள்தோறும் துணிகளை ஊறவைத்து துவைத்து வெளுப்பர். ஊவர் நீர் துணிகளின் அழுக்கை நீக்கும் தன்மை உடையதால் இவ்வகை நீர் துணிக்களை வெளுப்பதை வழக்கமாக கொண்டுள்ளனர். இவ்வாறு துவைத்த துணிகளுக்குச் சோறு வடித்த கஞ்சிட்டு உலர்த்துவர்.

**''பசைவிரல் புலைத்தி நெடிது பிசைந்து''7** *(அகம் - 387)*

*என்ற பாடலின் வழி சங்க காலத்துப் பெண் மற்றவர்களது ஆடைகளைச் சுத்தம் செய்யும் தொழிலில் ஈடுபட்டருந்தார்கள் என்பது, உவர்நிலத்து நீர் ஆடைகளின் அழுக்கை சுத்தம் செய்யும் என ஆராய்ந்து அறியும் அறிவியல் திறன் பெற்றிருந்தாள் என்பது தெரிய வருகின்றது.*

## கைம்மைத் தொழில்

*தமிழ்ச் சமுதாயத்தில் கணவனை இழந்த மகளிர் கைம்மை மகளிர் என்று அழைக்கப்பட்டனர். அப்பெண்கள் வாழ்ந்த வாழ்க்கை கைம்மை நிலை என்று கூறப்படுகின்றது. அப்படிப்பட்ட அப்பெண்கள் பொருதாரத்திற்குத் தொழில் முனைய முற்பட்டதைப் பின்வரும் நற்றிணைப் பாடல் விளக்குகின்றது.*

**''ஆள் இல் பெண்டிர் தாளின் செய்த**
**நுணங்கு நுண் பனுவல் போல''8** *(நற்-353)*

*என்ற பாடலின் மூலம் அறிய முடிகின்றது. கைம்பெண் தம் தனிமைத் துயரம் நீங்கவும், பிழைப்பின் காரணமாகவும் ஆடைநெய்ய நூல் நூற்பர் என்பதை மேற்கூறிய பாடலின் மூலம் அறியலாம். மேலும் மைக்பெண்கள் நூல் நூற்பதை,*

**''பருத்திப் பெண்டின் பனுவல் அன்ன''9** *(புறம் 125)*

*என்ற புறநானூற்று பாடலால் அறிய முடிகிறது. கணவனை இழந்த மகளிர் தாமே கைம்மை நிலையை இயல்பாக ஏற்கும் சூழல் உருவாக்கப்பட்டிருக்கின்றது.*

## முடிவுரை

*சங்க இலக்கியங்களில் மகளிர் வணிகத்தில் ஈடுபாடுவுடன் இருந்திருக்கின்றனர். சங்க கால மகளிர் தான் வாழும் இடத்திற்கேற்பவும், வாழ்க்கைச் சூழலுக்கு ஏற்பவும் குறிப்பிட்ட ஒரு தொழிலில் ஈடுபட்டிருக்கின்றனர். அவற்றுள் வாணிபம், மீன் பிடித்தல், விற்றல், தினைப்புனம் காத்தல், காட்டெரிப்பு வேளாண்மை செய்தல், ஆடையை வெளுக்கும் தொழில் ஆகியவை குறிப்பிடத்தக்கவை. இவ்வாறு சங்ககால மகளிர் பல்வேறு வாணிப உற்பத்தி செய்யவும், வாணிப நுணக்கத்தையும் தெரிந்து வைத்திருந்தனர் என்பதை அகநானூற்று பாடல்கள் உணர்த்துகின்றன. தங்களுக்கென சில வாணிப தொழிலை உருவாக்கிக் கொண்டு சங்ககால மகளிர் தொழில் மேம்படுத்துவது சிறப்புற்று விளங்கியுள்ளமையை மானுடவியல் மூலமாக அகநானூற்றின் பாடல்கள் மானுடச்சமூகம் மேம்பட சிறந்த சான்றாக அமைகின்றது.*

## தொகுப்புரை

*சங்க இலக்கியத்தில் ஆடவர்கள் மட்டுமல்லாது பெண்களும் தொழில் செய்துள்ளனர். பெண்கள் மீன்விற்றல், ஆடை வெளுத்தல், தினைப்புனம் காத்தல், காட்டெரிப்பு வேளாண் செய்தல் முதலிய தொழில்கள் செய்துள்ளனர். அகநானுற்றின் பாடல்களின் வழிப் பெண்களும் வாணிபம் செய்து பொருளீட்டி உள்ளனர். பெண்கள்*

கடின உழைப்போடு தாம்மேற்கொண்ட தொழிலில் தனித்திறனுடனும் விளங்கியுள்ளனர். தொழில்துறையில் ஆடவர்களுக்குப் பெண்கள் சலித்தவர்கள் இல்லை என்று சங்ககாலப் பெண்கள் நிரூபித்துள்ளனர் என்பதை அகநானூற்றின் மூலம் காட்டுகின்றது.

# 21. நவீன வேளாண்மையில் பெண்ணியம்

மா. இன்பக்கனி
இலக்கியத் துறை, முனைவர் பட்ட ஆய்வாளர் (பகுதி நேரம்),
தமிழ்ப் பல்கலைக்கழகம் தஞ்சாவூர்.

**முன்னுரை:-**

உலகம் செழித்து வளர நீர் இன்றியமையாதது. உலகத்தார் வாழ்வதற்கு வேளாண்மை அவசியம். வேளாண்மை என்றாலே நினைவுக்கு வருவது நாட்டின் வளம். அந்நாட்டின் வளத்தை பாதுகாக்கும் வகையில், தற்காலத்தில் பெண்கள் நவீன வேளாண்மை பயிர்களைப் பயிர் செய்து சாதனை படைத்து வருகின்றனர். சங்ககால முதல் தற்காலம் வரை பெண்ணினம் தனக்கென வாய்ப்புகளை, எல்லாத் துறைகளிலும் தக்கவைத்து வருகின்றனர். குறிப்பாக வேளாண்மையில் தங்கள் திறமைகளைக் காலூன்றி வைத்து வேளாண்மைத் துறையின் வளர்ச்சிக்குப் பெரிதும் உதவி வருகின்றனர் என்பதை எடுத்து இயம்பும் வகையில் இக்கட்டுரையானது வரையறுக்கப் பட்டுள்ளது.

**வேளாண்மையில் சங்க கால பெண்ணியம்:-**

மாதா,பிதா,குரு,தெய்வம், என்ற வார்த்தைக்கு இணங்க பெண்ணினமே உலக வாழ்க்கையில் முதல் இடத்தைப் பெறுகின்றனர். பெண்ணியம் என்பது பெண்களின் ஆளுமைத்தன்மையைக் குறிக்கும். அது மட்டுமின்றி உலகின் முதல் விவசாயி. பெண்நிலத்தில் ஒரு குச்சியை வைத்து நிலத்தைத் தோண்டியது. உலகில் நடந்த முதல் உழவு. இவ்வகையில் சங்க கால பெண்களின் வாழ்க்கை முறையில் வேளாண்மையை ஓர் அங்கமாகக் கருதினர். ஆண்கள் பிறப்பணிக்காகச் சென்று இருக்கும் சமயத்தில் பெண்கள் தங்கள் தனிமையைப் போக்க விவசாயத்தில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டனர். அவர்கள் வாழ்ந்த இடத்தில் அந்தச் சுற்றுச்சூழலுக்கேற்ப பயிர் வகைகளையும், கீரை வகைகளையும், கிழங்கு வகைகளையும், பயிர் செய்து உணவுக்காகப் பயன்படுத்திக் கொண்டனர். வேளாண்

நிலத்தைக் காத்து தினைப்புனத்தின் வேலையைப் பெண்களே செய்தனர் என்ற செய்தி சங்க இலக்கிய நூல்களில் இடம்பெறுவதைக் காண முடிகிறது.

### வேளாண்மை தொழிலின் வகைகள்:-

வேளாண்மை தொழிலின் வகைகள் என்பது ஒருங்கிணைப்பு தன்மை, வேளாண்மையைக் கையாளும் முறையினையும் அங்கு விளையும் பயிரையும் பொருத்து அமைகிறது. வேளாண்மை கீழ்க்காணுமாறு வகைப்படுத்தப்படுகிறது.

- தன்னிறைவு வேளாண்மை
- மாற்றிட வேளாண்மை
- தீவிர வேளாண்மை
- வணிக வேளாண்மை
- பரந்த இயந்திரங்கள் பயன்படுத்தப்படும் வேளாண்மை
- கலப்பு வேளாண்மை

மேற்கண்ட வேளாண்மை வகைகளில் பெண்கள் தங்களை ஈடுபடுத்திக் கொண்டனர்.

### நிலத்திற்கு நீர் பாய்ச்சும் பெண்ணியம்:-

வேளாண்மையில் முதற்படியாக அமைவது நிலத்திற்கு நீர் பாய்ச்சுதல். நிலத்திற்கு நீர் பாய்ச்சும் பணியானது ஆண்களுக்கு உரியதாக இருந்தது. தற்காலத்தில் அப்பணியைப் பெண்கள் மனத் துணிவுடன் செய்து வருகின்றனர். நிலத்தின் தன்மை அறிந்து பெண்கள் நிலத்திற்கு நீர் பாய்ச்சும் பணியைச் செவ்வனே செய்து வருகின்றனர். நவீன தொழில்நுட்பக் கருவிகளைப் பயன்படுத்தி கால நேரம் பார்த்து விளை நிலத்திற்கு நீர் பாய்ச்சும் பணியைச் செய்து நல்ல விளைச்சலைத் தருகின்றனர். காய்கறி, தானிய பயிர்களுக்கு எந்தளவுக்கு நீரைப் பாய்ச்ச வேண்டும், என்று காலளவு வைத்து வேளாண் பயிர்களை வளர்த்து வருகின்றனர். தற்போது சொட்டு நீர்ப் பாசன முறை, நவீன நீர் பாசன முறையைப் பயன்படுத்தி விளைநிலங்களை நன்கு பாதுகாத்து வருகின்றனர். அழும் குழந்தைக்குத் தாலாட்டு பாடிக்கொண்டு தங்கள் பணிகளைப் பெண்கள் கண்ணும் கருத்துமாகச் செய்து வருகின்றனர்.

### பயிர் விதைக்கும் முறையில் பெண்ணியம்:-

நிலத்திற்கு நீர் பாய்ச்சிய பெண்கள் அந்நிலத்தின் தன்மையறிந்து விளைப் பயிர்களை விதைத்தனர். அதில் உணவுப் பொருட்கள் முதல் மூலிகை பொருட்கள் வரை இருந்தது. சான்றுக்காக எடுத்துக் கொண்டால் விதை நெல்லை விதைக்கும் பெண்கள் கால நேரம் பார்த்து நல்ல விதை நெல்லை விதைத்தனர். அவ்வாறு விதைக்கும்பொழுது ஒரு விதைக்கும் மற்றொரு விதைக்கும் இடைவெளி விட்டு விதைத்து நல்ல மகசூலைப் பெற்று தந்தனர். கரும்புக்கும் உணவுப்பொருளான நெல்லுக்கும் முக்கியத்துவம் அளித்தனர். சிறுதானிய வகைகளான கேழ்வரகு, கம்பு ,சோளம், கிழங்கு வகைகள் காய்கறிகள், பழவகைகள் போன்றவை பயிரிட்டு பெண்கள் வேளாண்மை துறையில் தங்கள் பங்கினைச் செய்து வந்தனர்.

**நாற்றுநடும் பணியில் பெண்ணியம்:-**

பெண்கள் வேளாண்மைத் துறையில் பல்வேறு பணிகளை மேற்கொண்டு வருகின்றனர். நாற்று நடும் பொழுது பெண்கள் ஒரு நாற்றிற்கும் மற்றொரு நாற்றிற்கும் இடைவெளி விட்டு நடுகின்றனர். இப்படி நடுவதால் நெற்கதிர் விளையும் பொழுது நல்ல மகசூலைப் பெற்று தருகின்றது. அறிவியல் முறையான இம்முறையைச் சங்க கால பெண்கள் அறிந்திருக்கின்றனர் என்பது புலனாகிறது. தற்காலத்தில் நாற்று நடுவதற்கு இயந்திரம் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. நவீன இயந்திரத்தைச் செயல்படுத்தும் முறையைப் பெண்கள் கற்று தெரிந்து இருக்கின்றனர். இதன் காரணமாகப் பெண்கள் வேலை வாய்ப்பினைப் பெறுகின்றனர். பெண்ணினம் தம்மைக் காத்துக் கொள்வதுடன் தம்மைச் சுற்றியுள்ளவரையும் காத்து நின்று வாழ்வார்கள் என்பது புலனாகிறது.

**களையை நீக்கும் பெண்ணியம்:-**

விளைந்த தாவரங்களுக்கு இடையே விளையும் களைகளை நீக்கும் பொருட்டு பெண்கள் தங்கள் பணிகளைச் செவ்வனே செய்து வருகின்றனர். இதன் மூலம் வளரும் தாவரமானது நன்றாக விளைச்சலைத் தருகின்றது.

**விளைந்த பயிர்களைப் பாதுகாக்கும் பெண்ணியம்:-**

விளைச்சலில் விளைந்த பயிர்களைப் பக்குவமாகப் பெண்கள் தங்கள் திறத்தினைப் பயன்படுத்தி அறுவடை செய்து சேமிப்புக்கிடங்கில் சேமிக்கின்றனர். இவ்வளவு வீட்டு வேலைகளுக்கு இடையே தங்களை ஈடுபடுத்திக் கொண்டு இன்றளவும் தம்பெயரை நிலைநிறுத்தி வருகின்றனர்.

**வேளாண்மை சாகுபடியில் பெண்ணியம்:-**

வேளாண்மை சாகுபடி என்று பார்க்கும்பொழுது பயிர் சாகுபடி தவிர கால்நடை வளர்ப்பு, பண்ணை தொழில், மீன் வளர்ப்பு, ஆகியவற்றிலும் பெண்களின் பங்கு பெரிதும் போற்றத் தக்கதாக விளங்குகிறது. உணவு தானிய உற்பத்தியில் 60% முதல் 80% வரையில் பால் பண்ணை தொழில்நுட்பத்தியில் 90% பெண்களால் நடக்கிறது என்று சொல்கிறது ஆக்ஸ்ஃபார்ம் இந்தியா. ஆண்டுதோறும் அக்டோபர் 15 கிராமப்புற மகளிர் தினமாக ஐக்கிய நாடுகள் சபையும் தேசிய பெண் விவசாயிகள் தினமாக இந்திய அரசும் கொண்டாடுகின்றன. இந்திய விவசாயத்தின் தாங்கு சக்தியாகப் பெண்களே இருக்கிறார்கள் என்பது இதிலிருந்து உறுதியாகிறது.

**பல்வேறு வேளாண்மை தொழிலில் பெண்ணியம்:-**

'வேளாண்மை'என்ற சொல்லுக்கு விவசாயம் மட்டும் அடங்குவது மட்டுமின்றி கால்நடை வளர்ப்பு, கோழி வளர்ப்பு ,மீன் வளர்ப்பு, தோட்டக்கலை,காளான் வளர்ப்பு, நீர் மேலாண்மை, மழை நீர் சேகரிப்பு, போன்ற துறைகளையும் சார்ந்தது. வேளாண்மை என்ற சொல் தன்னுள் இத்துறைகளை அடக்கிக் கொள்கிறது.

**கால்நடை வளர்ப்பில் பெண்ணியம்:-**

வேளாண்மை தொழிலில் மிகுதியாகப் பயன்படுவது கால்நடைகளே ஆகும். பெண்கள் அவர்களது குலதெய்வமாகக் கால்நடைகளைக் கருதினர். உழவுக்குப் பயன்படும் உழவு எருதுகளையும், பால் கொடுக்கும் பசு மாட்டையும், இறைச்சிக்கு உதவும் ஆடுகளையும் செல்ல பிராணியாக வளர்க்கப்படும் நாய் போன்ற விலங்குகளைத் தெய்வமாகவே கருதினர். அவ்வாறு கருதியது மட்டுமன்றி அதற்கு விழா எடுத்து நான்கு நாட்கள் கொண்டாடினர். இவ்விழாவைப் பொங்கல் விழாவாகத் தமிழர்கள் கொண்டாடி மகிழ்ந்தனர். மார்கழி மாதத்தின் கடைசி நாளைப் போகிப் பண்டிகை என்றும்இந்நாளில் 'பழையது கழிதல் புதியது புகுதல்' என்ற வார்த்தைக்கு இணங்க நம் வாழ்நாளில் பின்பற்றி வந்த கெட்ட சிந்தனைகளை அகற்றி புதிய நல்ல சிந்தனைகளை மனதில் நிலை நிறுத்திக் கொள்கிறோம். மேலும் இரண்டாம் நாளான தை முதல் நாளில் சூரியனை வழிபடும் நோக்கில் கொண்டாடப்படுகிறது. மூன்றாம் நாளாக மாட்டுப்பொங்கல் கொண்டாடப்படுகிறது. நான்காம் நாளான கரிநாள், பொழுது போக்கிற்காகக் கொண்டாடப்படுகிறது.

இதில் 'எருது தழுவுதல்'என்ற விளையாட்டு ஆண்களால் விளையாடப்படும். அவ்விளையாட்டு இன்று 'ஜல்லிக்கட்டு' என்று அழைக்கப்படுகிறது. இந்த நான்கு நாள் விழாவும் தமிழர் திருவிழாவாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. இதில் பெண்களின் பங்காக இவ்வுலகம் இயங்கிட காரணமாக இருக்கும் கதிரவனையும் உழவுக்குப் பயன்படும் உழவு மாட்டையும் தெய்வமாகக் கருதி வணங்கினர். மேலும் மகளிர் விளையாடும் விளையாட்டை விளையாடி மகிழ்ந்து தம் திறமைகளை வெளிப்படுத்தினர் கால்நடை வளர்ப்பில் பெண்கள் தங்களை ஈடுபடுத்திக் கொண்டு பால் கொடுக்கும் பசுமாட்டையும் உழவுக்கு உதவும் உழவுமாட்டையும் தங்கள் குடும்பத்தில் ஓர் உறுப்பினராகக் கருதி வளர்த்தனர். பால் கொடுக்கும் பசுமாட்டைப் பல்வேறு தீவனங்கள் கொடுத்து வளர்த்து வந்தனர். அப்பசுவானது வீட்டுக்குப் பயன்பெறுமளவு பாலை நன்கு கொடுத்து அவர்கள் வாழ்வாதாரத்திற்கு ஆதாரமாக இருந்து வந்தது.மேலும் கால்நடைகளை வளர்த்து அதில் பெரும் சாணத்தை இயற்கை உரமாகவும் எரிபொருளாகவும் பெண்கள் பயன்படுத்திக் கொண்டனர்.

**கோழி வளர்ப்பில் பெண்ணியம்:-**

வேளாண்மைத் துறையில் ஒன்று கோழி வளர்ப்பும் அடங்கும். இதில் பெண்கள் தங்கள் பங்கினைச் செய்து வருகின்றனர். தேவையான தீவனங்களைக் கொடுத்து அதனை நன்கு வளர்த்து அதிலிருந்து பெறப்படும் முட்டை, இறைச்சி இவற்றை விற்பனை செய்து தங்கள் வாழ்க்கையை வாழ்ந்தனர்.

**மீன் வளர்ப்பில் பெண்ணியம்:-**

வேளாண்மையில் கால்நடை வளர்ப்பு, கோழி வளர்ப்பு , காளான் வளர்ப்பு போன்று மீன் வளர்ப்பு முக்கியத்துவம் பெறுகிறது. மீன் வளர்ப்பில் பெண்கள் பலவகையான

மீன்களை வளர்த்து சாதனை படைத்து வருகின்றனர். இம்முறையில் மீன்களுக்கு வேண்டிய தீவனத்தைக் கொடுத்து பல்வேறு மீன்களை வளர்த்து வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்கின்றனர். அது மட்டுமல்லாமல் மீனிலிருந்து கிடைக்கப்படும் மீன் எண்ணெய் மருத்துவத்திற்குப் பயன்படுகிறது. இதுபோன்ற தொழிலில் பெண்கள் முதன்மை பெருகின்றனர்.

**நவீன தோட்டக்கலையில் பெண்ணியம்:-**

நவீனத் தோட்டக்கலையில் பெண்கள் இன்று தன்னுடைய திறமைகளை வெளிப்படுத்தி வருகின்றனர். அதாவது நிலத்தில் விவசாயம் செய்த பெண்கள் தோட்டக்கலைக்கு முக்கியத்துவம் அளித்து வருகின்றனர். தோட்டக்கலை என்பது பழங்கள், காய்கறிகள் மலர்கள், அலங்கார தாவரங்கள், மூலிகைகள் இவற்றைப் பற்றி படிக்கும் நவீன அறிவியல் கலையாகும். தோட்டக்கலை இரண்டு விதமாக இன்று பிரிக்கப்படுகிறது.

- கிராமப்புறத் தோட்டக்கலை
- நகர்ப்புறத் தோட்டக்கலை

**கிராமப்புறத் தோட்டக் கலையில் பெண்ணியம்:-**

கிராமப்புறத் தோட்டக்கலை என்பது இயற்கையான முறையில் தாவரங்களை வளர்ப்பது ஆகும். இதில் பயன்படும் உரமும் மாட்டின் எருவும், ஆடுகளின் கழிவு இவற்றை இயற்கை உரமாகப் பயன்படுத்தி பல்வேறு வகையான தாவரங்களை வளர்க்கின்றனர். உதாரணமாக மலர் வகைகள் மல்லி, அரும்பு, கனகாம்பரம், செம்பருத்தி, அரளி, மரிக்கொழுந்து போன்ற மலர்களை விளைவிக்கின்றனர்.

அதுமட்டுமன்றி பழ வகைகளான மா, பலா, வாழை, கொய்யா, இலந்தை, நெல்லி போன்ற பழங்களை விளைவித்து அதனை விற்று தங்கள் குடும்ப வாழ்க்கையை நடத்துமளவுக்குக் கிராமியப் பெண்கள் வளர்ந்து உள்ளனர்.

**நகர்ப்புறத் தோட்டக் கலையில் பெண்ணியம்:-**

கலை என்றாலே 'அழகு' இதில் நவீனமாக அமைக்கப்படும் தோட்டக்கலையோ பார்ப்பதற்கும் பார்த்து ரசிப்பதற்கும் ரசித்து ருசிப்பதற்கும் உகந்த வகையில் தோட்டக்கலை அமைக்கப்படுகின்றது. மேற்கூறின கிராமப்புற தோட்டக்கலையிலிருந்து முற்றிலும் மாறுபட்டது நகர்ப்புறத் தோட்டக்கலை இதில் பழங்கள், காய்கள், மலர்கள், அலங்கார, செடிகள், மூலிகைகள் விதைத்து வளர்க்கப்படுகின்றன. இந்நாகரிக உலகில் மக்கள் வசிப்பதற்கு இடமில்லை இதில் தோட்டக்கலை வைத்து எப்படி பராமரிப்பது என்று அச்சம் மனதில் எழுந்தாலும் நவீன உலகில் எல்லாம் சாத்தியமே! அடுக்குமாடிக் குடியிருப்பு பகுதியில் இருக்கும் மக்கள் தொங்கும் தோட்டத்தை அமைத்து அதில் பச்சை காய்கறிகள், பழங்கள், அலங்கார தாவரங்கள், மூலிகைகள் வளர்க்கின்றனர்.

இவ்வாறாக வளர்க்கப்படும் தாவரங்கள் கீரை வகைகள், பழங்கள், காய்கறிக்கு, வீட்டு உபயோகத்திற்கு மட்டுமின்றி விற்பனைக்கும் ஏற்றுமதி செய்யப்படுகிறது. தோட்டக்கலை

வளர்ப்பில் பெண்களே முதலிடம் பெறுகின்றனர். இந்நாகரிக உலகில் உணவே மருந்து என்ற காலம் மாறி மருந்தே உணவு என்ற வழக்கம் தொடங்கிவிட்டது. சிலர் தங்கள் சுயநலத்திற்காக ரசாயனம் கலந்த உரங்களைப் பயன்படுத்தி தாவரங்களை வளர்க்கின்றனர். இத்தாவர வகைகளை உணவாக உட்கொண்டவர்கள் பல உடல் சார்ந்த உபாதைகளுக்கு உள்ளாகின்றனர். சூழ்நிலையை மாற்ற கருதிய நவீன பெண்ணிய சிந்தனையாளர்கள் தாமே முன்வந்து நவீனத் தோட்டக்கலைக்கு முக்கியத்துவம் அளித்து நல்ல தரமான உணவுப் பொருட்களை பயிரிட்டு மக்களுக்கு அளித்து வருகின்றனர். பெண்ணின் இந்தப் புது முயற்சி மக்களிடையே நல்ல வரவேற்பு பெற்று வருகிறது எனலாம்.

'நவீன வேளாண்மையில் பெண்ணியம்' என்றத் தலைப்பையொட்டி எழுதப்பட்ட இந்த கட்டுரை பெண்ணியத்தின் முக்கியத்துவத்தையும் அவர்களின் முயற்சியால் உருவாக்கப்பட்ட நவீன வேளாண்மைத் துறைகளைப் பற்றியும் ஆராயப்பட்டுள்ளது. இதில் பெண்ணியத்தின் ஆளுமை கூறப்படுவது மட்டுமின்றி அவர்களின் கடின உழைப்பும் முயற்சியும் எடுத்துக் கூறப்பட்டுள்ளது. சங்க காலப் பெண்கள் முதல் தற்கால பெண்கள் வரை அவர்கள் வாழும் காலத்திற்கேற்ப தங்களை மாற்றி அமைத்துக் கொண்டு எல்லா சூழலையும் சமாளிக்கும் திறத்தினைப் பெற்றுவிளங்குகின்றனர். கிராமப்புறப் பெண்களாக இருந்தாலும் சரி, நகர்ப்புறப் பெண்களாக இருந்தாலும் சரி, அவர்கள் வாழ்க்கைக்கு அவர்களே தூணாக அமைகின்றனர் என்ற உண்மை புலனாகிறது.

# பெண்ணதிகாரம்
# (கல்வெட்டுகள் ஒரு சிறப்புப் பார்வை)

*Women Empowerment as Gleaned From The Inscriptions*

முனைவர் மா. பவானி,
இணைப்பேராசிரியர், கல்வெட்டியல், தொல்லியல் துறை,
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

**முன்னுரை:**

**பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்**
**பாரினில் பெண்கள் நடத்தவந்தோம்**
**இனி எட்டும் அறிவினில் ஆணுக்கிங்கே பெண்**
**இளப்பில்லைக் காண் என கும்மியடி!** (புரட்சிக் கவிஞர் பாரதியார்)

என்ற பாரதியின் சிந்தனைக்கு உயிர் கொடுத்து பெண்கள் இன்று இல்லாத துறையே இல்லை என்று கூறும் அளவிற்கு விண்ணைப்பிளந்து விமானம் செலுத்தும் விமானி முதல் மண்ணைப்பிளந்து பிணத்தைப் புதைக்கும் மகத்தான செயல்வரை அனைத்துத் துறைகளிலும் சமூக அக்கரையுடனும் பொறுப்புடனும் செயல்பட்டுவருவதை உலகம் அறியும்.

பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே மன்னராட்சி காலங்களிலும் கூட புலவர்களுக்கு இணையாகச் சில நேரங்களில் அவர்களையும் விஞ்சி செயல்பட்ட ஔவையார், பிசிராந்தையார், காக்கைபாடினியார் நச்செள்ளையார் போன்ற நூற்றுக்காக்கானப் பெண் புலவர்களைச் செம்மொழி இலக்கியங்கள் எடுத்தியம்புகின்றன. இதை அடுத்து வந்த காப்பியக் காலத்தில் காவியத் தலைவிகளின் கற்பும் துணிச்சலும் சமூக அறமும் நாம் அறிந்தவைவே. வரலாற்றுருவாக்க வரைவிற்குச் சம காலத்திய முதன்மைச் சான்றுகளாக விளங்கும் கல்வெட்டுகளில் பெண்ணதிகாரம் குறித்து ஆராய்வதை நோக்காகக் கொண்டது இக்கட்டுரை.

## ஆதிக்கப் பெண்கள்

ஒவ்வொரு ஆணின் வெற்றிக்குப் பின்னும் ஒரு பெண் இருக்கிறார் என்ற உண்மைக்கு உரம் சேர்ப்பதுபோல் ஒவ்வொரு சாம்ராஜ்யத்தின் வெற்றிக்குப் பின்னரும் பெண்களே இருந்துள்ளனர். சோழ சாம்ராஜ்யம் நானூறு ஆண்டுகள் செழித்தோங்கியமைக்கும் ஆணிவேராக நின்றவர்கள் சேரமாதேவியும் குந்தவைப் பிராட்டியும் வானமாதேவியும் பஞ்சவன்மாதேவியும் இவர்களைப் போல் எண்ணற்ற பெண்கள்தான் என்றால் அது மிகையில்லை.

ஒருபுறம் அரசர்கள் பெரிய பெரிய கோயில்களை அமைத்து கொடை வழங்கியதைப் போல் அரசிகளும் கோயில்கள் கட்டி கொடைவழங்கியுள்ளனர். இது எவ்விதம் சாத்தியமானது? என்று நாம் சிந்திருக்கும் போதுதான் அவர்களுக்கு உரிமையும் தனித்துசெயல்படும் திறனும் மிகுந்திருந்தது என்பதை அறியமுடிகிறது. அரசாளும் பரம்பரைப் பெண்களுக்கு மட்டுமல்ல. சமூகத்தில் சாமானியப் பெண்களும் கோயில்களை ஏற்படுத்தி கொடைகள் வழங்கியுள்ளனர்.

தொன்மைக் கலைகளைத் தொய்ந்துப் போகாமல் காத்தப்பெருமை நமது தேவரடியார் பெண்களுக்குண்டு. இன்று அரசாங்கப் பணிகளில் பெண்கள் அதிகாரிகளாகச் செயல்படுவதுபோல் அன்றும் அதிகாரிகளாகச் செயல்பெற்றுள்ளனர் என்பதை அதிகாரி என்ற சொற் கல்வெட்டுகளில் இடம்பெறுவதைக் கொண்டு அறியலாம். அனைவரும் சமூகத்தில் ஒரே நிலையில் இல்லை. ஏற்றத்தாழ்வுகள் என்பது எக்காலத்திற்கும் பொருந்தும் உண்மையாகும். என்றாலும், அடிமைப் பெண்களைப் பற்றி அவர்கள் அடைந்த அவலங்களையும் பற்றி நிறைய பேசியாயிற்று. கனி இருப்பக் காய்கவர்ந்தற்று என்பதைப்போல் இனி ஆதிக்கம் செலுத்தியப் பெண்களைப் பற்றி அறிவோமே!. என்ற ஆவலில் பெண்ணதிகாரம் எடுத்தாளப்பெறுகிறது.

### சங்க காலம்

சங்க காலத்தைச் சேர்ந்த இலக்கியங்கள் கிடைக்கும் அளவிற்குக் கல்வெட்டுகள் கிடைக்கவில்லை. ஏனெனில் அவை மக்களைப் பற்றியவையல்ல. ஊருக்குப் புறம்பாக வாழ்ந்த சமணத் துறவிகளுக்கு அரசர்களும், வணிகர்களும் , மக்களும் அமைத்துக்கொடுத்த கல்படுக்கைப் பற்றியது. கரடு முரடாகயிருக்கும் கற்பாறைகள் அமர்வதற்கு ஏற்றவாறோ அல்லது படுத்துக்கொள்வதற்கு ஏற்றவாறோ கிட்டத்தட்ட ஒன்றரை அடி அகலம் 6 அடி உயரம் உடையதாய் அமைத்துக் கொடுத்துள்ளனர். இதற்கு 'பாளி' என்று பெயர்.

இத்தகைய பாறைகளை அமைப்பது இன்று எளிமையானதாகத் தோன்றினாலும் அன்றைய சூழலில் இது மிக கடினமானதாகயிருந்திருக்கும். மூன்று சங்கங்கள் இருந்துள்ளமை, முச்சங்களிலும் முதல் ஏழு வள்ளல்கள் இடயேழு வள்ளல்கள் கடயேழு வள்ளல்கள் என்ற கொடை சிறப்பிற்குக் காட்டாகக் குறிப்பிடப்படும் வள்ளல்கள் அனைவரும் ஆண்களாவேயுள்ளனர். ஏன் ஒரு பெண் வள்ளல் கூட இல்லை? பெண்களுக்குக் கொடை குணம் இல்லையா? என்றால் அவர்களுக்குச் சொத்துரிமை இல்லாமை அல்லது அவர்கள்

பெற்றிருந்த சொத்துகளை அவர்கள் நினைத்தவண்ணம் செலவிடும் உரிமையின்மை இவையே அதற்குக் காரணமாகலாம். (மா. பவானி, 2008, பக்.663 - 667)

**நலி(ய்) ஊர் ஆபிடன் குறும்மகள்**

**கீரன் கொறி செயிபித பளி.** (Iravatham Mahadevan, 2003, pp.410-411.)

நல்லியூரைச் சேர்ந்த பிட்டன் என்பவரின் இளமகள் கீரன் கொற்றி பாளி செய்துக் கொடுத்து கொள்ளார். இவ்விதம் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தமிழ் மகளிர், அறச்சிந்தனையுடனும், சமய நல்லிணக்கத்துடனும் இருந்துள்ளனர். அது போல் ஸபமிதா என்ற பெண் துறவிக்குப் பாளி அமைத்துத் தந்துள்ளனர்.

...(Iravatham Mahadevan, 2003, pp.131-132.), பெரும்புகழ் சேக்கந்தி தாயாறு என்பவருக்குச் செக்கந்தண்ணி என்பவர் செய்து கொடுத்த பள்ளி அமைத்துக்கொடுத்ததை நெகனூர்பட்டி சங்கத்தமிழ் கல்வெட்டு குறிப்பிடுகிறது. (Iravatham Mahadevan, 2003, pp.436, 437, 611) அக்காலத்திலேயே சேக்கந்தி என்பவர் பெரும்புகழுடன் திகழ்ந்துள்ளார் என்பதும் சுட்டத்தக்கது.

## பெண் ஆளுமைகள்

கல்வெட்டுக்களில் பெண்களின் ஆளுமைகளை அவர்கள் செய்த அறக்கொடைகள் மூலமாக அறியமுடிகிறது. இடைக்காலக் கல்வெட்டுக்களில் ஆளுமைப் பெண்கள் வரிசையில் பட்டத்தரசி, அரசிகள், சிற்றரசியர் முதல் நிலையில் இருந்துள்ளனர். இவர்களுக்கு அடுத்து தளிச்சேரி பெண்கள், இல்லத்தரசிகள் (மணவாட்டிகள்) அரண்மனையில் (வேளம்) பணிசெய்யும் பெண்கள் (பெண்டாட்டிகள்), இருந்துள்ளனர்.

அரசிகள் சுதந்திரமாக இயங்கியுள்ளனர். அரசர்களுக்கு இருந்த உரிமைகளும் சலுகைகளும் அரசியர் பெற்றுத் திகழ்ந்தனர். உத்தமசோழனின் தாயார் செம்பியன் மாதேவியார், முதலாம் இராஜராஜரின் அக்கவை குந்தவை பிராட்டியார், முதலாம் இராஜராஜரின் மனைவியருள் ஒருவரான ஒலோகமாதேவியார், பஞ்சவன் மாதேவியார் ஆகியோரைக் குறிப்பிடலாம். ஒவ்வொரு அரசருக்கும் குறைந்த அளவில் இரண்டிற்கும் மேற்பட்ட தேவியரும் அதிக அளவில் 15க்கும் மேற்பட்ட தேவியரும் இருந்துள்ளன. இவ்வகையில் நூற்றுக்கும் மேற்பட்ட அரசியர்களின் அறக்கொடைகளையும் கல்வெட்டுக்கள் வாயிலாக அறியலாம். இந்த அரசியர்கள் பிரிதொரு அரசவம்சத்தின் தோன்றல்கள் என்பதால், சோழ அரசின் விரிவாக்கத்திற்கு நட்புறவிற்கும் இவர்கள் தூண்களாகத் திகழ்ந்துள்ளனர்.

முதலாம் ஆதித்தனுடைய மனைவியருள் ஒருவரான **திரிபுவன மாதேவி வயிரிக்கன்** (SII. vol.13,no.323) **பல்லவர் குடி**யில் தோன்றியவர். முதலாம் பராந்தகன் மனைவி **கோக்கிழானடிகள் சேரமன்னன்** மகள் (தி.வை.சதாசிவப் பண்டாரத்தார், 1967, ப.63), கண்டராதித்தன் மனைவி **செம்பியன் மாதேவி, மழவரையர்** வம்சத்தைச் சார்ந்தவர், (SII.vol.19,no.302) சுந்தரசோழர் மனைவி வானமாதேவி திருக்கோவலூர் **மலையமானாட்டைச்** சார்ந்தவர்.(SII,vol.19,359). இவரது இன்னொரு மனைவியான **பராந்தகந்தேவி அம்மன் சேர அரசகுலத்தவர்** (SII,vol.19,359). இவ்விதமாக அரசியர்கள் திருமணத்திற்குப் பிறகு இரண்டு அரசுகளையும் இணைக்கும்

பாலமாகத் திகழ்ந்துள்ளனர். இதனால் நாடு போரின்றி ஆன்மீக வழியில் அமைதியாக இருந்ததால்தான் பெரிய பெரிய கோயில்களை அரசர்களால் கட்டமுடிந்தது. இத்தகைய சூழல்களை ஏற்படுத்தித் தந்தவர்கள் அரசுப் பெண்களே என்றால் மிகையன்று.

## செம்பியன் மாதேவியார் (பொ.ஆ.949-1001)

செம்பியன்மாதேவியார், மழவரையர் மகள் என்பதும் உத்தமசோழனின் தாயார், கண்டராதித்தனின் மனைவி 'மழவரையர் மகளார் ஸ்ரீகண்டராதித்தப்பெருமான் தேவியார் 'ஸ்ரீ உத்தமசோழன் தேவரைத் திருவயிறு வாய்த்த செம்பியன் மாதேவிப்பிராட்டியார்' என்ற கல்வெட்டுத் தொடரால் அறிய முடிகிறது. இதனால் செம்பியன்மாதேவியை அவரது தகப்பனார், கணவர், மகன் ஆகிய மூவரின் உறவுமுறைகளையும் சொல்லிக் குறிப்பிட்டிருப்பது இவருக்கு மட்டுமல்ல சோழ குலத்துக்கே பெருமை சேர்ப்பதாகும். (*SII,vol.III,no.141*) நீண்டகாலம் குழந்தையில்லாமல் இருந்து இறுதியில் உத்தமசோழன் பிறந்தார், என்பது செவிவழிச் செய்தி. இவர் எல்லையற்ற சிவபக்தி பெற்றிருந்தார். மாதேவடிகள் என்று வழங்கப் பெற்றார். தன் கணவன் இறந்த பின்னர் அரிஞ்சய சோழன், சுந்தர சோழன், உத்தம சோழன் ஆகிய மூன்று அரசர்கள் ஆட்சிக்காலங்களிலும் முதலாம் இராஜராஜ சோழன் ஆட்சியில் பொ.ஆ.1001 வரையிலும் உயிருடன் இருந்தார். இந்த அம்மையார் பல கோயில்களைப் புதுப்பித்தும், பொன்னாலும், வெள்ளியாலும், பல்வகை அணிகலன்கள் கொடுத்தும் புரிந்துள்ள அறங்கள் அதிகமானதாகும்.

**கோனேரிராசபுரம்**: மாயவரம் மாவட்டத்தில் (பழைய தஞ்சாவூர் மாவட்டம்) கண்டராதிதீஸ்வரம் என்று அழைக்கப்பெறும் திருநல்லமுடையார் கோயிலை செம்பியன் மாதேவியார் தன்னுடைய மகனான உத்தமசோழன் காலத்தில் கற்றளியாக மாற்றினார் . (*ARE, 1908, no.450, SII, III. 143*) . அரசர்களுக்கு இணையாக ஆணையிடும் உரிமை பேரரசியாருக்கு இருந்துள்ளது. கோனோரி ராசபுரம் கோயிலைக் கற்றளியாக எடுக்குமாறு ஆலத்தூருடையான் சாத்தன் குணபத்தன் ராஜகேசரி மூவேந்தவேளான் என்ற அமைச்சருக்கு ஆணையிட்டுள்ளமை இங்கு சுட்டத்தக்கது. (*SII, III. 147*) 'ஸ்வஸ்திஸ்ரீ கண்டராதித்ததேவர் தேவியார் மாதேவடிகளான ஸ்ரீ செம்பியன்மாதேவியார் தம்முடைய திருமகனார் ஸ்ரீ மதுராந்தகத்தேவரான ஸ்ரீ உத்தமசோழர் திருராஜ்யஞ் செய்தருளா நிற்கத் தம்முடையார் ஸ்ரீ கண்டராதித்த தேவர் திருநாமத்தால் திருநல்லமுடையார் திருக்கற்றளி எழுந்தருளிவித்து இத்திருக்கற்றளியிலேயே திருநல்லமுடையாரைத் தொழுகின்றாராக எழுந்தருளிவித்த ஸ்ரீ கண்டராதித்த தேவர் '

இந்த ஊரிலுள்ள சிவாலயத்தை கற்றளியாக எடுப்பித்து அதற்கு நாள் வழிபாட்டிற்கும், விழாக்களுக்கும் நிவந்தமாக இறையிலி நிலங்கள் அளித்துள்ளனர். அக்கோயிலில் தன் கணவர் சிவலிங்கத்தை வழிபடுவதாகப் படிமம் ஒன்று வைக்கப்பட்டுள்ளது சிறப்புடையதாகும். விருதாசலம், திருக்கோடிக்கா, தென்குரங்காடுதுரை, செம்பியன் மாதேவி திருவாரூர் அறநெறி, திருப்பூந்துருத்தி, ஆறாங்கூர், திருமணஞ்சேரி, திருவக்கரை எனும் ஊர்களில் உள்ள சிவாலயங்களைப் புதுப்பித்துள்ளார். உலகிலேயே முதன்முறையாக ஐம்பொன் நடராஜர்

சிலையை நிறுவியதும் இவரேயாவார். இவருக்கு ஐம்பொன் சிலையை[1] நிறுவியவர் முதலாம் இராஜேந்திர சோழர் ஆவார். இவரது பள்ளிப்படை சேவூரில் அமைந்துள்ளது.

**குந்தவைப் பிராட்டியார்:**

இவரைச் சாசனங்கள் 'உடையார் ஸ்ரீ ராஜராஜதேவர் திருத்தமக்கையார் வல்லவரையர் வந்தியதேவர் மஹாதேவியார் ஆழ்வார் பராந்தகன் குந்தவையார் ' என்று பெருமையுடன் இவருடைய தாத்தாவான பராந்தகன் பெயரையும் இவரது பெயருடன் இணைத்துக் குறிப்பிடுகின்றன (*SII,vol,II.no.8*) . இதுவே அக்காலத்தில் பெண்மை போற்றிக் கொண்டாடப் பெற்றுள்ளமைக்குச் சிறந்த சான்றாகும்.

முதலாம் இராசராசனின் தமக்கையார் குந்தவைப் பிராட்டியார், செம்பியன் மாதேவியாரைப் போன்று கோயில் கட்டுவதிலும், நன்கொடைகள் வழங்குவதிலும் சிறந்து விளங்கினார். இந்த அம்மையாரின் அன்பின் அடையாளமாக முதலாம் இராசராசன் அன்பு தோன்ற 'அக்கன்' என்று அழைத்ததைக் கல்வெட்டுக் குறிப்பில் காண முடிகிறது. (*SII,vol.III,no.141*) இந்த அம்மையார் வல்லவரைய நாட்டைச் சேர்ந்த வல்லவரையர் வந்தியத்தேவரின் மனைவியாவார்.

இவர் பல கோயில்கள் கட்டி, அறக்கொடைகள் வழங்கியுள்ளார். இவரால் இரவிகுல மாணிக்க ஈஸ்வரம், குந்தவை ஜினாலயம், குந்தவை விண்ணகர் போன்ற கோயில்களை எடுப்பித்துள்ளார். தன் தந்தையின் நினைவாகச் 'சுந்தர சோழ விண்ணகராழ்வார்' என்ற விஷ்ணுக் கோயிலையும் சகோதரர் நினைவாக 'இராஜராஜ விண்ணகராழ்வார்' என்ற பெருமாள் கோயிலையும் கட்டியுள்ளார். இவர் தஞ்சைப் பெரியகோயிலுக்குச் செப்புத்திருமேனிகள் பல எழுந்தருளிவித்து அவற்றிற்று பொன் ஆபரணங்கள், வைரம், மாணிக்கமாலை, நவரத்தினங்கள், காசுகள், வெள்ளிக் கலங்கள், போன்று எண்ணற்ற தானங்களை வழங்கியுள்ளார்.

ஸ்வஸ்தி ஸ்ரீ கோப்பரகேசரிவர்ம்மரான உடையார் ஸ்ரீ ராஜேந்தர சோழதேவர்க்கு யாண்டு மூன்றாவது வரை உடையார் ஸ்ரீ ராஜராஜதேவர் திருதமக்கையார் வல்லவரையர் வந்தியதேவர் மஹாதேவியார் ஆழ்வார் பராந்தகன் குந்தவையார் தாம் எழுந்தருளிவித்த திருமேனிகளுக்குப் பொன் ஆடவல்லான் என்னுங்குடிஞைக்கல்லால் நிறை எடுத்தும் ரத்நங்கள் சரடுஞ் சட்டமுஞ் செப்பாணிகளும் அரக்கும் பிஞ்சும் நீக்கி நிறையுள்ளன நிறை எடுத்தும் அரக்கும் பிஞ்சும்கூட ரத்தங்கள் கட்டி வேறு நிறையறிய உண்ணாதன அரக்கும் பிஞ்சும் உட்பட தக்ஷிணமேருவிடங்கர் என்னுங்கல்லால் நிறை எடுத்துங்கல்லில் வெட்டின'! தக்ஷிணமேரு விடங்கர் நம்பிராட்டியார் உமாபரமேஸ்வரிக்குக் குடுத்தன திருப்பட்டிகை ஒன்றும் . . .. . . . . . என்று குந்தவை பிராட்டியார் கொடுத்த பொன் அணிகலன்களின் விவரத்தனை அழகுற விளக்குகிறது கல்வெட்டு. (*SII,vol.II,no.8*)

இது மட்டுமின்றி கருந்தட்டான்குடி வசிஷ்டேஷ்வரர் கோயில், திருவிசலூர் கோயில் போன்ற பல கோயில்களுக்கு நிலம் தானம் அளித்துள்ளார். மேலும் பல கோயில்களுக்கு

---

1 40 ஆண்டுகளுக்கு முன் இச்சிலை காணாமல் போனது. தற்பொழுது அமெரிக்க அருங்காட்சியகத்தில் இருப்பது கண்டுபிடிக்கப்பெற்றுள்ளது.

பொன் நிலம், காசு, விளக்கு, ஆடு, நிவந்தங்கள் வழங்கியுள்ளார்.

சோழ மன்னர் முதலாம் இராஜராஜன் காலத்தில் அரசு விற்ற நிலங்களை குந்தவை விலைக்குப்பெற்று தானம் அளித்துள்ளதைக் கருந்தட்டான்குடி வசிஷ்டேஸ்வரர் கோயில் கல்வெட்டு குறிப்பிடுகிறது. இதனால் ஆளும் அரசினைக் காட்டிலும் அரசியர்கள் பொருளாதார வளமும் அதிகாரமும் அதிகம் பெற்றிருந்தனர் என்பதை வெளிப்படுத்துகிறது. அப்போது குந்தவையார்க்கு திருமணம் ஆகவில்லை . திருமணம் ஆகுவதற்கு முன்பே சொத்துரிமையும் இருந்துள்ளதையும் இக்கல்வெட்டு உணர்த்துகிறது.

**பஞ்சவன்மாதேவி**

இராஜராஜனின் அன்பு மனைவியர்களுள் ஒருவரான பஞ்சவன்மாதேவி சிறந்த கலைஞர் . இவருக்கு 'நக்கன் தில்லையழகி' என்ற பெயரும் உண்டு. இவர் பழுவேட்டரையரின் மகள் என்பதை 'அவனி கந்தர்வபுரத்து பழுவூர் தேவனாரின் திருமகள்' என்ற பழுவூர் கல்வெட்டு வாசகத்தால் 'பஞ்சவன் மாதேவி சதுர்வேதிமங்கலம்' என்ற பெயரில் ஒரு பெரிய ஊரே தானமாக அளிக்கப்பெற்றுள்ளது அறியலாம். இவர் போர்க்கலையும் பயிற்சிப்பெற்றவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

**பஞ்சவன்மாதேவீச்சுரம்**

அரசியார்கள் கடவுளுக்கு இணையாக மதிக்கப்பட்டதுடன், இறந்தபின் தெய்வங்களாகவும் வழிபட்டனர். இவர்களுக்கு அரசர்களால் கோயில்களும் எடுப்பிக்கப்பட்டன. தமது அன்னையாகிய பஞ்சவன்மாதேவிக்கு முதலாம் இராஜேந்திரனால் பட்டீஸ்வரத்தில்'பஞ்சவன்மாதேவீச்சுரம்' என்னும் கோயில் எடுக்கப்பட்டது.'பழையாறையான முடிகொண்ட சோழபுரத்துப் பள்ளிப்படை பஞ்சவன் மாதேவிச்சுரம்' என்று இங்குள்ள இராஜேந்திரனின் கல்வெட்டு குறிப்பிடுகிறது. இக்கோயில் 'பள்ளிப்படைக்கோவில்' என்று அழைக்கப்படுகிறது. *[ARE, 1927 no.271]*

பள்ளிப்படை என்பது இறந்தபின் எடுக்கப்பெறும் சமாதிக்கோயிலாகும். இவ்விதம் தன்னை வளர்த்த அன்னைக்கு ஆலயம் எடுத்துள்ளார் இராஜேந்திரசோழர். இராஜேந்திரனை தமது சொந்த மகன் போல் பஞ்சவன்மாதேவி வளர்த்ததாகவும் , அதனால் தமக்கு குழந்தையில்லாமல் பார்த்துக் கொண்டார் என்றும் செவிவழிக்கதைகள் உண்டு. அதற்கான சான்றுகள் இல்லையாயினும் அன்னைக்கு ஆலயம் அமைத்ததொன்றே அவர் தாய்மையை தெய்வமாகத் தொழுதமைக்கு சான்றாகவுள்ளது. தற்போது இது 'இராமனாதன் கோயில்' என்றழைக்கப்பெறுகிறது. *(S.R. Balasubramaniyan, Early Chola Mudgala Temples, Trust Publishers, Hariyana, India, 1979, pp.22-23)*

**வானவன் மேதேவியாரும் - அதிகாரிகளும்**

முதலாம் இராஜராஜனின் பட்டத்தரசி தன்சக்தி விடங்கியாரான ஓலோகமாதேவி ஏற்படுத்திய ஓலோகமாதேவி ஈஸ்வரத்திற்கு (பெரும்பாலும் அரசர்களும் அரசியர்களும் தங்கள்

பெயர்களிலேயே கோயில்களை அமைத்துள்ளனர். பிற்காலங்களிலேயே இவை சமஸ்கிருத செல்வாக்கினால் சமஸ்கிருத பெயர் பெற்றுள்ளன.) சிவன் உட்பட பிற கடவுள்களுக்கு திருவாபரணங்களும் திருப்பரிக்கலங்களும் நிவந்தம் செய்துள்ளார். இச்செய்தியைத் தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு பஞ்சநதீஸ்வரர் கோயிலில் உள்ள கல்வெட்டொன்று குறிப்பிடுகிறது. இறைவனின் பெயர் இன்று 'பஞ்சநதீஸ்வரர்' என்று அழைக்கப்பெறுகிறது. ஆனால் ஒலோகமாதேவி இறைவனுக்கு வைத்தப் பெயர் '**ஒலோகவிடங்கத்தேவர்**' என்பதாகும்.

> 1. ஸ்ரீ கோப்பரகேசரிவர்மரான ஸ்ரீ ராஜராஜ தேவர்க்கு யாண்டு 24வது (உயச) உடையார் ஸ்ரீ ராஜராஜதேவர் நம்பிராட்டியார் தன்தி சத்திவிடங்கியா ராந ஸ்ரீ ஒலோகமாதேவியார் வடகரை இராஜேந்த்ர ஸிம்ஹ வளநாட்டுப் பொய்கை நாட்டு திருவையாற்றுப்பால் நாம் எடுப்பித்த திருக்கற்றளி ஒலோகமாதேவி ஈஸ்வரம் உடைய மஹாதேவர்க்கும் ஒலோகவிடங்கதேவ ருள்ளிட்ட திருமேநிகளுக்கும் செய்வித்த பொற்கொள்கை முதலிய உள்ள திருவாபரணங்களும் திருப்பரிகலங்களும் கல்லிலே வெட்டுவிக்கபெற்று உடந்கூட்டத்து அதிகாரம் செய்கின்ற கோவலூருடையாந் காடந் னூற்றெண்மநையும் அதிகாரிச்சி எருதந் குஞ்சிரமல்லியையும் அருளிச்செய்ய கல்வெட்டினபடி....... கொள்கைத்தேவர் வளையிலிரண்டுள்படக் குடிஞைக்கல்லால் பொந் நிறை மூவாயிரத்திருநூற்றெழுபத்து முக்கழஞ்சும் பட்டம்....... (SII, vol.05.521 -பொ.ஆ.1009)

இக்கல்வெட்டு 150க்கும் மேற்பட்ட வரிகளைக் கொண்டுள்ளது. இராஜராஜ சோழனின் மனைவியருள் ஒருவரான ஒலோகமாதேவி தனது பெயரில் 'ஒலோகமாதேவீஸ்வரம்' என்ற திருக்கோயிலை ஏற்படுத்தி அதற்கான இறைவனுக்குப் பொன்னுடன் மாணிக்கம். இரத்தினம், முத்து போன்ற நவரத்தினங்களுடன் அணிகள் செய்யவும் தேவையான பாத்திர பண்டங்கள், பூஜைக்குத் தேவையான கலங்களான செம்பு, கலசம், சங்கு போன்றவைகளைச் செய்ய பொன், வெள்ளி, செப்பு போன்ற உலோகங்களைக் கொடையாக வழங்கியுள்ளார். அரசிகள் மிக நுட்பமான கலையுணர்வு கொண்டவர்களாகவுள்ளனர். இதே கல்வெட்டில்

7. செம்பில் மேற் பொந் கடுக்கின பாவைக் கண்ணாடியில் ஆடுகிற பாவை 8. ஒன்று மத்தளம் கொட்டுகின்ற பாவையொன்று பாடுகிற பாவையொன்று பிடமொன்று உள்ப்பட கண்ணாடி யொன்று நிறை எண்பதின் பலம் ..... என்று இடம்பெற்றுள்ளதைக் கொண்டு மக்கள் இறைபக்தி தொண்டுள்ளம் மட்டுமின்றி கலைதிறம் படைத்தவர்களாகவுமிருந்துள்ளனர் என்பது தெரிகிறது . இக்காலத்தில்கூட கண்ணாடிக்குள் பொம்மைகள் இருப்பதைப் பார்ப்பது நமக்கு வியப்பாக இருக்கும். 1000 ஆண்டுகளுக்கு முன்னரே இத்தகையக் கலைகள் பயன்பாட்டிலிருந்துள்ளன என்பதை அறியும்போது வியப்பாகவும் பெருமையாகவும் உள்ளது.

இவ்விதம் கோயில்கள் அமைத்து அவற்றிற்குக் கொடைகள் வழங்கும்போது அவற்றை மேற்பார்வை செய்வதற்கு அதிகாரிகளை நியமித்துள்ளமையை மேற்கண்ட கல்வெட்டு வாயிலாக அறிந்தோம். இத்தகைய மேற்பார்வை செய்பவர்கள் அரச, அரசிகளில் நேரடிக்கண்காணிப்பிலுள்ள உயர் அலுவலர்களாவர். இவர்கள் கண்காணிகள் என்றழைக்கப்

பெற்றுள்ளனர். இக்கண்காணிகளுள் ஆண் அதிகாரி ஒருவர் இருந்திருப்பதுபோல் பெண் அதிகாரி ஒருவரும் நியமிக்கப்பெற்றுள்ளார். இவர்கள் கிட்டத்தட்ட அரசின் தனிச் செயலர் (*personal secretary*) போன்று செயல்பட்டுள்ளனர். பேரரசியார் ஒலோகமாதேவியாருக்கு மேற்குறிப்பிட்ட '**எருதந் குஞ்சிரமல்லி**' என்பவர் அதிகாரிச்சியாக அதாவது தனிச்செயலராக நியமிக்கப் பெற்றுள்ளார். இவர் மல்யுத்தத்திலும் சிறந்து விளங்கியிருக்கக்கூடும். அதுபோல் குந்தவை பிராட்டியாருக்கு 'ஐயாறன் தேவி அம்மனார்' (*SII, vol.III,no132* -பொ.ஆ.*978*) என்பவர் அதிகாரிச்சியாக நியமிக்கப் பெற்றுள்ளார்.

இந்தப்பெண்கள் அரசியர்களின் பணிகளையும் கடமைகளையும் நிறைவேற்றும் பொறுப்பைப் பெற்றிருந்தனர். அரசியார்கள் தங்கள் ஆணைகளை நிறைவேற்ற அதிகாரிகளை நியமித்திருந்தனர் என்பதை மேற்குறிப்பிட்ட கல்வெட்டுத் தொடர்களால் அறியலாம்.

### அரசுப் பணியாளர்கள் - அணுக்கியர் - வேளத்துப்பெண்டாட்டிகள்

இன்று அரசுப்பணியில் பெண்கள் இடம்பெற்றிருப்பதைப்போல அக்காலத்திலும் அரண்மனைகளிலும், கோயில்களிலும் பெண்கள் பணிபுரிந்துள்ளனர். அரண்மனையில் பணிபுரிந்த பெண்களுள் 'அணுக்கியர்கள்' குறிப்பிடத்தக்கவர்கள். முதலாம் இராஜேந்திரனின் ஆசை நாயகி நக்கன் பரவைநங்கையார் மிகச்சிறந்த கலைஞரும் அணுக்கியருமாவார். கோயில் பணியாளர்களுள் தேவரடியார்கள் என்று குறிப்பிடப்பெறும் தளிச்சேரிப் பெண்டுகள் சமூகத்தில் அரச, அரசிகளுக்கு இணையாகத் தான, தர்மங்களைச் செய்துள்ளனர்.

### இராஜேந்திரசோழர் அணுக்கியார் - பரவை நங்கையார்

திருவாரூர் தியாகராஜர் கோயில் வடமேற்கு சுவரிலுள்ள முதலாம் இராஜேந்திர சோழரின் கல்வெட்டொன்று 'ஈசனைகுரைஉடையார் வீதிவிடங்கியார் விமானத்தை அணுக்கியார் பரவை நங்கையார் அருமொழிகூத்தன் என்பவர் பொன் வேய்ந்த செய்தியைத் தாங்கியுள்ளது. ஆனால் தற்போது விமானத்தில் பொன் இல்லை. இராஜேந்திர சோழர், அவரது அணுக்கியார், பரவைநங்கையார் இருவருக்கும் சிலை அமைத்ததோடு அதற்கு நந்தாவிளக்கேற்றுவதற்கும் கொடை அளித்துள்ளார் பரவை நங்கையார் என்றால், சமூகத்தில் இவர் பெற்றிருந்த உயர் தகுதி விளங்கும் . (*ARE, 1919: no.680*)

### சொத்துரிமை

இவ்விதம் நாடாளும் அரசர்களுக்கு இணையாகத் தானம் செய்யும் உரிமைகளை அரசியர், சிற்றரசிகளும் மட்டும் பெற்றிருக்கவில்லை. கோயில் பெண்களான தேவரடியார்களும், இல்லத்தரசிகளும் பெற்றுத் திகழ்ந்துள்ளனர். இத்தகைய பெருமளவிலானக் கொடைகளை உரிமைகளை வழங்கினால் மட்டுமே செய்ய இயலாது. செலவு செய்ய பொருளாதார வளமை வேண்டும். அத்தகைய பொருளாதார வளமைகளையும் சொத்துரிமைகளையும் பெற்றுள்ளனர். (*Lesslie C Orr, Donors and Devotees and Daughters of God (Temple women in medial Tamil Nadu, New York, Oxford, OUP, 2000, pp.73-74*))

பெண்களுக்கு அதிகாரம் அளித்ததால் ஆற்றல் மிகு சாம்ராஜ்யத்தையும் அறிவுமிகு சமூகத்தையும் உருவாக்கிற்று என்பதை மேலே கூறிய கருத்துக்கள் வாயிலாக அறிந்தோம். இன்பமும் துன்பமும் அனைவருக்கும் பொது. எல்லாக்காலங்களிலும் எல்லாரும் ஒரே நிலையில் இருப்பதில்லை! இன்பமும் துன்பமும் நிரந்தரமில்லை! எதுவும் கடந்து போகும். ஆண்டாண்டு காலமாய்ப் பெண்கள் அடைந்த துன்பத்தையும் அவல நிலைகளையுமே அதிக அளவில் பேசிவருகிறோம். இன்றுள்ளதுபோல் அவர்கள் அதிகாரம் செய்ததை ஆதிக்கம் செய்ததைப் பேசுவோமே என்ற சிந்தனையே இந்தப் பெண்ணதிகாரம் எழுதும் அதிகாரத்தை எனக்கு வழங்கியதெனலாம். பெண்ணதிகாரத்தைப் பேசவேண்டுமானால் ஒவ்வொரு பெண்களுக்கும் பல நூல்கள் எழுதலாம். கடல்போன்று செய்திகள் கல்வெட்டுக்களில் பொறிக்கப்பெற்றுள்ளன. காலமும் நூல்களில் தாள்களும் வரையறுக்கப் பெற்றிருப்பதால், பெண்ணதிகாரம் தொடரும்...

# தேவி தெய்வங்கள்

மு. மீனாட்சி,
முனைவர் பட்ட ஆய்வாளர் (ப/நே), நாட்டுப்புறவியல் துறை,
தமிழ்ப்பல்கலைக் கழகம், தஞ்சாவூர்.

**''பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் ''....** என்கிறார் வள்ளுவர். (குறள் 972)

**''ஒன்றறிவதுவே உற்றறி வதுவே;**
**இரண்டறி வதுவே அதனொடு நாவே;**
**மூன்றறி வதுவே அவற்றொடு மூக்கே;**
**நான்கறி வதுவே அவற்றொடு கண்ணே;**
**ஐந்தறி வதுவே அவற்றொடு செவியே;**
**ஆறறி வதுவே அவற்றொடு மனனே என**
**நேரிதின் உணர்ந்தோர் நெறிப்படுத் தனரே''** - (தொல், பொருள். 581)

என்று அறிவின்வழி உயிர்களை வகைப்படுத்தினார் தொல்காப்பியர், மெய்யுணர்வு மட்டும் கொண்ட ஓரறிவு உயிரான தாவரங்கள் முதலாக, மன அறிவுடன் சேர்ந்த ஆறறிவு உயிரான மனிதன் ஈறாக எல்லா உயிர்களும் சமம் என்று நோக்குதல் அறிவுடைமை.

**கற்காலம்**

மனித நாகரிக வளர்ச்சிப் படிநிலைகளில் தொடக்ககால மனிதன் - ஆண் தன் இருத்தலின் அவசியம் உணர்ந்தபோது அவன் தன்னுடனேயே திரிந்த பெண்ணையும் தன்னைப் போன்ற தொரு சக உயிராகவே கருதியிருக்கக் கூடும். மொழிகள் தோன்றாத காலம் இயற்கையின் ஒலிகள் மட்டும் எல்லாச் செவிகளிலும் நிறைந்திருந்த அன்றைய நாளில் உயிர்ப்பிழைத்தலே பெரிய சாதனையாக இருந்தபோது, அவளது குருதிப்போக்கு விலங்குகளை ஈர்ப்பதை அவன் அறிந்தபோது, விலங்குகளிடமிருந்து தப்பிப்பிழைக்க அவளை அதுபோன்ற சமயங்களில் அவன் தனித்திருக்கப் பழக்கினான்.

விலங்குகளை வேட்டையாடக் கற்றறியாத காரணத்தாலும், விலங்குகளால் தாம் வேட்டையாடப்படுவதைத் தவிர்க்க எண்ணியுமே அவன் இதைச் செய்திருக்கக் கூடும்.

**சமூக அமைப்பு**

இனக்குழு சமூகம் தோன்றிய பின்னர், மனித நாகரிகம் போலவே பாலின வேறுபாடும் வளரத் தொடங்கியது. மனிதன் தன் வாழிடங்களை ஐந்து திணைகளுக்குள்ளாக அமைக்கத் தொடங்கினான். முதல், கரு, உரி - என்று பொருள் பாகுபாடு தருகிறது நம் இலக்கணம்.

அந்தந்த திணைக்குரிய மக்களின் வாழ்வியல் இம்மூவகைப் பொருள்களோடும் பிணைக்கப்படுகிறது. ஐந்திணை மக்களும் தங்கள் வாழ்வியல் சூழல் சார்ந்து தத்தம் பண்பாட்டுக் கூறுகளில் மாற்றம் கொள்கின்றனர். அவற்றுள் பாலின சமத்துவம், பாலின ஏற்றத்தாழ்வும் சங்காலத் தமிழ்ச் சமூகம் தாய்வழி, தந்தை வழிச் சமூக அமைப்பைக் கொண்டதாக விளங்கியபாங்கை நமக்கு வெளிப்படுத்துகின்றன.

**சங்ககால தொழில்களும் பாலினச் சமத்துவமும்**

**குறிஞ்சி**

குறிஞ்சித்திணையில் வேட்டையாடும் தொழிலானது கூட்டுழைப்பாகக் கருதப்பட்டது. ஆண் வேட்டையாடிய உணவைப் பகிர்ந்தளிக்கும் பணி பெண்ணினுடையது.

> **''கானவன் எய்த முளவுமான் கொழுங்குறை**
> **தேம்கமழ் கதுப்பின் கொடிச்சி கிழங்கொடு**
> **காந்தள்அம் சிறுகுடிப் பகுக்கும்''** (நற் -85)

என்ற நற்றிணைப் பாடல் இதனைக் காட்சிப்படுத்துகிறது.

"சங்க இலக்கியஙகளில் 55 இடங்களில் பெண்கள் திணைப்புனக் காவலில் ஈடுபட்டிருந்ததை அறிய முடிகிறது". (இலக்கிய மானிடவியல், பக் 18)

திணைப்புனக் காவல் மட்டுமல்லாது குறிஞ்சி நிலத் தொழில்கள் பலவற்றிலும் பெண்கள் முக்கிய பங்கு பெற்றிருந்ததைப் பக்தவத்சல பாரதி பல இடங்களில் சான்று தந்து விளக்குகிறார்.

"கானக்குறவர்களின் பொருளாதாரத்தில் பெண்களின் பங்கே மிக அதிகம். காட்டெரிப்பு வேளாண்மையில் பெண்கள் விதைத்தல் தொடங்கி, களையெடுத்தல், திணை காத்தல், உணக்கல், கிழங்ககழ்தல், அறுவடை வரை எல்லாவற்றிலும் முக்கிய பங்கு பெற்றிருந்தனர். ஆண்களின் வேலைப் பகிர்வைக் காட்டிலும் பெண்களின் பங்கே மிகவும் அதிகமாகும். ஆண்கள் காட்டழிப்பிலும், வேட்டையிலும் அதிகம் ஈடுபட்டனர். மற்ற வேலைகள் அனைத்தையும் பெண்களே செய்தனர் ". (மேலது நூல். பக் 85).

**குறிஞ்சித்திணை பாலின சமத்துவம் பேணியதை,**

"காடு என்பது வேட்டுவ சமூகத்தார் அனைவருக்கும் பொதுவானது. இங்கு உடைமை என்பது அனைவருக்கும் பொதுவானது". (மேலும் நூல் பக் 125) என்ற கருத்தின் வழி அவர் விளக்குகிறார்.

**மருதம்**

பாலின சமத்துவமும், பெண்களுக்கான, முன்னுரிமையும் உழுது பயிரிடும் நீர்ப்பாசன வேளாண்மை ஏற்பட்ட பின்னர் குறைந்து போனதாக அவர் சுட்டுகிறார். எனவே, குறிஞ்சியில் தழைத்திருந்த பாலின சமத்துவமானது மருதத்தில் சருகாகத் தொடங்கியதை நாம் உணர முடிகிறது.

**முல்லை**

முல்லைத் திணையிலும் பெண்களின் முன்னுரிமை மறுக்கப்பட்டது. முல்லைத் திணையில் ஆண்கள் ஆநிரை மேய்ப்பதையும், பெண்கள் பால் பொருட்கள் விற்பதையுமே முதன்மைத் தொழிலாகக் கொண்டிருந்தனர். இங்கு பெண்களின் பொருளாதாரக் கடமை என்பது இரண்டாம் தரமானதாக ஆக்கப்பட்டது.

**நெய்தல்**

இத்தகையதொரு வளர்ச்சிப் படிநிலையில் நெய்தல் நிலப் பெண்கள் மிகுந்த சுயாட்சியும், பாலின சமத்துவமும் பெற்றிருந்தனர் என்பதைப் பின்வருமாறு முனைவர் பக்தவத்சல பாரதி தம் இலக்கிய மானிடவியல் நூலில் சுட்டுகிறார்.

"ஆடவர்கள் மீன்களைக் கரைக்குக் கொண்டு வந்து சேர்ப்பதோடு அவர்களுடைய பணி முடிவு பெறுகிறது. இளைப்பாறிவிட்டு வலையைச் செப்பனிடும் பணி மட்டுமே அவர்களுடையது. கரைக்கு வந்து சேர்ந்த மீன்களை அங்கேயே தம் சமூகத்தின் பெண்களுக்கு ஏலம் விற்றோ, அவற்றை வீதிகளில் சென்று விற்றோ பணமாக்கி, குடும்பத்திற்குத் தேவையான பொருட்களை வாங்கிக் கொண்டு வீடு திரும்புவது பெண்களின் பணியாகும். குடும்ப நிர்வாகம் பெரிதும் பெண்களைச் சார்ந்து விடுகிறது. (மேலது நூல். பக் 125).

இவ்வாறான சுயாட்சியே இன்றளவிலும், மீனவ இனப் பெண்கள் மத்தியில் தொழிலளவிலும் பொருளாதார அளவிலும் காணலாகிறது.

**சமகாலத் தொழில்களில் பாலின சமத்துவம்**

**குடும்பம்**

மனித இனம் பல்வேறு முயற்சிகளின் வழியே இன்றைய அறிவியல் உலகைக் கட்டியெழுப்பியுள்ளது. இன்றைய நாளில் எல்லாத்துறைகளிலும் பெண்களுக்கு வாய்ப்புகள் வழங்கப்பட்டாலும், அத்தனைத் துறைகளிலும் தம் கால்தடங்களைச் சிலப் பெண்கள் அழுந்தப் பதித்தாலும், சம வாய்ப்பும், சம உரிமையும் மறுக்கப்படுவது என்பது மறுக்க முடியாத உண்மை. பெண் கோட்பாடுகளும், கட்டுப்பாடுகளும் ஆண்களால் உருவாக்கப்பட்டு அவைப் பெண்களால் பின்பற்றப்படவே நிர்பந்திக்கப்படுகின்றன.

மனித சமூகத்தின் அடிப்படையான குடும்பமும், குடும்பம் என்ற அமைப்பின் அடிப்படை அழகான திருமணமும் பெண்களுக்கான பாலின சமத்துவம் பெறுவதில்

முதன்மையான தடைக்கற்களாக விளங்குகின்றன. கல்வியும், அதன்வழியான வேலைவாய்ப்பும் பெண்களை அடுத்த நகர்விற்குக் கொண்டு செல்ல முயலும் போது நகர்தலின் எல்லையைக் குடும்பம் என்னும் தாம்புக்கயிறே முடிவு செய்கிறது.

அவள் அறிவுப்புலத்தில் இயங்க எத்தனிக்கும் அதேவேளையில் அடுப்படியும் அவளை இருகப் பிணைத்துக்கொள்கிறது. அவளால் ஓரளவேனும் பொருளாதாரச் சிக்கல்களைத் தீர்க்க முடியுமெனில் அவள் தன் புற உலகில் அலுவல் நிமித்தம் சென்றுவர வாய்ப்பளிக்கப்படுகிறாள். ஏனைய நேரங்களிலெல்லாம் வீட்டுச் சிறைக்குள் அறிவொடுக்கி, புலனடக்கி இதுவரைக் கற்பிதம் செய்யப்பட்ட பெண்ணுக்கானத் தகுதிகளோடே உழன்றும், மடிந்தும் போகிறாள் என்பதே நிதர்சனம்.

## பொதுவெளி

பெண்ணைப் பேசுபொருளாக்கும் இந்தச் சமூகம் பெண் பேசும் பொருள்களுக்கென்று வரையறை உள்ளது. பாலியல் சார்ந்து பேசுதல் என்பது மறைமுகமாக மறுக்கப்படுவதும், பேச நேர்ந்தால் நேரிடையாக எதிர்க்கவும், வெறுக்கவும் செய்யக்கூடியச் சூழலே இன்றும் நிலவுவது பெரியாரின் மண்ணில் பெரும் பிழை என்றே கருத ஏதுவாகிறது.

ஆசிரியப்பணி, அலுவலகம், தொழில்துறை, தொழில்நுடபத்துறை, அரசியல், ஊடகம் என்று எல்லாத் துறைகளிலும் பெண்கள் சாதனைப் படைத்தாலும், விமர்சனங்களுக்கு அப்பாற்ப்பட்டவர்களாக அவர்கள் இருக்க முடிவதில்லை. தவறுகளைச் சுட்டிக்காட்டி கண்டிக்க முடியாமல் ஓயும்போது கண்டுகொள்ளாமல் செல்லவே அவள் நிர்பந்திக்கப் படுகிறாள்.

## தேவி தெய்வங்கள்

"நம் சமூகத்தின் ஆதி விவசாயிகளான பெண்கள் பயன்படுத்திய 'தோண்டுகழி' என்ற விவசாய கருவியின்படி மலர்ச்சியே தாய் தெய்வக்கோயில்களில் அம்மனின் கையில் இருக்கும் சூலாயுதமாகும்". (இலக்கிய மானிடவியல் பக்.224)

- என்ற கருத்தின் வழியாக, வோளாண் தொழில்நுட்பம் கற்ற ஒரு விவசாயப் பெண்ணை ஆயுதம் ஏந்தச் செய்தது எந்த சமூக நெருக்கடியோ என்று எண்ணத் தோன்றுகிறது.

**நம் சமூகத்தில் இறைவிகளை மூவகையாகப் பகுப்பர்.**

1. "திருமணத்தின் வாயிலாக ஆணின் கட்டுப்பாட்டிற்குள் இன்னும் வராதவர்கள். இவர்கள் கன்னி நிலையிலேயே காட்சி தருவதால் 'கன்னித் தெய்வங்கள்' எனப்படுகின்றனர்.
2. ஆணின் கட்டுபாட்டிற்குள் தொடர்ந்து இருப்பவர்கள். இவர்கள் கணவன்- மனைவியாகக் காட்சித்தரும் 'மனைவி தெய்வங்கள்' என்று வகைப்படுத்தப் படுகின்றன.
3. ஆணின் கட்டுப்பாட்டிற்குள் வந்து பின்னர் விலகியவர்கள். இவர்கள் கணவனுடன் இல்லாமல் தனித்த அடையாளத்துடன் வழிபடப்பெறுவதால் 'தேவி தெய்வங்கள்' எனப்படுகின்றனர்.

*கன்னி, மனைவி, தேவி என்ற படிநிலையில் ஏழு கன்னியர் கன்னி தெய்வங்களாகவும், சிவன், சக்தி, திருமால், திருமகள் போன்றோர் மனைவித் தெய்வங்களாகவும், காளி, அங்காளம்மன், மாரியம்மன், திரெளபதியம்மன் போன்றோர் தேவி தெய்வங்களாகவும் வணங்குவதற்குரியராக உள்ளனர்.*

*"நாட்டார் தெய்வங்களில் கன்னித் தெய்வங்களும் தேவி தெய்வங்களும் 'இரட்டை நிலை' சார்ந்தவர்கள். இரட்டைநிலை சாமிகள் ஆக்ரோ நிலையில் இருப்பர். அமைதியான நிலையிலும் இருப்பர். ஆக்ரோ நிலையில் கட்டுக்கடங்காத ஆவேசத்தையும், ஆற்றலையும், கோபத்தையும் வெளிப்படுத்துவர்" (இலக்கிய மானிடவியல் பக். 281).*

*என்ற கருத்து இன்றைய சூழலோடு பெரிதும் பொருந்திச் செல்கிறது. தன் மதிப்பு மறுக்கப்படும் இடங்களிலெல்லாம் மனைவித் தெய்வங்கள் தேவி தெய்வங்களாக மாறவேண்டிய சூழல் ஒவ்வொரு நாளும் உருவாகி வருவதை பாலின சமத்துவம் மறுக்கப்படும் இடங்களிலெல்லாம் நாம் காணலாம்.*

*இறுதியாக உடலியல், உளவியல் சார்ந்த வேறுபாடுகள் நீங்கலாக பிற அனைத்திலும் ஆணும், பெண்ணும் சரிநிகரானோரே. இதையே பாரதியும், பாரதிதாசனும் பாடி வைத்தனர். சமூக செயல்பாட்டாளர்களும், சீர்திருத்தவாதிகளும் உலகளவில் முழங்கிச் சென்றனர், செல்கின்றனர். அவளது அறிவுலகில் காயசண்டிகை பசிக்கு ஆதிரைப் பருக்கைகளுக்காய் அலையும்போது குடும்பங்கள் அட்சயபாத்திரங்களை மறைத்து வைப்பதை நிறுத்துவதே பாலின சமத்துவத்திற்கான முதற்படி.*

# மக்கள் சாதன ஊடகமும் சமூகப் பாலினமும்

ரா. ஜெயஸ்ரீ
முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ் உயராய்வுத் துறை,
விவேகானந்தா கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி (தன்னாட்சி),
எளையாம்பாளையம், திருச்செங்கோடு, நாமக்கல் மாவட்டம்

**முன்னுரை**

சுபீட்சமான ஒரு சமூகத்தை கட்டி எழுப்புவதற்கு பாலின சமுத்துவம் அவசியமானது. உயிரியல் வகைப்பாட்டின் அடிப்படையில் ஆண் என்றும் பெண் என்றும் வேறுப்படுத்திப் பார்க்கப்படுவது பால் எனப்படுகிறது. பாலினம் என்பது குணவியல்பு, ஆண்மை மற்றும் பெண்மைக்கு இடையிலுள்ள வேறுபாடுகள் ஆகும். சமுகத்திலுள்ள அனைத்து பாலினத்தவரும் சம உரிமைகளோடு வாழ வேண்டும் என்பது 'பாலின சமத்துவம்' எனப்படுகிறது. மரபு வழியாக காணப்படும் பல்வேறு காரணங்களினால் பாலின சமத்துவத்தை நடைமுறைப்படுத்துவது கடினமாக உள்ளது.

**மக்கள் சாதன ஊடகத்தில் பாலினத்தின் பங்கு**

மக்கள் சாதன ஊடகங்கள் தங்களது விளம்பரம், நிகழ்ச்சிகள் மற்றும் செய்திகள் மூலமாக தொடர்ந்து தாக்குதல் நடத்திக் கொண்டே இருக்கின்றன. இவ்வாறு நமது கருத்தையும் கவனத்தையும் தினம்தோறும் கவருகின்ற மக்கள் சாதன ஊடகங்களில் ஆண்கள் மற்றும் பெண்களின் பங்கேற்பு என்பது சமூகப் பாலின சமத்துவமின்மையை நமக்கு தெரிவிக்கின்றது. இந்த ஊடகங்களில் குறிப்பாக தொலைக்காட்சிகளில் வரும் காட்சிகள் மற்றும் நிகழ்ச்சிகளில் பெண்களின் பங்கு குறைவாக இருப்பதோடு அவர்களை குடும்பத்தைப் பராமரிப்பவர், உணர்ச்சி வசப்படுபவர் மற்றும் ஆணாதிக்கத்தை ஏற்றுக் கொள்பவர் என்கிற அடிப்படையிலான நிகழ்ச்சிகளில் காட்டப்படுகின்றன.

இதுபோல் இளைய சமுதாயத்தினருக்கு ஆண் என்பவர் வலிமை மிக்கவராகவும்,

சுதந்திரமாக தமது வலிமையை வெளிப்படுத்துபவராகவும் அவர்களிடம் பெண் தன்மை இல்லை என்கிற அடிப்படையில் காட்டப்படுகிறது . ஒரு பெண்ணுக்கு எது தேவை, எது தேவை இல்லை என்பதை ஆண்கள் தான் தீர்மானிக்க வேண்டும் என்ற அடிப்படையிலான நிகழ்ச்சிகள் ஊடகங்களில் வலியுறுத்தப்படுகிறது.

**புத்தகங்கள் மற்றும் மாத வார இதழ்களில் சமூகப்பாலினம் :**

வார மற்றும் மாத இதழ்களில் பெண்களின் உடல் உறுப்புகளை காட்சிப்படுத்துவதும் செய்தி மூலம் விளம்பரப்படுத்தும் வியாபார உத்திகளும் கடைப்பிடிக்கப்படுகின்றன. இதனால் பெண்களையும் ஆண்களையும் மனிதர்களாகக் கருதாமல் வியாபார பொருளாகக் கருதும் மனப்போக்கு உருவாகியுள்ளது. இதுபோல் தற்போதுள்ள புத்தகங்களில் வியாபார உத்தியாக ஆண்கள் மற்றும் பெண்கள் இடையே கலாச்சாரம், பாலுணர்வு அல்லது சமூக பாலினத்தில் வேறுபாடுகளை உருவாக்கும் சூழ்ச்சிகள் நடைபெற்று வருகிறது.

**தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் சமூகப் பாலினம் :**

தொலைக்காட்சிகளிலும் கடந்த 20 வருடங்களாகச் சமூகப்பாலினம் சார்ந்த காட்சிகளில் பெரும் மாற்றம் ஏற்பட்டுள்ளது. இக்காட்சிகளில் திருமணம், வீட்டுப் பராமரிப்பு போன்றவைகள் பெண்களுக்கு அதிக முக்கியத்துவம் வாய்ந்ததாகக் காட்டப்பட்டது.

**திரைப்படங்களில் சமூகப் பாலினம்**

ஆரம்ப காலத்தில் திரைப்படங்களின் தாக்கம் தொலைக்காட்சிகளை விட மிக அதிகமாக இருந்த காலத்தில் ஆண்களின் கதாபாத்திரங்களில் ஆண்கள் மட்டுமே புத்திசாலிகளாகவும் தன்னிறைவு உடையவர்களாகவும் காண்பிக்கப்பட்டு முக்கிய கதாபாத்திரமாகச் சித்தரிக்கப்பட்டது. அப்படங்களில் பெண்களின் கதாபாத்திரங்கள் ஆணுக்கு உதவி புரிந்து அவரை விரும்புபவர் போலவும் காட்சிகள் இடம் பெற்றிருந்தன.

அப்பெண்கள் ஆண்களைச் சார்ந்து இருக்கும் நிலைமையையும் முடிவெடுக்கும் திறன் இல்லாமலும் காட்சிப்படுத்தப்பட்டது. சமீப காலத்தில் பெரும்பாலான திரைப்படங்கள் பெண்களின் உடலுக்கும் அவர்களது கவர்ச்சிக்கும் அதிக இடம் அளித்து பெண்களைக் காட்சிப் பொருளாக மாற்றி அமைத்துள்ள ஆபாசப் பாடல்கள் நிறைந்த திரைப்படங்கள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. மேலும் ஆண் கதாபாத்திரங்கள் வன்முறையும் விரும்பாத செயல்களைச் செய்பவராகவும் கதாநாயகர்களின் துணிவும் நியாயமான செயல்பாடும் கொண்டதாகத் திரைப்படங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

**விளம்பரப் படங்களில் சமூகப்பாலினம்**

விளம்பரப்படங்கள் பெரும்பாலும் பெண்களின் அழகுணர்ச்சியை மையமாகக் கொண்டு வியாபார நோக்கத்துடன் எடுக்கப்படுகின்றன. பெரும்பாலான விளம்பரப் படங்களில் பெண்கள் தங்களது பாரம்பரியமான சமூக வார்ப்புகளாகவே காட்சிப்படுத்தப்படுகின்றன. விளம்பரக் காட்சிகளில் நடத்தப்பட்ட காட்சிகளில் தோன்றும் ஆண்கள், பெண்களின்

வார்த்தைகளிலும், உடல் மொழிகளிலும் சமூக பாலின வார்ப்புகள் அதிகமாகக் பிரதிபலிப்பதாக கண்டறியப்பட்டுள்ளது. எல்லா விளம்பரப்படங்களிலும் பெண்கள் ஆதிக்கம் செலுத்தப்படுபவராகக் காட்டாமல் பலவீனமாகவும் ஆண்களை எல்லாவற்றுக்கும் சார்ந்து இருக்குமாறும் காட்டப்படுகிறது விளம்பரக்காட்சிகள் வியாபார நோக்கமாக இருப்பதால் பெண்கள் சமூக வார்ப்புகளாகவும் பாலுணர்ச்சியைத் தூண்டுபவராகவும் காண்பிக்கப்படுவதோடு ஆண்கள் ஆதிக்கம் செலுத்துபவர்களாகவும் காண்பிக்கப்படுகிறது.

## ஐஸ்லேண்டின் பாலின சமத்துவம்

144 நாடுகளைக் கணக்கில் கொண்டு, World Economic Forum 2017 இல் வெளியிட்டுள்ள அறிக்கையின் படி, பாலினச்சமத்துவத்தில் முதலிடம் வகிக்கிறது 'ஐஸ்லேண்ட்'. இது 2017 ஆம் ஆண்டு நிலவரம் மட்டுமல்ல. தொடர்ந்து 9 ஆண்டுகளாக ஐஸ்லேண்டே முதலிடம் வகிக்கிறது. கடந்த 9 ஆண்டுகளாகப் பெண்கள் மனிதர்களாக வாழ்வதற்கு மிகச் சிறந்த இடமென்ற பெருமை ஐஸ்லேண்ட் நாட்டிற்குத் தான் உள்ளது!

பல்வேறு போராட்டங்கள் மற்றும் சட்டங்கள் மூலம் தான் அந்நாட்டில் இப்படிப்பட்ட நிலை சாத்தியப்பட்டுள்ளது. இன்னும், ஐஸ்லேண்ட் திரையுலகு போன்ற சில துறைகளில் ஆண் பெண் சமநிலை உருவாகவில்லை. எனினும், 87.8ரு சமத்துவத்தை அந்நாடு அடைந்துள்ளது என்கிறது அந்த அறிக்கை. 144 நாடுகளில் 108 வது இடத்தில் உள்ள இந்தியா போன்ற நாடுகள் ஐஸ்லேண்டிடம் கற்றுக் கொள்ள வேண்டிய பாடங்கள் ஏராளமாய் உள்ளன.

## பாலினச் சமத்துவம் பற்றிய வகுப்புகள்

பணியிடங்களில் பெண்களின் நலனுக்கென சட்டங்கள்; ஊடகங்களில் பெண்களைப் பாலியல் பண்டங்களாகச் சித்தரிக்கத் தடை; பாலினப் பாகுபாடுகளை விதைக்கும் விளம்பரங்களுக்குத் தடை; 'ஸ்ட்ரிப் கிளப்' எனப்படும் வக்கிரமான கேளிக்கைக்குத் தடை என பல நடவடிக்கைகள் மூலம் பெண்களை மனிதர்களாக்கியுள்ளது ஐஸ்லேண்ட்!

பெண்களின் உரிமைகளுக்கு ஆதரவு தரும் வகையிலும், பாலின பாகுபாடுகளுக்குத் தண்டனையை வழங்கும் வகையிலும், ஐஸ்லாந்தில் உள்ள சில முக்கியமான சட்டங்கள் உள்ளன.

## மகளிர் சமத்துவத்தைப் பாதுகாக்கும் சட்டம்:

ஆண்- பெண் சமநிலை, சம உரிமைகளுக்கென உள்ள சட்டம் ஐஸ்லேண்டின் பாலின சமத்துவத்தின் ஒரு முக்கிய அம்சமாகும். 2000 ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட இச்சட்டமானது, 2008ம் ஆண்டில் சீரமைக்கப்பட்டது. அரசாங்கமும், வணிகங்களும் பின்பற்ற வேண்டிய பாலியல் சமத்துவம் குறித்த தகவலை உள்ளடக்கியது இந்தச் சட்டம். பாலினப் பாகுபாடுகள் நடக்கும் ஒன்பது இடங்கள் இச்சட்டத்தில் வரையறுக்கப்பட்டுள்ளது. பாலின பாகுபாடுகளில், நேரடியான அல்லது மறைமுகமான பாகுபாடுகளெனப் பிரித்து அடையாளம் காண்கிறது இச்சட்டம்.

## பாலின சமத்துவமின்மை

பாலின சமத்துவமின்மை என்பது ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையில் எழும் ஏற்றத்தாழ்வுகளைக் குறிக்கிறது. இன்றும் கூட அநேக இடங்களில் ஒரே மாதிரியான வேலைகளைச் செய்யக்கூடிய ஆண்களுக்கு அதிக ஊதியமும், பெண்களுக்கு குறைவான ஊதியமும் வழங்கும் நிலைதான் காணப்படுகிறது. கல்வி, உயர்ந்த பதவிகள், பொருளாதார வளர்ச்சி, சமூகப்பொறுப்புகள் போன்றவற்றில் தற்போது பாலின சமத்துவம் என்பது சற்று முன்னேற்றம் காணப்பட்டாலும், சாதாரண மனிதர்களுடைய வாழ்வில் அந்தச் சமத்துவம் இல்லை என்றே கூறலாம்.

## பாலின சமத்துவமின்மையாலான சவால்கள்

பாலின சமத்துவமின்மை ஒரு நாட்டின் வளர்ச்சிக்குத் தடையாக உள்ள முக்கிய காரணங்களில் ஒன்றாகும். ஆண்களை வலிமை மிக்கவர்களாகவும், பெண்களை மென்மையானவர்களாகவும் நோக்குகின்ற இந்தச் சமூகத்தின் பார்வையே தவறானதாகும். பாலியல் முறையில் பிரச்சனைகள் ஏற்படுவதற்கும் இதுவே காரணமாக அமைகின்றது. வீட்டை விட்டு வெளியே போகும் பெண்களைக் "கவனமாக இரு, யாரிடமும் அநாவசியமாக பேசாதே" என ஆயிரம் அறிவுரைகளைக் கூறும் சமூகம், வீட்டை விட்டு வெளியே செல்லும் ஆணைப் பார்த்து "ஒழுங்கான, யோக்கியமான ஆண்மகனாக நடந்துகொள்" என்று அறிவுரை சொல்கிற காலம் வந்தால் மட்டுமே பாலியல் முறையில் பிரச்சனைகளுக்கு தீர்வு கிட்டும்.

## பாலின சமத்துவத்தின் முக்கியத்துவம்

அனைத்து பாலினத்தவரும் தமது தனிப்பட்ட திறனை மேம்படுத்திக் கொள்ளவும் தங்களது விருப்பங்களை எவ்வித கட்டுப்பாடுமின்றி நிறைவேற்றிக்கொள்ளவும் பாலின் சமத்துவம் முக்கியமாகின்றது. பெண்களும் ஆண்களும் சமமாக நடத்தப்பட வேண்டும் என்பது அவர்களுக்கான உரிமைகள், பொறுப்புக்கள், வாய்ப்புக்கள் ஆகியவை ஆண், பெண் என்பதை பொறுத்து வேறுபடக்கூடாது. பாலின சமத்துவமானது பெண்களுக்கு எதிரான வன்முறைகளிலிருந்து பாதுகாத்துக் கொள்வதற்கும், பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கும், மனித உரிமையை நிலைநாட்டுவதற்கும், ஓர் ஆரோக்கியமான சமூகத்தைச் கட்டியெழுப்புவதற்கும் அவசியமாகின்றது.

## முடிவுரை

சமூகத்திலுள்ள அனைவருக்கும் சமமான உரிமைகளை வழங்குவதனூடாக பாலின சமத்துவத்தை ஏற்படுத்த முடியும். பாலின சமத்துவமின்மை என்பது மனித குலத்தின் சாபக்கேடு. இவ்வுலகில் யாரும் யாருக்கும் தாழ்ந்தவர்களல்ல என்பதை அனைவரும் உணர வேண்டும். எவ்வித பாகுபாடுகளுமின்றி சகமனிதனை மனிதனாக மதிக்கும் மனப்பாங்கை வளர்த்துக் கொள்வதனூடாகப் பாலின சமத்துவத்தைக் கட்டியெழுப்ப முடியும்.

# பெண் ஒரு பன்முகப் பார்வை

இரா.இரேவதி
முனைவர் பட்ட ஆய்வாளர், மெய்யியல் துறை,
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

**முன்னுரை**

**"அன்பும் ஆர்வமும் அடக்கமும் சேர்ந்தும்
உண்மைத் தன்மையும் உறுதியும் மிகுந்தும்
தன்னல மறுப்பும் சகிப்புத் தன்மையும்
இயல்பாய் அமைந்தும் இன்பச் சொரூபமாய்த்
தாயாய் நின்று தரணியைத் தாங்கும்
தாரமாய் வந்து தளர்வைப் போக்கும்
உடன்பிறப் பாகி உறுதுணை புரியும்
மகளாய்ப் பிறந்து சேவையில் மகிழும்
அயலார் தமக்கும் அன்பே செய்யும்
நாணம் கெடாமல் நட்புகொண் டாடும்"** *2*

நாமக்கல் கவிஞரின் இப்பாடல் வரிகளின் மூலம் நாம் அறிவது யாதெனில், ஆதி காலத்தில் இருந்தே மனித இனம் பெண்ணைச் சார்ந்து வாழ்ந்து வருகிறது. பெண் என்பவளே குடும்பத்தை வழிநடத்தும் முக்கிய பொறுப்பில் இருக்கின்றார். நமது சமூக கட்டமைப்பானது. ஆண் என்பவன் வெளியில் சென்று பொருளீட்டவும், பெண் என்பவள் வீட்டில் இருந்து வீட்டை நிர்வகிக்கவும், இரு வழி உறவினர்களின் நலன், பிள்ளைகளின் பாதுகாப்பு, நலன் என அனைவரையும் அன்பாக பார்த்துக் கொள்ளும் கடமையில் இன்றளவும் இருந்து வருகிறாள். எனவே, ஒரு குடும்பம், குடும்பத்தைச் சுற்றியுள்ள சமுதாயம் என்ற இரண்டிலும் பெண்களின் பங்குத் தவிர்க்க இயலாத ஒன்றாகும்.

இன்றும் பெண்களைக் குலதெய்வங்களாகவும், வீட்டுத்தெய்வங்களாகவும் நாம் வழிபாடுகள் செய்து வருகிறோம். இவ்வாறு சங்க இலக்கியம் முதல் இன்று வரை பெரும்பாலும் பெண்களின் பங்கு அகம்நோக்கி அதிகமாகவே இருந்து வருகிறது. ஆனால்,

ஒரு நாட்டின் வளர்ச்சி என்பது அந்நாட்டின் மக்களின் வளர்ச்சியைச் சார்ந்ததாகும். இங்கு மக்கள் என்பது ஆண், பெண் இருபாலரையும் சார்ந்ததாகும். இதனைக் கருத்தில் கொண்டு அந்நாட்டுப் பெண்களைப் புறம்நோக்கி வளரப் பல வகையில் அவர்களுக்குப் பலர் இன்றளவும் உதவி வருகின்றனர்.

## பெண்ணின் சிறப்பு

**"அம்மையே அப்பா ஒப்பில்லா மணியே"**3

என்று இறைவனை, மாணிக்கவாசகர், தாயாகப் பாவித்து போற்றுகிறார். பெண்மை என்பது தாய்மை ஆகும். தாய்மை என்ற உணர்வு பிறப்பிலேயே உள்ள ஒரு குணமாக அவர்களுக்கு அமைந்துள்ளது.

## தமிழ் மொழியும் தமிழ் அன்னையும்

ஓர் உயிரினம் மற்றொரு உயிரினத்தினிடம் தனது தேவைகளைப் புரிய வைக்க, முதலில் செய்கைகளையும், ஒலிகளையும் பின்பு வார்த்தைகளையும் பயன்படுத்தியுள்ளனர். அவ்வாறு வளர்ச்சிப் பெற்ற வார்த்தைகளின் மூலமே இன்று சமூகத்திற்குத் தனித்துவமான மொழி உண்டாயிற்று. நமது நாட்டு மொழியினை நாம் தாய்மொழி என்றே இன்றும் அழைக்கின்றோம். நம் தாய் மொழியானத் தமிழ் மொழியைத் தமிழ் அன்னை என்றும் அன்னையின் அணிகலன்களே ஐம்பெரும் காப்பியங்களில் என்றும் நமது சங்க இலக்கியச் சான்றோர்கள் பெருமைப்படுத்தியுள்ளனர்.

**"காதொளிரும் குண்டலமும் கைக்கு**
**வளையாபதியும் கருணை மார்பின்**
**மீதொளிர் சிந்தாமணியும் மெல்லிடையில்**
**மேகலையும் சிலம்பார் இன்பப்**
**போதொளிர் பூந்தாமரையும் பொன்முடி**
**சூளாமணியும் பொலியச் சூடி**
**நீதியொளிர் செங்கோலாய்த் திருக்குறளைத்**
**தாங்கு தமிழ் நீடு வாழ்க!"4**

என்ற கவியின் மூலம் இந்த ஐந்து அணிகலன்களும் தமிழ் அன்னையை அலங்கரிப்பது மட்டும் அல்லாது ஐம்பெரும் காப்பியங்களைக் குறிக்கிறது. மேலும், இக்காப்பியம் பெண்களைக் காப்பியத் தலைவியாகக் கொண்டு அவர்களது வரலாற்றினைச் சங்க இலக்கியத்தின் வாயிலாக எடுத்துக்காட்டி உள்ளனர்.

## இலக்கியத்தில் பெண்கள்

செவ்விலக்கியங்கள் முதல் நவீன இலக்கியங்கள் வரைப் பெண்கள் பற்றியச் செய்திகள் இடம் பெறாத இலக்கியங்களே இல்லை எனலாம்.

**"செறிவும் நிறைவும் செம்மையுஞ் செப்பும்**
**அறிவும் அருமையும் பெண்பா லான"5**

அடக்கம், அமைதி, நேர்மை, சொல்வன்மை, நன்மைத் தீமைகளைப் பிரித்து

ஆராயும் அறிவு போன்றச் சிறந்தப் பண்புகள் பெண்களின் குணங்களாக இருப்பது தொல்காப்பிய நூலின் வாயிலாக நாம் தெரிந்து கொள்ள முடிகிறது. இதுபோன்றே நவீன இலக்கியங்களிலும் பெண்களின் நிலைகள் பற்றி நாம் அறிந்து கொள்ள பாரதிதாசனின் கீழ்க்கண்டப் பாடல் வரிகள் நமக்கு எடுத்துக்காட்டுகளாக அமைந்துள்ளது.

**"மகளிரெல்லாம் கல்வியறி வொழுக்கமுள ராயின்**
**மருத்துவமே வேண்டாவாம் பிணிமூப்பு வாரா.**
**மகளிரெல்லாம் அரசியலைக் கைப்பற்றி ஆண்டால்**
**மாநிலத்தில் போரில்லை சாக்காடும் இல்லை**
**துகளில்லா ஒருசிறிய உலகுண்டு கேட்பீர்**
**தொல்லையில்லா அவ்வுலகம் யான்வாழும் இல்லம்**
**பகையில்லை அங்கின்மை இல்லை பிணி இல்லை**
**பழியில்லை என்துணைவி அரசாண்ட தாலே"6**

ஒரு பெண் ஒவ்வொரு துறையிலும் சாதித்தால் அத்துறை எவ்வாறு சிறந்து விளங்குகிறது என்பதையும், பெண்ணின் பங்கு எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது என்பது நாம் இதன் மூலம் அறிந்து கொள்ள முடிகிறது.

## இல்லறம்

நமது இந்தியச் சமூக அமைப்பில் இல்லம் என்பது கணவன், மனைவி இணைந்து வாழும் வாழ்வினைக் குறிக்கிறது.

**"தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற**
**சொற்காத்துச் சோர்விலாள் பெண்"7**

இக்குறளின் மூலம் ஒரு பெண் கற்பு நெறி தவறாமல் அவளையும் காத்துக் கணவரையும் காத்துப் பரம்பரையாக வந்து கொண்டுள்ள புகழையும் காத்து உறுதியோடு வாழ்ந்து வருகிறாள் என்பது, தெரிய வருகிறது. நமது பண்பாட்டின்படி எந்த ஒரு பெண்ணும் திருமணம் முடிந்தப் பிறகு, தம் தாய் வீட்டில் இருந்து அனைத்தையும் துறந்து தன் கணவன் வீட்டிற்குச் செல்கிறாள். அது அவளுக்கு ஒரு புதிய பிறப்பு போன்றதே.

அதன் பிறகு அவள் கணவன், குழந்தைகள் என அவர்களது வாழ்வு காலம் பெரும்பாலும் அதிலேயே நிறைவடைந்து விடுகிறது. ஆனால் ஓர் ஆண் என்பவன் தனது பள்ளிக், கல்லூரி, அலுவலகம், ஓய்வு காலம் என தன் வாழ்வின் அனைத்துப் பகுதிகளிலும் தன் உறவினர்களையும், தன் நட்பு வட்டத்தையும் இழக்காமல் பயணிக்கிறான். ஆனால் பெண் என்பவள் திருமணம் முடிந்ததும் தன் கணவனின் உறவுகளுக்கும், நட்புகளுக்குமே முன்னுரிமை தரும் சூழ்நிலை என்பது இயல்பாக அவளுக்கு வந்துவிடுகிறது. ஒரு சில பெண்களே பள்ளி, கல்லூரி என்ற கட்டத்தினைத் தாண்டி திருமணத்திற்குப் பின் ஒரு சில சாதனைகள் செய்ய முடிகிறது. ஆனால் பெரும்பாலான பெண்களுக்கு அவர்களது உலகம், வாழ்வு என்பது கணவன், குழந்தைகளைச் சார்ந்தே முடிந்து விடுகிறது. இவ்வாறு ஒரு பெண்ணுக்குத் திருமணம் என்பது தியாகமாக மாறிவிடுகிறது.

## சமூக சேவைகள்

ஒரு குறிப்பிட்டப் பகுதி மக்கள் குழுவாக வாழும் அமைப்பே சமூகம் ஆகும். இச்சமூகம் முன்னேற்றம் அடைய ஒரு சில பெண்களே அச்சமுகத்திற்கு உறுதுணையாக நின்றனர். எடுத்துக்காட்டாக: சகோதரி சுப்புலட்சுமி என்று அன்புடன் அழைக்கப்படும் இவர் "1886ம் ஆண்டு பிறந்தவர். இவர் கைம்பெண் காவலர்"8 என்று போற்றப்படுகிறார். இளம் விதவைப் பெண்களின் வாழ்வு உயர்வதற்கு மறுமணத்தை விட கல்வியே சிறந்தது என்று நம்பிக்கையை எல்லாருக்கும் அளித்தவர்.

நமது குடும்ப அமைப்பு என்பது பெண்கள், கணவனைச் சார்ந்து இருப்பதால், அக்கணவன் சமுதாயத்தில் வெற்றி பெற பெண்களே அவர்களுக்கு எல்லாவற்றிலும் ஆதரவாக இன்றளவும் இருந்து வருகின்றனர். என்பதை நம் வரலாற்றின் மூலம் அரிய முடிகிறது. அகத்தியருக்கு லோபமுத்ரா, வள்ளுவனுக்கு வாசுகி, பாரதிக்குச் செல்லம்மா போன்ற பல பெண்கள் குடும்பப் பின்னணியில் இருந்து கொண்டு அவர்களுக்கு மனைவியின் கடமைகளைச் செய்து கொண்டும், அவர்களின் சமூக சேவைகளுக்கும் ஆதரவாக இருந்தனர். இவர்களைப் போல் பல பெண்கள் இன்றளவும் இருப்பதைக் காண முடிகிறது.

‘ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம்’ என்பது போல் உதாரணமாக அன்னை சாரதா தேவி அவர்கள் வாழ்வில் நடந்த நிகழ்வு ஒன்று ஜெயராம் பாடியில் "1853 இல் பிறந்தவர். தனது ஐந்து"9வயதில் ராமகிருஷ்ண பரமஹம்சரைத் திருமணம் முடித்தார். திருமணம் முடிந்தும் தனது தாய் வீட்டிலேயே வாழ்ந்த இவர், தனது கணவனின் உடல் நிலையைக் கருத்தில் கொண்டு அவரைக் காணத் தட்சிணேஸ்வரம் சென்றார். அப்போது ராமகிருஷ்ண பரமஹம்சர் இல்லறத்திற்கு என்னை அழைக்க வந்தாயா? எனக் கேட்டார். அப்போது அன்னை சாரதா தேவி உங்களுக்கு சேவைச் செய்யவே வந்தேன் என்று கூறி பதின்மூன்று ஆண்டுகள் அவருக்கு சேவைப் புரிந்தார் இந்தக் காலக்கட்டத்தில் ஒரு தவ வாழ்வையே அவர் மேற்கொண்டார். தனது கணவரின் இறப்பிற்குப் பிறகு வெளியுலக அனுபவங்கள் இல்லாத இவரே ராமகிருஷ்ண மடத்தை நிறுவினார். இன்றளவும் உலகம் முழுதும் சிறப்பாக இம்மடங்கள் இயங்குவதற்கு இவரின் பங்கு என்பது இன்றியமையாதது ஆகும்.

## அரசியல்

டாக்டர் "முத்துலட்சுமி ரெட்டி"10 அவர்கள் சட்டமன்றத்தின் உறுப்பினராகப் பணியாற்றிய முதல் பெண்மணி ஆவார். இந்தியாவின் முதல் சுகாதார அமைச்சர் "ராஜ்குமாரி அமிருத கௌர்"11 இவரே பின்னாளில் உலக சுகாதார நிறுவனத்தின் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆசியாவின் முதல் பெண்மணி ஆவார்.

## நிர்வாகம்

உலகின் தலைச் சிறந்த நூறு பெண்களில் பதிமூன்றாவது இடத்தைப் பெற்ற ஒரே இந்தியப் பெண் இந்திரா நூயி. "1955ம் ஆண்டு, அக்டோபர் மாதம் பிறந்த இவர்.

*தனது கல்விப்படிப்புகளைத் தமிழ்நாட்டிலும், இந்தியாவிலும் முடித்து. பின்பு வணிக மேலாண்மை படிக்க அமெரிக்க சென்றார். இவரது சாதனை என்பது 2008 முதல் 2011 வரை"12 தொடர்ந்து அமெரிக்காவின் நிர்வாகக் குழு ஆய்வில் சிறந்த தலைமை நிர்வாக அதிகாரியாக அங்கீகரிக்கப்பட்டார். மேலும், அமெரிக்க வணிகத்தில் முதலிடம் பெற்ற முதல் இந்தியப் பெண்மணி இவரே.*

**கல்வி**

*சாவித்திரிபாய் பூலே இவர் "1831 சனவரி 3ம் தேதி பிறந்தவர். இவர் தனது கணவரான ஜோதிபா புலேயை மணந்து. ஆங்கிலேய காலத்தில் அவருடன் இணைந்து பெண்களின் கல்வி உரிமைக்காகப் போராடியவர். 1849 - இல் சேக்வாடாவில்"13 ஒரு பள்ளியை நிறுவிய முதல் பெண் ஆசிரியர் ஆவார். மேலும், இளம் விதவைகள் இனிமேல் தலைமுடியைக் களைவதில்லை என்ற உறுதிமொழியை அனைவரையும் எடுக்கச் செய்து ஒரு புரட்சியைத் தோற்றுவித்தவர்.*

**வீரம்**

*முறத்தினால் புலியினை அடித்து விரட்டிய இனம் நம் பெண்ணினம் எனும் சொல் வழக்கிற்கு இணங்க வீரத்திலும் சளைத்தவர்கள் இல்லை. நம் பெண்கள் என்று நிரூபித்தவர்கள். பண்டைய காலம் முதற்கொண்டு போர் முறைகளைக் கற்று ஆண்களுக்கு நிகராக பெண்களும் தங்கள் நாட்டிற்காக போர் புரிந்தனர். வேலுநாச்சியார், ஜான்சி ராணி, ராணி மங்கம்மா, தாராபாய் போன்றப் பெண்களின் வீரம் இன்றளவும் வரலாற்றில் உள்ளது. முதல் பெண் இயக்கத்தைத் தொடங்கியவர் பிரீத்தி லதா வாடேடர். இவர் "1911ம் ஆண்டு சிட்டகாங்கில் பிறந்தவர். உப்புச் சத்தியாகிரகத்தில் பங்கு கொண்டு சிறை சென்ற முதல் பெண்மணி "ருக்மணி லட்சுமிபதி"14 ஒத்துழையாமை இயக்கத்தில் தனது இருபது வயதிலேயே இணைந்து இந்து முஸ்லிம் ஒற்றுமைக்காகப் பாடுபட்டவர் "மிருதுளா சாராபாய்"15. இவ்வாறு பல பெண்கள் சுதந்திரத்திற்காகப் பாடுபட்டுள்ளனர்.*

**''தேடிச் சோறு நிதந் தின்று பல**
**சின்னஞ் சிறுகதைகள் பேசி மனம்**
**வாடித் துன்பமிக வுழன்று பிறர்**
**வாடப் பலசெயல்கள் செய்து நரை**
**கூடிக் கிழப்பருவ மெய்தி கொடுங்**
**கூற்றுக் கிறையெனப்பின் மாயும் பல**
**வேடிக்கை மனிதரைப் போலவே வீழ்வே னென்றுநினைத் தாயோ''**16

*என்னும் பாரதியின் வார்த்தைகளுக்கு இணங்க வேடிக்கை மகளிர் அல்ல பெண்கள். எத்தனை முறை வீழ்ந்தாலும் ஒவ்வொரு முறை துளிர்க்கும் அருகம்புல் போல் எத்தனை இடர்கள் வந்தாலும் அத்தனையும் வழிதடங்களாக மாற்றி எந்த துறையாக இருந்தாலும் அதில் தனக்கெனச் சிறப்பைப் பெறும் பன்முகையாள்.*

## நிறைவுரை

அக்காலத்தில் பெண்கள் தங்களின் ஒவ்வொரு அத்தியாவசிய தேவைகளையும் போராடியேப் பெற்றனர். அப்படிப் போராடினாலும் தாங்கள் சென்ற ஒவ்வொரு துறையிலும் முதல் பெண் சாதனையாளர் என்று தனக்கென ஒரு சிறப்பினைப் பெற்றனர். இன்று சமூகம், பண்பாட்டு, கல்வி, இராணுவம் என எல்லாவற்றிலும் பெண்கள் முழு சுதந்திரத்துடன் இருக்கிறார்கள். ஆனால் ஒரு சில பெண்கள் தங்களுக்குக் கொடுக்கப்பட்டச் சுதந்திரத்தைத் தவறாகவே பயன்படுத்துகிறார்கள்.

இன்றையக் காலகட்டத்தில் பெரும்பாலும் இளம் தலைமுறையினர்கள் எந்தவித கட்டுப்பாடுகளும் இன்றி அலைப்பேசிகள், முகநூல்கள் போன்ற ஊடகங்களைப் பயன்படுத்தி நேரத்தை வீண் செய்து விடுகின்றனர். காலத்திற்கு ஏற்ப கை விலங்குகள் மாறிக்கொண்டே இருக்கும் அதற்கான சாவிகள் பெண்களாகி நம்மிடமே இருக்கிறது என்பதைக் கருத்தில் கொண்டு அவற்றை மாற்றி அமைக்க வேண்டும். கல்வி நிலையங்களில் உள்ள மாணவர்களுக்கு அனைத்து ஆக்கப்பூர்வமான செய்திகளையும், சாதனையாளர்கள் வரலாற்றினை ஒரு கட்டுரையாக எடுத்து , அவர்கள் பயன்படுத்தும் முக நூல்களிலேயே கட்டுரைகளைப் பதிவேற்றம் செய்யச் சொல்லி அந்த முக நூல்களின் வழியாக வரும் பாராட்டுக்களின் அடிப்படையில் பரிசுகள் வழங்க வேண்டும். ஏனெனில் இந்த ஊடகங்களைத் தவிர்த்து இனி உலகம் இயங்காது என்னும் நிலை வந்து விட்டது. எனவே அவற்றைச் சாதகமாக ஆக்கச் செயல்களில் பயன்படுத்தி இளம் தளிர்களையும் ஆக்கம் பெறச் செய்வதே இக்கட்டுரையின் நோக்கம் ஆகும்.

# பாலின சமத்துவத்திற்கான புதுமைச் சாதனங்கள்

இலெ. சிவதீபா
*முனைவர் பட்ட ஆய்வாளர், மெய்யியல் துறை,*
*தமிழ்ப்பல்கலைக்கழகம்,*

**முன்னுரை**

பாலின சமத்துவம் என்பது ஆண், பெண் இருவருக்கும் பொதுவானது என்று இருவரும் புரிந்துக்கொள்ள வேண்டும். ஒரு நாணயத்தைப் பயன்படுத்த இரண்டு பக்கங்கள் தேவை, அதுபோல நாட்டின் இயற்கை வளமாகிய மனிதன் ஆண், பெண் என்ற இரண்டு உடலமைப்பில் இயங்கி வருகிறான். உடலில் இயங்கும் உயிருக்குப் பாலின வேற்றுமை கிடையாது. உயிர் இயங்கும் உடல் தான், ஆண் பெண் உருவங்களாக இருக்கிறது. இருவரும் சமம் என்ற உண்மை அறிவு மனித இனத்திடம் உயரும் போதுதான் பாலினம் சமத்துவத்தை அடையும்.

என்று பாரதி கீழ்க்காணும் பாடலில் கூறுகிறார்.

**"ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்வதால்**
**அறிவிலோங்கி வையம் தழைக்கும்1"**

இக்கருத்தையே பாரதிதாசன் கீழ்வரும் பாடலில்

**"பெண்களும் ஆண்கள் தாமும்**
**பெருந்தமிழ் நாடு தன்னில்**
**தன் கடல் நிகர்த்த அன்பால்**
**சமானத்தர்2"**

ஆணும் பெண்ணும் நிகரென்று ஆன பிறகு, அன்பைப் பெண்ணே முந்திச் சென்று அறிவிப்பதன் வாயிலாக, ஆணும் பெண்ணும் நிகர் என்று பாலின சமத்துவத்தை விளக்குகிறார்.

மனித சமுதாயம், தோன்றிய பயனை அடைவதற்கு, மனிதனைச் செதுக்கி செம்மைப்படுத்தும் தொழில் நுட்பங்களாகிய "கல்வி, மொழி, ஆன்மீகம், கலைகள், பண்பாடு, இல்லம், குடும்பம், சமூகம், ஆராய்ச்சி அறிவியல், அரசியல், பொருளாதாரம், வேளாண்மை, விண்வெளி" என அனைத்திலும், தேவையான புதுமைகளைச் சேர்ப்பது அவசியமானது. எனினும் மேலுள்ள துறைகளில் ஒன்றில் மட்டும் கவனம் செலுத்தி புதுமைகளைக் கொண்டு வருவது, ஒரு மரத்தில் உள்ள ஒரு கிளை மட்டும் வளர்க்கப்படுவது போலாகும். அந்த மரம் முழு வளர்ச்சியை அடையாது, அதுபோல மேலுள்ள துறைகளில், ஒன்றுக்குள் ஒன்றாக அமையப் பெற்றுள்ள, சில முக்கியமான துறைகளை எடுத்து அந்தந்தக் காலத்தில் ஏற்படும் அறிவு வளர்ச்சிக்கு ஏற்பத், தேவையான புதுமைகளைச் செய்து அத்துறைகளை மனிதத்தை மலரச் செய்யும், தொழில்நுட்பங்களாகப் பயன்படுத்தும்போது, பாலின சமத்துவத்திற்கு அடித்தளமாக அமையும் என்பதை இக்கட்டுரை விளக்குகிறது.

பாலின சமத்துவம் என்பது ஆண் பெண் என்ற இரு தன்மைகள் நீக்கி, ஒவ்வொருவரின் தனிப்பட்ட ஆளுமைகளை, திறன்களை மட்டும் வைத்து மனிதனை 'ஆற்றல் சார் மனிதமாக' மலரச் செய்கிறது. மனித சமுதாயம் கூட்டாக இணைந்து வாழ்கிறது. உலகம் முழுவதிலும் உள்ள மக்களின் அறிவின் திறனாலும், செயல் திறமையாலும், கலை நுட்பத்தாலும் உற்பத்தி செய்யப்பட்ட அனைத்துப் பொருட்களும் உலகம் முழுதிலும் உள்ள மனிதர்களுக்குப் பயனாகிறது. அதேபோல ஒவ்வொரு மனிதன் செய்யும் நல்ல, தீய செயல்களும், அதன் விளைவுகளும் சமுதாயத்திற்குச் சொந்தமாகின்றன. எனவே தனிமனிதனின் செயல்களையும், அதன் விளைவுகளையும் அறிஞர்களும், ஆட்சியாளர்களும் கண்காணித்துத் தீமைத் தரக்கூடியச் செயல்களை அறநெறி - இறை உணர்வு, சட்டத்தின் மூலம் தடை செய்து சமுதாயத்தைப் பாதுகாக்கின்றார்கள். எனினும் முறையற்ற அறிவின் வளர்ச்சியால், மனித இனப் பண்பாடு சீர்க்கேடு அடைகிறது. ஆனாலும் பிறந்துவிட்ட அனைவரும் வளமாய் வாழும் உரிமை உண்டு என்றுணர்ந்து, இனிமேல் வாழ உள்ள அனைவரும் ஒன்றுக்கூடி, நம் முன்னோர்கள் வாழ்ந்த அனுபவத்தைக் கொண்டு, ஒரு திட்டம் வகுத்து மனித குலத்தைப் பாலின சமத்துவம் பெற்று வாழச் செய்ய வேண்டும், என்று வேதாத்திரி மகரிஷி கீழ்வரும் பாடலில் கூறுகிறார்.

**"வாழ வேண்டும் என்றெண்ணி உலகமீது வந்ததில்லை**
**எனினும் நாம் பிறந்து விட்டோம்.**
**வாழ வேண்டும் உலகில் ஆயுள் மட்டும்,**
**வாழ்ந்தோர்கள் அனுபவத்தைத் தொடர்ந்து பற்றி,**
**வாழஉள்ள உரிமை எல்லாருக்கும் உண்டு.**
**வாழ்வோர்க்குச் சாதகமாய் வாழுமட்டும்,**
**வாழஉள்ளோர் அனைவருமே ஒன்று கூடி**
**வகுத்திடுவோம் ஒரு திட்டம் வளமாய் வாழ**[3] **"**

இதனையே தாயுமானரும் கீழ்வரும் பராபரக் கன்னியில் 'மனிதரிடம் பாலின சமத்துவத்தைக்' கூறுகிறார்.

**"எல்லாரும் இன்புற்றுறிருக்க நினைப்பதுவே**
**அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே4 ".**

## பாலின சமத்துவத்திற்கு ஏழு திட்டங்கள்

மனிதரின் அன்றாட வாழ்க்கைக்கு நூறுக்கும் மேற்பட்ட பொருட்கள் பயன்படுத்தப்படுகிறது. வாழ்க்கைக்குத் தேவையானப் பொருட்களை கைகளால் உற்பத்தி செய்த காலம் போய், விஞ்ஞானக் கருவிகளால் அதிக அளவில் உற்பத்தி செய்து, அனைவருக்கும் எளிதாகக் கிடைக்கிறது, இதனால் வாழ்வை எளிதாக்குவதற்கு அவர்களுக்குத் தேவையான பொருட்களை வாங்கி அனுபவித்து வாழ ஆண், பெண் இருவருக்கும் சமபொறுப்பு வந்துவிட்டது. ஆனாலும் இந்த காலத்திற்குப் பொருந்தாத, பழையப் பழக்க வழக்கங்களும், மனிதனை மனிதன் துன்பப்படுத்தியும், பிறர் பொருள்களை அபகரித்தும் வாழும் நிலை தொடர்ந்து வந்துகொண்டே தான் இருக்கிறது. இந்த நிலை மாற அறிஞர்களும், ஆட்சியாளர்களும், பொருளாதார நிபுணர்களும் ஒன்றிணைந்து தொலைநோக்குப் பார்வையுடன் மனிதகுலம் அனைத்திற்கும் பொதுவானதாகவும், அறிவு வளர்ச்சிக்கேற்பத் தேவையான மாற்றங்களைச் செய்யக்கூடிய ஏழு திட்டங்களை வேதாத்திரி மகரிஷி கீழ்வரும் பாடலில் கூறுகிறார்,

**"ஓர் உலக ஆட்சி, உயர் ஒழுக்கத்தோடு**
**உலகினிலே குழந்தைகளை வளர்க்கும் திட்டம்,**
**பார் முழுதும் பொருள் துறையில்  சமநேர் நீதி,**
**பலநாடும் ஒன்றிணைந்த பொருளாதாரம்,**
**சீர்திருத்தச் சிக்கனமாம் சிறந்த வாழ்வு,**
**தெய்வ நிலையை அகத்துணரும் இறைவணக்கம்**
**நேர்மறையில் விஞ்ஞானம் பயனாய்க் கொள்ளும்**
**நெறிமுறைகள் இவை இணைந்த வாழ்வு காண்போம்"**

### அவைகளாவன

1. ஓர் உலக ஆட்சி
2. ஒழுக்கத்தோடு குழந்தைகள் வளர்ப்பு
3. உலக மக்கள் அனைவருக்கும் பொருள் துறையில் சமநீதி
4. எல்லா நாடும் ஒன்று இணைந்த பொருளாதாரம்சீ
5. ர்திருத்தமும் சிக்கனமும் சேர்ந்த வாழ்வு
6. இறை உணர்வு பெறுதல் ( மெய்ஞானம்)
7. விஞ்ஞானத்தை ஆக்க வழியில் பயன்படுத்துதல்5 ".

## ஓர் உலக ஆட்சி

அரசியல் சட்டம் என்பது, ஆழ்ந்த அறிவோடு சிந்தித்து வகுக்கின்ற, விரிந்த சமுதாய நல நோக்குடைய தொலைநோக்குத் திட்டமாகும். அறிவிலும், "தொழில்துறையிலும், பொருள் வளத்திலும் மக்கள் முன்னேற சிந்தனையாளர்கள் மன்றமே ஆட்சி நடத்த வேண்டும்6".

மனித குலப் பாதுகாப்புக்கும் பராமரிப்புக்கும் மக்களாட்சி முறையே சிறந்தது. ஊர், நாடு, தேசம் என்ற வரிசையில் ஒன்றுக்கு மேல் மற்றொன்று பாதுகாப்பாக அமைந்திருப்பது போல "எல்லா தேசங்களுக்கும் பொதுவான, மேலாதிக்க பாதுகாப்பு நிறுவனமாக ஓர் உலகப் பொதுவான மேலாதிக்க பாதுகாப்பு ஆட்சியும் அமைக்கப்பட வேண்டும்7". தற்போதுள்ள ஐ.நா. (*U.N.O*) சபை நிறுவனத்தையே, சில திருத்தங்களை செய்து, "குடியாட்சி நீதி முறையின் கீழ் ஓர் உலகப் பேரரசாக8" அமைத்துக் கொண்டு, தேச எல்லைக் கோடுகளை நீக்கி உலகில் பிறந்த எல்லா மக்களுக்கும் உலகம் முழுதும் போய் வரவும், வாழவும் சுதந்திரத்தை அளிக்க வேண்டும்.

ஓர் உலக ஆட்சியின் கீழ் ஆண்களும், பெண்களும் ஒருவர் மதிப்பை இன்னொருவர் உணர்ந்து ஒத்தும் உதவியும் வாழ வேண்டும். இந்த நிலை சமுதாயத்தில் பண்பாடாக வளர்வதற்குப் "பெண்களுக்கு இயற்கையாக அமைந்துள்ள உடலமைப்பு, அறிவின் இயல்பு9" இவற்றில் உள்ள தங்களது கடமைகளையும், பொறுப்புகளையும் ஆண்களும் பெண்களும் உணர வேண்டும். இதனையே வேதாத்திரி மகரிஷி கீழ்வரும் பாடலில் கூறுகிறார்,

**"எல்லையற்ற ஆற்றலுள்ள இறைவன் திரு உள்ளமென்ன**
**எவ்வுயிரும் தோன்றுதற்கு ஏற்றதொரு திருவழியாய்**
**வல்லமையாய்ப் பெண்ணினத்தை வடிவமைத்தான் அற்புதமே**
**வாழுகின்ற மக்களில் இவ்வளமறிந்தோர் எத்தனை பேர்**10 "

ஒவ்வொரு ஆணும் பெண்ணின் பெருமையை உணர்ந்து, அவர்களின் பாதுகாப்பிற்குப் பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டும். "சமுதாயத்தில் விவாகரத்து செய்துக் கொண்ட பெண்களின் வாழ்க்கைக்கு ஏற்ற பாதுகாப்பை இன்னும் மனித குலம் தரவில்லை. அதற்குச் சட்டத்தின் மூலம் ஒரு நிதியை உருவாக்க வேண்டும். அந்த நிதியின் மூலம் கணவனை இழந்த பெண்களுக்கும், திருமணம் ரத்து செய்துக் கொண்ட பெண்களின் வாழ்க்கைக்கும், அவர்கள் குழந்தைகளை வளர்ப்பதற்கும், கல்வி கற்பதற்கும் அந்தப் பொது நிதி போதிய அளவில் இருக்க வேண்டும்10." இதனைச் சமுதாயப் பொதுவான ஆட்சி முறை ஏற்றுக் கொள்ள வேண்டும்.

## குழந்தைகள் வளர்ப்பு

மனிதர்கள் அனைவரும் பொது என்ற எண்ணம் வரவேண்டும். பெரியவர்களிடம் இப்பழக்கத்தை ஏற்படுத்துவது கடினமானது எனவே, குழந்தைகளிடமிருந்து தொடங்க வேண்டும். பிறந்த குழந்தைகள் அனைவரும் ஓர் உலக ஆட்சியின் கீழ், உலகின் பொதுச் சொத்தாக வேண்டும். இவர்கள் ஒழுக்கம் உடையவர்களாக வளர்வதற்கு அறிஞர் பெருமக்கள், சான்றோர்கள், பணி நிறைவு பெற்று ஓய்வுப் பெற்ற அறிஞர்கள் கல்வி கற்றுத் தர வேண்டும்.

- "ஐந்து வயது வரை பெற்றோரின் கண்காணிப்பில் பண்பாட்டுக் கல்வியும்,
- ஆறு வயது முதல் பத்து வயது வரை தொடக்கப் பள்ளியில் எழுத்தறிவும்,
- பதினோரு வயது முதல் இருபது வயது வரை பெற்றோரிடமிருந்து பிரிந்து தங்கும் பள்ளிக்குச் சென்று தொழில்கல்வி கற்க வேண்டும், (ஐந்து ஆண்டுகள் இளங்கலை

பள்ளியிலும், ஐந்து ஆண்டுகள் மூத்தப் பள்ளியிலும் கல்வி கற்பார்கள். இதில் விவசாயம், நெசவு, சமையல், இயந்திரங்களை இயக்குதல் , வீடு கட்டுதல் போன்ற அடிப்படைத் தொழில்கல்வி கற்க வேண்டும்).

- பின்பு ஓராண்டு ராணுவ பயிற்சி பெற வேண்டும் 12".

என்ற முறையில் குழந்தை வளர்ப்புத்திட்டத்தை வகுக்க வேண்டும்.

## பொருள் துறையில் சமநீதி

வயதானவர்களுக்கும், சிறுகுழந்தைகளுக்கும், நோயுற்றோருக்கும் ஓர் உலக ஆட்சி அரசே பொறுப்பெடுத்து, பாதுகாத்து பராமரிக்க வேண்டும். "மேற்கூறியவாறு கல்வி கற்று வந்தவர்கள், பிறர் வளம் பறித்து வாழாமல் உழைத்தே வாழ்வர். உழைப்புக்கே மதிப்பு தரப்படும்13". வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க 8 மணி நேரம் வேலை என்பதை 7 மணி நேரமாகக் குறைக்கப்பட்டு வேலை இல்லாதவருக்கு வேலை தர வேண்டும். இதனால் உடலில் வலிமையுடைய அனைவரும் உழைத்து ஊதியம் பெற்று வாழ்கின்ற நிலை ஏற்பட்டு பொருள் துறையில் சமநீதி ஏற்படும்.

## உலகப் பொருளாதாரம்

மக்கள் உயிர் வாழ உணவு, உடை இருப்பிடம் என்ற மூன்று தேவைகளும், கழிவுப்பொருட்களை உடலில் இருந்து வெளியேற்ற அதற்குரிய வசதிகளும், வாழ்க்கைத் துணையும், விபத்து, இயற்கை சீற்றம், வேறு உயிர்களிடம் இருந்து காப்பும் அனைத்து மனிதருக்கும் தேவை. இவற்றை நிறைவு செய்வதற்கு மனித குலத்திற்குப் பொருட்களும் வசதிகளும் தேவைப்படுகிறது.

இதற்கு "ஓர் உலக ஆட்சியின் கீழ், எல்லைக் கோட்டுக்குள் பொருள்கள் முடக்கப்படுவதோ, பற்றாக்குறை ஏற்படுவதோ, அதிகமாகி வீணாவதோ இல்லாமல் எல்லாருக்கும் பகிர்ந்து அளிக்கப்பட வேண்டும். எல்லா விளைநிலங்களும், தொழிற்சாலைகளும், வீடுகளும், வாணிபங்களும் பொதுச்சொத்தாக்கி14" எல்லாருக்கும் எல்லாம் கிடைக்கக்கூடிய பொருளாதாரம் அமைக்கவேண்டும்.

## சீர்திருத்த வாழ்வு

மனிதகுலத்திற்குச் சீர்திருத்தமும் சிக்கனமும் நிறைந்த வாழ்வு அவசியம். "குழந்தை பாசத்தால்தான், பெற்றோருக்குச் சொத்து வேண்டுமென்ற பொருள் பற்றும், என்னுடைய குழந்தை என்ற தனி உடைமைப் பற்றும் உண்டாகிறது. பொருள் பற்றையும் குழந்தைப் பற்றையும் சீர்திருத்தம் செய்து, ஓர் உலக ஆட்சியின் கீழ் பொருளையும், மனிதனையும் பொதுவுடமை ஆக்க வேண்டும்15". குழந்தைகளின் கல்விக்கு அரசே பொறுப்பெடுப்பதால் பத்து வயதுக்கு பின்னர் குழந்தைகள் தனியாக அறிஞர் கவனிப்பில் வளர்க்கப் பட வேண்டும்.

மனித குலத்தைத் தோற்றுவிக்கும் பெண் அறிவு முன்னேற்றம் பெற்றால் தான், அவளால் தோற்றுவிக்கப்படக் கூடிய குழந்தைகள் உயர்ந்த அறிவோடு தோன்றும்.

**''பெற்றநல் தந்தை தாய்மாரே - நும்**
**பெண்களைக் கற்கவைப் பீரே,**
**இன்றைநாள் பெண் கல்வியாலே - முன்**
**னேற வேண்டும் வைய மேலே16**

*உலகம் முழுவதும் உயர்வடைய பெண்கள் அறிவு முன்னேற்றத்திற்கு நேரத்தைச் செலவிட வேண்டும். அவர்களின் முக்கிய பொறுப்பாக்கப்பட்டுள்ள "குழந்தை வளர்ப்பில் இருந்தும், சமையலில் இருந்தும் விடுவித்து இவ்விரு வேலைகளையும் பொதுவுடமை ஆக்க வேண்டும்17". 200 குடும்பங்களுக்கு ஒரு சமையல் கூடம் என்று பொது சமையல் கூடம் அமைத்து ஒவ்வொரு வாரமும் 20 குடும்பங்கள் சமையல் செய்து மற்றவர்களை உண்ணச் செய்வது பெண்களின் அறிவை முன்னேற்றுவதற்கு உதவியாக இருக்கும்.*

## மெய்ஞ்ஞானம்

*மனிதன் அமைதி அடைய தவம் ஒன்றே வழி, "உலகத் தலைவர்கள் எல்லாரும் உயிரறிவைப்பெற்று மனம் அமைதி அடைந்தால், உலகில் மக்களுக்கு நல்லாட்சி நடைபெற்று உலகம் அமைதியடையும்.18" இந்த "மெய்ஞ்ஞானத்தை எல்லாரும் உள்ளுணர்வாக உணரும்போது உலக மக்கள் அனைவரும் இறைநிலையாகவே இருப்பதை உணர்ந்து, இறை பண்பாகிய அன்பும் கருணையும் மலர்கிறது". மெய்ஞானமே பிறருக்குத் துன்பம் தராமலும், முடிந்த அளவு பிற உயிர்களின் துன்பத்தைப் போக்கியும் வாழச் செய்யும். இதற்கு ஓர் உலக ஆட்சியின் கீழ் அனைவருக்கும் மெய்விளக்கக் கல்வி கிடைக்கச் செய்ய வேண்டும்.*

## விஞ்ஞானம்

*மனித வாழ்வை எளிமையாக வாழ "விஞ்ஞான அறிவினைக் கொண்டு உற்பத்தி செய்யப்பட்டப் பொருட்களைப் பிறருக்குத் துன்பம் கொடுக்கும் அழிவுப் பாதையில் பயன்படுத்தாமல், நல்ல வழிகளில் மட்டும் பயன்படுத்தவும், மேலும் போர்க் கருவிகளை உற்பத்தி செய்து மக்களைக் கொன்று குவிக்கும் செயலைத் தவிர்க்கவும்19".*

*மேற்கூறியுள்ள திட்டங்களின் பயன்களை வேதாத்திரி மகரிஷி கீழ்வரும் பாடலில் கூறுகிறார்.*

**''ஒழுக்கத்தில் உயர்ந்தவர்கள் உள்ளுணர்வு பெற்றோர்கள்**
**உடல் நலமும் மனவளமும் உயர் அறிவும் பெறுவார்கள்**
**அழுக்காறு அவா வெகுளி அனைத்து களங்கம் மறையும்**
**ஆன்மீக உணர்வு மிகும் அறிவறியும் பேறுகிட்டும்**
**வழுக்காமல் நன்னெறியில் வாழ்வார்கள் அவர் தொண்டு**
**வாழ் மக்கள் அனைவர்க்கும் வழிகாட்டியாய் அமையும்**
**பழக்கத்தால் நல்வினையே ஆற்றுவதால் உலகுக்கு**
**பயனுடைய செயல் பலவும் எளிதாகும் அவர் வாழ்வில்10"**

## நிறைவுரை

*உலக மக்கள் அனைவரையும் ஓர் உலக ஆட்சியின் கீழ் இணைப்பதற்கு, உயிர் அறிவைப் பெற்ற அறிஞர் பெருமக்களும், ஆட்சியாளர்களும், ஒன்றிணைந்து, மேற்கூறியுள்ள*

ஏழு திட்டங்களையும் தொழில்நுட்பங்களாக பயன்படுத்தி, உலக மக்கள் அனைவரும் சகோதரர்கள் என்றுணரச் செய்ய வேண்டும். பண்பாட்டுக் கல்வியால் குழந்தைகளை வளர்க்கும் திட்டம் தொடங்கி, உலக மக்கள் அனைவரிடமும் எளிதாகத் தொடர்புக் கொள்ள உலகப் பொதுமொழியும், ஆணும் பெண்ணும் தன் பொருள் தேவைகளைத் தானே பூர்த்தி செய்து கொள்ளும் தொழிலறிவும், இவ்வுலகில் கிடைக்கும் இயற்கை, செயற்கை வளங்களனைத்தும் மனிதகுலத்திற்குப் பொதுவானதும், அனைவரும் அனுபவிப்பதற்கு உரிமையானதும் என்ற தொலைநோக்குப் பார்வையுடன் ஆட்சி மற்றும் வாழ்க்கைத் திட்டத்தை வகுத்து, மனித குல வாழ்க்கையை அமைக்க வேண்டும். இதனால் உலகம் அமைதி அடையும். பாலினம் சமத்துவ நிலைப்பெற்று உயிர்களிடையே ஆண், பெண் என்ற இருமை நீங்கி உண்மையான 'ஆற்றல் சார் மனிதத் தன்மை' வளர்ந்து அனைவரையும் சமமாக வாழச் செய்யும் எனக் இக்கட்டுரை நிறைவடைகிறது.

# அம்பையின் பெண்ணியப் புனைவுகள்

முனைவர் வே.கண்ணதாசன்,
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
வேல்ஸ் அறிவியல்தொழில் நுட்ப உயர் ஆராய்ச்சி நிறுவனம்

தமிழ் புனைவிலக்கிய வரலாற்றில் தனக்கெனத் தனித்தடம் அமைத்து நாற்பதாண்டுகளுக்கும் மேலாகப் படைப்பாக்கங்களை அளித்து வருபவர் லஷ்மி எனும் இயற்பெயர் கொண்ட எழுத்தாளர் அம்பை. தமிழ்ச் சமூகத்தில் வேரூன்றிப் போன மானுட மூடநம்பிக்கைகளைப் பகடி செய்வதுடன், உறவு நிலைப் பின்னூடான உளவியல் சிக்கல்களை இனம் காட்டி அவற்றை மையமிட்ட பெண்ணியப் பார்வை கொண்ட படைப்புகளை உருவாக்குவதில் கைதேர்ந்தவர். நயமான அங்கதமும், பெண்ணிய முனைப்பும், தெளிந்த அழுத்தமான பாணியும் கொண்ட எழுத்து மூலமாக சமகால வாழ்க்கையின் உறவு நிலைகளைப் பற்றி சிறப்பான திருப்பங்கள் கொண்ட புனைவுகளை உருவாக்கிக் கொண்டிருப்பவர். தனது ஒவ்வொரு படைப்பிலும் குடும்பம் உள்ளிட்ட சமுதாய வெளிகளில் பெண்களுக்கு வழங்கப்பட்டுள்ள இரண்டாந்தர நிலைமையையும் உடலியல் சார் பார்வையையும் வெளிப்படுத்திப் பெண்ணிய மதிப்பீடுகள், விழுமியங்கள் குறித்த விமர்சனப் போக்கிலான வரையறைகளை வகுத்துத் தந்தவர்.

இந்தியக் குடும்பம், சமுதாய மரபுமுறைகளுக்கு மாறானவையாக, அவற்றைக் கண்டித்து விமர்சனம் செய்வனவாகத் தன் படைப்புக்களத்தை அமைத்துக் கொண்டமையால் தொடக்கத்தில் மரபு சார்ந்த இதழ்கள் இவரது புனைகதைகளை வெளியிடத் தயக்கம் காட்டிய வரலாறுகளும் உண்டு. அக்காலத்தில் குழந்தைகளுக்கென தனித்த கட்டமைப்புடன் வெளிவந்த கண்ணன் இதழில், நந்திமலைச் சாரலிலே எனும் துப்பறியும் நாவல் வழித் தன் எழுத்துலகப் பயணத்தைத் தொடங்கியதுடன் திராவிடப் பெண் தெய்வமாய் அறியப்படும் அம்பையின் பெயரைச் சூடிக்கொண்டு எழுத்துலகில் கால் பதித்த பெருமைக்குரியவர். அரைநூற்றாண்டு காலத் தமிழ் இலக்கியத்தின் புனைகதைப் பரப்பிலும் உரையாடல் தளத்திலும் நிகழ்ந்த முக்கியமான வருகைகளுள் ஒன்றாகவே அம்பையின் வருகையை

இலக்கிய ஆய்வாளர்கள் இனம் காண்கின்றனர். நவீன பெண்ணியவாதக் கருத்துக்களின் அடிப்படை கட்டுமானத்தை அமைத்தவராக அம்பையை இனம் காணும் எழுத்தாளர் ஜெயமோகன்,

**''தமிழில் பெண் எழுத்தாளர்களுக்கு முன்னோடி அம்பை(1944). பெண்களின் மீதான ஒடுக்குமுறை குணங்கள் கோபங்கள் அவரது படைப்புகளில் வெளிப்படுகின்றன. நேரடித் தன்மையும் கூர்மையான மொழியும் அவற்றின் சிறப்பம்சங்கள், கோட்பாட்டுத்தன்மை கொண்ட அணுகுமுறையும் பிரசங்கத் தன்மை கொண்ட சித்தரிப்பும் கலை வடிவில், ஒருங்கிணைவு இன்மையும் கொண்டவை. பெண்ணியம் தமிழிலக்கியத்தில் ஒரு முக்கியமான போக்காக மாறக்கூடும் என்பதால் அதன் முக்கியக் கோட்பாட்டாளராகிய இவரை நாம் கவனிக்க வேண்டியுள்ளது''** என்கிறார்.

நீண்ட காலத் தமிழ் எழுத்துலக வரலாற்றில் இருந்து வந்த மரபு சார் சமுதாயக் கட்டுக்கோப்பை மீறிமுளைத்த தலைசிறந்த பெண்படைப்பாளுமையாக மிளிர்ந்து வரும் அம்பையின் படைப்புகளின் வழி அவர் காட்ட முயலும் பெண்ணியத்தை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும். 'சிறகுகள் முறியும்', 'காட்டில் ஒரு மான்,' 'வற்றும் ஏரியின் மீன்கள்,' 'ஒரு கறுப்புச் சிலந்தியுடன் ஓர் இரவு,' அந்தேரி மேம்பாலத்தில் ஒரு சந்திப்பு போன்ற தொகுப்புகளில் சிறியதும் பெரியதுமாய் அவர் படைத்துள்ள கதையாக்கங்களும் புனைவுகளும் பெண்ணுலகின் பல்வேறு பக்கங்களையும் பரிமாணங்களையும் படம் பிடித்துக் காட்டுபவை. திரைச்சீலைகளில் முகம் மறைத்தும் நிலைக்கதவுகளின் பின்னிருந்தும் சமையற்கட்டுக்குள் புழுங்கியும் தவித்தவர்களை வரவேற்பறைக்கு கொண்டு வந்து சேர்த்த படைப்பாளரான அம்பை தன்னுடைய எழுத்துலக இலக்கியப்பயணம் எதை நோக்கியதாய் இருக்க வேண்டும் என்பதில் தெளிவான புரிதலைக் கொண்டிருந்தார், எனவே தான் இலக்கியம் குறித்த வரையறையாக,

**வாழ்க்கையில் உள்ள ''உண்மைகளை''ப் பற்றியது அல்ல இலக்கியம். உண்மை என்று நாம் உணர்வதற்கும் நமக்கும் இடையே உள்ள உறவு பற்றியது இலக்கியம். இந்த ''உண்மை''யின் தன்மை மாறியபடி இருக்கிறது நம் வாழ்வியல் என்பதுதான் உண்மை. வாழ்க்கையின் போக்குக்கு ஏற்ப இதை நாம் பல்வேறு கட்டங்களில் பல வகைகளில் உணருகிறோம். அதை நாம் எப்படி மொழியாக்குகிறோம் என்பதுதான் இலக்கியம். நம் உணர்வுகளின் வெளிப்படை சில சமயங்களிலும், அவற்றின் மறைப்பு சில சமயங்களிலும், உணர்வுகளை இலக்கியமாக்குகிறது. இந்த வெளிப்படை - மறைப்பு இவற்றின் கண்ணாமூச்சிதான் இலக்கியம்.''** என்கிறார். சமூக வெளியில் உரிமை மறுக்கப்பட்டதன் ஊடான பெண்ணிய மனவோட்டங்களும் உறவு, உணர்வுநிலை மேலிட்ட உளவியல் சிக்கல்களும் மரபுப்போர்வையில் ஒடுக்கப்பட்டு மறைக்கப்பட்ட உண்மைகளுமே தனது இலக்கிய இயங்கியலுக்கான அடித்தளம் என்பதை இதன்வழி இனம் காட்ட முயல்கிறார். மேலும்

**''என் கதையில் பெண்கள் தங்கள் மனத்தில் உள்ளதை வெளிப்படையாகப் பேசுபவர்களாகவும், குரல் இழக்காதவர்களாகவும் இருந்தாலும் அவர்களுக்குள் பெண்களை ஒடுக்கும் பல விஷயங்களுக்கான ஆதரவு இருந்தது. அவர்கள் அறச் சீற்றம் உள்ளவர்களாகவும், துணிந்து சில முடிவுகளை எடுப்பவர்களாகவும் இருந்தாலும், சில எல்லைகளை அவர்கள் தாண்ட முயலவில்லை எனலாம். அவர்கள் சாதாரணப் பெண்ணை உயரே இருந்து துச்சமாகப் பார்க்கும் காவிய நாயகிகள்போல் இருந்தனர். உடல் என்ற விஷயம் பெரிதும்**

**என்னைப் பாதித்திருப்பதை இக்கதைகளில் காணலாம். உடல் என்பது வீட்டில் பேசப்படாத ஒன்று. அது இச்சைகளைத் தோற்றுவிக்கும் ஒன்று. பெண்ணின் இச்சைகள் வெளியிடப்படாதவை; வெளியிடக்கூடாதவை., உடலே இல்லாதவர்கள்போல், உடலே இல்லாத ஒரு வெளியில் மிதந்துகொண்டிருந்தோம். அவையே என்படைப்புகளுக்கு ஆதார மையமாகின்றன''** *என்று அம்பை தனது பெண்ணிய நோக்கிலான படைப்புலகு குறித்த சுய விமர்சனத்தை முன்வைக்கிறார். பெண்களின் உலகம் என அதுவரை ஆண்கள் இனம் காட்டிச் சித்தரித்தவற்றை மூர்க்கமாக மீறும் படைப்பாக்கங்களாகவே அவை அமைந்துள்ளன. இதன்வழி அவர் பெண்ணியச் சிந்தனைகளைத் திணிக்கிறார் என்றோ ஆண்களை வன்முறை மேலிட்டுக் கொடூரமாகச் சித்தரிக்கிறார் என்றோ கொள்வதற்கில்லை. சமூக இயங்கியலில் அதுவரை பெண்களை ஒடுக்கும் வகையில் இருந்துவந்த மரபான சடங்குகளையும் மூடநம்பிக்கைகளையும் மறுதலிப்பதாய் அமைந்திருப்பதுடன் பெண்ணிய உரிமை மறுப்பு ஊறிப்போன ஒரு பிற்போக்குச் சமூகத்தின் பல பரிமாணங்களை இனம் காட்டுவதாகவே கொள்ள முடியும்.*

*பெண்களின் உழைப்பு சுரண்டப்படுதல், உடல், மனத்தளவில் ஒடுக்கப்படுதல், பாலியல் பேதப்போக்குகளால் ஏற்படும் முரண்கள், அதன் ஊடான நுண்ணிய அடக்குமுறை எனப் பெண்ணிய நோக்கமே அவருடைய இலக்கிய இலக்காக அறியப்பட்டாலும் படைப்புகளைப் பால் வேறுபாட்டுடன் அணுகும் போக்கு அவசியம் இல்லாதது எனும் கருத்தியல் கொண்டவர்.*

**''இலக்கியத்தில் பெண் எழுத்து ஆண் எழுத்து என்று சிலர் குறிப்பிடும்போது அவர்கள் மனத்தில் இருப்பது பால் நிலை பற்றிய விளக்கம் இல்லை என்பது புரிந்துவிடுகிறது. அவர்கள் பெண் என்று கூறும்போது அது இலக்கியத்தரம் பற்றியது. அது ஓர் அளவுகோல். பெண் என்ற அடிப்படை ஒன்றை உருவாக்கி அதில் ஏற்றப்பட்ட தர அளவுகோல். அடிப்படை என்பது நேராக உடலைப் போய் முட்டும் ஒன்று. ஒரு வகை உடல் இருப்பதால் ஒரு வகை மொழி பிறக்கிறது என்று வலியுறுத்துவது. இவைதான் வித்தியாசங்கள் என்று நாம் பட்டியலிட்டால் அந்தச் செயல் இரு வகை வெளிப்பாட்டை மட்டுமல்ல, இரு வகை உடல்களையும் குறுக்குகிறது என்றே நினைக்கிறேன். ஒவ்வொரு நபரும் ஒவ்வொரு சந்தர்ப்பத்தில், ஒவ்வொரு காலத்தில் வேறுவேறு வகையில் உணரும் உடல் என்ற ஒன்றை, ஓர் இலக்கணத்திற்கு, ஒரு விளக்கத்திற்கு உட்பட்டுத்துவது எனக்கு உடன்பாடில்லை. ஆனால் பெண்ணாக வாழ்வதால், பெண் என்ற நிலையிலிருந்து உலகை எதிர்கொள்ள நேர்வதால் ஒரு வித மொழி, ஒரு வித வெளிப்பாடு உருவாகலாம். அது உடல் சார்ந்தது அல்ல. உடல் பற்றிய பட்டுணர்வைச் சார்ந்தது. உடல் சமுதாயத்தில் ஆக்கிரமிக்கும் இடத்தைச் சார்ந்தது. காலம், சரித்திரம் இவற்றால் தொடப்படாத உடல் இல்லை. ஒற்றை விளக்கம் உள்ள உடல் இல்லை பெண் உடல். பெண் உடலை மறுவாசிப்பு செய்வதும் அவரவர் பட்டுணர்வை ஒட்டியே இருக்கும்''** *(சொல்வனம்,2004) என்கிறார்.*

*அதனால் தான் பெண்ணியப் படைப்பாளர்களுக்கான வரையறையைத் தன் வாழ்வியலில் இருந்தே விவரித்து*

**பெண்ணியச் செய்திகளை உரத்துச் சொல்லிக்கொண்டே இருப்பது ஒரு பெண்ணிய எழுத்தாளர் வேலை அல்ல. வாழ்க்கையில் சில நொடிகளில் வெளிச்சம் பெறும் உணர்வுகள், உறவுச் சிதறல்கள், இயற்கையுடன் தொடர்ந்து ஒன்றியும் விலகியும் வரும் வாழ்க்கை இவை எல்லாமும் மொழியும், எழுத்தின்**

**தன்மையும். வாழ்க்கையும் மாறும் பதிவுகள்தாம். பெண், ஆண் என்று விளக்கம் பெறும் நபர்களை நான் தொடர்ந்து கேள்விக்குட்படுத்தியவாறு இருக்கிறேன். எல்லாவித எல்லை மீறல்களும் சாத்தியம் என்று சொல்ல நினைக்கிறேன். வரையறைகளை அழித்துக்கொண்டே இருக்க வேண்டும் என்று கருதுகிறேன்."** (சிறகு விரித்து எழுந்த பறவை - அம்பை உரையாடல்) எனத் தன்மனப் போக்கை எடுத்துக்காட்டுகிறார்.

அம்பையின் "சிறகுகள் முறியும்" என்று என்னும் கதைத் தொகுப்பு தற்கால அறிவு ஜீவிகளால் தேர்ந்த பெண்ணியப் படைப்பாகக் கொண்டாடப்பட்டாலும் அம்பை அப்படைப்பை உருவாக்கிய காலகட்டத்தில் அதனை வெகுசன இதழ்கள் வெளியிட மறுத்ததுடன் பல்வேறு பிற்போக்குத்தனமான விமர்சனங்களை முன்வைத்துப் புறம் தள்ளியதையும் அறிய முடிகிறது. மரபு சார் சமூகச்சூழல் ஒரு படைப்பை இனம்காண்பதில் கொண்டிருந்த இத்தகைய மனப்பான்மையை அக்காலத்தில் பல்வேறு படைப்புகள் எதிர்கொண்ட வரலாறு தமிழுலகம் அறிந்ததே. வாசகன் வாசிக்க வேண்டியதை யாரோ ஒருவர் தீர்மானிப்பதைப்போல் எழுத்தாளன் எழுத வேண்டியதையும் யாரோ ஒருவர் தீர்மானித்த சமூகப் பின்னணியில் இத்தகையப் படைப்புகள் வெளிவர விடாமல் தடுக்கப்படுவது இயல்பான நிகழ்வே ஆகும். "சிறகுகள் முறியும்" படைப்பு கணவன் மனைவிக்கிடையே எழும் குடும்ப உறவு மேலிட்ட விவாதங்கள், ஊடாட்டங்களை மையமிட்ட குடும்ப நாவலாக அமைந்த போதிலும், வேலையில்லாத கணவனாக அமையும் ஆண் பாத்திரம், பெண்ணின் விருப்பங்களையும் அபிலாஷைகளையும் தீர்க்கமுடியாமல் தடுமாறுபவனாகச் சித்தரிக்கப்பட்டுள்ளது. தாம்பத்திய உறவுதான் வாழ்க்கையா என்னும் புரட்சி நோக்கிய மனப்பான்மையில் பெண்ணை இத்தகைய சூழல் சிந்திக்கத் தூண்டுவதாகவும் காட்டப்பட்டுள்ளது. சமூக அரங்கில் இது பல குடும்பங்களிலும் இயல்பு நிகழ்வே எனினும் ஆணாதிக்க மனப்பான்மை ஊறிப்போன ஒரு சமூகத்தில் வெளிப்படையாகப் பெண் தனது மனவோட்டங்களை வெளிக்காட்டத் துணியாத காலகட்டத்தில் எழுந்த கதையாதலால் இத்தகைய விமர்சனங்களை அப்படைப்பு எதிர்கொண்டது எனலாம். இக் கதை குறித்து திறனாய்வு நோக்கில் வெங்கட் சாமிதான் அவர்கள்

**''ஒரு கணவன் மனைவிக்கு இடையே எழுந்த உறவுச் சிக்கல் பற்றி. தன் மனைவியையும் குழந்தையையும் கவனிக்க கணவனுக்கு நேரமும் இல்லை. சம்பாத்தியமும் இல்லை. கணவனின் அன்புக்கும் கவனிப்புக்கும் ஏங்கும் மனைவிக்கு அது கிடைக்காது போகவே இந்த தாம்பத்ய உறவுக்குத்தான் என்ன பொருள் என்ற கேள்வி அவள் மனத்தில் எழுகிறது. ஆனால் அதற்காக அவள் உறவை முறித்துக் கொண்டு வீட்டை விட்டு வெளியேறவில்லை. தனக்கு விதிக்கப்பட்டது இதுதான் என்று அவள் சமாதானம் செய்து கொள்கிறாள். இந்தக் கதையை வைத்துக் கொண்டு அம்பை அணுகிய எந்தப் பத்திரிகையும் அதைப் பிரசுரிக்க மறுத்து விட்டது. பின் பல வருடங்கள் பிரசுரமாகாது கிடந்த அந்தக் கதை கணையாழி என்னும் ஒரு இடைநிலை பத்திரிகையில் பிரசுரமானது. அந்தக் கதையில் வரும் சாயா மாத்திரம் புனிதமான தாம்பத்திய உறவு அர்த்தமற்றுப் போயிற்றே என்று தனக்குள்ளே கூட நினைத்த பாவத்திற்காகத் தற்கொலை செய்து கொண்டிருந்தாலோ அல்லது வேறு எவ்விதத்திலாவது அவள் உயிர் துறந்திருந்தாலோ அக்கதையை நிராகரித்த எந்தப் பத்திரிகையும் தடை சொல்லாது பிரசுரித்திருக்கும் என்று கேலிப் புன்னகையோடு கூறுவதாக** எடுத்துக்காட்டுகிறார். இதன்வழி அம்பை தனக்கெனத் தனிவழி வகுத்துக்

கொண்டு தனது எழுத்துக்களைத் தொடுத்தவர் என்பது வெளிப்படையாக விளங்குகிறது. விமர்சனங்களும் எதிர்நிலைக் கருத்துக்களும் தான் புதிய படைப்புகளை உருவாக்கு வதற்கான உந்துசக்தி எனும் கருத்தியல் கொண்ட அம்பை தம் படைப்பாக்கங்களின் பேசு பொருளாக அவற்றையே கைக்கொண்டதன் பின்னணியையும் அறிய முடிகிறது.

அம்பையின் எழுத்துலகிற்கு ஊக்கம் தந்து அவரை இனம்காட்டித் துலங்கவைத்த படைப்பாக "அந்தி மாலை(1966)" நாவலை ஆய்வாளர்கள் முன்வைக்கின்றனர். அக்கால எழுத்துலகம் பெருவிருதாய்க் கருதிய கலைமகள் இதழின் நாராயணசாமி ஐயர் நாவல் விருது அந்திமாலைக்குக் கிடைத்த பிறகே அவர் வாசகர், எழுத்தாளர்கள் மத்தியில் பேசுபடும் பொருளாக மாறி, தொடர்ந்து அத்தகைய கதையாக்கங்களை உருவாக்கத் துணைபுரிந்தது என்பர். பெருமளவில் ஆண்கள் மட்டுமே எழுதிவந்த கலைமகள் பத்திரிகையின் பெருமைமிகு பரிசினைப் பெண் எழுத்தாளர் ஒருவர் அதிலும் மரபான கொள்கைகள், பாரம்பரிய வரட்டு வேதாந்தங்களைப் பகடி செய்து சமுதாயக் கொடுவினைகளுக்கு எதிராகக் குரல் எழுப்பி உரிமை வேட்கை, புரட்சி மனநிலையில் எழுதிய நாவலுக்குப் பெற்றமை அக்காலத்தில் பேசு பொருளாக ஆனது.

கணையாழி தீபாவளி இதழில்(1970) வெளிவந்த 'தனிமையெனும் இருட்டு' சிறுகதை பெண்ணிய உளவியல் முறையில் படைக்கப்பட்ட கதையாக்கமாகக் கொள்ள வேண்டும். பொருள்வயின் பிரிந்த தலைவனை எண்ணித் தனிமைத் துன்பத்தில் தலைவி உழல்வதான காட்சி அமைப்புகள் இக்கதையாக்கத்தில் முக்கியத்துவம் பெறுகின்றன. ஒரு பெண் திருமணத்திற்கு முந்தைய பருவத்தில் பெற்ற அதே தனிமையைத் திருமணமான பிறகும் பெறுவதாகக் காட்டி அதன் ஊடான உளவியல் சிக்கல்களை பெண்ணியப் பார்வையில் அணுகியுள்ளது. பெண்ணின் விருப்பங்கள் ஏக்கங்கள் எதையும் புரிந்து கொள்ளாத கணவன் ஒருவனால் அவள் தனக்கேயான உலகை கற்பனையில் மாயத்தோற்றமாக உருவாக்கிக் கொள்கிறாள். பணி நிமித்தமாகக் கணவன் வெளியூரில் தங்குவதாகவும், அதனால் உண்டான பிரிவுத் துன்பத்தை ஆற்றமுடியாதவளாய்த் தனிமையை விரட்ட கணவன் அருகில் இருப்பது போலவும் அவன் தன் விருப்பமுணர்ந்து அன்பு காட்டி நடந்து கொள்வது போலவும் கற்பனை செய்து காலத்தைக் கழிப்பதாகப் பாத்திரப் படைப்பு அமைகிறது. சமையலறைக்குள் முடங்கிக் கிடக்கும் பெண்ணுலகை 'வீட்டின் மூலையில் ஒரு சமையலறை' எனும் கதையாக்கத்தின் வழி வெளிக்காட்டியுள்ளார். மனிதனின் வேட்டைச் சமூக வாழ்வில் இருந்தே உணவைச் சேகரித்தல் ஆணுக்குரியதாகவும் அதனைப் பக்குவப்படுத்திச் சமைத்தல் பெண்ணுக்குரியதாகவும் கட்டமைத்த சமூகவியலை இக்கதையாக்கம் விமர்சனம் செய்கிறது. சமையலறை பெண்கள் மீது செய்யும் ஆதிக்கமும் அழுத்தமும் அதன் வழி மனரீதியாக வெளிப்படும் சிக்கல்களும் இச்சிறுகதையில் விவரிக்கப்பட்டுள்ளன. பெண்ணின் உழைப்பும் திறமையும் சுரண்டப்படுவதுடன் குறுகிய வட்டத்திற்குள் இற்சிறையாகச் சமையலறை அமையுமாற்றை இதில் எடுத்துக்காட்டியுள்ளார்.

**''ஒளியற்ற, ஜன்னல் அற்ற குறுகிய அந்தச் சமையலறையிலிருந்து கடலில் வசிக்கும் ஆக்டோபஸ் ஜந்துவின் எண்கால் போல், ஆதிக்கக் கரங்கள் நீண்டு வளைத்துப் போட்டன. கால்கள் இறுக்க இறுக்கக் கட்டுண்டு கிடந்தனர் ஆனந்தமாக. அவை இடுப்பை இறுக்கினால் ஒட்டியாணம் என்றும், காலைச்**

**சுற்றினால் கொலுசு என்றும், தலையில் பட்டால் கிரீடம் என்றும் நினைத்துக் கொண்டனர் பெண்கள். நாலாபுறமும் கம்பிகள் எழும்பிய உலகில் புகுந்து கொண்டு அதை ராஜ்யம் என்று நினைத்து அரசோச்சினர். இன்று மட்டன் புலவு, நாளை பூரி மசாலா என்று பூமியைத் திருப்பிப் போடும் முடிவுகள் எடுத்தனர். 'பேடி அதிகாரம்**' என்று இதனைக் கடுமையாகச் சாடுகிறார் அம்பை.

ஆண் ஒரு செயலைச் செய்யும்போது அது சரியாகத் தோன்றும் சமூகத்தில் அதையே பெண் செய்தால் பைத்தியக்காரத்தனமாக ஏன் தோன்றுகிறது'என்னும் கேள்வியைத் தன் பல்வேறு கதைகளின் ஊடாக விவாதப் பொருள் ஆக்கியிருக்கும் அம்பை துன்பங்களால் துவண்டு போகாத பெண்ணிய உளவியலை இனம் காட்டுகிறார். பெண்ணின் மன வலிமை மலையை ஒத்தது என்னும் மைய நீரோட்டமிக்க புனைவுகள் அவரது அடையாளமாகவே அமைந்துள்ளன. தந்தைக்கும் மகனுக்கும் இடையே அமையும் தோழமை உணர்வையும் உறவு நிலைப்பட்ட நெருக்கத்தையும் பல்வேறு படைப்பாளிகள் எடுத்துக்காட்டியுள்ளனர்.

ஆயினும் தாய்க்கும் மகளுக்கும் அமைந்த தோழமை உணர்வையும் ஒருவரையொருவர் மனத்தளவில் புரிந்து கொள்ளும் நிலையினையும் காட்டில் ஒரு மான் கதையில் வெளிப்படுத்துகிறார். இதேபோல ஒரு தாயின் கடந்த காலத்து கசங்கிய வாழ்வியலை அவள் பெற்ற மகளின் நினைவுப்பார்வையின் வழி 'பிரசுரிக்கப்படாத கைப்பிரதி' எனும் சிறுகதையில் பதிவு செய்துள்ளார்.

**'ஒவ்வொரு கதை எழுதும்போதும் ''இது பெண்ணியக் கதை. இதில் ஆணாதிக்கம் குறித்து எழுதுவேன்'' என்று நினைத்துக்கொண்டு எழுத முடியாது. ஆனால் வாழ்க்கையிலேயே ஊறிப்போயிருக்கும் ஒன்று ஏதோ ஒரு வகையில் கதைகளில் கசிந்தபடிதான் இருக்கும். எந்தவிதப் பொருளும் தர விரும்பவில்லை என்று உருவமற்ற கோடுகளையும், நிறங்களையும் வரைந்தபோது கூட அதனின்றும் பல அர்த்தங்கள் பார்ப்பவரின் வாழ்க்கையின் கண்களுக்கு ஏற்ப அமைந்துகொண்டேதான் இருக்கும். மிகவும் ஆழமாகத் தன் வாழ்க்கையினுள் புகும்போது அந்தரங்கமும் அரசியல் வெளிக்கு வந்து உலகளாவிய ஒன்றாகிவிடுகிறது'** (சொல்வனம்,2014) என்று தனது இலக்கிய ஓட்டத்தை வகுத்து எல்லை கடந்த நிலையில் தனது படைப்பாக்க வெளியை அமைத்துக்கொண்ட பெருமை அம்பைக்கு உண்டு.

தொகுப்பாக நவீனத் தமிழிலக்கிய வரலாற்றில் தன்னுடைய தேர்ந்த படைப்பிலக்கியங்கள் மூலம் சமூகத்தில் பெண்களின் விடுதலைக்காகவும் அவர்களின் வலுவான ஆளுமை வளர்ச்சிக்கா கவும் பெண்ணியக் குரலை உயர்த்திக் காட்டிய படைப்புகளாகவே அம்பையின் படைப்புகள் அமைகின்றன. இந்திய விடுதலைக்குப் பின்னர் உருவான சமூக மாறுதல்களில் பெண்களின் நிலைப்பாடுகளும் அவர்கள் எதிர்நோக்கும் சவால்களும் பற்றிய படைப்பாக்கங்களினூடாக தானும் ஒரு பெண் என்னும் மன உணர்வு ஒன்றி யதார்த்தபூர்வமாக அதனை இனம் காட்டியுள்ளார்.

ஆணாதிக்கக் கருத்தியல் முனைப்பு பெற்ற ஒரு சமூகத்தில் பெண்ணின் இருப்பு, உரிமை நோக்கிய அதிகாரப் பங்கீடு, உடல் மனத்தளவில் எதிர்கொள்ளும் சவால்கள், சமூக இயங்குதளத்தில் அவளுக்கான இடம், மதிப்பீடுகள் ஆகியனவற்றைப் பற்றி எள்ளல் நடையில் படைத்துள்ள புனைவுகள் மற்ற படைப்பாளர்களிடமிருந்து அவரை வேறுபடுத்தி முதன்மைப் படுத்துகின்றவை எனலாம். குறிப்பாகப் பெண்ணிய பேசுபொருள் குறித்த

*கருத்தியலில் மற்ற படைப்பாளர்களிடம் உள்ள தயக்க மனநிலையை அம்பையிடம் காணமுடிவதில்லை. பெண்மையின் தத்துவ அழகியல், அரசியல், ஆழ்மனச் சிக்கல்கள், உளவியல் ஊடாட்டங்கள், பெண்மைவாத தருக்க நிலையிலான அடிப்படைகள், பெண்ணியக் கோட்பாடுகள் மேலிட்டு அம்பை முன்வைக்கும் கருத்துக்கள் உலகின் தலைசிறந்த பெண்ணியப் படைப்பாளுமையாக அவரை இனம் காட்டுகிறது*

**பயன் பயந்தவை:**


1. *சிறகுகள் முளைக்கும், அம்பையின் நேர்காணல், காலச்சுவடு இதழ் 18 (ஜுலை -செப்டம்பர் 1997).*
2. *சிறகு விரித்து எழுந்த பறவை, அம்பையுடன் உரையாடல், சொல்வனம் இணைய இதழ் (இதழ் 115).*
3. *ஜெயமோகன், நவீனத் தமிழிலக்கிய அறிமுகம், கிழக்குப் பதிப்பகம்,2011.*
4. *ஒரு கறுப்புச் சிலந்தியுடன் ஒர் இரவு,காலச்சுவடு பதிப்பகம் 2012.*
5. *அந்தேரி மேம்பாலத்தில் ஒரு சந்திப்பு, காலச்சுவடு பதிப்பகம், 2001.*
6. *அம்பை சிறுகதைகள் (1972 - 2000),காலச்சுவடு பதிப்பகம்,2006.*

# பெண்ணியம்: மறந்ததும் மறைத்ததும்

முனைவர் ஜெ. தேவி,
எம்.ஏ., எம்.ஏ., எம்.ஃபில். பிஎச்.டி.,
பேராசிரியர், இலக்கியத்துறை,
இயக்குநர், கல்விநிலை ஆய்வு இயக்ககம்,
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் .

தமிழ்நாட்டில் பெண்ணியம் பேசுவோர் இன்று மூன்று குழுவினராகப் பிரிந்துள்ளனர். ஒரு குழுவினர் பெண்ணியத்தில் தீவிரத்தன்மை காட்டுகின்றனர். 1 மற்றொரு குழுவினர் சமதர்மப் பெண்ணியத்தில் நாட்டம் கொண்டுள்ளனர். 2 இன்னொரு குழுவினர் இரண்டையும் ஏற்றுக்கொண்டு - இரண்டாட்ட நிலையில் உள்ளனர். இவர்களுள் முதல் இரண்டு குழுவினர்க்குத் தெளிவான சிந்தனை உண்டு. ஏற்றுக்கொண்ட கொள்கையைச் சான்றுகாட்டி உறுதிப்படுத்தும் உண்மைநிலை இவர்களிடம் உண்டு. ஆனால் மூன்றாம் குழுவினரோ இருவேறு முனைகளையும் மாறிமாறித் தழுவிக்கொண்டு தெளிவான சிந்தனையின்றி மயங்கிக் கிடக்கின்றனர். இருமுனைகளுமே கானல் நீராக இவர்களுக்குக் காட்சியளிக்கின்றன. இம்மூன்று குழுவினருடைய அணுகுமுறைகளையும் சற்று விளக்கி, இவற்றுள் முன் இயலில் காட்டியவாறு இந்திய மண்ணுக்கும் மரபுக்கும் ஏற்ற பெண்ணியத்தைக் காண முற்படுவோம்.

பெண்ணியம் பேசுபவர்கள் இவ்வாறு மூன்று குழுக்களாகப் பிரிந்து செயல்படுவதற்கு அடிப்படைக் காரணமாக அமைவது, இவர்களுக்கும், இவர்கள் சார்ந்துள்ள சாராத குடும்ப அமைப்பிற்கும் உள்ள தொடர்பு நிலைகளே ஆகும். குழந்தைத் தொழிலாளர்களின் சீர்திருத்தம் பற்றிப் பேசுவோர், தம்முடைய இல்லங்களில் ஒருவருக்கு இருவராகச் சிறுவதை வைத்துக் கொள்வது போலத்தான் பெண்ணியம் பேசும் பலரது உண்மைநிலை உள்ளது. இதற்கு அவர்களது உள்ளமே சாட்சி.

பெண்ணியம் பேசுவது ஓர் இலக்கியத்தகுதி என்பது போன்று மாயத்தோற்றம் ஆராய்வாளர்களிடையே இன்று ஊடுருவியுள்ளது. அதிலும் 'தீவிரவாதப் பெண்ணியம்"

பேசுவது என்பது 'போர்க்குதல் எழுப்புவது போன்றது'' என்றும், 'அடைபட்ட கூண்டின் கதவு திறக்கப்பட்டது; சிறுத்தையே வெளியே வா'' என்று புரட்சிக்கான அழைப்பு விடுப்பது போன்றது என்றும் பழையான கருத்துக்கள் புனையப்படுகின்றன. இது, ஒரு கண் இன்னொரு கண்ணைக் குத்திக் கொள்வது போலாகும்! கண்கள் தங்களுக்குள்ளேயே கட்சி பிரிந்துக் கொள்ளலாமா? ஆனால் கட்சி பிரிக்க வேண்டும் என்று தீவிரவாதப் பெண்ணியவாதிகள் வரிந்து கட்டுகிறார்கள். இது எல்லையைக் குறுக்கிக் கொள்ளும் குறுகிய மனப்பான்மையைக் குறிக்கிறது என்று திறனாய்வாளர்கள் கூறுகின்றனர்.

'இத்தகைய திறனாய்வுப் பெண்களுக்கும் ஆண்களுக்கும் இடையிலான உறவு முறைகளை அறவே புறக்கணித்து வருகிறது. மகளிர் வாழ்வின் கூட்டுத் திட்டங்களை அவைப் புதினங்களிலும் நடைமுறை வாழ்விலும் எத்துணைக் கடுமையாக எதிர்க்கப்பட்டாலும் அல்லது ஏற்றுக் கொள்ளப்பட்டாலும், பெண்ணியத் திறனாய்வும் பெண்ணிய வரலாறும் விவரமாக வெளிக் கொணர வேண்டும். இங்ஙனம் வெளிக் கொணரும் பணியில் ஈடுபட வேண்டிய பெண்ணியத் திறனாய்வு, பெண்களுக்கிடையிலான உறவுமுறைகளைப் பற்றிய ஆய்வை மட்டும் தனது பாணியாகக் கொண்டு எல்லையைக் குறுக்கிக் கொள்வது முறைதானா?''3

திறனாய்வாளர்களின் இந்த ஆதங்கம், 'பெண்களே பெண்களின் மொழியில் பெண்களின் பிரச்சினைகளை எழுதவேண்டும்'' எனும் ஆண் - மறுப்புப் பெண்ணியவாதிகள் எழுப்பிய குரலின் எதிரொலியாகும். பெண்ணியத் திறனாய்வு என்பது பன்முகத் திறனாய்வாகப் பரிமாணம் பெற்றுள்ளது என்பதை ஆண்ட்கோலோத்னி என்ற பெண்ணியத் திறனாய்வாளர் ஒத்துக் கொள்கிறார். ஆனால் ஷொவால்டரோ, 'கோட்பாட்டளவில் ஒரு பொதுக்கருத்து ஒன்றை நிலைநிறுத்தி ஒரே அணுகுமுறையை அனைவரும் பின்பற்றினால்தான் திறானாய்வு செழிக்கும்'' என்கிறார். 'இதனால், 'ஒவ்வொரு திறனாய்வாளரும் தமது சொந்தப் பட்டறிவை அடிப்படையாகக் கொண்டு கோட்பாடு வகுக்க முற்படும்போது திறனாய்வு மேலும் சிக்கல் மிக்கதாகிறது'' என்று கருத்துரைத்துள்ளார்.4

இவ்வாறு அந்நியப் பெண்ணியத்திறனாய்வு அந்நாட்டவருக்கே சிக்கலாகும்போது, அதை ஒவ்வொரு இந்தியப் பெண்ணியத்தோடு பொருத்திப் பார்ப்பது? என்ற கேள்வி எழுகிறது. அவ்வாறு பொருந்திப் பார்க்கத் துணியும் போது சிக்கல் மேலும் கடினமாகிறது. இந்த நிலையில் சிக்கல் இல்லாத, எளிய, இந்தியச் சிந்தனைகளோடுகூடிய - இந்திய மரபினை அடையாளம் காட்டக்கூடிய ஒரு பெண்ணிய அணுகுமுறையை இனம் காண்பது தேவையாகிறது. இதுபற்றி, இக்கட்டுரையின் முற்பகுதியில் நாம் ஏற்கனவே குறிப்பிட்டுள்ள பெண்ணியத் திறனாய்வாளர்களில் இரண்டாம் குழுவினர் முயற்சி செய்து பார்த்துள்ளனர். அவர் தம் முயற்சிகளும் சிலவற்றை இங்குச் சுட்டிக்காட்டலாம்;

'மேலை நாட்டுப் பெண்ணியம் தனக்கென்று தனித்த வரலாறு உடையது. இந்தியப் பெண்ணியம் என்பது இந்திய வரலாற்றோடு குறிப்பாகச் சுதந்திரப் போராட்ட வரலாற்றோடு இடையிடைந்தது. எனவே இந்தப் பெண்ணியம் என்பது மேலைநாட்டுப் பெண்ணியப் போக்கிலிருந்து மாறுபட்டது?'' என்ற உண்மையை இவர்கள் ஒத்துக்கொள்கிறார்கள்.

அடுத்த நிலையில் அந்நியப் பெண்ணியத்திற்கும் இந்தியப் பெண்ணியத்திற்கும் உள்ளவேறுபாட்டை இவர்கள் வெளிப்படுத்துகிறார்கள்.

'மேலைநாட்டுப் பெண்ணியவாதிகள் பெண்ணியத்தின் அடிப்படையை உருவாக்கும் கோட்பாட்டாளர்களாகவும், செயல்பாட்டாளர்களாகவும் இனம் காணப்படுகின்றனர். இந்தியப் பெண்ணியவாதிகளோ பெண்களுக்குச் சமூகத்தில் ஓர் இடம் பெற்றுத்தரப் பாடுபடும் சீர்திருத்தவாதிகளாகவும், அவர்களை மரபுத் தளையிலிருந்து விடுவிக்கப் பாடுபடும் சமூக மறுமலர்ச்சியாளர்களாகவும் காட்சியளிக்கின்றனர்."8

இவர்களே இந்தியப் பெண்ணியவாதிகளை அடையாளம் கண்டு கொள்வதற்குரிய மூன்று அடிப்படைகளைத் தருகின்றனர்.9 அவை வருமாறு:

1. பெண்களின மேம்பாட்டைக் கருத்திற்கொண்டு அதற்காகப் பாடுபடுபவர்கள்.
2. பெண்களை எல்லா நிலைகளிலும் அடிமைத்தளையிலிருந்து விடுவிக்கப் பாடுபடுபவர்கள்.
3. பெண்களிடையே சமூக, பொருளாதார, கலாச்சார ஆன்மீக அடிப்படையிலான மாற்றத்தை ஏற்படுத்தித் தந்தவர்கள்.

நாம் இனிவரும் இயல்களில் எடுத்துக்காட்ட இருக்கின்ற பெண்ணியம் பேசிய பெரியோர்களின் அணுகுமுறைகளும் மேற்சுட்டிய மூன்று வழித்தடங்களில் அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

இந்தப் போக்கிலேயே இரண்டாம் குழுவினர், 'பெண்ணியவாதிகள் என்று எவரைக் குறிப்பிட முடியும்?" என்ற வினாவினை எழுப்பி அதற்குப் பதில் தரவும் முயன்றுள்ளனர்:

'பெண் முன்னேற்றச் சிந்தனையாளர்கள்; பெண் விடுதலை இயக்கத்தில் பங்கேற்பவர்கள்; மகளிரது சிக்கல்கள் விலகப் பாடுபடுபவர்கள்; தந்தை வழிச் சமூக அமைப்பும், சமூக நிறுவனங்களும் எங்ஙனம் பெண்டிரைக் கட்டுப்படுத்துகின்றன என்றறிந்து அவற்றை மாற்றியமைக்க விரும்புபவர்கள்; தங்கள் ஆய்வுகளின் மூலமாக, பெண்டிரைத் தாழ்வுறுத்தும் கருத்தாக்கங்களைக் கண்டறிந்து, அவற்றை அகற்றவும், அவற்றுக்கெதிரான மாற்று விழுமியங்களை மக்கள் மனத்தில் நிலை நிறுத்தவும் பாடுபடுபவர்கள், பெண்ணியவாதி பெண்ணாகத்தான் இருக்க வேண்டும் என்பதில்லை. ஆணாகவும் இருக்கலாம். பெண்டிர் நல வாழ்வில் ஈடுபாடு காட்டுபவர்கள் பெண்ணியவாதிகள் ஆவர்".10

இந்த இடத்தில், மேலை நாட்டுப் பெண்ணிய வரலாற்றில் மறைக்கப்பட்ட அல்லது மறுக்கப்பட்ட பெண்ணியப் போராளி ஒருவரைப் பற்றி நாம் விளக்க வேண்டியது அவசியமாகிறது. அவர்தான் மேரி உல்ஸ்டன் கிராப்ட் என்ற பெண்மணி!

யார் இந்த மேரி உல்ஸ்டன் கிராப்ட்?

- சொத்துக்களை விற்றுக் குடித்துத் தீர்த்த தந்தை.
- கொடுமைக்காரக் கணவனால் சித்ரவதைகளை அனுபவித்த சகோதரி.
- மணவாழ்க்கையிலி; வெறுப்பே மிஞ்சிய உயிர்த்தோழி.
- காதலித்தவன் கைவிட்டதோடு ஒரு குழந்தைக்குத் தாயாக்கிச் சென்ற துயரம்.

இத்தனைக் கொடுமைகளையும் தன்னுடைய பத்தொன்பது வயதுப் பருவத்திலேயே நெஞ்சில் சுமந்து கொண்டு 'ஆயா'' வேலை பார்த்து வாழ்ந்த மிக எளிய ஏழைப் பெண்தான் மேரி உல்ஸ்டன் கிராப்ட்!

மேலைநாட்டுப் பெண்ணியம் பற்றிய வரலாறு இவர் முதற்கொண்டுதான் தொடங்கப் பெறுதல் வேண்டும். ஆனால் அவ்வாறு செய்யப்படுவதில்லை.'பெண்ணுரிமை வரலாற்றாசிரியர்கள் பெரும்பாலும் மேரி கிராப்டை மறந்திருப்பது போல்தான் தோன்றுகிறது'' எனும் மனித உரிமைகள் ஆய்வாளரின் கருத்து இதற்குத் துணை செய்கிறது.11 இதற்கான காரணம் ஒருவேளை இவர் குடும்ப அமைப்பில் இருந்து கொண்டு பெண்ணியம் பேசியதாக இருக்கலாம். அல்லது 'பெண் ஆண் மீதும் ஆண் பெண் மீதும் எந்த வகையான வற்புத்தல்களையும் நிகழ்த்தாமல் சமுதாயம் இயங்கும் நிலை வருமானால் ஆண் - பெண் பேதம் தானே ஒழியும்...''12 என்று அவர் சமத்துவம் பேசியதால் இருக்கலாம்.

பெண்ணுரிமை பேசுவதே தகாத செயல் என்று கருதப்பட்டு வந்த அக்காலச் சூழலில் 'பெண்ணுரிமைக்கான நியாயங்கள்'' என்ற நூலை அச்சமின்றி எழுதி வெளியிட்டார். இதனால் மேரி உல்ஸ்டன் கிராப்ட் 'பாவாடை கட்டிய ஓநாய்'' என்றும், 'தத்துவம் பேசும் பாம்பு'' என்றும் பழிதூற்றப்பட்டார். இதற்கு ஐந்தாண்டுகளுக்கு முன்னதாக 'மகளிர் கல்விச் சிந்தனைகள்'' என்ற நூலை எழுதினார்.

மேரி உல்ஸ்டன் கிராப்ட் அதிகம் படித்தவரல்லர். ஆனாலும் பெண் கல்விக்காகப் பெரிதும் போராடினார். 'கல்வி ஒன்றுதான் பெண்களை ஆண்களுக்குச் சமமாக உயர்த்தவல்ல ஒரே கருவி; சரியான கருவி. ஆகவே பெண் கல்விக்கு எதிரான கருத்துக்களில் எவ்வித நியாயம் இல்லை'' என்று வாதாடினார்.13 அதனடிப்படையில் பெண்களுக்கு மருத்துவக் கல்வி அளிக்கப்பட வேண்டும் என்று 1792 முதல் வற்புறுத்தி எழுதினார். ஆனால் அவரது கனவு ஐம்பதாண்டுகட்குப் பின்னர் தான் நனவானது. 1849ல் எலிசபெத் பிளாக்பெல் என்ற பெண்ணுக்கு அமெரிக்காவில் மருத்துவப் பட்டம் பெற வாய்ப்புக் கிடைத்தது. (தமிழ்நாட்டில் அதற்கடுத்த ஆண்டில் 1850ல் தொடங்கப்பட்ட சென்னை மருத்துவக் கல்லூரியில் 25 ஆண்டுகள் கழிந்த பிறகே 1875ல் பெண்கள் சேர்க்கப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது).

ஆண் - பெண் ஈர்ப்பு என்பது இயற்கையானது என்றும் பெண்கள் தங்கள் உரிமைகளின் நியாயங்களை ஆண்களின் மனதில் பதியும்படி உணர்த்த வேண்டும் என்றும், பெண்களோடு ஆண்களும் பெண்ணுரிமைக்கு உழைக்க வேண்டும் என்றும் மேரிஉல்ஸ்டன் கிராப்ட் குரல் கொடுக்கிறார்.

'ஆண் - பெண் ஈர்ப்பு என்பது இயற்கையானது ஆண், பெண்ணால் ஈர்க்கப்படுவதும், பெண், ஆனால் ஈரக்கப்படுவதும் தவறாகாது'' என்றும், 'பெண்ணாகிய நான் மட்டுமே பேசுவதால் பெண்களுக்கான உரிமைகள் பிறந்துவிடாது. பரந்தமனம் கொண்ட பெருந்தன்மையான ஆண்களின் மனதில் பெண்களின் உரிமை களுக்கான நியாயங்கள் பதியனிடப்பட வேண்டும். அப்போதுதான் பெண்ணுரிமைகள் எங்கும் மலரும்''.14

என்றும் குறிப்படுகிறார். அதேசமயம் ஆண்கள் பெண்களைக் கொடுங்கோலர்களாக மிகவும் விரும்பு வார்கள்; அதுபோலத் தமது மனைவியர் வாய் பேசாத விளையாட்டுப் பொம்மைகளாக இருப்பதையே கணவன்மார்கள் விரும்புகிறார்கள். தமது குடிமக்கள் மீது இறையுரிமை இருப்பதாக மன்னர்கள் கருதியிருப்பது போலக் கணவன்மார்களும் தம் மனைவிகள் மேல் அத்தகைய உரிமைகள் தமக்கு இருப்பதாகப் பாவித்து நடந்து கொள்கிறார்களே"15 என்று கொடுமைக்கார கணவன்களைக் கடிந்துரைக்கிறார்.

பெண்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளுக்கான எதிர்ப்புக் குரலை மேரி உல்ஸ்டன் கிராப்ட் 'குடும்பம்" என்ற அமைப்புக்குள்ளிருந்து தொடுத்தார். இதற்கு மிகப் பிற்பட்ட காலத்தில்தான் - அதாவது 1934க்கும் 1944க்கும் இடைப்பட்ட பத்தாண்டுகளில் - அமெரிக்காவில் பெண்ணியக் குரல் ஓங்கி ஒலித்தது என்று கேள்விப்படுகிறோம். இக்காலக்கட்டத்தில் ஜோசபின் தோனாவன் ஜூடித் ஃபெட்டர்லி, சாண்ட்ரா கில்பர்ட், சூசன் கூபர், ஃபிளாரென்ஜ் ஹோவ், ஆலிஸ் ஜார்டைன், அன்னட் கோலோட்னி, கேட் மில்லட், எல்லன் மூர்ஸ், லில்லியன் ராபின்சன், எலைன் ஷோவால்டர், பாட்ரிசியா மேயர் ஸ்பாக்ஸ், காயத்திரி சக்கரவர்த்தி ஸ்பிலாக், காதரின் ஸ்டிப்ஸன் ஆகியோர் பெண்ணியத் திறனாய்வுகளை மேற்கொண்டனர்.16

மேலை இலக்கியப் பெண்ணியத் திறனாய்வாளர்கள் குறித்துத் தமிழில் அதிகமாகவே அறிமுகம் நிகழ்ந்துள்ளது. அனால் சொந்த நாட்டில் பெண்களின் உரிமைகளையும் சுதந்திரத்தையும் மீட்டுத் தந்து பெண்ணிய முன்னோடிகளாக விளங்கிய பெரியோர்களின் சிந்தனைகளும் செயல்பாடுகளும் மேரி உல்ஸ்டன் கிராஃப்டினுடைய சிந்தனைகளும் செயல்பாடுகளும் மறைக்கப்பட்டிருந்ததைப் போலவே, மறைக்கப்பட்டோ, மறுக்கப்பட்டோ வந்திருக்கின்றன. இதனைத் தமிழ்நாட்டின் ஒரு சார் பெண்ணியத் திறனாய்வாளர்கட்கு வெளிச்சம் போட்டுக் காட்டும் முயற்சியே இங்கு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த வரையறைகளைப் பொருந்திப் பார்க்கும்போது இந்நூலில் காட்டப்படும் பெரியோர் அனைவரும் பெண்ணியவாதிகளே. இவர்களைப் பெண்ணியவாதிகள் என்று உறுதிபட நாம் நிறுவியதையடுத்து இவர்களது அணுகுமுறைகளை அலசிப்பார்ப்பது அவசியமாகிறது. ஏனெனில் இந்த அணுகுமுறைகளின் அடிப்படையில் தான் 'இந்தியப் பெண்ணியம்" இந்நூலின் இறுதியில் உருவாக்கப்பட்டுள்ளது. அதற்கு முன்னதாக இந்தியாவில் பெண்களின் நிலையில் ஏற்பட்ட ஏற்ற இறக்கங்களை வரலாற்று முறையில் சற்று உற்றுப் பார்க்கலாம்.

# சமண சமயத்தில் பெண்ணின் நிலை

நீலகேசி. ஜெ.,
முனைவர் பட்ட ஆய்வாளர்,
சமணவியல் துறை, சென்னைப் பல்கலைக்கழகம்,

சமண இலக்கியங்களில் அருகர் 'வாலறிவன்', 'எண் குணத்தான்', 'மலர்மிசை ஏகினான்', 'இறைவன்', என ஆண்பால் விகுதிகளைக் கொண்டே குறிப்பிடப் பெறுவது இங்கு நோக்கத்தக்கது. தமிழ் எழுத்துக்களுள் னகரம் இறுதி எழுத்தாகும்; தொல்காப்பிய உரை ஆசிரியர் இளம்பூரணர் னகரத்தை இறுதியில் வைத்ததற்கான காரணத்தைப் பின் வருமாறு சுட்டுகிறார்.

**''னகரம் வீடுபேற்றிற்குஉரிய ஆண்பாலை**
**உணர்த்துதல் சிறப்பான் பின் வைக்கப்பட்டது''** -1, நூன் மரபு

பெண் பிறவியில் பெண்களுக்கு வீடுபேறு இல்லை என்பதைப் பற்றிய விவரம் 'ப்ராப்ரத்திரயம்' இரண்டாவது பகுதி, 'பிரவசனஸார'த்தில், 'சாரித்ராதிகாரம்' என்னும் மூன்றாம் அதிகாரத்தில், விரிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

## பெண் பிறவி பற்றி மேருமந்தர புராணம்:

சுப, அசுப, பரிணாமங்கள் காரணமாக உற்ற வினைகளால், தேவ, நரக, விலங்கு அல்லது தாவர, மனித பிறவிகள் எனும் நான்கு கதிகளில் உழன்று வருந்தும் உயிர்களில் ஒரு சில, தமது உயர் ஞானத்தினால் மேலான குணமெய்தி மனிதப் பிறவியில், ஆண்களாய்ப் பிறப்பெடுத்து, முறையான தானம், பூஜை, தவம், புரிந்து, நாற்கதிகளைக் கடந்து, வீடுபேறு பெறுவர்; பெண்டிர் தமது பெண் பிறவியில் முக்தி எய்த மாட்டார்.

**''விதியினால் கதிகள் நான்கின் மேவி நின்றார்கள் தம்முள்**
**மதியினால் பெரிய நீரார் மக்களாய் வந்து தோன்றி**
**விதியினால் தானம் பூசை மெய்த்தவம்செய்து வீட்டைக்**
**கதிகளைக் கடந்து செல்வார் காரிகையார்கள் செல்லார்''** -737

**மன்னனும் தேவியும் மைந்தனும் சுவர்க்கம் புக்க சருக்கம், மேருமந்தர புராணம்**

இந்திரரின் மனைவியாகவே இருப்பினும் இறைநிலை எய்துவதற்கு உரியவற்றைப் புரிந்து உயரும் வாய்ப்பு இல்லையாதலால், மகளிர் தம் பெரும்பாவத்தால் மக்களைப் பெறாத மலடியராதலும், மக்களைப் பெற்று இழப்பதால் பெருந்துயரம் அடைவதாலும், தம் கணவருக்குப் பிற பெண்டிர் மனைவியாதலின் அவதியுறுதலும், ஆகிய இத்துயரங்களில் ஆழ்ந்து, தமக்கமைந்த பெண் பிறவியையும் இழந்து, தாழ்ந்த பிறவியை எய்தவும் கூடும்.

**''இந்திரன் தேவிமார்க்கும் இறைமை செய்முறைமை இல்லை**
**பைந்தொடி மகளிர் ஆவார் பாவத்தால் பெரிய நீரார்**
**மைந்தரைப் பெறாமை பெற்றால் இழந்திடல் மாற்றுப் பெண்ணில்**
**அந்தரத்து அனைய துன்பத்து ஆங்கதி நீங்குவார்கள்''**

**-738, மன்னனும் தேவியும் மைந்தனும் சுவர்க்கம் புக்க சருக்கம், மேருமந்தர புராணம்**

கொல்லாமை, பொய்யாமை, கள்ளாமை, பிறன்மனை நயவாமை, மிகுபொருள் விரும்பாமை எனும் ஐந்து அணுவிரதங்களை அனுசரித்து, தவத்தோருக்கு ஆகார தானம் அளித்து, அருகனை வழிபட்டு, பஞ்ச பரமேட்டியரின் அடி தொழுது வரும் கற்புடை பெண்டிர், பெண் பிறவி நீங்கி, கல்ப லோக தேவர்களாகப் பிறப்பர்.

**''விரத சீலத்தர் ஆகித் தானம் மெய்த்தவர்க்குச் செய்து**
**அருகனைச் சரண மூழ்கி ஆன்றவர்ச் சிறப்புச் செய்து**
**கருதி நற்கணவர் பேணும் கற்புடை மகளிர் இந்த**
**உருவத்தின் நீங்கிக் கற்பத்து உத்தம தேவர் ஆவார்''**

**-739, மன்னனும் தேவியும் மைந்தனும் சுவர்க்கம் புக்க சருக்கம், மேருமந்தர புராணம்**

பெண்டிர் இவ்வுலகில் ஆடவராகப் பிறந்து, தவம் இயற்றி, விருப்பு வெறுப்பு நீங்கியவராய் வீடுபேறும் பெறுவர்; முறையாக விரதம் நோற்பதால், காலப்போக்கில் வினைகளை வென்று முக்தியும் அவருக்குக் கைகூட வாய்ப்புண்டு.

**''மாதவம் தாங்கி வையத்து ஐயராய் வந்து தோன்றி**
**ஏதம்ஒன்று இன்றி வீடும் எய்துவர் தையலார்கள்**
**நீதியால் நோற்று வந்தீர் நீவிர் இப்பிறவி நீங்கிக்**
**காதிக்கண் அரிந்து வீடும் காலத்தால் அடைதிர் என்றான்''**

**-740, மன்னனும் தேவியும் மைந்தனும் சுவர்க்கம் புக்க சருக்கம், மேருமந்தர புராணம்**

சமண சமயத்தில் திகம்பர வழிமுறையில் பெண்களால் அப்பெண் பிறவியில் வீடுபேறு அடைய இயலாது என்றும், அவ்வுயிர்கள் ஆடவராகப் பிறந்து தவம் இயற்றினால் தவிர, முக்தி அடைய வழியில்லை என்றும், கூறப் பெறுகின்றது. இதற்கு முக்கிய காரணங்கள் உள்ளதாகவும் உரைக்கப் பெறுகின்றது; அவை கீழ் வருமாறு:

- பெண்களின் உடல்களில் நிகோத உயிர்களின் பிறப்பும், இறப்பும், தொடர்ந்து நடைபெறுகின்றது.
- பெண்களுக்குத் துறவறத்தில் நிர்வாண நிலையை அடைவது நடைமுறையில் சாத்தியமில்லை.
- துறவறத்தில் தரும, சுக்ல தியானத்தில் ஆழ்வதற்கான உடல் வலிமையையும், மனத்திண்மையும், பெண்களுக்கு இயல்பிலேயே இல்லை.

உடலின் அமைப்பு 'ஸம்ஹனனம்' என்று கூறப்பெறுகின்றது; இது ஆறு வகைப்படும்; அவையாவன:

1. வஜ்ர விருஷப நாராச ஸம்ஹனனம்
2. விருஷப நாராச ஸம்ஹனனம்
3. நாராச ஸம்ஹனனம்
4. அர்த்த நாராச ஸம்ஹனனம்
5. கீலக / கீலித ஸம்ஹனனம்
6. அஸம்ப்ராப்தா ஸ்ருபாடிகா ஸம்ஹனனம்

எவர் மிக உயர்ந்ததான வஜ்ர விருஷப நாராச ஸம்ஹனனம் உடலமைப்பு கொண்டவரோ, அவரே வீடுபேறு அடைய இயலும்; கரும பூமி வாழ் பெண்கள் இறுதி மூன்று உடலமைப்புகளைக் கொண்டவராக இருப்பதனால், அவர்கள் பெண் உடல்களில் இருக்கும் போது வீடுபேறு அடைய இயலாது.

**''அந்திமதிய ஸம்ஹடணஸ்ஸ தஓ புண கம்மபூமிமஹிலாணாம்**
**ஆதிமதிகஸம்ஹடணம் ணத்திதி ஜிணேஹிம் ணித்திட்டம்''**
**-32, கரும காண்டம், கோமட்ட சாரம்**

இறுதி மூன்று உடலமைப்புகள் மட்டுமே கரும பூமியில் வாழும் பெண்களிடம் காணப் பெறுகின்றனதாகவும், முதல் மூன்று உடலமைப்புகள் அவர்களிடம் இல்லை என்று ஜின பகவானால் உரைத்தருளப் பெற்றுள்ளதாகவும், என கோமட்டசாரம் நூலில் கரும காண்டத்தில் கூறப் பெற்றுள்ளது.

ஐம்பெரும் காப்பியங்களுள் ஒன்றான சீவகசிந்தாமணியில் சீவகன் துறவேற்றவுடன் அவனது எண் மனைவியரும் பெண் பிறப்பு கெடுவதற்காகவும், ஆடவராய் பிறப்பெடுப்பதற் காகவும், துறவறம் ஏற்றதாகக் காப்பியக் கூற்று அமையும்.

**''சூழ் பொன் பாவையைச் சூழ்ந்து புல்லிய**
**காழகப் பச்சை போன்று கண் தெறூஉம்**
**மாழை நோக்கினார் மேனி மாசு கொண்டு**
**ஏழைப் பெண் பிறப்பு இடியச் சிந்தித்தார்''**

**''ஆசை ஆர்வமோடு ஐயம் இன்றியே**
**ஓசை போய் உலகு உண்ண நோற்றபின்**
**ஏசு பெண் ஒழித்து இந்திரர்களாய்த்**
**தூய ஞானமாய்த் துறக்கம் எய்தினார்''**

-3120, 3121, முக்தி இலம்பகம், சீவகசிந்தாமணி

ஐஞ்சிறுகாப்பியங்களுள் ஒன்றான சூளாமணி பெண் பிறவியைப் பற்றி பின்வரும் கருத்தையே முன் வைக்கின்றது.


**''அண்ணை அலிகுருடுஆதி அவர்களை**
**மண் உயர்ஞாலத்து மானுடராக வைத்து**
**எண்ணுநர் யார்உளர் - எல்லாம் அமையினும்**
**பெண்ணின் பிறவியும் பீடுஉடைத்துஅன்றே''** -1984, துறவு, சூளாமணி

சமணத்தின் மற்றொரு பிரிவான ஸ்வேதாம்பர வழிமுறையில் பெண்களும் முக்தி அடையலாம் என்றும், இருபத்து நால்வருள் பத்தொன்பதாமவரான மல்லி தீர்த்தங்கரர் பெண் என்றும், சுட்டப் பெறுகின்றது. லக்னோ அருங்காட்சியகத்தில் மல்லி தீர்த்தங்கரரின் பெண் வடிவ சிலை காட்சிக்கு உள்ளது.

**மன்னார்குடி ஜினாலய மூலவர் - மல்லி தீர்த்தங்கரர்**



**லக்னோ அருங்காட்சியகத்தில் பெண் வடிவில் மல்லி தீர்த்தங்கரர்**





பெண் பிறவியில் முக்தி இல்லை என்பதாலேயே சமணம் பெண்ணியத்திற்கு எதிரானது என்று கருதி ஒரு தவறான முடிவுக்கு வரலாகாது; சமணம் உடன்கட்டை ஏறுதல், பெண் தானம் கொடுத்தல், போன்ற மூட நம்பிக்கைகளினால் பெண்கள் பெரிதும் பாதிக்கப் படுவதைத் தடுக்க அக்காலத்திலேயே ஓங்கி குரல் கொடுத்து, நூல்களில் பதிவிட்டு, சமூக முன்னோடியாக விளங்குகிறது.

*சமணம் பெண்கள் உடன்கட்டை ஏறுவதைப் பெரிதும் கண்டிப்பதை நீலகேசியில் காணலாம்.*

**''ஆவது இன்மை அறிந்தும் அவத்தமே**
**சாவதே உங்கள் சத்துவர் சால்பு எனில்**
**காவல் பூண்ட கணவனோடு ஈமத்தின்**
**வேம வட்கும் விழுக்குணம் ஆங்கொலோ''**

*-218, குண்டலகேசி வாதச் சருக்கம், நீலகேசி*

*சமணம், பிறருக்குத் தம் மனைவியையும், மகளையும், ஈவதே தானம் என்ற தவறான மத, சமூக எண்ணப்போக்கைக் கண்டிப்பதையும் நீலகேசியில் காணலாம்.*

**''தன்னை ஈந்ததும் தாரங்கள் ஈந்ததும்**
**அன்ன தன்பொருள் கேட்டு அறம் கொண்டவன்**
**மன்னும்இல் அயன் மாந்தரைக் காணுமேல்**
**பின்னச் செய்வன போலும் ஆகுமோ''**
**-243, அருக்கச்சந்திர வாதச் சருக்கம், நீலகேசி**

**''கண் கொடுத்தான் தடி கொடுத்தான் கயப்புலிக்குத் தற்கொடுத்தான்**
**பெண் கொடுத்தான் உடம்பினையும் பிளந்து இட்டுப் பிறர்க்கு ஈந்தான்**
**மண் கொடுத்தான் மகக்கொடுத்தான் மன்னும் தன் சேர்ந்தார்க்கு**
**விண் கொடுத்தான் அவன் கொடுத்த விரித்து உரைப்பன் கேள் என்றாள்''**

*-205, குண்டலகேசி வாதச் சருக்கம், நீலகேசி*

### பெண் பிறவியின் காரணம் பற்றி அருங்கலங்செப்பு:

**''பெண்டிர் நபும்சகர் ஆகார் பிழைப்பு இன்றிக்**
**கொண்ட நற்காட்சி யவர்''** *-49, அருங்கலச்செப்பு*

*குற்றமில்லாத நற்காட்சி உடையவர் பெண்டிராகவும், அலியாகவும், பிறப்பது இல்லை என்பது கருத்து.*

*மேலும் பெண்கள் தம் மரணத்திற்குப் பின்னர் ஏழாம் நரகத்திற்குச் செல்வதில்லை என்றும் உணர்த்தப் பெறுகின்றது.*

**''மீன்ஆணும் பெண்ணும் நாற்காலும் கால்இலவும்**
**வான்மேல் வருவ தவழ்வ குறியிலவும்**
**மேன்மேல ஏழ்நரகின் கீழ்ச்செல்லா மேற்செல்லும்**
**மேல்நான்கு வீடுதவம் விரதம்விலங் காமுறையே''**

*-78, வைஜயந்தன் முத்திச் சருக்கம், மேருமந்தர புராணம்*

*அதாவது பெரிய மீன்களும், ஆடவர்களும், ஏழாம் நரகம் வரையிலும், பெண்கள் ஆறாம் நரகம் வரையிலும், நாற்கால் விலங்குகள் ஐந்தாம் நரகம் வரையிலும், கால் இல்லாதனவாகிய நாகம் முதலியன நான்காம் நரகம் வரையிலும், பறவை முதலியன மூன்றாம் நரகம் வரையிலும், தவழ்ந்து செல்வனவாகிய ஆமை முதலியன இரண்டாம் நரகம் வரையிலும், மனமில்லாதனவாகிய ஓணான் முதலியன முதல் நரகம் வரையிலும், பிறப்பனவாம்; இவைச் சொன்ன வரிசைக் கிரமங்களுக்குக் கீழே செல்லமாட்டா.*

ஆக, பெண் பிறவியில் முக்தி எய்துவது குறித்த சமயநோக்கு இருவேறாக ஒன்றுக்கொன்று முரணாக இருப்பினும், ஐஞ்சிறுகாப்பியங்களுள் ஒன்றான நீலகேசியில் பெண்களுக்கான முற்போக்கு சிந்தனை வரவேற்கத்தக்கது. முக்தி, நரகம், பெண் பிறவியின் காரணம், பற்றிய நோக்கும், சரியா, அன்றி தவறா, என்பதைக் கண்டவர் விண்டிலர்! விண்டவர் கண்டிலர்!

# அம்பை சிறுகதைகளில் பெண்ணிய சமூகமும் எழுச்சியும்

ஜெ.கிருத்திகா
முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை,
சென்னைக் கிறித்தவக் கல்லூரி, தாம்பரம்

## நோக்கம்

பெண்கள் மீது நிகழ்த்தப்படும் அடக்குமுறைகளைப் பற்றி அம்பை தன் சிறுகதைகளில் பரவலாகப் பேசியிருந்தாலும், சமையலறை என்னும் தளத்தைப் பயன்படுத்தி பெண்களின் ஆசைகளையும் அவர்கள் மீதான அடக்குமுறைகளையும் 'வெளிப்பாடு' மற்றும் 'வீட்டின் மூலையில் ஒரு சமையலறை' என்னும் சிறுகதைகளில் எவ்வாறு வெளிப்படுத்தி சமூகத்தில் எழுச்சியை ஏற்படுத்தியுள்ளார் என்பதைப் பற்றி ஆய்வதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

## ஆய்வு அணுகுமுறையும் எல்லையும்

ஆய்வுக்குஎடுத்துக்கொள்ளப்பட்டசிறுகதைகளில்உள்ளநிகழ்ச்சிகளைஆராய்ந்துவிளக்குகின்ற வகையில் இவ்வாய்வுக் கட்டுரை அமைந்திருப்பதால் விளக்கமுறைத் திறனாய்வு இவ்வாய்வில் கையாளப் பெற்றுள்ளது. அம்பையின் கதைகள் (1972-2014) என்னும் தொகுப்பிலுள்ள 'வெளிப்பாடு', 'வீட்டின் மூலையில் ஒரு சமையலறை' ஆகிய இரு சிறுகதைகளும் இவ்வாய்வு எல்லையாக வரையறுக்கப்பட்டுள்ளது.

## முன்னுரை

பெண்களை அவர்களுக்குத் தெரியாமலேயே குடும்பம் என்ற அமைப்பைக்காட்டி அடிமைப்படுத்தப்படுகிறார்கள்.'குடும்பம்என்பதுவிலங்கு.அடிமைநிலையைமட்டுமன்று

நிலவுடைமையின் அடிமைத்தளத்தையும் உள்ளடக்கியது. அத்தோடு சமூகத்திலும், அரசியலிலும் பின்னர் ஏற்படப்போகும் பகைமை அனைத்தும் உள்ளடக்கிய சிறுவடிவம் குடும்பமே' என்று காரல்மார்க்ஸ் கூறுகிறார்.

பெண்களின் கடமை என்றாலே பிள்ளைபெறுதல், சமைத்துப்போடுதல் என்பது மட்டுமே சமூகத்தால் விதிக்கப்பட்ட விதியாகிவிட்டது. பெண்கள் தங்கள் பாதி வாழ்நாளைச் சமையலறையிலேயே நகர்த்தி விடுகிறார்கள். பெண்களுக்காகவும் பெண்ணியத்தைப் பற்றி அதிகம் பேசுபவராகவும் இருக்கும் அம்பை 'சமையலறை' என்னும் தளத்தைத் தனது சிறுகதைகளாகிய 'வெளிப்பாடு' மற்றும் 'ஒருவீட்டின்மூலையில்சமையலறை' ஆகிய கதைகளின் வாயிலாக வெளிப்படுத்தி இருக்கிறார்.

இவ்விருகதைகளில் வரும் பெண்பாத்திரங்கள் மூலம் அம்பை வெளிப்படுத்தும் பெண்களின் ஆசையையும் அவர்களுக்கு நிகழும் அடக்குமுறையையும் குறித்து இவ்வாய்வு விவரிக்கிறது.

## அம்பை

அம்பை என்னும் புனைப் பெயரால் அறியப்படுபவர் டாக்டர் சி.எஸ்.லட்சுமி ஆவார். நாற்பது

ஆண்டுகளாகப் பெண்கள் வரலாறு, வாழ்க்கைப் பற்றிய ஆய்வில் ஈடுபட்டிருப்பவர். *The Face Behind the Mask, The Singer and the Song, Mirrors and Gestures* என்னும் புத்தகங்களில் பெண் எழுத்தாளர்கள், பெண் இசைக்கலைஞர்கள், பெண் நடனக்கலைஞர்கள் குறித்து இவர் மேற்கொண்ட ஆய்வுகள் வெளிவந்துள்ளன. "சிவப்புக்கழுத்துடன் ஒரு பச்சைப் பறவை" என்ற சிறுகதைத் தொகுப்பிற்காக 2021இல் சாகித்ய அகாடமி விருது இவருக்கு வழங்கப்பட்டது. *SPARROW (sound & picture archives for research on women)* என்னும் பெண்கள் ஆவணக் காப்பகத்தை மும்பையில் 1988ல் நிறுவி அதன் இயக்குனராக செயல்பட்டு வருகிறார். "தமிழ்ச்சிறுகதை வரலாற்றில் அதுவரை கேட்டிராத ஒரு புதிய குரலாக, எழுபதுகளில் வெடித்தெழுந்தது அம்பையின் குரல். இன்றுவரை அக்குரல் இன்னும் அழுத்தமாகவும் பிசிறுகள் நீங்கியும் மேலும் பக்குவப்பட்டும் சமரசமின்றிச், சந்தேகத்திடமில்லாத உறுதியுடன் ஓங்கி ஒலித்து வருகிறது" என்று சா.தமிழ்ச்செல்வன் அம்பையைக் குறிப்பிடுகிறார்.

## பெண்களின் ஆசைவெளிப்பாடு

'வெளிப்பாடு' என்னும் சிறுகதையில் ஓர் ஆய்வாளர் பெண்மணி திருநெல்வேலிக்கு வருகிறார். அந்தப் பெண்மணி பெண்களின் வாழ்க்கைப் பற்றிய ஆய்வுச் செய்பவராக இருக்கிறார். முதலில் ஒரு பெண்ணைச் சந்திக்கிறார். அவள் திருமணம் ஆனவள். தன் வீட்டிற்கு வந்த ஆய்வாளரை அந்தப் பெண்மணியை முகம் வளர்ச்சியுடன் வரவேற்கிறாள். பின்னர் அந்தப் பெண்மணி ஆய்வாளர் ஊருக்கு வந்த நோக்கத்தினை தெரிந்துக் கொள்ள முற்படுகிறாள்.

**''என்ன ரிப்போர்டு எழுதணும்?''**
**''பொம்பளைங்க பத்தி.''**
**''பொம்பளைக பத்தி எழுத என்ன இருக்கு?''**

"அதாவது அவங்க எப்படி வாழாறங்க, என்னெல்லாம் வேலை செய்யறாங்க அவங்க தங்க வாழ்க்கையப் பத்தி என்ன நெனக்கிறாங்க..."

**''என்ன நெனக்கிறாங்க? புள்ள பெறுதோம். ஆக்கிப் போடுதோம்.''**
**எப்பப்பாரு புள்ள பெறலியே?நடுவிலே ஏதாவது யோசிச்சிருப்பிங்க, இல்ல?''**
**''ஆமா ரோசிச்சோம். போங்க.''**

இந்த உரையாடல் அந்த பெண்ணுக்கும் ஆய்வாளருக்கும் இடையே நடைபெறுவதாகவும் கதையின் முக்கிய அம்சமாகவும் உள்ளது. இதில் ஒரு சமூதாயம் பெண்கள் மீதான கட்டமைப்பை எப்படி எல்லாம் வடிவமைத்துள்ளது என்பதைக் காட்டுகிறது. பெண்கள் என்றாலே அடிப்படையில் சமைத்துக் கொண்டு குடும்பத்தினரின் தேவைகளைப் பூர்த்திச் செய்பவர்களாக மட்டுமே இருக்க வேண்டும் என்பதை விரத்தியுடன் சொல்வதாக அமைந்துள்ளது.

ஆய்வாளர் பெண்மணி இரண்டாவதாக ஒரு திருமணமாகாத பெண்ணைச் சந்திக்கிறார். அந்தப் பெண்ணிடம் கல்யாணத்திற்குப் பிறகு என்னெல்லாம் வேண்டும் என்று தனது ஆசைகளை பற்றி ஆய்வாளர் கேட்கிறார்.

அதற்கு அவள்,

**''தெருவுல நடக்கணும் தெனம்.**
**ஓட்டல்ல பலகாரம் சாப்பிடணும்.**
**கடைக்குப் போய் நானே பொடவை எடுக்கணும்.**
**சினிமா போகணும்.**
**நெறைய ஊர் பாக்கணும்''**

என்று கூறுகிறாள். இப்படியான சின்ன சின்ன ஆசைகளைக் கூட நிறைவேற்றுவதற்குக் கல்யாணம் மற்றும் மற்றவர்களின் துணைப் பெண்ணிற்குத் தேவைப்படுகிறது போலக் இக்காதையில் அம்பைக் காட்டுகிறார். ஆனால் அதேகதையில் மறைமுகமாக இத்தேவைகளை எல்லாம் தன்னந்தனையே பூர்த்தி செய்யக்கூடிய ஆய்வாளராக வரும் பெண்ணின் கதாபாத்திரத்தைப் படைத்துள்ளார் அம்பை.

'வீட்டின் மூலையில் ஒரு சமையலறை' என்ற இச்சிறுக்கதையின் தலைப்பே பெண்களுக்கான இடத்தைத் தெளிவாக உணர்த்துகிறது. ஒரு பெரிய ராஜஸ்தானிக் குடும்பத்தையும் அங்கு இருக்கும் சமையலறையயும் சுற்றியே இக்கதை அமைந்திருக்கிறது. இக்கதையில் காட்டப்படும் சமையலறை வீட்டின் மூலையில் பூஜ்ய வாட் விளக்கின் வெளிச்சத்தில் அமைந்திருக்கும். அங்கு எப்பொழுதுமே சப்பாத்தி மாவுப் பிசைந்துக் கொண்டும், மசாலா மணந்துக் கொண்டும்இருப்பது போல காட்டப்படுகிறது. இதில் மருமகளாக வரும் மீனாட்சி தன் மாமனார் பப்பாஜி கார் 'ஷெட்'டின் மேல் ஓர் அறையைக் கட்டிக்கொண்டு இருந்தபோது சமையலறைக்கு வெளியே உள்ளத் தாழ்வாரத்தைப் பெரிதுப் பண்ணும்படி கேட்டாள்.

**''பப்பாஜி சமையலறைக்கு வெளியே உள்ள தாழ்வாரத்தைப் பெரிது பண்ணிவிடுங்களேன். அதை நீங்கள் அகலமாக்கினால் நாற்காலி போட்டு உட்காரலாம். இடப்பக்கம் ஒரு பாத்ரூம் கட்டினால் அதில் பெரிய தொட்டி போடலாம்,பாத்திரம் தேய்க்க.பாத்ரூமுக்கு வெளியே துணி உலர்த்த அலுமினியக் கம்பி போட்டு விடலாம்.''**

இதைக் கேட்டப் பப்பாஜி தாக்கப்பட்டவரைப் போல் பார்த்தார். அதற்கான முயற்சிகள் எதையும் செய்யவில்லை.

அந்தச் சிறு சமையலறையில் எப்போதுமே சமைத்துக் கொண்டிருப்பவர்களுக்குத் தான் அதனுடைய கஷ்டம் புரியும். சற்றுப் பெரிது பண்ணினால் வசதியாக இருக்கும் என்று தன் சிறு ஆசையை வெளிப்படுத்தியும் அதற்கான முயற்சிகள் எதையும் எடுக்காமல் அலட்டிக் கொள்ளாமல் பப்பாஜிஇருந்தார். சமையலறையின் சிரமங்கள் ஆண்களுக்கு எப்போதுமே புரிவதில்லை காரணம் அவர்கள் சமையலறைக்குள் வந்தால் தானே? என்ற கேள்வியை அம்பை வாசகர்களின் முன்னிலையில் எடுத்து வைக்கிறார். குடும்பத்தின் மூத்த பெண்மணியாக வரும் ஜீஜி சமையலறையின் சாவிதான் தனக்கான அதிகாரம், அதைக் கடைசி வரை தன் கையிலே வைத்துக் கொள்வது தான் தன் வாழ்நாள் ஆசையாக நினைத்து வாழ்ந்து கொண்டிருப்பது போல அம்பை அக்கதாப்பாத்திரத்தைப் படைத்திருக்கிறார். ஆனால் காதல் திருமணத்தால் அந்த வீட்டுக்குள் நுழைந்த மீனாட்சிக்குப் புரிகிறது, இதிலிருந்து விடுபடுவததே உண்மையான பெண் அதிகாரமாகும் என்று. இவையே இவ்விரு கதைகளில் வரும் பெண் பாத்திரங்களின் ஆசையாக இருப்பதுபோல் அம்பைக் காட்டுகிறார்.

## அம்பைச் சித்தரிக்கும் பெண்களின் அடக்குமுறைகள்

அம்பையுடையக் கதைகள்எண்பதுகளில் வெளிவந்தவையாகும். அக்காலக் கட்டத்தில் சமுதாயத்தில் நிலவியப்பெண் வளர்ச்சிக்கு எதிரான அடக்கு முறையை இவ்விரு கதைகளும் முதன்மைப்படுத்துகின்றன. முதலில் 'வெளிப்பாடு' என்னும் சிறுகதையில் வரும் ஆய்வாளர் பெண்மணிக்கும் திருமணமானப் பெண்ணிற்கும் இடையே நடைபெறுகிற உரையாடல் வாயிலாகப் பெண்களின் அடிமை வாழ்க்கையைத் தெளிவாக அம்பை வெளிப்படுத்தியிருக்கிறார்.

**''உனக்கு மறைக்க ஒன்றுமே இல்லையா? உன்னையும் என்னை மாதிரி அடக்கி அடக்கித்தான் - தலைப்பு ஏன் இப்படி தொங்கறது? இடுப்பில் செருகு. வாசல் பக்கம் என்ன பண்றே? வாயை மூடு.கொரல் வெளில வரக்கூடாது. படிப்பு கிடக்கட்டும் இந்தக் காயை நறுக்கித்தா. அப்புறம் தயிர் கடையலாம்- வளர்த்திருப்பார்கள். எந் பலத்துடன் இப்படி வெள்ளையாய்ப் பேசுகிறாய்? சிரிக்கிறாய்?**

இதிலிருந்து பெண்கள் என்றால் வெளிப்படையாகப் பேச முடியாது, அடங்கித்தான் இருக்க வேண்டும், வாசலில் நிற்க கூட உரிமையில்லை, சத்தமாகப் பேசக்கூடாது, படித்ததுப் போதும் என்று சிறுவயதிலேயே படிப்பினை நிறுத்திவிட்டுச் சமையல் வேலைச் செய்ய சொல்வார்கள் என்று அவளுடைய வளர்ப்பு முறையைப் பற்றி திருமணமானப் பெண், ஆய்வாளரிடம் பகிர்ந்துக் கொள்கிறாள். மேலும் ஆய்வாளர் பெண்மணி வெளிப்படையாக சிரித்துப் பேசுவதற்குப் பின்னால் ஏதோ பெரியப் பலம் இருப்பதுபோல் அவள் உணர்கிறாள். ஒரு மனிதனுடைய அடிப்படை செயல்களைக் கூடப் பெண்ணாகப் பிறந்துவிட்டால்

அவளால் செய்ய இயலாது என்ற சூழ்நிலையை அம்பைக் காட்டுகிறார்.

திருமணமானப் பெண் தன் கணவருக்குத் தோசைப் பரிமாறும் ஒரு சாதாரண நிகழ்ச்சிக்குப் பின்னால் தன்னுடைய உருக்கமான கருத்தை அம்பை நகைச்சுவையாகப் பதிவுச் செய்திருப்பார். ''**தோசை வெச்சிட்டு வாரேன் அவுகளுக்கு. சாப்பிடச் சாப்பிட வெக்கணும். இல்லாட்டா மூக்கு மேல கோவம் புசுக்குன்னு. ஒரு அறைவெச்சார்னா... சிரித்தால்**''

அவன் ஆணாகப் பிறந்துவிட்ட ஒரே காரணத்தால் தன்னுடைய முழு அதிகாரத்தைப் பெண் மீது செலுத்தி அவளுக்குகே தெரியாமல் அடிமையாக வைத்திருக்கும் சூழல்தான் எண்பது காலகட்டங்களில் மிகவும் இயல்பாக நிகழ்ந்திருக்கிறது.

மற்றொரு கதையான 'வீட்டின் மூலையில் ஒரு சமையலறை' யிலும் அம்பை அடிமைத்தனமான வாழ்க்கையை வெளிக்காட்டியிருப்பார்.இக்கதையில் இருக்கும் பெண்கள் எப்போதுமே ஆண்களுக்குச் சமைத்துப் போடுவதைத் தங்களின் முழுநேர வேலையாக வைத்து வாழ்ந்து வந்துள்ளனர். வீட்டில் நடக்கும் சூழ்நிலைகளைப் பார்த்து வளர்ந்து சிறுகுழந்தைகளின் மனதிலும் பாலினச் சமத்துவமின்மை ஆழமாகப் பதிந்துள்ளது. இதற்கு உதாரணமாக இருகுழந்தைகளுக்கு இடையில் நடக்கும் உரையாடலின் வழி அம்பை வெளிப்படுத்தி இருக்கிறார்.

**''ராஜூ, நீ என்ன செய்வாய் பெரியவன் ஆனதும்?''**<br>
**''பைலட். ஸ்ய்ங்கென்று.''**<br>
**''நீ, ப்ரியா?''**<br>
**''நானு... நானு.... நானு.... வந்து... தப்பாத்தி தெய்வேன்எங்க வீட்டுலே.''**

பெண்ணடிமைக்கு இச்சமுதாயமும் முக்கியப் பங்கு வகிக்கிறது.இக்கதையில் ஜீஜியின் திருமணத்தின் போது 'பிதாயி'ன் என்ற சடங்கில் அவருடைய தாயார் தன் காதில் கூறிய அறிவுரையிலிருந்து தெரிகிறது. ஒரு பெண்ணுக்கு அழகும், சமையலும் தான் பெரிய பலம் என இச்சமூகம் தவறாகக் கற்பித்த நம்பிக்கையைத் தலைமுறை தலைமுறையாகக் கடந்து வருகிற செய்தியை அம்பை அழகாகப் பதிவு செய்திருக்கிறார்.

**''சமையலறையை ஆக்ரமித்துக்கொள். அலங்காரம் செய்து கொள்ள மறக்காதே.... இரண்டும்தான் உன் பலம். அதிலிருந்துதான் அதிகாரம்....''**

பெண்களுக்கான மாற்றத்தைப் பெண்களிடமிருந்தே தொடங்க வேண்டும் என்று நினைத்த அம்பை கதையில் வரும் மீனாட்சி என்ற கதைமாந்தரின் வழி வெளிக்கொண்டு வந்துள்ளார். சமையலறை மட்டுமே பெண்களின் ராஜ்ஜியம் என நினைத்து வாழ்ந்து வந்த ஜீஜியிடம் பெண்களுக்கான இடம் இதுவல்ல, அவர்கள் சாதிக்க உலகில் பலகாரியங்கள் இருக்கிறது என்று தன் உரையாடல் வழி மீனாட்சி ஜீஜிக்கு உணர்த்துகிறாள்.

**''ஒருவேளை நீங்கள் அந்த ஆப்பிள் விழுவதைப் பார்த்திருக்கலாம்; தண்ணீர் கெட்டிலின் மூக்கு நுனி ஆவியைப் பார்த்திருக்கலாம்; புதுக் கண்டங்களைக் கண்டுபிடித்திருக்கலாம். கைலாய பர்வதத்தில் அமர்ந்து காவியம் எழுதியிருக்கலாம். குகைகளுக்கு ஓவியம் தீட்டியிருக்கலாம். பறந்திருக்கலாம். போர்கள், சிறை, தூக்குமரங்கள், ரஸாயன யுத்தங்கள் இல்லாத உலகம் உண்டாக்கியிருக்கலாம்.''**

சமையலறையே தன் அதிகாரமாக கருதும் பெண்களின் அறியாமையை அம்பைபடம் பிடித்துக் காட்டியுள்ளார். மேலும் பெண்கள் அடிமைப்படுத்தப்பட்டு இருந்த நிலையையும், சமையலறையையே உலகமாகக் கருதியதால் சாதிக்க முடியாமல் போய்விட்ட நிலையையும் சுட்டிக்காட்டி அதிலிருந்து வெளிவந்தால் ஆண்களுக்கு நிகராக பெண்களாலும் சாதிக்க முடியும் என்ற எழுச்சியை அம்பை ஏற்படுத்தியுள்ளார்.

## மதிப்புரை

பெண்ணடிமை,பெண்ணுரிமை எனப் பேசிக்கொண்டே இருந்தால் மட்டும் நிலைமை மாறிவிடாது. அதற்கான முயற்சிகள் எடுத்தாக வேண்டும் எனச் சீறியப் படைப்பாளிகளுள் ஒருவர் அம்பை ஆவார். அவருடைய எழுத்தினால் மாற்றத்தை ஏற்படுத்த முயன்றார். பெண்கள் தங்களுக்கு அறியாமலே சமையலறையில் சிறைப்பட்டு இருப்பதை அறிந்த அம்பைத் தன் கதையின் வழிச் சமூதாயத்தில் தீர்வுக் காண விரும்பி எழுதிய சிறுகதைத் தான் ‘வெளிப்பாடு’, ‘வீட்டின் மூலையில் ஒரு சமையலறை’ ஆகும். வெளிப்பாடுக் கதையில் பெண்களின் சமையலறையோடு ஒட்டிய அவர்களின் ஆசைகளையும், வீட்டின் மூலையில் ஒரு சமையலறைக் கதையில் சமையலறை வாழ்வோடு பெண்களின் அறியாமை உணர்வினையும் அதிலிருந்து விடுபட வேண்டும் என்பதை அம்பை இவ்விரு கதைகளின் வழி விளக்கியுள்ளார்.

# அகநானூற்றில் மகளிர் தொழில்கள்

**ஷைனி. ப**
முனைவர் பட்ட ஆய்வாளர்,
முஸ்லிம் கலைக் கல்லூரி, திருவிதாங்கோடு.

## முன்னுரை

அடிப்படைத் தேவைகளில் தன்னிறைவு பெற்ற ஒரு சமூகம், அந்நிறைவுகளை ஆதாரமாகக் கொண்டு சமூக மேம்பாடு, பொருளாதார முன்னேற்றம் போன்ற பல வழிகளிலும் தம்மை நிலைப்படுத்திக் கொள்ளும். சமூக மேம்பாடு, பொருளாதார முன்னேற்றம் என்பவை தொழிற்துறை வளர்ச்சியை மையமாகக் கொண்டவை.

வினையே ஆடவர்க்கு உயிரென வினை மேற்கொள்ளல் ஆடவர்களின் கடமையாக கூறப்பட்டாலும், சங்ககால மகளிரும் தாம் வாழ்ந்த நில இயல்புக்கேற்ப பல தொழில்களைச் செய்துள்ளனர் என்பதைச் சங்க இலக்கியங்கள் தெளிவாகக் காட்டுகின்றன. இவர்கள் தங்களது குடும்பத்திற்கும், வாழ்க்கைக்கும் வேண்டிய பொருளீட்டுவதில் ஆர்வமும், முயற்சியும், உழைப்பும், பொறுப்புணர்வும் உடையவர்களாக வாழ்ந்தனர். பழந்தமிழ் மகளிர் மேற்கொண்ட வினைகளையும், அவற்றின் திறன்களையும் பயன்களையும் அகநானூறு வழி ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## உணவு உற்பத்தி

வேளாண்மை என்பது முதன்மையான தொழில்களில் ஒன்றாகும். இத்தொழிலின் உற்பத்திப் பொருள் உணவாகும். அடிப்படைத் தேவைகளுள் முதன்மையான இவ்வுணவு மேலாண்மையில், பழந்தமிழ் மகளிர் ஆண்களுக்கு நிகராக பங்கு கொண்டனர். அவர்களின் ஈடுபாட்டை,

“**அரிந்துகால் குவித்த செந்நெல் வினைஞர்**” *(அகம்.116)*

என்னும் வரி வெளிப்படுத்துகின்றது. மகளிர் கதிர் அறுத்து அவற்றைக் கட்டுகளாகக் கட்டி வைப்பதில் ஆடவர்க்கு உதவியாக இருந்தனர் என்பதை இதன் மூலம் அறியலாம்.

**தினைப்புனம்காத்தல்**

குறிஞ்சி நிலத்தின் முக்கிய விளைபொருள் தினையாகும். விளைச்சலின் முழு பயனையும் அடைய வேண்டுமெனில் பயிர்களைப் பறவைகள், விலங்குகளிடமிருந்து பாதுகாத்து நன்கு பராமரிக்க வேண்டும். இத்தகைய பயிர் பாதுகாப்புத் தொழிலை குறிஞ்சி நில மகளிர் அதிகமாக மேற்கொண்டனர். தினைப்புனத்தில் உள்ள வளைந்த கதிர்களை அழகு மிகுந்த கழுத்து சிவந்த கிளிகள் கொத்தித் தின்னும் என்பதை,

**''பைந்தாட் செந்தினைக் கொடுங்குரல் வியன்புனம்**
**செந்தார்க்கிள்ளை''** (அகம்.242)

என்னும் அடிகள் வழி அறியலாம். தினைகளைத் தின்ன வரும் அக்கிளிகளைப் பெண்கள் விரட்டியடித்து தினைப்புனத்தைக் காத்தனர். மேலும் ,

**"புணர்குறி செய்த புலர்குரல் ஏனல்**
**கிளிகடிபாலும்ஒழிந்தனள்"** (அகம்.118)

என்னும் அடிகளில் தலைவி தினைப்புனத்துக்கு வந்து கிளியோட்டும் பாடலை இனி பாடமாட்டாள் என்று தோழி கூறுகிறாள். காரணம் தினை அறுவடை செய்யப்பட்டது. இதன் மூலம் தினைகளைக் காக்க பெண்கள் காவலுக்கு வந்த செய்தியை அறிந்து கொள்ளலாம்.

பொன் போல் பூத்த வேங்கை மாலையை அணிந்த தோழியரோடு, குரமகளாகிய தலைவி நடந்து சென்று நெருப்புப் பந்தத்தை சுழற்றியும், தட்டையைத் தட்டியும், அசோக இலைகளாலாகிய அழகிய தழை ஆடையை உடுத்தியும் தினைப் பயிரைக் காத்தாள். இதனை,

**" மலர்ந்த வேங்கை மலிதொடர் அடைச்சி,**
**பொலிந்த ஆயமொடு காண்தக இயலி,**
**தழலை வாங்கியும் தட்டை ஓப்பியும்,**
**அழல்ஏர் செயலை அம்தழை அசைஇயும்,**
**குறமகள்காக்கும்ஏனல்"** (அகம்.188)

என்னும் அடிகள் வழி அறியலாம். நற்றிணையிலும் தலைவி தினைப்புனத்தை காத்து நின்ற செய்தி,

**"கானக் குறவர் மடமகள்**
**ஏனல்காவல்ஆயினள் எனவே"** (நற்.102)

என்னும் அடிகள் மூலம் புலப்படுகிறது. இங்கு ஏனல் என்பது தினையை குறிக்கும்.

குறிஞ்சி நில மகளிரைத் தினைப்புனத்தைக் காவல் காப்பதற்கு அவர்களது பெற்றோரே அனுப்பி வைத்தனர். மலைக்குகையின் மேல் இருக்கின்ற பரணில் அமர்ந்து அவர்கள் கிளிகளை ஓட்டிய செய்தி,

**"களிறு அணைந்து எய்தாக் கல்முகை இதணத்து,**
**சிறுதினைப் படுகிளி எம்மொடுஓப்பி,**
**மல்லல் அறைய மலர்சுனைக் குவளை "** *(அகம். 308)*

*என்று குறிக்கப்படுகிறது. மேலும்,*

**"ஆமைஅறுத்து இயற்றிய வெவ்வாய்த் தட்டையின்,**
**நறுவிரை ஆரம் .....................................**
**உளைக்குரல் சிறுதினை கவர்தலின், கிளைஅமல்**
**பெருவரை அடுக்கத்துக்குக் குரீஇ ஓப்பி"** *(அகம்.388)*

*என்பதில், உயரமான பரணமைத்து செயல்பட்டதன் மூலம் அங்கு விலங்குகளின் செயல்பாடு இருந்ததையும், அவற்றுக்கு அஞ்சாமல் பழந்தமிழ் பெண்கள் காவல் காத்ததையும் அறிய முடிகிறது.*

**உணவுப் பரவலாக்கம்**

*பண்டைக் காலத்தில் வாணிகம் பெரும்பாலும் பண்டமாற்று முறையிலேயே நடைபெற்றது. உணவுப் பொருட்களும் இவ்வகைப் பண்டமாற்று முறையிலேயே பரவலாகப்பட்டன. திணைசார் உணவுப் பொருட்கள் பண்டமாற்றில் சிறப்பிடம் பெற்றன. இவ்வகை உணவுப் பரவலாக்கத்தில் பழந்தமிழ் மகளிர் பங்களிப்பு குறிப்பிடத்தக்கதாக இருந்தது.*

**மீன்பிடித்தலும் விற்றலும்**

*கடலும் கடல் சார்ந்த நிலமும் நெய்தல் எனப்பட்டது. நெய்தல் நில மக்கள் கடலில் கப்பல்களைச் செலுத்தி மீன்களைப் பிடித்து தொழில் செய்தனர். இவர்கள் 'பரதவர்' என அழைக்கப்பட்டனர். பரதவர் பிடித்து வந்த மீன்களைப் பரதகுலப் பெண்கள் ஊருக்குள் எடுத்துச் சென்று விற்றனர்.*

**"திமிலோன் தந்த கடுங்கண் வயமீன்,**
**தழைஅணி அல்குல் செல்வத் தங்கையர்**
**விழவுஅயர் மறுகின் விலைஎனப் பகரும்"** *(அகம்.320)*

*இப்பாடலில் தங்களது தமையன்மார் படகில் பிடித்து வந்த மீன்களைப் பரதகுலப் பெண்கள் ஊருக்குள் எடுத்துச் சென்று விற்பனை செய்து அதற்கு ஈடாகத் தமக்குத் தேவையான பிற பொருட்களைப் பெற்று வந்ததை அறியலாம்.*

*காவிரி ஆற்றிலிருந்து வாளை மீன்களைப் பரதவர் பிடித்து வர அவர்களது தங்கையர் அம்மீன்களைக் கூடையிலிட்டு விற்று, அவற்றுக்கு விலையாகப் பழைய நெல்லை வாங்காமல், கழங்கு போன்ற பெரிய முத்துக்களையும், அணிகலன்களையும் வாங்கினர். இதனை நக்கீரர்,*

**"மால்இருள் நெடுநாள் போகி, தன் ஐயர்**
**காலைத் தந்த கணைக்கோட்டு வாளைக்கு,**
**..................................................................**

**பழஞ்செந் நெல்லின் முகுவை கொள்ளான்,**

**கழங்குஉறழ்முத்தமொடுநன்கலம் பெறூஉம்"** *(அகம்.126)*

*என்று கூறுகிறார். மேலும் பரத இனப் பெண்கள் மீன்பிடித் தொழிலைச் செய்தனர் என்பதை,*

**"நாண்கொள்நுண்கோலின் மீன்கொள் பாண்மகள்**

**தான்புனல் அடைகரைப் படுத்த வராஅல்"** *(அகம்.216)*

*என்கிறது அகநானூறு. பரதப் பெண்கள் தூண்டிலில் வரால் மீனைப் பிடித்தனர் என்பதை இதன் மூலம் அறிய முடிகிறது. பரத இன ஆண்கள் பிடித்து வந்த மீன்களை வணிகப்படுத்தியதோடு பழங்காலப் பெண்கள் மீன்பிடித் தொழிலிலும் சிறந்து விளங்கினர் என்பதை இவற்றின் மூலம் அறியலாம்.*

**மீன் உணக்கல்**

*பரதவர் பிடித்து வந்த மீன்களில் விற்றது போக எஞ்சியவற்றையும், விற்பனைக்குரிய காலம் கடந்து பிடித்து வந்த மீன்களையும் பரதவ மகளிர் உப்பிட்டு உலர வைத்து உணங்கல் மீன் தயாரித்தனர். பழந்தமிழ் மகளிர் வருவாயைப் பெருக்கிய தொழில்களுள் இதுவும் ஒன்றாகும். கடற்கரை மணலில் மீன்கள் உலர்த்தப்பட்ட செய்தியை,*

**" நாள்வலை முகந்த கோள்வல் பரதவர்**

**ணங்குமணல் ஆங்கண் உணங்க"** *(அகம்.300)*

*என்று அகநானூறு சுட்டுகிறது. இதே செய்தி,*

**"பெருங்கடற் பரதவர் கோள்மீன் உணங்கலின்**

**இருங்கழிக் கொண்ட இறவின் வாடலோடு"** *(குறுந்.320)*

*என்று குறுந்தொகையிலும் கூறப்பட்டுள்ளது.*

*பரதவ மகளிர் நிணம் மிகுந்த பெரிய மீன்களைத் துண்டுகளாகத் துணித்து உப்பிட்டு உலர்த்தனர். மேலும் பெரிய கழியிலிருந்து பிடித்து வந்த இறால் மீன்களையும், வெண்மணல் பரப்பில் பரப்பி, வெயிலில் உலர்த்தி பறவைகள் கவராமல் அவற்றுக்குக் காவல் காத்து அவற்றைச் சேமித்து வைத்து விற்பனை செய்தனர். இதனை,*

**"உரவுக்கடல் உழந்த பெருவலைப் பரதவர்**

**மிகுமீன் உணக்கிய புதுமணல் ஆங்கண் "** *(நற்.63)*

*என்னும் நற்றிணை அடிகள் வழி அறியலாம். பரதவர் மிகுதியாகப் பெற்ற மீன்களைப் பரதவப் பெண்கள் புதிய மணல் பரப்பில் காய வைத்தனர் என்பதை இவ்வடிகளின் மூலம் அறிய முடிகிறது.*

*பரதவ ஆண்கள் பிடித்து வந்த மீன்களை வணிகப்படுத்தியதோடு, பழங்காலப் பெண்கள் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டதையும், உணங்கல் மீன் தயாரித்து வருவாயைப் பெருக்கியத் தொழில்நுட்பத்தையும் அகநானூறு எடுத்துக்காட்டுகின்றது.*

## உப்பு விற்றல்

நெய்தல் நில மகளிர் உப்பு வணிகத்தில் ஈடுபட்டனர். உமணர் எனப்படும் உப்பு வணிகர் உவர் நிலத்தில் விளைத்த உப்பை, குடும்பத்துடன் வண்டிகளில் ஏற்றிச் சென்று மற்ற இடங்களில் விற்பனை செய்தனர். உப்பு வண்டிகளை உமணப் பெண்கள் ஓட்டிச் சென்றனர். ஊருக்குள் சென்று உப்பை விலை கூவி விற்று, அதற்கு ஈடாக பிற பொருட்களை வாங்கி வந்த செய்தியை,

**"நெல்லும் உப்பும் நேரே, ஊரீர்,**
**கொள்ளீரோ'எனச்சேரி தொறும்நுவலும் "** *(அகம்.390)*

நெல்லும், உப்பும் ஒப்பு விலையாகும், வாங்கிக் கொள்வீராக என்று தலைவி சேரிதோறும் சென்று உப்பு விற்றதாக அம்மூவனார் கூறுகிறார். இதே செய்தியை,

**"வெள்ளை உப்பின் கொள்ளை சாற்றி,**
**நெல்லொடு வந்த வல்வாய் பஃறி"** *(பட்.29,30)*

என்று பட்டினப்பாலை கூறுகிறது. உமணர்களின் அன்பு மகளிர் சேரியில் வளையோசை கலகலவென்று ஒலிக்க, கைவீசி நடந்து உப்பு விற்ற செய்தியை,

**"கதழ்கோல் உமணர் காதல் மடமகள்**
**சில்கோல் எல்வளை தெளிர்ப்ப வீசி,**
**நெல்லின்நேரே வெண்கல் உப்பு'எனச்**
**சேரி விலைமாறு கூறலின்"** *(அகம்.140)*

என்கிறது அகநானூறு. பழந்தமிழ் மகளிர் நடைபயணமாகவும், வண்டிகளில் சென்றும், தலையில் சுமந்து சென்றும் உப்பு வணிகம் செய்து தமது குடும்பத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் திறனுடையவர்களாகவும், பெரும் பொருளீட்டும் இயல்பினராகவும் இருந்தனர் என்பது இதன்வழித் தெளிவாகிறது.

## உடை உற்பத்தியில் மகளிர்

பழந்தமிழ் மகளிர் தங்களது குடும்பத்திற்குத் தேவையான பொருளீட்ட நெசவுத் தொழிலை மேற்கொண்டனர். இத்தொழிலில் ஈடுபட்ட மகளிர் 'பருத்திப் பெண்டிர்' என அழைக்கப்பட்டனர். பருத்திச் செடியின் இளங்காய்களை ஆண் பறவைகள் தம் பேடைகளுடன் உண்ணும். அப்போது பஞ்சு சூழ்ந்த கொட்டைப் பிளக்கும். ஏழை மகளிர் அடுத்த வேளை உணவுக்காக அவற்றைச் சேர்த்து வைப்பர். இதனை,

**"தாழிமுதல் கலித்த கோழிலைப் பருத்திப்**
**பொதிவயிற்று இளங்காய் பேடை ஊட்டி,**
**போகில் பிளந்திட்ட பொங்கல் வெண்காழ்**
**நல்கூர் பெண்டிர் அல்கல் கூட்டும்"** *(அகம்.129)*

என்னும் அடிகள் உணர்த்துகின்றன. அதேபோல் பழந்தமிழ் மகளிர் பருத்தியை எடுத்து வந்து, அதிலிருக்கும் தூசு, கிளை, செற்றை ஆகியவற்றை நீக்கும் பணியில் இரவில் விளக்கொளி வைத்து ஈடுபட்டிருந்த செய்தியை,

**"சிறையும் செற்றையும் புடைபுநர் எழுந்த**
**பருத்திப் பெண்டின் சிறுதீ விளக்கத்து"** *(புறம்.326)*

*என்னும் பாடலடிகள் காட்டுகின்றன. இதன் மூலம் பழந்தமிழ் மகளிர் உடை உற்பத்தியில் ஈடுபட்டு, பொருளாதாரத்தை ஈட்டினர் என்பதை அறியலாம்.*

## உடை பராமரிப்புத் தொழில்

*உடைகளைப் பராமரிக்கும் தொழிலைப் பண்டைத் தமிழ் மகளிர் அறிந்திருந்தனர். அதனால் ஆடை வெளுக்கும் தொழிலை அவர்கள் ஈடுபாட்டுடன் செய்தனர். இவர்கள் 'காழிகர்' என அழைக்கப்பட்டனர். புலையர் இனப் பெண்கள் சலவை செய்பவராகவே அதிகம் காணப்பட்டனர். இவர்கள் துணிகளை உவர் மண்ணைப் பயன்படுத்தி வெளுத்தனர். இப்பெண்கள் 'புலத்தியர்' என அழைக்கப்பட்டனர். இதனை ,*

**"........................................காழியர்**
**கவ்வைப் பரப்பின் வெவ் உவர்ப்பு"** *(அகம்.89)*

*எனும் அடி உணர்த்துகின்றது. இதே செய்தியை,*

**"களர்ப்படு கூவல் தோண்டி, நாளும்,**
**புலைத்தி கழீஇய தூவெள் அறுவை"** *(புறம்.311)*

*என்னும் புறப்பாடலும் உணர்த்துகிறது. புலையர் இனப் பெண்கள் துணிகளை அடித்துத் துவைக்கும் போது ஏற்படும் ஒலி அதிர்வுகள் அழுக்கை துணியிலிருந்து பிரிக்கிறது என்ற அறிவியல் உண்மையை அறிந்திருந்ததால் அவர்கள் துவைப்பதை ஒலிப்பது என்று கூறினர்.*

**"பசைகொல் மெல்விரல், பெருந்தோள், புலைத்தி"** *(அகம்.34)*

*என்று அகநானூறு இதனைக் கூறுகிறது.*

**"ஆடைகொண்டு, ஒலிக்கும்நின்புலைத்திகாட்டுஎன்றாளே"** *(கலி.72)*

*என்று கலித்தொகையும் இதே கருத்தைக் கூறுகிறது. உடைகளை வெளுத்ததோடு, அவற்றிற்கு கஞ்சி தோய்த்து மெருகூட்டுதலையும் சங்க மகளிர் செய்தனர். இச்செய்தியை,*

**"பசைகொல் மெல்விரல், பெருந்தோள், புலைத்தி**
**துறைவிட் டன்ன தூமயிர் எகினம்"** *(அகம்.34)*

*என்னும் அடிகள் வழி அறியலாம்.*

*ஆடைகளின் கரைகளில் படிந்த அழுக்கினை தனது கூரிய நகத்துடன், கஞ்சிப்பசை சேர்ந்த விரலால் வண்ணாத்தி பிசைந்து கஞ்சி ஊற்றிய அழகிய ஆடைகள் ஒளி வீசும். குளிர்ந்த குளத்தில் முறுக்கிய பருத்தி ஆடைகளைப் போட்டு கொன்றை மலர் போல் வெண்ணிறமாக இவர்கள் மாற்றினர்.*

**"அவ்வரி கொன்றை கறைசேர் வள்உகிர்ப்**
**பசைவிரல் புலைத்தி நெடிதுபிசைந்து ஊட்டிய**
**பூந்துகில் இமைக்கும்"** *(அகம்.387)*

*புலத்தியர் துணி வெளுக்கின்ற இடம் 'துறை' என அழைக்கப்பட்டது. இதனை,*

**"........................ துறைச் செல்லாள், ஊரவர்**
**ஆடைகொண்டு, ஒலிக்கும்நின் புலைத்தி"** *(கலி.72)*

*என்பதிலிருந்து அறியலாம்.*

## கள் உற்பத்தியும் வணிகமும்

கள்ளானது அரித்து எடுக்கப்படுவதால் 'அரியல்' எனப்பட்டது. இக்கள்ளினைக் காய்ச்சி விற்கும் பெண்கள் 'அரியல் பெண்டிர்' என அழைக்கப்பட்டனர். வணிகத்திற்காக கள் காய்ச்சிய பழந்தமிழ் மகளிரை 'கள்ளடு மகளிர்' என்றனர். இதனை,

**"கள்அடு மகளிர் வள்ளம் நுடக்கிய**
**வார்ந்துஉகுசில்நீர்"** (பெ.பா.339,340)

என்னும் பெரும்பாணாற்றுப்படை நூலிலிருந்து அறியலாம்.

கள் விற்கும் மகளிர் கள் பானையை இடுப்பில் சுமந்து வர, போருக்குச் செல்லும் வீரர் கள்பானையின் விரிந்த வாயில் குவிந்த முனைவழி, சொரையும் கள்ளைக் குடித்துச் செல்வர்.

**"அரியல் பெண்டிர் அலகில் கொண்ட**
**பகுவாய் பாளைக் குவிமுனை சுரந்த**
**அரிநிறக் கலுழு ஆரமாந்திச்**
**செருவேட்டு,சிலைக்கும்செங்கண் ஆடவர்"** (அகம்.157)

என்னும் அகநானூற்றுப் பாடல் இதனை விளக்குகிறது. இவற்றின் மூலம் பழந்தமிழ் மகளிருள் ஒருசாரார் கள் உற்பத்தியிலும், வணிகத்திலும் ஈடுபட்டிருந்ததை அறியலாம். கடினமான தொழிலையும் சங்க மகளிர் செய்தனர் என்பது இதன் மூலம் புலனாகிறது.

## விறலியர்

சங்கச் சமூகத்தில் தான் கற்ற கல்வியை தொழிலாகக் கொண்டு வாழ்ந்த கலைஞர்கள் இருந்தனர். அவர்களில் குறிப்பிடத்தக்கவர், நடனமாடும் விறலியர். தம் உள்ளக் குறிப்பு புறத்தில் வெளிப்படும்படி விறல்பட நடித்ததால் இவர்கள் 'விறலியர்' எனப் பெயர் பெற்றனர். இவர்களுள் பெரும்பாலானோர் ஒன்பான் சுவைகளும் வெளிப்படும்படி நடிக்கும் திறனுடையவர்களாக இருந்தனர். மயில்களின் நடனம் அவைக்களத்தில் ஆடும் மகளிரின் நடனம் போன்றிருந்தது .

**"கழைவளர் அடுக்கத்து, இயலிஆ டும்மயில்**
**நனைவுப்புகு விறலியின் தோன்றும் நாடன்"** (அகம்.82)

என்னும் அடிகள் வழி கபிலர் இதனை வெளிப்படுத்துகிறார். விழாவெடுக்கும் பழைய ஊரில் விறலியர் நடனமாடும் போது முழவு கொட்டுபவன் அவளுக்குப் பின்புறம் நிற்பான். இதனை,

**"ஆடுமயில் முன்னது ஆக,கோடியர்**
**விழவுகொள் மூதூர் விறலி பின்றை**
**முழவன்போல"** (அகம்.352)

என்னும் அடிகள் வழி அறியலாம். ஆடற்கலையில் வல்லவரான விறலியர் தாம் கற்ற கலையால் கலையில் வல்லவர்களாகவும், அதைக்கொண்டு பொருளீட்டும் திறன் உடையவர்களாகவும் இருந்ததை இதன் மூலம் அறியலாம்.

## பிற சிறுதொழில் முனைவோர்

உணவு உற்பத்தி, வணிகம் போன்ற பெருந்தொழில்களில் ஈடுபட்டதோடு பழந்தமிழ் மகளிர் கோழி வளர்ப்பு, பூ விற்றல், பண்ணியம் (பலகாரம்) விற்றல் போன்ற சிறு தொழில்களும் ஈடுபட்டனர். வேளாண்மை அல்லது விவசாயம் என்பது உணவுக்காகவும், ஏனைய பயன்பாடுகளுக்காகவும் சில வகைப் பயிர்களை உற்பத்தி செய்வதையும், கால்நடை வளர்ப்பையும் குறிக்கும். பழந்தமிழ் மகளிர் மனைகளில் கோழி முதலிய பறவைகளை வளர்த்து அவற்றின் மூலம் பொருளீட்டி வாழ்ந்தனர். பழந்தமிழ் முதுபெண்டிரும் தங்களால் இயன்ற சிறுவணிகத்தில் தங்களை ஈடுபடுத்தி, வாழ்வை மேம்படுத்திக் கொண்டனர்.

## முடிவுரை

பழந்தமிழ் மகளிர் பெருந்தொழில் முனைவராக உணவு உற்பத்தி, தினைப்புனம் காத்தல், உணவுப் பரவலாக்கம், மீன் பிடித்தல், விற்றல், உப்பு விற்றல், உடை உற்பத்தி, பராமரிப்பு, கள் உற்பத்தி, வணிகம் முதலிய தொழில்களைச் செய்துள்ளனர். மேலும், பல சிறு தொழில்களிலும் ஈடுபட்டனர். பழந்தமிழ் மகளிர் தொழில் முனைவோராகத் தங்கள் குடும்பத் தேவைகளை நிறைவு செய்து சுற்றத்தையும் காத்து, சமூகப் பொருளாதாரத்தையும் காப்பதற்கு பங்காற்றினர். இச்செய்திகள் மூலம் சங்ககால மகளிர் ஆடவர்க்கு இணையாக பொருளீட்டியமை அகநானூறு வழித் தெளிவாகிறது.

# புறநானூற்றில் பெண்களின் வீரம்

முனைவர் பா.அனுராதா
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
பான் செக்கர்ஸ் மகளிர் கல்லூரி

## சங்க இலக்கியங்களில் பெண்ணியம்

சங்க கால மகளிர் வீரமுடைய பெண்மணிகளாகவே இலக்கியங்களில் காணப்படுகிறாள். பகல்குறி, இரவுக்குறி, தலைவனைச் சந்தித்தல், புனைக்காத்தல் எனத் தனது எல்லைகளை மீறாதவளாக இருந்தாலும், புலியை புறமுதுகிட்டு ஓடச் செய்பவளாகவும் விளங்கினர் சங்க காலத்தில் பெண்பாற் புலவர்கள் பலர் பாடினும், பெண் வீரமுடையவளாகவும் பல இடத்தில் காணப்படுகின்றாள்.

## புறநானூற்றில் பெண்ணியம்

சங்க கால புறத்துறை வாழ்வியல் நிலைகளைப் புறநானூறும் பதிற்றுப்பத்தும் உரைக்கின்றன. வுரலாற்று நிகழ்ச்சிகள் நேர் வரிசையாக கூறப்பெறவில்லை என்றாலும் அப்பாடல்கள் அக்கால மக்களின் பழக்க வழக்கங்கள், தொழில்முறைகள், பண்பாட்டுக் கூறுகள், கல்வி முதலியனவற்றை விளக்குகின்றன. இதில் பெரும்பான்மையான பாடல்கள் பல மன்னர்களையும் குறுநிலமன்னர்களையும் அவர்களின் வீரம், கொடை போன்றவற்றை விரிவாகப் பேசுகின்றன. சில பாடல்கள் அகத்திணை சார்ந்த தன்மையைக் காட்டினாலும் மன்னனின் பெயர் வெளிப்படையாகக் கூறப் பெற்றதால் அப்பாடல்கள் புறப்பொருளைச் சார்ந்து அமைக்கப் பெற்றுள்ளன.

சங்க காலத்துப் பாடல்களைப் பாடிய பெண்களாக அவ்வையார்,மாறோக்கத்து நப்பசலையார், மாறிப்பித்தியார், ஒக்கூர் மாசாத்தியார், காவற்பெண்டு, குறமகள் இளவெயினி, தாயங்கண்ணியார், பாரிமகளிர் பூங்கண் உத்தியார், பெருங்கோப்பெண்டு, அள்ளூர் நன்முல்லையார், காக்கை பாடினியார், நச்செள்ளையார், முடத்தாமக் கண்ணியார்,

பொன்முடியார், போன்ற பெண்பாற் புலவர்களைப் பார்க்கலாம். இவர்கள் மன்னனைப் புகழ்ந்து பாடுவது மட்டுமல்லாமல், அவனோடு நெருங்கிய நட்பு கொண்டிருந்தமையையும் காணலாம்.

## புறநானூற்றில் பெண்களின் வீரம்

பண்டைய காலத்தில் ஆண்கள் புற வேலைகளையும், பெண்கள் குடும்ப வேலைகளையும் கவனத்து வந்தனர். ஆண்களின் புறவேலைகள் என்பவை, போர் செய்வது, தலைமைத்துவத்தை மேலோங்கச் செய்வது, பொருள் தேடச் செல்வது, போன்றவையாகும். ஆண்மகனின் கடமை போர் செய்து ஈகையும், கொடையும் கொடுத்துப் புகழைப் பெருக்கிக் கொள்வதாகும். தம்மைப் போன்ற இன்னொரு வீரனிடம் வெற்றி பெற்று அவனுடைய எல்லையைத் தனதாக்குதல், அல்லது போர் கொண்டு வரும் படைகளை எதிர்த்து வெற்றி கொள்வது, அதனால் ஏற்படும் விழுப்புண் இவையே வீரனின் சிறப்பாகக் கருதபட்டன. வீரமரணம் என்பது அவ்வீரனின் எதிர்நோக்கும் இலட்சியக் கனவாகும். இலட்சியக் கனவோடு வெற்றி வாகை சூடிவரும் ஆணின் செயல்பாட்டின பின்புறமாகப் பெண்ணின் பங்கும் குறிப்பிடும் படியாக அமைந்துள்ளது. ஆணின் போர் வெறிக்கும், வெற்றிக்கும் புகழ் கொடுக்கும் புலவர்களின் நாவன்மை ஒருபுறமிருக்க, மறுபுறம் வீட்டின் உள்ளே அடைபட்டுக்கிடக்கும் பெண்ணின் ஊக்குவிப்பும் காரணம் ஆகும்.

சங்க சமூகத்தில் போர் மறப்பண்பு ஆண்களிடையே வயது வேறுபாடின்றி, எல்லாப்பருவத்தினருக்கும் பொதுவாக இருந்துள்ளது. அம்மறப்பண்பைச் சங்ககால மறக்குலப் பெண்கள் தங்கள் குழந்தைகளிடத்து இளமை முதலே ஊக்குவித்து வளர்ந்து வந்துள்ளனர். அதற்கு அப்பெண்களிடம் இயல்பாக அமைந்திருந்த வீரப்பண்பும் ஒரு காரணமாகும்.

தம்முடைய கணவன் போருக்குச் செல்வானானால் விழுப்புண்ணுடன் வீடு திரும்ப வேண்டும் என்று நினைக்கும் வீரப்பெண்கள், காஞ்சிப் பண்ணையும், காயங்கள் ஆற்றுவதற்கு வெண்கடுகையும் புகைக்கத் தயாராய் இருக்கும் பெண்ணின் மனத்துணிச்சல்தான் அந்த ஆடவனைத் தொடர்ச்சியாகப் போருக்கு அனுப்பி வைத்தது. தம்முடைய மகன் புறப்புண் பெற்றுவிட்டான் என்றெண்ணும்போது போருக்குத் தகுதியில்லாத கோழை என்று முடிவு செய்யும் வீரிய வார்த்தைகள்தான் அம்மறவனைப் போருக்குத் தயராக்கின. மகனைப் பெற்ற வயிறு புலயைப் பெற்ற குகை என்று கனவு காணும் பெண், புலி குகைக்குள்ளே இருப்பது அழகல்ல என்று மகனின் வீரத்தை உறுதிப்படுத்துகின்றாள். புழங்காலப் பெண்ணின் வீரத்தை வைரமுத்து, "நல்ல மறத்தினால் உள்ள உரத்தினால், உடல் திறத்தினால் சிறிய முறத்தினால் புலியைத் துரத்தினாள் ஒரு தமிழ்ப்பெண்"என்று அடையாளப்படுத்துகின்றார்.

**’’களிறுபொரக் கலங்கு, கழல்முள் வேலி,**
**அரிதுஉண் கூவல், அங்குடிச் சீறூர்**
**ஒலிமென் கூந்தல் ஒண்ணுதல் அரிவை**
**நடுகல் கைதொழுது பரவும், ஒடியாது**
**விருந்து எதிர் பெறுகதில் யானே என்ஐயும்**
**மோ ------------- வேந்தனொடு.**
**நாடுதரு விழுப்பகை எய்துக எனவே’’** *(புறம்:306)*

என்ற பாடல் வரிகள் பெண்ணின் வீரத்துணிவை வெளிப்படுத்தி நிற்கின்றன. வீரர் குலத்தில் பிறந்த பெண் ஒருத்தி தம் முன்னோரின் நடுகல்லை வழிபட்டு, போருக்குச் சென்ற தலைவன் 'விழுப்பகை எய்துக' என்று வேண்டுகின்றாள், என்ற செய்தி மறக்குலப் பெண்ணின் வீர உணர்வை வெளிப்படுத்துகின்றது.

போர்க்களத்தில் தம் கணவனின் இறப்புச் செய்தி கேட்டு, தன் கணவனைக் கண்டு எதிரியே தம் கைவேலில் குத்துப்பட்டு இறந்தான். பெருங்குன்று போல உள்ள யானையைக் கொன்று தானும் இறந்துபோன வீரனே எனக்குப் பற்றுக்கோடாக விளங்கும் தலைவன், என்று வீரத்தையே மையமாகக் கொண்ட தலைவனைப் பெண்கள் கணவர்களாக ஏற்றுக் கொண்டனர். ஆண்களின் வீரத்திற்குக் காரணமாக விளங்கியவர்களே இப்பெண்கள்தான் என்பதைச் சங்கச் சமூகம் அறியும்.

கலித்தொகையில் குறிப்பிட்டுள்ள 'ஏறு தழுவுதல்' என்பது வீரத்தின் உச்சபட்சமாகவே கருதப்படுகின்றது. ஏறுதழுவுதலில் வெற்றி பெறுபவனே சிறந்த வீரன் என்று சமுதாயத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டான். இந்தச் சிறந்த வீரர்களை கணவர்களாக ஏற்றுக் கொண்டனர் பழந்தமிழ்ப் பெண்கள். ஆண்களின் வீரப்பகிர்வைக் காட்டிலும் பெண்களின் வீரம் அதிகமாகவே காணப்பட்டது. ஆண்களின் வீரம் சில நேரங்களில் பெண்களின் மனதைக் திருப்திப்படுத்திச் செயல்பட்டது. பேண்களின் வீரஉணர்வு அடிப்படையிலிருந்தே ஊறிப்போன ஒன்றாகவே செயல்பட்டுக் கொண்டிருந்தது.

தாம் போர் செய்யவில்லையானாலும், போர் செய்யும் கணவனுக்கு உறுதுணை யாகவும், ஊன்றுகோலாகவும் செயல்படடிருக்கின்றாள் பெண். இரத்த வெள்ளத்தில், தலையும் காலும், கையும் வெவ்வேறு நிலையில் காட்சயளிப்பது போர்க்களத்தில் போர் செய்யும் வீரனே திரும்பிப்பார்க்க அச்சமாக இருக்கும். இதுபோன்று காட்சியளிக்கும் போர்க்களத்திற்கு சென்ற கணவனை இன்னும் காணவில்லை என்றெண்ணிய தலைவி போர்க்களம் சென்று விழுப்புண்பட்டு இறந்து கிடக்கும் கணவனைக் கண்டு அழுது புலம்புகின்றாள். தம் கணவனின் இறப்பு கண்டு அலறினால் புலி வந்து கணவன் உடலைப் பற்றிக் கொள்ளும் என்று நினைத்த தலைவி, வீரம் மிக்க வலிமையான ஆண் மகனைத் தூக்கவும் முடியாமல் படும் துன்பத்தை வன்பரணர் மிகவும் வெளிப்படையாகப் பதிவு செய்துள்ளார்.

**''ஐயோ! எனின் யான் புலி அஞ்சுவலே**
**அணைத்தனன் கொளினே**
**அகன்மார்பு எடுக்க வல்லேன்**
**என்போல் பெருவிதிர்ப்பு உறுக,நின்னை**
**இன்னாது உற்ற அறனில் கூற்றே!**
**திரைவளை முன்கை பற்றி**
**வரைநிழல் சேர்கம் - நடந்திசின் சிறிதே!''** (புறம்:255)

இப்பாடலின் வழி பெண்ணின் வீரத்தை காணலாம், ஆம் போர்க்களத்தில் துணிவுடன் செல்லும் அப்பெண் சத்தமும் போடாமல், தூக்கவும் முடியாமல் தம் கைப்பற்றி நடந்து வருக மலைப்புறத்து நிழலுக்கு என்று கணவனை எடுத்துச் செல்லும் பெண்ணின் வீரம் போற்றத்தக்கது.

வயது முதிர்ந்து சாவை எதிர்நோக்கும் முதியோருக்கு இருந்த போர் வீரம் புறநானூற்றில் பதிவு செய்யப்பட்டுள்ளது. பெண்ணின் பெருமை அவள் தாய்மை அடைவதாகும். அவள் தாய்மையடையும் நாளன்று அளவல்லாத மகிழ்ச்சியைப் பெறுகின்றாள். அந்த மகிழ்வைக் காட்டிலும் தம் மகன் வீரத்துடன் பலரை வென்று தானும் மடிந்தான். என்னும் செய்தி அவள் குழந்தை ஈன்ற நேரத்தைவிட மிகுந்த உவகையைத் தருகின்றது, என்ற பெண்ணின் உணர்வு போர் வீரத்தை வெளிப்படுத்தி நிற்கின்றது. "முதியோள் சிறுவன் களிறு எறிந்து பட்டனன் என்னும் உவகை ஈன்ற ஞான்றினும் பெரிதே" என்ற வரிகளில் உள்ள போர் வீரம், பெண்ணின் வீர உணர்வாக வெளிப்படுத்த முடிகின்றது.

இவள் கண்களில் பெருகிய ஆனந்தக் கண்ணீர் அளவில்லாமல் வடிந்து கொண்டிருந்தது. தம் மகன் புறமுதுகிட்டு ஓடினான் என்னும் செய்திக் கேட்டத் தாய் நெஞ்சு பதறினாள். தம் மகன் புறங்கொடுத்து ஓடமாட்டான் என்று ஆராய்ந்தாள். வீர உணர்வோடு வளர்த்த மகன் கோழையாக மாட்டான் என்பதை நம்பியிருக்கின்றாள். புறங்கொண்டு இறந்தான் என்ற செய்தி கேட்ட அத்தாய், புறங்கொண்டு மடிந்தானால் கோழையான என் மகன் வாய்வைத்து பால்குடித்த மார்பை அறுத்தெறிவேன் என்று சபதமிகின்றாள்.

**''நரம்பு எழுந்து உலறிய நிரம்பா மென் தோள்**
**முளரி மருங்கின் முதியோள் சிறுவன்**
**படை அழிந்து மாறினன் என்று பலர் கூற**
**மண்டு அமர்க்கு உடைந்தனன் ஆயின், உண்ட என்**
**முலை அறுத்திடுவென் யான் எனச் சினைஇக்''** (புறம்: 278)

என்ற 'நச்செள;ளையாரின்' பாடல் வரிகள் பெண்ணின் வீர உணர்வை வெளிப்படுத்தி நிற்கின்றன. கையில் வாளுடன் போர்க்களம் சென்ற முதியவள் வயது முதிர்ந்து, நரம்பு புடைத்து வற்றிய தோளும், அடி வயிறு ஒட்டிய நிலையில் உள்ள தாய் என்பதை காணும்போது, வயது முதிர்ந்த பெண்ணின் மனதிலும் உள்ள போர் வீரத்தை இனங்கான முடிகின்றது. தம் மகன் விழுப்புண் பட்டு உயிர்ப் பிரிந்தது என்ற உண்மையைக் கண்டவுடனேயே வாளைக் கீழே போட்ட அத்தாய் கண்ணீர் மல்கி மகனைப் பெற்ற நேரத்தைவிடப் பேருவகை அடைந்தாள் என்னும் பெண்ணின் வீரம் போற்றத்தக்கதாகும்.

தம் மகன் விழுப்புண்பட்டு இறந்த நிகழ்வைப் பார்த்த முதியவள் வற்றிப்போன மார்பில் பால்சுரந்ததாகப் பெருமைப்பட்டுக் கொள்கின்றாள். பருவக்காலத்தில் கூட குழந்தைக்குப் பால் கொடுக்க வேண்டும் என்று மகிழ்ந்தால் மட்டுமே அதிகப்படியான பால் சுரக்கும். வயது முதிர்ந்த காலத்திலும், வற்றிப்போன மார்பில் பால் சுரக்கும் மகிழ்ச்சியைக் கொடுத்தது அவள் மகனின் வீரமரணம்.

**''இடைப்படை அழுவத்துச் சிதைந்து வேறாகிய**
**சிறப்புடை யாளன் மாண்பு கண்டருளி**
**வாடுமுலை ஊறிச் சுரந்தன,**
**ஓடாப் பூட்கை விடலைத் தாய்க்கே''** (புறம்: 295)

புறப்பாட்டு வரிகள் எடுத்துரைக்கின்றன. முன்பொரு நாள் தம் தந்தை போரில் இறந்துபட்டான், நேற்று தம் கணவன் இறந்துவிட்டான். இன்றும் செருப்பறை கேட்ட பெண்ணின் மனநிலை அமைதியை நாடவில்லை. ஆவள் உள்ளம் போர்க்களத்தையே

நோக்கி அமைந்து இருந்தது. போர் புரிய ஆண்மகனும் இல்லை, ஆனாலும் போர் செய்யும் ஆற்றல் அவளைத் தூண்டுகின்றது. உணர்வின் வேகத்தினால் தன் பிஞ்சு மகனைப் போருக்கு அனுப்பி வைப்பதுதான் அப்பெண்ணின் வீரத்திற்குச் சான்றாகும். மன்னனுக்காகப் படையில் சேர்ந்து எதிர் மன்னனை வெற்றி கொள்ளும் வீரத்தைக் காட்டிலும் இப்பெண்ணின் மனதில் தோன்றிய சிந்தனை வலிமை மிக்கதாகும்.

**''வேல்கைக் கொடுத்து வெளிது விரித்து உடீஇப்**
**பாறு மயிர்க் குடுமி எண்ணெய் நீவி**
**ஒரு மகன் அல்லது இல்லோள்,**
**செருமுக நோக்கிச் செல்க'' என விடுமே''** (புறம்:279)

என்ற ஒக்கூர் மாசாத்தியாரின் பாடல் வரிகள் அப்பெண்ணின் மன உணர்வினை வெளிப்படுத்தி நிற்கின்றது. போர்ப்பறையின் சத்தம் கேட்டு, புகழில் மயங்கி, தன் சின்னஞ்சிறு குழந்தையின் தலைக்கு எண்ணெய் தடவி வாரியும், வெண்மையான ஆடையை உடுக்கச் செய்து கையில் வேலைக் கொடுத்து அனுப்பும் அப்பெண், மறக்குடியைச் சார்ந்தவள் என்பது வெளிப்படுகின்றது.

பழங்காலப் பெண்கள் போர்மீது அதிகமான ஈடுபாடு கொண்டிருந்தனர் என்பதைவிட போர்வீரம் மிகுதியாகக் கொண்டிருந்தனர். இப்பெண்ணின் போர்வீரம் ஆபத்தானது கண்டிக்கத்தக்கது என்பதாகவே சமுதாயத்தை வழிநடத்திய சான்றோர்கள்''கொடூரமான இவள் சிந்தை கெடுவதாகுக(புறம் 279) என்று தடுப்பதாக புறநானூறு வெளிப்படுத்தியுள்ளது.

**''வையகம் போர்த்த வயங்கொலி நீர் கையகல,**
**கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே**
**வாளொடு முன் தோன்றிய மூத்தகுடி''**

என்ற புறப்பொருள் வெண்பாமாலையின் வரிகளை உறுதிப்படுத்துவதாகப் புறநானூற்றில் இடம் பெற்ற பெண்ணின் வீர உணர்வு பிரதிபலிக்கின்றது. போர்க்களம் சென்று போரின் காரணமாக வெட்டி வீழ்த்தி வெற்றியுடன் வீடு திரும்பும் கணவனின் போர் வெற்றிக்கு மனைவியின் சேவை உறுதுணையாக அமைந்து விடுகின்றது. இப்பெண்களின் சிந்தனையில் உதிக்கும் போர்வீரத்தின் தாக்கம் ஆண்களின் வெற்றியைக் காட்டிலும் வீச்சு மிகுந்ததாகும். ஆண்கள் போர்க்களத்தில் பெறும் வெற்றியைப் போலவே பெண்ணின் வீர உணர்வுககள் போற்றி மதிக்கப்படுவதாக அமைந்திருந்தன.

**முடிவுரை:**

பெண்கள் வீட்டிற்குள் கிடக்கும் போதும் வீரப்பெண்களாக விளங்கிய போதும் பெண் விடுதலைப் பற்றிப் பேசாத சமுதாயம் என்று பெண்ணீயம், பெண் உரிமை, பெண் விடுதலை எனப் புரட்சி செய்ய ஆரம்பித்ததோ அன்று அவர்களின் அடிமைத்தனமும் அதிகரித்தது. அடிமைப்படுத்துவது இருக்கப்போய்தானே போராட வேண்டி இருக்கிறது. வீட்டிற்குள்ளே பெண்ணைப் பூட்டி வைப்போம் என்ற விந்தை மனிதர் தலைகவிழ வேண்டும் என்று பாரதி பாடினானே தவிர அவரவர்கள் தங்கள் சொந்த உரிமைக்காகப் போராட வேண்டும் என்று கூறவில்லை. ஊரிமையைத் தட்டிப்பறித்து போராடுகிறோம் என்று உண்மையில் அவளின் ஆற்றலை, சக்தியை, திறமையை, ஆக்கத்தை வெளிக்கொணரவிடாமல் சங்கிலியிட்டுப்

பூட்டி வைக்கிறது. இதற்கு முக்கியக் காரணம் தகவல் தொடர்பு சாதனங்களும் இன்றைய இலக்கியப் படைப்புகளுமே ஆகும். அவைகள் பெண்ணியம்,பெண்ணியம் என்றெல்லாம் பேசி பெண்ணின் உணர்ச்சிகளையும், எண்ணங்களையும் தூண்டிவிட்டு, பணம் சம்பாதிக்கும் ஒரு போகப்பொருளாகவும், ஆசையைத் தீர்த்துக் கொள்ளும் ஒரு மோகப் பொருளாகவும் அவளை மாற்றியதே தவிர, உண்மையில் அவளுடைய உரிமைக் கருத்துக்களுக்கு முன்னுரிமை அளிக்கக்கூடிய விழிப்புணர்வை ஏற்படுத்தவில்லை. இல்லங்களிலும் அலுவலகங்களிலும் ஏன் ஒட்டுமொத்த சமூகத்திலும் பெண்ணின் கருத்து இரண்டாம் பட்சமாகவே ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

ஒரு பக்கம் பெண்கள் முன்னேற்றம், புரட்சி, அனைத்துத் துறைகளிலும் பெண்கள் என காலம் வளர்ந்து கொண்டிருந்தாலும், சடங்கு, சம்பிரதாயம், சில சமுதாய நெறிமுறைகள், பழக்கவழக்கங்கள், நம்பிக்கைகள் என்ற பல பெயர்களில் பெண்கள் அனுபவிக்கும் துன்பங்களும், எதிர் கொள்ளும் துன்பங்களும் இந்த இருபதாம் நூற்றாண்டிலும் தொடர்ந்து கொண்டுதான் இருக்கின்றன. என்னதான் தற்காலம் மாறி கணினிக் காலம் வந்தாலும், இது பொன்ற சமுதாயச் சிக்கல்களைப் பெண்கள் இனியும் அனுபவித்துக் கொண்டுதானிருக்கின்றனர். பெண் என்று தனது உரிமைக்காகவும், தனது விடுதலைக்காகவும் போராடாமல் எப்பொழுது முடிவெடுத்து அதைத் துணிவாகச் செயல்படுத்தி வெற்றியடைகிறாளோ அன்றே அவளுக்கு முழு சுதந்திரம் கிடைக்கும். சமூகம் எதுவாக இருப்பினும், என்னத்தான் புரட்சி, பெண்மை, ஆணாதிக்கச் சமுதாயம் என்றெல்லாம் கூறினாலும், பெண்ணானவள் வாழ்க்கையில் **''தற்காத்துச் தற்கொண்டான்பேணி''** விளங்குகிறாள்.

விதிவிலக்காகச் செல்லும் சில பெண்கள் வரலாறு படைக்கின்றனர். சாதனையும் புரிகின்றனர்.. இக்கருத்துக்களால் பெண்ணியம் என்பது சங்ககாலம் தொடங்கி தற்காலம் வரை கல்வெட்டு தொடங்கி கணினி வரை ஏதோ ஒரு வகையில் பேசப்படுகிறது என்பது புலனாகிறது.

**வாழ்க பெண்மை**
**வளர்க படைப்பு**
**செழிக்க சமுதாயம்;**

# பெண் கல்வி போராளிகள்

முனைவர் ரா. பிரியா,
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
பான் செக்கர்ஸ் மகளிர் கல்லூரி, தஞ்சாவூர்

## முன்னுரை

பெண் என்றால் தாய்மை இந்தத் தாய்மையில் தான் அனைத்து உயிர்களும் தோன்றுகின்றன. 'பெண்கள் நாட்டின் கண்கள்' என்ற வாசகத்திற்கு ஏற்ப ஒரு நாட்டின் வளர்ச்சிக்கு அறிவியலும் பொருளாதாரம் எந்த அளவிற்கு முக்கியமோ அதே அளவிற்கு ஒரு சிறந்த சமுதாயத்தை உருவாக்குவது ஒரு பெண்ணின் கடமையாகும். பெண் இனம் தனக்கான தொரு தனித்த சிறப்பைக் கொண்டு வாழ்ந்ததற்கு ஆதிச்சமூகமே சாட்சி பெண்ணைத் தலைவியாகவும் தெய்வமாகவும் போற்றி வந்துள்ளனர். பெண்ணியம் இலக்கியக் கோட்பாடு என்னும் நிலையிலிருந்து வாழ்க்கைக் கோட்பாடாக மாறத் துவங்கியுள்ளது.

## பெண்ணியக் கோட்பாடுகள்

மனித இனச் சமன்பாட்டை நாடுவதே பெண்ணியத்தின் தலையான இலக்கு ஆகும் பெண்ணியம் என்ற சொல் 1890-ல் தொடங்கப்பட்து. பாலின சமத்துவக் கோட்பாடுகளையும், பெண்களுக்கான உரிமைகளைப் பெறச் செயற்படும் இயக்கங்களையும் குறிக்கப் பயன்பட்டு வருகிறது. பெண்கள் தன் உரிமையைப் பெற முதன்மையான ஒன்றாகக் கல்வி விளங்குகிறது.

**''பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள்**
**செய்வதும் பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்''**

என்ற பாரதியார் பாடியுள்ளார்.

**கல்வி இல்லாத பெண்கள் களர் நிலம்**
**அந்நிலத்தில் புல் விளைந்திடலாம் நல்ல**
**புதல்வர்கள் விளைவது இல்லை**

என்றார் பாரதிதாசன். பெண் கல்வி கற்பதன் மூலமாக ஒரு நாடு முன்னேற்றம் அடைவதை நாம் உணரலாம். "ஞானம் நல்லறம் வரும் சுதந்திரம் நற்குடி பிறப்பு" என்று புலமை பெண்களுக்கான இலக்கணம் வகுக்கிறார் பாரதியார். ஒரு சமூகத்தில் பெண்கள் அடக்கியொடுக்கப்பட்டு. கல்வி மறுக்கப்பட்ட காலம் போய் இன்றைக்கு பெண்கள் சமமாகக் கல்வி பயில்கின்றனர். பெண்கள் கல்வி கற்க தொடங்கியத்திற்குப் பின்பு தான் நமது சமூகத்தில் சமத்துவம் வளர துவங்கியது. இன்றைக்குப் பல துறைகளிலும் சாதிக்கின்றனர். பாடசாலைகள் பல்கலைக்கழகங்கள் தொழில் நிறுவனங்கள் எல்லாவற்றிலும் பெண்கள் சாதிக்க பெண்கல்வி வளர்ச்சியடைந்தமையே காரணமாக இருக்கிறது. பெண்கள் கல்வி கற்க கூடாதென கூறி அவர்களை சிறுவயதில் திருமணம் செய்து வைத்தல், கணவன் இறந்தவுடன் உடன்கட்டை ஏற செய்தல், பெண்கள் வீட்டை தாண்டி வெளியில் செல்லவே முடியாத அளவிற்கு அடக்குமுறைகள் காணப்பட்டன. இதனை மீறும் பெண்களைச் சமூகத்தில் தவறானவர்களாகக் காட்டி தண்டிக்கும் வழக்கம் அக்கால சமூகத்திற்கு இருந்தது. இதனால் பெண்கள் வாழ்க்கை மிகவும் பாதிக்கப்பட்டது. இப்படிப்பட்ட பெண்களை மீட்க பாடுபட்ட போராளிகள்.

**சாவித்ரிபாய்புலே**

நவீன இந்தியாவின பெண் கல்விக்கு வித்திட்டவர். இந்திய பெண்களின் கல்வி மற்றும் மேம்பாட்டிற்கான களத்தில் முன்னோடியாகத் திகழ்ந்தவர் சாவித்ரிபாய். ஆணாதிக்க சாதீய சமூக கட்டமைப்பின் பாரபட்சமான நடைமுறைகளிலிருந்து விடுபடுவதற்கான வழிமுறையாக கல்வியைத் தேடி வளர்த்துக் கொள்ள வேண்டும் என்று நம்பினார் சாவித்ரிபாய்புலே. மகாராஷ்டிரா மாநிலத்தில் உள்ள நைகான் கிராமத்தில் 1831 ஆம் ஆண்டு ஜனவரி 3 அன்று பிறந்தார். இந்தியாவின் முதல் பெண் ஆசிரியராக அங்கீகரிக்கப்பட்டவர் இவரே ஆவார். சாதீயக் கட்டமைப்பில் பின்தங்கிய சமூகமாகக் கருதப்பட்ட மாலி சமூகத்தில் பிறந்த சாவித்ரிபாய்புலே ஒன்பது வயதில் திருமணம் அப்போது கல்வியறிவற்றவராக இருந்தார். தன் கணவரின் துணையோடு கல்வி கற்று ஆசிரியர் ஆனார். சிறுமிகளுக்குக் கல்வி கற்பிக்க தொடங்கினார். முழுமையான பெண்ணியத்தை உணர்ந்த பெண்ணியவாதியாகச் சாவித்ரிபாய்புலே குழந்தை திருமணம் பெண் சிசுக்கொலை, சாதி முறைக்கு எதிராக பெண்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தினார். சாவித்ரிபாயின் சேவை துணிவு,தொண்டனை மதிக்கும் வகையாக புனே பல்கலைக்கழகம் 2015 ஆம் ஆண்டில் சாவித்ரிபாய்புலே புனே பல்கலைக்கழகம் என பெயர் மாற்றம் செய்விக்கப்பட்டது. அவரது பிறந்த நாள் மகாராஷ்டிராவில் ஒவ்வொரு ஆண்டும் "பாலிகா தின்" எனப்படும் பெண் குழந்தைகள் தினமாக கொண்டாடப்படுகிறது.

**செய்பாய் சௌத்ரி**

இரயில் நிலையத்தில் ஒரு சுமை தூக்கியாக தன் வாழ்வைத் தொடங்கி கல்வியாளராக வளர்ந்து பின் தலித் செயற்பாட்டாளராக உயர்ந்தவர் செய்பாய் சௌத்ரி அன்று அவர் தூவிய பெண் கல்வி விதையே இன்று விருட்சங்களாக வளர்ந்து இருக்கின்றன. மகாராஷ்டிராவின்

நாக்பூரில் பிறந்தவர். தன் உத்வேகத்தால் எல்லா தடைக்கற்களையும் வாய்ப்புகளாக மாற்றியவர் கல்வின் மூலம் ஓர் ஆசிரியராக உயர்ந்தவர். பெண்களைத் திரட்டி கல்வியின் முக்கியதுவத்தைப் பற்றி பேசினார். வீடு வீடாக சென்ற பெண்குழந்தைகளின் அழுக்கைக் களைந்த தலை சீவி விடுவார். நயி பஸ்தியில் ஒரு மரத்துக்கு கீழ் 1922 ல் தன் பள்ளியைத் தொடங்கினார். இப்போது உயர்நிலைப் பள்ளியாக செய்பாய் சௌத்ரி ஞானபீட பள்ளி என்று பெயரிடப்பட்டுள்ளது. பெண் கல்வியைப் பற்றிப் பல பாடல்களை இயற்றினார். செய்பாயின் முயற்சியால் தான் பெண்களின் பள்ளிப்படிப்புக்கு முக்கியத்துவம் கிடைத்தது. ஆயிரக்கணக்கான பெண்களின் மனத்தில் அவர் கல்விக்கான முக்கியத்துவத்தைப் பதியவைத்தார். பல தலைமுறைகளுக்குப் பின்னர் இன்றும் அவரது மாணவிகள் அந்தப் பணியை முன்னெடுத்துச் செல்கின்றனர்.

### டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி

தமிழகத்தில் மருத்துவப் பட்டம் பெற்ற முதல் பெண்மணி. மதராஸ் சட்ட மேலவையின் முதல் பெண் உறுப்பினர். பல்வேறு துறைகளில் சாதித்து வரலாற்றுப் பக்கங்களில் இடம் பிடித்தவர். சென்னையில் இன்றைக்கும் சிறப்பாகச் செயல்பட்டு வரும் அடையாறு புற்றுநோய் மையத்தையும் 1954-ல் தொடங்கி மக்களுக்காகவே வாழ்ந்தவர். கடும் எதிர்ப்புகளுக்கு இடையே தேவதாசி முறை ஒழிப்புச் சட்டத்தைக் கொண்டு வந்தவர். அந்தக் காலகட்டத்தில் பள்ளிக்கூடத்தில் முத்துலட்சுமி மட்டும் தான் ஒரேயொரு மாணவி. 1926-ல் பாரிஸில் நடைபெற்ற அகில உலக பெண்கள் மாநாட்டில் பங்கேற்றார். அம்மாநாட்டில் முத்துலட்சுமி இளவயது திருமணம் விதவை மறுமணம் போன்றவவை குறித்து எடுத்துரைத்தார். 1926-30 காலத்தில் அவர் மன்ற உறுப்பினராகப் பணியாற்றினார். முத்துலட்சுமி அம்மையாரின் முயற்சியில் தான் பெண்களுக்கு வாக்குரிமை கிடைத்தது. பெண் விடுதலைக்காகவும் ஏழை எளிய மக்களுக்காகவும் போராடிய இவருக்கு 1956 ல் பத்மபூஷண் விருது வழங்கப்பட்டது. மருத்துவம், சமூக சீர்திருத்தங்களில் சிறந்து பங்காற்றிய டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி 1968 -ம் ஆண்டு சூலை 22-ல் தனது 82-வது வயதில் உயிரிழந்தார்.

### மூவலூர் இராமாமிர்தம் அம்மையார்

பெண்சமூக சீர்திருத்தவாதி எழுத்தாளர் முன்னால் தேவதாசி ஒழிப்பு இயக்கம் மற்றும் திராவிட இயக்கத்தைச் சேர்ந்த அரசியல் செயற்பாட்டாளர். இவர் திருவாருர் மாவட்டம் கீரனூர் அணமையில் உள்ள பாலூர் என்ற கிராமத்தில் பிறந்தார். இவர் வளர்ந்தது மூவலூர் கிராமம். மூவலூர் இராமாமிர்தம் திருமண நிதியுதவித் திட்டம். உயர்கல்வி உறுதித்திட்டமாக மாற்றப்படுகிறது. இத்திட்டத்தின் மூலம் 6 முதல் 12-ம் வகுப்பு வரை அரசுப் பள்ளிகளில் படித்து உயர்கல்வி படிக்கும் மாணவிகளுக்கு மாதம் ரு.1000 வழக்கப்படுகிறது.

**மலாலா**

இளம் வயதில் அமைதிக்கான நோபல் பரிசு பெற்ற தலாலா யூசுப்சாயின் பிறந்த நாளான சூலை 12ல். சர்வதேச மலாலா தினமாக கொண்டாடப்படுகிறது. பாகிஸ்தானைச் சேர்ந்த இளம் போராளியான மலாலா. பெண்கள் கல்வி கற்கக் கூடாது என்று தாலிபான் விதித்த தடையை மீறி பள்ளிக்குச் சென்றார். பாகிஸ்தானில் தாலிபான்கள் செய்யும் கொடூரச் செயல்களைக் குல்மகை என்ற புனைபெயரில் பிபிசியின் உருது வலைப்பதிவில் துணிச்சராக எழுதினார். பெண்களின் கல்வி உரிமைக்கான குரல் கொடுத்ததால். பள்ளிகளைத் தாலிபான்கள் தடை செய்த போதிலும் பள்ளி மாணவிகளை நச்சுப்புகையால் தாலிபான்கள் கொல்ல முயன்ற போதிலும் மரத்தடியில் பெண்களுக்கான பள்ளிகள் நடத்தப்பட்டன. மலாலாவும் அதில் பங்கேற்றார். மலாலாவைத் தெரிந்து கொண்ட தாலிபான் அக்டோபர் 9- 2012 அன்று சுட்டுகொல்ல முயன்றது. படுகாயம் .அடைந்த அவர் சிக்ச்சைக்குப் பின் மீண்டும் வந்தார். எனினும் அவர் தாலிபான்களைக் கண்டு அஞ்சவில்லை. பெண் கல்வி உரிமைக்காகவும் குழந்தைகளின் கல்விக்காகவும் தொடர்ந்து பிரசாரம் செய்தும் வருகிறார்.

**கல்வியின் சிறப்பு**

அறியாமை என்னும் கொடுநோயை போக்கவல்லது கல்வி ஒன்றேயாகும். இதனை பதினென்கீழ் கணக்கு நூலகளுள் ஒன்றான நாலடியார் பின்வருமாறு கூறுகிறது.

**''இம்மை பயக்குமால் ஈயக் குறைவின்றால்**
**தம்மை விளக்குமால் தாமுளராக் கேடின்றால்**
**எம்மை யுலகத்தும் யாங்காணேம் கல்விபோல்**
**மம்மர் அறுக்கும் மருந்து''. (நாலடியார்)**

கற்றவர் புகழை இம்மையிலும் மறுமையிலும் வாழச் செய்வது கல்வியே. கல்வியை போல் அறியாமை எனும் நோயை போக்கக் கூடிய மருந்து இவ்வுலகில் வேறெதுவும் இல்லை என்று குறிப்பிடுகிறது.

**முடிவுரை**

வளர்ந்த நாடுகள் பல பெண்கள் சுகந்திரத் பாதுகாப்பு என பெண்களின் முன்னேற்றத்தில் கவனம் செலுத்தி வருகின்றனர். நாடு மற்றும் வீட்டின் முன்னேற்றத்திற்கும் பெண்கள் கல்வி அறிவு பெற வேணடும். உலகின் மக்கள் தொகையில் சரிபாதியாக விளங்குபவர்கள் பெண்கள். இயற்கையாக அறிவும் மனவலிமையும் மிக்கவர்கள் பெண்கள் சில மூட நம்பிக்கை மிக்கவர்களால் அடக்கப்படுகிறார்கள். பெண் கல்வியின் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதால் இன்று வன்முறைகளுக்கெதிராக அச்சமின்றி குரல் கொடுத்து வருகின்றனர்.

# மையத்தைக் கலைக்கும் விளிம்பின் குரல்

ஜா. ரோஸ்லின் அனிஷா
முதுகலை இரண்டாம் ஆண்டு, தமிழ்த்துறை,
சென்னைக் கிறித்தவக் கல்லூரி, தாம்பரம்

**முன்னுரை:**

"ஒரு போதும் சூரியன் பிரிட்டிஷ் சாம்ராஜ்ஜியத்தில் அஸ்தமிப்பதில்லை" என்று ஜான் வில்சன் குறிப்பிட்டதற்கு இணங்க உலக வரைபடத்தை தன்ஆளுகைக்குள் கொண்டு வர முற்பட்ட பிரிட்டிஷ் அரசு, தன் காலனி நாடுகள் சுதந்திரம் அடைந்த பிறகு அவற்றோடு இணக்கமான அரசியல் சூழல் அமைத்துக் கொள்ள விரும்பி உருவாக்கிக் கொண்டது காமன்வெல்த் அமைப்பு. பேரரசு மையத்தை மறுதலித்து, உயிரியல் கைதிகளான பெண்களையும், பாலினம், வர்க்கக் காரணிகளால் உலகெங்கும் அச்சுறுத்தலுக்கு ஆளாகும் விளிம்பு நிலை மக்களையும் காமன்வெல்த் நாட்டு கவிதைகள் வெளிக்கொணர்கின்றன. பிராந்திய மொழி கவிதைகளில் வெளிப்படும் விளிம்பு நிலை அரசியலை சமூகவியல் மற்றும் பெண்ணிய நோக்கில் ஒப்பாய்வு செய்கின்றது இக்கட்டுரை.

**காமன்வெல்த் நாடுகள்**

இரண்டாம் உலகப் போருக்குப் பின் சிதைக்கப்பட்ட பிரிட்டிஷ் பேரரசின் ஒரு பகுதியாக ஐக்கிய ராச்சியத்தால் ஆளப்பட்ட முன்னாள் காலனிகளின் இந்நாள் தொகுதியான காமன்வெல்த், சுதந்திர இறையாண்மை கொண்ட நாடுகளின் கூட்டமைப்பு. இவ்வமைப்பு அதன் உறுப்பு நாடுகளில் எவ்வித அரசியல் அதிகாரத்தையும் கொண்டிருக்கவில்லை.1950 ல் லண்டன் பிரகடனம் நிறைவேற்றப்பட்டு காமன்வெல்த்தின் தலைவராகப் பிரித்தானிய மன்னர் இருப்பார் என்பதை உறுப்பினர்கள் ஏற்றுக்கொண்டனர். மேலும் காமன்வெல்த் நாடுகள் எனும் அமைப்பு அதிகாரப் பூர்வமாக நிறுவப்பட்டது. தற்போது 56 நாடுகளுடன் உலக மக்கள் தொகையில் 30% வரை உள்ளடக்கியுள்ளது. சங்கத்தின்

அடிப்படை உரிமைகளை ஏற்றுக்கொள்ளும் காலனி நாடுகளுக்கு உறுப்பினர் சேர்க்கை நடைபெறுகின்றது. உறுப்பு நாடுகளுக்கு இடையேயான பொருளாதார ஒத்துழைப்புச் சூழலை உருவாக்குவதோடு ஜனநாயகம் மற்றும் நல்லாட்சியை மேம்படுத்துவது இதன் நோக்கமாகும். எவ்வகையிலும் ஓர் அரசியல் ஒன்றியம் அல்லது ஐக்கிய இராச்சிய அமைப்பு மற்ற உறுப்பினர்களின் விவகாரங்களில் தனது அதிகாரத்தை பயன்படுத்த அனுமதிக்காத வகையிலும் வடிவமைக்கப்பட்டுள்ளது.

## காமன்வெல்த் நாட்டு கவிதைகள்

வேறுபட்ட வரலாறு, இனவரைவியல் கொண்ட நாடுகளாக இருப்பினும் காலனியத்துவம், உலகமயமாக்கல் ஆகியவற்றின் விளைவுகளால் மையத்தில் நிகழ்ந்த மாற்றங்களையும் வரலாற்றின் பக்கங்களில் ஒடுக்கப்பட்டுக் கொண்டே இருக்கும் விளிம்பு நிலை மக்களின் வாழ்வியலையும் எடுத்துரைப்பவையாக காமன்வெல்த் நாட்டுக் கவிதைகள் படைக்கப்பட்டிருக்கின்றன. இந்தியா, ஆஸ்திரேலியா, சிங்கப்பூர், நியூசிலாந்து, பாகிஸ்தான்ஆகிய நாடுகளைச் சார் கவிஞர்களான சிவ்.கே.குமார், ஹோப், ரண்டால் ஸ்டோ, கிர்பால் சிங், ஜேம்ஸ் பாக்ஸ்டர், கிஷவர் நஹித் ஆகியோரின் கவிதைகளில் தத்தமது நாட்டு வரலாறும்,சமூகமும் முறையே வெளிப்படுத்தப்படுகின்றன.

பிரிட்டனின் காலனி நாடுகள் என்ற முதல் குறிப்பைக் கடந்து,பண்பாட்டு, பொருளாதார வேறுபாடுகள் நிறைந்திருந்தாலும் கீழைத்தேய நாடுகளுடன் மேற்கத்திய நாடுகள் பகிர்ந்து கொள்ளும் பாலின சமத்துவமின்மையின் பன்முகங்கள் உலகெங்கும் பொதுவாகக் காணப்படும் பாங்கை இக்கவிஞர்கள் உணர்த்துகின்றனர். சாதிய, வர்க்க வேற்றுமைகள் மலிந்து காணப்படும் இந்திய துணைக்கண்டத்துப் பெண்கள், சினங்கொண்டால் கூட தங்கள் வீட்டு மண் சுவருக்கு மேல் புருவங்களை உயர்த்த வழியின்றி, பச்சைக் குத்திய தொடைகளோடு,மாலை வரை தங்கள் கணவர்களின் வருகைக்காக காத்திருந்து, கிராமத்து கிணறுகளுடனும், காலிப் பானைகளோடும் காட்சிப்படுத்தப்படுகிறார்கள். வட அமெரிக்காவின் மிஸிஸிப்பி நதியின் நீளத்தை ஒத்த கூந்தலில் நம்பிக்கையை மட்டும் பின்னலிட்டு, பொறுமையின் உருவகமாக்கப்படுகின்றார்கள்.

சமூகக் கட்டமைப்புகளில் வர்க்க அடிப்படையில் குடும்பங்கள் ஒடுக்கப்படுகின்றன. குடும்பம் எனும் கட்டமைப்பில் பாலின அடிப்படையில் பெண்கள் ஒடுக்கப்படுகின்றனர். சமூகத்தின் விளிம்பில் சாதி, வர்க்கப்பிரிவினைகள் ஒன்றன் கீழ் ஒன்றாக இருப்பினும் பெண் எனும் பாலினம் மேற்கூறிய அனைத்துக் காரணிகளாலும் சுரண்டப்படுகின்றது. சிவ. கே.குமாரின் கவிதையான " இந்திய பெண்கள் " மதம், சாதி, பாலினப்பாகுபாடுகள் மலிந்த இந்தியாவின் முகத்தை வெளிச்சமிட்டுக் காட்டுகின்றது. வாழ்வதற்கும்,உயிரோடு இருப்பதற்கும் உள்ள வேறுபாடுகளை உணர்த்தி, நவயுக சிந்தனைகளால் நாகரிகம், பண்பாட்டின் பெயரால் இரண்டாம் குடி ஐரோப்பியர்களால் மாசுபடுத்தப்படும் கடற்கரைகளைக் கொண்ட பரந்த ஒட்டுண்ணி நாடு என்று ஆஸ்திரேலிய நாட்டைப் பெண்ணோடு ஒப்புமைப் படுத்தியுள்ளார் ஹோப் எனும் கவிஞர். பொருளாதாரத்தில் உயர்ந்த ஐரோப்பாவால் பல வகைகளிலும் ஒடுக்கப்படும் ஆஸ்திரேலியா, உலகத்தை

வீடாகவும், ஐரோப்பிய நாடுகளை உறவினர்களாகவும் எடுத்துக் கொண்டு பெண்ணோடு உருவகப்படுத்தப்பட்டுள்ளது.

பெண்களுக்கு அழகும், ஆண்களுக்கு வீரமும், மகன் உயரமாகவும், மகள் ஆர்வமூட்டும் வகையிலும் என் தேசம் முழுதும் இருக்க வேண்டும் என்பது என் ஆசை எனும் ரண்டால் ஸ்டோவின் கவிதையில் காலம் மாறாமல் பயிற்றுவிக்கப்பட்டு வரும் பாலின நேர்த்திகளும் விதிமுறைகளும் காணப்படுகின்றன. பெண்ணை அழகுடைமையாகவும், ஆணை வீரத்தின் விளை நிலமாகவும், உயரம், திறமை ஆகிய உடல் சார், உளவியல் சார் பகுப்புகளிலும் அறிவியலுக்கு மாறான பார்வைகளால் பெண்ணுடலுக்கு நிகழ்த்தப்படும் அத்துமீறல் ஆஸ்திரேலியா நாட்டு கவிதையில் பதிவாகியுள்ளது.புனிதச் சடங்குகள், பாலின மையமாகிய ஆண்களுக்குச் சொந்தமாகிவிட்டன என்றும் உணவு சேகரித்து குழந்தைகளைச் சுமந்து வளர்ப்பது பெண்களுக்குச் சொந்தமாகிவிட்ட கடமை என்றும் கூறும் "இரு சகோதரிகள்" எனும் கவிதையில் சமூகத்தின் பெரும் பிழையாகிய பாலின சமத்துவனமின்மை வெளிப்படுத்தப்படுகின்றது. மேற்கத்திய நாடுகளில் பெண்கள் சுதந்திரமும், ஆண்களுக்கு நிகராக சம படிநிலையைச் சமூகத்தில் பெற்றுள்ளனர் எனும் மாயை இக்கவிதையால் உடைபடுகின்றது.

மேற்கத்திய, கீழைத்தேய நாடுகளுக்கு இடையில் பல வேறுபாடுகள் இருப்பினும் பாலின சமத்துவமின்மை எனும் அநீதியை உலகம் பங்கிட்டுக் கொள்கின்றது. செலவழிக்க வழி தெரியாமல் உன் நாட்டு செல்வங்களையெல்லாம் சுமந்து கொண்டு நீ என் நாட்டுக்கு வருகிறாய், எங்கள் நாட்டு பெண்களைக் கவர்ந்து இழுக்கின்றாய், நாங்கள் உயிர் வாழ உன் பணம் தேவைப் படுகின்றது. எங்களின் கரவற்றமையை ஊழல் செய்கிறாய். உனது சொந்த நாட்டுக்கு திரும்பிச் சென்று எங்கள் ஊர் அரசியலை இகழ்கிறாய். மீண்டும் எங்கள் ஊருக்கு விடுமுறைக்கு வருகிறாய் என்று சுற்றுலாவுக்காக தங்கள் ஊருக்கு வந்து செல்லும் 19 பில்லியன் மக்களைக் கேள்வி கேட்கின்றது, "சிங்கப்பூர் காண வந்தோனுக்கு" எனும் கவிதை. ட்ரான்ஸ்பெரன்சி இன்டர்நேஷனல் எனும் அமைப்பு மூலம் தொடர்ந்து ஆசியாவிலே ஊழல் குறைந்த நாடு என்றும் உலகின் முதல் பத்து தூய்மையான நாடுகளில் ஒன்று என்றும் மதிப்பிடப்பட்டுள்ள சிங்கப்பூரின் இக்கவிதை மூலம் கிழக்காசியாவில் சுற்றுலா தளமாய் விளங்கும் நாடுகளில் கொட்டப்படும் மேலை நாட்டு கழிவுகளின் துர்நாற்றத்தை இக்கவிதை உணர்த்துகின்றது. அதிகாரத்தால் நிகழ்த்தப்படும் அரசியல் இவ்வுலகம் முழுதும் பெண்ணுடலை மையமிட்ட ஒன்றாகவே காணப்படுகின்றது. சமரசங்களின்றி பெண் சுரண்டப்பட்டுக் கொண்டே இருப்பதை சிங்கப்பூர் நாட்டு கவிதைகள் உணர்த்துகின்றன.

ஒரு மனிதனுக்கு கவிதையும், காப்பி இடைவேளையும் வெண் படுக்கையும் ஒரு பெண்ணும் எப்போதும் தேவைப்படுகின்றாள் என்கிறது "பன்றித் தீவு மடல்கள்"எனும் நியூசிலாந்து நாட்டு கவிதை. ஓர் ஆண் தனது உளம் மட்டும் உடல் தொடர்பான தேவைகள் அனைத்திற்கும் பெண்ணைச் சார்ந்து நின்று அவள் உலகத்தை உருகுலைக்கின்றான். தனது வேட்கைகளை நிறைக்கும் பாத்திரமாகவே அவன் பெண்ணுடலை அணுகுகின்றான்.இயற்கை பிரிவாகிய பால் பகுப்பு சரியாக இருந்தாலும், சமூகத்தின் படி நிலைகள் பெண்ணை மையமிடாமல் இயங்குவது அபத்தம். கற்பின் பெயராலே என்னை வாங்கவும் விற்கவும்

செய்தாய். உன் சுமையைக் குறைக்க என்னை மணம் செய்து அனுப்பினாய்.

கற்பு, தாய்மை, நம்பிக்கை ஆகியவற்றின் பெயரால் வியாபாரம் செய்யப்பட்ட பொருள் நான். சுவரொட்டியில் அரை நிர்வாணமாய்க் காலுறைகளும்,காலணிகளும் விற்க நிற்கும் பெண் நான் அல்ல, மாறாக நான் சுதந்திரமாய் மலர்ந்து விட்டேன் என்று உரக்கச் சொல்கிறது, "நான் அந்தப் பெண் அல்ல" எனும் பாகிஸ்தானிய கவிதை. மரபு, பழக்கவழக்கம் ஆகியவற்றின் பெயரால் பறிக்கப்படும் பெண்களின் சுதந்திரமும்,விற்பனைப் பொருட்களின் முகமாய் ஒரு பெண்ணுடல் சித்தரிக்கப்படும் அவலமும், நுகர்வோராக ஆணும், சந்தைப்பொருளாகப் பெண்ணும் அணுகப்படும் இச்சமூகத்தின் கோர முகத்தை உலக நாடுகள் முழுதும் காணலாம் எனும் மெய், இக்கவிதைகள் மூலம் அறியலாகிறது.

**மையத்தை கலைக்கும் விளிம்பின் குரல்**

கலை கலைக்காகவே எனும் கொள்கையைக் கட்டுடைத்து விளிம்பு நிலை மக்களின் வாழ்வியலைப் பேசும் ஆயுதமாகவும் இலக்கியம் இயங்கி வரும் பாங்கினை இக்கவிதைகள் வழியாக அறியலாம். மதம், சாதி, வர்க்கம், பாலினம், நிறம்,உடல் ஆகியவற்றால் நெருக்கப்படும் பெண் வாழ்வை வெளிப்படுத்தி, பெண்ணுக்கு எதிரான சமத்துவமின்மையை இவ்வுலகம் கண்டுகொள்ள மறுக்கும் அரசியலைக் கேள்வி கேட்கின்றன இக்கவிதைகள். காலனி நாடுகளின் கூட்டமைவாய் இருப்பினும் தங்களுக்குரிய அரசியல், நிலவியல், மொழியியல் கூறுகளில் வேறுபட்டாலும் அந்நிய நாடாகிய பிரிட்டனிடம் இருந்து பெற்ற விடுதலையை இன்னும் தங்கள் சொந்த நாட்டு பிற்போக்கு அணுகுமுறைகளிடம் இருந்து பெறாத பெண் பாலினம், வன்முறைக்கு உள்ளாக்கப்படும் முறைமையும் அதற்கு எவ்வகையிலும் பதில் கூறாத உணர்வற்ற அமைப்பு மட்டுமே காமன்வெல்த் என்பதையும் இக்கவிதைகள் உணர்த்துகின்றன.

**மதிப்புரை:**

விளிம்பு நிலை மக்களின் வாழ்க்கைத் தரம் மேம்படவும், சமூகத்தின் மையப் பிடியிலிருந்து விடுபட்டு பெண்கள் முன்னோக்கிச் செல்லவும், காமன்வெல்த் நாடுகளின் தனிப்பட்ட அரசியல் வழி செய்யவில்லை என்பது வெள்ளிடைமலை. பிரிட்டானிய காலனி ஆதிக்கத்தின் குறியீடாகிய ஆங்கில மொழி, காமன்வெல்த் நாடுகளின் இணைப்புச் சங்கிலியாக இருப்பினும் தங்கள் நாட்டு குரலற்ற மனிதர்களின் உயிரொலியாகப் பிராந்திய மொழி இலக்கியம் திகழும் திறத்தை இக்கவிதைகள் வெளிப்படுத்துகின்றன. பேரரசு மையத்திலிருந்து விடுதலை அடைந்து ஆண்டுகள் பல கடந்தாலும், பாலின சமத்துவத்தை முன் மொழிவதே சமூக விடுதலை. புறம் நின்று உரக்க ஒலிக்கும் விளிம்பின் குரல், மையத்தை கட்டுடைத்து சமூக அடுக்குகளைச் சுத்திகரிக்க, சம பாலின உரிமைக் கோரி பரிதவிக்கும் கடைசி காலமாக இந்நூற்றாண்டு அமைய, கல்வியும்,பொருளாதார முன்னேற்றமும், அரசியல் தெளிவும், குடும்பங்களில் இருந்து தொடங்க, எதிர் காலச் சமூகம், புறக்கணிக்கப்படும் விளிம்பு நிலையாகிய பெண்பால் மீது வெளிச்சம் பாயச்சுவதே சமூக விடுதலை.மானுடத்தின் மெய் நிகர் விடுதலையும் அதுவே.

# தமிழ்ப்புனைவில் பெண்விடுதலைக்கான முதல் குரல்:முத்துமீனாட்சி

ஜெ.சுடர்விழி,
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
சென்னைக்கிறித்தவக் கல்லூரி,

*பிரதாப முதலியார் சரித்திரம்(1879-மாயூரம் வேதநாயகம் பிள்ளை), கமலாம்பாள் சரித்திரம் (1896-இராஜமையர்), பத்மாவதி சரித்திரம்(1898-அ.மாதவையா) ஆகிய நூல்களைத் தமிழின் முதல் மூன்று நாவல்கள் என்று தமிழிலக்கிய வரலாறு வரிசைப்படுத்தும். பத்மாவதி சரித்திரம் எழுதியதன் மூலம் தமிழின் மூன்றாவது நாவலாசிரியர் என்று மட்டுமே அறியப்பெறும் அ.மாதவையா சிறுகதை, கவிதை, கட்டுரை, நாடகம், மொழிபெயர்ப்பு, வரலாறு, சிறுவர் இலக்கியம், இதழியல் என்று எழுத்தின் பல்வேறு தளங்களில் இயங்கியவர். பத்மாவதி சரித்திரம் மட்டுமல்லாமல் முத்து மீனாட்சி, விஜயமார்த்தாண்டம் ஆகிய தமிழ் நாவல்களையும் சத்தியானந்தன், தில்லை கோவிந்தன், கிளாரிந்தா, லெப்டினன்ட் பஞ்சு ஆகிய ஆங்கில நாவல்களையும் குசிகர் குட்டிக்கதைகள் என்கிற தலைப்பில் சிறுகதைகளையும் உதயலன், திருமலை சேதுபதி, ராஜ மார்த்தாண்டம், பாரிஸ்டர் பஞ்சநதம் ஆகிய நாடகங்களையும் சித்தார்த்தன் (தனித்தமிழில் அமைந்த புத்தர் வரலாறு), தளவாய் முதலியார் குடும்ப வரலாறு, தக்ஷிண சரித்திர வீரர்கள் ஆகிய வரலாற்று நூல்களையும் பொது தர்ம சத்கீத மஞ்சரி. இந்திய கும்மி கல்யாணப்பாட்டு ஆகிய கவிதை நூல்களையும் எழுதியுள்ளார்.பத்மாவதி சரித்திரத்திற்கு முன்பே அவர் எழுதத் தொடங்கிய சாவித்திரி சரித்திரம் என்கிற முத்து மீனாட்சியில் பெண்விடுதலைக்கான சிந்தனைகள் எவ்வாறு பதிவு செய்யப்பட்டுள்ளன என்பதை ஆராயும் நோக்கில் இக்கட்டுரை அமைகிறது.*

## சாவித்திரி சரித்திரமும் முத்துமீனாட்சியும்

திருநெல்வேலி மாவட்டத்தில் பெருங்குளம் என்னும் ஊரில் 1872 ஆகஸ்ட் 16ஆம் நாள் அப்பாவையர் என்கிற அனந்தநாராயண ஐயருக்கும் மீனாட்சி அம்மாளுக்கும் மகனாகப் பிறந்த மாதவையா, நெல்லை இந்துக் கல்லூரியில் பள்ளிக்கல்வியையும் சென்னைக் கிறித்தவக் கல்லூரியில் உயர்கல்வியையும் கற்றார். 1892 இல் பி.ஏ. படித்து முடித்த மாதவையாவின் திறமையைக் கண்டு அக்கல்லூரியிலேயே ஆசிரியப்பணி வழங்கப்பட்டுள்ளது. இப்பணிக் காலத்திலேயே அதாவது பத்மாவதி சரித்திரம் எழுதுவதற்கு முன்பே(இராஜமையர் நாவலுக்கும் முன்) 1892ஆம் ஆண்டு ஜூன் மாதம் முதல் சாவித்திரி சரித்திரம் என்ற நாவலை சாவித்திரி என்கிற புனைபெயரில் விவேகசிந்தாமணி இதழில் தொடராக எழுதி வெளியிடத் தொடங்கினார் மாதவையா. நாவலைத் தொடராக எழுதி இதழ்களில் வெளியிடும் முதல்முயற்சியாக இதுவே சொல்லப்படுகிறது. ஆறு இயல்கள் வெளிவந்த நிலையில் என்ன காரணத்தினாலோ அத்தொடர் நின்று போனது.

'சென்னையில் திருவல்லிக்கேணியில் விவேக சிந்தாமணி என்ற பத்திரிகை தொடங்கி நடத்திய ஸி.வி.சாமிநாதையரும் என் தந்தையாரும் அவரோடு கூட மாதவையாவும் ஒரே வீட்டில் குடியிருந்து வந்தார்கள். அந்த தொடர்பு காரணமாகச் சாமிநாதையர் 1892 தொடங்கி விவேகசிந்தாமணி என்ற பத்திரிகையில் சாவித்திரி சரித்திரம் நூலை எழுதத் தொடங்கினார். சில அத்தியாயங்கள் வெளிவந்தன. மாதவையாவும் சாமிநாதையரும் படபடத்த சுபாவம் உடையவர்கள். அவர்களிடையே மன வேற்றுமை தோன்றிற்று. அதோடு அந்தக் கதை நின்று போயிற்று. அதே பத்திரிகையில் சற்றே பின்னால் தொடர்ந்து வெளிவரத்தொடங்கிய கமலாம்பாள் சரித்திரத்துக்கு இந்தக் கதை காலத்தால் முற்பட்டது. ஆதலாலும் மாதவையாவை ராஜமையருக்கும் முன்னோடி என்று கூறலாம்.1 என்று குறிப்பிடும் பெ.நா அப்புசாமி.. அந்த மன வேற்றுமை எதனால் என்று கூறவில்லை.

சாவித்திரி சரித்திரம் நாவலின் முற்பகுதி பெண்கல்வியைக் குறித்து பேசுகிறது. பிற்பகுதி விதவை மறுமணத்தைக் குறித்தும் பிராமண சமூகத்தின் பகுத்தறிவுக்கொவ்வாத சடங்கு சம்பிரதாயங்களைக் கேள்வி எழுப்புவதாகவும் அமைய இருப்பதை அறிந்து அதை ஏற்றுக்கொள்ள முடியாததே அவர்களுக்கான மனவேற்றுமை உண்டாகக் காரணமாக இருந்திருக்கலாம் என்றும் யூகிக்கமுடிகிறது. 'சாவித்திரி என்ற விதவையின் துன்பங்களும் அதன் நிவிர்த்தியாக அமைந்த அவள் மறுமணமும் தான் கதையின் சாராம்சம். அக்காலக்கட்டத்தில் இது மிகப் புரட்சிகரமாகத் தோன்றியிருக்கும். இத்தகைய கதையை வெளியிடுவது தம் பத்திரிகைக்கே அபாயம் என்று கருதியே பத்திராதிபர் அதன் பிரசுரத்தை நிறுத்தியிருக்கலாம்'2 என்கிறார் காலசுப்பிரமணியம். ஆறு இயல்களோடு நின்று போன இந்த சாவித்திரி சரித்திரம் அதன் பிற்பகுதியும் எழுதி முடிக்கப்பட்டு 1903 இல் சிற்சில கதைமாந்தர் பெயர் மாற்றங்களோடு 'முத்து மீனாட்சி' என்னும் பெயர் கொண்ட நாவலாக வெளிவந்தது.

பத்தாண்டுகள் கழித்து சாவித்திரி சரித்திரம் முத்துமீனாட்சியாக வெளிவந்தபோதும் பிரச்சினை ஓயவில்லை. ஹிந்து பத்திரிகை இந்நாவலைக் கண்டித்து எழுதியது. 1924ஆம்

ஆண்டு முத்துமீனாட்சியின் இரண்டாம் பதிப்பு வெளிவந்த போது அதன் முன்னுரையில் 'இந்த நாவல் 21 ஆண்டுகளுக்கு முன் முதலில் வெளிவந்தபோது இதன் கொள்கைகளையும் வாழ்க்கை குறிக்கோளையும் ஹிந்து பத்திரிகை பழித்துக் கண்டித்து எழுதியது'3 என்று மாதவையாவே குறிப்பிட்டுள்ளார். இத்தகைய கண்டனங்களுக்கும் எதிர்ப்புகளுக்கும் அஞ்சாமல் தான் மாதவையா தொடர்ந்து எழுதியிருக்கிறார். 1892இல் விவேக சிந்தாமணியில் சாவித்திரி சரித்திரத்தை எழுதிக் கொண்டிருந்த மாதவையாவுக்கு அக்கதையை முடிப்பதற்கும் வெளியிடுவதற்குமான சூழல் மட்டும் அன்றைக்கு வாய்த்திருக்குமானால் தமிழின் இரண்டாவது நாவலாசிரியராக மாதவையாவே நின்றிருப்பார்.

## மாதவையாவின் கலகக்குரல்

பிராமண சமூகத்தில் பிறந்த மாதவையாவை பிராமணர்களே கொண்டாடாமல் போனதற்கும் அவர் எழுத்துக்களுக்கு கண்டனங்கள் வலுத்ததற்கும் என்ன காரணம்? 'நம்முடைய நாகரிகங்களுக்கெல்லாம் மூலஸ்தானமாகிய பிராமணரது ஆசார அநுஷ்டானங்களை வேண்டியவாறு சீர்திருத்துவதே என் முதற்கடமை"4 என்று பேசியதோடு அக்கருத்துகளைத் தொடர்ந்து தன் எழுத்துக்களில் ஒலிக்கச் செய்தவர். தனக்கு முந்தைய நாவலாசிரியர்கள் அதீதக் கற்பனைகளையும் அற்புதக் கதைகளையும் புகுத்தி நாவல்கள் எழுதிக் கொண்டிருந்த காலத்தில் சாதிய ஏற்றத்தாழ்வுகளும் பெண்ணடிமைத் தனங்களும் சூழ்ந்திருந்த அன்றைய நடப்பியல் சமூகத்தை அப்பட்டமாகக் காட்சிப்படுத்தியவர் விதவை மறுமணத்தைப் பற்றி யாரும் பேசவே துணியாத காலத்தில் தன் படைப்புகளில் அத்தகைய திருமணங்களை நடத்தி வைத்தவர். பிராமண சமூகத்தில் பிறந்து, இந்துமதத்தின் அடித்தளத்தையே அசைத்துப்பார்க்கக்கூடிய சாதிஒழிப்பு, காதல்திருமணம், கலப்புமணம், பெண்விடுதலை என்பவற்றையெல்லாம் தொடர்ந்து தன் படைப்புகளில் வலியுறுத்தியவர். 'சமூக சமய சீர்திருத்தம் நிகழ்ந்தால் தான் இங்கு அரசியல் விடுதலை கைகூடும்' என்பதே மாதவையாவின் அழுத்தமான நிலைப்பாடு எனலாம். நாவல் வரலாற்றாசிரியர்கள் சிட்டி, சிவபாதசுந்தரம் ஆகியோர் 'சில புரட்சிகரமான சம்பவங்களைப் புகுத்தி பிராமண சமூகத்தைச் சாடுகிறார்... தன் சொந்த சமூகத்திடம் ஏதோ வஞ்சம் தீர்ப்பவர் போல் எழுதி வந்தார்"5 என்று மாதவையாவைப் பற்றி கருத்துரைத்துள்ளனர்.

## குழந்தை மணமும் குழந்தை விதவைநிலையும்

தமிழ்ப் புனைகதைகளில் ஆணாதிக்க எதிர்ப்பை, பெண் விடுதலைக்கான குரலை ஓங்கி ஒலித்த முதல் நாவலாக முத்துமீனாட்சி விளங்குகிறது. பிராமண சமூகத்தைச் சேர்ந்த முத்து மீனாட்சி என்கிற பெண் தன் வாழ்க்கை வரலாற்றைத் தானே கூறுவது போல் அமைக்கப்பட்டுள்ள இந்நாவல் அக்கால பிராமண சமூகத்தின் குடும்பஅமைப்பு, திருமண முறை, பெண் கல்விநிலை, இளவயது திருமணங்கள், விதவைப் பெண்களின் அவலநிலை ஆகியவற்றை அறிவதற்கான ஆவணம் போல அமைவதுடன் அக்கட்டுகளிலிருந்து பெண்களை விடுவிப்பதற்கான தீர்வையும் பேசுகிறது.

இந்துக் குடும்பங்களில் குறிப்பாகப் பிராமணக் குடும்பங்களில் பெண்கள் பூப்படைவதற்கு முன்பே திருமணம் செய்து வைக்கிற வழக்கம் அன்று இருந்துள்ளது. அவ்வாறு பருவமடைவதற்குள் மனம் செய்யவில்லை என்றால் அது பெண்ணை பெற்ற குடும்பத்திற்குப் பெரும் இழுக்காகக் கருதப்பட்டுள்ளது. பெண் குழந்தை பிறந்தவுடனேயே யாருடன் திருமணம் என்பதை முடிவெடுத்து விடுகிற அன்றைய சமூக வழக்கத்தை 'அந்தோ தாயார் இன்னார் என்று அறியாப்பெண்ணுக்கு மாப்பிள்ளை தயாராயிருந்தாள்' என்று பகடி செய்கிறார் மாதவையா.

குழந்தைத் திருமணங்களைத் தடுக்கும் வகையில் 1891 ஆம் ஆண்டு சட்ட முன்வரைவாக ஆங்கில அரசால் முன்வைக்கப்பட்டு 1929 செப்டம்பர் மாதம் சார்தா சட்டம் நிறைவேற்றப்பட்டது. சட்டம் முன் வடிவாக வைத்த காலகட்டத்தில் 'இந்து மதத்தின் அடிப்படைக் கூறுகளில் எல்லாம் கைவைப்பதற்கு வெள்ளைக்காரர்களுக்கு எந்த உரிமையும் இல்லை என வெகுண்டெழுந்தனர் பிராமணர்கள். இக்கருத்துக்கு இந்தியா முழுதும் இருந்த இந்துக்களிடையே பேராதரவு கிடைத்தது. பருவம் வந்து திருமணம் செய்தால் எங்கே சாதி மீறிப் போய் விடுவார்களோ என்ற அச்சமே இதற்கு காரணம். 'பூப்படையாத பெண்களுக்குத் திருமணம் செய்தால் சிறைத் தண்டனை என்கிறது உங்கள் அரசு. பூப்படைவதற்குள் திருமணம் செய்யவில்லை என்றால் நரகத்திற்கு போவீர்கள் என்கிறது எங்கள் இந்து மதம் நாங்கள் என்ன செய்வது என்று பொங்கினார் ஆச்சாரியா.

இந்த விவாதங்கள் நடைபெற்றுக் கொண்டிருந்த 1890களில் தான் குழந்தைத் திருமணத்தின் அவல நிலையையும் பாலியல் வாழ்க்கை என்றால் என்னவென்று அறியாமலே விதவையாகிவிடும் குழந்தை விதவை நிலையையும் முத்து மீனாட்சியில் காட்சிப்படுத்துகிறார் மாதவையா. மேலும் குழந்தைத் திருமணம் செய்வது குறித்தோ வேறு பிற்போக்குத்தனத்துக்கு முட்டுக்கொடுக்கும் சாத்திரங்களைக் குறித்தோ முன்னோர் அனுசரித்ததை நாமும் அனுசரித்து இப்பொழுதும் அவ்வாறே ஒழுக வேண்டும் என்று கூறுவதை வன்மையாகக் கண்டிக்கிறார். அப்படியே முன்னோர் ஆசாரங்களைக் கேள்வியின்றி ஒழுகுவது **''இக்காலத்தில் உள்ள நமக்கு பிரத்தியேகமான பகுத்தறிவையும் விவேகத்தையும் தந்திருக்கும் கடவுள் மூடர் என்று கூறுவது போல் ஆகிறது. இருபுறமும் சுவரை வைத்து நடுவே இரண்டு சக்கரங்களுக்கும் ஏற்றபடி சுவட்டையும் ஆழமாய்ப் பதித்து விட்டால் பின்பு அப்பாதையில் வண்டிகளை இழுத்துச் செல்லும் எருதுகளுக்குக் கண்கள் அநாவசியமே அதென்ன நியாயம்?**'6 என்று கேள்வி எழுப்புகிறார். புனைவில் மட்டுமல்லாமல் குழந்தை மணத்திற்கு எதிராகவும் குழந்தை மணங்களால் அதிகரிக்கும் குழந்தை விதவைநிலைக்கு எதிராகவும் தொடர்ந்து செயலாற்றியிருப்பதைக் காணமுடிகிறது. 1914 ஆம் ஆண்டு ஈரோடு ஆசார சீர்திருத்த மாநாட்டில் ஆற்றிய உரையின் வெளியீட்டில் "இந்துக்களிடையே ஐந்து வயதுக்குட்பட்ட விதவைகள் 673 பேர் என்றும் இவர்களுள் ஒராண்டு நிறையாத கைக்குழந்தைகள் 31 பேர் என்றும் இரண்டு முதல் மூன்று வயதுக்குட்பட்ட விதவைகள் 85 பேர் என்றும் மூன்று முதல் நான்கு வயதுக்குட்பட்ட விதவைகள் 140 பேர் என்றும் நான்கு முதல் ஐந்து வயதுக்குட்பட்ட விதவைகள் 383 பேர் என்றும் பட்டியல் உள்ளது'7 என்று 1921 ஆம் ஆண்டு சென்னை மக்கள் தொகைக் கணக்கெடுப்பையும் சேர்த்து பதிப்பித்துள்ளார்.

## விதவை மறுமணம்

*'விதவைகள் மணம் செய்து கொள்ள கூடாதென்றிருக்கும் வழக்கம் உடன்கட்டை ஏறுவதைவிட மிகக் கொடியதாக இருக்கிறது. உடன்கட்டை ஏறுவது ஒருநாள் துன்பம். விதவையாய் வாழ்வதோ வாழ்நாள் முழுதும் தாங்கமுடியாச் சித்ரவதைக்கு ஒப்பான துன்பமாக இருந்து வருகிறது.'8 1920களில் விதவை துன்பம் குறித்து பெரியார் பேசிய கருத்துகளை 1890களிலேயே மாதவையா பதிவு செய்கிறார். நாவலில் ஒவ்வொரு வீட்டிலும் இரண்டு அல்லது மூன்று இளம்விதவைகளைக் காட்டுகிறார். ஆணாதிக்கச் சிந்தனைகளாலும் சாத்திரங்களாலும் கட்டுண்ட மாமியார் விதவைகளும் நாத்தனார் விதவைகளும் கணவனை இழந்து நிற்கும் மருமகளுக்குச் செய்யும் கொடுமைகளை மீனாட்சி கூற்றாகவே அறியத் தருகிறார்.*

**'வெளியில் யார் கண்ணுக்கும் தென்பட கூடாதாகையால் விடியற்காலம் மூன்று மணிக்கே எழுந்து வீட்டையும் பாத்திரங்களை எல்லாம் கொல்லைப்புற வாய்க்கால் நீரால் நிரப்பிப் பின்பு இரவு படுத்துக்கொள்ளும் வரையும் வீட்டிற்குள் உள்ள வேலைகளை எல்லாம் செய்து வந்தேன். வீட்டு முன் வாசலைச் சுத்தம் செய்து கோலமிடுவதும் என் மைத்துனருக்கு அன்னமிடுவதும் தவிர மற்ற வேலை எல்லாம் பெரும்பாலும் நானே செய்ய வேண்டியதாயிற்று....வீட்டில் யார் சாப்பிடினும் இலை எடுத்து எச்சிலைச் சுத்தம் செய்வது என் சுதந்திரம். சாணியினால் வீடு மெழுக்கிடுவதும் மாட்டுக்கொட்டிலைச் சுத்தம் செய்வதும் அப்படியே. தினமும் என் மாமி களைந்த வஸ்திரத்தையும் குழந்தைகள் துணிகளையும் அநேக நாட்களில் யாதாயினும் ஒரு காரணம் பற்றி மற்றவர் வஸ்திரங்களையும் துவைத்து உலர்த்துவதும் என் சுதந்திரமே. தோசை அடை வடை சுளியன் முதலியவற்றை நான் உட்கொள்வது மட்டும் தோஷமே அன்றி எவ்வளவாயினும் அவற்றிற்கு மாவரைப்பது எல்லாம் நானே.**

**வீட்டில் எவருக்கு எவ்வித நோய் வரினும் வயல் சரியானபடி விளையவிடினும் பசுமாடு கடாரி இன்றி காளையை ஈனினாலும் புருஷர் வெளியே சென்ற காரியம் எது விக்கினமானாலும் குடும்பத்துக்கு எவ்வளவு அற்பமான விபத்து நேர்ந்தாலும் என்னையே எல்லாவற்றிற்கும் காரணமாக்கி இந்த கரிமுண்டை வீட்டிற்குள் கால் எடுத்து வைத்த நாள் முதல் இப்படித்தான் இந்தச் சனியன் எப்பொழுது தொலையுமோ''** *9*

*தன் கதைத்தலைவி வாயிலாக விதவைப்பெண்கள் படும் அல்லல்களைப் பதிவு செய்வதோடு அவற்றிலிருந்து மீண்டு மகிழ்ச்சியாக வாழ அவளுக்கு மறுமணமும் செய்து வைக்கிறார். மாதவையா. ஆங்கிலக் கல்வி கற்று பட்டம் பெற்ற சுந்தரேசன் என்னும் பிராமண இளைஞன் அவள் விதவை என்று தெரிந்தும் திருமணம் செய்து கொள்கிறான். அவளைத் திருமணம் செய்து கொண்டால் இச்சமூகமும் உறவுகளும் தன்னை ஒதுக்கும் என்று அறிந்த போதும் அவளைக் காதலித்துத் திருமணம் செய்கிறான். அவன் நினைத்தது போலவே அக்ரகாரத்தில் அவர்களுக்கு வீடு கொடுக்கப்படவில்லை. அதிக குடிக்கூலி கொடுத்து பின்னர் வீடு கிடைத்த பின்பும் மற்றவர்களுக்கு விற்கப்படும் எந்தப் பொருளும் அவர்களுக்கு கிடைக்கவில்லை. பிறந்த இரண்டாம் மாதத்திலேயே ஒரு பெண் குழந்தை இறந்து போய்விட ஒருவரும் வீட்டிற்கு வரவில்லை உடன் பிறந்தவர்களும் வீட்டு விசேஷங்களுக்கு வருவதில்லை. இப்படி அவர்கள் முற்றாகச் சமூகத்திலிருந்து ஒதுக்கி வைக்கப்படுகின்றனர். இந்தச் சமூக நடப்பியலை அச்சுஅசலாகக் காட்சிப்படுத்துவதுடன்*

*இத்தகைய பிற்போக்குத்தனத்திலிருந்து மக்கள் மனமாற்றம் பெற வேண்டும் என்கிற தன் கோரிக்கையைக் கதைத் தலைவன் வாயிலாகவே மாதவையா பேசுகிறார்.*

**ஒரு புருஷன் ஏக காலத்தில் இரண்டு ஸ்திரீகளைப் பெண்டாகக் கொண்டிருக்கிறானே. அதெப்படி? அதில்லாவிட்டாலும் எல்லா விதவைகளும் கல்யாணம் செய்து கொண்டே தீர வேண்டும் என்று சட்டத்தை ஒருவரும் கோரவில்லையே. அவரவர் இஷ்டம் போல் நடக்க இடம் தர வேண்டும் என்று மாத்திரமே கேட்கிறோம். ...உண்பதையும் உடுப்பதையும் உறங்குவதையும் சகல கிருத்தியங்களையும் மதத்தோடு கலந்தே நாம் பாழாகிறோம்.... இவ்வித சாதிக்கட்டும் பழைய ஆச்சாரங்களும் இந்தக் காலத்தில் எத்தனை நாள் செல்லும்? இதை மட்டும் உறுதியாகக் கொள். நம்முடைய பெரியவர்கள் கூடி மதத்தையும் மற்றவைகளையும் பிரித்தாலன்றி நாம் ஒருநாளும் முன்னுக்கு வர மாட்டோம் நமக்குள் இருப்பது போன்ற சாதிக்கட்டு வேறு எத்தேசத்திலும் இல்லை நம்மை போல் புருஷர் புத்திசாலிகளாக இருக்கும் எத்தேசத்திலும் பெண்கள் இவ்வளவு ஜடங்களாக இல்லை நமக்குள்ளும் இவையெல்லாம் மாறும் காலம் நெருங்கி விட்டது**''10

*மதத்தோடு சாதியையும் சாதியோடு நம் அன்றாட வாழ்வியலையும் பிணைத்துக் கொண்டிருப்பதால் தான் நாம் முன்னேற்றம் அடையாமல் இருக்கிறோம் என்கிற ஆதங்கத்தை மட்டுமல்ல அதனால் தான் இங்குப் பலரும் இந்துமதத்தை விட்டு கிறித்தவ மதத்தைத் தழுவுகிறார்கள் என்றும் இப்படியே போனால் எல்லாரும் கிறித்தவர்களாகிவிடுவார்கள் என்றும் எச்சரிக்கை விடுக்கிறார். "விதவை மறுமணத்தை ஆதரித்து எழுதப்பட்ட அக்கால இந்திய நாவல்களில் முக்கியமானது இது. பெண்கள் பிரச்சனை பற்றிய முன்னோடி வட இந்திய நாவல்களிலும் சரி இந்திராபாய் (கன்னடம்) இந்துலேகா (மலையாளம்) ஆகிய தென்னிந்திய நாவல்களிலும் சரி முத்து மீனாட்சி தன்மைக் கூற்றில் எழுதப்பட்டு பெண் பிரச்சினைகளை யாரும் சொல்லாத வகையில் சொல்லும் விதத்தில் தனித்து நிற்கிறது என்பதை விமர்சகர்கள் ஏற்றுக் கொள்கிறார்கள்'11 என்ற அளவில் விதவை மறுமணம் குறித்து பேசிய முதல் நாவலாக, முக்கிய நாவலாக மதிப்பிடப்பட்டுள்ளது.*

## பெண்கல்வி

*"பெண்கள் படிப்பதை நான் அப்போது பார்த்ததில்லை" என்று நாவலின் தொடக்கத்தில் மீனாட்சி பேசுவது தான் அக்காலக்கட்டத்துப் பெண்களுக்கான கல்விச்சூழல். பெண்களைப் படிக்க வைத்தால் அவர்கள் கடிதம் மூலமாய் சோரநாயகர்களைத் தேடுவார்கள் என்றும் தங்கள் கணவர்களுக்குக் கீழ்ப்படிந்து நடக்க மாட்டார்கள் என்றும் வீட்டு வேலை செய்ய மாட்டார்கள் என்றும் உத்தியோகம் செய்ய போகாதவர்களுக்குப் படிப்பு அவசியம் இல்லை என்றெல்லாம் கணபதி என்கிற சிறுவன் சிறுவர் சங்கத்தில் பேசியதாக மாதவையா காட்டும் மனநிலை தான் அக்காலக்கட்டத்தில் பெண்கல்வியைக் குறித்து ஆண்களின் மனநிலையாக இருந்தது. சுந்தரேசன் வழியாக இக்கருத்துகளுக்கு மறுப்புரையை மட்டுமல்ல பெண்கள் படிக்க வேண்டியதன் அவசியத்தையும் மாதவையா வலியுறுத்துகிறார்.*

**'நம்முடைய பாட்டிமார்கள் படிக்கவில்லை என்றும் கற்றிருந்தால் சோர நாயகர்களைத் தேடுவார்கள் என்பது வீண்பேச்சு. தங்கள் நாயகர்கள் மேல் இஷ்டமில்லாப் பெண்கள் மூடர்களாயிருந்தால் ஒரு வேளை வேறு புருஷர்களைத் தேடுவார்கள் ஆனால் சரியாய்க் கற்றுணர்ந்தவர்கள் ஒருபொழுதும் அப்படிச்**

**செய்யமாட்டார்கள். கல்வியும் நாணத்தைப் போல் ஒரு கவசமாய் விடும். அன்றியும் எழுதத் தெரியாத ஒரு குறையினால் மாத்திரம் வேறு நாயகனைத் தேடாமலிருக்கும் மனைவி இருந்தென்ன? இறந்தென்ன? அது வீண் முகாந்தரமே... கல்வி பணம் சம்பாதிக்கும் பொருட்டுதான் என்பது மூடத்தனம். கல்வி பணத்திலும் சிறந்தது அல்லவா அன்றியும் புத்திரர்கள் சிறந்த புத்தி உள்ளவர்களாக இருக்கவேண்டுமாயின் தாய் தந்தையர்களும் அப்படி இருந்தாலன்றோ சரி? சரி பாறையின் பேரில் நெல் விளையுமோ உழுது உரமிடப்பட்ட நிலமன்றோ வேண்டும்?'12 பிற்காலத்தில் பாரதிதாசன் பெண்கல்விக்கு''கல்வியில்லாத பெண்கள் களர்நிலம். அந்நிலத்தில் புல்விளைந்திடலாம்; நல்ல புதல்வர்கள் விளைவதில்லை''**என்று பாடிய பாடல்வரிகளுக்கு வித்தாக இக்கருத்துகள் அமைந்துள்ளதைக் காணலாம்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் தமிழ்ச்சூழலில் மிக முக்கிய மாற்றங்கள் நடைபெற்றுக் கொண்டிருந்த காலக்கட்டத்தில் மேற்கத்திய நவீன சிந்தனைகளால் தாக்கம் பெற்று அறிவியக்கச் செயல்பாடுகள் அங்கொன்றும் இங்கொன்றுமாக நிகழ்ந்து கொண்டிருந்த நிலையில் தன் எழுத்தையே வலிமையான ஆயுதமாகக் கொண்டு முற்போக்குக் கருத்துகளை மிக ஆழமாகத் தன் படைப்புகளில் வெளிப்படுத்தினார். தம் மக்கள் மனங்களில் இறுகிக்கிடந்த சனாதனத்தின் இருண்மைகளை வெளிச்சப்படுத்திய அறிவுச் சுடராகவும் சாதிஒழிப்புப் போராளியாகவும் பெண்ணுரிமைக் குரலாகவும் சொந்த சமூகத்தின் பகையைத் தேடிக் கொண்டபோதும் பின்வாங்காத கொள்கைப் பற்றாளராகவும் வாழ்ந்தவர்..

'மிகப் பல தலைமுறைகளாக ஒரே பழஞ்சுவட்டில் சுற்றி வந்து கொண்டிருந்த நமது ஜன சமூகவாழ்க்கைப் பெருந்தேரானது இவ்வண்ணம் புதுச்சுவடுகள் பற்றிப் புதியதோர் கிளர்ச்சியோடு நாளுக்கு நாள் முன்னேற்றம் அடைந்து வரும் புத்தியக்கத்துக்கு, நானுமே ஒரு சிறு தூண்டுகோல் என நம்பி, என் மனம் மகிழ்கின்றது'13 தான் இறப்பதற்கு முந்தைய ஆண்டில் அ.மாதவையா எழுதிய வரிகள் இவை. தன் முப்பது ஆண்டுகால எழுத்தின் மூலம் இச்சமூகத்தின் கெட்டித்தட்டிப் போன பழமைவாதச் சிந்தனைகளில் ஒரு சிறு அதிர்வையேனும் ஏற்படுத்தியிருக்கிறோம் என்கிற பெருமித உணர்வோடு அவர் தொடங்கி வைத்த பெண்விடுதலைக்கான கருத்தியல் இன்று பெருமாற்றத்திற்கு வித்திட்டிருக்கிறது என்பதில் மாற்றுக் கருத்தில்லை.

# அற இலக்கியங்களில் பெண்கள் நிலை

முனைவர் ரா.பரிமளா
உதவிப்பேராசிரியர்தமிழ்த்துறை,
பான் செக்கர்ஸ் மகளிர் கல்லூரி, தஞ்சாவூர்.

## முன்னுரை

ஒரு சமுதாயத்தின் உயர்வு தாழ்வும் அச்சமுதாயத்தில் வாழ்கின்ற பெண்களின் வளர்ச்சியினைப் பொறுத்து அமைகின்றது. தொன்மைக் காலத்தில் பெண்களுக்கு உயர்ந்த இடம் அளிக்கப்பட்டிருந்தது எனலாம். அவர்களது வாழ்க்கை மதிப்பு மரியாதையும் நிறைந்து இருந்தது. தாய், தாய்நாடு, தாய்மொழி எனவும் தெய்வம் என்ற நிலையிலும் பெண்கள் முதன்மைப் படுத்தப்பட்டது என்பதை எண்ணுவதற்கு உரியது.

சங்க காலத்தில் பெண்கள் நிலை, சங்க காலத்தில் பெண்கள் கல்வி, கலைகளைப் பயில்வதில் ஆர்வம் செலுத்தி பண்பட்ட இல்லத்தரசிகளாக விளங்கினர் என்பதை

**''வினையே ஆடவர்க்கு உயிரே வானுதல்**
**மனையுறை மகளிர்க்கு ஆடவர் உயிர்''** (குறுந்.135)

என்ற குறுந்தொகைப் பாடல் அடிகளால் அறியலாம். பெண்கள் முழுமையானச் சுதந்திரம் பெற்றவர்களாக ஆண்களுக்கு நிகராக அரசியலறிவுப் பெற்றிருந்தனர். அக்காலத்தில் ஆண், பெண் ஏற்றத்தாழ்வுகள் அதிகம் இல்லை. நாளையடைவில் குறிப்பிட்டச் சில கடமைகளை அவரவர்களுக்கு உரியதாக்கியதன் காரணமாக ஆண், பெண் வேறுபாடுகள் தோன்றிருக்க வேண்டுமென்பதை அறியமுடிகிறது.

## அற இலக்கியத்தில் பெண்கள் நிலை

அயலவர் படையெடுப்பு, ஆட்சி மாற்றம், பொருளாதார ஏற்றத்தாழ்வு, தான் உயர்ந்தவன் என்ற தனிமனித நிலை பெண்களுக்குறிய அமைதிப்போக்கு போன்ற காரணங்களால் அற இலக்கியங்களில் பெண்கள் மாறுப்பட்டச் சூழலைக் காண

முடிகின்றது. சங்க காலத்தில் பெண்கள் மனையற மாண்புகளைப் பெற்றவர்களாக விளங்கினர். விருந்தோம்பல், மக்கட்பேறு, கணவனைப் பேணுதல் சுற்றம் ஒம்புதல் போன்ற இல்லறக் கடைமைகளில் சிறந்து விளங்கினர். சங்கம் மருவியகாலச் சூழலிலும் பெண்கள் இல்வாழ்க்கையைப் பேணுவதில் கவனம் செலுத்தினர். கீழ்க்கணக்கு நூல்களில் முதன்மையாக் கருதப்பெறும் திருக்குறளில் வாழ்க்கைத் துணைநலம் என்ற அதிகாரம் நல்ல மனைவிக்குறியச் சிறப்புகளைச் சுட்டுகின்றது. இல்வாழ்க்கையை மங்கலமாக அமைப்பதில் பெண்கள் முதன்மையிடம் பெறுகின்றனர். இங்கு ‘ நன்மக்கட்பேறு’ போன்ற நலன்களையும் பண்புகளையும் செயல் திறமைகளையும் ஒடுங்கக் கொண்டு இல்வாழ்க்கைக்கு துணையாகத் திகழும் பெண்ணின் நிறையுடைமையே பெண்மை என்கிறார் திருவள்ளுவர்.

மனைக்கு விளக்கு போன்றவர்கள் பெண்களென்று நான்மணிக்கடிகைக் கூறுகின்றது. அவர்களைப் பொன்னைக் காப்பது போலப் பாதுகாத்திட வேண்டும். பெண்ணின் பெருமையை,

**’’பெண்ணின் பெருந்தக்க யாவுள கற்பென்னும்**
**திண்மை யுண்டாகப் பெறின்’’** (குறள். 54)

கற்பென்னும் மனஉறுதி வேண்டும் என்பதைத் திருக்குறள் வலியுறுத்திக் கூறுகின்றது. தற்காத்துக்கொள்ளும் பெருமையும் பெண்களுக்கு வேண்டுமென்பதைத் திருக்குறள் சுட்டுகின்றது. நற்குண நற்செயல்கள் இல்லாதப் பெண்கள் உள்ள வீடு பாழ்பட்டு போய்விடுமென்பதை,

**’’மனைக்குப்பாழ் வானுதல் இன்மை, தான்சொல்லும்**
**திசைக்குப்பாழ் நட்டோரை இன்மை, இருந்த**
**அவைக்குப்பாழ், மூத்தோரை இன்மை தனக்குப்பாழ்**
**கற்றறிவு இல்லா உடம்பு’’** (நான்மணி. 22 )

என்ற நான்மணிக்கடிகைப் பாடல் விளக்குகின்றது. பெண்கள் இயல்பாக மென்மையானவர்கள் நல்ல குலத்தில் தோன்றிய பெண்கள் தங்கள் அழகு வெளிப்படும் படியாக அலங்கரித்துக் கொள்ள மாட்டார்கள் என்று,

**’’கோடு ஏந்து அகல் அல்குல் பெண்டிர் தம் பெண் நீர்மை**
**சேடியர் போலச் செயல் தேற்றார், கூடி**
**புதுப்பெருக்கம் போலத் தம்பெண் நீர்மை காட்டி**
**மதித்து இறப்பர் மற்றையவர்.’’** (நாலடி. 354)

இங்ஙனம் நாலடியார் பாடல் ஒன்று பெண்களின் உயர்நிலையைச் சுட்டிக் காட்டுகின்றது. பெண்ணைக்காட்டிலும் மென்மையான பிறப்பு எதுவும் இல்லை என்ற கருத்தும் எண்ணத்தக்கது.

**கற்பு**

கற்பு என்பது பெண்களுக்கு இன்றியமையாதாகக் கருதப்பட்டது. கற்பை முதன்மைபடுத்தி அனுசபயை, அகலிகை, சீதை போன்ற புராணப் பாத்திரங்கள் அமைந்திருப்பதை அறியலாம். ஆனால் இருபதாம் நூற்றாண்டில் வாழ்ந்த பாரதி,

**கற்பு நிலை என்று சொல்ல வந்தால்- இரு**
**கட்சிக்கும் அஃது பொதுவில் வைப்போம்** (பாரதி.கவி. பக்.183)

கற்பு நிலையைப் பற்றி ஆணுக்கும், பெண்ணுக்கும் பொதுவானது எனக் குறிப்பிட்டுள்ளார்.

**உயிரினும் சிறந்தன்று நாணே நாணினும்**
**செயிர்தீர் காட்சி கற்புச் சிறந்தன்று** (தொல். பொருள். 23 )

என்றும் கற்பின் சிறப்பினை விளக்குகின்றது. புராணங்களில் கற்புடையப் பெண்களின் உயர்வினைச் சித்தரித்துக் காட்டுதை நன்கு உணர முடிகின்றது. கற்புடையப் பெண்களால் மழையைப் பெய்விக்க முடியுமென்பதை,

**தெய்வம் தொழஅள் கொழுநன் தொழுதெழுவாள்**
**பெய்யெனப் பெய்யும் மழை''** (குறள். 55)

திருவள்ளுவர் குறிப்பிடுகின்றார். நான்கு சுவர்கள் இடிந்து மழை பெய்தால் ஒழுகும் கூரைவேய்ந்த மிகச் சிறிய வீடாக இருந்தாலும், எல்லாவற்றையும் பொறுத்துக் கொண்டு வாழும் மனவலிமையும் ஊர்மக்கள் போற்றிப் புகழும் கற்பு நெறியுடைய மனைவி இருக்கிற வீட்டிற்குத் தான் வீடு என்று பெயர் வழங்கப்பட்டது. தன் கணவரின் வளத்திற்குத் தகுந்தபடித் துணையாக நடப்பவளே சிறந்த மனைவியாவாள் என்பது திருக்குறள் கருத்தாகும். பெண்களுக்குரிய பண்புகளை,

**''செறிவும் நிறைவும் செம்மையும் செப்பும்**
**அறிவும் அருமையும் பெண்பாலான''** (தொல். பொருள். 23)

தொல்காப்பியம் சுட்டுகிறது. கற்புடைய பெண்களின் குணங்களைப் பற்றி (நாலடி.384) நல்ல அழகுடையவளாக கணவன் மகிழ்வதற்க்கேற்ப ஆடை அணிகலன் புனைந்து கொண்டு அச்சமும் நாணமும் உடையவளாக ஊரார் பழிக்கு அஞ்சுபவளாக காலம் அறிந்து ஊடல் செய்பவளாக இருப்பவள் தான் பெண்களுள் பெருமைக்குறியவளாகக் கருதப்பட்டாள். நல்விருந்து ஒம்புவதால் கணவனுக்கு நட்டினளாகவும் இல்லறம் பேணுவதால் தாயாகவும் மக்களைப் பெறுவதால் மனைவியாகவும் கற்புடையப் பெண்ணாகவும் இருக்க வேண்டுமென்பதை (திரிகடுகம்.64) கூறுவதை எண்ணதக்கது. கற்புடைய மனைவி கணவனுக்கு அமிழ்தம் போன்றவளாகக் கருதப்பட்டாள். நன்மக்கட்பேறு, அடக்கம், அழகு, கணவனின் கருத்தோடு ஒத்துப்போகுதல், அவன் உண்ணும் உணவை விரும்புதல் போன்ற குணங்கள் கற்புடைய பெண்களுக்குத் தேவை என்பதைக் கூறும் சிறுபஞ்சமூலம் பாடலில்,

**மக்கட் பெறுதல் மடனுடைமை மாதுடைமை**
**ஒக்க உடனுறைதல் ஊணமைவு- தொக்க**
**அலவலை அல்லாமை பெண்மகளிர்க்கு - ஐந்து**
**தலைமகனைத் தாழ்க்கும் மருந்து''** (சிறுபஞ். 51)

தம் கணவனைத் தம்மிடத்தில் வைத்து வணங்குதல் வேண்டுமெனவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. குழந்தைகளைப் பெற்றெடுப்பதும் குடும்பத்தில் கடமைகளைச் செய்து முடிப்பதும் மட்டுமல்லாமல் வாழ்வின் இன்றியமையாத தேவைகளை நிறைவு செய்வதும் பெண்கள்தான் என்ற எண்ணம் சிந்தனைக்குறியதாகும். பெண்கள் தங்களுடைய கற்பைத் தாங்கள் காப்பாற்றிக் கொள்ள வேண்டுமென்பதைத் திருக்குறளும், பழமொழி நானூறும் குறிப்பிடுகின்றன. கற்புடையவளை மனைவியாய் பெற்றவன் இறவாத புகழைப் பெறுவதை திரிகடுகம் கூறுகிறது. கற்புநெறி தவறிய மனைவி கணவனுக்கு எமனாகக் கருதப்பெறுவதும் (நான்மணி. 85) எண்ணத்தக்கது. கற்பு என்னும் வட்டத்திற்குள் பெண்கள் வாழ்ந்திருந்தனர் என்பதை அறிய முடிகிறது.

### பிறப்புரிமை

இல்வாழ்க்கையின் சிறந்த செல்வமாக மக்கட் பேறு கருதப்பட்டது. நன்மக்கட் பேறினால்தான் இல்லறம் மங்கலமாக அமைகிறது. குன்றில் உறையும் குமரக்கடவுளை வேண்டிப் பெண்மகள் ஒன்றைப் பெற்றெடுத்ததாகக் கீழ்காணும் ஐங்குநுறூற்றுப் பாடல் வரிகள் உணர்த்துகின்றது.

**''குன்றக் குறவன் கடவுள் பேணி**
**இரந்தனன் பெற்ற எல்வளைக் குறுமகள்'**

அற இலக்கியங்களில் பெண் குழந்தையை விரும்பிப் பெற்றதாகக் குறிப்பு இல்லை. மாறாக பெண்ணாகப் பிறப்பது பாவமென்றும் ஆண் குழந்தையைப் பெற்றால்தான் பெண்ணின் பாவம் நீங்கும் என்றும் கருதப்பட்டது. பெண் பிறவி தாழ்ந்த பிறவி என்பதும் பாவம் செய்தவர்கள் பெண்ணாகப் பிறக்கிறார்கள் என்பதும் சமண சமயக் கொள்கை. பெண்ணாகப் பிறந்தவர் வீடுபேறு அடைய முடியாது என்பதும் சமண சமயத் துணிவு ஆகும். முற்றவாகைகளை வஞ்சித்து வாழ்பவர்கள் பெண்ணாகப் பிறவி எடுப்பார்கள் எனக் குறிப்பிட்டிருப்பதால் பிறப்பில் தாழ்வு நிலை இருந்ததை அறிய முடிகின்றது.

### சிந்தனையுரிமை

பதினெண்கீழ்க்கணக்கு நூலகள் தோன்றிய காலத்தில் பெண்களுக்குச் சிந்திக்கவும் சிந்தித்தவற்றைச் சொல்லவும் உரிமைகள் இல்லை. தன்னை மணந்து கொண்டனின் சொற்களைக் கேட்டு நடத்தல் பெண்களின் இயல்பாகக் கருதப்பட்டதை,

**''கொண்டான் வழி ஒழுகல் பெண்மகன் தந்தைக்குத்**
**தண்டான் வழிஒழுகல் தன்கிளை அஃது அண்டாதே**
**வேல்வழி வெம்முனை வீழாது மன்நாடு**
**போல்வழி வாழ்தல் குணம்''** (சிறுபஞ். 13)

சிறுபஞ்சமூலம் சுட்டிக்காட்டுகிறது.

## வளர்ப்பு உரிமை

ஆண், பெண் வளர்ப்பு முறையில் வேறுபாடு இருந்தது. ஆண் குழந்தைகள் தானாக வளர்ந்து கொள்ள முடியும் என்ற கருத்து சமுதாயத்தின் கருத்தாக இருந்து வந்தது. பெண் குழந்தைகள் தனித்து வாழும் இயல்பு இல்லாதவர்கள் என்பதால் மற்றவர்களைச் சார்ந்து வாழ வேண்டிய சார்பு நிலையை உருவாக்கினர். உணவிலும், உடையிலும் வேறுபாடு காட்டத் தொடங்கினர். இதன் வளர்ச்சி நிலை ஆண், பெண் சமத்துவமின்மைக்கு அடிப்படைக் காரணமாக அமைகின்றது. பெண்கள் தன்னுணர்வுடன் தன்னுரிமையுடன் தற்சார்புடன் வாழ அனுமதித்தல் வேண்டுமென்பதை உணரப்பெறும்.

## திருமண உரிமை

புராண காலங்களில் பெண்கள் சுயம்வரம் நிகழ்த்தித் தங்கள் கணவனைத் தேர்ந்தெடுத்தனர். சங்க காலத்திலும் பெண்களுக்கு மருவியகாலத்து நூல்களாகிய அற இலக்கியங்களில் கணவனைத் தேர்ந்தெடுக்கும் முழு உரிமையும் பெற்றோர்கள் பெற்றிருந்தனர் இளையவளை திருமணம் செய்து கொள்ளத் தருவாயாக என்று மன்னன் ஒருவன் தூது அனுப்பினான். அவளுடைய தமையன்களோ அவளைத் தருவதற்கு உடன்படாது போர்ப்பறை அறைந்து தோள்தட்டிப் போர் செய்தனர் என்று பழமொழி நானூறு குறிப்பிடுகிறது. தங்களுக்குரிய துணையைத் தேர்வு செய்யும் திருமண உரிமை மறுக்கப்பட்டிருதென்பது அறியலாம்.

## சொத்துரிமை

மனித சமுதாயம் உருவாகிக் கூட்டுச் வரம்பிற்குள் வாழந்தபோது, தாய்வழிச் சமூக அமைப்பு இருந்தது. பின் வேட்டையாடுவதைவிடப் பயிரிடுவதிலும் கால்நடை வளர்ப்பிலும் தங்களை ஈடுபடுத்திக் கொண்டனர். இத்தொழில் உற்பத்தித் திறன் அதிகமாகியதும் தாய்வழிச் சமுதாயத்திலிருந்து தந்தைவழிச் சமுதாயமாக மாறியது. சொத்து அடிப்படையிலான வேறுபாடுகள் உருவாயின. தொல்காப்பியத்திலும் சொத்துரிமை பற்றிய கருத்துக்கள் குறிப்பிடவில்லை. பெண்களுக்கு சொத்துரிமை அளிக்கப்பட வேண்டும் என்பதை சாமி சிதம்பரானார்,

**''சொத்துச் சுதந்திரம் ஆண்களுக்கே யன்றி**
**சோதரி மார்களுக் கில்லை என்றார்**
**பித்த மனிதர்கள் பேச்சின்றி வெட்குறப்**
**பெற்றவாம் செல்வம்''**

என்ற பாடல் மூலம் குறிப்பிடுகிறார். அறநூல்களில் பெண்களுக்குச் சொத்துரிமை வழங்கப்படில்லை என்பது தெளிவாகின்றது. தொழிலில் ஏற்பட்ட மாறுபாடுகள் தனியுடைமைச் சொத்துக்களிலும் மாறுதல்களை ஏற்படுத்தியது. இதனால் பெண்களுக்கு சொத்துரிமை இல்லாது போயிற்று என்பது புலனாகின்றது.

**பேச்சுரிமை**

*மனிதர்கள் உயர்ந்த பிறவியாகக் கருதுவதற்குத் துணையாக இருப்பது பேச்சுரிமை ஆகும். குழந்தைக்குத் தாலாட்டுப் பாடுவதிலிருந்து பெண்கள் நாவை அசைத்துப் பேச வேண்டியுள்ளது. பெண்கள் வழக்குத் தொடுத்து அறங்கூறு அவைகளில் போருக்குச் செல்லுதல் கண்களால் பார்க்கத்தக்கவை அல்ல என்று,*

**''உடுத்தாடை இல்லாது நீராட்டும் பெண்**
**தொடுத்தாண்டு அவைப்போர்புகலும் கொடுத்து அளிக்கும்**
**ஆண்மை உடையவர் நல்குரவும் - இம்மூன்றும்**
**காண அரிய என் கண்''** *(திரி.பா.71)*

*திரிக்கடுகம் கூறுவதால் பேச்சுக்கலையில் பெண்களுக்கு முதன்மை அளிக்கப்படவில்லை என்பது தெளிவாகிறது. பேச்சுக்கலை வென்றவர்களாகப் பாஞ்சாலி, சாவித்திரி, ஔவையார், கண்ணகி போன்றவர்கள் இலக்கியங்களில் இடம் பெற்றிட நீதி இலக்கியங்களில் எவ்விடத்தும் பெண்களுக்குப் பேச்சுரிமை அளித்தமைக்குச் சான்றுகள் இல்லை என்பது புலனாகிறது.*

**கல்வி உரிமை**

*மனித வாழ்வின் உயிர் மூச்சாகக் கருதப்பெறுவது கல்வியாகும். பெண்கள் கல்வியறிவு பெற்றால்தான் வீடு, நாடும் உயர்வு பெறும். சங்ககாலத்தில் முப்பதிற்கும் மேற்பட்ட பெண்பாற் புலவர்கள் அகப்புறப்பாடல்களைப் பாடியதால் பெண்கள் கல்வியல் சிறந்து விளங்கினர் என்பது தெளிவாகிறது. அறநூல்கள் தோன்றியக் காலத்தில் இத்தகையச் சிறப்பு அமையவில்லை கல்வி ஒருவருக்கு ஏழு பிறவிகளிலும் பாதுகாப்பைத் தருமென்று,*

**''ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு**
**எழுமையும் ஏமாப்பு உடைத்து'** *(குறள். 398)*

*குறள் வலியுறுத்தினாலும் பெண்கள் புலமைபெற்றுப் பாடியதாகச் செய்திகள் இல்லை. கணவனின் வருவாய் அறிந்து வாழ்கை நடத்துதல் வேண்டுமென,*

**''வருவாயுள் கால்வழங்கி வாழ்தல் செருவாய்ப்பச்**
**செய்தமை நாடாச் சிறப்புடைமை எய்தப்**
**பலநாடி நல்லவை கற்றல் இம்மூன்றும்**
**நலமாட்சி நல்வர் கோள்''** *( திரி.பா.21)*

*திரிக்கடுகம் கூறுகிறது. கல்வி அழகே அழகு என்று நாலடியார்,*

**''குஞ்சி அழகும் கொடுந்தானைக் கோட்டழகும்**
**மஞ்சள் அழகும் அழகல்ல நெஞ்சத்து**
**நல்லம்யாம் என்னும் நடுவு நிலைமையால்**
**கல்வி அழகே அழகு''** *(நாலடி. 131)*

*உணர்த்துவதை அறியலாம். எனினும் கல்வி உரிமை பெண்களுக்கு முழுமையாக அளிக்கப்படவில்லை என்று எண்ணத் தோன்றுகிறது. பெண்கள் அதிக அளவில் கல்வி பெற்றால் தான் வாழ்க்கையைப் பொருள் உள்ளதாக அமைத்துக் கொள்ள முடியுமென்பதை அறியலாம்.*

## பெண்கள் இழிநிலை

சங்க காலத்தில் பெண்கள் உயர்நிலையில் போற்றப்பட்டனர். அற இலக்கிய காலத்தில் பெண்களைத் தாழ்வாகவும், இழிவாகவும் கருதினார். இல்வாழ்விற்க்கு தகுதியற்றப் பெண்கள் கணவனுக்கும், குடும்பத்திற்க்கும் தீமை விளைவிப்பார்கள் என்று,

**''உடம்பாடு இலாத மனைவி தோள் இன்னா''** (இன். நா.11)

மேலும்,

**''பிணி அன்னார் வாழும் மனை இன்னா''** (இன்.நா.13)

அத்தகைய மனைவியரை விலக்கி விடுதல் இனியது என்பதை,

**''நிறைமாண்பில் பெண்டிரை நீக்கல் இனிதே''** (இனி.நா.10)

இனியவை நாற்பது பாடல் ஒன்று கூறுகின்றது. கணவன் சொல்லுக்குக் கீழ்படிவதும், சமைப்பதும், சமைப்பதை பரிமாறுவது வலியுறுத்தப்படுகிறது. மனைவி, கணவனைத் தாழ்வாக எண்ணக்கூடாதென்பதை,

**பேண்அடக்கம் பேணாப் பெருந்தகைமை பீடுஉடமை**
**நாண்ஒடுக்கம் என்றுஐந்தும் நண்ணின்றா பூண்ஒடுக்கும்''** (சிறுபஞ் பா.43)

சிறுபஞ்சமூலம் பாடல்வரிகள் சுட்டிக் காட்டுகின்றது. கணவன், மனைவியை அடிப்பதும் அவ்வாறு அடிப்பதும் கணவனின் உரிமை என்பது சமூகத்தில் சாதாரணமாக எடுத்துக் கொள்ளப்பட்டது. கணவனின் கொடுமைகளுக்கு ஆளாகி, அடங்கி இருத்தல் துன்புறுத்தல் போன்றவை பெண்களின் குணங்களாக இருந்தன. விலங்குகளைக் கோலால் அடித்தல் மரவாகும். தன் மனைவியை கோலால் புடைத்தல் அறியாமையால் செய்வதன்று என்று (திரிக்கடுகம் 3) குறிப்பிடுகின்றது. கணவன் இறந்தப் பின் உயிர்வாழ விரும்பாதப் பெண்களும் கைம்மையின் கொடுமையினை உணர்ந்த உயிர் கெடுக்கும் நிலையினைக் குறுந்தொகை இலக்கியம் தெளிவுறுத்துக்கின்றது. இவ்வுலகில் வெள்ளை எள்ளையும், கஞ்சியினையும் உண்பதை வாழ்க்கையாக மேற்கொள்வதைவிட இறந்துபடுதல் மேலானதென்று பெண்கள் கருதினர். தம்மை விரும்பியவரைப் பிரித்து உயிர் வாழ்தலைவிடத் தீயில் புகுதல் நல்லது என,

**''தீர்தலின் தீப்புகுதல் நன்று''** (நான்மணி.பா.13)

நான்மணிகடிகை பாடல் குறிப்பிடுவதால் வாழ்நாள் முழுதும் கொடுமையைத் தாங்குதைவிட உடன்கட்டை ஏறுதல் ஒருநாள் துன்பமென கருதினர் என்பதையும் அறியமுடிகின்றது.

## நெறிபிறழ்ந்த பெண்கள் நிலை

பெண்கள் நெறியான வாழ்க்கையிலிருந்து சூழ்நிலைகளால் மாறுபடுவதை பரத்தமை என்று குறிப்பிடுகின்றனர். பொதுமகளிர், மகளிர் பொருட்பெண்டிர், இருமணப்பெண்டிர் என்று பல்வேறு பெயரிட்டு அழைப்பர். இப்பெண்கள் ஆடல், பாடல் போன்ற கலைகளின் திறமை பெற்று இருந்தனர். கற்பு என்பது இப்பெண்களுக்கு இல்லை என்றால் திருமணம் செய்துகொள்ள மாட்டார்கள் என்று சிறுபஞ்சமூலம் குறிப்பிடுகிறது. திருக்குறளில் வரைவின்

மகளிர் என்ற அதிகாரம் பொருட்பாலில் இடம் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது. பொருக்காக வாழ்கின்ற இப்பெண்கள் தேவர்கள் துதிக்கின்ற நாராயணமூர்த்தியே வந்தாலும் அவர் கையில் பணம் இல்லையென்றால் திருப்பி அனுப்பிவிடுவார்கள் இங்கு,

**அம்கண் விசும்பின் அமரா தொழப்படுஞ்**
**செங்கண் லாயினும் ஆகமன் தங்கைக்**
**கொப்பதொன் றில்லாரைக் கொய்தளி ரன்னார்**
**விடுப்பர்தங் கையாற் றொழுது''** (நாலடி. 373)

பொருளைப் பெரிதாக எண்ணுகின்றனர். பொருளுடையவர்களை வெல்லமாகவும், பொருளற்றவர்களை நஞ்சாகவும் கருதும் பண்பு இப்பெண்களிடம் இருந்தென நாலடியார் பாடல் 374 சுட்டுகிறது. இவர்களின் இனிய சொற்கள் நரகத்தைப் போன்றது அங்கு செல்பவர்கள் பகுத்தறிற்ற மிருகம். இவர்களின் உறவால் பகையும் பழயும், கடுந்சொல்லும், இறப்பும் வந்து சேறும் என்று (ஏலாதி பாடல். 25) வழியாக உணர்த்தப்பட்டுள்ளது. பெண்கள் இழிநிலைக்குத் தள்ளப்பட்டனர் என்பதை அறிய முடிகின்றது.

## முடிவுரை

குடும்ப அமைப்பில் ஆண், பெண் இருவரும் ஒத்த உரிமையும் அன்புடையவர்களாய் இருத்தல் வேண்டும். தொல்காப்பியர் காலத்தில் ஆணுக்கும், பெண்ணுக்கும் சம உரிமை இல்லை. பெண்கள், ஆண்களால் அடக்கி வைக்கப்பட்டிருந்தனர். கற்பு பெண்களுக்குரிய தனி உடமை என்றே கருதப்பட்டது. பலதாரமணத்தில் பெண்களுக்கு உரிமை இல்லை. தொல்காப்பியர் காலத்தில் பெண்ணடிமை குடிகொண்டிருந்ததை அறியலாம். சங்க காலத்தில் இருபாலரும் சமமாக மதிக்கப்பட்டனர். அறநூல்கள் தோன்றிய காலத்தில் பெண்கள் குடும்ப நலனில் கவனம் செலுத்தினர். பெண்களை அடிமையாகக் கருதும் நிலை இருந்தது. திருவள்ளுவர் ஆண், பெண் சமத்துவத்தை இல்வாழ்க்கையிலும் இல்லற சிறப்பதை வாழ்க்கைத்துணை நலத்திலும் வலியுறுத்துகின்றார். ஆடவரின் நல்லொழுக்கம் பிறனில் விழையாமையால் விளக்கப்பெறும். பெண்வழிச் சேறல் என்ற அதிகாரம் பெண்ணுக்கு, ஆண் அடிமையாதலை விளக்கிக் கூறுகின்றது. மனைவிக்கு அஞ்சி வாழக் கூடாது. அவ்வாறு வாழ்பவன் எருது போன்றவன் ஆவான் எனத் திரிக்கடுகம் கூறுகின்றது. குறிப்பாக ஆடவர்களுக்கு அதிகமான உரிமைகள் வழக்கிலிருந்தமையை அற இலக்கியங்கள் புலப்படுத்துகின்றன.

# சங்க இலக்கியங்களில் பெண்கள்

முனைவர் ஜெயக்குமாரி. எஸ்
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
விவேகானந்தா கல்லூரி, அகஸ்தீஸ்வரம்.

'பெண்கள்' நடமாடும் பிரம்மாக்கள், தாயுள்ளம் கருணை, அன்பு, மென்மைத் தன்மையோடு இருப்பவர்கள். எனவே தான் கவிமணி "மங்கையராகப் பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திடல் வேண்டும்மா" என்றார். இலக்கியங்கள் சமூகத்தில் நடைபெறுகின்ற நிகழ்வுகளைப் பதிவுசெய்யும் வரலாறாகப் பார்க்கப்படுகிறது. அவ்வகையில் காலந்தோறும் பெண்கள் கடந்து வந்த வரலாற்றைப் புரட்டிப் பார்க்கும்போது அது பெரும் பிரம்மிப்பைத் தருவதாகவே அமைந்து காணப்படுகிறது. இலக்கியப் படைப்பாளர்கள் பெரும்பான்மையோர் ஆண் படைப்பாளர்களாக இருந்து வருகின்றபோதிலும் பெண்ணினத்தைக் குறித்தப் படைப்புகளே அதிகம்.

## சங்க இலக்கியங்களில் பெண்

சங்க இலக்கியம் தனிச்சிறப்பும், தனித்தன்மையும் பெற்ற ஒப்பற்ற களஞ்சியம். நாகரிகம், பண்பாடு, சமூகம், வாழ்வியல், அரசியல் போன்றவற்றை அடையாளப்படுத்தும் ஆவணமாகச் சங்க இலக்கியம் திகழ்வது தமிழர்களுக்கு வாய்த்த பெரும்பேறு.

மக்களின் வாழ்வியலைக் கூறுமிடத்து, ஆடவரும் மகளிரும் இணைந்து வாழ்ந்த வாழ்வியலில் மகளிருக்கான இடம் என்னவாக இருந்தது என்பதை இக்கட்டுரை ஆய்கிறது.

பெண் போகப்பொருள் அல்ல. பேராற்றலும், தாய்மைத் தன்மையும், பொறுப்பும், கடமையும், வீரமும் வாய்ந்தவளாகவும் பண்பாட்டைக் கட்டிக்காப்பவளாகவும் சங்க கால பெண்கள் மிளிர்ந்தனர். அவர்களின் வாழ்வு போற்றத்தக்கதாய் இருந்தது.

அச்சமும், மடமும், நாணமும், பயிர்ப்பும் பெண்கள் குணத்தை மேன்மையுறச் செய்யும் அணிகளாகத் திகழ்ந்தன.

## தொல்காப்பியம் காட்டும் பெண்

*தமிழுக்கு எழுத்து, சொல் இலக்கணம் வகுத்த தொல்காப்பியம் வாழ்க்கைக்கும் இலக்கணம் வகுத்துள்ளது. பெண்ணுக்கான இலக்கணம், ஆணுக்கான இலக்கணம் என ஒவ்வொருவருக்கும் தனிப்பட்ட நடத்தையறக் கோட்பாடுகளைச் சுட்டுகிறது. தொல்காப்பியர் தலைவன் தலைவிக்குரிய பண்புகளை விளக்கியுள்ளார்.*

**''அச்சமும் நாணும் மடனும். . . .**
**பெண்பாற்குரிய என்ப''** *(தொல். களா. 96)*

*இம்மூன்று பண்புகளை இயல்பாகக் கொண்ட தலைவிக்கு இவையே கேடயங்கள். தலைவியின் பல்வேறு குணநலன்களைப் பொருளதிகாரத்தில் பல இடங்களில் பதிவு செய்துள்ளார்.*

**''செறிவும் நிறைவும் செம்மையும் செப்பும்**
**அறிவும் அருமையும் பெண்பாலான''** *(நூற்பா. 206)*

*தமிழர்களின் மரபு காக்கும் தன்மையுடையவர்களாக அன்றைய பெண்கள் இருந்தமை இதன் மூலம் புலனாகும். அடக்கமும் அமைதியும் மனம் கோடாமையும், நல்லன பேசலும் அறிவும், உள்ளக் கருத்தை அறிந்து நடத்தலும் தலைவிக்கு இருக்க வேண்டிய குணநலன்களாக பதிவு செய்யப்பட்டுள்ளது.*

**கற்பு என்பது பெண்ணின் கவசமாகும் இதனை,**
**''உயிரினும் சிறந்தன்று நாணே நாணினும்**
**செயிர்தீர் காட்சி கற்பு சிறந்தன்று''** *(தொல். களா. 23)*

## வீரத்தை வாழ்வாகக் கொண்ட பெண்

*சங்க மகளிர் வீரம் வாய்ந்த ஆண்மகனையே திருமணம் புரிய விரும்பினர். முல்லைத் திணைப் பாடல்களில் காணலாகும் ஏறுதழுவுதல் நிகழ்வு இதற்குச் சான்றாதாரமாக அமைகின்றது.*

"கொல்லேற்றுக் கோடஞ்சுவானை மறுமையும்
புல்லாளே ஆய மகள்" *(கலி.103)*

*அச்சமின்றி தினைப்புனம் காத்த பெண்ணின் வீரம் குறிஞ்சிப் பாட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளது.*

**''புலி அஞ்சு இதணம் ஏறி, அவண்,**
**சாரல் சூரல் தகை பெற வலந்த**
**தழலும், தட்டையும், குளிறும், பிறவும்,**
**கிளி கடி மரபின ஊழ் ஊழ் வாங்கி,**
**உரவுக் கதிர் தெறூஉம் உருப்பு அவிர் அமயத்து''** *(குறிஞ்சி.41-45)*

*தினைப்புனம் காக்கும் பணிகளில் பெண்கள் ஈடுபட்டமையைக் கூறுமிடத்து, புலிகளும் ஏறுவதற்கு அஞ்சும் உயரமான பரண்களில் இருந்து பறவைகளை விரட்டினர் என்பது சுட்டப்பட்டுள்ளது.*

## கற்பு பேணுதல்

பொதுவாக இச்சமூகம் போதிக்கும் கற்பு சார்ந்த விஷயங்கள் பெண்களுக்கு மட்டும் தான். பெண்களுக்கு விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகள் ஆடவர்களுக்கு விதிக்கப் படவில்லை. ஆடவர்கள், பரத்தையர்கள் உறவு பற்றிக் கூறும் இலக்கியங்கள் ஏராளம். அதைக் கண்டித்தாலும் அன்றைய சமூகம், ஒழிப்பதற்குப் பெரிய முயற்சிகள் ஏதும் எடுக்கவில்லை என்பதே உண்மை. பரத்தமை மேற்கொள்ளல் ஓர் ஒழுக்கமாகவே பார்க்கப்பட்டது. கலித்தொகை, பெண் கற்பைக் கூறுமிடத்து,

**''வடமீன் போல் தொழுதேத்த வயங்கிய கற்பினள்''** *(கலி.2)*

அருந்ததியைப் போல எல்லாராலும் தொழுது போற்றும் வண்ணம் விளங்குகின்ற பெரும் கற்பினை உடையவள் தலைவி. அந்த கற்பு எத்தகைய வலிமையு டையது எனில்,

**''அருமழை தரல் வேண்டின் தருகிற்கும் பெருமையளே''** *(கலி.39)*

எனக் கலித்தொகை இயம்புகிறது. இயற்கையைக் கூட தன் கட்டுக்குள் வைக்கும் அளவிற்கு பெண்ணின் கற்பு, உயரியதாகப் பேசப்பட்டுள்ளது. இறைநிலையைக் கற்புக்கு ஈடாகப் பார்க்கும் தன்மை இங்கே வெளிப்படுகிறது.

வள்ளுவரும்,

**''தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்**
**பெய்யெனப் பெய்யும் மழை''** *(குறள்.55)*

அரிய மழையைக் கூட தருவிக்கும் ஆற்றல் பெண்ணிடம் உருவாகக் கற்பே காரணம் என்பதை மேற்கண்ட குறள் தெளிவாக்குகிறது.

அதுபோல் பொருளுக்கு ஆசைப்பட்டு ஒழுக்கத்தை இழக்க சங்க மகளிர் விரும்பாத உயரிய தன்மை கலித்தொகையில் காணக்கிடக்கிறது. இவ்வுலகத்தையே பரிசாகப் பெறுவதாக இருந்தாலும் மனதால் நினைத்த தலைவனை விட்டு வேறொரு மணம் புரிய நினைத்ததில்லை. அது தங்கள் குடித்தன்மையன்று என்பதை உணர்ந்திருந்தனர்.

**''விரிநீர் உடுக்கை உலகம் பெறினும்**
**அருநெறி ஆயர் மகளிர்க்கு**
**இருமணம் கூடுதல் இல்இயல்பு அன்றே''** *(கலி.114)*

அதுபோன்று இப்பிறப்பு மட்டுமல்ல மறு பிறப்பினைப் பற்றிய சிந்தனைகள் கூட பெண்களுக்குக் கற்பு நெறி சார்ந்தவையாகவே இருப்பது வியப்புக்குரியது.

**''இம்மை மாறி மறுமை ஆயினும்**
**நீயாகியர் என்கணவனை**
**யானாகியர் நின்நெஞ்சு நேர்பவளே''** *(குறுந்.49)*

இந்தப் பிறவியில் தனக்கு வாய்த்த கணவனே மறுபிறப்பிலும் கணவனாக வரவேண்டும் என விரும்பிய பெண்களின் மனநிலை இங்கு தெளிவாகச் சுட்டப்பட்டுள்ளது.

## வீர மகளிர்

மானமும் வீரமும் தமிழினத்தின் தனித்த அடையாளம். போருக்கு முதன்மையளித்த சமூகம் சங்கச் சமூகம். ஆடவர்கள் உயிரைச் துச்சமென மதித்து நாட்டையும் நாட்டு மக்களையும் அரசன் பால் நின்று காத்தனர். அப்படிப்பட்ட போர்த்தொழிலை ஆடவர்கள் மேற்கொள்ள பெண்களின் பங்களிப்பும் பெருவாரியாக இருந்தது.

வீரத்தின் விளைநிலமாக விளங்கிய மகளிர், போரில் கணவனை இழந்த மறுநாளே தனது பச்சிளம் பாலகனைப் போருக்கு அனுப்புகிறாள்.

**''கெடுக சிந்தை கடிது இவள் துணிவே**
**. . . . . . . . . . .செல்கென விடுமே''** *(புறம்.279)*

## இல்லற நிர்வாகம்

சங்கப் பெண்கள் இல்லற நிர்வாகத்தில் மேம்பட்டவர்களாகத் திகழ்ந்தனர். குடும்ப உறுப்பினர்களை மட்டுமின்றி சுற்றத்தையும் காக்கும் தன்மை பெண்களிடம் இருந்திருக்கிறது. விருந்தோம்பல் பண்பினை எல்லா பெண்களும் உயிரினும் மேலானதாக மதித்துப் போற்றியிருக்கின்றனர். சங்க இலக்கியப் பாடல்கள் வழி விருந்தோம்பல் பண்பாட்டை நோக்குமிடத்து, பெண்களின் உயிர் பாதுகாக்கும் தாய்மைச் சிந்தனை புலனாகிறது.

**''விருந்து வண்டு எஞ்சிய மிச்சில் பெருந்தகை**
**நின்னோடு உண்டலும் புரைவது என்று ஆங்கு**
**அறம் புணை ஆகத் தேற்றிப் பிறகு மலை''** *(குறிஞ்சி. 206-208)*

எல்லாருக்கும் உணவளித்து, எஞ்சியதை உண்டு வாழும் இல்லற வாழ்க்கைச் சிறப்பினை இப்பாடல்வழி அறியமுடிகிறது. விதைக்கு என வைத்திருக்கும் தினையைக் கூட விருந்தினருக்குக் கொடுத்து உபசரித்து மகிழும் பாங்கினை,

**''வரகும் தினையும் உள்ளவை எல்லாம்**
**இரவல் மாக்கள் உணக்கொளத் தீர்ந்தெனக்**
**குறித்துமாறு எதிர்ப்பை பெறாஅ மையின்,**
**குரல்உணங்கு விதைத்தினை உரல்வாய்ப் பெய்து''** *(புறம். 333, அடி 9-12)*

என்ற அடிகள் வெளிப்படுத்துகிறது. அதாவது, வரகு தினை முதலிய உணவுப் பொருட்கள் இரவலர்களுக்கு வழங்கப்பட்டதால் தீர்ந்துவிட்ட காரணத்தால், விதைப்பதற்காக வைத்திருந்த விதைத் தானியங்களை உரலில் இட்டு இடித்து உணவு செய்து கொடுக்கிறாள் ஓர் இல்லத் தலைவி.

இத்தகைய இல்லறச் சிறப்பை மேற்கொண்ட சங்கப்பெண்களே விருந்தோம்பல் என்னும் பண்பாட்டை உருவாக்கியவர்கள்.

## கொடை உள்ளம்

அரசனும், சாதாரண குடிமக்களும் கொடை வழங்குதலை தங்கள் வாழ்வின் ஒரு அங்கமாகக் கொண்டனர்.

ஆண்மகன் மட்டுமின்றி பெண்களும் தங்கள் விரும்பிய வண்ணம் இரவலர்க்குக் கொடுக்கும் உரிமை உடையவர்களோகவோ விளங்கினர்.

**''புன்தலை மடப்பிடி பரிசிலாகப்**
**பெண்டிரும் தம்பதம் கொடுக்கும் வண்புகழ்''** (புறம்.151, அடி 4,5)

மேற்கண்ட பாடலடிகள் மூலம் சாதாரண கொடையை வழங்கவில்லை. யானைகளைப் பரிசளித்தனர் பெண்கள் என்னும் சிந்தனை நம்மை வியக்க வைக்கிறது. தான் பெற்ற பரிசிலை மனைவியிடம் அளித்து மகிழும் தலைவனான பெருஞ்சித்திரனார்.

**''இன்னோர்க்கு என்னாது என்னோடும் சூழாது**
**வல்லாங்கு வாழ்தும் என்னாது நீயும்**
**எல்லார்க்கும் கொடுமதி மனைகிழ வோயே!''** (புறம். 163, அடி 5-7)

என்று கூறி, அனைவருக்கும் இப்பொருளைப் பகிர்ந்து வழங்கு என்கிறார்.

## முடிவுரை

சங்க இலக்கியங்கள் பெண்களைத் தனித்துவம் உடையவர்களாக எடுத்துக் காட்டும் கருத்துப்பெட்டகங்கள். பெண்கள் தங்கள் ஆளுமை, அறிவு, செயல்பாடுகள் போன்றவற்றை இச்சமூகத்திற்குப் பல்வேறு தளங்களில் நின்று தங்கள் பங்களிப்பைச் செய்துள்ளனர். குறிப்பாக அவர்களின் சிறப்புகளையும், பங்களிப்பையும் இலக்கியங்கள் பதிவு செய்திருப்பது போற்றத்தக்கது. இத்தகைய பதிவுகள் பெண்கள் சமூகத்திற்குப் பெருமை சேர்க்கும் என்பதில் வியப்பில்லை.

# முகமற்றவர்களின் முகம்

முனைவர் இரா.காமராசு,
பேராசிரியர் - தலைவர், நாட்டுப்புறவியல் துறை,
தமிழ்ப்பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

பிறப்பின் அடிப்படையில் உருவான சாதி போலவே, பிறப்புக்குப் பின் உருவான பால் சார்ந்தும் மனிதர்களை இழிவுக்குள்ளாக்குவது தொடர்கிறது. உடல் சார்ந்த உணர்வு மாற்றங்களால் திரிந்த பாலினர் ஆகும்போது, அவர்களைப் பொதுச் சமூகம் எதிர்கொள்வது மிக அதிர்ச்சிகரமானது. சொந்த வீடும், உறவும், ஊரும், சமூகமும் பார்க்கும் பார்வைகள் எழுத்தில் வடிக்க முடியாதவை.

அரவாணிகள், திருநங்கையர், திருநம்பியர், மாறிய பாலினத்தவர், மூன்றாம் பாலினத்தவர் என்றெல்லாம் அடையாளப்படும் இவர்களை இவர்களின் இருப்பை இன்று உலகச் சமூகம் ஓரளவு ஏற்றுக்கொண்டுள்ளது.

ஆனால் சில பத்தாண்டுகளுக்குமுன் நிலைமை வேறு, அச்சூழலில் எழுத்தாளர் சு.சமுத்திரம் 'வாடாமல்லி' நாவல் வழியே இலக்கியத்தில் இடமளித்தார். எழுத்தாளர் எஸ். பாலபாரதியும் கள ஆய்வுத் தரவுகளின் ஊடே 'அவன் அவள் அது' எனும் நாவல் வழி திருநங்கையரின் வாழ்வையும் வலியையும் பதிவு செய்தார்கள். அதுவரை கேலிக்குரியவர்களாகச் சித்தரிக்கப்பட்ட அரவாணிகளுக்குப் பின் உள்ள சமூக அவலத்தை இப்படைப்புகள் வெளிக்கொணர்ந்தன.

அரவாணிகள் சங்கம் அமைத்தல், வாக்குரிமை, வேலையுரிமை, குடும்ப அட்டை பெறுதல், அறுவை சிகிச்சை செய்து கொள்ளுதல் போன்வற்றுக்காகத் தனித்தும் அமைப்பாகவும் போராடியதன் விளைவு சில நன்மைகள் கிட்டின. உலக நாட்டியத் தாரகையாக நர்த்தகி நடராஜ் அவர்களும் எழுத்தாளர்களாகப் பிரியா பாபு, ரேவதி, போன்றவர்களும் வெளியிலிருந்து எழுதிய நிலை மாறி, அகத்தாராகத் தங்களைத் தாங்களே

எழுதும் நிலை உருவானது. அவ்வகையில் முதல் தடம் பதித்தவர் பிரியா பாபு.

'தமிழகத்தில் அரவாணிகளின் வழக்காறுகள்' எனும் குறும்படம், 'அரவாணிகள் சமூக வரைவியல்' எனும் ஆய்வு நூல் வழியும் 'மூன்றாம் பாலின முகம்' எனும் நாவல் படைப்பின் வழியும் தன்னினத்துக்கான உரிமைக் கோரலை முன் வைக்கிறார். சமூகச் செயற்பாட்டாளராக அரவாணிகளின் ஓட்டுரிமை, ரேஷன் அட்டை உரிமை, மனித உரிமை ஆகியவற்றுக்காகச் சட்டப்படியும் சட்டத்துக்கு வெளியேயும் போராடி வரும் இவரின் இந்த நாவல் தமிழ் இலக்கியப் பரப்பில் முக்கியக் கூறு. இது சிறுமுயற்சிதான்.

நாவல் இலக்கிய வரையறைகளுக்குள் பொருந்த முடியாமல் கூட போகலாம். ஆனால் இந்த எழுத்துப் பதிவு அரவாணிகள் குறித்த அக்கறையையும், இதனைத் தொடர்ந்து பல படைப்புகள் வெளிவருவதையும் சாத்தியப் படுத்தி உள்ளது.

**மூன்றாம் பாலின் முகம்**

இரமேஷ் எனும் இளைஞன் பள்ளிப் பருவத்தில் இருந்தே 'பெண்' உணர்வில் தவிக்கிறான். பெண்களின் உடையை உடுத்துவது, பெண்கள் போல பேசுவது, பாடுவது, ஆண்களிடமிருந்து ஒதுங்குவது, கூச்சப்படுவது என்று இருக்கிறான். அவனின் உள்ளம் பெண்ணாக மாறிவிட முயல்கிறது. சமூகம் கேலி செய்கிறது. பெற்றத் தாய் தடுக்கிறாள். அரவாணிகள் பற்றிய நிலையினை, அவர்களின் இயல்பைத் தாய்க்குப் புரிய வைக்க முயல்கிறான். பல போராட்டங்கள் கடந்து அரவாணி யாகிறான். இதுதான் நாவலாக முன்வைக்கப்படுகிறது. இது ஏறக்குறைய பிரியாவின் கதை. ஏனைய பல அரவாணிகளின் கதை.

வீட்டிலும் வெளியிலும் அரவாணிகள் எப்படி நடத்தப்படுகிறார்கள், தண்டிக்கப் படுகிறார்கள், புறக்கணிக்கப்படுகிறார்கள் என்பதை நாவலில் வெளிப்படுத்துகிறார். அரவாணியாக மாறுவதா, கூடாதா என்ற விவாதத்தையும், இருபக்க நியாயத்தையும் பிரியா பாபு முன் வைப்பது சிறப்பு.

"எனக்கு எல்லாமே தெரியும் கண்ணு. நீ பொம்பள மாதிரி பாடுறது, கோலம் போடுறது, பேசுறது, தண்ணிக்குடத்த இடுப்பில் தூக்குறது. இதெல்லாம் சின்ன வயசுல பெரியவங்களுக்கு உதவியாய் இருக்கும். வேண்டாம் கண்ணு எனக்கு பயமாயிருக்கு உன்னோட எதிர்காலத்த நினைச்சு" (ப.13) என்று ரமேஷின் தாய் பார்வதி புலம்புகிறார் எனில்,

அரவாணிகளின் தாய் போன்ற ஜானகியம்மா, "தோ பார் பேட்டா, இந்த வாழ்க்கை ஒரு விட்டில் பூச்சி வாழ்க்கைதான் வெளியில் இருந்து பார்க்கத்தான் நாம ஏதோ அடைஞ்சிட்டதா தெரியும். நம்ம மனசுக்குப் புடிச்ச மாதிரி வாழ்றதா தெரியும். ஆனா தினம், தினம் படுற சித்ரவத, ஜனங்களோட கேலி, கிண்டல், அவன் அங்கங்க தொடுறத, சீண்டுறது இதைல்லாம் பொறுத்துக்கிட்டுத்தான் வாழ வேண்டியதா இருக்கு" (ப.17) என்று அங்கலாய்க்கிறார்.

"படிக்கும்போதே ஸ்கூல்ல பொம்பள, அலி, ஓரம்போன்னு கிண்டல் வேற. என்னோட மனசை அடக்க முடியல. வீட்டுலயும் தினம் அடி, உதை, திட்டு, ஆம்பளய நடக்கச் சொல்லி முடியல. ஒரு நா ராத்திரி எனக்கான உலகத்தத் தேடி புறப்பட்டுட்டேன்"(ப.18) என்று ரமேஷ் தனக்கான நியாயத்தை முன் வைக்கிறார்.

**அரவாணிகள் வழக்காறுகள்**

அரவாணிகளின் பழக்கவழக்கங்கள், குழூஉக் குறிகள் பல நாவலில் ஆங்காகே வெளிப்படுகின்றன. அவர்களின் முக்கியத் திருவிழாவான கூத்தாண்டவர் திருவிழாவும் நாவலில் பதிவாகிறது.

"மகாபாரத யுத்தம் தொடங்க இருந்திச்சு. அப்ப பாண்டவர்கள் பக்கம் நீதியும், உண்மையும் இருந்தாலும் அவங்க ஜெயிக்கணும்னா அவங்க வணங்குற காளி தேவிக்கு பலி கொடுக்கணும்ங்கிறது போரோட நியதி. பலின்னா சாதாரணப்பலி இல்ல... மனிதப்பலி. அதுவும் எந்த மனுஷனையும் பலி கொடுத்திட முடியாது. மனிதனுக்குனு 32 இலட்சணம் இருக்கு. அப்படி 32 இலட்சணமும் பொருந்திய ஆண்மகனத்தான் பலியிடணும்"

அர்ஜுனனுக்கும் நாகக்கன்னிக்கும் பிறந்த 'அரவான்' பலி கொடுக்க முடிவு செய்யப்படுகிறான். அரவான் தான் சாகும்முன் ஒரு பெண்ணோடு உறவாட விரும்புகிறான். சாகப்போகிறவனுக்கு ஒரு நாள் மனைவியாக யாரும் சம்மதிக்கவில்லை. கிருஷ்ணன் தானே 'மோகினி' அவதாரம் எடுத்து பெண் வடிவில் அரவானைச் சேர்கிறான். மறுநாள் அரவான் பலியிடப்படுகிறான்.

இது ஒரு தொன்மம். கிருஷ்ணன், மோகினி அவதாரமெடுத்தது சித்ரா பௌர்ணமி நாளில். அதனால் இந்நாளில் ஆணாகப் பிறந்து பெண்ணாக மாறியவர்கள், அரவானைக் கணவனாகக் கருதி தாலி கட்டிக்கொண்டு, மறுநாள் தாலி அறுத்து விதவையாகி விடுகிறார்கள். இதுதான் கூவாகம் கூத்தாண்டவர் திருவிழாவின் அடிப்படை. இது நாவலில் இடம்பெறுகிறது.

"ரமேஷ் இந்தா இந்தக் கற்பூரம் அரவான் பிரசாதம் எப்பவாவது உனக்கு மனக்கஷ்டம் ஏற்பட்டா இதுல சிறிய அளவு எடுத்து ஏந்தி அரவான மனசார நினை. உன் காரியம் கை கூடும்"

**''பெரிய வன்னி மரம் முழுவதும் தாலிகளால் நிறைந்திருந்தது. அதன் கீழே பூசாரிகள் நேற்று கட்டிய தாலிகளை அறுத்து மரத்தின் மீது வீசிக் கொண்டிருந்தனர். அவர்கள் கைகளில் அணிந்திருந்த கண்ணாடி வளையல்களையும் உடைத்தனர்''** (ப.81)

**''தாலியறுத்த நாங்க 30 நா வெள்ளைப் புடவையில் இருப்போம். 31வது நாள் இந்த மாதிரிபூஜை போட்டு கலர் புடவை மாத்திக்குவோம். அந்த விஷேஷந்தாம்மா இன்னிக்கு''** என்று அரவாணிகளின் சடங்குகளும் நம்பிக்கைகளும் பதிவாகின்றன.

முகமற்றவர்களாக, இதயமற்றவர்களாக ஆக்கப்பட்ட அரவாணிகள் முகம் கூடியவர்கள் இதய ஈரமிக்கவர்கள் என்பதை மிக எளிய மொழியில், நடையில் பிரியா பாபு சொல்லிவிடுகிறார்.

**''ஆணாகப் பிறந்திருந்தா அரசனா ஆயிருப்பே**
**பெண்ணாப் பிறந்திருந்தா புருஷன்வீடு போயிருப்பே**
**காயாய்ப் பிறந்திருந்தா கனியாய் கனிந்திருப்பே**
**செடியாய்ப் பிறந்திருந்தா கொடியாய் மலர்ந்திருப்பே**
**நதியாய் பிறந்திருந்தா அதன் வழி நடந்திருப்பே**
**நண்டாய் பிறந்திருந்தா வலையிலே தங்கியிருப்பே**
**ரெண்டாப் பொறந்ததினாலே துண்டுபட்டு நிக்கேனே''** **(ப.81)**

*என்று தாலி அறுத்தவர் வைக்கும் ஒப்பாரி கல் மனதையும் கரைக்கும். அரவாணிக்கான நியாயத்தை வலியுறுத்தும் படைப்பு இது.*

*மூன்றாம் பாலின் முகம்/ பிரியா பாபு/ சந்தியாபதப்பகம், நியூடெக் வைபவ், 57, 53வது தெரு, அசோக் நகர், சென்னை-83, முதற்பதிப்பு 2008.*

# மகளிர் தமிழ்வழிக் கற்பித்தலில் பல்லூடகங்களின் பங்கு

முனைவர் ச. சைமன்,
உதவிப்பேராசிரியர்,
விருதுநகர் எம்.எஸ்.பி. நாடார் கல்வியியல் கல்லூரி, விருதுநகர்.

இன்று கல்வி பயிலவரும் மாணவர்களுக்குப் படித்து அறிவதைவிட கேட்டலே சிறந்ததாக அமையும். சிலருக்குப் பார்த்தலே பொருந்தும். அது வேறு சிலருக்கு கேட்டலும் பார்த்தலும் சேர்ந்து நிகழ வேண்டும். ஆகவே இதுபோன்ற வேறுபாடுகளுக்கேற்ப கற்க வழி அமைப்பது பல்வகை ஊடகங்களே. பெருகி வரும் மக்கட்தொகைக்கேற்பவும், கருத்தூட்டம் பரவலாகவும் தெளிவாகவும் குறைந்த செலவிலும் நிகழ வழிவகுப்பது 'கற்பித்தல் மூலங்களே' கற்பிக்கும் நிகழ்ச்சிகள் மாணவரது புலங்களைத் தூண்டி செயற்படுபவையாக இருப்பின் தெளிந்த அறிவை மாணவர் பெறவும், அதன் காரணமாக வகுப்பறை கருத்தூட்டம் நிகழ்ச்சி என்றால் மிகையாகாது.

ஆசிரியர் செய்திகளைத் திணிப்பவராக இல்லாமல், சிறந்த கருத்தூட்டத்திற்கு வழியமைப்பவராக இருந்தல் வேண்டும். கற்பித்தலில் பல்வகை ஊடகங்களைப் பயன்படுத்தினால் கற்றலிலுள்ள தனியாள் வேறுபாடுகளுக்கு ஈடுகொடுத்து அனைத்து மாணவர்களும் திறம்பட கற்க வழிவகை செய்ய முடியும். தற்போது கல்விக் கூடங்களில் புத்தகங்கள் மட்டும் சேகரிக்கப்பட்டு, வகைப்படுத்தப்பட்டு நூலகத்தில் மாணவர் பயன்பாட்டிற்கு வைக்கப்பட்டுள்ளன. இதேபோன்று வரைபடங்கள், தேசப்படங்கள், ஒலிநாடாக்கள், ஒளிப்பேழைகள், தொலைக்காட்சி நிகழ்ச்சிகள், கல்வித் திரைப்படங்கள் கணிப்பொறி மென்திட்டங்கள் ஆகியனவும் வாங்கப்பட்டு அவற்றை தனித்னியாக வகைப்படுத்தி எண் குறியிட்டு வரிசைப்படுத்தி அடுக்கி வைக்க வேண்டும். மாணவர்களுக்கு தேவைப்படுவனவற்றை எடுத்துக் கொள்ளவும் அவற்றை அவர்கள் தாமே இயக்கிகொள்ளவும் தகுந்த ஆலோசனைகளை வழங்கவும், கல்வி நுட்பவியலில் பயிற்சி பெற்ற ஆசிரியர்

இதற்கென தனியாக நியமிக்கப்படுதலும் அவசியமானதாகும்.

**பல்வகை ஊடக மையம்**

ஒவ்வொரு பள்ளியிலும் பல்வகை ஊடகக் கற்றல் மையம் ஒன்றினை அமைத்தல் நலம். மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் பயன்படும் அனைத்து கற்றல் கருவிகளும் இங்கு கிடைக்கும். மாணவர்கள் தனித்தனியாகக் கற்கவோ அல்லது குழுக்களில் இணைந்து கற்கவோ இதில் வாய்ப்பு ஏற்படுத்தலாம். வெவ்வேறு பாட அலகுகளுக்கு ஏற்ப பல்வேறு கற்றல் மூலங்களை இணைத்து ஒரு கட்டாக அமைக்கலாம். பொதுவாக இத்தகைய கட்டுக்கள் மாணவர்கள் தாமே சுயமாகக் கற்பதற்கு வழிவகை செய்வதால், இவற்றைச் 'சுயகற்றல் கட்டுக்கள்' என்றும் அழைப்பர். நழுவங்கள், படச்சுருள்கள், 8 மி.மீ. படங்கள் திட்டமிட்டுக் கற்பிக்கும் நூல்கள் போன்ற பல்வேறு சாதனங்களில் பொருத்தமான வற்றைச் சிறப்புற நிர்வகிக்க ஒரு தனிப்பயிற்சி பெற்ற வல்லுநரையும் நியமித்தால், இம்மையம் சிறந்து செயலாற்றும் எனலாம்.

பல்வகை ஊடகங்கள் வாயிலாகத் தகவல் அளித்தல் என்பதன் விளக்கும் கற்றலுக்கான தகவல்களை, வண்ணக் காட்சிகளாகவும் (பொருட்கள், மனிதர்கள், உருவங்கள், நிகழ்வுகள், செய்முறைகள் போன்றவை இடம்பெறும்) காட்சிகளில் இடம்பெறுபவை இயற்கையில் அமைவதைப் போன்றே அசைவுகளுடன் கூடியதாகவும், ஒவ்வொரு காட்சியிலும் தேவையான இடங்களில் பொருத்தமான ஒலிகளை (பேச்சுகள் உட்பட) இணைத்தும் கணினித் திரையில் தோன்றச் செய்தலையே தகவல் நுட்பவியலில் பல்லூடக வழி தகவலளித்தல் என்றழைக்கப் படுகிறது.

**பல்வகை ஊடக வழி தகவல் அளித்தல் முறைகள்**

சில பல்லூடகவழி தகவலளிப்பு முறைகளில், காட்சிகள் ஒன்றன்பின் ஒன்றாக நேர்க்கோட்டு முறையில் நகரும் வகையில் அமைக்கப்பட்டிருக்கும். இம்முறையில் காட்சிகளை முன்னோக்கிச் சென்றோ அல்லது பின்னோக்கிச் சென்றோ பார்க்க முடியும். ஆனால் நாம் பார்த்துக்கொண்டிருக்கும் திட்டத்தில் உள்ள ஏதேனும் ஒரு காட்சி அல்லது அக்காட்சியில் இடம்பெறும் பொருள் பற்றி மேலும் விரிவான தகவல்கள் இடம்பெற்றிருக்கும். வேறொரு கோப்புக்குத் தாவிச் செல்ல முடியாது. அதாவது கற்பவர் தான் பயன்படுத்தும் திட்டத்தின் வழியேதான் செல்ல முடியும் மாறாகத் தான் விரும்புவனவற்றைக் கேட்டு பெற முடியாது. இங்குப் புத்தகத்தைப் போன்றே பல்லூடகக் காட்சிகள் அடங்கிய தொகுப்பைப் பார்வையிட வேண்டியுள்ளது.

ஆனால் கற்பவரோடு இடைவினை புரியும் பல்லூடக வழி தகவல் அளிக்கும் திட்டத்தில் ஏதேனும் ஒரு காட்சியைப் பார்த்துக்கொண்டிருக்கும்போதே (உரைநடைப் பகுதி, உருவங்கள் போன்றவை) அதில் கூறப்பட்டுள்ள புதிய கருத்து அல்லது அதில் இடம்பெறும் உருவம் ஆகியவற்றைப் பற்றி மேலும் என்னென்ன தகவல்கள் (செய்திகள், படங்கள், ஒலிகள், வடிவம்) உள்ளன என்பதை அறிய அதனிமீது (*Hot spot*), *Mouse*ஐ,'கிளிக்' செய்தால் நாம் அதனுடன் தொடர்புடைய வேறு ஒரு கோப்பை (*File*) பார்வையிட

முடியும். ஆகவே நாம் அறிவை பெருக்கிக் கொள்ளும் வண்ணம் 'புரோகிராமின்' (*Programme*) ஒரு கோப்பிலிருந்து தாவித்தாவி பல்வேறு கோப்புகளுக்குச் சென்று பார்வையிட முடியும். அதாவது நாம் காட்சிகளைப் பார்வையிட ஒரு சட்டத்திலிருந்து (*Frame*) அடுத்த சட்டத்திற்கு நேர்கோட்டில் செல்ல வேண்டும் என்ற நியதி இல்லாமல் பக்கவாட்டிலும் தாவிச் செல்ல முடியும்.

பல்வகை ஊடகங்கள் வாயிலாக தகவல் அளித்தலில் இடம்பெறும் ஊடக உட்கூறுகள்

| ஊடக உட்கூறு | தோன்றிடச் செய்யும் முறை |
|---|---|
| உரைநடை | திரையில் தகவல் சொற்கள் வடிவத்தில் வாக்கியமாக அமைந்து காணப்படும். |
| படங்கள் | புகைப்படங்களும் வரைபடங்களும் காணப்படும். |
| திரைப்படங்கள் | தொலைக்காட்சியைப் போன்றே கம்ப்யூட்டர் திரையில் படங்களை ஓடச் செய்யவும். |
| இயக்கும் | உருவங்கள் அசைந்து உயிரோட்டத்துடன் இயங்குவதைப் போன்று காணப்படும் (எ.கா) கார்ட்டூன்கள் |
| ஒருங்கிணைப்பு | கம்ப்யூட்டர் மென்திட்டம் மூலம் பல்லூடக வழித் தகவல் அளிப்பு ஒருங்கிணைக்கப்படுகிறது தவிர ஒரு ஊடகத்திலிருந்து இன்னொரு ஊடகத்திற்குத் தாவிச் செல்ல முடியும். |

பல்வகை ஊடகங்கள் வாயிலாகத் தகவலளித்தலை நடைமுறைப்படுத்த தேவையான கருவிகள்

1. கம்யூட்டர்
2. டிஜிட்டல் கம்ப்யூட்டர் 'அனலாக்' முறையில் மாற்றியமைக்கும் கருவிகள் ஆகியவற்றிற்கு இடையே பாலமாக அமையும் வன்கலங்கள்.
3. பல்லூடக வழியில் தகவல்களைப் பகுத்து ஆராயவும் முறைப்படுத்தவும் தேவையான கம்ப்யூட்டர் வன்கலங்கள்.
4. பல்வேறு வகை தகவல்களை ஆய்வுசெய்து ஒருங்கிணைக்கும் மென்பொருட்கள் பல்வகை ஊடகங்கள் வாயிலாகத் தகவல் அளித்தலின் பயன்கள்.

அனைத்துத் தகவல்களும் சிறந்த முறையில் வகைப்படுத்தப்பட்டு சேமித்து வைக்கப்படுகின்றன. வேண்டும்போது தேவையானவற்றை மட்டும் விரைவாகப் பெற்றிட முடியும். இதைத் திட்டமிடுதல் விவரத் தொகுப்பு கல்வியளித்தல், பொழுதுபோக்கு, தொழிற்சாலைகள், வியாபாரம் ஆகிய துறைகளில் திறன்பட பயன்படுத்த முடியும்.

### பல்நோக்குடை ஊடகப் பெட்டகங்கள்

மாணவர்கள் தாமாக கற்க உதவும் வகையில் ஒரே தலைப்பைச் சார்ந்த கற்றல் பொருட்கள் வெவ்வேறு வகை ஊடக வடிவங்களில் தயாரிக்கப்பட்ட்டு கையடக்கமாக வுள்ள பெட்டகங்களில் கிடைக்கின்றன.

இவற்றில் அடங்குபவை பின்வருமாறு

- அச்சிடப்பட்ட சிறு கையேடு
- ஒளிஊடுருவும் விளக்கங்கள்
- நழுவங்களின் தொகுப்பு
- ஒலி நாடா

- அச்சடிக்கப்பட்ட விளக்கப் படங்கள்
- படச்சுருள்கள்
- குறுவடிவ திரைப்படங்கள்

இத்தகைய பெட்டகங்களைத் தயாரிப்போர் அப்பாடத் துறையில் வல்லுநர்களாகவும் கற்பித்தல் அனுபவம் உடையவர்களாகவும் இருப்பார்கள். ஒலி ஒளிநாடாக்கள் சிறந்த ஆசிரியர்கள் அப்பாடத் தலைப்பை கற்பித்தலைப் பதிவு செய்தவையாகும்.

தொலைநிலைக் கல்வியில் இத்தகைய பல்நோக்கு ஊடகப் பயன்படுத்துதல் அதிகரித்து வருகிறது.

### பல்லூடகத்தின் பயன்களில் சில பண்புகள்

- பொழுதுபோக்கு
- முதன்முதலாகப் பல்லூடகம் விளையாட்டு மென்பொருள் தயாரிப்பதற்கு பயன்படுத்தப்பட்டது. விளையாட்டின் தரத்தை நிச்சயமாகப் பல்லூடகம் அதிகரிக்கிறது. அதுபோல பல்லூடகம் வாயிலாகக் கற்பிக்கப்படும் பாடங்கள் சிறந்த கற்றலை ஏற்படுத்துகிறது.

### மென்பொருள் பயிற்சி

மென்பொருள் தயாரிப்பு நிறுவனங்கள் தங்களது மென்பொருளின் செய்முறை விளக்கத்தைப் பல்லூடகம் கொண்டு விளக்குகின்றனர். இதன் மூலம் மென்பொருள் விற்பனையும் அதிகரிப்பதோடு சுயமாகப் பயனாளிகள் கற்று பயிற்சியெடுக்க உதவுகிறது.

### கல்வி மற்றும் பயிற்சி

ஆசிரியர் பயிற்சியில் கற்றல் திறன்களைப் பல்வேறு பாடங்களில் வளர்ப்பதற்கு பல்லூடக மென்பொருள் பயன்படுகிறது. பொதுவாக மொழிகளைக் கற்பித்தலுக்குப் பெரிதும் பயன்படுத்தப்படுகிறது. ஆசிரியர் பயிற்சி போன்ற வகைகளில் பல்லூடகம் பயன்படுகிறது. சுயகற்றல் முறையில் தொலைதூரக் கல்வியில் பயிலும் மாணவர்களுக்குக் கற்றல் ஒளிபரப்பிற்குப் பல்லூடகப் பாடங்கள் மிகுந்த பயனளிக்கின்றன. இதன் சிறப்பு என்னவெனில் உண்மையான ஒலிப்படங்கள் செயற்கை இயங்கும் நகரும் படங்கள் இடைவினைத் தொடர்பு ஏற்படுத்துவதே ஆகும்.

### இணையம்

பயனாளிகள் எளிதில் சோர்வும் ஆர்வமின்மையையும் அடைகின்றனர். படங்கள், ஒலி வரைபடங்கள், ஒளிக்காட்சிகள் மூலம் இணையதளத்தின் குறிக்கோள் முழுமையாக நிறைவேற்றப்படும்.

## பல்லூடக தயாரிப்பு மென்பொருள், தகவல் சேமிப்பு மையங்கள்

தகவல் சேமிப்பு தளங்கள் என்பது பல்வேறு தகவல்களைச் சேமிக்கும் தளமாகத் திகழ்கிறது. நிழல்கள் உரைகள் ஒலி வீடியோ கோப்புகள் சேமிக்கப்பட்டுள்ளன. பல்லூடக தயாரிப்பு மென்பொருளைக் கொண்டு பல ஊடகங்களை ஒருங்கிணைக்க இயலும். நகராப் படங்களில் டிஜிட்டல் விளைவுகளை இணைக்கப்பட்டு நகரும் படங்களாக்கப்படுகின்றன.

போட்டோ பெயிண்ட்டிங்குகள் அனைத்தும் பிட்மேப் வடிவத்தில் சேமிக்கப் படுகின்றன. இவற்றைப் பெயிண்ட் புரோகிமைப் பயன்படுத்தி மாற்றம் செய்யவோ அல்லது திருத்தம் செய்யவோ இயலும். பிட்மேப் பைல்களின் அளவைக் குறைத்து சுருக்க வடிவத்தில் சேமிக்க இயலும்.

## டிஜிட்டல் ஒலி தரவுகள்

அனைத்து ஒலிகளும் ‘அனலாக் சிக்னல்’ வடிவில் உள்ளன. இவற்றை டிஜிட்டல் வடிவமாக மாற்றியமைத்து தரவுகளாகச் சேமித்து தேவைப்படும்போது பயன்படுத்திக் கொள்ளலாம். பல்வேறு மென்பொருள் நிரல்கள் ஒலிகளாக்க திருப்பம் செய்யப் பயன்படுகின்றன. சாளரத்தின் ஒலிப்பதிவைப் பயன்படுத்திக் கொள்ளலாம். பொதுவாக நிரல்கள் விண்டோசின் ஒலிகளின் வடிவங்களை அமைக்கப் பயன்படுகிறது.

## முப்பரிமாண ஒலி

முப்பரிமாண ஒலிகளை எழுப்ப (*Sound Retrieval System* (*SRS*)) பயன்படுகிறது. இந்நுட்பத்தை பயன்படுத்தி பதிவுசெய்து இசைத்தட்டில் எதிரொலியுடன்கூடிய சிறப்பு விளைவுகள் ஏற்படுத்த முடியும்.

## பல்லூடக இறுதிக் காட்சி தயாரித்தல்

வீடியோ சுருக்கி (*Video Compressor*) பயன்படுத்தி படக்கோப்புகள் வெகுவாகச் சுருக்கப்படுகின்றன. இவை இரு வகைப்படும்.

*Loss Compressor* - சுருக்கப்பட்ட பின்னர் மாறாக தரம் இருக்கும்.
*Loss Compressor* - தரம் சற்று குறைந்திருக்கும்.

சுருக்கியமைக்கும் முறை: சுருக்கியமைக்கும் நுட்பம் மூலம் வீடியோ படங்களிலுள்ள தரவுகளை நீக்க வேண்டும். இவை இரு வகைப்படும்.

சட்டகத்திற்கிடையே சுருக்குதல் - (*Interframe Compression*) என்பது முதல் சட்டகத்திலிருந்து அடுத்த சட்டகத்திற்கிடையேயுள்ள இடைவெளியை அர்த்தம், பொருள் மாறாமல் குறைத்தல் ஆகும்.

பல்லூடக படங்களின் அளவு மற்றும் தம் (*Images size and Quality*) பெரும்பாலான வீடியோ (சாளரம்) சட்டகத் திரையானது சிறிதாக இருக்கும். வீடியோவில் 256 நிறங்கள் 320 என்ற *Standard Image Format* (*SIF*) இல் தோன்றகிறது. இவை 640 480 *VGA*

ஒளிப்பரப்பின் நான்கில் ஒரு பங்கு ஆகும். ஆனாலும் இவ்வயவீடு கற்றல் - கற்பித்தல்சார் பயிற்சிகளுக்கு போதுமானதாக ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

வீடியோ பதிவு செய்தல் (*Video Editing*) : அனலாக் வீடியோ படங்கள் டிஜிட்டல் ஆக மற்ற வீடியோ *capture card* பயன்படுத்த வேண்டும். சாளர வீடியோ எடிட் (*Windows Video Edit Progam*) நிரலின் மூலம் சேமிக்கப்பட்ட தரவுகளை எடிட் செய்யலாம். பின்னர் *Scan Converter* அல்லது *RGS to NTTSC Converter* செய்யப்பட்ட படங்கள் மின்னணுவில் இருந்து அனலாக் படங்களாக மாற்றப்படுகின்றன.

## வலைத்தள கருவிகள் (INTERNET TOOLS)

சில முக்கியமான வலைதள கருவிகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

- தகவல் பெறும் கருவிகள் (*Information Retrieval Tools*)
- தகவல் தொடர்பு கருவிகள் (*Communication Tools, E-mail,Telenet, Usenet*)
- பல்லூடக தகவல் கருவிகள் (*Multimedia Information Tool - - World wide web*)
- தகவல் பெறும் கருவிகள் (*Information Retrieval Tools*)
  தகவல் பெறும் கருவிகள் இருவகைப்படும்

  1. கோப்பு மற்றும் நெறிமுறை (*File Transfer Protocol FTP*)
  2. கோப்பர் (*Gopher*)

(அ) கோப்பை மாற்றும் நெறி (*File Transfer Protocol & FTP*): பல்வேறு வகையான கோப்புகளாகிய உரை, வரைபடம், ஒலி போன்றவற்றை *FTP* கொண்டு மாற்றியமைத்து பயன்படுத்த முடியும். ஒரு பயனாளி மென்பொருள் துணையுடன் தூரத்திலுள்ள சேவை மையத்தை (*Server*) தொடர்புகொண்டு, தகவல்களை பெறவோ அல்லது அனுப்பவோ செய்கிறார்.

(ஆ) கோப்பர் (*Gopher*) கோப்பர் எனும் கருவி மெனு மைய தேவையானவற்றை தேர்ந்தெடுத்து பயனாளிகள் தகவல்களை பெறவோ அல்லது அனுப்பவோ முடியும்.

(இ) தகவல் தொடர்பு கருவிகள்

## தகவல்தொடர்பு கருவிகள்

1. மின்னஞ்சல் (*E -mail*)
2. டெல்நெட் (*Telnet*)
3. பொது பயன்பாட்டுவலை (*Usernet*)

இவற்றை ஒவ்வொன்றாகப் பார்ப்போம்.

மின்னஞ்சல் (*E -mail*): மின்னஞ்சல் என்பது செய்திகளை அல்லது கோப்புகளை எலக்ட்ரானிக் முறைப்படி அனுப்ப உதவும் இணையதள கருவியாகும்.

டெல்நெட் (*Telnet*): டெல்நெட் என்பது உலகின் பல்வேறு பகுதிகளிலுள்ள பயனாளிகளை இணைக்கிறது. டெல்நெட்டின் சேவையானது ஹோஸ்ட் மெனைச் சார்ந்துள்ளது. இது சாதாரண கோப்பு மாற்றத்தைவிட சிறந்ததாகும்.

பொதுப் பயன்பாட்டு வலை (*User net*): ஒரு பயனாளி ஒரு கட்டுரையை இவ்வமைப்பில் உள்ள அனைவருக்கும் அனுப்ப முடியும். அக்கட்டுரை மீதான விவாதத்தை ஒவ்வொருவரும் எடுத்துரைப்பார்கள். பொது பயன்பாட்டு வலையைப் பயன்படுத்தி, ஒரு குறிப்பிட்ட தலைப்பின் கீழ் தகவல்களைத் தேடப்பெற முடியும். (எ.கா) அரசியல், அறிவியல், பொது அறிவு, சுற்றுச்சூழல், மேலும் பல தலைப்புகள்.

**பல்லூடக தகவல் கருவிகள்**

உலக விரி இணையம் (*World Wide Web*) உலகளவில் அதிகமாகப் பயன்படுத்தப்படும் இண்டர்நெட் கருவியாகும். ஒரு வலைத்தளத்தில் உள்ள தகவல்களை மற்றொரு வலையின் மூலம் பெறமுடியும். பயனாளிகள் எளிதாகவும் நட்பு ரீதியாக வலைத்தளத்தை பயன்படுத்த இயலும். *WWW* பயன்படும் வார்த்தைகள் பின்வருமாறு:

பொதுவான தகவல் மைய - செயல்முறை இடைவினைத் தொடர்பு (*Common Gateway Interface - CGI*) கணினிக்கும் இணையதள தகவல் மையத்திற்கும் இடையிலான தொடர்பு ஆகும்.

மீவுரை மொழி குறியீடு (*Hyper Text Transfer Protocol - HTTP*) இணைய பக்கங்கள் உருவாக்கப் பயன்படும் மொழி ஆகும்.

மீவுரை தொடர்பு நெறிமுறை - (*Hyper Text Transfer Protocol - HTTP*) இணைய தகவல் மையத்திற்றும் பயனளிக்காமல் தொடர்பு கொள்ளலாம். இமேஜ் மேப் (*Image map*) வரைபட நிரலின் மூலம் தகவல்களை தேட இயலும்.

பல்நோக்கு வலை மின்னஞ்சல் விரிவாக்கும் (*Multipurpose Internet Mail extensions - MIME*) வலைதளத்தின் தகவல் அனுப்புதல் மற்றும் பெறுதலுக்கான ஒரு வரையறை ஆகும்.

தகவல் சேவை மையம் (*Server*) இணையதள தகவல் சேவை மையம் மூலம் இணையதள பக்கங்கள் உருவாகிறது. விரிவாக்க பாதுகாப்பான மீவுரை மாற்ற நெறிமுறை (*SHTTP*) இணைய பயனாளிக்கு தகவல் மையத்திற்கும் பாதுகாப்பு முறையாகும். பாதுகாக்கப்பட்ட சாக்கட் லேயர் (*Secure Socket Layer*) பாதுகாப்பான தரவுகளை வளைத்தளத்தில் பரப்புகிறது.

பொதுவான வலை வழிகாட்டி (*URL*) இணைய பக்கத்தின் முகவரி.

பல்லூடக தகவல் தேடுதல் கருவிகள்

**துறை / புலம்சார் தேடுதல் முறை Domain Name System (DNS)**

ஒவ்வொரு இணையதளமும் தனக்கென துறைசார் தகவல் தொகுப்புகளை உள்ளடக்கியுள்ளது. அத்துடன் உள்ள சேவை மையத்துடன் பிற இணையதளத்திலி ருந்து தொடர்புகொண்டு துறைசார் தகவல்களைப் பெறமுடியும்.

**துறை / புலன்களின் தகவல் தொகுப்புகள் ஏழு வகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன.**

**புலம் / துறை - விவரங்கள் பின்வருமாறு**

- வியபாரம் (*com*) வியபார நிறுவனங்கள்
- *edu*-கல்வி - கல்வி நிறுவனங்கள் - கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள்
- *gov*-அரசு - அரசுசார் அமைப்புகள்/ நிறுவனங்கள்
- *int*-பன்னாட்டு - நிறுவனங்கள்
- *mil*-இராணுவம் - அமெரிக்க இராணுவசார் தகவல்கள்
- *net*-இணையம் - மேற்கூறிய துறைகளில் சேராத வகை தகவல்கள்
- *org*-மேற்கூறிய அமைப்பில் சேராத வகைகள்

இவ்வாறு துறை / அமைப்பு ரீதியாக அணுகி தகவல்களை பெறமுடியும். மற்றொரு வகையில் புவியியல் ரீதியாக (நாடுகள், மாநிலம், மாவட்டம்) தளங்களை அணுகி தகவல்களைப் பெற முடியும். நாடுகளின் குறியீடு இரு எழுத்துகளில் குறியிடப்படுகின்றன. *AU* - & *Australia, BE* & *Belgium, CA* - & *Canada, CH* & *Switzerland, De* & *Germany, DK* & *Denmark, IN* & *India, JP - Japan, US* & *United State of America.*

மேலும் புலம் அல்லது துறைசார் தகவல் தொகுப்புகள் மேலும் பல பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. (எ.கா) கல்வி என்பது ஆரம்பப்பள்ளி, உயர்க்கல்வி, மருத்துவம், பொறியியல் என்று பல பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. அவற்றுக்குள்ளாக மேலும் பல பிரிவுகள் உள்ளன. ஆகவே தகவல் தேவைப்படுவோர் படிப்படியாக தேடுதல் முறையைக் கையாண்டு இறுதியில் தேவையான தகவல்களை மிகச்சரியாக, சுலபமாக, குறுகிய நேரத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.

**கல்விப் பயன்கள்**

- மாணவர்களின் தேடிக்கண்டுபிடிக்கும் ஆர்வத்தை வளரச் செய்கிறது. ஏதேனும் ஒரு தலைப்பைப் பற்றி கற்றிடும்போது அதனுடன் தொடர்புடைய பல்வேறு தகவல்களையும் படங்கள், காட்சிகள், ஒலி, சொல் வடிவங்களில் பெற்று முழுமையான அறிவைப் பெற முடிகிறது. ஆசிரியர் மட்டுமே தகவல்களை அளிக்கும் பொக்கிஷம் என்ற நிலை மாறுகிறது.
- மாணவர்கள் கேட்கும் கேள்விகளுக்கு ஆசிரியர் வரைபடங்கள், திரைப்படங்கள், ஓவியங்கள் துணைகொண்டு பதிலளிக்க முடியும்.
- மாணவர்கள் கற்கும் பொருட்கள் தொடர்பான தகவல்களை காட்சிப் பொருளாக கண்டுணர்வதோடு தத்ரூபமான வடிவத்திலும் பெறலாம்.
- வகுப்பறைக் கற்றலுடன் மாணவர்கள் வீட்டிலிருக்கும்போது பல்வகை ஊடகங்கள் வாயிலாக தகவல் பெறுதல் முறையை கம்யூட்டரில் பயன்படுத்தி தாமே மேலும் அறிவை பெருக்கிகொள்ள முடியும்.
- படைப்பாற்றலை வளர்க்கும் விகிதத்தில் மாணவர்கள் தமது சுயக் கருத்துக்களை வெளிப்படுத்தும் விதமாக அமையப்பெறும் ஒப்படைப்புகளை ஆசிரியர் அவர்களுக்கு வழங்க இது இடமளிக்கிறது.

- கம்ப்யூட்டர் துணைகொண்டு பயிற்சி அளிக்கும் திட்டத்தில் இது மிகவும் பயன்படுகிறது.
- தொல்பொருள் காட்சியகத்தில் உள்ளவற்றைப் பற்றி பல விரிவான தகவல்களை மாணவர்களுக்கு அளிக்க இது மிகவும் பயன்படுகிறது.
- ஆசிரியர்கள் பல்வகை ஊடகங்கள் வாயிலாக தகவல் அளிக்கும் முறையில் சுயக்கற்றல் கட்டுகளைத் தயாரிப்பதன் மூலம் மாணவர்களின் திறன்மிகுந்த சுயகற்றலுக்கு வழிகோல முடியும்.

**முடிவுரை**

நாம் தொழில்நுட்ப யுகத்தில வாழுகிறோம். நமது அன்றாட வாழ்வில் அனைத்துத் துறைகளிலும் கணினியின் பயன்பாடு தவிர்க்க முடியாததால். அனைவரும் கணினி குறித்த அடிப்படை பயன்பாடுகளை அவசியம் கற்றுக்கொள்ள வேண்டும். கணினியைக் கருவியாக அல்லது ஊடகமாக பயன்படுத்துவதே 'கல்வியில் கணினி' ஆகும். ஆரம்பப்பள்ளி முதல் பல்கலைக்கழகம் வரை கணினிக் கல்வியின் தேவை முக்கியத்துவம் நாம் அனைவரும் அறிந்ததே. அதற்கென முறையான பயிற்சிபெற்ற கணினிக் கல்வி ஆசிரியர்கள் தேவை. அவர்கள் கணினி குறித்த அடிப்படை அறிவு விழிப்புணர்வு பயன்பாடுகள் ஆகியவற்றைக் கற்பித்தலில் நவீன உத்திகளையும் நுட்பங்களையும் பயன்படுத்தும் திறன்களையும் திறமைகளையும் பெற்றிருக்க வேண்டும். அனைத்துப் பாடங்களின் கற்பித்தல் - கற்றலில் தேவைக்கேற்ப உரிய இடத்தில் கணினித் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துவதற்கான பயிற்சி அளிப்பதே கல்வியில் கணினி கற்பித்தலின் நோக்கமாகும்.

# புறநானூற்றில் மகளிர் நம்பிக்கைகள்

சே.மலையரசன்,
முனைவர்பட்ட ஆய்வாளர், தமிழ் உயராய்வு மையம்,
செந்தமிழ்க் கல்லூரி, 54, தமிழ்ச் சங்கம் சாலை, மதுரை.

## முன்னுரை

சமுதாய உணர்வுகள், நம்பிக்கைகள், பழக்கவழக்கங்கள், பண்பாடுகள் முதலான பல்வேறு வாழ்வியல் விழுமியச் சிந்தனைகளைப் பிரதிபலிக்கும் பெட்டகமாகத் திகழும் இலக்கியம் புறநானூறு. சங்ககாலம் தொட்டு இக்காலம் வரையிலும் மக்களிடையே பல்வேறு நம்பிக்கைகள் நிலவி வருகின்றன. மக்களால் உருவாக்கப்படும் நம்பிக்கைகள் மக்களைப் பாதுகாக்கவும் பயன்படுகின்றன. மனிதனின் அச்சஉணர்வினை அடிப்படையாகக் கொண்டு நல்லதே நடக்க வேண்டும் என்ற மனித மனத்தின் விழைவால் தோன்றியவையே நம்பிக்கைகள். அவற்றிலும் குறிப்பாகச் சங்க கால மகளிரிடத்தே நிலவிய நம்பிக்கைகளைப் புறநானூற்றுப் பாடல்வரிகள்வழி ஆராய்வது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## நம்பிக்கை

நம்பிக்கைகள் எப்போது உருவாயின? என்று அறுதியிட்டுக் கூறமுடியாது. நம்பிக்கைகளின் தோற்றம் குறித்து, **''தீமைகளிலிருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்ளவும் நன்மைகளை அவாவுவதும் மனிதனின் இயல்பு என்ற நிலையில் மனிதமனம் சில கற்பிதங்களை ஏற்படுத்திக் கொண்டு தங்களது செயலில் முனைந்து செயலாற்றுகின்றது. தங்களது செயலில் வெற்றிக் கிடைத்தால் நன்மையாகவும் தோல்வி ஏற்பட்டால் தீமையாகவும் கருதி நிமித்தங்களையும் நிமித்தக் கூறுகளையும் கற்பித்து நம்பிக்கைகளை உருவாக்கிக் கொள்கின்றது. இந்நம்பிக்கைகள் மக்களிடையே இயற்கையாகவும் செவிவழியாகவும் பரவும்பொழுது நன்மை நிகழவேண்டுமென்ற எதிர்பார்ப்பினை உடைய மனித உள்ளம் சோதனைக்கு ஆட்படுத்தாமல் அதனை ஏற்றுக் கொள்கிறது. பின்னர் சமுதாயச் செல்வாக்குப் பெற்றுக் காலப்போக்கில் நம்பிக்கைகளாக நிலைப்பேற்றினைப் பெற்றுவிடுகின்றன. எனவே இவற்றை உள்ளத்தின்**

**உருவாக்கம் என்று உளவியலார் கருதுவது பொருத்தமானதாகவே தோன்றுகிறது**'' என்பார் கா.காந்தி தனிமனித வாழ்வில் நிலவும் நம்பிக்கைகள் பலதரப்பட்டவையாக இருந்தபோதிலும் காலப்போக்கில் பலராலும் ஏற்றுக்கொள்ளப்படும் போது அவைச் சமுதாய நம்பிக்கைகளாக உருப்பெறுகின்றன.

## ஐம்படைத்தாலி அணிதல்

போரினை முதன்மையாகக் கொண்ட சமுதாயத்தில் ஈன்று புறந்தருதல் எந்தலைக் கடனே என்று மகனைப் பெற்றுப் பாதுகாத்தல் தாயின் கடமையாக இருந்துள்ளது. குழந்தைக்கு அணிவிக்கப்படும் ஐம்படைத்தாலி குழந்தைகளைக் காக்கும் என்ற நம்பிக்கையின் அடிப்படையில் தெய்வ நம்பிக்கை கொண்டு மகளிர் புலிப்பல் கோர்த்த தாலியைச் சிறுவர்களுக்கு அணிவித்திருந்ததை,

**தாலி களைந்தன்றும் இலனே** (புறம்.77:7)
**புலிப்பல் தாலிப் புன்றலைச் சிறாஅர்** (புறம்.374:9)

ஆகிய பாடல்வரிகள் வாயிலாக அறிய முடிகிறது.

## விரிச்சி கேட்டல்

போர் தொடர்பான சகுனம் பார்த்தலில் விரிச்சி கேட்டல் என்னும் நம்பிக்கையை பண்டையத் தமிழ்மக்களிடையே காணமுடிகிறது. "ஒரு செயலைத் தொடங்குவதற்கு முன்னர் பிறர் சொல்லக்கூடிய சொற்களைச் சகுனமாகக் கொள்ளும் வழக்கம் பழங்காலந்தொட்டே நிலவி வருகின்றது. விரிச்சி என்பது வருங்காரியத்தை விரிவாய் முன்னே தெரிவிப்பதாகும்.'' என்பார் டாக்டர் சு.வித்தியானந்தன்

ஏதேனும் ஒரு செயலைச் செய்யத் தொடங்கும் முன்பாக அம்முயற்சிக்கு நல்லவிதமாகக் கைகூடுமா? நல்லவிதமான பலன் கிடைக்குமா? எனத் தெரிந்து கொள்வதற்காக விரிச்சி கேட்பர். இதனை 'நற்சொல்' என்றும் அழைப்பர். இந்நம்பிக்கை கொண்ட புறநானூற்று மகளிர் ஒரு செயலைச் செய்யத் தொடங்குவதற்கு முன்னர் நெல்லோடு முல்லை மலரைத் தூவி தெய்வத்தைத் தொழுதபடி பெரிதும் முதிர்ந்த பெண்கள் நற்சொல் கேட்க நின்றமையையும் விரிச்சி பொய்த்ததாக,

**''என்னை மார்பிற் புண்ணும் வெய்ய**
**நடுநாள் வந்து தும்பியும் துவைக்கும்**
**நெடுநகர் வரைப்பின் விளக்கும் நில்லா**
**துஞ்சாக் கண்ணே துயிலும் வேட்கும்**
**அஞ்சுவரு குராஅற் குரலுந் தூற்றும்**
**நெல்நீ றெறிந்து விரிச்சி ஓர்க்குஞ்**
**செம்முது பெண்டின் சொல்லும் நிரம்பா''** (புறம்.280:1-7)

என்ற புறநானூற்றுப் பாடல் வரிகள்வழி அறியலாம்.

**நிமித்தம் பார்த்தல்**

ஒவ்வொரு மனிதனுடைய பிறப்பு முதல் இறப்பு வரை எண்ணற்ற நம்பிக்கைகள் கொண்டிருப்பதைக் காண்கிறோம். வாழ்வில் பின்பு நிகழவிருக்கும் நன்மை, தீமைகளைச் சில குறியீடுகளின் வாயிலாக முன்னமே உணர்த்துவதற்கு 'நிமித்தம்' என்று பெயர். தற்போது சகுனம் என்ற சொல்லை நிமித்தம் என்ற சொல்லுக்கு இணையான பயன்பாட்டுச் சொல்லாகக் குறிப்பிடலாம்.

நிமித்தம் என்பது பின்னர் நிகழும் நன்மை, தீமைகளை முன்னரே அறிவிக்கும் குறி என்பர். அரசனின் உறுதிச் சுற்றத்தார்களாகக் குறிப்பிடப்படும் ஐவருள் நிமித்திகன் எனப்படும் வருவது கூறவல்ல குறி சொல்பவரும் உண்டு என்பதைச் சங்கப் பனுவல் பகர்கின்றது. பழந்தமிழர் இதனைப் 'புள்', 'நிமித்தம்' ஆகிய சொற்களால் சுட்டியுள்ளனர். தொல்காப்பியம் நிமித்தம் என்று குறிப்பிடுவதை,

**''தன்னும் அவனும் அவளுஞ் சுட்டி**
**மன்னும் நிமித்தம் மொழிப்பொருள் தெய்வம்**
**நன்மை தீமை அச்சஞ் சார்தலென்று**
**அன்ன பிறவும்... ''** (தொல்.பொருள்.39:1-4)

என்ற நூற்பாவழி அறியலாம். நிமித்தம் என்ற சொல்லுக்குத் தமிழ்ப் பேரகராதி "காரணம், நிமித்தம், சகுனம், அடையாளம், பொருட்டு என்ற ஐந்து பொருட்களைச் சுட்டுகின்றது."

புறநானூற்று மகளிர் நிமித்தங்கள் பார்த்துத் தம் செயலைத் தொடங்கியுள்ளதையும், நன்நிமித்தத்தில் செயல்கள் செய்தால் அவை நன்மையில் முடியும் என்று நம்பிக்கை கொண்டிருந்ததையும் தீநிமித்தங்கள் குறித்த பயம் இருந்ததையும்,

**''அஞ்சுவரத் தகுந புள்ளுக்குரல் இயம்பவும்''** (புறம்.41:7)

என்னும் பாடல் வரியால் அறியமுடிகிறது.

**பேய் நம்பிக்கை**

மனிதர்கள் இறந்தபிறகு அவர்களுடைய ஆன்மா அழியாமல் பேய் வடிவில் இருப்பதாக மகளிர் நம்பிக்கை கொண்டிருந்தனர். பிணமிட்டுக் கவிழ்த்துப் புதைக்கப்பட்ட தாழியின் குவிந்த மேற்புறத்தில் சிவந்த காதுகளையுடைய ஆண்கழுகுகளும் பெண்கழுகுகளும் அச்சமில்லாத வலிய வாயையுடைய காக்கையும் கோட்டான்களும் இருப்பதாகவும், மக்கள் நடுஇரவில் அஞ்சும்படி ஒலி எழுப்பக்கூடிய கூகையானது பெரும்பாலும் சுடுகாட்டிற்கு அண்மையில் வாழ்வதாகவும் நம்பியதை,

**''வாய்வன் காக்கையுங் கூங்கையுங் கூடிப்**
**பேஎ யாயமொடு பெட்டாங்கு வழங்கும்**
**காடுமுன் னினனே ...''** (புறம்.238:3-5)

எனப் பேய்களின் செயல்பாடுகளைச் சுட்டுகிறது. போரில் புண்பட்ட தலைவன் ஒருவனின் மனைவி, அவனுடைய புண்களை ஆற்றுவதற்குப் பல செயல்களைச் செய்கிறாள்.

**''தீங்கனி இரவமொடு வேம்புமனைச் செரீஇ**
**வாங்குமருப்பு யாழொடு பல்இயம் கறங்கக்**
**கைபயப் பெயர்த்து மைஇழுது இழுகி**
**ஐயவி சிதறி ஆம்பல் ஊதி**
**இசைமணி எறிந்து, காஞ்சி பாடி**
**நெடுநகர் வரைப்பின் கடிநறை புகைஇக்**
**காக்கம் வம்மோ காதலந் தோழி**
**வேந்துறு விழுமம் தாங்கிய**
**பூம்பொறிக் கழற்கால் நெடுந்தகை புண்ணே ''**

என புறம்.281ம் பாடல் போருக்குச் சென்று விழுப்புண்ணோடு வரும் தம் கணவரைப் பேய் தீண்டாதவாறு மனைவியர் பாதுகாத்தனர் என்பதைச் சுட்டுகிறது. இரவ இலையையும், வேப்பிலையையும் சேர்த்து வீட்டில் செருகிவைத்தும், யாழோடு பல இசைக்கருவிகள் முழங்க ஆம்பற்குழலினை ஊதியும், கையை மெல்ல எடுத்து மையாகிய மெழுகினையிட்டு வெண்சிறு கடுகினை அப்பிவைத்தும், மணிகள் ஒலிக்க நறுமணம் கமழும் அகிற்புகை உண்டாக்கியும் இருந்த காட்சிகள் வீரப் புண்பட்ட வீரர்களின் உடலினைப் பேய்கள் தீண்டாதவாறு தடுக்கலாம் என்று நம்பிக்கை கொண்டிருந்ததை அவர்தம் செய்கை புலப்படுத்துகிறது.

## நிறைவுரை

தொன்மைக் காலம் தொட்டு தமிழ்ச் சமூகத்தில் பண்பாட்டையும், பெருமையையும் காப்பதில் மகளிரின் பங்களிப்பு குறிப்பிடத்தக்கதாக அமைந்துள்ளது. மகளிரின் வாழ்வியலை உற்றுநோக்கும்போது அவர்களது வீரம் நிறைந்த தாய்மைப் பண்பு, கணவர்நலம் பேணுதல், விருந்தோம்பும் பண்பாடு, பயன் கருதாத பணி எனப் பிறப்பின் விழுமிய நோக்கம் நன்கு புலனாகிறது. இல்லற வாழ்வில் மகளிர் கணவரோடு இணைந்த அன்பு வாழ்வு மேற்கொண்டவர்களாக வாழ்ந்திருக்கின்றனர். குழந்தைகளுக்கு ஐம்படைத்தாலி அணிவித்தால் குழந்தையைத் தெய்வம் காக்கும் என்ற நம்பிக்கை, விரிச்சி கேட்டல், நிமித்தம் பார்த்தல், பேய் குறித்த நம்பிக்கைகள் மகளிரிடையே நிலவியதைப் புறநானூற்றுப் பாடல்கள் சான்றுகளின் வாயிலாக அறியமுடிகிறது. சிறந்த இல்லறம் பேணி நல்லறம் காத்தவர்களாகவும் சமூகம் சார்ந்த பல்வேறு பழக்க வழக்கங்கள், சடங்குகள், நம்பிக்கைகளைக் கடைப்பிடித்தவர்களாகவும் வாழ்ந்துள்ளனர் என்பதை அறியமுடிகிறது.

# பெண் மரபும் மீறலும்: ஆர்.சூடாமணி படைப்புகளை முன்வைத்து

**மு.சுகன்யா,**
முனைவர்பட்ட ஆய்வாளர், சென்னைக் கிறித்துவக் கல்லூரி,
தாம்பரம் - 600 059

இலக்கியங்கள் மனிதச் சமூகத்தை மேம்படுத்தவும், நெறிப்படுத்தவும் எழுந்தவையாகும். சமூகத்தில் காணலாகும் நிறை குறைகளைச் சுட்டிக்காட்டும் வகையில் அவை அமைந்துள்ளன. தற்கால இலக்கிய எழுத்தாளர்கள் சமூகத்திலும் குடும்பத்திலும் நிலவும் பெண் ஒடுக்குமுறைகளை, மதிப்பீடுகளைத் தத்தம் படைப்புகளில் பதிவு செய்கின்றனர். பெண்ணியப் படைப்புகள், பெண் மையப் படைப்புகள் என்று அவர்களின் படைப்புகள் இனங்காணப்படுகின்றன. பெண்ணியத்தையும், பெண்மொழியையும் பெருமளவு எடுத்துக்கூறுபவர்களாகப் பெண் படைப்பாளர்கள் அறியப்பெறுகின்றனர். வை.மு.கோதைநாயகி முதலாக இக்காலக்கட்டப் பெண் படைப்பாளர்கள் வரை பெண்களின் அகவுலக, புறவுலகச் சூழல்களை மையமிட்டுத் தம் படைப்புகளை வெளியிட்டுள்ளனர். தற்கால இலக்கிய ஆளுமைகளுள் குறிப்பிடத்தகுந்தவரான ஆர்.சூடாமணியின் படைப்புகளில் 'பிம்பம்', 'சோபனாவின் வாழ்வு' என்னும் இரு கதைகளிலும் மரபை மீறும் பெண் சித்திரிப்பை வெளிக்கொணர்வது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## ஆய்வு அணுகுமுறைகள்

'பெண் மரபும் மீறலும் : ஆர்.சூடாமணி படைப்புகளை முன்வைத்து' என்னும் தலைப்பிலான இவ்வாய்வு விளக்கமுறை அணுகுமுறையிலும், மதிப்பீட்டுமுறை அணுகுமுறையிலும் மேற்கொள்ளப் பெறுகின்றது.

## ஆய்வு ஆதாரங்கள்

'பெண் மரபும் மீறலும் : ஆர்.சூடாமணி படைப்புகளை முன்வைத்து' என்னும் இவ்வாய்விற்கு ஆர்.சூடாமணியின் படைப்புகள் முதன்மை ஆதாரங்களாகவும் ஏனைய ஆய்வுக்கட்டுரைகள், திறனாய்வு நூல்கள் துணை ஆதாரங்களாகவும் மேற்கொள்ளப் பெறுகின்றது.

## முன் ஆய்வுகள்

ஆர்.சூடாமணியின் படைப்புகள் குறித்து வெளிவந்த ஆய்வேடுகள், ஆய்வு நூல்கள் பிற ஆய்வு நூல்கள் முன் ஆய்வாக மேற்கொள்ளப் பெறுகின்றது.

## ஆர்.சூடாமணி

1954ம் ஆண்டில் தினமணிக் கதிரில் 'பரிசு விமர்சனம்' என்னும் சிறுகதையின் வழியாக எழுத்துலகில் அறிமுகமானவர் ஆர்.சூடாமணி ஆவார். 1954 முதல் 2004 வரையிலான ஐம்பது ஆண்டுகால எழுத்துப் பணியில் சிறுகதை, நாவல், குறுநாவல், நாடகம் என ஏறத்தாழ முப்பத்தேழு தொகுப்புகள் இவரது படைப்புகளாக வெளிவந்துள்ளன. இலக்கிய இதழ், வெகுஜன இதழ் என இருவேறு இதழ்களிலும் இவரது படைப்புகள் வெளியிடப் பெற்றுள்ளன. கலைமகள் நாராயணசாமி ஐயர் நாவல் விருது, இலக்கியச் சிந்தனை ஆண்டுப்பரிசு, தமிழக அரசின் தமிழ் வளர்ச்சி இயக்கப் பரிசு, கலைஞர் கருணாநிதி விருது முதலான பரிசுகளையும் விருதுகளையும் இவர் பெற்றுள்ளார். சூடாமணியின் படைப்புகளில் பெண்ணியச் சித்திரிப்புகள், மனித மனநிலைகள், சமூக ஏற்றத்தாழ்வுகள் முதலானவை மையப் பொருண்மையாக அமைந்துள்ளன.

'தொடக்கத்திலிருந்தே வித்தியாசமாகச் சிந்தித்துக் கதை எழுதுபவர் சூடாமணி. இவரது எழுத்துகளில் சமூகத்தேடல் உண்டு. வாழ்வின் பல்வேறு பரிணாமங்களை இவரது சிறுகதைகள் மையப்படுத்திக் காட்டுகின்றன.' (இரா.பிரேமா, ப.706)

என்று இரா. பிரேமா குறிப்பிடுவதற்கிணங்க குடும்பத்திலும் சமூகத்திலும் பெண் நிலையை உணர்த்தும் இவரது படைப்புகள் ஆண் - பெண் சமத்துவத்தை முன்வைக்கின்றன. பெண் மீது கட்டப்பட்டிருக்கும் மரபுகளைத் தகர்க்கும் சூடாமணியின் படைப்புகள் மனிதச் சமூகத்தை மேம்படுத்தவும், வளர்ச்சியடையவும் வழிவகுக்கின்றன. மனித மனதில் ஏற்பட வேண்டிய மரபுவழிப்பட்ட கருத்து மாற்றத்தை அழுத்தமாகவும் மென்மையாகவும் இவரது படைப்புகள் எடுத்துரைக்கின்றன.

'பிம்பம்' 'சோபனாவின் வாழ்வு' என்னும் இவ்விரு சிறுகதைகளிலும் பெண் வாழ்வில் ஊடுருவியிருக்கும் மரபார்ந்த கருத்துகளைச் சுட்டிக்காட்டி, அதனை மீறுகிற கதைப்போக்கினை சூடாமணி முன்வைக்கின்றார்.

**மரபு மீறல்**

தொடக்கக்காலப் படைப்புகளில் காணலாகும் மரபிற்குட்பட்ட பெண்கதை மாந்தர்களாக அல்லாமல் தன் சுய விருப்பத்திற்கு முன்னுரிமை அளிக்கும் பெண்கதை மாந்தர்களைச் சூடாமணியின் படைப்புகள் சித்தரிக்கின்றன.

'மரபின் வெறும் தொடர்ச்சியை ஏற்றுக் கொள்ளாத நவீனத்துவப் போக்கை சூடாமணி பிரதிபலிக்கின்றார்.' (ப.கல்பனா, ப.32)

என்னும் ப.கல்பனாவின் கூற்றுக்கொப்ப மரபை மீறுகின்ற சூடாமணியின் படைப்பாகப் 'பிம்பம்' என்னும் கதையைச் சுட்டிக்காட்டலாம். இச்சிறுகதையில் இடம்பெறும் 'மீனாட்சி' என்னும் மாந்தர் உலகில் புகழ்பெற்ற பெண் ஆளுமைகளில் ஒருவராகத் தன்னை எண்ணிக்கொள்கிறாள். தம் சுய அடையாளத்தை நிலைநிறுத்த தன் முனைப்புடன் காணப்படுகிறாள்.

மீனாட்சிக்குத் திருமண ஏற்பாடு நிகழ்கையில், மாப்பிள்ளை வீட்டார் முதலில் அவள் வேலைக்குச் செல்வதற்குத் தடை விதிக்கின்றனர். பின்னர் மீனாட்சியை மூக்குக்குத்திக் கொள்ள அறிவுறுத்துகின்றனர். மீனாட்சியின் தந்தை மாப்பிள்ளை வீட்டாரின் நிபந்தனைகளுக்கு விருப்பம் தெரிவித்த நிலையில், மீனாட்சி வெள்ளை நிற மாவினால் மூக்கின் மேல் சிறுபொட்டாக வைத்துப் பார்க்கின்றாள். தந்தையின் விருப்பத்திற்கு மறுபேச்சில்லாத தன் தாயின் உருவமாகத் தன்னை நிலைக் கண்ணாடியில் காண்கிறாள்.

'யார் உருவம் இது? இந்த முக ஜாடையும் மூக்குத்தியும் அம்மாவேதான். வெறும் வெளித்தோற்றத்தில் மட்டும் தானா?

**அப்பா பேச்சுக்கு மறுபேச்சில்லாத அம்மா**'

என்னும் வரிகளில் தன் தாயின் மரபு தொடர்ச்சியாக இருப்பதை மீனாட்சி உணர்கிறாள். தம் விருப்பத்திற்கு மதிப்பளிக்காமல், சுய அடையாளத்தைச் சிதைக்கவல்ல திருமணத்திற்கு மீனாட்சி தடை விதிக்கின்றாள். மூக்குக் குத்திக்கொள்ளுதல் என்னும் குறியீட்டின் வழியாகப் பழைய மரபுக்குட்பட்ட பெண் பிம்பத்தைச் சூடாமணி தம் படைப்பின் வழியாகத் தகர்க்கின்றார். தன் சுய அடையாளத்தை நிலைநிறுத்த மரபை மீறுகின்ற துணிச்சல்மிக்க 'மீனாட்சி' என்னும் பெண் மாந்தரை சூடாமணி இக்கதையில் படைத்துள்ளார்.

'ஆர்.சூடாமணி 'பிம்பம்' என்னும் தன் சிறுகதையில் மரபை உடைத்தெறியும் துணிவுமிக்கப் பெண்ணைப் படைத்துள்ளார்.'

என்று இரா.பிரேமா குறிப்பிடுவதற்கிணங்க பழைய மரபை தகர்த்து துணிச்சலுடன் செயல்படும் பெண்கதை மாந்தரை இக்கதையின் வழியாக அறியமுடிகிறது.

'சோபானவின் வாழ்வு' என்னும் மற்றொரு படைப்பானது ஆண் - பெண் பாலினப்பாகுபாட்டைக் களைந்து இருவரிடையேயும் சமத்துவத்தை எடுத்துரைப்பதாகும். இக்கதையில் இடம்பெறும் சோபனா என்னும் பெண்கதை மாந்தர் கண்பார்வையிழந்த தன்

தந்தையைக் கவனித்துக்கொள்ளத் தன் திருமண வாழ்வைப் புறந்தள்ளுகிறாள். தந்தைக்குச் செய்ய வேண்டிய அனைத்து கடமைகளையும் நிறைவேற்றுகிறாள். பணியாட்களைக் கொண்டு அவரது தேவைகளைப் பூர்த்திச் செய்கிறாள். மகளின் பராமரிப்பில் மனநிறைவை எய்தும் அவளது தந்தை, சோபனா அலுவலகப் பணியின் காரணமாக ஆண் நண்பனுடன் பழகுவதை ஏற்க முடியாமல், அவளது நடவடிக்கைகளில் ஐயம் கொள்கிறார்.

**'என் மகள்... ஒரு பெண் இப்படி நடந்து கொள்ளலாமா என்றல்லவா குமுறியிருந்தேன்? ஆண்டாண்டுகளாய் ஊறிப்போன மரபின் எதிரொலி, இவளே மகனாயிருந்தால் அந்த ஓட்டல் சமாச்சாரம் கேட்டு அத்தனை நிலை குலைந்து போயிருப்பேனா? ஆனால் இவளை மகனாகக் கருதி இவளது சம்ரட்சணையில் இதமாய் வாழும்போது (இவ்வகையில் ஒரு மரபு மீறலையும், ஒரு சமூக மாறுதலையும் வெகு சுலபமாய் ஏற்றுக் கொண்டாகிவிட்டது.) அந்த இன்னொரு விஷயத்தில் மட்டும் மகனாய் காண ஏன் தயக்கம்? இவளும் ரத்தமும் சதையுமான ஒரு ஜீவன் தானே?**

என்னும் வரிகளில் மகன் - மகள் இடையே நிலவும் வேறுபாட்டைச் சோபனாவின் தந்தை வழியாகச் சூடாமணி இக்கதையில் பதிவு செய்கிறார்.

**'ஆண் - பெண் என்ற பாகுபாடு உயிரியல் அடிப்படையில் இயற்கையாக அமைவது. ஆண்மை - பெண்மை என்ற சமூக வேறுபாடு சமூகத்தின் பண்பாட்டுப் பின்னணியில் வந்து சேர்வது'**

என்று க.பஞ்சாங்கம் குறிப்பிடுவதற்கிணங்க ஆண் - பெண் மரபில் கடைப்பிடிக்கும் ஒழுகலாறுகளைச் 'சோபனாவின் வாழ்வு' என்னும் கதையில் சுட்டிக்காட்டி பாலின சமத்துவத்தைச் சூடாமணி முன்மொழிகின்றார்.

ஆண் - பெண் இருவரிடத்திலும் ஏற்பட வேண்டிய அற உணர்வைத் தம் படைப்பின் வழியாகச் சூடாமணி எடுத்துரைக்கின்றார். சமூக வளர்ச்சிக்குப் பழைய மரபிலிருந்து விடுபடுகிற பெண் மாந்தர்களைச் சித்தரித்துப் பெண்ணியத்தை மென்மையாக அழுத்தமாக வலியுறுத்துகிறார். அவரது படைப்புகள் அற உணர்வையும், பழைய மரபிலிருந்து விடுபட்டு புதிய சிந்தனையையும் தூண்டுவன என்பது இவ்விரு சிறுகதைகளின் வழியாக அறிய முடிகின்றது.

# பூபாளத்திற்கொரு புல்லாங்குழல் என்னும் கவிதை நூலில் காணப்படும் சமுதாயக் கருத்தாடல்கள்

முனைவர் அ.இராஜராஜேஸ்வரி
தமிழாசிரியர், கிரீன்ரிட்ஜ் உயர்நிலைப்பள்ளி, சிங்கப்பூர்.

வாழ்க்கையில் காணப்படும் உயர்வு, தாழ்வான குணங்களையும், வியப்புகலந்த நிகழ்ச்சி களையும் கலைக்கண்ணால் காணும் விருப்பம் இந்தத்தலைமுறையில் வளர்ந்திருக்கிறது. கவிதைகளைப் படைக்கும் கவிஞர்கள் சமுதாயத்தின் ஓர் அங்கமாகத் திகழ்கின்றனர். அவர்கள் தாங்கள் கண்டு, அனுபவித்து உணர்ந்தவற்றை உரிய நேரத்தில் உணர்த்தத் தவறுவதில்லை. கவிஞன் என்பவன் சமுதாயத்தின் இன்ப, துன்ப உணர்வுகளை உடனுக்குடன் வெளிப்படுத்துவான். எனவேதான் கவிஞன் ‘சமுதாயப்பங்காளன்’ என்று அழைக்கப்படுகிறான்.

மனிதனின் கூட்டு வாழ்க்கை அமைப்பு சமுதாயம். அனைவரும் ஒற்றுமையாக வாழும் காலத்தில் அது வளர்ச்சி பெறுகிறது. எல்லா மக்களும் சமம் என்ற பொதுவுடைமை அடிப்படையில் சமுதாயம் இயங்க வேண்டும். சமுதாயம் வளர்ச்சி பெற அரசியல் தலைவர்கள் மக்களின் தேவையைப் பூர்த்திசெய்யும் எண்ணம் உடையவராக இருக்க வேண்டும். கல்வி என்பது அறிவுக்கண்களைத் திறக்கும் திறவுகோல். அது எல்லாருக்கும் சமமாகப் பகிர்ந்தளிக்கப்படல் வேண்டும். பெண்கள் சமுதாய அமைப்பின் முக்கிய அங்கம். அவர்களுடைய வாழ்வில் மறுமலர்ச்சி ஏற்பட வேண்டும் என்னும் கருத்துக்களை வெ.இறையன்புவின் ‘பூபாளத்திற்கொரு புல்லாங்குழல்’ என்னும் கவிதை நூலை அடிப்படை யாகக் கொண்டு ஆராயப்பட்டுள்ளது.

### சமுதாயம் -விளக்கம்

சமுதாயம் என்பது மக்கள் கூட்டம். ஆதியில் மக்கள் கூட்டம் கூட்டமாக வாழ்ந்தனர். மனிதர்களின் கூட்டமைப்பு சமுதாயம் எனப்படும். கிரியாவின் தற்காலத் தமிழ் அகராதி சமுதாயம் என்பதற்கு 'மக்கள்தொகுதி' எனவும்,

**ஒரு குறிப்பிட்ட தொழில் துறை முதலியவற்றைச் சேர்ந்தவர்களின் தொகுதி இனம்**

என்றும் விளக்கம் அளிக்கிறது.

**சமுதாயம் என்பது சமுதாய உறவுமுறைகளால் பின்னப்பட்ட ஒரு வலை.**

சமுதாயம் என்பது குடும்பங்கள் அல்லது குழுக்களை அடிப்படையாகக் கொண்டது. பொதுவான பழக்க வழக்கங்களாலும் சட்டத்தாலும் ஒழுங்குபடுத்தப்பட்ட அமைப்பைச் சமுதாயம் என்பர். சமுதாயத்தின் அங்கங்களாக மனிதர்கள் விளங்குகின்றனர். மனிதன் இல்லையெனில் சமுதாயம் இல்லை. சமுதாயம் இல்லையெனில் அதை மனிதன் உருவாக்கிவிடுகின்றான். மனிதன் உருவாக்கிய சமுதாயம் நன்மைகள், தீமைகள் நடைபெறும் களமாகத் திகழ்கின்றது.

### பொதுவுடைமை

தனிமனிதச் சொத்துரிமை முறைகள் அழிந்து எல்லாரும் உழைத்து, எல்லாரும் எல்லாமும் பெற்று இன்புற்று வாழ்வதே பொதுவுடைமை ஆகும். எல்லா மக்களும் சமம் என்ற நிலை உருவாக வேண்டும். ஏழை மக்களின் நிலையை உயர்த்துவதற்கு ஏற்ற உதவியைச் செய்தல் வேண்டும். தீய செயல்களைச் செய்திட மனம் ஏற்காதநிலை உருவாக வேண்டும். இதனை,

**ஏழைகள் வாழ வழிகாணடா-பசியால்**
**ஏங்குவோர் நிலை கண்டே நாணடா- தீய**
**பேதத்தைக் களைந்திடவே உறுதி பூண்டோ!**
**என்று கவிஞர் குலோத்துங்கன் கூறுகின்றார்.**

இறையன்பு தன் கவிதையில் ஒவ்வொருவருக்கும் தங்களைவிட பணக்காரர்களைக் காணும்போதுதான் 'அனைவரும் சமம்' என்ற பொதுவுடைமைக் கொள்கை துளிர்ப்பதை, இங்கே

**எல்லாரும் பொதுவுடைமைவாதிகளாய்**
**மாறுவது தம்மைவிடப்**
**பணக்காரர்களைப்**
**பார்க்கும்போதுதான்**

என்ற வரிகளில் எள்ளலுடன் எடுத்தியம்புகின்றார்.

### சாதிப் பாகுபாடு

இன்றளவும் மக்களிடையே உயர்வு, தாழ்வு பார்க்கக்கூடாது என்ற உணர்வு இருந்தாலும் சாதி என்கின்ற கொடிய நோய் அன்று முதல் இன்று வரை மக்களை அவமதித்துக்கொண்டுதான் இருக்கின்றது. சமூகத்தின்மீது அக்கறைகொண்ட இலக்கியப்

படைப்பாளிகள் காலந்தோறும் சாதிக்கொடுமையை எதிர்த்துக் குரல் எழுப்பிக் கொண்டே தான் இருக்கின்றனர். எனினும் சாதிதான் ஒழிந்தபாடில்லை.

பள்ளிச் சான்றிதழ்கள்தான் சாதியைத் தீர்மானிப்பதுபோல பேசுவது அறியாமை ஆகும். குழந்தைகளுக்கு இங்கு அம்மை குத்துவதற்கு முன்பே சாதி முத்திரை குத்தப்படுகிறது.

**சாதிகள் இல்லையடி பாப்பா குலத்**
**தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்**

என்றார் பாரதியார்.

**சுப்பிரமணி செட்டியார்**
**நகரில்**
**கோவிந்தசாமி முதலியார்**
**தெருவில்**
**ராமசாமி நாயக்கர்**
**சந்தில்**
**குப்புசாமி ஆசாரி**
**மண்டபத்தில்**
**நடக்கும்**
**கவிதைப் போட்டி தலைப்பு**
**சாதிகள் இல்லையடி பாப்பா**

என்ற இறையன்புவின் வரிகள், மக்கள் உதடுகளில் மட்டும்தான் 'சாதிகள் இல்லையடி பாப்பா' என்ற வார்த்தை தெரித்து விழுகின்றது. சா'தீ' உள்ளத்தில் அகலாமல் ஒட்டிக்கொண்டுதான் இருக்கின்றது என்பதைப் பறை சாற்றுகின்றது.

## அரசியல்

அரசியல் மனித வரலாற்றில் நெருங்கிய தொடர்புடையது. அது மக்களை நல்வழிப்படுத்து வதாக அமைய வேண்டும். மக்களுக்காக இருக்க வேண்டுமே தவிர தலைவருக்காகவும் கட்சிக்காகவும் இருக்கக் கூடாது. பண்டைய காலத்தில் அதிகாரம் அனைத்தும் ஒரு தனிமனித அரசிடம் குவிந்து கிடந்தது. ஆனாலும் மக்கள் நலன் பெரிதும் போற்றப்பட்டது. மக்கள் நெறிமுறை பிறழாமல் நல்வாழ்க்கை வாழ்வதற்காக அரசாங்கம் அமைக்கப்பட்டது. காலமாற்றத்தில் அரசியல்வாதிகளின் திட்டங்களனைத்தும் அவர்களின் சுயநலத்திற்காகச் செயல்படுத்தப்படுகின்றன. அத்திட்டங்களில் மக்களின் நலன் பெயரளவில் பேணப்படுவதை,

**இங்குப் புல்லுக்குப்**
**போய்ச்சேர**
**வேண்டுமென்பதற்காகவே நெல்லுக்கும்**
**நீர் திறந்து விடப்படுகிறது**
**என்ற கவிதையில் காணமுடிகின்றது.**

## கல்வியின் இன்றைய நிலை

கல்வி என்பது ஊட்டுவனவாக இல்லாமல் உண்பதாக இருக்க வேண்டும். கட்டிடங்களுக்குள் மட்டும் நடக்கிற பரிவர்த்தனையாக இருக்கக் கூடாது. ஒவ்வொரு

நொடியிலும் அது நிகழ்கிறது. படிக்க ஆரம்பிப்பதற்கு முன்பே தொடங்கி பல்கலைக் கழகங்களைவிட்டு வெளிவந்த பிறகும் தொடர்கின்ற ஒரு வாழ்வியல் சாதனம் ஆகும். கல்வி கசப்பதற்குக் காரணம் அதன் தன்மையல்ல. அதைச் செலுத்துகின்ற தன்மைதான்.

நுனிநாக்கில் ஆங்கிலம் பேசும் ஆசிரியரிடம், மாணவர்கள் அகப்பட்டு அவர்களின் பிரம்படியில் மாட்டிக்கொண்டு உருட்டு விழிக்குப் பயந்து கொண்டிருக்கின்றனர்.

**பேருந்தில்**
**தொந்திகளுக்கிடையில்**
**தொடைகளுக்கு நடுவே**
**முதுகுகளின் இடையே**
**சிக்கித் தவித்து**
**பயணமாகி**
**பள்ளியைச்**
**சென்றடைந்ததும்**

என்ற கவிதை வரிகள் கல்வியினால் குழந்தைகளுக்கு ஏற்பட்டுள்ள அவலநிலையைப் புலப்படுத்துகின்றன. குழந்தைகள் பள்ளி நிறைவடைந்ததும் முதுகு கணக்கும் மூட்டை களுடன் வீட்டுப்பாடச் சுமையையும் சுமந்து பேருந்தில் இடிபட்டு கசங்கிய ஆடைகளோடு ஒடுங்கிய முகத்தோடு நொறுங்கி வீட்டிற்கு வருகின்றனர் என்று மாநகரக் கல்வி முறையைக் கற்கும் குழந்தைகளின் அவல நிலையைத் தன் கவிதையில் விமர்சனம் செய்கின்றார்.

## பெண்களின் அவலநிலை

பழங்காலத்தில் பெண்களுக்குப் பல உரிமைகள் வழங்கப்பட்டன. ஆண், பெண் இருவரும் சமமான மதிப்புடன் வாழ்ந்தனர். ஆனால் இடைக்காலங்களில் ஏற்பட்ட சமுதாய மாற்றத்தால் பெண்களை அடிமைப்படுத்தும் நிலை உருவானது.

**பெண்கட்குக் கல்வி வேண்டும்**
**குடித்தனம் பேணுதற்கே!**
**பெண்கட்குக் கல்வி வேண்டும்**
**மக்களைப் பேணுதற்கே!**

என்ற பாரதியின் பாடல் வரிகள் பெண்களுக்குக் கல்வியின் இன்றியமையாமையை விளக்குகின்றன.

வீட்டிற்குத் தேவையான பொருட்களை மனம் கவரும் விதத்தில் அழகாக வாங்குவதைப் போலத் தங்கள் வீட்டிற்கு வரும் பெண்ணும் இருக்க வேண்டும் என மாப்பிள்ளை வீட்டார் எதிர்பார்க்கின்றனர். மேலும், பகுத்தறிவு மானுடத்தின் பண்பு ஆகும். மானுடத்தின் ஒரு பிரிவான ஆணைப்போலவே மற்றொரு பிரிவான பெண்ணிற்குப் பகுத்தறிவு உண்டு. அவளைப் பகுத்தறிவற்ற அஃறிணையுடன் ஒப்பிட்டுப் பேசுவதைக் கண்டு பெண்கள் மகிழக்கூடாது என்பதை

**மானே! தேனே!**
**என்ற**
**மயக்குமொழி வார்த்தைகளில்**
**மயங்கிவிடாதீர்கள்**
**அது நீங்கள்**
**அஃறிணை என்பதைத்தான்**
**அப்படி**
**மறைமுகமாகச்**
**சொல்லியிருக்கிறார்கள்**

*என்ற கவிதை வரிகளின் வாயிலாக இறையன்பு அறிவுறுத்துகின்றார். முதலாளியிடம் அடிமையாய் நடந்துகொள்பவன் அதிகாரம் செலுத்துவது தன்னுடைய மனைவியிடமாகும் என்று இயம்பும் இறையன்புவின் நோக்கம் பெண்களின் அவலநிலை நீங்க வேண்டும் என்பதேயாகும்.*

## பெண்களின் எழுச்சி

*நாட்டின் கண்களெனத் திகழும் பெண்கள் எழுச்சியுடன் செயல்பட்டால் தான் நாடு முன்னேற்றம் அடையும் என்பதை உணர்த்த இறையன்பு தனது படைப்பில் ஆணாதிக்கத்தை எதிர்த்து சுயசிந்தனையோடும் செய்திறனோடும் பெண்களைச் செயல்படவேண்டும் என்று அறிவுறுத்துகின்றார்.*

**சின்ன வயதிலிருந்தே**
**சாப்பாடு உங்களுக்குப்**
**பொறுமைக் குணமும் போதிக்கப்பட்டால்**
**உங்களை அடிமைப்படுத்தும் ஆளுகைகள்**
**உங்களுக்கு அக்கிரமமாய்ப் படவில்லை**
**வாருங்கள்! உங்கள் விரல்களால்**
**புதிய விதிகளைத் தூவ**

*என்ற வரிகளின் மூலம் உணர்த்துகின்றார்.*

## முடிவுரை

*படைப்பாளன் தனது படைப்பின்மூலம் சமுதாயத்தில் நிகழும் அவலங்களையும் அதனைத் தீர்க்க ஒவ்வொரு மனிதனும் முயல வேண்டும் என்னும் கருத்தை அடிப்படையாகக் கொண்டே படைப்புகளைப் படைக்கின்றான். அத்தகைய படைப்புகள் வெறும் வாசிப்புக் காகிதங்களாக மட்டுமல்லாமல் உணர்வுகள் செயல்வடிவங்களாக உருவெடுக்கும்போது சமுதாய மாற்றம் மட்டுமல்ல மக்களின் வாழ்விலும் மாற்றம் உண்டாகும் என்பதில் ஐயமில்லை.*

# பெண்பாற் புலவர்களின் மரபுமீறியப் பெண்ணியச் சிந்தனைகள்

*Dr.V. Rilbert Janarthanan,*
*Asst. Professor, St.Xavier's College, Palayamkottai.*

**முன்னுரை:**

சங்க இலக்கியங்களில் பெண்பாற் புலவர்களின் பங்கு குறிப்பிடத்தகுந்த இடத்தைப் பெறுகின்றது. தொல்காப்பியம் பெண்களுக்கு எனச் சில வரையறைகளை வகுத்துள்ளது. ஆதனை சங்க இலக்கியப் புலவர்கள்,பெண்கள் எவற்றையெல்லாம் பேசலாம் எவற்றை எல்லாம் பேசக்கூடாது என ஒவ்வொன்றையும் அளவுகோல் கொண்டு பாடியுள்ளனர். எனினும் பெண்பாற் புலவர்கள் தங்களது பாடல்களில் தங்கள் சமூக இலக்கிய மரபுகளை மீறியக் கருத்துக்களைத் துணிந்து பாடியுள்ளனர். அவற்றை ஆராய்ந்து அறிவது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**பெண்ணியம்**

பெண்ணியம் என்னும் சொல் '*Feminism*' என்ற ஆங்கில மொழிச் சொல்லிலிருந்தும், *Femina* என்னும் இலத்தீன் மொழிச் சொல்லிலிருந்தும் தோன்றியது ஆகும். பெண்ணியம் என்றால் பெண்மைக்குரிய இயல்புகளை உடையவள் என்பது பொருள் இச்சொல்லானது

தமிழில் பெண்ணியம், பெண்ணிலை வாதம், பெண்நிலைஏற்பு, மகளிரியல், பெண்நலக் கொள்கை என்று அழைக்கப்பட்டுவருகிறது.

### பெண்பாற் புலவர்கள்

*இன்றைய உலகில் பெருகிவரும் கருத்தோட்டங்களில் பெண்ணியமும் ஒன்று பெண்களை அழுத்தி வைத்திருக்கும் சமூகக் கட்டுப்பாடுகளும் கருத்துப் போக்கும் மாறவேண்டும் என்னும் எண்ணத்தோடு பேசுவதும் எழுதுவதும் போராடுவதும் பெண்ணியக் கொள்கைகளாக ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. இத்தகைய கருத்துகளுக்கு முன்னோடியாக விளங்கியவர்கள் பெண்பாற்புலவர்கள்.*

*சங்ககாலத்தில் ஆண்பாற் புலவர்கள் அதிகம் தான் ஆயினும் பெண்பாற் புலவர்களும் பலர் இருந்துள்ளனர். சங்ககாலத்தில் மட்டும் 42 பெண்பாற் புலவர்கள் இருந்திருக்கின்றனர். இத்தகைய பெண்பாற் புலவர்கள் தங்கள் பாடல்களின் வாயிலாக வெளிப்படுத்திய மரபுமீறிய பெண்ணியச் சிந்தனைகளைக் காண்போம்.*

### துலைவி விருப்பத்தை வெளியிடுதலில் தடை

*தலைவி தன்னுடைய விருப்பத்தைத் தலைவனிடம் வெளிப்படையாகக் கூறக்கூடாது என்பதை தொல்காப்பியம்,*

**"தன்னுறுவேட்கைகிழவன் முன் கிளத்தல்**
**எண்ணுங் காலைக் கிழத்திக்கு இல்லைப்**
**பிறநீர் மாக்களின் இன்றியஆயிடைப்**
**பெய்ந்தீர் போலும் உணர்விற்குஎன்ப"** *(தொல்.களவு.118)*

*என்னும் நூற்பாவில் புதுமட்கலத்தில் பெய்தநீர் கசிந்துகாட்டுவது போன்று பெண் தன்னுடைய விருப்பத்தை வெளிப்படையாகக் கூறாமல் இலைமறைக் காய்ப் போன்று மறைமுகமாக கூறவேண்டும் எனக் குறிப்பிடுகின்றார். ஆனால் பெண்பாற் புலவர்கள் தங்கள் பாடல்களின் வாயிலாகத் தங்களின் மனவேட்கையை வெளிப்படுத்தியுள்ளனர்.*

### ஒருதலைக்காதல்

*சங்க இலக்கிய மரபுப்படி அகச்செய்தியினைக் கூறுமிடத்து பெயர் சுட்டிப் பாடுதல் இல்லை. ஆனால் இத்தகைய இலக்கியமரபினை மீறியதாக நக்கண்ணையாரின் பாடல்கள் அமைந்துள்ளன. சோழன் போர்வைக்கோப்பெருநற்கிள்ளி என்னும் அரசனின் மீது மையல் கொண்டதாகப் பாடியுள்ளார்.*

**"அடிபுனை தொடுகழல் மையணல் காளைக்குஎன்**
**என்போற் பெருவிதுப் புறுக என்றும்**
**ஒருபால் படாஅதுஆகி**
**இருபாற் பட்ட இம்மை யால் ஊரே"** *(புறம்.83)*

*என்னும் பாடலில் பெருங்கோழிநாய்கன் மகள் என்று அழைக்கப்படுபவர் நக்கண்ணையார் ஆவார். சோழர்களின் தலைநகரமான உறையூரில் வாழ்ந்தவர் இவர். சோழன் போர்வைக்கோப்பெருநற்கிள்ளி மீது காதல் கொண்டிருந்தார் என்றொரு கருத்தும் உண்டு, இவர் தம் காதல் புறநானூறு 83ம் பாடலால் புலப்படுகிறது. 'வீரக்கழலினைப்*

புனைந்துள்ளான் என்றும், தாடியைக் கொண்டுள்ளான் என்றும், இவனை நினைத்து என் வளையல்கள் நெகிழ்கின்றன எனவும், பகைவரை வீழ்த்தும் திறமுடைய அவனது தோள்களைத் தழுவ என் கைகள் விரும்புகின்றன என்கிறார்.

மேலும் நக்கண்ணையார் நற்கிள்ளி வாழ்ந்த பகுதியிலேயே வாழ்ந்துள்ளார் அவன் தன் தந்தையை வெறுத்து ஆமூரில் தங்கியிருந்தான். அவன் தங்கியிருந்தமனைக்குப் பக்கத்திலேயே இருந்து அவனை அடிக்கடி பார்த்து மகிழ்ந்து அவனை அடைய முடியாமையால் என் மேனியில் பசலைப் பாய்ந்தது என்றும், சிறைப் புறமாக நின்று அவனது செயல்களைக் கண்டு மகிழ்ந்ததை,

**''என்ஐபுற்கை உண்டும் பெருந்தோள் அன்னே!**
**யாமே புறந்சிறை இருந்தும் பென் அன்னம்மே!**

என்னும் பாடலடிகளின் மூலம் அறியமுடிகின்றது. ஒருமுறைநற்கிள்ளிக்கும் ஆமூர் மல்லனுக்கும் மற்போரும் விற்போரும் நிகழ்ந்தன. ஆதில் நற்கிள்ளிவெற்றிப் பெற்றதைக் கண்டுதான் மகிழ்ச்சியடைந்ததை,

**அடம்சிலம்பு ஒலிப்ப ஓடி எம்மில்**
**முழாஅரைப் பொந்தை பொருத்தி நின்று**
**யான்கண் டனன்அவன் ஆடு ஆகுதயே,**

என்னும் பாடலடிகள் விளக்கும் புறநானூற்றில் 83,84,85 ஆகிய மூன்றுபாடல்களும் நக்கண்ணையார் என்னும் இளம்பெண்பாற்புலவர் நற்கிள்ளிஎன்னும் சோழநாட்டு இளவரசன் மேல் கொண்டிருந்தகா தலை அப்படியே வடித்துக் காட்டுகின்றன. கருத்துஅடிப்படையில் இவை அகப்பாடல்களே என்றாலும், நற்கிள்ளி எனப் பெயர் சுட்டிப் பாடினமையால் இது புறப்பாடல்களின் கீழ் சேர்க்கப்பெற்றது.

## தலைவனைத் தேடிச் செல்லுதல்

இல்வாழ்க்கை நடத்துவதற்காகப் பொருள் தேடப் பிரிந்த தலைவனை எண்ணித் தலைவி வருந்துவாள். தலைவன் வந்துவிடுவேன் என்று கூறிச் சென்றகாலத்தில் வராதுகாலம் நீட்டிக்கும் பொழுது தலைவனைத் தேடித் செல்லுதல் கிடையாது. ஆனால் இவர்களின் பாடல்களில் தலைவனைத் தேடித் தலைவி செல்ல எண்ணுதலை,

**''உடம்பும் உயிரும் வாடியக் காலும்**
**என் உற்றனகொல் இவை எனின் அல்லது**
**கிழவோன் சேர்தல் கிழத்திக்கு இல்லை''** (தொல்.பொருள்.281)

தலைவனை எண்ணி தனது உடலும் உயிரும் வாடி வதங்கிய போதும் பசலைப் படர்ந்த போதும் தலைவனைத் தேடிச் சென்று சேருதல் தலைவிக்கு இல்லை என இலக்கண நூல்கள் வரையறுக்கின்றன. ஆனால் தலைவி தனித்து இருக்கும் போதுதன் நெஞ்சிடம் பேசுவாள் அப்போது தலைவனை அடைய வேண்டும் என்ற எண்ணம் தலைவிக்கு ஏற்படும் என்றும் ஆனால் எந்தச் சூழ்நிலையிலும் தலைவனைத் தலைவிதேடிக் கொண்டுசெல்லமாட்டாள் என்பதை தொல்காப்பியம் சுட்டிச் செல்கின்றது. ஆனால் சங்க இலக்கியத்தில் ஆதிமந்தி தனது காதலனான ஆட்டனத்தியை ஆறு கொண்டு போனதால் தேடி அலைந்ததைப் போல் தானும் என் காதலனை காணாததால் தேடி அலைவனோ என்பதை,

**''புன்னை குறைத்த ஞான்றை வயிரியர்**
**ஆதிமந்தி போல் பேதுற்று**
**ஆலந்தன்ன உழல வென் கொல்லோ''** (அகம்.45)

என்னும் பாடலில் வெள்ளிவீதியாரின் உள்ளக் குறிப்பைஅறியமுடிகின்றது. மேலும் ஔவையார் பாடல்களில் தலைவனைத் தேடிவெள்ளிவீதியார் சென்றதாகக் குறிப்பும்

**''பொறிகிளர் உழுலைப் போழ்வாய் ஏற்றை**
**அறுகோட்டுஉழைமான் ஆண்குரல் ஓர்க்கும்**
**நெறிபடு கவலை நிரம்பா நீளிடை**
**வெள்ளி வீதியைப் போலநன்றும்**
**செலவு அயர்ந்திசினால் யானேபல புலந்து''** (அகம்.147)

என்னும் பாடலில் புலிகள் பசியுடன் அலையும் பெரிய காட்டிலே தன்னுடைய கணவனைத் தேடி வெள்ளிவீதியார் சென்றார். அவரைப் போல நானும் தலைவனைத் தேடிச் செல்லப் போகிறேன் என்று ஔவையார் குறிப்பிடுகின்றார். ஆனால் இச்செயல் மரபினைமீறிப் பெண்கள் தனித்துக் கணவனைத் தேடிச் சென்றமையைக் கூறுகின்றன வீடு அதைச் சுற்றியுள்ள சிறிய எல்லைகளே பெண்கள் செல்வதற்கு உள்ள இடமாக இச்சமூகம் நிர்ணயித்துள்ளது. ஆனால் இவ்விலக்கணத்தை மீறிய பெண் புலவர்கள் தங்கள் பாடல்களில் பதிவு செய்துள்ளனர். மேலும் வெள்ளி வீதியார் தம் மற்றொருபாடலில் தலைவனைப் பிரிந்து மிகுந்த வருத்தப்பட்ட தோழி தலைவனை எங்கிருந்தாலும் தேடிக் கண்டுபிடிப்போம் எனவும், கலங்காதே தலைவன் இவ்வுலகைவிட்டு எங்கும் செல்ல மாட்டார். அவரது இருப்பிடத்தை அறிய தேடிச் செல்வோம் வா எனத் தோழி குறிப்பிடுவதாக (குறுந்.130) பாடல் அமைந்துள்ளது.

## உள்ளஉணர்வுகளைப் புலப்படுத்துதல்

பெண்கள் தங்களுடைய உள்ள உணர்வை வெளிப்படுத்துதல் என்பது இல்லை.சங்க இலக்கியத்தில் பெண் புலவர்கள் இவ்வுணர்வைப் பலபாடல்களில் விரிவாகப் பேசியுள்ளனர். தங்களுடைய காமஉணர்வைத் தானேபுலப்படுத்தலும், மற்றொரு பாத்திரங்களின் வாயிலாகப் புலப்படுத்தலும் என்ற இரு நிலைகளில் பாடல்களானது அமைந்துள்ளன. பெருங்கோழிநாய்கன் மகள் நக்கண்ணையார் பாடியபாடல்கள் அவருடைய காம உணர்வை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளன. (புறம்.83) இதே உணர்வு கொண்ட பல பாடல்கள் குறுந்தொகையில் விரவிக் கிடக்கின்றன. மேலும் கடுமையான இடிகுரலுடன் கூடிக் காற்றோடு கலந்து பலமான மழையைப் பெய்கின்றது. அப்போது நிறைந்த நீரைக் கொண்ட கரிய மேகத்தை நோக்கி உன்னை அனைவரும் இரக்கமே உருவானவனாகக் கூறுகின்றனர். ஆனால் நீயோ துணையில்லாத தனித்திருக்கும் பெண்ணாகிய என்னைத் துன்புறுத்துகின்ற கொடுஞ்செயலைச் செய்கின்றாய் என்பதை,

**''ஆரளி யிலையோ நீயே பேர் இசை**
**இமயமும் துளக்கும் பண்பினை**
**துணையிலர் அளியர் பெண்டிர் இஃது எவனே''** (குறுந்.158)

என்னும் பாடலானதுபெண்கள் தங்களின் காமஉணர்வைவெளிப்படையாகக் கூறுவதாகப் படைத்துள்ளனர். மேலும் தலைவி காதலால் தான் வாடுவதை வெளியே சொல்லவும் முடியவில்லை. அதனைமெல்லவும் முடியவில்லை. எங்கோ இருக்கும் தலைவனை ஆறுதலுக்காக அனைத்துக் கொள்ளவும் முடியவில்லை என்பதை,

**''கையிற் ஊமண் கண்ணிற் காக்கும்**
**வெண்ணெய் உணங்கல் போலப்**
**பரந்தன்று இந்நோய் நோன்று கொளற்குஅரிதே''** (குறுந்.58)

என்னும் வெள்ளிவீதியாரின் பாடலில் தெளிவாகச் சுட்டுவதைஅறியமுடிகின்றது.

## பெண்பால் புலவர்களின் இயல்பு

பெண்பாற் புலவர்களின் தனித்த இயல்பு அவர்களது பாடல்களால் புலப்படுகின்றது. துலைவனை மிகக் கடுமையாகச் சாடுவது அவர்களின் தனியலபாகத் தெரிய வருகின்றது. 'கடுவனும் அறியும் அக்கொடியோனையே' என்னும் பாடலடியில் தலைவன் தலைவியிடம் பழகியதை ஆண்குரங்கு கூட அறியும் எனச் சொல்லும் இடத்தில் தலைவனைக் 'கொடியோன'; எனக் குறிப்பிடுகின்றார். மேலும் ஔவையாரும் ஒரு நாட்டில் ஆண்கள் நல்லவராக இருந்தால் தான் அந்தநாடு நல்லதாக இருக்கும் எனவும் குறிப்பிடுகின்றார் (புறம்.187:3-4) தலைவனைப் பல இடங்களில் கொடியன் எனக் குறிப்பிடுவதற்கான சான்று காணப்படுகின்றது.

## முடிவுரை

பெண்பாற்புலவர்கள் தங்களின் பாடல்களில் பலசெய்திகளை, நிகழ்ச்சிகளைப் பதிவு செய்துள்ளனர். சுங்ககாலச் சமூகத்தில் வாழ்ந்த பெண்களின் உணர்வுகளை இவ்விலக்கியத்தில் புலப்படுத்தியுள்ளனர். குறிப்பாக நக்கணையார் என்னும் புலவர், அரசன் மீது மையல் கொண்டு ஒருதலைக்காதலால் பாடியப் பாடல்களில் தலைவனின் அழகும் வீரமும் குறிப்பிடத்தக்கதாக உள்ளது. தலைவனைத் தேடிச்சென்ற வெள்ளிவீதியாரின் பாடல்களும் சிறப்பாக அமைந்துள்ளன. இதன்மூலம் தங்களது கருத்தை எந்தநிலையிலும் முன்வைக்கும் துணிச்சலைப் பெண்பாற் புலவர்கள் பெற்றிருந்தனர் என்பதை அவர்களின் பாடல்களின் வாயிலாக அறியமுடிகின்றது.

# வினயா தன்வரலாற்றில் குடும்பத்தில் பெண்களின் நிலை

அ. சரண்யா
முனைவர் பட்ட ஆய்வாளர், இந்திய மொழிகள்,
ஒப்பிலக்கியப் பள்ளி, தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்.

## முன்னுரை

குடும்பம் என்பது சமூகத்தின் ஓர் அங்கமாகும். மனிதன் அவனுடைய வாழ்க்கையில் பலவகையான குழுக்களோடு சேர்ந்து செயல்படுகிறான். அவ்வாறு செயல்படும் குழுக்களில் ஒன்றுதான் குடும்பம். மனிதன் வாழ்வின் பெரும்பாலான நேரங்களில் குடும்பத்தோடு அமைவதை நாம் அனைவரும் அறிந்த ஒன்றே. பெண்கள் குடும்பத்தின் முதுகெலும்பாகத் திகழ்கிறார்கள். சமீபத்திய ஆண்டுகளில் அவர்கள் இன்னும் அதிக பொறுப்பை ஏற்றுள்ளனர். பெண்கள் வீட்டிற்கு வெளியே வேலை செய்கிறார்கள், அதேபோல வீட்டையும், குடும்பத்தையும் அவர்களே கவனித்துக் கொள்கிறார்கள். இன்னும் பல குடும்பங்களில் முதன்மையான உணவளிப்பவர்களாகவும் உள்ளனர். குடும்பத்தின் நிலையான வளர்ச்சி, வாழ்க்கை தரத்தை உயர்த்த பெண்கள் அயராது பாடுபடுகின்றனர். குடும்பத்திற்காகத் தன்னுடைய இன்பங்களையும், இலட்சியங்களையும் தியாகம் செய்கிறாள். குடும்பத்தின் நலனுக்காக தான்படும் துன்பங்களை எல்லாம் மறைத்து கணவன், குழந்தை என்று இவர்களின் நலனுக்காக தன் வாழ்க்கையை தியாகம் செய்பவளே பெண். அவ்வாறு, அரும்பாடுபடும் பெண்மக்களை ஒரு பொருட்டாகவும் கருதாமல் தான் மகிழ்ச்சியாக வாழ்ந்தால் போதும் என்ற மனநிலையுடன் பல ஆண்கள் தன் அதிகாரத்தை பெண்கள்மேல் நிலைநாட்டுகின்றனர். இதனை வினயா, தன்வரலாற்றில் குடும்பத்திற்காகப் பெண்கள் எவ்வாறு போராடுகின்றனர் என்பதை இக்கட்டுரையில் ஆராயப்படவுள்ளது.

## குடும்பம்

மனிதனின் வாழ்க்கை முறையில் குடும்பம் முதன்மையான இடத்தைப் பெற்றுள்ளது. பிறப்பு முதல் இறப்பு வரை வாழ்வின் ஒவ்வொரு நிகழ்வும் குடும்பத்தோடு பின்னிப் பிணைந்திருக்கும் தன்மை கொண்டது. இக்கால வாழ்வில் குடும்பத்தின் பற்று குறைந்தே காணப்படுகின்றன. பழங்காலத்தில் குடும்பம் என்றாலே தாத்தா, பாட்டி, அம்மா, அப்பா, பெரியம்மா, பெரியப்பா, சித்தப்பா, சித்தி, அண்ணன், தங்கச்சி என அனைவரும் இணைந்து வாழும் நிலையே குடும்பமாகும். இன்றைய சூழலில் இவ்வாறு சேர்ந்து ஒற்றுமையுடன் வாழும் குடும்பங்களை அறிதாகவே பார்க்க முடிகிறது. கூட்டுக்குடும்பம் என்ற ஒன்றே இல்லாமல் தனிக்குடும்பம் அதிகம் காணப்படுகின்றன. உற்றார் உறவினர்களுடன் சேர்ந்து வாழும்போது சிறுசிறு கருத்துக்கள் வேறுபாடுகள் காணப்பட்டாலும், அதிக மகிழ்ச்சி நிறைந்திருக்கும். தனிக்குடும்பத்தில் இத்தகைய மகிழ்ச்சி உண்டாக குறைவான வாய்ப்பே உள்ளன. குழந்தைகளும் பெரியவர்களின் அறிவுரைகளைக் கேட்டு நன்னெறியில் வாழ்வார்கள். அதனால் கூட்டுக் குடும்பமே சிறந்த குடும்பமாகும். மனிதன் வாழ்வில் குடும்பம் மிகவும் இன்றியமையாதவையாக அமைந்துள்ளன.

## குடும்பம் - விளக்கம்

குடும்பம் பற்றிய விளக்கங்களைப் பல்வேறு அறிஞர்கள் பலக் கருத்துக்களை கொடுத்துள்ளனர். **''குடும்பம் ஒரு நிலையம் அல்லது இயைபுக்குழு மட்டுமல்ல அது ஒரு நிறுவனமும்கூட. அதை நிறுவனங்களின் தொகுதி என்று சொல்வது கூட தவறானது**''1 மேலும், "தலைமுறை தலைமுறையாகப் பண்பாட்டு மரபுரிமையைக் கொண்டு செல்லும் ஒரு செயல்'' குடும்பம் என்பது எல்லாச் சமுதாயங்களிலும் உள்ள அடிப்படையான அமைப்பு. சமுதாயத்தில் உள்ள பல்வேறு அமைப்பு. சமூதாயத்தில் பல்வேறு பிரிவுகளுக்கும் குடும்பம் முக்கியமானது. சமுதாய நடவடிக்கைகளுக்குச் சட்டத்திட்டங்களை ஏற்படுத்தி அவைகளைப் பின்பற்றச் செய்கிறது குடும்பம்."

> **''இடும்பைக்கே கொள்கலம் கொல்லோ குடும்பத்தைக்**
> **குற்றம் மறைப்பான் உடம்பு.''**

வள்ளுவர் குடும்பத்தைப் பற்றி குறிப்பிடுகையில், தான் பிறந்த குடும்பத்திற்கு தீங்கு வந்துவிடாமல் பாதுகாக்கும் ஒருவனுடைய உடம்பு துன்பங்களையே மனதிற்குள் போட்டு வைக்கும் பாத்திரமோ என்னவோ தெரியவில்லை என்கிறார். மேலும்,

" மனித சமுதாயத்தின் மிகத் தொன்மையான நிறுவனமாகத் திகழ்வது குடும்பம். இது எல்லா சமுதாயங்களிலும் எல்லாக் காலங்களில் நிலவி வருகிறது. இன்று நூற்றுக்கணக்கான சமுதாயங்கள் காலங்காலமாக பல்வேறு நிறுவனங்களை ஏற்படுத்திக் கொண்டு அதன் அமைப்பாலும், செயலாலும் வேறுபடுகின்றன. ஆனால் அனைத்திலும் குடும்பம் என்னும் நிறுவனமே மிகவும் இன்றியமையாத அடிப்படை அலகாகச் செயல்படுகிறது."

சமூகத்தில் குடும்பம் என்பது முதன்மையானவை ஆகும். குடும்பம் என்ற ஒன்று இல்லையென்றால் சமூகம் என்பதே இல்லை. சமூகத்திற்கு அஸ்திவாரமே குடும்பமாகும்.

அதனால் தான் குடும்பத்தில் மனவருத்தங்கள், சண்டை சச்சரவுகள் என்று பல பிரச்சனைகள் இருந்தாலும் இவையெல்லாம் தாண்டி குடும்ப உறவு என்பது தவிர்க்க முடியாத உறவாக திகழ்கிறது.

## குடும்ப அடையாளம்

சமூகத்தில் ஒருவரைப் பற்றி அரியவேண்டுமென்றால் அவர்களின் முன்னோர்களின் வழித்தோன்றல்களை வைத்துதான் அரிய முடியும். இவ்வழக்கம் பழங்காலம் முதல் இன்றுவரைக்கும் வழக்கில் இருக்கின்றது. இதனை நளினி ஜமீலா தன் வரலாற்றில்

"பெரிய வீட்டுப்பிள்ளை என்றுதான் என்னை குறிப்பிடுவார்கள். வீடு பெரியதென்பதால் இப்படி சொல்கிறார்கள் என்று அப்போது எனக்குத் தோன்றும். பிறகு தான் புரிந்தது பெரிய குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் என்ற பொருளில் தான் இப்படிச் சொல்கிறார்கள்.'' **6**

பெரிய குடும்பத்தில் பிறந்தவர்கள் ஒழுக்கமுடையவர்களாகவும் நற்பண்புகளை கொண்டவர்களாகவும் திகழவேண்டும் என்று வீட்டின் பெரியவர்கள் ஒவ்வொருவருக்கும் அறிவுறுத்திக் கொண்டே இருக்கின்றன. குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் தங்கள் குடும்பத்திற்கு அவப்பெயர் வந்துவிடக் கூடாது என்பதில் மிக கவனமாக ஒவ்வொரு குடும்பத்தினரும் தன் செயல்களைச் செய்கின்றனர். மேலும் குழந்தைகளுக்கும் சிறுவயதிலிருந்தே குடும்பக் கௌரவத்தைப் பற்றியும், முன்னோர்களின் வாழ்வியலைப் பற்றியும் போதிக்கின்றனர். இதனை அக்னிசாட்சி நாவலில்,

"பெரிய குடும்பம் நிறைந்த சந்ததிகளும் நிறைய சம்பத்துகளும் ஆனையும் அம்போஆரியும் பள்ளிப்புறப்பாடும் பல்லக்குமிருந்தன. முன்னோர்களில் ஒருவர் திவான்ஜியாகவும் மற்றொருவர் படைத்தளபதியாகவும் இருந்தார்களாம். மூன்று தலைமுறைக்கு முந்தைய தன்னுடைய தாய்வழிப் பாட்டி மகாராஜாவின் மனையாட்டியாக இருந்தாளாம். அன்று முதல் தான் நேத்தியாரம்மா அந்தஸ்த்து கிடைத்தது. ஆண்கள் படை நாயர்களாகவும் ஆனார்கள். மன்னர்களும் வசதிப்படைத்த நம்பூதிரிகள் மட்டுமே அங்கே திருமண உறவு வைத்திருந்தார்கள்."

மனிதனாகப் பிறந்தவர்கள் அனைவருக்கும் குடும்ப அடையாளம் என்பது மிக முக்கியமானவை என்பதை இதன்மூலம் அறிய முடிகிறது.

## ஆண் ஆதிக்க சமூகம்

ஆதிக்க சமூகம் பாலியல் வேறுபாட்டினை அடிப்படையாகக் கொண்டு உயர்வு, தாழ்வு என்ற கருத்தாக்கத்தினை உருவாக்கியது. இதன் காரணமாக இனக்குழுச்சமூகம் உட்கட்டமைப்பான தாய்வழிச்சமூகம் முற்றிலும் அற்று தந்தையாதிக்கச் சமூகம் உருவாகியது. இதன் தொடர்ச்சியாகக் குடும்பத்தில் பெண்ணை இரண்டாம் பாலினமாகப் பார்க்கப்படும் பெண் இனம் உலகம் அளவில் அறிவுச்சார் நிலையில் பல்வேறு மாற்றங்கள் ஏற்பட்டதன் விளைவாகக் கல்வியறிவைப் பெரும் வாய்ப்பினைப் பெற்றுள்ளன. அதன்

காரணமாக தன்னைக் குறித்தும், தன்னோடு இணைந்து புறச்சூழலையும் உள்ளார்ந்து பார்க்கும் விழிப்புநிலையை அடைந்துள்ளனர்.

**குடும்ப அமைப்பு - கருத்துருவாக்கம்**

தாய்வழிச்சமூகத்தைப் பெண்ணே தலைமையேற்று வழிநடத்தினாள். வேட்டையாடல், உணவுசேகரித்தல் ஆகியவற்றில் பங்காற்றினார். உணவுசேகரித்தல் மூலமாக அவ்வினத்தின் ஒட்டுமொத்த உணவுத்தேவையை எவ்வித இடையூறுமின்றி பெண் திகழ்ந்தமைக்கு இவ்வினை முக்கிய காரணமாயிற்று. இனக்குழுச் சமூகத்தில் குழந்தைப்பேறு உயர்ந்த இடத்தை வழங்கியிருந்தது. இந்நிலையில் ஆணை அச்சத்திற்கு உள்ளாக்கின. இதன் தொடர்ச்சியே வளமைக்கான சடங்குகளில் பெண்ணை முன்னிலைப்படுத்துவதாக தொடர்கிறது. ஆனால் காலப்போக்கில் குழந்தைப்பேறு குறித்தும் அதற்கான ஓய்வும் அவளின் உரிமைகளை இழப்பதற்கான வாய்ப்பினை ஏற்படுத்தியது. இக்காலக்கட்டமே பெண் அடிமையாக் காரணமாயிற்று.

திருமணம் பெண்ணின் வாழ்க்கையில் மிக முக்கிய நிகழ்வாகக் கருதப்படுகிறது. இந்நிகழ்வை ஏற்காத பெண்கள் சமூக நடைமுறையிலிருந்து புரந்தள்ளப்படுகிறார்கள். குடும்ப அமைப்பிற்கான கருத்தாக்கங்களை மையப்படுத்திய பெண் உருவாக்கப்படுகிறாள். இந்நிலையினை கவிஞர் திரிசிடை தன் கவிதையில் பின்வருமாறு பதிவு செய்துள்ளார்.

**''தர்க்கம் தவிர்; தவறிவிட்டால் கடமையில் நீ**
**தனிமை இனிமை என்று**
**கூற என்ன திமிர் என்று உறுமினர்**
**எந்தோழிகள் இல்லறமே நல்லறம் என்று**
**பெரியோர் சொன்ன**
**சாத்திரமும்**
**பொய்யோ அல்ல ஆனால்**
**அனுமானைப் போல**
**அந்தரங்கச்சேவை செய்ய கண்ணனின்**
**காலடிகளை எங்கு தேடுவது**
**என்ற தீராதாகத்தைச்**
**சொல்லால்**
**சொல்வதைத் தவிர வேறு வழியில்லையே''** (திரிசடை1978 : 36)

சமூகத்தில் குடும்பம் மிக முக்கியமாக கருதப்படுகின்றன. அக்குடும்பத்திற்குக் குடும்பத் தலைவியும் முக்கியம். குடும்பத் தலைவி இல்லையென்றால் குடும்பம் குடும்பமாகச் செயல்பட முடியாது. குடும்பத்திற்கு அடித்தளமாக இயங்கும் பெண்ணினத்தை, ஆணாதிக்கத்தினர் என்றுமே மதிப்பளிப்பதில்லை. இவ்வின்னல்களில் இருந்து விடுபட திருமணமே வேண்டாம் என்றால் சமூகம் அப்பெண்ணைத் திமிர்பிடித்தவள், சொல்பேச்சைக் கேட்காதவர் என்று பலவகையில் விமர்சிப்பதைத் திரிசடை கவிதையில் வெளிப்படுத்தியுள்ளார்.

## குடும்ப உறவில் பெண்களின் நிலை

குடும்ப உறுப்பினர்களுக்காகத் தன் சுயத்தைத் தன் ஆளுமையை இழக்கவேண்டிய கட்டாயத்திற்குள்ளாகிறாள். இளம்பெண், மனைவி, தாய் என்று எல்லா நிலைகளிலும் ஆணை சார்ந்தே பெண்ணின் வாழ்க்கை தீர்மானிக்கப்படுகிறது. அடக்கம், பொறுமை, விட்டுக்கொடுத்தல், அடங்கிப்போதல் என்று ஆண் உறவுகளோடு இணங்கிபோகும் நிலைக்கு பெண் தள்ளப்படுகிறாள். இதனை வினயா தன்வரலாற்றில்,

"லட்சணம் கெட்டவளே, வயல்ல உங்க அப்பனா வேலை செய்வான்? நாத்து நட கஷ்டம் வீட்டுல உட்கார்ந்துச் சோரும் கறியும் வெக்கிற உனக்கென்ன தெரியும். இவ்வளவு நேரமா இங்கே என்ன செய்துட்டிருந்தே அம்மா எதுமே பேசவில்லை. நாங்கள் மூன்று பேரும் அம்மவைச்சுற்றி நின்று கொண்டிருந்தோம். அப்பா வீட்டிற்கு வருவதற்குக் கொஞ்ச நேரத்திற்கு முன் வேலைக்காரர்களுக்கான சாப்பாடு அனுப்பப்பட்டிருந்தது."

கணவன் என்ற ஆண் வர்க்கத்தினர் வீட்டில் எவ்வளவு வேலைப்பார்த்தாலும் அவற்றையெல்லாம் பொருட்படுத்துவதில்லை. அவன் செய்யும் வேலை மட்டுமே பெரிய வேலை என்று கருதுகின்றனர். வீட்டில் கணவன், குழந்தைகள், பெரியவர்கள் என இவர்களுக்கு அனைத்து வேலைகளையும் ஒருவராக நாள்தோறும் போராடுகின்றாள். இவ்வாறு உழைப்பவளை தகாத வார்த்தைகளால் ஒவ்வொரு நாளும் துன்புறுத்துகின்றனர். பெண்களும் அடக்கம், பொறுமை, விட்டுக்கொடுத்தல் பண்பினை அடிப்படையாகக் கொண்டு தன் குடும்பத்திற்காக விட்டுக்கொடுத்து ஒவ்வொருவரும் வாழ்கின்றனர். மேலும்,

"சோறு வெக்கட்டுமா? என்ன குழம்பு வெச்சிருக்கிற? அப்பா குரலில் ஏளனம் தொனிக்க கேட்டார். நாங்கள் கதவின் நிலைப்படியில் நின்றிருந்தோம். அப்பா குவித்து வைத்திருந்த சோற்றின் நடுப்பகுதியிலிருந்து ஒரு கவளம் உருட்டி எடுத்து குழம்பில் கவளத்தை முக்கியெடுத்து வாயிலிட்டார். சை... இதென்ன குழம்பு. உப்புமில்லை, உரப்புமில்லை, குழம்பா இது? என்றவாரே பாத்திரத்துடன் எடுத்து முற்றத்தில் வீசினார்"9

ஆண் சமூகம் குடும்பத்தில் பெண் என்பவள் தான் செய்யும் வேளைகளில் சிறு தவறுகள் ஏற்பட்டுவிட்டாள் கூட அப்பெண்ணை வீட்டில் எத்தனைபேர், யார் இருந்தாலும் பார்க்காமல் தன்மனதிற்குத் தோன்றுகின்றதை அப்படியே ஆண்கள் பறைசாற்றுகின்றனர். கணவன், மனைவி இருவரும் சண்டை போட்டுக்கொள்ளும் நிலையில் குழந்தைகள் பார்த்தால் அவர்கள் மனம் வேதனைப்படுவார்கள் என்ற எண்ணம் கூட இல்லாமல்தன் அதிகாரத்தை நிலைநாட்டுகின்றனர். வினயா தன்வரலாற்றில் வினயா அப்பா குழம்பு ருசியாக இல்லை என்பதற்காகச் சாப்பாட்டை தூக்கி எறிகிறார். குழந்தைகள் பார்த்து பயந்துபோய் அம்மாவைக் கட்டிப்பிடித்து அழுகின்றனர். தாயும் மறுத்து பேசாமல் குழந்தைகளைப் பிடித்துக் கொண்டு தன் நிலையை எண்ணி வருந்துகின்றார். ஆண் எப்படி அவர் வீட்டில் செல்லமாகவும், செழிப்புடனும் வளர்க்கிறார்களோ அதுபோல தான் பெண்களும் தன் வீட்டில் வளர்ந்தார்கள், வளர்கிறார்கள். மானுடப்பிறவி என்பது மிகப்பெரிய பிறவியாகும். ஆண் உயர்ந்தவர்கள், பெண் தாழ்ந்தவர்கள் என்ற பாகுபாடுகள் கிடையாது. இருவரையுமே உயர்வானவர்களாகத்தான் இறைவன் படைக்கிறார். அதில் பாகுபாட்டை ஆண் சமூகம்

விதைக்கின்றனரே தவிர இறைவன் விதைப்பதில்லை. மனிதர்களுக்குக் கொடுக்கும் மரியாதைகளையும், உரிமைகளையும் பெண்களுக்குக் கொடுக்க வேண்டும் என்பதே பெண்களின் ஆதங்கமாகும். இவற்றை அனைவரும் வெளியேவந்து கூறுவதில்லை. இதனை,

"யாருடனும் எந்தப் பாரதியும் இல்லாமல் அம்மா நீர் வழிந்த கண்களுடன் சித்தப்பாவுக்குக் கொண்டு போவதற்கான பலாப்பழ சிப்ஸ் தயாரிக்கவோ, மாவிடித்துக் கொண்டு நின்றார். அம்மா எதற்காக அழுகிறாள் என்று பலமுறை யோசித்துப் பார்த்ததுண்டு. பிள்ளைகளான எங்களைத் தவிர அம்மாவுடன் வேறு யாரும் அதிகமாகப் பேசிக்கொள்வதில்லை. எங்கள் வீட்டிலும் சரி அப்பாவின் உறவினர்கள் வீட்டிலும் சரி அம்மா ஒரு வேலைக்காரியைப் போலத்தான் வாழ்ந்து கொண்டிருந்தார்"

பிறருடன் எவ்வித இணக்கமும் ஏற்படுத்திக் கொள்ளாமல் தன் குடும்பத்திற்கும், குடும்ப உறவினர்களுக்குத் தேவையான வேலைகளைச் செய்யும் பெண்ணாகவே ஒவ்வொரு பெண்ணும் வாழ்கின்றனர்.பிள்ளைகளும் அம்மா படும் வேதனைகளைக் கண்டு அவர்களும் மனஉளைச்சலுக்கு ஆளாகின்றனர். தாய் என்பது ஒரு பெண்ணுக்கு மகப்பேறு மகிழ்ச்சியைப் அளித்தாலும் அதே நேரத்தில் பெண்ணுக்கு ஒரு மதிப்பிழந்த தன்மையையும் பயமுறுத்தல் நிலையையும் உருவாக்குகிறது. வினயாவின் தாய் தன்னைக் குறித்த எந்தவிதமான சிந்தனையையும் அற்றவளாகவே சித்தரிக்கப்படுகிறார். தனக்கென்று தனிப்பட்ட விருப்பு வெறுப்பு அற்றவளாக வாழ்வே கணவனும் சமூகமும் கற்பிக்கிறது.

"நட்புறவுகளோ, சமூகஉறவுகளோ எதுவுமே இல்லாமல் அடுப்படியில் மட்டுமே ஒதுங்கி வீட்டிற்கு வெளியிலுள்ள உலகம் எப்படியிருக்கும் என்று தெரியாமல் எல்லா மன உணர்வுகளையும், சிந்தனைகளையும் தனக்குள் புதைத்து நல்ல குடும்பப் பெண்ணாக அம்மா வாழ்ந்தாள். இப்படி ஏராளமான பெண்கள் தங்களுக்கான தனிப்பட்ட எந்தவித ஆர்வங்களுமின்றி யாருடைய மகிழ்ச்சிக்காகவும் இன்பத்திற்காகவும் திருப்திக்காகவும் தங்களையே வேள்வித் தீயாக்கி"

பெண் சமூகம் விழிப்புநிலையை அடைந்தாலும் திருமணம் நடந்தபிறகு அவர்கள் மீண்டும் அடிமை நிலைக்கே தள்ளப்படுகின்றனர். இதற்கு ஒவ்வொரு திருமணமான பெண்ணும் சான்றாகும். நூற்றில் தொன்னூறு சதவீதப் பெண்கள் இந்நிலையிலேயே வாழ்கின்றனர். ஒரு பெண் தான் பிறந்த வீட்டில் வாழும் நிலையில் அப்பா, அம்மா, குடும்ப உறவினர்கள், நண்பர்கள் என்று அனைவரோடும் மகிழ்ச்சியாகப் பேசி, பழகிவிளையாடிய தருணங்கள் அனைத்தையும் விட்டுவிட்டு தன் கணவனை இனி எல்லாமுமாக இருப்பார் என்ற எதிர்பார்ப்புடன் புகுந்த வீட்டிற்கு வரும் பெண்ணிற்கு எல்லாம் எதிர்மறையாக அமைகின்றன. ஆண் சமூகத்தினர்களுக்கு இவ்வித கட்டுப்பாடுகள் என்றுமே ஏற்படுவதில்லை. திருமணத்திற்கு முன்பு எப்படி சுதந்திரமாக இருந்தார்களோ அதே சுதந்திரத்தோடு தான் திருமணத்திற்குப் பின்பும் வாழ்கின்றனர். பெண் என்பால் தன்னுடைய எல்லா மனஉணர்வுகளையும், ஆசைகளையும், சிந்தனைகளையும் தனக்குள்ளே புதைத்துக் கொண்டு மற்றவர்களின் மகிழ்ச்சிக்காகவும், குடும்ப பெருமைக்காகவும் தங்களைத் தாங்களே வேள்வித் தீயாக்கி ஒவ்வொரு பெண்ணும் வாழ்ந்து வருகின்றனர். குடும்பத்தில் பெண்கள் படும்

இன்னல்களையும், துயரங்களையும் வெளியுலகத்திற்கு வெளிப்படுத்த வேண்டும் என்ற நோக்குடன் ஒவ்வொரு பெண் படைப்பாளர்களும் தன் படைப்பின் மூலம் வெளிப்படுத்தி வருகின்றனர். வினயா தன் அம்மாவின் நிலையைக் கூறியதை அடியொற்றியே கனிமொழி தன் கவிதையில்,

"தனக்கும் கனவுகள் இருந்ததை மறந்து
ஓடிக்கொண்டிருப்பாள்
எங்களுக்காக அழுது சிரித்த தன்
கனவுகளை எங்கள் மீது திணித்து
அது நடக்காதபோது
அழிச்சாட்டியம் செய்து
தோற்றுப்போய் ஓடிக்கொண்டு
அவ்வப்போது
நிறைய அன்பு செலுத்தும் ஏன் அம்மாவைப்
பற்றி எந்த கதைகளும்
சொல்வதே இல்லை"**12**

என்று எழுதுகின்றார். குடும்பம், குழந்தைகள் என்று வாழ்க்கையை முற்றிலும் கரைத்துக் கொள்ளும் பெண்ணே தியாகத் திருவுருவாகவும் தாய்மையினை இலக்கணமாகவும் கொண்டாடப்படுகிறாள் என்பதை இதன் வழி உணர முடிகிறது.

**முடிவுரை**

குடும்பத்திலும் சமூகத்திலும் பெண்ணின் பங்கு முதன்மையானவை ஆகும். ஆணாதிக்கச் சமூகம் மறுத்து தன் ஆதிக்கத்தை குடும்பத்தில் பெண்ணின் மீது செலுத்து கின்றனர். குடும்ப அமைப்பில் நிலவும் ஆதிக்க மனநிலையின் வெளிப்பாடுகளைப் பெண் படைப்பாளர்கள் ஆழமாகத் தங்களின் படைப்புகளில் வெளிப்படுத்தி வருகின்றனர். பொருளாதார அங்கீகாரமற்ற இல்லப்பணிகளில் தம்மைத் தொலைத்துக்கொண்டிருக்கும் பெண்ணைப் படைப்பாளர்கள் பலர் தன் எழுத்துக்கள் மூலம் பதிவு செய்து வருகின்றனர். ஏராளமான கேள்விகளுடன் பெண் படைப்புகள் அடுத்தகட்ட நகர்வை முன் வைத்துள்ளன என்பதை வினயா தன் வரலாற்று வரிகள் புலப்படுத்துகின்றன.

# அகநானூற்றில் மகளிர் தொழில்கள் (மானுடவியல் நோக்கில்)

முனைவர் ஆ.நளினி சுந்தரி
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,

பா.சத்யா
முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர்,
தமிழாய்வுத்துறை, பிஷப் ஹீபர் கல்லூரி (தன்னாட்சி),
திருச்சிராப்பள்ளி.

**முன்னுரை**

வினையே ஆடவர்க்கு உயிரென வினைமேற்கொள்ளல் ஆடவர் கடமையாகக் கூறப்பட்டாலும், சங்க காலத்தில் மகளிரும் தாம் வாழ்ந்த நில இயல்பிற்கு ஏற்ற வகையில் தொழில் செய்துள்ளனர். தம் வாழ்க்கைக்கும் தன் குடும்பத்திற்கும் வேண்டிய பொருளீட்டுவதில் ஆர்வமும், முயற்சியும் உழைப்பும் உடையவராய்ப் பொறுப்புணர்ச்சியுடன் வாழ்ந்துள்ளனர்.

குறிஞ்சி முதல் நெய்தல் முதலான ஐவகை நிலங்களிலும் பொருட்களை உற்பத்தி செய்யும் பணியில் பெண்களின் பங்கும் குறிப்பிடத்தக்கதாக இருந்தது. பசும்பாலில் இருந்து கிடைக்கும் பொருள்கள் மட்டுமின்றி, மீன், நெல், உப்பு போன்ற பொருட்களின் விற்பனையில் பெரும்பாலும் பெண்கள் ஈடுபட்டனர். சங்க இலக்கியமான எட்டுத்தொகை அகநூல்களில் பெண்கள் தொழிலில் காட்டும் ஈடுபாடு பற்றியும் வணிக உற்பத்தியில் பெண்களின் பங்கு பற்றியும் மானுடவியல் வாயிலாக இனி விரிவாக காணலாம்.

**வியாபாரம்**

இலக்கியங்களில் உள்ள மகளிர் எந்தந்த இடங்களில் எந்தந்தப் பொருட்களை விற்றால் அதிக லாபம் கிடைக்கும் என்ற வியாபார நுணுக்கத்தைப் பெண்கள் அறிந்திருந்தனர். இளம் பெண்கள் முதல் வயது முதிர்ந்தவர் வரை அனைத்து பருவத்தினரும் வணிகத்தில் ஈடுபட்டிருந்தனர்.

**தினைப்புனம் காத்தல்**

சங்க இலக்கியத்தில் பெண்கள் தினைக் கதிர்களைப் பறவைகள் கவரா வண்ணம் காவல் காத்த செய்திகள் இலக்கியத்தில் பல பாடல்கள் மூலம் பதிவு செய்யப்பட்டுள்ளது. தினைப்புனம் காவல் காக்க இளமகளிரை அவர்களின் பெற்றோர்களே அனுப்பி வைத்தனர் என்பதை,

**''வரு குறி செய்த வரையகச் சிறு தினைச்**
**செவ் வாய்ப் பாசினம் கடீஇயர், 'கொடிச்சி''!**
**அவ் வாய்த் தட்டையொடு''1**

என்று நற்றிணை பாடல் கூறுகின்றது. மலைக்குகையின் மேல் அமைக்கப்பட்ட பரணியில் அமர்ந்து கிளிகளை ஓட்டியதை

**''களிறு அணந்து எய்தாக் கல்முகை இதணத்து,**
**சிறு தினைப் படுகிளி எம்மொடு ஓப்பி''2**

என்று அகநானூற்றின் பாடல் வரிகளில் காணப்படுகின்றது. மேலும்.;

**''அமை அறுத்து இயற்றிய வெவ்வாயத் தட்டையின்**
**நறுவிரை ஆரம் அறஎறிந்து உழுத**
**உளைக்குரல் சிறுதினை கவர்தலின்,கிளைஅமல்**
**பெருவரை அடுக்கத்துக் குரீஇ ஒப்பி''3**

என தினைக்கதிர்களை உண்ணவரும் பறவைகளை ஓட்டும் மென்மையான தொழிலைச் செய்தனர் என்றாலும் வேங்கை மரத்தின் உயரமான பரண் அமைத்திருந்தனர் இதன்மூலம் அங்கு விலங்குகளின் செயல்பாடுகள் இருந்து இருக்கின்றன என்பதும் அவற்றிற்கு அஞ்சாத நிலையில் சங்ககாலப் பெண்கள் தினைப்புனத்தைக் காவல் காத்தனர் என்பதை அகநானூற்றுவியலின் மூலம் அறிய முடிகின்றது.

சில சமயங்களில் வேங்கை மரத்துக் கவட்டின் இடையே பரண்கட்டி பரண்மேல் புலித்தோலை வேயிந்தார்கள். அப்பரணுக்குக் கழுது, இதணம், பணவை எனப் பல சொற்கள் வழக்கில் இருந்தன. இதன் மேல் விழும் வேங்கைப் பூக்களைப் பார்த்துப் புலியென யானைகள் மிரளும் என்பதையும் அறிய முடிகின்றது.

இரவில் குறமகன் தினைப்புனம் காக்க, பகற்பொழுதில் குறமகளிர் பரணிலிருந்து தினைப்புனம் காத்தனர் என்பதை நற்றிணையின் 389வது பாடல் விளக்குகிறது.

சங்க இலக்கியங்கிளில் குறமகளிர் தினைப்புனம் காவல் காத்ததைப் பல பாடங்கள் விவரிக்கின்றன."சங்க இலக்கியத்தில் தினை வரும் 80 இடங்களில் ஆண்கள் தினைக்காவல் பிடித்தமை 6 இடங்களில் மட்டுமே இடம் பெற்றுள்ளது. பெண்கள் தினைப்புனம்

காத்தமை 29 இடங்களில் பேசப்பட்டுள்ளது. ஏனல் வரும் 43 இடங்களில் ஆண் காவல் 8 இடங்களிலும், பெண் காவல் 26 இடங்களிலும் பேசப்பட்டுள்ளன. ஆக 55 இடங்களில் பெண்கள் தினைப்புனம் - காவலில் ஈடுபட்டிருந்த மாதையன் அவர்கள் தம் ஆய்வுக்கட்டுரை வழி அறியலாம்.

## காட்டெரிப்பு வேளாண் தொழில்

சங்க இலக்கியங்களில் கானக்குறவர் பெண்களின் பங்கு முக்கியமானது. காட்டெரிப்பு வேளாண்மையில் பெண்கள் விதைத்தல் தொடங்கி களையெடுத்தல், தினைக்காத்தல், உணக்கல், கிழங்குகழ்தல், அறுவடை வரை எல்லாவற்றிலும் முக்கிய பங்கு பெற்றிருந்தனர் என்பதை அகநானூற்றின் 194-வது பாடலின் 1-16வரிகள் விளக்குகின்றது. காட்டெரிப்பு வேளாண்மையில் பெண்கள் பெற்றிருந்த முக்கியத்து வமானது உழுது பயிரிடும் நீர்ப்பாசன வேளாண்மை ஏற்பட்ட பின்னரே குறைந்து போனது.

## மீன் விற்றல்

நெய்தல் திணையில் உள்ள பரதவர் பெண்கள் பார்ப்பவர்களுக்கு வியப்பைத் தரும் அளவிற்கு ஏராளமான மீன்களை அருகில் உள்ள ஊருக்குள் எடுத்துச் சென்று வாணிகம் செய்துவிட்டு அதற்கு ஈடாகத் தமக்குத் தேவையான பிறபொருள்களைப் பெற்று வந்தனர் என்பதை,

"திமிலோன் தந்த கடுங்கன் வயமீன்
தழைஅணி அல்குல் செல்வத் தங்கையர்,
விழவுஅயர் மறுகின் விலைஎனப் பகரும்."5

என்ற அகநானூற்றின் பாடல் குறிப்பிடுகின்றது. தம் தமையன்மார் பிடித்து வந்த மீன்களைத் தம் பேச்சுத் திறத்தால் கூவி விற்பவள் என்பதை அறிந்து கொள்ள முடிகின்றது. மேலும், மீன் பிடிக்கும் தொழிலில் ஆடவர் மட்டுமின்றி பெண்களும் ஈடுபட்டுள்ளமையை அகநானூறு பின்வருமாறு சுட்டிக்காட்டுகின்றது.

**''நாண்கொள் நுண்கோலின் மீன்கொள் பாண்மகள்**
**தான்புனல் அடைகரைப் படுத்த வராஅல்''6**

என்கின்றது. இவ்வரியின் மூலம் நெய்தல் நிலப் பெண் புனலை அடுத்த கரையில் விரால்மீனைப் பிடித்தக் குறிப்புக் கிடைப்பதனால் மீன்களை விற்கும் திறமை மட்டும் அல்லாது மீன்களைப் பிடிக்கும் நுணுக்கமும் அறிந்தவளாகவும் இருந்திருக்கின்றாள் என்பதை அறிந்துக் கொள்ள முடிகின்றது.

## ஆடை வெளுக்கும் தொழில்

சங்க கால மக்கள் தூய்மையான ஆடைகளை உடுத்தப் பெரும் உதவியாக இருந்தவர்கள் பெண்களே ஆவர். இவ்வகையான மகளிரை புலைத்தி, புலைத்தியர் என்று அழைக்கப்பட்டனர்.

இப்பெண்கள் உவர்நிலத்தில் கிணற்றைத் தோண்ட அங்குக் கிடைக்கக்கூடிய நீரில் நாள்தோறும் துணிகளை ஊறவைத்து துவைத்து வெளுப்பர். ஊவர் நீர் துணிகளின் அழுக்கை நீக்கும் தன்மை உடையதால் இவ்வகை நீர் துணிக்களை வெளுப்பதை வழக்கமாக கொண்டுள்ளனர். இவ்வாறு துவைத்த துணிகளுக்குச் சோறு வடித்த கஞ்சிட்டு உலர்த்துவர்.

**''பசைவிரல் புலைத்தி நெடிது பிசைந்து''7**

என்ற பாடலின் வழி சங்க காலத்துப் பெண் மற்றவர்களது ஆடைகளைச் சுத்தம் செய்யும் தொழிலில் ஈடுபட்டிருந்தார்கள் என்பது, உவர்நிலத்து நீர் ஆடைகளின் அழுக்கை சுத்தம் செய்யும் என ஆராய்ந்து அறியும் அறிவியல் திறன் பெற்றிருந்தாள் என்பது தெரிய வருகின்றது.

## கைம்மைத் தொழில்

தமிழ்ச் சமுதாயத்தில் கணவனை இழந்த மகளிர் 'கைம்மை மகளிர்' என்று அழைக்கப்பட்டனர். அப்பெண்கள் வாழ்ந்த வாழ்க்கை 'கைம்மை நிலை' என்று கூறப்படுகின்றது. அப்படிப்பட்ட அப்பெண்கள் பொருளாதாரத்திற்குத் தொழில் முனைய முற்பட்டதைப் பின்வரும் நற்றிணைப் பாடல் விளக்குகின்றது.

**''ஆள் இல் பெண்டிர் தாளின் செய்த**
**நுணங்கு நுண் பனுவல் போல''8** (நற்-353)

என்ற பாடலின் மூலம் அறிய முடிகின்றது. கைம்பெண் தம் தனிமைத் துயரம் நீங்கவும், பிழைப்பின் காரணமாகவும் ஆடைநெய்ய நூல் நூற்பர் என்பதை மேற்கூறிய பாடலின் மூலம் அறியலாம். மேலும் கைம்பெண்கள் நூல் நூற்பதை,

**''பருத்திப் பெண்டின் பனுவல் அன்ன''9** (புறம் 125:1-ப.எ.288.)

என்ற புறநானூற்று பாடலால் அறிய முடிகிறது. கணவனை இழந்த மகளிர் தாமே கைம்மை நிலையை இயல்பாக ஏற்கும் சூழல் உருவாக்கப்பட்டிருக்கின்றது.

## முடிவுரை

சங்க இலக்கியங்களில் மகளிர் வணிகத்தில் ஈடுபாடுவுடன் இருந்திருக்கின்றனர். சங்க கால மகளிர் தான் வாழும் இடத்திற்கேற்பவும், வாழ்க்கைச்சூழலுக்கு ஏற்பவும் குறிப்பிட்ட ஒரு தொழிலில் ஈடுபட்டிருக்கின்றனர். அவற்றுள் வாணிபம், மீன்பிடித்தல், விற்றல், தினைப்புனம் காத்தல், காட்டெரிப்பு வேளாண்மை செய்தல், ஆடையை வெளுக்கும் தொழில் ஆகியவைக் குறிப்பிடத்தக்கவை. இவ்வாறு சங்ககால மகளிர் பல்வேறு வாணிப உற்பத்தி செய்யவும், வாணிப நுணக்கத்தையும் தெரிந்து வைத்திருந்தனர் என்பதை அகநானூற்று பாடல்கள் உணர்த்துகின்றன. தங்களுக்கென சில வாணிப தொழிலை உருவாக்கிக் கொண்டு சங்க கால மகளிர் தொழில் மேம்படுத்துவது சிறப்புற்று விளங்கியுள்ளமையை மானுடவியல் மூலமாக அகநானூற்றின் பாடல்கள் மானுடச்சமூகம் மேம்பட சிறந்த சான்றாக அமைகின்றது.

## தொகுப்புரை

சங்க இலக்கியத்தில் ஆடவர்கள் மட்டுமல்லாது பெண்களும் தொழில் செய்துள்ளனர். பெண்கள் மீன்விற்றல், ஆடை வெளுத்தல், தினைப்புனம் காத்தல், காட்டெரிப்பு வேளாண்செய்தல் முதலிய தொழில்கள் செய்துள்ளனர். அகநானுற்றின் பாடல்களின் வழிப் பெண்களும் வாணிபம் செய்து பொருளீட்டி உள்ளனர். பெண்கள் கடின உழைப்போடு தாம்மேற்கொண்ட தொழிலில் தனித்திறனுடனும் விளங்கியுள்ளனர். தொழில்துறையில் ஆடவர்களுக்குப் பெண்கள் சளைத்தவர்கள் இல்லை என்று சங்ககாலப் பெண்கள் நிரூபித்துள்ளனர் என்பதை அகநானூற்றின் மூலம் காட்டுகின்றது.

# பாரதியாரும் பெண் சொல்லாக்கமும்

முனைவர் இரா. இந்து
இணைப்பேராசிரியர், அறிவியல் தமிழ், தமிழ் வளர்ச்சித் துறை,
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

## முன்னுரை

இருபதாம் நூற்றாண்டின் ஈடு இணையற்ற கவிஞரான பாரதியார் பன்முக ஆளுமை கொண்டவர்; 'பெண்மை வெல்க' என்று கூத்தாடியவர். பாரதியார் மிகச்சிறந்த எழுத்தாளராகவும், பத்திரிகையாளராகவும், கட்டுரையாளராகவும் விளங்கியவர்.

பாரதியார் மண் விடுதலையைப் பற்றிப் பாடினார்; அதற்குப் பெண் விடுதலையே அடிப்படை என எடுத்துரைத்தார். பாரதியார் சாதி, சமுதாயம், பெண் முன்னேற்றம், கல்வி, மொழி, தொழில், மனித வாழ்வியல் ஆகியவைத் தொடர்பாகக் குரல் கொடுத்த மனித நேயம் மிக்க மாந்தராவார்.

தேமதுரத் தமிழோசையைத் தம் படைப்புகள் மூலம் உலகமெலாம் பரவச் செய்தார். யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல் இனிதாவது எங்கும் காணோம் என்று வியந்து பாடினார்.

தமிழ் இலக்கிய மரபில் பெண்ணுரிமைப் பற்றி அதிகமாகச் சிந்தித்தவர்களுள் பாரதி முதலிடம் வகிக்கிறார்.

**ஒரு பொருள் குறித்த வேறுசொல் லாகியும்**
**வேறுபொருள் குறித்த ஒருசொல் லாகியும்**
**இருபாற்று என்ப திரிசொல் கிளவி**

என்பார் தொல்காப்பியர். இவற்றுள் வேறுபொருள் குறித்த ஒரு சொல், ஒரு பொருட் பன்மொழி என்ற வகையில் பாரதியார் படைப்புகளில் பெண் என்னும் சொல்லும் பெண் பொருண்மையிலான சொற்களும் ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்படுகின்றன.

**"எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே"** (தொல்காப்பியம் - 680)

இப்பாடல்வழி தமிழ்ச்சொற்களின் சொற்பொருண்மைகள் பற்றித் தொல்காப்பியர், குறிப்பிட்டுள்ளது நோக்கத்தக்கது.

**(i) பாப்பா (பெண் குழந்தை)**

பாரதியார் தனது மகள்கள் தங்கம்மாள் பாரதிக்கும் சகுந்தலா பாரதிக்கும் பாப்பா பாட்டு எழுதினார்.

**ஓடி விளையாடு பாப்பா! - நீ**
**ஓய்ந்திருக்க லாகாது பாப்பா!**
**..................................**
**..................................**

என்று பாடினார்.

பாரதியார் உரைநடைகளில் பாப்பா இச்சொல் இடம்பெறவில்லை; கவிதைகளில் இடம்பெற்றுள்ளது. பெண் பருவ நிலைகளில் ஓடி விளையாடும் நிலையைப் பேதைப் பருவமாகக் (12 வயது வரை) கருதலாம்.

**(ii) கன்னி**

*(i)* புத்த மதத்தில் பெண்கள் நடத்தப்படும் விதம் குறித்துப் பாரதியார் குறிப்பிடுகையில் "இளைஞர்களும் கன்னியர்களும் காதலிருந்தால் மட்டுமே விவாகம் செய்து கொள்வார்கள்....." என்று எழுதுகிறார். (சக்ரவர்த்தினி பத்திரிகை)

*(ii)* கவர்மெண்ட் பள்ளிக்கூடங்களிலும், சென்னைப் பாதிரி பள்ளிக்கூடங் களிலும், நமது கன்னியர்களிலே ஓர் சிறு பகுதியாருக்குக் கொடுக்கப்படும் பயனற்ற கல்வி யானது அறியாமையைக் காட்டிலும் நூறு மடங்கு கொடியதாகும். (பாரதியார் கட்டுரைகள், பக்கம் 4)
இச்சொல்லைப் பாரதியார் பெரிதும் உரைநடைகளிலேயே பயன்படுத்தியுள்ளார். திருமணமாகாத பெண்களைக் 'கன்னி' என்பர். பொதுவாகக் கன்னி இச்சொல் பெதும்பை, மங்கை, மடந்தை பருவநிலைப் பெண்களைக் குறிப்பிடலாம்.

*(iii)* ஆற்றல் கொண்ட பராசக்தி
**யன்னைநல்**
**அருளி நாலொரு கன்னிகையே**
**யாகியே** (பாரதியார் பாடல்கள்)

**(iii) தையல்**

"தையல் சொல் கேளேல்" என்று ஔவையார் தம் ஆத்திச்சூடியில் குறிப்பிட் டுள்ளார். பாரதியாரோ "தையலை உயர்வு செய்" என்று தன் ஆத்திச்சூடியில் குறிப்பிட் டுள்ளார்.

*பெண் பருவநிலைகள் தையல் என்று சொல் பேதை (5 வயது முதல் 7 வரை), பெதும்பை (8 வயது முதல் 11 வயது வரை) உள்ள பருவநிலைகளைக் குறிக்கக்கூடும்.*

**சாதல் மூத்தல் கெடுக்கும்**
**அமிழ்தமோ?**
**தையல் வாழ்கபல் லாண்டு பல்**
**லாண்டிங்கே**

**(iv) நங்கை**

**நரிய பொன்மலர் மென்சிறு**
**வாயினால்**
**நங்கை கூறும் நவீனங்கள்**
**கேட்டிரோ!** *(பாரதியார் கவிதைகள்)*

*பாரதியார் நங்கை என்ற சொல்லை மிகவும் அரிதாகப் பயன்படுத்தியுள்ளார். பாரதியார் கவிதைகளில் மட்டுமே இச்சொல்லைப் பயன்படுத்தியுள்ளார்.*

**(v) பெண்**

*(i)* **ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமையென**
**றெண்ணியிருந்தவர் மாய்ந்து விட்டார்**
**வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டிவைப் போமென்று**
**விந்தை மனிதர் தலை கவிழ்ந்தார்.**

*(ii)* **பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்**
**பாரினிற் பெண்கள் நடத்த வந்தோம்**
**எட்டு மறிவினில் ஆணுக்கிங்கே பெண்**
**இளைப்பில்லை காணென்று கும்மியடி** *(பாரதியார் பாடல்கள்)*

*(iii)* **மானொத்த பெண்ணடி**
**என்பான் - சற்று**
**மனமகிழும் நேரத்தி லேகிள்ளி**
**விடுவான்** *(பாரதியார் பாடல்கள்)*

*பாரதியார் 'பெண்' என்ற சொல்லினை தம் உரைநடைகள், கவிதைகள் இரண்டிலும் பயன்படுத்தியுள்ளார்.*

**(vi) பெண்டு**

**பெண்டு குழந்தைகள் கஞ்சி குடித்துப்**
**பிழைத்திட வேண்டுமையே**
**பண்டமெலாஞ் சேர்த்துவைத்துப் பால்வாங்கி மோர்வாங்கிப்**
**பெண்டுகளைத் தாய்போற் பிரியமும் ஆதரித்து**

*(பாரதியார் பாடல்கள்)*

*பாரதியார் 'பெண்டு' என்ற சொல்லைப் பாடல்களில் மட்டுமே அரிதாகப் பயன்படுத்தியுள்ளார்.*

**(vii) மகளிர்**

**விடுதலைக்கு மகளி**
**ரெல்லோரும்**
**வேட்கை கொண்டனம்** *(பாரதியார் கட்டுரைகள்)*

**(viii) மாதர்**

**(i) "பெண்ணுக்கு ஞானத்தை வைத்தான் - புவி**
**பேணி வளர்த்திடும் ஈசன்**
**மண்ணுக்குள்ளே சில மூடர், நல்ல**
**மாதர் அறிவைக் கெடுத்தார்"**

**(ii) மாதர்க் குண்டு சுதந்திரம்**
**என்றுநின்**
**வண்ம லர்த்திரு வாயின்**
**மொழிந்தசொல்**

**(iii) நிமிர்ந்த நன்னடையும் நேர்கொண்ட பார்வையும்**
**நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகளும்**
**திமிர்ந்த ஞானச் செருக்கும் இருப்பதால்**
**செம்மை மாதர் திறம்பு வதில்லையாம்**

**(iv) "இந்த கூட்டத்தையொட்டி மாதர்களின் சபையொன்று நடக்கப் போகிற தாகையால், கல்வி கற்ற மாதர்களெல்லாரும் அவசியம் வந்திருந்து தமக்கு வேண்டிய சீர்திருத்தங்களை உறுதிபடுத்த ஏற்பாடு செய்ய வேண்டும். மாதர்கள் தாமே முற்பட்டுத் தமக்கு வேண்டிய சீர்திருத்தங்களைத் தேடிக் கொள்வதே நன்றாகும்".**

*பாரதியார் 'மாதர்' என்ற சொல்லை உரைநடைகள், கவிதைகள் இரண்டிலும் பயன்படுத்தி யுள்ளார்.*

**(ix) மாது**

*"அந்த மாது என்னிடம் சொல்கிறாள். ஐயா, உமது சக்கரவர்த்தி பத்திரிகை அத்தனை ரசமில்லை...."*

*"காதல் வெயிலிலே காய வைத்த*
*...... மாதவளின் மேனி"* *(பாரதியார் கட்டுரைகள்)*

*'அழியாப் புகழ் கொண்ட பழங்காலத் தமிழ் மாது' என்னும் தலைப்பில் பாரதியார் கட்டுரை எழுதியுள்ளார். பாரதியார் காதல் பற்றி விவரிக்கும்போதும் பெண்ணின் உடல் அழகினைப் பற்றி வர்ணிக்கும்போதும் 'மாது' என்ற சொல்லினைப் பயன்படுத்தியுள்ளார். மாதுபருவத்தினை மங்கை (24 வயது முதல் 36 வயது வரை) பருவநிலைக்கு ஒப்பிடலாம்.*

*பாரதியார் 'மாது' என்ற சொல்லினைக் கவிதைகள், உரைநடைகள் இவ்விரண்டிலும் பயன்படுத்தியுள்ளார்.*

**(x) விதவை (கைம்பெண்)**

"கணவனை இழந்த மாதர் அவர்கள் கணவரை இழந்தார்களேயன்றி உடலை இழக்கவில்லை. ஐம்புலன்களை இழக்கவில்லை.....

(பாரதியார் கட்டுரைகள்)

"ஸ்திரீ - விதவைகளின் தொகையைக் குறைக்க வழிகேட்டால், ஸ்ரீமான் காந்தி புருஷ விதவைகளின் தொகையை அதிகப்படுத்த வேண்டுமென்கிறார்...."

(பாரதியார் பெண்ணியக் கட்டுரைகள்)

விதவைகளைக் குறிப்பிட பாரதியார் விதவை, ஸ்திரீ - விதவை, கணவனை இழந்த மாதர் ஆகிய சொற்களைப் / சொற்றொடர்களைப் பயன்படுத்தியுள்ளார்.

**(xi) ஸ்திரீ**

(*i*) "தேசியக் கல்வியின் தமிழ்நாட்டுக் கிளையென ஒரு கிளை ஏற்பட வேண்டும். அதன் ஆட்சி மண்டபத்தில் பாதி தொகைக்குக் குறையாமல் தமிழ் ஸ்திரீகள் கலந்திருக்க வேண்டும்......" (பாரதியார் கட்டுரைகள்)

(*ii*) "நமது தேசத்துப் பெண்கள் பெருங்காரியங்களைச் செய்து முடிக்கும் புத்திரர் களைப் பெருவதைக் காட்டிலும் ஸ்திரீ ஜன்மத்திற்குப் பெரும்பாக்கியம் வேறொன்றும் இல்லை" என்கிறார் பாரதியார்.

பாரதியார் சில கருத்துக்களை உரைநடை வடிவில் குறிப்பிடும்போது பெண் என்ற சொல்லுக்குப் பதிலாகவும், பெண் என்ற சொல்லோடும் பெண்களைக் குறிப்பிட 'ஸ்திரீ ' என்ற வடமொழிச் சொல்லினைப் பயன்படுத்தியுள்ளது ஆய்வின் வழித் தெரிய வருகிறது.

**பாரதியும் இரு மொழி ஆளுகையும்**

(*i*) **தமிழ் "சொல்லில் உயர்வு தமிழ்ச்சொல்லே, அதைத்**
**தொழுது படித்திடடி பாப்பா"**
**"யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல்**
**இனிதாவ தெங்கும் காணோம்"**

என்று பலவாறு பாடுவதன் மூலம் பாரதியார் தமிழ்மொழிக்குக் கொடுத்த உயரிய இடத்தினைப் பற்றியும் அவருடைய மொழிப்பற்றினைப் பற்றியும் அறியலாம். தனித்தமிழில் கலைச்சொல் படைப்பது பற்றியும் பாரதியார் எழுதியுள்ளார்.


(*ii*) வடமொழி

"தமிழ்நாட்டிலே தமிழ் சிறந்திடுக. பாரத தேச முழுதிலும் எப்போதும் போலவே வடமொழி வாழ்க. நாடு முழுவதிலும் வடமொழி பயிற்சி மென்மேலும் ஓங்குக என்றும் தமிழ் நாட்டில் தமிழ்மொழி தலைமைபெற்றுத் தழைத்திடுக. (பாரதியார் கட்டுரைகள்)

(*iii*) தமிழும் வடமொழியும்

பாரதியார் காலத்தில் தமிழும் வடமொழியும் கலந்த மணிப்பிரவாள நடை பெரிதும் பயன்பாட்டில் இருந்தது. அதனால் பாரதியாரின் படைப்புகளிலும் மணிப்பிரவாள நடை தவிர்க்க இயலாத ஒன்றாகிவிட்டது. எனினும் பாரதியார் தமிழ்மொழிக்கே முதலிடம் கொடுத்தார்.

## பாரதியும் பெண் சொல்லாட்சியும்




| | | | |
|---|---|---|---|
| (*i*) | பாப்பா | (*viii*) | மாதர் |
| (*ii*) | கன்னி | (*ix*) | மாது |
| (*iii*) | தையல் | (*x*) | ஸ்திரீ |
| (*iv*) | நங்கை | | |
| (*v*) | பெண் | | |
| (*vi*) | பெண்டு | | |
| (*vii*) | மகளிர் | | |

## தொகுப்புரை

பாரதியின் படைப்புகளில் சமகாலப் சமுதாயப் பிரச்சனைகள் அனைத்தும் பல்வேறு கோணங்களில் ஆராயப்பட்டுள்ளன. அவர் விரும்பிய சமுதாயத்தைக் காண இடர்பாடாக இருக்கும் பிரச்சனைகளுக்கான தீர்வுகளைத் தம் படைப்புகளின்வழி அடைய முற்பட்டுள்ளார். 'புதியதோர் உலகம் செய்வோம்' எனத் தனக்கென ஒரு தனி முத்திரையைப் பதித்துள்ளார். பாரதியார் பெண்ணைப் பராசக்தியாக, அன்னையாக இப்படிப் பல வடிவங்களாக வணங்கினார்.

பாரதியாரின் படைப்புகளில் பெண் சொற்பொருண்மை வருகையிடப் பதிவுகளை ஆய்வு செய்ததன் வழி பின்வருவன கண்டுணரப்பட்டன.

1. பெண்ணைக் குறிக்கும் (*i*) கன்னி, தையல், நங்கை, பெண், பெண்டு, மகளிர் ஆகிய தமிழ்ச் சொற்களையும், (*ii*) மாதர், மாது, 'ஸ்திரீ' ஆகிய வடமொழிச் சொற்களையும் தம் படைப்புகளில் கையாண்டுள்ளார்.
2. பாரதியார் தம் படைப்புகளில் தமிழும், வடமொழியும் கலந்த மணிப்பிரவாள நடையைப் பயன்படுத்தியுள்ளார்.
3. பெண்ணைக் குறிக்கும் 'ஸ்திரீ' என்னும் சொல்லைப் பாரதியார் தம் உரைநடைகளில் மட்டுமே பயன்படுத்தியுள்ளார்; கவிதைகளில் பயன்படுத்த வில்லை.
4. பாரதியார் தம் உரைநடைகளில் பெண் பற்றிய கருத்துக்களை வலியுறுத்தும்போது

'ஸ்திரீ' என்ற சொல்லினை அதிகமாகப் பயன்படுத்தியுள்ளார்; அதே கருத்தினை உரைநடைகளில் விளக்குகையில் பெண் என்று குறிப்பிடுகிறார்.

| | | | |
|---|---|---|---|
| எடுத்துக்காட்டு: | கவிதைகளில் | - | மாதர், பெண். |
| | உரைநடைகளில் | - | ஸ்திரீ, பெண். |

**"தமிழால் பாரதி தகுதி பெற்றதும்**
**தமிழ் பாரதியால் தகுதி பெற்றதும் நிதர்சனம்!"**

# திலகவதி புதினத்தில் பெண்ணியக்கூறுகள்

முனைவர் இரா.திலகம்
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
சீதாலட்சுமி இராமசுவாமி கல்லூரி, திருச்சிராப்பள்ளி

திலகவதி புதினத்தில் இடம்பெறும் கதையமைப்பிலும் போக்கிலும் அதிகம் பெண்ணடிமைத்தனமே காணப்படுகிறது. இதற்குக் குடும்பமே அடிப்படைக் காரணமாக இருக்கின்றது. குடும்பத்தில்தான் ஆண் பெண் பால் பாகுபாடுஆரம்பமாகின்றது. திருமணம் முதல் குழந்தைப்பேறு வரை பெண்கள் ஆண்களால் அலட்சியப்படுத்தப்படுகிறாள். பெண்ணிற்கு அதிக வரதட்சணை கொடுத்தும் செலவுசெய்தும் திருமணம் செய்து வைப்பதால் பெண்என்றால் செலவு என்றும், ஆண் என்றால் வரவென்றும் மதிப்பீடு செய்துகொள்கிறாள். இதுவே பெண்வளர்ப்பில் அவளது பிரச்சனைகளுக்கு மூலக்காரணமாக அமைக்கின்றன.

பெண்களுக்கு கணவனாலும் சமூகத்திலுள்ள பிற ஆண்களாலும் பல்வேறு நிலைகளில் சிக்கல்கள் ஏற்படுகின்றன. அவற்றில் ஆண்ணாதிக்கப்போக்கு, பெண்ணடிமைத்தனம், பெண்கள் மற்றும் குழந்தைகளை அலட்சியப்படுத்தும்தன்மை, பெண்ணிற்குக் களங்கம், துரோகம் இழைத்தல், பத்திரிக்கைகாரர்களின் அத்துமீறியச்செயல், ஆணாதிக்கத்தின் உச்சநிலை, உடைமைப்பொருள் எனும் நோக்கு, பாலியல் சிக்கல், திரையுலகின்போக்கு, சட்டத்தின் போக்கு என்ற நிலைகளில் ஆணின் அடக்குமுறைக்கு ஆட்பட்டுத் துன்பங்களை அனுபவிக்கும் பெண்களைக் கதையமைப்பின் போக்கில் இனங்காட்டுகிறார் திலகவதி.

## ஆணாதிக்கப்போக்கும்பெண்ணடிமைத்தனமும்

ஆண் தன் மனைவியை மனிதப் பிறவியாக மதித்து நடத்தாமல், உணர்ச்சிகளை மதிக்காமல் அவளை அடிமைப்படுத்தி அவளை ஆளுமையைச் சிதைப்பதை "நெஞ்சில்ஆசை" என்னும் நாவலில் வரும் முரளி என்ற பாத்திரப்படைப்பின் வழி காட்டுகின்றார் திலகவதி. இதனை, " என்ன சொன்னே டிரான்ஸ்ஃப்ர்லே போயிடுவியா? என்வாழ்க்கையைக் கெடுத்தவளை அவ்வளவு சுலபத்திலே போகவிட்டுருவனா? வேலையில

இருக்கிறோங்கிற தைரியத்திலதானே பேசறே? அந்த வேலைக்கே வெடி வைக்கிறேன்பாரு. எனக்கா சவால்வுடறே? தனியாபோய் வாழ்ந்திடுவியா? டிரான்ஸ்பர் வாங்கிட்டு வெளியூர் போறியா? வெளியூரு என்ன இந்த உலகத்தில எந்த மூலைக்குப்போனாலும் நீ தலையே எடுக்கமுடியாதபடி பண்ணலே, நான் ஆம்பளை இல்லை!"

என்ற முரளியின் கூற்றிலிருந்து தன் மனைவி தவறு ஏதும்செய்யாதபோது அவளின் வாழ்க்கையைக் கசப்பாக்கி, நொறுக்கிச் சிதைத்து அழித்து, வாழவிடாமல் பழித்தீர்க்கும் ஆணின் வெறிச்செயல் வெளிப்படுகின்றது.

### ஆணாதிக்கப் போக்கால் பெண் வீட்டைவிட்டு வெளியேறுதல்

குடும்பத்திலும், சமூகத்திலும் ஆண், பெண்ணை ஆதிக்க உணர்வினால் அடக்கியாளும் குணம் கொண்டவனாக இருக்கிறான். ஒரு குடும்பத்தில் பிறந்த குழந்தைகளிடையே ஆணை உயர்த்தியும் பெண்ணைத் தாழ்த்தியும் நடத்தும் போக்கு நம் சமுதாயத்தில் இன்றும் நிலவிவருகின்றது. பெண் இரண்டாதரக் குடிமக்களாக நடத்தப்படுவது பெண் அடிமைத்தனத்திற்குக் காரணம் என்பதைத் திலகவதி தமதுபடைப்பின் வழி விளக்குகின்றார். "சொப்பனப்பூமியில்" என்ற புதினத்தில் பானுமதி என்ற பாத்திரப்படைப்பின் வழி எடுத்துக்காட்டுகின்றார்.

"அவளை விட இரண்டு வயது சிறியவன், கைநீட்டி அடிக்கிறான். அதைத்தடுக்கவோ, கண்டிக்கவோ எவருக்கும் திராணியில்லை. உழைத்துக் கொட்டுகிற அவள் அடிப்படுகிறாள். ஊதாரியாய், சோம்பேறியாய், குடிகாரனாய், ஊர்சுற்றும் தம்பி ஆதரிக்கப்படுகிறான். இந்த மாதிரியான இடத்தில் இருக்கவே கூடாது. இனி இந்த வீட்டு மனிதர்களுக்கும் அவளுக்கும் எந்தத்தொடர்பும் இருக்கக்கூடாது. எங்கேயாவது போய்விட வேண்டும். எங்கேயாவது.... மனம் மந்திரம் ஜெபித்தது"

என்ற பானுமதியின் மனக்குமுறலிலிருந்து ஆண் முதல் நிலையில் வைத்து எண்ணப்படுவதும் பெண் அடுத்த நிலைக்குத் தள்ளப்படுகின்ற நிலையை ஆசிரியர் இங்குச் சுட்டிக்காட்டுகின்றார்.

### ஆண்கள்நிகழ்த்தும்அராஜகம்

ஆண்கள் நிகழ்த்தும் அராஜகம் என்பது இன்று மட்டுமில்லாமல் அன்று ஆட்சிப்புரிந்த அரசர்களின் காலத்திலும் இருந்ததை,

"கி.பி. 1592 முதல் 1614 வரை ஜெய்ப்பூரை ஆண்ட அரசர் மான்சிங்கின் மனைவியர் எண்ணிக்கை 1500. அவருக்கு 4000 குழந்தைகள் அடேயப்பா.... அரண்மனை, அரண்மனை மாதிரியா இருந்திருக்கும். ஏதோமாட்டுக் கொட்டில்போல, பசுக்களின் பண்ணைபோல, பெண்களின் பண்ணையல்லவா அது. இப்படிப் பெண்களைப் பயன்படுத்திக்கொள்ள இந்த ஆண்களுக்கு மனம் எப்படி வந்தது? தங்கள் மனைவியரை வெறும் தற்காலிகத் துணையாக நினைத்தர்களே ஒழிய நிரந்திர இணையாகவே நினைக்கவில்லை. ஒரு மாட மாளிகையின் மாமன்னர்கட்கு இல்லாமல் போய்விட்டதே"

*என்பதன் மூலம் ஆணாதிக்கப் போக்கிற்கு ஆளாகியப் பெண்களின் அடிமைத்தனத்தையும் புலப்படுத்துகின்றது.*

## குழந்தையை அலட்சியப்படுத்தும் போக்கு

*சமூகத்தில் மக்களிடையே ஆண்குழந்தை என்றால் சொத்து, செல்வம், வரவு என்றும், பெண்குழந்தை என்றால் கடன், செலவு, கஷ்டம் என்ற கருத்து நிலவி வருகின்றது. ஒரு குடும்பத்தில் பெண்குழந்தைப் பிறப்பது வேண்டப்படாததா ஒன்றாகக் கருதப்படுவது. ஆணாதிக்க வெளிப்பாடே. இதனைத் திலகவதி தமது நாவலில் குறிப்பிடுகிறார்.. எவ்வளவுதான் படித்துப் பட்டம் பெற்றவர்களாக இருந்தாலும் உடலின் தன்மையை அறிந்திருந்தாலும் குழந்தை பிறப்பிற்குக் காரணமாக இருக்கும் ஆண்களே பெண்குழந்தை மீதுகாட்டும் வெறுப்புணர்வினை ஆணாதிக்கச் சமுதாயத்தில் நாம் கண்கூடாகக் காணமுடிகின்றது என்பதனை 'தேவை ஒரு தேவதை' புதினத்தில்,*

*"நான் ஆம்பள பொறக்க ஆசைப்பட்டா நீபொண்ணு பொறந்தா தப்பான்னு கேட்கறே? நாளைக்கு அது சீர் வரதட்சணை, லொட்டுலொசுக்கன்னு ஆயிரத்தெட்டு தொல்லைங்க இல்லே எங்கயோ கண்காணாத இடத்திலே இருக்கிற தீவுலே இருந்து வந்து குதிச்சவ மாதிரில்லே சர்வ சாதாரணமா பொம்பள புள்ளையைப் பாரமுன்னு ஏன்னு நெனக்கறீங்கறியே!"4 என்று சிவராமன் கூறுவதிலிருந்து சமுதாயத்தில் பெண்குழந்தை பிறந்துவிட்டாலே அது புகுந்த வீட்டிற்குச் செல்லும்போது தந்தை சொத்தை அள்ளிக்கொண்டு போய்விடும் என்பதால் பெண்பிறப்பே கூடாது என்று எண்ணும் ஆணாதிக்கச் சமுதாயத்தைப் படம்பிடித்துக் காட்டுகின்றார்.*

*மேலும், சிவராமன் தன் மனைவி, பெண்குழந்தை பெற்று விட்டாள் என்ற காரணத்திற்காக அவளிடம் கடுமையாக, வெறுப்பாக நடந்து கொள்கிறான். கல்வியறிவுடைய மருத்துவரிடம் கூட இந்நிலை மாறவில்லை என்பதை,*

*"இவன் மருத்தவம் படித்தவன்தானா? குழந்தை பெண்ணாக இருந்தால் இப்படி சலித்துக் கொள்வதா? அதுவும் குழந்தையைப் பெண்ணாகப் பெற்றதன் பொறுப்பு முழுதும் அவளுடைய குற்றம் என்பது போல அல்லவா பேசுகிறான்? கருக்குழந்தை ஆணா?, பெண்ணா? என்று நிர்ணயிப்பதில் தகப்பனின் பங்கு அல்லவா பெரிது"*

*என்பதிலிந்து ஒருகுழந்தை பெண்ணாகப் பிறப்பதற்கு தாய்தான் காரணம் என்ற தவறான நம்பிக்கையையும், மருத்துவ உண்மைக்குமாறாகப் பெண்குழந்தைப் பிறப்புக்கு தந்தையே மூலக்காரன் என்பதை மறைத்துத் தாய்தான் காரணம் என்ற கருத்தை முன்நிறுத்தி, அவளைத் துன்புறுத்துவது ஆணாதிக்கச் சமுதாயத்தில் இருந்து வருகின்ற துன்பத்தைச் சுட்டிக் குறிப்பிடும்போது,*

*"மூலையில் கட்டப்பட்ட விலங்காய் ஆணாதிக்கக் கயிறுகளின் இறுக்கத்திலிருந்து திமிறி வெளியேற முடியாததடைகள் பெண் ஆணாதிக்க சமூகத்தின் தோள்களில் பிணமாய் ஊர்வலம் போவது என்வாழ்வுதான்"*

என எழுதியுள்ளார். ஆணாதிக்கத்தின் காரணத்தினால் ஒருபெண்தன் வாழ்வுதனை நினைத்து எப்படித் துன்பநிலையில் இருக்கிறாள் என்பதைக் கூறுகின்றார். குடும்பத்தில் ஆணாதிக்கக் கணவனால் பெண் எவ்வாறெல்லாம் தன் உரிமையை இழந்து அடங்கி, ஒடுங்கிப்போய் தன்வாழ்வில் நிலைகுலைந்துப் போய்விடுகிறாள் என்பதைக் கவிதைவரிகளின் மூலம் காட்டியவை ஒப்புநோக்குதற்கு உரியவை.

**வரதட்சணைக்கொடுமை**

பெற்றவர்களின் சம்மதமின்றி திருமணம் செய்துக்கொள்ளும் போது பெண்வரதட்சணைக் கொடுமையால் பாதிக்கப்படுகிறாள். இங்கபாரு சியாமளா! உண்மையிலே பெத்தபொண்ணுக்கு செய்யவேண்டியது. இன்னதுன்னு தெரிஞ்சவங்களா இருந்தா சொத்துல பாதியை உனக்கு பைசல் பண்ணச் சொல்லு, இன்னிக்கே! என்பதிலிருந்து வரதட்சணைக் கேட்டு வாங்கும் முரளியின் அதிகாரப்போக்கும் பெற்றவர்களை அலட்சியப்படுத்தும் தன்மையையும்,

"என்னடி பாக்கறே? பொடவையைக் கண்டதும் சகலத்தையும் மறந்து பல்லிளிக்கிறவன்னு என்னை நெனைச்சியா? இன்னிக்குக் காலையில் உங்கப்பன் என்னை அவ்வளவு பேச்சுப் பேசினானே எதிர்த்து ஒரு வார்த்தைக் கேட்டியாநீ? அங்கேயே உன் மென்னியைத் திருகியிருப்பேன். உங்கப்பன் வச்சிருக்கிற பிச்சைக்காரச் சொத்தை ஆசைப்பட்டுத் திட்டம் போட்டு நான் உன்னைக் கட்டிக்கிட்டேனா? கேடுக்கெட்ட பய! உங்க ஏழு தலைமுறை சொத்துக்கும் மேலே சொத்தை எழுதிவைத்து வேலையும் வாங்கிக்கொடுத்து பொண்ணு தர்றதுக்கு ஆளுங்க தயாரா இருக்கிறப்ப, நான் சத்தியத்துக்குக் கட்டுப்பட்டு, என்னமோ பழகிட்டோம் நல்லதோ, கெட்டதோ ஏத்துக்கறது தான் மொறையின்னு வலிய வந்து உனக்குத் தாலி கட்டினம்பாரு, அதுக்கு எனக்கு இதுவும் வேணும் இன்னமும் வேணும்" என்பதிலிருந்து ஆணின் தன்னலப் போக்கினால் வரதட்சணைச் சமூகப் பழக்கமாக எடுத்துக்கொண்டு ஆதிக்கஉணர்வினால் பெண்ணைக் கொடுமைகளுக்கு உள்ளாக்குவதோடு அவள் வீட்டாரையும் இழிவுபடுத்தி பேசும் ஆணாதிக்கக்குணத்தை ஆசிரியர் எடுத்துக் காட்டுகின்றார்.

**மாதவியின் விழிப்புணர்வுச் சிந்தனை**

காதல் தோல்வியைப் புறம்தள்ளிவிட்டு தற்கொலை முயற்சியில் ஈடுபடுவோரைத் தடுத்து நிறுத்தும் ஸ்தாபனத்தை நடத்தி வந்தாள் மாதவி, அவளைப் பார்ப்பதற்கு சத்தியமூர்த்தியின் தங்கை கஸ்தூரி வந்திருந்தாள். அப்போது மாதவியிடம் எங்க அண்ணன் சத்தியமூர்த்தியை நீங்க மனப்பூர்வமா விரும்பினீங்க. அவன் பணம், அரசியல், ஜாதிஅது, இதுன்னு வேறயாரோ ஒரு பொண்ணைக் கட்டிக்கிட்டான். ஒரு பெண்ணுக்கு அது எவ்வளவு பெரியஷாக்கா இருக்குமுன்னு எனக்குத்தெரியும், நீங்க எப்படிக் கடந்து வந்தீங்கன்னு ஆச்சரியமாஇருக்கு,

"கஷ்டம்தான் கஸ்தூரி கஷ்டமாத்தான் இருந்திச்சி, என்ன பண்றது? நம்பினேன். ஆனால், அவர் மனுஷங்களை நேசிக்கறவர் இல்லை, பணம், பதவி, படாடோபம்

இதுகளைத்தான் அவர் நேசிக்கிறவருன்னு தெரிஞ்சது. அதனால்என்ன? இழந்தது அவர்தானே? காதலும், என் சினேகதமும் மிச்சம். அதைக் கௌரவப்படுத்தற யோக்கிதை அவருக்கு இல்லேன்னா நான் என்ன பண்ணமுடியும் அதுக்கு? அவருக்காக நான் பரிதாபப்படலாம் அவ்வளவுதான். பரீட்சையில் பெயில் ஆவறதில்லையா? அதுக்காகத் தற்கொலை பண்ணிக்கறதா புத்திசாலித்தனம்? ஒழுங்காப் படித்து அடுத்த வருடம் எழுதி பாஸ் பண்றதில்லையா,"

என்ற வரிகள் மூலம் புரட்சிகரமான சிந்தனையுடன் காதலைப் புறக்கணித்தவனைப் புறந்தள்ளிவிட்டு தன் வாழ்க்கையை அர்த்தமுள்ளதாக ஆக்கிக் கொண்டும் வாழும் பெண்ணின் விழிப்புணர்வுத் தன்மையை இக்கதையமைப்பு எடுத்துக்காட்டுகிறது.

**திரையுலகின்போக்கு**

திரையுலகில் கலை என்ற முகாந்திரத்தை அடிப்படையாகக் கொண்டு பெண்களை வீழ்த்த நினைக்கின்ற மனிதர்களும் இருக்கின்றார்கள் என்பதை,

"சுவாதிக்கு உடமெல்லாம் கசந்தது. புரொடியூசராம் புரொடியூசர். புளி வியாபாரம் செய்து கொண்டிருந்தவர் அவர். கண்ணியமாக அதையே தொடர்ந்து செய்து கொண்டிருந்திருக்கலாம். அதில் நாலுகாசு பார்த்தவுடன் காசைக் கொண்டு சுலபமாகப் பெண்களை விலைக்கு வாங்கிடலாம் என்று சினிமாவுக்கு வந்து சினிமாவும் தெரியாமல், நாகரிகமும் தெரியாமல், புரொடியூசர் என்ற பெயரில் பெண்பித்தனாக மட்டுமே அலைகிற அந்த வஜ்ரவேலுவின் முகம் அவள் நினைவில் வந்து சென்றது. என்ன மனிதர்கள் இவர்கள் பெண் மட்டுமே நோக்கமாக இருந்தால், சினிமா என்ற போர்வை எதற்கு? மறைந்து மறைந்து, ஒளிந்து ஒளிந்து இவர்கள் செய்யும் நீசத்தனத்துக்கு கலையை எதற்கு முகாந்திரமாக்க வேண்டும்"

என்ற சுவாதியின் மனக்கூற்று மனிதர்களை மேன்மைப்படுத்தும் இந்த மகத்தான ஞானபூமியில் மாமிசத் துண்டுகளுக்காக அலையும் மனிதர்களின் நாகரிகமற்ற போக்கைக் காட்டுகிறது.

**வீழ்ச்சியுறாமல் எழுச்சியுறும் போக்கு**

சுவாதி பெங்களூர்லே நடந்த பிலிம்பெஸ்டிவர் நிகழ்ச்சியில் ஸ்மிதாபட்டிலைச் சந்தித்தால் அப்போது சுவாதிக்கு பல ஆலோசனைகளை வழங்கினார்கள்.

"சுவாதிக்கு! உன்னை மாதிரி அழகான சின்னப்பொண்ணுக்குச் சினிமா உலக வாழ்க்கைங்கறது முதலைகள் நிறைந்திருக்கும் காட்டாத்தைத் தாண்டிப் போகிற மாதிரி, உனக்கு அவங்கசெய்யுற ஒவ்வொரு உதவிக்குப் பின்னாலேயும் ஒவ்வொரு தவறான தூண்டில் மறைஞ்சிருக்கும் ஏராளமான பேர் காத்திருப்பாங்க. கவனமாய்இரு. காதல்கங்கறது அவங்களைப் பொறுத்தவரை இளமைபொங்கி அழகுபூரிக்கிற உன்னோட உடம்பு மேல் ஏற்படற பசிதான்... அதுசரி.... சுவாதி! நீ இதுக்குள்ளயாருடைய வலையிலும் விழுந்திடலையே.....?

என்ற ஸ்மிதாபட்டீல் வார்த்தைகள் திரையுலகில் அழகும், இளமையும் கொண்ட நடிகைக்கு ஆபத்தை ஏற்படத்தக்காத்திருக்கும் முதலைகளின் போக்கையும் வீழ்ச்சியுறாமல் எழுச்சியுறுவதற்கான வழிமுறைகளையும் இக்கதையின் அமைப்பு எடுத்துக்காட்டுகிறது.

திலகவதி நாவல்களில் பல்வேறு விதமான பெண்களின் வாழ்வியல் சிக்கல், பிரச்சனைகள் கருப்பொருளாகஅமைந்துள்ளன. சமூதாயத்தில் பெரும்பாலும் பெண்கள் ஆண்களின் ஆதிக்கத்திற்கும் அடக்குமுறைக்குக் கொடுமைகளுக்கும் ஆட்பட்டே வாழ்கின்றார்கள். ஆனால் இன்று பெண்கள் நிலையில் மாற்றம் ஏற்பட்டுள்ளது.

அவர்கள் கல்விக்கற்றுத்தானே பொருள்ஈட்டும் நிலையில் இருக்கின்றார்கள். அதனால் ஆணாதிக்கத்திற்கும், அடக்குமுறைக்கும் அடங்கிப்போகாமல் சிக்கல்களை எதிர்கொள்ளும் தெளிவும்பெற்றுள்ளாள். அவர்களால் சமூகம், குடும்பத்தில் உண்டாகும் சிக்கல்களுக்கு, முற்போக்கான தன்மையுடனும் வழிப்புணர்வுச் சிந்தனையுடனும் தீர்வுக்காணமுடியும் என்ற கருத்துக்களை இக்கதையமைப்பின் வழியாகப் புலப்படுத்துன்றது.

# சங்க இலக்கியத்தில் பெண்களின் வாழ்வியல்

எ.ஷஹீலா
முனைவர் பட்ட ஆய்வாளர்,
தெ.தி. இந்துக்கல்லூரி, நாகர்கோவில்.

**முன்னுரை**

மங்கையராய்ப் பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திடல் வேண்டுமம்மா என்று பெண்மையின் பிறப்பை, சிறப்பை வியந்து நின்றான் கவிமணி தேசிய விநாயகம் பிள்ளை. பெண்மை என்பது தலைமுறையை உயிர்ப்பிக்கும் உன்னத உயர்நிலை ஆகும். உயிர் படைப்புகளுக்குள் மதிப்புமிக்கது. ஆன்றோரும் சான்றோரும் பெண்மையின் பெருமையை பேசாதவர்கள் இல்லை. அத்தகைய பேறு நிறைந்த பெண்மக்கள் மேன்மக்களாக வாழ்ந்த காலம் சங்க காலம் ஆகும். இலக்கியங்கள் மட்டுமே அவர்களுக்கு இறந்த பின்னும் வாழும் உயிர் கொடுத்தது. சங்க இலக்கியத்தில் பெண்களின் வாழ்வியல் என்னும் இக்கட்டுரையானது பெண்களின் பெருமையை அடுத்த தலைமுறைக்கு உணர்த்துவதாகவும் அறிய செய்வதாகவும் அமைகிறது.

**சமூகமும் - பெண்ணும்**

பெண்மை என்ற சொல்லானது தற்போது வழக்கில் உள்ள பெண்ணியம் என்ற சொல்லில் இருந்து மாறுபட்டு காணப்படுகிறது. மரபு, பண்பாடு, கலாச்சாரம் போன்றவற்றின் அடிப்படையில் பெண்ணிற்கான இலக்கணம் கூறுவது பெண்மை. ஆனால், பெண்ணியம் என்ற சொல்லானது தன்னை உணர்ந்துக் கொண்டும் தனக்கான சிக்கலையும் உரிமைகளையும் கூறுவதாகும். ஆதிகாலம் முதல் இன்று வரை பெண்மை என்பது இரண்டாம் தர நிலையில் வைத்து பார்க்கப்படுகிறது. சமூகத்தில் உயர்ந்த நிலையை எட்டும் அளவிற்கு தனித்து வளர்ந்திருந்தாலும் இன்றும் ஆண் வர்க்கத்தின் பிடிமானத்திற்குள் இருந்தும் சமூக கட்டுக்கோப்புக்குள் இருந்தும் அவர்களால் மீட்சி பெற முடியவில்லை. வீடு, குடும்பம்,

சமுதாயம், தனி மனித சுதந்திரம் என அனைத்து நிலைப்பாடுகளில் இருந்தும் பெண்மையின் போக்கு இன்னும் மீள முடியாமலும் மீட்டெடுக்க முடியாமலும் உள்ளது வேதனைக்குரிய ஒன்றாகவே அமைகிறது.

## சங்க இலக்கியத்தில் பெண்

சங்க அக பாடல்கள் தற்கூற்றுகளாக அமைந்தவை இல்லை. அவற்றை பாடும் புலவர்கள் தலைவி, தோழி, செவிலி, நற்றாய், தலைவன், பாங்கன், பாணன், கண்டோர் கூற்றுகளாக அமைத்துள்ளனர். சங்க இலக்கியத்தில் பெண்பால் கூற்றுகளாக அமைந்தவற்றில் தலைவி கூற்றுகளாக 565க்கும் மேற்பட்ட பாடல்கள் காணப்படுகின்றன. தலைவி களவு, கற்பு எனும் இரு தளங்களிலும் முதன்மை வாய்ந்தவளாக காணப்படுகிறாள். அகத்தில் தலைவன் மேல் கொண்ட அன்பு, பரத்தையிடம் சென்ற தலைவன் மீது கொண்ட கோபம் போன்றவற்றையும் வெளிப்படுத்தக்கூடியவளாகக் காணப்படுகிறாள். பெண்ணின் வாழ்க்கையானது களவில் தொடங்கி கற்பு வரையில் தன்னுடைய கணவனுக்கு கட்டுப்பட்டு மனைவியாகவும் கணவன் இறந்தால் கைம்பெண்ணாகவும் இறுதியில் உடன்கட்டை ஏறி தன் உயிரை இழக்கும் வரை ஒரு போராட்டமாகவே பெண் வாழ்கிறாள். சங்க இலக்கியத்தில் பெண்கள் வீரமுடையவர்களாகவும் பதிவு செய்யப்பட்டுள்ளனர். பகல் குறி, இரவு குறி, தினைப்புனம் காத்தல், இல்லறத்தை இனிதே நடத்துதல் ஆகியவைகளிலும் அரசனுக்காக தூதுவராக செல்வதிலும் தம்முடைய திறமைகளை வெளிப்படுத்தக் கூடியவர் களாக பெண்கள் விளங்கினார்கள்.

## கற்புடைய பெண்கள்

பெண்களின் கற்பை குறித்து சங்க இலக்கியம் பல பாடல்களில் பதிவு செய்துள்ளது. சங்க இலக்கியங்களில் பெண்களுக்கு மட்டுமே கற்பு வலியுறுத்தப்பட்டது. ஆண்களை திருமணம் செய்து கொண்டு கற்பு நெறியுடன் பெண்கள் வாழ வேண்டும் என்று கருத்தினர். ஆனால் ஆண்களுக்கு என்று தனியான கட்டுப்பாடுகள் இல்லை. அவர்கள் மனம் போல் வாழ்க்கை நடத்தினர். ஆண்கள் பரத்தையுடன் கூடி வாழ்ந்தாலும் அவர்களுடன் வாழ்க்கை நடத்துபவர்களாகவே பெண்கள் விளங்கினார்கள்.

**"வடமீன் போல் தொழுதேத்த வயங்கிய**
**கற்பினாள்"** (*கலித். 2. 21*)

**"வடமீன் புரையும் கற்பின் மடமொழி**
**அரிவை தோள் அளவு அல்லதை"** (*புறம். 122. 8,9*)

என்னும் பாடல் அடிகள் பெண்ணின் கற்பை விளக்குகிறது. இந்த உலகத்தையே பரிசாக கொடுத்தாலும் கற்பில் சிறந்த பண்புடையவர்களாக ஆயர் குல மகளிர் விளங்கினர். அவர்கள் தன்னுடைய கணவன் இழந்தாலும் மறுமணம் செய்து கொள்ளும் பழக்கம் இல்லாதவர்களாக விளங்கினார்கள்.

**"விரிநீர் உடுக்கை உலகம் பெறினும்**
**அருநெறி ஆயர் மகளிர்க்கு**
**இருமணம் கூடுதல் இல்இயல்பு அன்றே"** *(கலித். 114. 19-21)*

*என்ற பாடல் அடிகள் மூலம் ஆயர் குல பெண்கள் தம்முடைய உயிரையும் நாணத்தையும் விட கற்புடையவர்களாக விளங்கினர் என்பதை அறியலாம்.*

## இற்செறிப்பு

*அக வாழ்க்கையில் தலைவன், தலைவியின் காதலை அறிந்து கொண்ட தாய், தலைவியை வீட்டில் அடைத்து காவல் வைப்பது 'இற்செறிப்பு' எனப்படும். தன்னுடைய தன் வீட்டின் வழியே ஏதாவது தேர் வந்தாலோ தாய் சந்தேகப்பட்டு என்னை துன்புறுத்துகிறாள், அதனால் என்னை விரைவில் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்று தலைவி தலைவனிடம் கூறியதை,*

**"........................தனித்து ஓர்**
**தேர்வந்து பெயர்ந்தது என்ப, அதற்கொண்டு**
**ஒரும்தே அலைக்கும் அன்ன பிறரும்**
**பின்னுவிடு கதுப்பின் மின்இழை மகளிர்**
**இளையரும் மடவரும் உளரே**
**அலையாத் தாயரொடு நற்பாலோரே"** *(குறுந். 246. 3-8)*

*என்ற பாடல் அடிகளின் மூலம் அறியலாம். இதில் தலைவியை தாய் வீட்டில் அடைத்து வைத்து காவல் காப்பதற்கு காரணம் சமூகத்தில் தன்னுடைய மகளை தவறாக மற்றவர்கள் பேசினால் தலைவியின் வாழ்க்கை நிலைகுலைந்து விடும் என்று எண்ணும் ஒரு தாயின் இக்கட்டான நிலையை அறிய முடிகின்றது.*

## இல்லறத்தில் பெண்

*தந்தை வழிச் சமூகத்தில் ஆணுக்கு இருந்த சுதந்திரமும் உரிமையும் பெண்ணுக்கு அளிக்கப்படவில்லை. பெண் என்பவள் வீட்டிற்குள் அடைப்பட்டவளாக காணப்பட்டாள். கற்பில் தலைவியை பொறுத்தவரையில் கணவரை தவிர வேறு உலகத்தை அறியாதவள். அத்தகைய பெண்களை சங்க இலக்கியங்கள் 'மனையுறு மகளிர்' என்று அழைத்தது.*

*"வினையே ஆடவற்கு உயிரே வாள்நுதல்*
*மனையுறை மகளிர்க்கு ஆடவர் உயிர்" (குறுந். 135. 1,2)*

*என்று குறுந்தொகை பெண்ணின் அடிப்படை தகுதியாக கற்பை வலியுறுத்துகிறது. தலைவனின் மறைவிற்கு பின்னர் தலைவி உயிரற்றவள் அல்லது உயிர் வாழ தகுதியற்றவள் என்னும் கருத்தை முன்வைத்தது. மனையுறை என்னும் சொற்பதம் வீட்டை தாண்டி சென்று பொருளாதார தற்சார்பு அடைவது இல்லற மகளிர்க்கு அழகல்ல என்னும் கருத்தை சுமந்து நிற்கிறது.*

**மகளிர் திருமணம்**

*மகளிர் வாழ்க்கையானது மூன்று நிலைகளில் அமைகின்றது. திருமணமாவதற்கு முன் தந்தையின் வளர்ப்பில் கட்டுப்படுவதும் திருமணம் முடிந்த பிறகு கணவனுக்காக வாழ்வதும் முதுமையான நிலையில் தன்னுடைய பிள்ளைகளின் பாதுகாப்பில் வாழ்வதும் என மூன்று நிலைகளில் அமைகின்றது. இதில் பெண் என்பவள் தனக்கான வாழ்க்கையை வாழ்வது இல்லை. சங்க காலத்தில் தலைவி தனக்கான ஆடவனை தேர்ந்தெடுக்கும் உரிமை வழங்கப்பட்டிருந்தது. முல்லை நில மகளிர் தம்மால் விரும்பி வளர்க்கப்பட்ட வலிமையான எருதுகளை பிடித்து அடக்கும் அஞ்சாநெஞ்சமும் ஆற்றலும் உடைய காளையரையே மணக்க விரும்பினர். இதனை,*

**"கொல்லேற்றுக் கோடஞ்சு வானை மறுமையும்**
**புல்லாளே ஆய மகளிர்"** *(புறம். 278.3, 5)*

*என்ற பாடலடிகள் மூலம் அறிய முடிகின்றது. இதன்மூலம் சங்க கால மகளிர் வீரம் நிறைந்த ஆடவரையே விரும்பினர் என்பதை அறிய முடிகின்றது.*

**வீரவுணர்வு**

*சங்க காலத்தில் ஆண்களைப் போலவே பெண்களும் வீரமிக்கவர்களாக விளங்கினர். ஒரு தாய், தன் மகன் போர்க்களத்தில் பகைவரின் வலிமைமிக்க யானையைக் கொன்று தானும் விழுப்புண்பட்டு வீரமரணம் அடைந்தான் என்ற செய்தியைக் கேட்டவுடன் அவனை பெற்றெடுத்தபோது ஏற்பட்ட மகிழ்ச்சியைக் காட்டிலும் போரில் வீரமரணம் அடைந்ததை எண்ணி மகிழ்ந்தாள் என்பதை,*

**"மீன் உண் கொக்கின் தூவி அன்ன**
**வால் நரைக் கூந்தல் முதியோள் சிறுவன்**
**களிறு எறிந்து பட்டனன் என்னும் உவகை**
**ஈன்ற ஞான்றினும் பெரிதே கண்ணீர்"** *(புறம். 277. 1-4)*

*என்ற பாடலடிகள் மூலம் அறியலாம். மறக்குல பெண் தன்னுடைய மகன் போர்க்களத்தில் புறமுதுகு காட்டி இறந்ததால் அந்த கோழைக்கு பாலூட்டிய தன்னுடைய மார்பை அறுத்து எறிவேன் என்று கூறிய வீரத்தாயின் சிறப்பை,*

**"படை அழிந்து மாறினன் என்று பலர் கூற**
**மண்டு அமர்க்கு உடைந்தனன் ஆயின் உண்டஎன்**
**முலை அறுத் திடுவென் யான்"** *(புறம். 278. 3-5)*

*என்ற பாடலடிகள் உணர்த்துகின்றன. இதன் மூலம் சங்க காலத்தில் ஆண்களைப் போலவே பெண்களும் வீரமிக்கவர்களாக விளங்கினர் என்பதை அறிய முடிகின்றது.*

**விருந்தோம்பல் பண்பு**

*விருந்தோம்பல் என்பது தன்னுடைய இல்லம் தேடி புதிதாக வரும் விருந்தினர்களை உபசரித்து போற்றும் உயரிய பண்பாகும்.*

**" மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து**

**நோக்க குழையும் விருந்து"** *(குறள். 90)*

என்று விருந்தின் சிறப்பை திருக்குறள் விளக்குகிறது. விருந்தினர்கள் தம்முடைய இல்லத்திற்கு பகல் நேரத்திலும் சரி, இரவு நேரத்திலும் சரி வந்தாலும் காலம், நேரம் பார்க்காமல் விருந்தினர் முகம் மலரும்படி சங்க பெண்கள் விருந்தோம்பல் செய்தனர் என்பதை,

**"அல்லில் ஆயினும் விருந்து வரின் உவக்கும்**

**முல்லை சான்ற கற்பின் மெல்லியல் குறுமகள்"** *(நற். 142. 9-11)*

என்ற வரிகள் மூலம் நள்ளிரவில் விருந்தினர்கள் வந்தாலும் முகமலர்ச்சியுடன் அவர்களை வரவேற்று விருந்தோம்பல் செய்வதையே கடமையாக கருதினர். வரகையும் தினையையும் இரவலர்க்கு கொடுத்ததையும் வித்திற்காக வைத்திருந்த வரகை உடலிற் இட்டு குற்றி சமைத்து விருந்தினரை உபசரித்தாள் என்பதை புறம் பாடல் 333. 1-13 குறிப்பிடுகிறது.

## கைம்மை நோன்பு

கணவன் இறந்ததும் கைம்மை நோன்பு மேற்கொண்டு வாழும் மகளிர் 'ஆளில் பெண்டிர்' என்று அழைக்கப்பட்டனர். இவர்கள் பருத்திக் கொண்டு பஞ்சு நூற்று அதில் வரும் வருவாய் கொண்டு வாழ்ந்ததால் 'பருத்திப் பெண்டிர்' எனவும் அழைக்கப்பட்டனர். கணவனை இழந்த பெண்கள் மகிழ்ச்சியை தோற்றுவிக்கும் சூழலிலே வாழ்வதை கடிந்து அவர்கள் இப்படித்தான் இருக்க வேண்டும் என்பதை பூதப்பாண்டியன் பெருங்கடுக்கோ பாடிய,

"காழ்போல் நல்விளர் நறுநெய் தீண்டாது
அடை இடைக் கிடந்த கைப்பிழி பிண்டம்
வெள் எள் சார்ந்தோடு புளிப் பெய்து அட்ட
வேளை வெந்தை வல்சி ஆக
பரற்பெய் பள்ளிக் பாய் இன்று வதியும்
உயவற் பெண்டிரேம் அல்லேம் மாதோ" (புறம். 246. 5-10)

என்ற பாடலடிகள் குறிப்பிடுகின்றது. வரிபோலும் வரியை உடையது வெள்ளரிக்காய். அக்காயில் விதை போன்று வெண்மையாக இருக்கும் நெய்யை தீண்டாமல் பழைய சோற்றுடன் எள்ளு துவையல் புளிக்கூட்டி சமைத்த வேளைக்கீரை ஆகியவற்றையே உண்டு, பாய் இன்றி பருக்கை கற்கள் மேல் படுத்தும் துன்பமான வாழ்க்கையை வாழ்பவள் கைம்பெண்கள் என்றும், இதனால் ஏற்படுகின்ற துன்பத்தினால் வாழ்வதைவிட தன்னை மாய்த்துக் கொள்வதே மேல் என்று எண்ணி வாழ்ந்த நிகழ்வை அறிய முடிகிறது. மேலும், ஒரு பெண்ணின் பயம் கலந்த மனநிலையை

**"பெருந்தோட் கணவன் மாய்ந்தென அரும்புஅற**
**வள்ளிதழ் அவிழ்ந்த தாமரை**
**நாள்இரும் பொய்கையும் தீயும்ஒ ரற்றே"** *(புறம். 246. 13-15)*

என்ற பாடலடிகள் தீயை மலர்ந்த இதழ்களை உடைய குளிர்ச்சி பொருந்திய தாமரையாக நினைத்து உடன்கட்டை ஏறினால் என்றால் கைம்மை நோன்பு கொடுமையின் உச்சம் இங்கு மிகைப்படக் காட்டப்பட்டுள்ளது.

## முடிவுரை

மக்களின் வாழ்வியலை வெளிப்படுத்தும் கருவிகளில் இலக்கியங்கள் பெரும் பங்கு வகிக்கின்றன. அவ்வகையில் இன்றைய நிலையில் ஆண்களுக்கு இணையாக இல்லறம் முதற்கொண்டு போர்க்களம் வரையில் எல்லா துறைகளிலும் முன்னேறி இருப்பதை போன்று சங்ககாலத்தில் பெண்கள் தனக்கென தனிஇடம் பிடித்தவர்களாக விளங்கினார்கள். அவற்றை இலக்கியங்கள் மிக அழகாக பதிவு செய்துள்ளன. சங்க காலம் பெண்களுக்கு பொற்காலம் என்பதை அறிய முடிகின்றது.

# மலேசியத் தமிழ்ச் சிறுகதைகள் தொகுப்பு நூலில் பெண் கதாபாத்திரப் பதிவுகள்

எம். சேகர், தமிழாசிரியர், சிங்கப்பூர்.
முனைவர் பட்ட ஆய்வாளர், இந்தியமொழிகள் மற்றும் ஒப்பிலக்கியப்பள்ளி
தமிழ்ப் பல்கலைக்கழகம் - தஞ்சாவூர்.

முனைவர் ச. கவிதா
நெறியாளர்
பேராசிரியர், இந்திய மொழிகள் மற்றும் ஒப்பிலக்கியப் பள்ளி,
தமிழ்ப் பல்கலைக்கழகம் - தஞ்சாவூர்.

## அறிமுகம்

2018ல் ஸ்ரீ நேரு வித்யாலயா கலை மற்றும் அறிவியல் கல்லூரி மாணவர்களுக்கு 'மலேசியத் தமிழ்ச் சிறுகதைகள்' எனும் தொகுப்பு நூல் அவர்களின் பாடத்திட்டத்தில் அறிமுகப் படுத்தப்பட்டது. இது தமிழ்நாட்டில் அயல்நாட்டுப் படைப்பிலக்கியத்திற்குக் கொடுக்கப்பட்ட ஓர் ஆங்கீகாரமாகும். குறிப்பாக மலேசியத் தமிழ் இலக்கியச் சூழலுக்கு மகுடம் சூட்டி மகிழ்ந்ததொரு தருணமாக இது அமைந்திருக்கிறது. மலேசிய இலக்கியத்தை அயல்நாடுகளில் தொடர்ந்து அறிமுகம் செய்துவரும் மலேசியத் தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் பல்லாண்டு கால தொடர் முயற்சியின் பயனாக இது சாத்தியமாகியிருக்கிறது.

## பெண்ணியக் கதாபாத்திரங்கள்

நடைமுறை வாழ்க்கைச்சிக்கல்களை வெளிப்படுத்துவதில் இன்றைய படைப்பாக்கங்கள் பெரும் பங்கு வகிக்கின்றன. கவிதை, சிறுகதை, புதினம், நாடகம் போன்ற இலக்கிய வடிவங்களின்மூலம் தாம் சார்ந்த சமூகத்திற்கும் நாட்டிற்கும் நடைமுறை வாழ்வியலில் உள்ள சிக்கல்களையும் அதற்கான மாற்றுச் சிந்தனைகளையும் தம் படைப்புகளினூடே படைத்து வருபவர்கள் இன்றைய படைப்பாசிரியர்கள்.

'ஓர் எழுத்தாளன் என்ற முறையில், படைப்பாளி என்ற முறையில் முழுக்கவும் நான் சமூகம் சம்பந்தப்பட்டவன். சமூகம் சம்பந்தம் என்பதின், அந்த உறவின் மேன்மையை உணர்பவனே சிறந்த தனிமனிதன். ஒரு சமூக வளர்ச்சியின் முன்னோடியைத்தான் நான்

தனிமனிதன் என்று கருதுகிறேன்,' என்று எழுத்தாளர் ஜெயகாந்தன் குறிப்பிட்டுள்ளதை இங்கு நாம் கவனத்தில் கொள்ள வேண்டியுள்ளது. அவ்வகையில், பெண்களின் வளர்ச்சி படிப்படியாக முன்னேறி உச்சத்தில் இருக்கும் இக்கால கட்டத்தில் பெண்களின் பல்வேறு பண்புக் கூறுகளைத் திறனாய்வது அவசியமாகிறது. அந்த வகையில், மலேசிய எழுத்தாளர்களில் பெரும்பான்மையினர் தம் நாட்டு அடித்தள மக்களின் வாழ்க்கைச் சூழல்களைத் தத்தம் படைப்புகளின்வழி சித்தரித்துப் பெண்களின் ஆளுமைப் பண்புகளைக் கதாபாத்திரத்தில் அமைத்துக் கதை பின்னியிருப்பது இச்சிறுகதைத் தொகுப்பிற்குத் தனிச்சிறப்பினைக் கொடுத்துள்ளது.

பெண்கள் இச்சமூகத்தில் தங்களின் நிலை என்ன என்பதையும் குடும்ப அமைப்பில் தங்களுடைய நிலை என்ன என்பதையும் தாங்கள் தற்போது எத்தகைய நடத்தையைக் கொண்டிருக்கிறோம் என்பதையும் தங்களுடைய பண்புகள் என்ன என்பதையும் பெண்கள் அறிந்து வைத்திருத்தல் அவசியமாகின்றது.

தனக்குள் 'தன்னைத் தேடுதல்' என்பதன்மூலம் பெண்கள் தங்களின் பலத்தையும் பலவீனத்தையும் அறிந்துகொள்ளவும் இதன்வழி தங்களை ஒரு மீள்பார்வைக்கு உட்படுத்திக் கொண்டு, தங்களை மேம்படுத்திக்கொள்வதற்கு வாய்ப்பும் ஏற்படுகிறது. இதுபோன்ற வாய்ப்புகளைப் படைப்பிலக்கியத்தில் வரும் கதாபாத்திரங்களின் வழியாக பெண்கள் பெற்றுக்கொள்வதும் உண்டு. அத்தகையப் பெண் கதாபாத்திரங்களை மலேசியத் தமிழ்ச் சிறுகதைகள் என்ற நூலின்வழி நின்று அறிமுகம் செய்வதே இந்த ஆய்வுக் கட்டுரையின் நோக்கமாகும்.

## மலேசியத் தமிழ்ச் சிறுகதைகளில் பெண் கதாபாத்திரங்கள்

இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ள பத்துச் சிறுகதைகளிலும் பெண் கதாபாத்திரப் பதிவுகள் இடம்பெற்றுள்ளன என்பதைக் காணும்போது பெண்களின் ஆளுமை இச்சமூகத்தில் எந்தளவுக்கு அவசியமாகிறது என்பதை அவதானிக்க இயல்கிறது.

## தங்கக் கூண்டில் தாமரை மலர்

இத்தொகுப்பின் முதல்கதையில் கதைசொல்லியாகப் பெண் கதாபாத்திரம் முதன்மைப்படுத்தப்பட்டுள்ளதைக் காணலாம். ஒரு தாயின் பார்வையில் தாய்மையின் உணர்வுகளைத் துல்லியமாக எடுத்தியம்புவதற்கு மிகச்சரியான ஒரு தேர்வை இக்கதையின் படைப்பாளர் திருமதி. பாவை முன்னெடுத்திருக்கிறார். மகன் வீட்டிற்கு வரும் ஒரு தாயின் பார்வையில் கதைச் சொல்லப்படுவதும் காட்சிகள் நகர்த்தப்படுவதும் வளர்ப்புப் பிராணிகளே ஆனாலும் அவைகளுக்குள்ளும் இருக்கும் ஒரு வித மெல்லிய உறவுகளை மிக யதார்த்தமாகப் பதிவு செய்வதற்கு அந்த அம்மா கதாபாத்திரத்தை மிகவும் இயல்பாகப் பயன்படுத்தியுள்ளார் கதாசிரியர். கதையின் இறுதியில், 'குட்டியின் முகத்தில் ஏக்கம் படிந்திருப்பதாக எனக்குப் பட்டது' என வரும் வரிகள், பிறந்து ஐந்து மாதத்திற்குள் இரண்டு எஜமானர்களின் கையிலிருந்து இப்போது மூன்றாவது கைக்கு மாறியிருக்கும் 'லக்கி' என்ற அந்த நாய்க்குட்டியின் உணர்வலைகளின் ஏக்கம் ஒரு தாய்மையால் மட்டுமே உணரமுடியும் என்பதைக் காட்டுகிறது.

**சாயா நாமா செல்வி (என் பெயர் செல்வி)**

மலேசிய மண்ணின் அடித்தட்டு வர்க்கப் பெண்களின் பிரதிநிதியாக இக்கதையில் வரும் செல்வியின் தாயாக வரும் ஒரு பெண் கதாமாந்தர் படைப்பு அமைக்கப்பட்டு, அதற்கேற்ற கதைப் பின்னலுடன் அவர்களுக்கு ஏற்படும் அன்றாட வாழ்வியல் சிக்கல்களும், அந்தச் சிக்கலில் சிக்கித் தவிக்கும் அடுத்த தலைமுறைப் பெண்ணான செல்வியின் எண்ண ஓட்டத்தில் கதை நகர்த்தப்பட்டிருக்கிறது. அம்மா என்ற பெண் பாத்திரத்தின் மூலம் ஒரு தலைமுறையின் வாழ்வும் செல்வி என்ற பெண் பாத்திரத்தின்மூலம் அடுத்த தலைமுறையின் வாழ்வையும் மலேசிய வாழ்த் தமிழர்களின் எதிர்கால வாழ்வியல் சூழலைக் கேள்விக்கு உட்படுத்தி மிகவும் இயல்பாகப் பதிவு செய்துள்ளார் இக்கதையின் படைப்பாளர் திரு. ஜி.எஸ்.தேவகுமார்.

**புகை**

கணவனின் புகைப்பிடிக்கும் பழக்கத்தால், அதனை அளவுக்கு அதிகமாகச் சுவாசித்துப் பாதிக்கப்படும் சங்கீதா என்ற ஒரு பெண்ணின் நிலையையும் அவளுக்குப் பிறக்கும் குழந்தையின் சுவாசக் குழாயில் கரும்புகை படிந்து, மூச்சித்திணறலால் 'ஐ.சியு' வில் இருக்கும் ஒரு சூழலையும் இக்கதை படம்பிடித்துக் காட்டுகிறது. ஆண்களின் 'ஹிரோயிஸம்' பெண்களின் முகத்துக்கு நேரே புகைவிட்டு மகிழும் தருணங்கள் அடுத்தவர்களுக்குக் குறிப்பாக மனைவிகளுக்கு எற்படும் தாக்கத்தையும் அதன் வாயிலாகச் சிசுக்களுக்கு ஏற்படும் பாதிப்பையும் இக்கதையின்மூலம் எடுத்துச் சொல்லியிருக்கிறார் திருமதி. ஆதிலெட்சுமி.

**வானத்தில் ஏறப் படிகளா இல்லை.....?**

ஒரு சராசரி தாயின் எதிர்பார்ப்புகள் மிகவும் இயல்பாக இக்கதையில் பதிவு செய்யப்பட்டுள்ளது. ஏழ்மைச் சூழலில் இருந்து தங்களைத் தங்கள் பிள்ளைகள் மீட்டெடுப்பார்கள் எனும் ஒரு சமூகத்தின் எதிர்பார்ப்பையே இக்கதையின் மையமாகக் கொண்டு புனைந்துள்ளார் திரு. மு.வரதராசு. 'பரீட்சை என்னாயா ஆச்சு?' என்ற அந்தத் தாயின் கேள்வியின்மூலம், மலேசிய நாட்டில் தமிழினம் தலையெடுப்பதற்குக் கல்வியைத் தவிர, வேறெதுவும் துணைவரப் போவதில்லை என்பதைக் குறியீடாக உணர்த்திச் செல்கிறது.

**தரிசனம்**

அப்பாவின் மரணத்திற்குப் பிறகு, அம்மாவின் வாழ்க்கையைப் பின்னி கதையாடல் தொடர்கிறது. பெரும்பாலோர் இயல்பாகக் கடந்துபோகும் ஒரு மரணம், ஒரு சிலரின் வாழ்வில் மட்டும் மாறாத மாற்றத்துடன் நிலைத்துவிடுவதை இக்கதையின்வழி புனைந்திருக்கிறார் திரு. கோ.புண்ணியவான். அப்பா இறந்த பிறகும் கூட அவருக்காகக் 'கேட்' கதவைத் திறந்து வைத்துக் காத்திருக்கும் அம்மா. கணவன் தன்னுடனே இன்றும் இருப்பதாக வாழும் அம்மா. மரணத்திற்குப் பிறகும் கணவனின் இருப்பில் வாழும் ஒரு பெண்ணின் உணர்வுகளை, உணர்வு சார்ந்த நிலையிலேயே அறிந்துகொள்ள முடியும் என்ற ஒரு நிலைப்பாட்டில் இக்கதை தன் நிறைவை எய்துகிறது.

## கெத்துவா கம்போங் முனுசாமி (கிராமத்துத் தலைவர் முனுசாமி)

ஒரு மரணம் நிகழ்ந்துவிடுகிறது. அதனையொட்டிய காட்சிப் படிமங்கள் கதையை நகர்த்திச் செல்கின்றன. இறந்த மனிதரால், வாழ்க்கையில் முன்னுக்கு வந்த இரண்டு பெண் கதாபாத்திங்கள் நன்றியை மறக்காமல் அவரின் இறுதிச்சடங்கில் கலந்துகொண்டு, தங்களால் இயன்றதைச் செய்வதாகக் கதை பதிவு செய்கிறது. ஒற்றைத் தாயார்களான 'மாச்சிக் சுலேஹா', கீதா இருவரும் மற்றவர்களைப்போல கிராமத்துத் தலைவரான முனுசாமியின் உதவியால், வாழ்க்கையில் தங்களுக்கான ஒரு நிலையான இடத்தை நிரப்பிக்கொண்டவர்கள். பள்ளரின மக்களின் வாழ்வியல் சூழலையும் இக்கதை ஓர் இறப்பின்மூலம் நடவு செய்கிறது.மேலும், கணவன்களால் பெண்கள் கைவிடப்படுவதற்கும் நிர்க்கதியாய் நிற்பதற்கும் மற்றொரு பெண்ணே முழுகாரணமாய் அமைந்துவிடுவதையும் கதையினூடே மிக இயல்பாப் பதிவு செய்துள்ளார் திரு. எம்.கருணாகரன்.

### மறுபக்கம்

இங்கும் ஓர் இறப்பு. சமூகத்தில் மதிப்பும் செல்வாக்கும் மிக்க ஒருவரின் மரணம். மருத்துவமனையில் இறந்து விடுகிறார். அவருக்கு முதல் மனைவி. இரண்டாவது மனைவி. மூன்றாவதாக ஓர் அம்மாள். மூவரும் அவரால் பயனடைந்தவர்கள். ஆனால், அவரின் பிரதேத்தைப் பெற்றுக்கொள்ள எந்தக் குடும்பமும் முன் வராததால், வெண்மை உடை போற்றப்பட்ட உயிரற்ற உடல் 'மார்ச்சுவரி' க்குப் பயணப்பட்டுக் கொண்டிருக்கிறது என கதை முடிகிறது. மூன்று பெண் கதாபாத்திரங்களின் சுயநலப் போக்கை இக்கதையின்மூலம் எடுத்துக்காட்டி, சமூகத்தில் இருக்கும் அவலங்களை வெளி உலகக்கு வெளிச்சம் போட்டுக் காட்டியுள்ளார் திரு.நிலாவண்ணன்.

### புதிய டீச்சர்

ஆசிரியராகப் பணியில் சேர்ந்து துணைத்தலைமையாசிரியராகப் பதவி உயர்வு பெற்று பின்னர், தலைமையாசிரியராகப் பொறுப்பேற்று,, இனி குடும்பமே தனக்கு எல்லாம் என நினைத்து, இனி ஆசிரியர்த் தொழிலுக்கு வரக்கூடாது என்ற வைராக்கியத்துடன் பணி ஓய்வு பெற்று பின், குடும்பத்தில் தனது இருப்பை உணர்ந்துகொண்டு மீண்டும் ஆசிரியர் தொழிலுக்கு வரும் ஒரு பெண்ணின் கதை. வெளி உலகில் யார் யாராலோ எப்படி எப்படியெல்லாமோ புகழ்ந்து பாராட்டப்படும் ஓர் ஆசிரியை, குடும்ப நிலையில் வெறும் ஒரு சராசரி அம்மாவாக, மாமியாராக, பேரப்பிள்ளைகளின் பாட்டியாக, வயதானவராகப் பார்க்கப்படும் ஓர் அவலம் இக்கதையில் முன்னெடுக்கப்பட்டுள்ளது. அவரின் ஆற்றலும் திறமையும் குடும்பத்தினரால் புரிந்து கொள்ள முடியாமல் போகிறது.

'உலகம் நம்மைப் புரிஞ்சிக்கிற அளவுக்கு உறவுகள் நம்மைப் புரிஞ்சுக்கிறது இல்ல' என்ற ஓர் ஆசிரியையின் ஏக்கங்களை இக்கதையின்மூலம் மிக யதார்த்தாகப் புனைந்து காட்டியி ருக்கிறார் திரு. மு.மணிவண்ணன்.

**நந்தியாவட்டைப் பூக்கள்**

பதினைந்து ஆண்டுகளுக்கு முன் பார்த்த தன் முன்னாள் ஆசிரியை நதியா டீச்சரை இந்நாள் ஆசிரியையாக ஒரு பள்ளிக்குச் செல்லும்போது மீண்டும் சந்திக்கும் வாய்ப்பைப் பெறுகிறாள் காவியா. இந்த இரு பெண் கதாபாத்திரங்களையும் காவியாவின்மூலம் பின்னோக்கிப் பார்க்கும் உத்தியால் நமக்கு அறிமுகப்படுத்துகிறார் திருமதி. உதயகுமாரி கிருஷ்ணன். நதியாவக்குப் பிடித்த நந்தியாவட்டைப் பூக்களுடன் நெருங்கி பயணிக்கும் கதையின் போக்கு, இறுதியில் நாம் எதிர்பார்ப்பதுபோல் அனைத்தும் இங்கு நடந்துவிடுவதில்லை என்பதை மிக யதார்த்தமாகப் பதிவு செய்து செல்கிறது.

இதுநாள்வரையில் காவியாவின் கற்பனையில் சற்றே பூசின உடம்போடு அதே நீண்ட முடியோடு உலா வந்த நதியா டீச்சர் இன்று, தலைமுடி எல்லாம் இழந்து, சர்க்கரை வியாதியின் உச்சத்தில் இருக்கும் தன் இரண்டு வயது பிள்ளையை வீட்டுக்கும் மருத்துவமனைக்குமாக ஓடிக்கொண்டிருக்கும் ஒரு சூழலில் பின்னிப் பிணைத்திருப்பதைக் காண முடிகிறது. இது நதியா டிச்சருக்கு மட்டுமல்ல. பெரும்பாலான டீச்சர்களுக்கும் வெவ்வேறு வாழ்க்கைச் சூழலில் பொருந்தும் ஒன்றாகத்தான் பார்க்க முடிகிறது.

**பிடிசாதம்**

ஈப்போவில் சைவ உணவிற்குப் பிரசித்திப் பெற்ற ஐயர் கடை ஒன்றையும் அதனை நடத்தும் மணி ஐயரையும் சமையலைக் கவனிக்கும் அண்ணன் இராம ஐயரையும் அறிமுகப்படுத்துகிறது கதை. ஊருக்கெல்லாம் உணவு சமைக்கும் இராம ஐயர், தான் சாப்பிடுவதற்காக வீட்டிற்குச் சென்று விடுவதை வழக்கமாகக் கொண்டிருக்கிறார்.

'ஊருக்கெல்லாம் நான் உபசாரம் பண்றேன். நேக்கு உபசாரம் பண்ண ஓர் ஆள் வேண்டாமா? .........கடையில எல்லாத்தையும் அருஞ்சுவையாக சமைத்தாலும் நேக்கு அவ கையால பரிமாறிச் சாப்பிட்டாதான் மனசுக்குத் திருப்தியா இருக்கும்....தினசரி நெருப்புலே கெடந்து சாகிற நேக்கு... ஆத்துக்குப் போயி அவளோட ஒரு கைப்பிடிசாதம் சாப்பிட்டாதான் மனசுக்குச் சாந்தி ஏற்படும்'. கதைக்குள் அவர் மனைவியின் கதாபாத்திரப் படைப்புக்கென தனி பாத்திரமாக எதையும்உருவாக்காமல் இராம ஐயரின் கூற்றின்மூலம் மனைவி என்ற பெண் கதாபாத்திரத்தின் அறிமுகத்தை மிக இயல்பான குணநலன்களுடன் புனைந்துள்ளார் திரு.சித.நாராயணன்.

**முடிவுரை**

பெண்ணியக் கருத்துகளும் அதன் தொடர்பான வெளிப்பாடுகளும் ஒவ்வொரு நாட்டின் வாழ்வியல் சூழல், பண்பாட்டிற்கேற்பப் புத்தம் புது விளக்கங்களைப் பெற்று அறிமுகமாவதைக் காணமுடிகிறது. மேலை நாட்டில் உருவான பெண்ணியச் சிந்தனைகள், அதனையொட்டி இந்தியா, தமிழ்நாட்டில் உருவான பெண்ணியச் சிந்தனைகள் மலேசிய நாட்டிலும் பிரதிபலிப்பதை மேலே குறிப்பிடப்பட்டுள்ள மலேசியத் தமிழ்ச் சிறுகதைகளின் வாயிலாக அதன் பிம்பங்களை நம்மால் உணர்ந்துகொள்ள முடிகிறது.

# பாலின சிறார் விளையாட்டும் சிற்றுணவும்

மரு. பெ. பாரதஜோதி,
பேராசிரியர் மற்றும் துறைத் தலைவர்,
சித்த மருத்துவத்துறை

மரு. க. அன்பரசு
முனைவர் பட்ட ஆய்வாளர்,
சித்த மருத்துவத்துறை, தமிழ்ப்பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

## முன்னுரை

சிறார்கள் தங்கள் விளையாட்டின் பொழுது சிறு உணவுகளைச் செய்து மகிழ்வர். அதில் சேரும் பொருட்கள் அன்றாடம் எளிதில் பெறத்தக்கதாகவும், விலை கொடுத்து வாங்கவேண்டியது இல்லாததாகவும் இருக்கும். சிறிய அளவில் கிடைத்தாலும் போதுமானதாக இருக்கும். அதிலும் குறிப்பாக சிறுபெண்களுக்குள் விட்டுக் கொடுத்தல், பகிர்ந்து உண்ணும் தன்மை, பொறுமை, உணவுப் பொருட்கள் குறித்த அறிவு ஆகியன பெருகும். அப்படிப்பட்ட சில சிற்றுணவுகளின் தன்மை குறித்தும் மருத்துவ குணம் குறித்தும் இக்கட்டுரை விளக்குகின்றது.

## வெடி தேங்காய்

இது பொதுவாக சிறுவர்கள் விளையாடும் விளையாட்டு எனினும் சில சமயம் சிறுமிகளும் இதனைச் செய்து விளையாடுவர். நன்கு முற்றிய தேங்காயின் நார்களை எல்லாம் நீக்கிவிட்டு நன்கு தேய்த்து அதன் கண்களில் ஒன்றைத் திறந்து உள்ளிருக்கும் தண்ணீரை வெளியேற்றிவிட வேண்டும். பிறகு அதில் இடித்த பொட்டுக்கடலை, வறுத்த எள், பச்சைப்பயறு, அவல் அல்லது அரிசி, வெல்லம் அல்லது கருப்பட்டி ஆகியவற்றை

நன்கு கலந்து உள்ளே வைத்து பிறகு தேங்காயின் கண்களை சிறு குச்சி அல்லது மூங்கில் சீவல் கொண்டு அடைத்து விடுவர். பிறகு இதனைத் தனியாகவோ அல்லது களிமண் பூசியோ நெருப்பில் இட்டுச் சுடுவர். பெண் பிள்ளைகள் வீட்டில் உள்ள விறகு அடுப்பில் சமையல் முடித்த பின்பு உள்ள நெருப்பில் போட்டுச் சுடுவர். நன்கு வெந்தபின் சிறிது சப்தத்துடன் வெடிக்கும். பிறகு அதனை பிளந்து தேங்காய் கீற்றுகளோடு உள்ளே இருக்கும் வெந்த பொருட்களையும் சேர்த்து உண்பர். மிகுந்த சுவையோடு இருக்கும். இதில் சேரும் எள், பாசிப்பயறு, அரிசி, வெல்லம் அனைத்தும் உடலுக்கு சக்தியைத் தருவதாக இருக்கும். சேலம் மாவட்டத்தில் ஆடி முதல் நாள் "ஆடி நோன்பிடுதல்" என்ற சடங்கில் வெடி தேங்காய் சுடுவர். எள் கண்ணுக்கு ஒளியையும், உடலுக்கு வலிமையையும் தரும். குருதிப் பெருக்கை உண்டாக்கும்.

**எள் மருந்தைக் கெடுக்கும் எறனலாந் திண்மைதரும்**
**உள்ளிலையைச் சேர்க்கும் உதிரத்தை தள்ளுரு**
**கண்ணுக் கொளிகொடுக்குங் காசமுண்டாம் பித்தமுமாம்**
**பண்ணுக் கிடர்புரியும் பார்** - பதார்த்த குண சிந்தாமணி

**பாசிப்பயறு உடலுக்கு குளிர்ச்சி தரும் பித்தத்தை தணிக்கும்.**

பச்சைப்பயறுதான் பாரிற் பயித்தியத்தை
அச்சம்அற நாளும் அகற்றுங்காண் கச்சுலவு
கொங்கை மடமாதே குளிர்சியென்பார் எப்போதுந்
தங்குவா தத்தைத் தரும். - பதார்த்த குண சிந்தாமணி

புழுங்கல் அரிசி குழந்தைகளுக்கு நன்மை தரும். எனினும் அவல், அரிசியைவிட எட்டு மடங்கு பலம் தரும்.

**புழுங்கல் அரிசியது புத்திரர்க்கும் ஆகும்** - பதார்த்த குண சிந்தாமணி

**சோறுக்கெண் கூறுக்கந் தூமா வவலிவைக் கெண்**
- பதார்த்த குண சிந்தாமணி

வெல்லம் கருப்பட்டி (பனைவெல்லம்) இவ்விரண்டிலும் பனைவெல்லமே சிறந்ததாகும். அதனைக் கீழ்க்கண்ட பாடல் வரிகள் மூலம் அறியலாம்.

**. . . . . . . . . . . . . . . . . . . . . தங்குபனை**
**வெல்லத்தால் வாதபித்தம் வீறுகபஞ் சந்நிநோய்**
**வல்லருசி குன்மமறு மால** - பதார்த்த குண சிந்தாமணி

**கூட்டாஞ்சோறு**

இது பெரும்பாலும் சிறு பெண் பிள்ளைகள் சேர்ந்து விளையாடும் விளையாட்டுக்களில் ஒன்று. சிறு பெண் பிள்ளைகள் கூட்டாகச் சேர்ந்து செய்வதால் இது கூட்டாஞ்சோறு எனப் பெயர் பெற்றது. பங்கு பெறும் அனைவரும் அவரவர் வீட்டிலிந்து சிறிய அளவில் அரிசி, பருப்பு, சிறுதானியங்கள், காய்கறிகள், மசாலா பொருட்கள் ஆகியவற்றைச் சேகரித்து வருவர்.

அனைத்துப் பொருட்களையும் ஒன்றாகக் கலந்து சமையல் செய்து ஒரு கலவை சாதமாக செய்து உண்பர். இதில் சுவை முன் பின்னாக இருக்கும். இங்கு சுவை முக்கியமல்ல. கூட்டு முயற்சியே பெரிதும் உற்று நோக்கத்தக்கது. சேரும் பொருட்களில் காய்கறிகள், அரிசி, பருப்பு, சிறுதானியங்கள் ஆகியன சேர்வதால் இஃது ஒரு ஊட்டச்சத்து கொண்ட கலவையாக பரிமளிக்கிறது. இது வளர் இளம் பெண் பிள்ளைகளுக்கு உகந்ததாகும்.

**தானாப்புளி**

சிறுபிள்ளைகள் கூடி விளையாடும் பொழுது ஒருவரோ அல்லது சிலரோ சேர்ந்து தானாப்புளி இடிப்போமா என்று முதலில் அச்சாரம் போடுவர். பிறகு சாத்தியக்கூறுகள் குறித்து ஆலோசித்து இறுதியில் முடிவெடுப்பர். அடுத்து தானாப்புளி இடிக்கத் தேவையான பொருட்களை சேகரிக்கத் தொடங்குவர். புளியங்காய், எலுமிச்சை இலை, மிளகாய் வற்றல், உப்புக்கல், கருப்பட்டி ஆகியன மூலப் பொருட்கள் ஆகும். புளியங்காய் கிடைக்கவில்லை என்றால் புளியங்கொழுந்து சேர்ப்பர். சிறுபிள்ளைகள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு பொருளை சேகரித்து வருவர். பெரும்பாலும் வீட்டிலுள்ள பெரியவர்களுக்கு தெரியாமல்தான் எடுத்து வருவர். பின்பு கொண்டு வந்த பொருட்கள் அனைத்தையும் ஒன்றாகச் சேர்த்து இடித்து உருண்டையாக்குவர். இடிக்கும்பொழுது நன்றாக உருண்டு வரவேண்டும் என்பதற்காக சிறிது நல்லெண்ணையையும் விடுவர். சிறுசிறு உருண்டைகளாக உருட்டி அதன் நடுவில் ஒரு குச்சியை செருகிவிடுவர். இதனை சுவைத்துச் சாப்பிடுவர். (சிவசுப்பிரமணியன், 2014). அறுசுவைகளில் இனிப்பு, புளிப்பு, உவர்ப்பு, கார்ப்பு, துவர்ப்பு என ஐந்து சுவைகளும் உள்ளடக்கிய ஒரு அற்புதமான கலவை. சித்த மருத்துவத் தத்துவத்தின்படி அறுசுவைகளும் ஒரு உணவில் சேர்வது உடலில் பலவித நன்மைகளைத் தரும்.

**பானக்காரம்**

பானக்காரம் என்பதனைக் பிரித்தால் பானம் மற்றும் அக்காரம் என பிரியும். பானம் என்றால் பருகும் உணவு வகை. அக்காரம் என்றால் இனிப்புச் சுவையுடையது. எனவே இது இனிப்புச் சுவையுடைய ஒரு பானம் என பொருள்படும். கருப்பட்டி, புளி ஆகியவற்றைச் சேர்த்து நீரில் கரைத்து வடிகட்டி சிறிது உப்புமிட்டு பருகுவர். சில சமயம் சுவைக்காகவும், நறுமணத்துக் காகவும், இஞ்சித்துண்டுகளையும், ஏலக்காயையும் சேர்ப்பர். இதனைச் சிறுபிள்ளைகள் கோடைக்காலத்தில் செய்து பருகி மகிழ்வர். கோடைக்காலத்தில் விளையாடிக் களைத்துப் போகும் பொழுது இதனைச் செய்வர். விளையாட்டின் பொழுது இழக்கும் சக்தியை மீட்கவும், நீர்க்கடுப்பு போன்ற உபாதைகள் உண்டாகாமல் இருக்க இது உதவும். திருவிழாக்களில் பாதயாத்திரை செய்வோருக்கு அக்காலத்தில் வழிநெடுக தண்ணீர் பந்தல் அமைத்து இப் பானக்காரத்தை வழங்கி வந்தார்கள். பொருளாதாரப் பிரச்சனை காரணமாக இக்காலத்தில் நீர் மோர் அதன் இடத்தைப் பிடித்துக்கொண்டது.

**தீதில் பழம்புளியைச் சேர்க்கத் திரிதோடம்**
**வாதமொடு சூலைகபம் மாறும் காண் - ஓதுசுரஞ்**
**சர்த்தியென்ற தோடமிவை சாந்தமாங் கண்ணோய்போம்**
**பித்தமென்ற பேரொழியும் பேசு.**

*முக்குற்றம் சூலை வாந்தி கண்நோய்கள் நீக்கும். பழம்புளி பித்தத்தை நீக்கும். (முருகேச முதலியார், 2008)*

## நண்டுத் துவையல்

**நண்டே நண்டே சிறு**
**செங்கால் நண்டே**
**உசிருக்க ஓடிருக்க**
**உன்னைப் பிளந்து**
**ஒரு குத்துப் புளியங்கா**
**தொவையல் வச்சி**
**கான்னாங் கலத்தையும்**
**கழுவி வச்சி**
**வருவான் வருவான்னு**
**வழி பார்த்தேன்**

*மார்கழி மாதத்தில் சிறார்கள் சிறுவீடு கட்டி விளையாடுவர். அப்பொழுது கற்கள் கொண்டு அடுப்பு மூட்டி சிறுபொங்கல் செய்து மகிழ்வர். சில சமயம் கிழங்குகள், கம்பங்கதிர் போன்றவற்றைச் சுட்டும் தின்பர். அப்படி விளையாடுவதில் ஒரு சிறுமி ஒரு சிறுவனைத் தன் கணவனாக வரித்துப் பாடும் பாடலாக இப்பாடல் அமைகிறது. கோபித்துக் கொண்டு வெளியே சென்ற கணவனுக்காக சமைத்து வைத்துக் காத்திருப்பதாகக் கூறுகிறது. இங்கு நண்டை முழுமையமாக சமைத்து உண்ண வசதி இல்லாததால் சுட்டுத் தின்றிருக்கலாம். (வானமாமலை, 2017)*

*நண்டுகளில் வயல் நண்டு, கடல் நண்டு என இருவகைகள் உண்டு. சித்த மருத்துவம் நண்டு வகைகளில் வயல் நண்டையே சிறப்பாகக் கூறுகிறது. வயல் நண்டு அதிக அளவில் மருந்தாகப் பயன்படுத்தப்படுகிறது. மருத்துவ குணம் மிக்கது. பாடலில் நண்டே நண்டே சிறுசெங்கால் நண்டே என்ற வரிகள் மூலம் இஃது வயல் நண்டே என கருதமுடியும். சிறுவயல் நண்டால் வாதக்குடைச்சல், தூங்கவிடாதபடி செய்யும் அதிக கபம், கரப்பான், உடலைவிட்டு நீங்காதபடி இருக்கும் குடலிரைச்சல் முதலியன தீரும். பித்தம் அதிகரிக்கும். இதனைக் கீழ்க்கண்ட பாடல் வரிகள் உணர்த்தும்.*

**வயலிறு நண்டறுந்த வாதக் குடைச்ச**
**லயலி ருக்கா தணங்கே - துயிலவொட்டா**
**வன்சயித்தி யங்கரப்பான் மண்குடலி ரைச்சலும்போ**
**முன்பயித்தி யங் கதிக்கு முன்**

*சிறுகுழந்தைகளுக்கு ஏற்படும் சளியினால் இரவில் தூக்கம் கெடும். அதனைப் போக்க கிராமங்களில் கிடைக்கும் வயல் நண்டினை இடித்து சாறெடுத்து இரசம் வைத்துக் கொடுப்பது வழக்கம். சளி இளகி எளிதில் வெளியேறும். சிறுகுழந்தைகள் விளையாட்டின் பொழுது தானாக நண்டினைச் சுட்டோ, பொசுக்கியோ உண்பதினால் அவர்களுக்கு மார்புச் சளி ஏற்படாது. பசியுண்டாகும் (தியாகராஜன், 1992).*

## முடிவுரை

சிறார்கள் விளையாடும் விளையாட்டுக்களில் விளையாட்டோடு உணவு குறித்த அறிவும் அதனோடு சேர்ந்தே வளர்கிறது. விளையாட்டில் செய்யும் சிற்றுணவுகள் உடல் உபாதைகளுக்கு தீர்வளிப்பதோடு, ஊட்டச்சத்து நிறைந்ததாகவும் அமைகின்றன. நவீன பொருளாதார மயமாக்கலுக்கு பின்பு ஊடக வெளிச்சத்தின் மூலம் நம் நாட்டு தட்ப வெப்ப நிலைக்கு ஒவ்வாத, உடலுக்கு கேடு விளைவிக்கின்ற பல சிற்றுணவகப் பண்டங்கள் சந்தைப்படுத்தப்படுகின்றன. அவற்றைத் தவிர்த்து நம் பாரம்பரிய உணவுப் பண்டங்களை நம் குழந்தைகளுக்கு வழங்குவதே நலம் பயப்பதாகும்.

# தொல்காப்பியத்தில் பெண்சார் சிந்தனைகள் (கற்பியல்)

முனைவர் க.உமாராணி
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
சீதாலட்சுமி இராமசுவாமி கல்லூரி திருச்சிராப்பள்ளி.

தமிழ் இலக்கணத்தில் உள்ள பொருள், திணை, துறை முதலிய பாகுபாடுகள் தமிழுக்கே உரியன என்றும், இவைப் போன்றவை வேறு எந்த மொழியிலும் இல்லை என்றும் தமிழ் அறிஞர் கூறியிருக்கின்றனர். நல்ல ஆக்கமுறையில் தமிழுடன் சிறந்த தொடர்பு கொண்டு, அதன் பிற்கால இலக்கியத்தை எத்தனையோ துறைகளில் வளம்பெறச் செய்த வடமொழியிலும் இந்தமுறைகள் இல்லை என்பது இரண்டு மொழிகளையும் கற்றுணர்ந்த புலவோரின் கருத்தாகும். வடமொழியில் பொருளை அறம், பொருள், இன்பம், வீடு, (தர்மம், அர்த்தம், காமம், மோஷம்) என்ற முறையில் வகுத்திருக்கின்றனர். தொல்காப்பிய காலத்திலும், அதற்குச் சற்று முன்பும் அறம், பொருள், இன்பம், வீடு என்ற இலக்கியப் பொருள் பாகுபாடு தமிழ் உலகில் நிலவி வந்தது என்பதை இப்பொருள்கள் பற்றி எழுந்த நூல்களின் மூலமாக உணரலாம். தமிழின் பொருள் இலக்கணம் தனிச்சிறப்பு வாய்ந்தது. தொல்காப்பியப் பொருளதிகாரத்தில் கற்பியலில் கூற்று மரபில் இடம்பெற்றுள்ள பெண்சார் சிந்தனைகளை இக்கட்டுரை கூறுகின்றது.

## தொல்காப்பியம் (கி.மு.3 முதல் கி.பி.2ஆம் நூ. வரை)

தொல்காப்பியம் என்ற இலக்கண நூல் பலவகையில் தனிச்சிறப்புக்கு உரிய ஒரு பெருநூலாக விளங்குகிறது. இந்திய வரலாற்றில் வடமொழி மரபுக்கு வேறுபட்டதாக மரபு உண்டு என்பதை உணர்ந்து கொள்ளத்தக்க வகையில் நமக்கு இன்று கிடைக்கின்ற சான்றுகளில் சான்றாக விளங்குவது தொல்காப்பியம்.

தொல்காப்பியம் என்ற இலக்கணம் எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருளதிகாரம்

என்ற மூன்று பெரும் பிரிவுகளைக் கொண்டு விளங்குகிறது. பொருளதிகாரத்தில் ஒன்பது இயல்கள் அமைந்திருக்கின்றன. தொல்காப்பியத்தில் முதல் ஐந்து இயல்கள் பொருள் இலக்கணத்தை விளக்குகின்றன. மெய்ப்பாட்டியல், உவமையியல், செய்யுளியல் ஆகிய மூன்று இயல்கள் பொருள் இலக்கணத்தை அடிப்படையாகக் கொண்டு இலக்கணம் கூறுகின்றன. முன் ஐந்து இயல்களில் புறத்திணையியல் தவிர மற்ற நான்கு இயல்களிலும் அகப்பொருளே விளக்கப்படுகிறது.

மெய்ப்பாட்டியல், உவமையியல் ஆகியவற்றில் அக, புற பொருள்களுக்குப் பொதுவான இலக்கணம் கூறப்பட்டிருப்பினும் இவற்றில் சிறப்பாக அகப்பொருள் இலக்கணமே இடம் பெற்றுள்ளது. செய்யுளியலில் பொருள் இலக்கணம் தொடர்பாக உள்ள திணை, கைகோள், கூற்று, கேட்போர், களன், காலம், மெய்ப்பாடு, முன்னம், எச்சம், பயன், பொருள், துறை ஆகிய பன்னிரண்டும் சிறப்பாக அகப்பொருளையே விளக்குகின்றன. இதிலிருந்து அகப்பொருளுக்குத் தொல்காப்பியர் கொடுத்த சிறப்பிடம் அறியப்படுகிறது.

## பொருள் இலக்கணத்தின் சிறப்பு

தமிழ் மொழியின் இலக்கண அமைப்பானது ஐந்திலக்கண மரபைக் கொண்டது என்றாலும் தொல்காப்பியர் காலத்தில் எழுத்து, சொல், பொருள் என்ற மூன்றே முதன்மையாகக் கருதப்பட்டன. அவற்றுள்ளும் பொருளிலக்கணமே முக்கியமானதாகக் கருதப்பட்டது.

> "எழுத்தும் சொல்லும் யாப்பும் ஆராய்வது
> பொருளதிகாரத்தின் பொருட்டன்றே, பொரு
> ளதிகாரம் பெறமேயெனின் இவை பெற்றும்
> பெற்றிலேம்" (இறையனார் களவியல். 10)

என்ற மேற்கோள் பொருள் இலக்கணத்தின் முக்கியத்துவத்தை நன்கு உணர்த்தும்.

தொல்காப்பியத்தில் தொடங்கிய பொருள் இலக்கணங்களின் தோற்றம் நம்பியகப்பொருள், புறப்பொருள் வெண்பாமாலை என்று அடுத்தடுத்து அகப்புறப் பொருள்களைச் சிறப்பாகப் படைத்துக்காட்டியது. வேறு எந்த மொழியிலும் இல்லாத அளவிற்குத் தமிழ் இலக்கணத்தின் பொருள் இலக்கணம் தனித்தன்மையோடு விளங்கியது. வடமொழியின் அகப்பாட்டுகள் கூட தமிழ் இலக்கணத்தைப் பின்பற்றியதே இதற்குச் சான்றாகும்.

## பொருள் இலக்கணத்தின் தொன்மை

பண்டைத் தமிழ்ப்புலவரின் அடிப்படையான இலக்கியத் தத்துவத்தை அக்காலத்துத் தமிழ் இலக்கணங்களிலிருந்தே தெரிந்துகொள்ள முடியும். தமிழ்ச்சான்றோர் இலக்கியப் பொருளை எல்லாம் அகப்பொருள், புறப்பொருள் என ஒவ்வொன்றிற்கும் ஏழு திணைகளைக் குறிப்பிட்டனர். ஒவ்வொரு திணைக்கும் பல துறைகளை உரியதாக்கிப் பண்டைக்காலத் தமிழ் இலக்கணம் இலக்கியம் படைக்கும் கலையைப் பல நுண்ணிய விதிகளுடன்

வரையறுத்திருந்தனர். இம்முறையே பண்டைத் தமிழ்ப் புலவரின் அடிப்படையான இலக்கியத் தத்துவத்தின் சிறப்பியல்பாகும்.

அகப்பொருச் செய்திகள் முழுதையும் நூற்றுக்கணக்கான சூத்திரங்களில் திட்பமான வாக்கில் ஆழ்ந்த சிந்தனைப் பண்புடனும் விரிந்த பாகுபாட்டு முறைகளுடனும் வகுத்திருக்கிறார் தொல்காப்பியர். ஆனால் இவைகளை முதலாவதாகத் தொல்காப்பியர் ஆக்கவில்லை. தொல்காப்பியருக்கு முன்னாலிருந்த இலக்கணங்களின் பொருளைத் திரட்டியும், இலக்கியத்தின் தன்மையை ஆராய்ந்துமே அவர்தம் சூத்திரங்களைப் பெரும்பாலும் தொகுத்து அமைத்திருக்கிறார். என்ப|, என்மனார் புலவர்| போன்ற சொற்களுடன் முடிவதைக் கொண்டே இதனை அறியலாம். தொல்காப்பியத்தின் சிறப்புப் பாயிரத்தில் பனம்பாரனார் முந்து நூல் கண்டு முறைப்பட எண்ணி| என்று சொல்லியிருப்பதும் இதையே வலியுறுத்துகிறது. தொல்காப்பிய உரையாசிரியர்களும், பன்னிருபடலம், புறப்பொருள் வெண்பாமாலைப் பாயிரங்களும் தொல்காப்பியத்திற்கு முதல் நூல் அகத்தியம் என்று கூறியிருப்பதும் இங்கு நோக்கத்தக்கதாகும். தொல்காப்பியர் காலத்திற்கு முன்பே பொருள் இலக்கணம் தமிழில் இருந்து வந்தது என்பது வெளிப்படையாகும்.

### தலைவிக்குரிய கூற்றுகளும், மரபும், கிளவியும்

தலைமகளுக்குக் கற்பின்கண் நிகழும் கூற்றுகளில் முதல் 5 கூற்றுகள் கூடலில் நிகழ்பனவாகும். அவனறிவாற்ற அறியும் ஆகலின் ஏற்றற்கண்ணும் எனத் தொடங்கி இன்பமும், இடும்பையும் ஆகிய இடத்தும் என்பது வரையுள்ள ஐந்தும் கூடல்பொழுதில் நிகழும் கூற்றுகளாகும்.

கயற்தலை தோன்றிய காமர் நெய்யணி நயந்த கிழவனை நெஞ்சு புண்ணுநீஇ நளியின் நீங்கிய இளிவரு நிலையும் என்பது தொடங்கி வாயிலின் வரூஉம் வகை என்பது வரைக்கும் உள்ள 14 கூற்றுகளும் ஊடலில் நிகழ்பவைகளாகும். தலைவன் வினைமேல் பிரியும் காலத்தில் தலைவியிடம் தோன்றும் கிளவிகளை,

**'' புணர்ந்துடன் போகிய கிழவோள் மனையிருந்து**
**இடைச்சுரத் திறைச்சியும் வினையும் சுட்டி**
**அன்புறு தக்க கிளத்தல் தானே**
**கிழவோன் செய்வினைக்கு அச்சமாகும்''** (தொல்.கற்பு. 146)

என்று தொல்காப்பியம் கூறுகிறது. களவுகாலத்தில் இடைச்சுர வழியில் செல்லும்போது இன்புற்றதனை எண்ணி தலைவி கற்புகாலத்தில் தன் மனையிலிருக்க, தலைவன் காட்டில் காணும் கருப்பொருள்கள் தமக்குள் மகிழ்ந்திருத்தலைக் காணும்போது வினைமேற்கொள்ளச் சென்ற தலைவன் வினைமுடிக்காது திரும்பிடுவானோ எனத் தலைவி அஞ்சுவாள். இதுவே தலைவிக்குரிய கிளவியாகும் இதனை விளக்கும் ஒரு குறுந்தொகைப்பாடல்,

**''பெருந்தண் மாரிப் பேதைப் பித்திகத்து**
**அரும்பே முன்னும் மிகச் சிவந்தனவே**
**யானே மருவென்? தோழி! பானாள்**
**இன்னும் தமியர் கேட்பின், பெயர்த்தும்**

**என் ஆகுவர்கொல், பிரிந்திசினோரே?**
**அருவி மா மழைத் தத்தக்**
**கருவி மா மழைச் சிலை தரும் குரலே.** (குறுந்.94)

அதாவது குறுந்தொகையில் கதக்கண்ணனார் பாடிய முல்லைத்திணையில் அமைந்த பாடலில் "பருவம் கண்டு ஆற்றாள்" எனக் கவன்ற(கவலைப் பட்ட) தோழிக்கு, "ஆற்றுவல்" என்பதுபடத் தலைமகள் சொல்லியது. இப்பாடலில் தலைவன், தலைவியைவிட்டுப் பொருள் தேடுவதற்காகப் பிரிந்து சென்றிருக்கிறான். அவன் மழைக்காலத்திற்கு முன்னரே திரும்பி வருவதாகக் கூறிச் சென்றான். இப்பொழுது மழைக்காலம் வந்துவிட்டது. ஆனால், தலைவன் இன்னும் வரவில்லை. ஆகவே, தலைவி வருத்தமாக இருப்பாள் என்று எண்ணி, தோழி தலைவியைக் காண வருகிறாள். தலைவி பிச்சிப்பூக்களை உற்று நோக்கியவாறு இருக்கிறாள்.

"பிச்சிப் பூக்களையே பார்த்துக்கொண்டு மிகுந்த சிந்தனையோடு இருக்கிறாயே! தலைவனை நினைத்து வருத்தமாக இருக்கிறாயா?" என்று தோழி தலைவியைக் கேட்கிறாள். "இன்னும் மழைக்காலம் வரவில்லை. தலைவன் வரும்வரை நான் பிரிவைப் பொறுத்துக் கொள்வேன். ஆனால், மழைக்காலத்திற்கு முன்னதாகவே இந்தப் பிச்சிப்பூக்கள் பூக்கத் தொடங்கிவிட்டன. அவை அறிவில்லாதவை. மேகம் முழங்குகின்றது; மழை பெய்கிறது; இதைக் கண்டு, தான் சென்ற காரியத்தை முடிக்காமலே தலைவர் திரும்பிவிடுவரோ என்று அஞ்சினேன்." என்று தலைவி தோழியிடம் கூறுகிறாள். மேலும்

**''வினையே ஆடவர்க்குயிரே வானுதல்**
**மனையுறை மகளிர்க்கு ஆடவர் உயிரென......''** -(குறுந்.135)

என்ற குறுந்தொகைப்பாடலும் இக்கருத்தையே வலியுறுத்துகின்றது. தலைவன் மேற்கொண்ட வினையானது எவ்வித இடையூறுமின்றி வெற்றியுடன் முடிய வேண்டுமென்ற பொறுப்புமிக்கவளாகத் தொல்காப்பியர் சுட்டும் தலைவி காணப்படுகிறாள்.

## தலைவியின் மரபு

தலைவியின் மரபு வழிபட்ட பண்புநலன்களாகத் தொல்காப்பியர்,

**''அவன்குறிப் பறிதல் வேண்டியுங்கிழவி**
**அகமலி யூடல் அகற்சிலக் கண்ணும்**
**வேற்றுமைக் கிளவி தோற்றவும் பெறுமே''** (தொல்.கற்பு.157)

என்கின்றார்.. அதாவது தலைவனின் குறிப்பினை அறியவேண்டுமிடத்தும், தனது உள்ளம் நிறைந்த ஊடலை நீக்கும் இடத்தும் தலைவனுக்கு வேறானவள் போலத் தலைவி நடந்துகொள்வாள். இதுவே தலைவிக்குரிய மரபும், சிறப்பியல்பும் ஆகும். மேலும் பாசறைக்குத் தலைவனோடு செல்லுதலும், தலைவன் முன் தன்னைப் புகழ்தலும் தலைவிக்குரிய மரபில்லை என்று கூறப்பட்டாலும் கல்வியிற் சிறந்து விளங்கிய ஔவையார் போன்ற பெண்பாற்புலவர்கள் அரசர்களைப் புகழ்ந்து போர்க்களத்திலும், அரசவையிலும் பாடல் பாடியிருக்கின்றனர் என்பதை மறுக்க இயலாது.

## தலைவிக்குரிய கிளவி

*தலைவன் மனமுடைந்து அழுது வருந்துவதைக் கண்டு ஆற்றாத தலைவிக்குரிய கிளவியை,*

**'' தாய்போற் கழறித் தழீஇக் கோடல்**
**ஆய்மனைக் கிழத்திக்கும் உரித்தென மொழிப**
**கவவொடு மயங்கிய காலை யான''** *(தொல்.கற்பு.171)*

*என்று தொல்காப்பியம் குறிப்பிடுகின்றது. தாய்க்குப் பின் தாரம் என்பார்கள். தாயன்பிற்கு ஈடு இணையில்லை. இருப்பினும் தலைவனிடத்து தாய் போல அன்பு செலுத்தக்கூடியவளாகத் தலைவி திகழ்கிறாள் என்பதைத் தொல்காப்பியம் பதிவு செய்கிறது. வள்ளுவரும் இல்லறவியலில்*

**''தற்காத்து தற்கொண்டான் பேணி தகைசான்ற**
**சொற்காத்து சோர்விலாள் பெண்''** *(குறள்.56)*

*கற்பு நெறியில் தன்னையும் காத்துக்கொண்டு, தன் கணவனையும் காப்பாற்றி, தகுதியமைந்த புகழையும் காத்து உறுதி தளராமல் வாழ்கின்றவளே பெண் என்று மு.வ. தரும் உரை குறிப்பிடத்தக்கது.*

## தோழிக்குரிய கூற்றும், இயல்பும்

*பெறற்கரும் சிறப்பு முதலாக, மரபுடை எதிரும் உளப்பட உள்ள 19 வகையான கூற்றுகளும் கற்புகாலத்தில் நிகழும் தோழிக்குரிய கூற்றுகளாகும். மேலும் தோழிக்குரிய இயல்புகளை,*

**'' பரத்தை மறுத்தல் வேண்டியுங்கிளவி**
**மடத்தகு கிழமை உடைமையானும்**
**அன்பிலை கொடியை என்றாலும் உரியன்''** *(தொல்.கற்பு.156)*

*என்று தலைவனின் பரத்தையிற் பிரிவின்போது வரம்பு மீறி வசைபாடுதலும் தோழிக்குரிய இயல்பாகும் என்று தொல்காப்பியம் கூறுகின்றது. தலைமக்கள் புலத்தலின்போதும், ஊடலின்போதும் தோழிக்குரிய கிளவிகள் உண்டு. ஐங்குறுநூற்றில், தோழி கூற்றுப்பத்தில் அமைந்த பாடலில்*

**''வயலைச் செங்கொடிப் பிணைய றைஇச்**
**செவ்விரல் சிவந்த சேயரி மழைக்கண்**
**செவ்வாய்க் குறுமகள் இனைய**
**எவ்வாய் முன்னின்று - மகிழ்ந! நின் தேரே?**

*(ஐங்.தோழிக்கூற்றுப்பத்து- 2)*

*இப்பாடலில் தலைவனிடம் தோழி பின்வருமாறு கேட்கின்றாள். மகிழ்நனே! (உடல் மகிழ்ச்சியில் திளைப்பவன்) இங்கே இவள் தழையாடைக்காக வயலைக் கொடியைப் பின்னி, இவளது விரல்களும் சிவந்துவிட்டன. அத்துடன் இவளது சிவந்த வரியோடும் கண்களும், சிவந்த வாயும் உன் ஏக்கத்தால் வருந்துகின்றன. இப்படி இவளை விட்டுவிட்டு உன் தேரை யார் வீட்டுக்கு முன் நிறுத்தியிருந்தாய்? எனப் பரத்தையர் வீட்டுக்குச் சென்று திரும்பும் தலைவனை நோக்கி தோழி வினவுகிறாள்.*

இவ்வாறாகத் தலைவியும், தோழியும் பேசக்கூடிய கூற்றுகள் அமைந்துள்ளன. தலைவனின் வினையின் மீது தலைவி கொண்ட அக்கறையும், தனது தோழியான தலைவி மீது தோழி கொண்டுள்ள பரிவும், பாசமும் தொல்காப்பிய கற்பியலில் இடம்பெற்றுள்ள கூற்றுகளும், சங்க இலக்கியச் சான்றுகளும் நிறுவுகின்றன. சமூகப்பொறுப்பும், குடும்பப்பாசமும் கொண்ட பெண்களாகப் பழந்தமிழகத்தில் பெண்கள் திகழ்ந்திருந்தனர் என்பதற்கு அகச்சான்றுகளாக இக்கூற்றுகள் அமைந்திருக்கின்றன. பழந்தமிழ்ச்சமூகத்தில் பெண்களுக்குச் சிறப்பான இடம் வழங்கப்பட்டிருந்தமையை இலக்கணக் கூற்றுகளும், இலக்கியச் சான்றுகளும் பறைசாற்றுகின்றன.

# திருநங்கையரின் உறவுமுறைகள்

க.அமரேஸ்
முனைவர்பட்ட ஆய்வாளர்,
தமிழ்த்துறை, ஆய்வு மையம், அரசுகல்லூரி சித்தூர்,
பாலக்காடு, கேரளம். 678104.

காலங்கள் பல கடந்து சென்றாலும் இயற்கையினால் பல மாற்றங்கள் ஏற்பட்டாலும் எப்பொழுதும் மனிதஇனத்தில் மாறாமல் இருப்பது உறவுகள்தான். பலதலைமுறைகள் கடந்து வந்தாலும் எப்பொழுதும் முறிந்துவிடாமல் இருப்பதும் உறவுகள்தான். தாத்தா, பாட்டி, அப்பா, அம்மா, அண்ணன், தம்பி, அக்கா, தங்கை, ஆகிய உறவுகள் இருந்தும் தனித்து வாழ்பவர்கள் திருநங்கைகள். ஆனால் இந்த மனித இனத்தில் எந்த ஒரு தவறும் செய்யாமல் தன்னுடைய பிறப்பையே தவறு என்று சொல்லி வாழ்ந்து கொண்டிருப்பவர்கள் திருநங்கைகள் ஆவார்கள். சமூகத்தில் இல்லாமல் விலங்குகள், பறவைகள் அவற்றின் உடலில் ஏதேனும் மாற்றத்தினைக் கொண்டு பிறந்தால் மக்கள், தெய்வமாக வணங்குவர். ஆனால் மனிதர்கள் தன்னுடைய உடலில் ஏற்பட்ட மாற்றத்தினைக் கொண்டுவாழும் திருநங்கைகளை இம்மனிதஇனம் மாற்றி நிறுத்துகிறது. ஆகவே அவர்கள் தமக்கென ஓர் உறவுகளையும் குடும்பத்தையும் அமைத்துக் கொண்டு வாழ்கிறார்கள். அவர்கள் உறவு முறைகளைக் குறித்து இக்கட்டுரைவாயிலாகக் காணலாம்.

**உடலில் மாற்றங்கள் (திருநங்கையாக மாறுவது)**

குழந்தைகள்பிறக்கும்பொழுது முதலில் முழு ஆணாகவும், பெண்ணாகவும்தான் பிறக்கின்றனர்.ஆனால்காலப்போக்கில் உடலில் ஏற்படும் மாற்றத்தினால் பால்மாற்றம் அடைகின்றனர். அறிவியல்முறைப்படியும் இம்மாற்றம் ஏற்படுவதை அறிஞர்கள் கூறுகின்றனர். இதுகுறித்து இலக்கியப்பதிவுகள் இதற்கு சான்று கூறுகின்றன. மனிதர்கள் செய்யும் சில தவ றுகளினால்இதுபோன்றமாற்றங்கள்ஏற்படுகின்றன. "எனக்கு மொட்டையடிக்கணும்''ன்னு வீட்டுல பேசிக்கிட்டாங்க .அப்புறம் "பொட்டைபுள்ளபொறந்து அஞ்சி வயசு ஆனதுக்குப்

பிறகுதான் இவனுக்கு மொட்டையடிக்கணும்" ன்னு முடிவு பண்ணிட்டாங்க. எனக்கு ஜடைபோட்டுப் பூ வஞ்சிக்கிட்டுப் போக வெக்கமா இருந்துச்சு. போகப்போக எனக்குப் பழகிப்போச்சி நாளடைவில் என் மனசுக்குள்ள ஆசைங்கஉண்டாக ஆரம்பிச்சது.' மூணு பொட்டு வச்சிக்கணும், வளையல் போட்டுக்கணும்'ன்னு அந்த பொண்ணு மாதிரி பாவாடை தாவணி போட்டுக்கணும்'ன்னு தோணும். ஒரு சில ஆம்பளையப் பாத்தா, 'ஐயோ! இவ்வளவு அழக இருக்கானே' ன்னு ஆசை வரும். 'அவனைக் கல்யாணம் பண்ணிக்கிட்டா எவ்வளவு நல்லா இருக்கும்' ன்னு நெனப்பேன். இதுபோன்று உளவியல் அடிப்படையில் பல மாற்றங்கள் ஏற்படுகின்றன.

குழந்தை பிறந்தவுடன் எந்த மாற்றமும் ஏற்படுவதில்லை. ஆண்குழந்தை ஆணாகவும் பெண்குழந்தை பெண்ணாகவும் இருக்கின்றன. வளரும் பருவத்தில்தான் அவர்கள் உடலிலும் உள்ளத்திலும்பல மாற்றங்கள் ஏற்படுகின்றன. இந்த மாற்றத்தினால் அவர்களுடைய வாழ்க்கையே கேள்விக்குறியாக மாறுகின்றன. இம்மாற்றத்தினைக் குறித்து "உளவியல் முறையில் இச்சிக்கல் என் கல்வியைப் பாதிக்க தொடங்கிய பெண்மை கலந்த என் பேச்சு ,நடத்தை, பெண்களோடு சேர்ந்து வளைய வருவது, மற்ற சிறுவர்கள் மத்தியிலும், சில பெரியவர்கள் மத்தியிலும் என்னை மட்டம் தட்டுவதற்கான ஆயுதமாகப் பயன்படுத்தப்பட்டது. இது வெளியுலகத்தின் மீது என் ஜாக்கிரதைஉணர்வை அதிகப்படுத்தி,என்னை மேலும் தனிமைப்படுத்தியது. என் உலகத்தை நானாக உருவாக்கிக் கொண்டேன்". என ஆசிரியர் குறிப்பிடுகிறார் .

பால் மாற்றத்தை விரும்புவோருக்கு அளிக்கப்படும் உளவியல் சிகிச்சை முறையினையும் குறித்து " ஆண் உடலில் இருக்கும்ஒருவர்மாற விரும்பினால் உளவியல் நிபுணரிடம் குறைந்தது இரண்டுவருடங்களாவது சிகிச்சைபெற்றிருக்கவேண்டும் . குறைந்தது ஒரு வருடம் பெண்ணுடை அணிந்து வாழ வேண்டும் ." ஆசிரியர் குறிப்பிடுகிறார்.

## குடும்பத்தைவிட்டு பிரிதல்

திருநங்கை அல்லது திருநம்பியாக மாறியதால் தன்னுடைய வீட்டை விட்டும் தன் குடும்பத்தை விட்டும்தான் பிறந்து வளர்ந்த ஊரைவிட்டும் போகக்கூடிய சூழ்நிலை ஏற்படுகின்றது. தன்னுடைய உடலில் ஏற்பட்ட மாற்றங்களினால் இத்தனை பிரிவினைச் சந்திக்க நேரிடுகிறது. அதுமட்டுமின்றி பல்வேறு கேலிக் கிண்டல், அவமானம், பல புனைவு பெயர்கள்பொது இடத்தில்போக முடியாத சூழ்நிலை, கல்வி கற்க முடியாத அவலநிலை ஏற்படுகின்றன. தன்உடலில் உள்ள மாற்றத்தினை தன் குடும்பமே ஏற்காதபொழுது சமூகம்ஏற்பது கட்டாயம் இல்லை. இத்தகைய அனுபவத்தைத் திருநங்கை ரேவதி கூறுகையில் "அண்ணன்வாசல் கதவைத்தாழ்ப்பாள் போட்டுவிட்டுகிரிக்கெட்பேட் எடுத்துவந்து என்னைத் திட்டியபடி அடித்தான், 'ஒம்போதுங்ககூடச் சேருவியா,பொடவகட்டுவியா,டான்ஸ் ஆடுவியா,பொட்டத் தாயோலி உனக்கு எவ்வளவு தைரியம் டா, இப்படிச் சொல்லிக்காக ஒடி ஒடிப் போற.உன்னஅடிச்சே சாவடிக்கிறேன்' என்றுகூறி கண்மண் தெரியாம பலமா அடித்தான் ". எனக் குறிப்பிடுகிறார்.

திருநங்கைகள் தங்கள் வீட்டைவிட்டுச் செல்லப் பல காரணங்கள் சொல்லப்படுகின்றன அவை வீட்டாரும் நாட்டாரும் ஏற்படுத்தும் துன்பங்களை எல்லாம் மறப்பதற்கும். தன் உணர்வுக்கும் தன் உடல் மாற்றத்திற்கும் உன்மையான அங்கிகாரம் கிடைப்பதற்கும் தன் குடும்பத்தில் இருந்து விலகி. தன் உடலில் ஏற்பட்ட இம்மாற்றத்திற்கு எங்குத் தகுந்த அங்கிகாரமும் அமைதியும் கிடைக்கின்றதோ அங்குச் செல்கின்றரர். அங்கு தனக்கு ஏற்றார் போல் நல்ல ஒரு குடும்பத்தையும் தேர்வு செய்கின்றரர்.

## திருநங்கையரின் குடும்பத்தில் சேருதல்

திருநங்கையரின் குடும்பம் என்பது ஒரு தனித்தன்னமயுடையது அவர்கள், மதம், இனம், மொழி, தெய்வம், பழக்கவழக்கங்கள் அனைத்தும் வெவ்வேறாக இருந்தாலும் திருநங்கைகள் எனும் சமூகத்திற்குள் வந்தால் அனைவரும் ஒன்றுதான் பல மொழி ஒரே இடமாக வாழக்கூடியவர்கள் இவர்கள் பணக்காரராகவும், ஏழையாகவும் இருந்தாலும், இவர்கள் திருநங்கை குடும்பத்தில் சேர்ந்தால் ஏற்படும் இவர்களின் மனநிலைக் குறித்து ஆசிரியர் கானமஞ்சரி கூறுகையில் "ஆசையை அறவே அறுக்க வேண்டும் "என்பது புத்தபிரான் வாக்கு அதற்கேற்றாற் போல் தங்கள் தாய், தந்தை, உடன்பிறந்தோர் அனைவரையும் அறவே மறந்து தங்கள் மனதின் ஏக்கங்களை உள்ளுக்குள் புதைத்துக் கொண்டு வாழ்பவர்கள்தான் இந்த அரவாணிகள்" என்று குறிப்பிடுகிறார். ஒரு திருநங்கைதனக்கெனஒரு மகளைத் தேர்வு செய்து தானாகத் தன் சமுதாயத்தில் சேர்த்துக் கொள்ளமுடியாது. அதற்கென்று ஒருவரைமுறையும் தனிச்சடங்குகளும் இவர்களுக்கிடையே இருக்கின்றன. இந்நிகழ்வை 'ரீத்போடுதல்' என்பர். இதனை "ரீத் போடுதல் என்றால் திருநங்கைகளின் சமூகத்தில் இணைந்து கொள்ளுதல் என்று அர்த்தம். பதிவு செய்து கொள்வது மாதிரி.அதற்குச் சிறிய தொகை ஒன்று தர வேண்டும். பல வருடங்களுக்குமுன் அது ஐந்து ரூபாயாக இருந்ததால் இதனை ஐந்து ரூபாய்ரீத் என்றே சொல்வதுண்டு. அதைத் தொடர்ந்து அவர்கள் பரிவர்/ பரம்பரை லிஸ்ட்டில் சேர்த்துக் கொள்வார்கள்." என்று லிவிங் ஸ்மையில் வித்யா சுட்டிக்காட்டுகிறார்.

## திருநங்கைகளின் உறவுமுறைகள்

மனித இனத்திலே மிகசிறப்பானது உறவு முறைகள்தாம். ஓர் உயிர் பிறக்கும் பொழுது சமூகத்தில் பெரிய உறவுமுறைகளோடே பிறக்கின்றது. இத்தகைய உறவுகள் இருந்தும் தனித்து விடப்படுபவர்கள் திருநங்கைகள். தன்னுடைய இரத்த உறவுகள் இருந்தும் தனக்கென ஓர் உறவைத்தேடிக் கொள்கின்றனர். இச்சமூகத்தில் இருக்கும் ஏற்றத்தாழ்வும், பயம் ,அவமானம், குறைகூறுதல் கராணமாகத் தான் பெற்றெடுத்த பிள்ளைகளைத் தனித்து விடுகின்றனர் பெற்றோர்கள்.

திருநங்கைகள் தங்களுக்கென்று ஓர் குடும்பத்தை உருவாக்கிக் கொள்கிறார்கள். அவ்வுறவு முறைகளைக் குறித்து. ஒரு திருநங்கை யாருக்கு மகளாக விரும்புகிறாளோ அவர் அந்த இளநங்கைக்கு அம்மா ஆகிறார். அவரது அம்மா நானி, நானியின் அம்மா தாதி ஆவார்கள். அந்த இளம் நங்கையும் அம்மாவுக்கு சேலாநானிக்கு நாத்தி சேலாஅப்படியே

சந்தி சேலாசடக் நாத்தி என்றாவார்கள். ஓர் அம்மாவின் சேலாக்கள்சகோதரிகளாவார்கள் அவர்கள்யார் முதலில் சேலா ஆனார்களோ அந்த அடிப்படையில் அக்கா தங்கையாவார்கள். இதேபோல் அம்மாவுக்குச் சகோதிரியாக இருப்பவர்கள் பெரியம்மா அல்லது சித்தியாவார்கள்" என ஆசிரியர் குறிப்பிடுகிறார்.

அதேபோன்று திருநங்கைகளின் உறவு முறைகளில் பிரிவினைக் குறித்தும் அதன்பரம்பரையின் அமைப்பினைக் குறித்தும்அம்மா மகள் முறையினைக் குறித்தும் குறிப்பிடுவதைக் காணலாம். மூத்த திருநங்கைகளைப் பார்த்தால் அவர்களுக்கு வணக்கம் சொல்ல வேண்டும். பதிலுக்கு அவர்கள் நன்றாக இருங்கள் என்று கூறுவார்கள்.

- படுதாதி : ஆயாவின்குரு (கொள்ளுப்பாட்டி)
- தாதா குரு : பாட்டியின்குரு(பாட்டியின்தாய்)
- நானா குரு : குருவின் குரு (பாட்டி)
- குரு : அம்மா
- காலா குரு : சகோதிரிகள்
- படா குருபாய் : பெரிய சகோதரி(பெரியம்மா)
- சேலா : மகள்
- நாத்துசேலா : பேத்தி
- சந்திசேலா : கொள்ளுப்பேத்தி (பேத்தியின் மகள்)
- சடக் நாத்தி : கொள்ளுப் பேத்தியின்மகள்
- படா பேன் : அக்கா
- சோட்டா பேன் : தங்கை

இம்முறையில் திருநங்கைகள் தங்களை உறவுமுறையை அழைக்கின்றனர். அம்மா மகள் உறவு முறையினைக் குறித்து குறிப்பிடுகையில் "குருன்னு சொன்னால் தாய். தாய் போல இருந்தது பாதுகாவலாளி போல இருந்தது நல்லது கெட்டது கற்றுக் கொடுத்துப் பிழைக்க வழிதேடிக் கொடுத்து இருக்க இடம் உடுக்க உடையும் உணவும் கொடுப்பவர் குரு. சேலா என்றால் மகள் அவர்கள் சம்பிரதாயப்படி என்னை மகளாகத் தத்து எடுத்து வழி நடத்தி செல்வார்கள்." இதுதான் அம்மா மகள் உறவு என்று ஆசிரியர் குறிப்பிடுகிறார்.

மேலும் பல உறவுமுறைகள் இவர்களுக்கிடையே காணப்படுகின்றன. அவை, "பெரியம்மா, சிறியஅம்மா, அக்கா, தங்கை, அண்ணி, நாத்தனார், அத்தை போன்ற பெண் இன முறையிலே அமைவதைக் காணலாம் ".

திருநங்கையர் சமூகத்தில் அவர்களுடைய சட்டத்திற்கும் அங்குள்ள உறவுமுறைகளுக்கும் கட்டுப்பாட்டுக்கும் கட்டுப்பட்டு நடக்கவேண்டும். அவற்றை மீறிச் செயல்பட்டாலும் தத்தெடுக்கும் பொழுது ஏதாவது பிரச்சினை ஆனாலும் உறவுகளை முறித்துக் கொள்வார்கள். இப்பதிவினை "தத்தெடுப்பு உறவில் ஏதேனும் பிறழ்வுகள் ஏற்பட்டால் மீண்டும் ஒரு சடங்கு வைத்து அதனை ரத்து செய்து விடுகின்றனர். பஞ்சாயத்து செய்பவர்களுக்குப் பூ, பழம், வெற்றிலைப் பாக்கு வைத்து பஞ்சாயத்து கூட்டப்படுகிறது. மாதா முன்பு தத்தெடுத்துக் கொண்டோரும் தத்தெடுக்கப்பட்டோரும் ஒரு முழு வெற்றிலையை

இரண்டாகச் சரிபாதியாகக் கிழித்தும் துடைப்பக் குச்சியை இரண்டாக உடைத்தும் இனி இந்த அரவாணிக்கு நான் குரு இல்லையென்றும் இனி இந்த அரவாணிக்கு நான் சேலா இல்லையென்று கூறி சத்தியம் செய்வது ரீத் உடைத்தல் எனப்படுகிறது". திருநங்கையர்கள் உறவுகள் உடையாமல் இருக்க இப்படி செய்கின்றனர்.

## தொகுப்புரை

பிற எழுத்தாளர்கள் திருநங்கையர் வாழ்க்கைமுறையினைக் கூறுவதை விட திருநங்கைகளே தங்களுடைய உறவுமுறைகளை மிக விரிவாக்கவும் தெளிவாகவும் கூறமுடியும் என்பதை இக்கட்டுரையின் வாயிலாகக் காணமுடிகிறது. பிறசமூகத்தில் இருந்தும் தன்னுடைய குடும்ப உறவு முறைகளில் இருந்தும் கிடைக்கும் அன்பும், பாசமும் மற்றும் உணர்வுக்கு மரியாதை, சுதந்திரம் அனைத்தும் திருநங்கைகள் உறவு முறையில் முழுமையாகக் கிடைக்கின்றன. பெண்மைக்கும் உணர்வுக்கும் ஓர் அங்கிகாரம் கிடைக்கின்றது பொதுவாக மனிதர்கள் பல பிரிவுகளாக இருந்தாலும் திருநங்கையர் சமூகத்தில் இரண்டு பிரிவினர் மட்டுமே இருக்கின்றனர் அவைத் திருநங்கை, திரு நம்பி ஆகும். பின்னர் ஒரே தெய்வம் ஒரே சமூதாயம் என்ற அமைப்பையும் கொண்டிருக்கின்றனர். இவர்களைக் காக்கைக் கூட்டத்தைப் போன்றாம் என்றும் கூறலாம். இவர்கள் எப்பொழுதும் ஒற்றுமையாகவே இருப்பார்கள். எல்லா நிலையிலும் யாரையும் விட்டுக்கொடுக்க மாட்டார்கள் என்பதை இக்கட்டுரை விளக்குகிறது.

# கல்வியில் பெண்கள்

க. சங்கர்
பேராசிரியர் மற்றும் துறைத்தலைவர்,
நில அறிவியல் துறை, தமிழ்ப்பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

கல்வித்துறையில் பெண்களின் பங்கு தற்போது இன்றியமையாதது. பலதுறைகளில் சிறந்து விளங்கும் பெண்கள் திறமைமிக்க அறிவாளிகளாக வலம் வருகின்றனர். அத்தகை யோரில் சிலரை இத்தருணத்தில் அறிந்து கொள்வது அவசியமாகும்.

## பொருளுரை

பெண் முன்னேற்றத்தின் தடைக்கல்லாய் இருப்பது குழந்தை திருமணம். எனவே அதைத்தடுக்க 1929ம் ஆண்டு சாரதா சட்டம் கொண்டு வரப்பட்டது.

## சங்ககால பெண்பாற் புலவர்கள்:

| | |
|---|---|
| அவ்வையார் | ஒக்கூர் மாசாத்தியார் |
| வெண்ணிக் குயத்தியார் | பொன்முடியார் |
| அள்ளூர் நன்முல்லையார் | நக்கண்ணையார் |
| காக்கை பாடினியார் | வெள்ளிவீதியார் |
| காவற்பெண்டு | நப்பசலையார் |

## பெண்ணினம் கொண்டது தமிழகம்

**தமிழினம் செழிக்க வந்தது பெண்ணினம்**
**கல்வி கற்றிட வேண்டும்**
**பெண்கல்வி போற்றி காத்திட வேண்டும்**
**சுய சிந்தனை வளர வேண்டும்**
**சுய கல்வி தரத்தை உயர்த்திட வேண்டும்**

**சொந்தக்காலில் நின்றிட வேண்டும்**
**பிறர் தயவை புறந்தள்ள வேண்டும்**
**பெண்மை நீடு வாழ வேண்டும்**
**பாரினில் பெண் கல்வி சிறக்க வேண்டும்**
**பறக்கும் பறவை போல வாழ வேண்டும்**
**சுதந்திரம் பெண்ணினத்திற்கு என்றும் வேண்டும்**
**கல்வி கேள்விகளில் சிறந்த இடவேண்டும்**
**பெண்குலம் என்று அழைக்க வேண்டும்**
**பெண்கல்வி ஓங்கிச் சிறந்திட வேண்டும்**
**அதற்கு என்றும் நாம் துணையாக இருக்க வேண்டும்**
**பெண்மையை வணங்குவோம்**
**மாதர் குலததை என்றும் போற்றுவோம்.**

*பெண்மை புரட்சி முத்துலட்சுமி.*

*இவர் வாழ்ந்த காலம் **1886** முதல் **1968** தமிழகத்தின் முதல் பெண் மருத்துவர். இந்தியப் பெண்கள் சங்கத்தின் முதல் தலைவர் சென்னை மாநகராட்சியின் முதல் துணைமேயர் சட்ட மேலவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் பெண்மணி.*

- *தேவதாசி முறை ஒழிப்புச் சட்டம் .*
- *இருதார தடைச் சட்டம் .*
- *பெண்களுக்குத் சொத்துரிமை வழங்கும் சட்டம்.*
- *குழந்தை திருமண தடைச் சட்டம் ஆகியவை நிறைவேற காரணமாக இருந்தவர்.*
- *அடையாற்றில் **1930**இல் அவ்வை இல்லம்.*
- ***1952**ல் புற்றுநோய் மருத்துவமனை ஆகியவற்றை நிறுவியவர்.*

**நீலாம்பிகை அம்மையாரது தமிழ் பணியின் சிறப்பு.**

*தனித்தமிழில் சிறந்தவர் நீலாம்பிகை அம்மையார் இவர் வாழ்ந்த காலம் **1903** முதல் **1943** வரை. இவர் மறைமலை அடிகளின் மகள் ஆவார் தந்தையைப் போலவே தனித்தமிழ் பற்றுடையவர்.*

**மூவலூர் ராமாமிர்தம்.**

*பெண்மை துணிவு மூவலூரர் இராமாமிர்தம் இவர் காலம் **1883** முதல் **1962** வரை. தமிழகத்தின் சமூக சீர்திருத்தவாதி, எழுத்தாளர், திராவிட இயக்கம், அரசியல் செயல்பாட்டாளர். தேவதாசி ஒழிப்புச் சட்டம் நிறைவேற துணை நின்றவர். தமிழக அரசு*

*எட்டாம் வகுப்பு வரை படித்த இளம் பெண்களுக்கான திருமண உதவித்தொகையை இவரின் பெயரில் வழங்கி வருகிறது.*

**பண்டித ரமாபாய்.**

*இவர் காலம் **1858** முதல் **1922** வரை இவர் சமூக தன்னார்வலர் தடைகளை மீறி கல்வி கற்று பண்டிதராகியவர் பெண்களின் உயர்வுக்குத் துணை நின்றவர்.*

**ஐடாஸ் சோபியா ஸ்கட்டர்.**

*இவர் வாழ்ந்த காலம் 1870 முதல் 1960 வரை பெண்கள் மருத்துவர் ஆவதை மருத்துவ உலகமே விரும்பாத காலத்தில் தமிழகத்திற்கு வந்து மருத்துவராகி வேலூரில் இலவச மருத்துவம் அளித்தார்.*

**சாவித்திரிபாய் பூலே.**

*இவர் வாழ்ந்த காலம் 1831 முதல் 1897, 1848 இல் பெண்களுக்கு என தொடங்கப்பட்ட பள்ளியில் ஆசிரியராகப் பணியாற்றியவர் இவரே நாட்டின் முதல் பெண் ஆசிரியர். மலாலா. பாகிஸ்தானில் பெண்கல்வி வேண்டும் என்று போராட்ட களத்தில் இறங்கிய போது மலாலாவின் வயது 12. கல்வி ஒரு வரம் அதனைப் பெறுவது பெருந்தவம் இத்தொடருக்கு ஏற்ப உள்ள பெண் சாதனையாளர்களைப் போற்றுவோம்.*

**இன்றைய சாதனை பெண்மணிகள்.**

*பலதுறைகளில் பெண்கள் சாதனை படைத்து வரும் இக்காலத்தில் நம்மை கவர்ந்த சில சாதனை பெண்கள் பற்றி காண்போம்.*

**மனித கணினி.**

*சகுந்தலா தேவி என்கிற இந்தியப் பெண்மணி ஆற்றுவது என்பதாம் ஆண்டில் லண்டனில் நடத்தப்பட்ட சோதனையில் எண்களின் பெருக்குத் தொகையை மனிதர்களாகவே கணக்கிட்டு விரைவாகப் பதில் கூறி சாதித்தவர் இதனால் இவரை மனித கணினி என்ற சிறப்பு பெயரிட்டு அழைத்து மகிழ்கின்றனர்.*

**சுனிதா வில்லியம்ஸ்.**

*இந்திய வம்சாவளியைச் சேர்ந்த அமெரிக்க விண்வெளி வீராங்கனைச் சுனிதா வில்லியம்ஸ் இவர் அமெரிக்காவில் உள்ள நாசா விண்வெளி ஆய்வு நிலையத்தில் பணிபுரிந்து வருகிறார். சமீபத்தில் விண்வெளி பயணம் மேற்கொண்டு சர்வதேச விண்வெளி ஆய்வு மையத்தை சென்றடைந்தார். அங்கு பல்வேறு ஆய்வுப் பணிகளை மேற்கொண்ட சுனிதா 188 நாட்கள் தங்கியிருந்து புதிய உலக சாதனை படைத்தார். விண்வெளியில் மராத்தான் ஓட்டம் விண்வெளியில் அதிக முறை நடந்த வீராங்கனை என்று பல்வேறு சாதனைகளையும் அங்கு நிகழ்த்தினார்.*

**இந்திரா நூயி.**

*உலகின் முன்னணி உணவு, குளிர்பான நிறுவனமான பெப்சி கோ வின் தலைமை செயல் அதிகாரியாகவும் தலைவராகவும் பணியாற்றி வரும் இந்திரா நூயி பெண்களுக்கு முன் உதாரணமாகத் திகழ்ந்து வருகிறார். சமீபத்தில் நடந்த அமெரிக்க அதிபர் தேர்தலில் வெற்றி பெற்ற டொனால்ட் ட்ரம்ப் தனக்கு ஆலோசனை வழங்குவதற்காக பல்வேறு*

குழுக்களை அமைத்து வருகிறார். அந்த வகையில் அவர் உருவாக்கியுள்ளப் பொருளாதார ஆலோசனைக் குழுவில் இந்திரா நூயி இடம் பெற்றுள்ளார். இவர் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த தமிழ்ப்பெண் என்பது குறிப்பிடத்தக்கது.

**கியாரா நர்கின்.**

கூகுள் நடத்திய 2016ம் ஆண்டிற்கான அறிவியல் கண்காட்சியில் தென் ஆப்பிரிக்காவைச் சேர்ந்த 16 வயதான இந்திய வம்சாவளி சிறுமி கியாரா நக்கிங் முதல் பரிசு பெற்று சாதனை புரிந்துள்ளார்.

ஆரஞ்சு பழத்தோலை உறிஞ்சி பொருளாகப் பயன்படுத்துவதன் மூலம் நிலத்தில் நீரைத் தக்கவைத்து வறட்சி காலத்திலும் விளைச்சலை பெற முடியும் என்பதே அவரின் கண்டுபிடிப்பு.

11ஆம் வகுப்பு படித்து வரும் தென்னாப்பிரிக்காவில் நிலவிவரும் வறட்சியை கருத்தில் கொண்டு அறிவியல் கண்காட்சியில் சமர்பித்த அவரின் தண்ணீர் இல்லை பயிர்கள் இனி இல்லை கண்டுபிடிப்புக்குக் கூகுள் அவருக்கு 50 ஆயிரம் டாலர்கள் பரிசு அளித்துள்ளது.

**பெண்கள் சிறப்பைப் போற்றும் பொன்மொழிகள்.**

1. மங்கையராகப் பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திட வேண்டுமம்மா - கவிமணி தேசிய விநாயகம் பிள்ளை.
2. பெண்களுக்கு படிப்பு சொத்து உரிமை ஆகியவை இருந்து விட்டால் நாடு கண்டிப்பாக முன்னேற்றம் அடைந்து விடும் -பெரியார்.
3. கையில் புத்தகத்துடன் இருக்கும் கல்விகற்கும் பெண்களைக் கண்டு அடக்குமுறையாளர்கள் பெரும் பயம் கொள்கிறார்கள் -மலாலா.
4. பெண்களுக்குரிய சுதந்திரத்தை வழங்காத வரை ஒரு நாடு செழிப்பு அடையாது -ஜவகர்லால் நேரு.
5. ஒரு விஷயத்தைச் சொல்லி முடிக்க ஆண்களைக் கேளுங்கள். செய்து முடிக்க பெண்களைக் கேளுங்கள் - மார்க்ரெட் தாட்சர்.
6. பெண் மனம் அறிவு பெறுவதைத் பொருத்தி மனித சமுதாயம் அறிவு வளர்ச்சியும் பெறுகிறது -ஷெரிடன்.
7. பெண்ணுரிமை இல்லாத நாடு காற்றில்லாத வீடு -லெனின்.
8. பெண்களின் எழுச்சி இன்றி மாபெரும் சமூக மாற்றங்கள் சாத்தியமே இல்லை பெண்கள் எந்த நிலையில் வைக்கப்பட்டு இருக்கிறார்கள் என்பதைக் கொண்டே சமூக முன்னேற்றத்தை நாம் அளவிட முடியும் -காரல்மர்க்ஸ்.
9. அறிவின் தாயகமாய் அருள் நிறைந்த உள்ளமாய் இருப்பவள் பெண் -ஜெயகாந்தன்.
10. பெண்ணே மனிதனின் உயர்ந்த ஊக்கங்கள் எல்லாவற்றிற்கும் விளக்கு -ஜேம்ஸ் எல்லீஸ்.
11. வாழ்க்கை என்ற காற்றையும் கடலையும் கடப்பதற்குப் பெண் என்ற படகோ, கப்பலோ அவசியம் தேவை -காண்டேகர்.
12. பெண்ணுக்கு இயற்கை அளித்திருக்கும் அதிகாரம் அளப்பரியது என்பதனாலோ என்னவோ

நம் சட்டங்கள் பெண்களுக்கு குறைவான அதிகாரத்தையே தருகின்றன - சாமுவேல் ஜான்சன்.

13. பெண்ணைப் படிக்க வைப்பது ஒரு குடும்பத்தையே படிக்க வைப்பதற்கு நிகரானது -டிக்கன்ஸ்.

14. சகிப்புத்தன்மையில் வலிமை மிகுந்தவள் பெண் -காந்தியடிகள்.

15. அன்பு செய்யும் பெண்ணின் நெஞ்சம் எப்போதும் இளமை உடையது - டேவிட் ஹ்யூம்.

16. பெண்களிடம் உள்ள நல்ல பண்பு அவர்களுக்குப் பாராட்டை உண்டு பண்ணுகிறது ஆனால் அவர்களின் நல்ல நடத்தையே அவர்களை தெய்வங்கள் ஆக்குகிறது -வில்லியம் ஷேக்ஸ்பியர்.

17. ஆண்களின் தர்க்கம் எல்லாம் பெண்களின் ஒரு உணர்வுக்கு இணையாகாது -வால்ட்டேர்.

18. பெண்கள் ஆண்களை விட சிறந்தவர் என்று என்னால் சொல்ல முடியாது ஆனால் கண்டிப்பாகத் தாழ்ந்தவன் இல்லை கோல்டா மியர்.

19. தன்னைத் தானே பாதுகாத்துக் கொள்வது பெண்களுக்கு அழகு -அவ்வையார்.

20. பெண்களின் கண்ணீர் உலகிலேயே மிக ஆற்றல் உள்ள நீர்சக்தி - வில்சன் மிசுனர்.

21. காதலைப் பொறுத்தவரை பெண்கள்தான் நிபுணர்கள் ஆண்கள் எல்லாம் கற்றுக் குட்டிகள் - பிரான்சுவா த்ருஃ போ.

22. ஒரு பெண்ணின் உள்ளமாகிய கடலில் இரக்கம் ஏக்கம் கற்பு காதல் ஆகிய நன் முத்துக்களை காணலாம் - பெஸ்லிங்.

23. பெண் எந்தக் காற்றிலும் அசைந்தாடிக் கொண்டிருக்கும் நாள் அலை போன்றவள். அதனால் பெரும் புயலில் அவள் ஒளிந்து விட மாட்டாள் - வேட்லி.

24. பெண்ணின் ஒழுக்கத்தில் நம்பிக்கை இருத்தலே குடும்ப இன்பத்தின் அடிப்படை- லாண்டர்.

25. ஒரு நாட்டின் நாகரிகம் அந்நாட்டின் பெண்மக்கள் நிலையை பொருத்து நிற்கிறது என்பது எவரும் ஏற்கத்தக்க உண்மை பெண் மக்கள் எவ்வித கட்டுப்பாடும் இன்றி எடுக்கணும் இன்றி பிறப்புரிமை இன்பத்தை எங்கே பெற்று வருகிறார்களோ அங்கேயுள்ள ஆண்மக்கள் நாகரிக நுட்பம் உணர்ந்தவர்கள் ஆகிறார்கள் அந்நாடு நாகரிகம் பெற்றதாகும் -திரு வி.கல்யாண சுந்தரனார்.

## நிறைவுரை

இக்காலத்தில் பெண்கள் முன்னெப்போதும் இல்லாத அளவுக்குத் தங்களின் திறமை வெளிப்பட பல துறைகளில் சாதித்து வருகிறார்கள். இந்த நிலை தொடரவும், அவர்களின் தனித்துவத்தைத் பறைசாற்றவும் நாம் என்றும் உறுதுணையாக இருந்து பெண்மையைப் போற்றிட வேண்டும்.

# நிர்வாகத் துறையில் பெண்கள்

க. சங்கர்
பேராசிரியர் மற்றும் துறைத்தலைவர்,
தொழில், நில அறிவியல் துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

நிர்வாகத்துறையில் பெண்களின் பங்கு தற்போது இன்றியமையாதது. பலதுறைகளில் சிறந்து விளங்கும் பெண்கள் ஆளுமைமிக்க நிர்வாகிகளாக வலம் வருகின்றனர். அத்தகையோரில் சிலரை இத்தருணத்தில் அறிந்து கொள்வது அவசியமாகும்.

## பொருளுரை

**பட்டங்கள் ஆள்வதும், சட்டங்கள் செய்வதும் பாரினில் நடத்திய பெண்கள்'**

தனது 15 வயதில் சுதந்திரப் போராட்டத்தில் பங்கேற்று காந்தியடிகளைத் தன் மன திடத்தால் வியக்க வைத்த தில்லையாடி வள்ளியம்மை தொடங்கி, இன்று அன்றாட வாழ்க்கையில் பல இன்னல்களையும், எதிர்ப்புகளையும் சர்வசாதரணமாய் எதிர்கொண்டு அடுத்தடுத்த மைல்கற்களை நோக்கி நடந்து கொண்டிருக்கும் அனைத்து பெண்களுமே கொண்டாடப்பட வேண்டியவர்கள். பெண்கள் தினம் மட்டுமல்ல ஒவ்வொரு நாளுமே பெண்களுக்கான தினம்தான்.

அந்த வரிசையில் பெண்களால் நிகழ்த்தப்பட்ட பல சாதனை சம்பவங்களும், பெண்கள் பெருமை கொள்ளும்படி நடந்தேறிய சில சம்பவங்களையும் இங்கே தொகுத்து வழங்குகிறோம்.

## முத்துலட்சுமி ரெட்டி

இந்தியாவின் முதல் பெண் மருத்துவர். புதுக்கோட்டையில் பிறந்தவர். சிறு வயதிலேயே பெண்களைத் திருமணம் செய்து கொடுக்கும் வழக்கம் உடைய காலத்தில் அதை எதிர்த்து ஆண்கள் கல்லூரியில் ஒரே பெண்ணாய்ச் சேர்த்து உயர்க்கல்வி பயின்றார்.

**தேவதாசி முறையையும், குழந்தை திருமணத்தையும் ஒழிக்க பாடுபட்டவர்.**

கல்வி என்பது பெண்களுக்கு எத்தனை முக்கியம் என்பதை உணர்த்திய முத்துலட்சுமிரெட்டி, பெண் சமத்துவத்திற்கும் பாடுபட்டவர். முத்துலட்சுமியின் வாழ்க்கை வரலாற்றைப் புரட்டிப் பார்த்தால் பெண்கள் அனைவருமே பெருமை கொள்ள வேண்டியவர்கள் என்பதை மறுக்க இயலாது.

**சர்லா தக்ரால் - முதல் பெண் விமானி**

பெண் சாதனையாளர்களைப் பற்றியும், பெண்களால் நாம் பெருமை அடைந்த தருணங்களை பற்றியும் பேசும்போது நம்மால் சர்லா தக்ரலைப் பற்றி பேசாமல் இருக்க முடியாது. விமானிக்கான உரிமத்தைப் பெற்ற முதல் இந்திய பெண்மணி என்ற சிறப்பைப் பெற்றவர் சர்லா தக்ரால்.

**இந்திரா காந்தி**

'இரும்பு மனுஷி' என்று அறியப்படும் இந்திரா, இந்தியாவின் முதல் பெண் பிரதமர் என்ற சிறப்பைப் பெற்றிருப்பதைத் தாண்டி, இந்திய அரசியலில் அதிர வைக்கும் பல முடிவுகளை எடுத்த அவரின் அரசியல் ஆளுமை இன்றளவும் வியக்கதக்க ஒன்றே. உள்ளத்தின் உறுதியே ஊன்றுகோல்: தடைகளைத் தகர்த்த பூர்ணிமா.

**கல்பனா சாவ்லா**

விண்வெளிக்குச் சென்ற முதல் இந்தியப் பெண்மணி கல்பனா சாவ்லா. 1997ஆம் ஆண்டு அவர் விண்வெளிக்குச் சென்றார்; இன்று அவர் உயிரோடு இல்லை என்றாலும் அவரின் சாதனை இந்தியப் பெண்கள் அனைவருக்கும் ஓர் உத்வேகத்தை அளித்தது என்று சொன்னால் அது மிகையாகாது.

**'விண்வெளி விஞ்ஞானிகள்'**

'மங்கள்யான்' என்ற விண்கலத்தைச் செவ்வாய்க்கிரகத்திற்கு அனுப்பி சாதனை படைத்தது இந்தியா என்பது அனைவருக்கும் தெரிந்த ஒன்று. ஆனால், அதில் பணியாற்றிய பெண் விஞ்ஞானிகளை தெரிந்திருக்க வாய்ப்பில்லை. பெரும்பாலும் விண்வெளி தொடர்பான துறைகளில் ஆண்களே ஆதிக்கம் செலுத்துவர் என்ற கூற்றை மாற்றியவர்கள் அவர்கள்.

செவ்வாய்க்கிரகத்திற்கு விண்கலத்தை ஏவும் திட்டத்தில் பணிபுரிந்த பெண் விஞ்ஞானிகள்.

**விண்ணையும் வசப்படுத்தும் இஸ்ரோ பெண் விஞ்ஞானிகள்**

செவ்வாய்க்கிரகத்திற்கு வெற்றிகரமாக விண்கலத்தை செலுத்திய பெருமையுடன் அதில் பெண் விஞ்ஞானிகளின் பங்கு முக்கியமானவை என்பது பெருமை தரும் தருணமாகவே உள்ளது. இந்தச் சாதனைக்குப் பிறகு பிபிசியிடம் பேசிய இஸ்ரோவின் மூத்த விஞ்ஞானியான

அனுராதா இஸ்ரோவில் பணிபுரியும் 16,000 ஊழியர்களில் 20-25 சதவீதம் பெண்கள் என்ற கருத்தை நம்முடன் பகிர்ந்து கொண்டதையும் நாம் நினைவில் கொள்ளலாம்.

**விளையாட்டுத் துறையில் பெண்கள்**

சமீபகாலங்களில் விளையாட்டுத்துறையில் பெண்களின் சாதனை அதிகரித்து வருவதை நம்மால் பார்க்க முடிகிறது. குத்துச்சண்டை வீராங்கனை மேரிகோம், சாய்னா நேவால், பி.வி.சிந்து, மித்தாலி ராஜ் என்று பட்டியல் நீண்டு கொண்டே போகும் வேளையில் தமிழக பெண்கள் கால்பந்து அணி தேசிய கோப்பையை வென்று சாதனைப் படைத்துள்ளது. தடைகளைத் தாண்டி சாதிக்க முயலும் பெண்கள் அனைவருக்கும் ஒரு எடுத்துக்காட்டே.

**ரூபா தேவி**

தமிழகத்தின் தென்மாவட்டமான திண்டுக்கல் மாவட்டத்தில், கால்பந்து வீராங்கனையாகத் தனது விளையாட்டு வாழ்க்கையைத் தொடங்கிய ரூபா தேவி, 2016ம் ஆண்டின் துவக்கத்தில் ஜனவரி மாதத்தில் சர்வதேச கால்பந்து சம்மேளமான பிஃபாவின் நடுவராக நியமிக்கப்பட்டது தமிழகத்திற்குப் பெருமைமிக்க தருணம் மட்டுமல்ல எளிய குடும்பத்தில் பிறந்து விளையாட்டுத் துறையில் சாதிக்க துடிக்கும் பலருக்கும் இவர் ஓர் உத்வேகம் குறிப்பாக பெண்களுக்கு.

**ரூபா தேவி: வேடிக்கை பார்த்த சிறுமி, கால்பந்து வீராங்கனை, பின் பிஃபா நடுவர்**

**நிர்மலா சீதாராமன்**

மத்திய அரசின் நிதியமைச்சர் என்ற சிறப்பை பெறும் நிர்மலா சீதாராமன், தமிழகத்தைச் சேர்ந்தவர் என்பது கூடுதல் பெருமை. சிறப்பு வாய்ந்த துறைகளில் ஒன்றாகக் கருதப்படும் நிதித்துறைக்கு ஒரு பெண் அமைச்சர் என்பது பெண்களுக்குப் பெருமை சேர்க்கும் தருணம் என்றே கூறலாம்

**நிறைவுரை**

இக்காலத்தில் பெண்கள் முன்னெப்போதும் இல்லாத அளவுக்குத் தங்களின் திறமை வெளிப்பட பல துறைகளில் சாதித்து வருகிறார்கள். இந்த நிலை தொடரவும், அவர்களின் தனித்துவத்தைப் பறைசாற்றவும் நாம் என்றும் உறுதுணையாக இருந்து பெண்மையைப் போற்றுவோம்.

# இயல் இசையின் முன்னோடி காரைக்கால் அம்மையார்

க. ஹரிநாத்
முனைவர் பட்ட ஆய்வாளர்,
மெய்யியல் துறை, தமிழ்ப்பல்கலைக்கழகம், தஞ்சாவூர்

காரைக்கால் அம்மையார் கிபி 5ம் நூற்றாண்டில் தென்னிந்தியாவில் காரை வனம் என்றழைக்கப்படும் காரைக்கால் நகரில் தனதத்தன், தர்மவதி தம்பதியருக்கு மகளாகத் தோன்றினார். இவருக்குப் பெற்றோர் இட்டப்பெயர் புனிதவதி, வைசியர் குலத்தில் பிறந்த இவர் பெரும் செல்வந்தரின் குடும்ப வழக்கப்படி வளர்ந்து வந்தார்.

காரைக்கால் அம்மையார் சிறுவயதிலிருந்தே சிவபெருமான் மீது அளவற்ற பற்றும், அன்பும், பிரார்த்தனையும் கொண்டவராக இருந்து வந்தார். தனதத்தன், புனிதவதி அம்மையாருக்குத் திருமணம் செய்ய ஆசைப்பட்டு நாகப்பட்டினத்தைச் சேர்ந்த நீதிபதி மகனான பரமதத்தன் என்ற அன்பரை மணம் முடிக்கிறார். வீட்டிற்கு ஒரே மகளாகச் செல்வ செழிப்போடு இருந்ததினால், கணவர் வீட்டிற்குப் பெண்ணை அனுப்பாமல் காரைக்கால் நகரில் தன் வீட்டிற்கு அண்மையிலேயே தன் மகளுக்கு ஒரு வீட்டைக் கட்டிக் கொடுத்து தன் மருமகனான பரமதத்தனுக்கு வேண்டிய அனைத்து பொருளாதார வணிக வசதிகளை ஏற்படுத்தினார். பரமதத்தன் தன்னுடைய கடமையை, வாழ்வியல் செயல்பாடுகளைச் செம்மையாக செய்து வந்தார்1.

## காரைக்கால் அம்மையாரின் தெய்வீக அனுபவங்கள்

வழக்கம்போல பரமதத்தன் தன்னுடைய வர்த்தகம் சார்ந்த பணிகளில் ஈடுபட்டுள்ளார். வர்த்தக சம்பந்தமாக வந்த நபர்கள் பரமதத்தனிடம் இரண்டு மாம்பழங்கள் தந்தனர். அந்த மாம்பழங்களைப் பணியாளர் மூலம் வீட்டில் தரச்சொல்லிக் கொடுத்து அனுப்புகிறார். இந்த நிலையில் சிவனடியார் ஒருவர் பசியுடன் புனிதவதி தாயாரிடம் உணவருந்த

வேண்டினார். வீட்டில் இருந்த மாங்கனிகளில் ஒன்றை சிவனடியாருக்கு விருந்து உபசரிப்பு தருகிறார். உணவு வேளையில் வீட்டிற்கு உணவருந்த வந்த கணவர் பரமதத்தன் உணவின் போது மாங்கனியைச் சுவைக்க, சுவையாக இருக்கவே மற்றொரு மாங்கனியை எடுத்து வருமாறு கூறுகிறார். புனிதவதியார், சிவனிடம் வேண்டுகிறார் தான் சிவனடியாருக்கு விருந்தோம்பலில் மற்றொரு மாங்கனியைத் தந்துவிட்டேன் என்று, சிவனும் மனமிறங்கி வேறு ஒரு மாங்கனியைத் தருகிறார்.

இந்த மாங்கனியைக் கணவருக்கு உண்ண தருகிறார். இந்த மாங்கனியை சுவைத்த, பரமதத்தன் முதலில் எடுத்துக்கொண்ட மாங்கனியை விட இந்த மாங்கனி சுவையானது சிறப்பாக இருந்ததால், இது எவ்வாறு? என்று மனைவிடம் கேட்கிறார். புனிதவதியார், சிவனடியார் வந்ததையும், விருந்து உபசரிப்பாக மாங்கனி தந்ததையும் பிறகுத் தங்களுக்குச் சிவனிடம் வேண்டி அருளாக இந்த மாங்கனி பெற்றதாகவும் கூறுகிறார். இதை நம்ப மறுத்த பரமதத்தன் மற்றொரு மாங்கனியை வரவழைத்து தரவும் என்று கேட்கிறார். கணவரின் முன்னிலையில் சிவனிடம் மனமுருக வேண்டுகிறார். அவர் வேண்டியதன் பேரில் சிவன் மூன்றாவது மாங்கனியைப் புனிதவதியாரிடம் தருகிறார். இவற்றையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த பரமதத்தன் அதிர்ச்சியால், தன்னுடைய மனைவியின் தெய்வீகத்தன்மையை உணர்ந்து பேச்சற்றவராகிறார். இந்த நிகழ்வுக்குப் பிறகு யாரிடம் கூறாமலும், தன்னுடைய தந்தையார் நீதிபதியிடம் கூறாமலும், தனது மாமனார் தனதத்தனிடம் கூறாமலும், மனைவியிடம் கூறாமலும் அங்கு வேறு ஒரு வணிக குடும்பத்தைச் சேர்ந்த பெண்ணைத் திருமணம் செய்து தனது வாழ்வியலைத் தொடங்குகிறார்.

அவருக்கு ஒரு பெண் குழந்தையும் பிறக்கிறது. இவை அனைத்தும் தெரியாமல் இருந்த சூழலில் காரைக்கால் பகுதியில் இருந்து அவருடைய உறவினர்கள் வணிக நிமித்தமாகப் பாண்டியநாடு சென்ற பொழுது பரமதத்தனைக் கண்டபிறகு, இந்தத் தகவல்களைக் காரைக்காலில் உள்ள தனதத்தனிடம் தெரிவிக்கின்றனர். சுற்றத்தினர், பெற்றோர், புனிதவதியாரை அழைத்துக்கொண்டு பாண்டியநாடு செல்கின்றனர். பரமதத்தன் இருக்கும் பகுதிக்கு அண்மையில் சுற்றத்தார் அனைவரும் சூழ புனிதவதியார் இருக்கிறார். சுற்றத்தாரும் புனிதவதியார் வந்திருப்பதைப் பரமதத்தனுக்குத் தெரிவிக்கின்றனர். பரமதத்தன், தன்னுடைய மனைவி மகளை அழைத்துக் கொண்டு சுற்றத்தாரும், புனிதவதியாரும் இருக்குமிடத்திற்கு வருகின்றனர். புனிதவதியாரைப் பார்த்தவுடன் அவருடைய கணவர் தன்னுடைய 2 வது மனைவி மகள் உட்பட அனைவரும் புனிதவதியாரின் காலில் விழுந்து வணங்குகின்றனர்.

இதனால் அதிர்ச்சி அடைந்த புனிதவதியார் என்னுடைய பேரழகும், இளமையும் இனி எதற்காக, என்னை பேயாக மாற்றிவிடு என்று சிவனிடம் வேண்டுகிறார். புனிதவதியாரின் வேண்டுகோளை ஏற்று எலும்பும் தோலுமாகப் பேயைப் போன்ற உருவத்துடன் மாற்றிவிடுகிறார்.

இதைப் பார்த்த சுற்றத்தார்கள் அனைவரும் வணங்கி அவரவர் இருப்பிடத்திற்குத் திரும்புகின்றனர். இந்த நிகழ்வுக்குப் பிறகு புனிதவதியார் கைலாச மலை நோக்கிச் செல்கிறார். கைலாச மலையின் அடிவாரத்திலிருந்து சிவனைத் தரிசிப்பதற்காகத் தன்

*கைகளால் தலைகீழாக நடக்க ஆரம்பித்து மலைமீது நடந்து சிவனைத் தரிசிக்க வருகிறார். இதனால் அவருக்குக் 'காரைக்கால்' என்ற பெயர் வருகிறது. தனது கைகளால் நடந்து வருவதைப் பார்த்த சிவனார், 'அம்மையே' என்று அழைக்கிறார். இதனால் 'அம்மையார்' என்ற பெயரும் வருகிறது. மேற்கண்ட நிகழ்வுகளின் மூலம் புனிதவதியாருக்குப் பேயார், காரைக்கால் அம்மையார் என்ற பெயர்கள் வந்தன. சிவனின் அழைப்பில் மனம் மகிழ்ந்த புனிதவதி தாயார் மனமுருக சிவனை வணங்குகிறார். சிவனின் வழிகாட்டுதலின் பேரில் திருவாலங்காடு சென்று அவருடைய பாதங்களில் இசைப் பாடல்களைப் பாடி சிவனாரின் திருநடனத்தைப் பார்க்கும் பாக்கியத்தைப் பெறுகிறார்2.*

**காரைக்கால் அம்மையார் திருவாய்மலர்ந்தருளிய அற்புதத்திருவந்தாதியில்,**

**அவனே யிரு சுடர் தீயாகா சமாவான்**
**அவனே புவிபுனல் காற்றா வானவனே**
**யியமானனாயட்ட மூர்த்தியுமாய் ஞான**
**மயனாகி நின்றானு மவந்து.** *(அற்புதத்திருவந்தாதி 20)*

*பஞ்சபூதங்களாக, 8 வடிவங்களாக, ஞானமே சொருபமாக இறைவன் இருக்கிறார் என்கிறார்.3*

**இயல் இசையின் முன்னோடி காரைக்கால் அம்மையார்**

*சைவ இலக்கியத்தில் இசைப்பாடல் மரபினைத் தொடங்கி வைத்தவர் காரைக்கால் அம்மையார் ஆவார். சங்ககால இலக்கியங்கள் அனைத்தும் குறைந்த பாடல் வரிகளைக் கொண்டு, வடிவங்கள் இல்லாமல் இசைப் பாடல்களாக இருக்கின்றன. காரைக்கால் அம்மையார் பாடல்களில்தான் இசை பாடல்கள் வடிவம் தோன்றியது. உமாபதி சிவாச்சாரியார் தனது சேக்கிழார் புராணத்தில் கவுணியர், நாவுக்கரசர், பேயார் இவர் மூவர் கற்கும் இயலிசை வல்லோர் என்று பதிவு செய்துள்ளார். காரைக்கால் அம்மையார் திரு ஆலங்காட்டில் இருந்தபடி மூத்த திருப்பதிகம் என்று அழைக்கப்படும் 143 பாடல்கள் இயற்றியுள்ளார். பதிகம் என்பது 10 பாடல்களைக் கொண்ட தொகுப்பாகும். இதற்கு முன்னோடி காரைக்கால் அம்மையார் ஆவார்.*

*இதைப்போன்றே தேவார மூவர், ஆழ்வார்கள், மாணிக்கவாசகர் பதிவேற்றியுள்ளார்கள். இவர்களுக்கு முன் பதிற்றுப்பத்து, ஐங்குறுநூறு, திருக்குறள், நாலடியார் போன்ற நூல்கள் 10 பாடல்களைக் கொண்டு இருந்தாலும் தெய்வத்தை பாடுபொருளாகக் கொண்டு பக்தி நெறியில் பாடப்பட்ட 10 பாடல்கள் மட்டுமே பதிகம் என்று பெயர்பெற்றுள்ளன. 1. அற்புதத் திருவந்தாதி 101 பாடல்கள் 2.திரு இரட்டை மணிமாலை 20 பாடல்கள் 3.மூத்த திருப்பதிகம் 22 பாடல்கள். இவற்றில் முதல் 2 ம், இயல் வழி சிறப்பு பெற்றவை. ஏனெனில் அந்த வழியில் முதலில் தோன்றிய நூல்கள் என்ற பெயரைப் பெறுகின்றன. நீதிநூல் காலத்தில் தோன்றிய வெண்பா என்ற யாப்பினை முதன்முதலில் பக்தி இலக்கியத்தில் பயன்படுத்தியவர் இவரே.*

*இவரைப் பின்பற்றியே ஆழ்வார்களும், திருமழிசை ஆழ்வார், நம்மாழ்வார் ஆகியோர் வெண்பா யாப்பில் பக்தி பனுவல் இயற்றி இருக்கின்றார்கள். காரைக்கால் அம்மையார்*

கையில் தாளம் வைத்திருப்பது போன்ற தரவுகள் உள்ளன. மேலும் முத்திரை எனப்படும் பாடலைப் பாடியவர் தன்னுடைய பெயரையோ புனைப்பெயரையோ பதிகத்தின் இறுதியில் பயன்படுத்துவது, இதற்கு முத்திரை கொடுத்துள்ளனர் என்பர். இரண்டாம் பதிகம் கடைசி பாடல் உதாரணமாகக் காரைக்கால் பேய் தன் பாடல் பத்தும் பாடி ஆடப் பாவம் நாசமே (11.1.11).

ஏழிசையின் தமிழ்ப்பெயர்கள் மூத்த திருப்பதிகத்தில் ஒன்பதாம் பாடலில் கொடுத்துள்ளார் காரைக்கால் அம்மையார். துத்தம், கைக்கிளை, விளரி, தாரம்,

உழை, இளி, யோசை பண் கெழுமப்பாடி(11.1.9). காரைக்கால் அம்மையார் 17 இசைக்கருவிகள் பற்றிக் கூறியுள்ளார். இந்த இசைக்கருவிகள் நான்கு வகையாக பிரிக்கப்படுகின்றன.1. காற்றுக் கருவிகள் இதில் குழல், கொக்கரை வருகிறது. 2. நரம்புக் கருவிகள் இதில் வீணை, யாழ் வருகிறது. 3. தோல் கருவிகள் 12. இதில் சச்சரி, தக்கை, தகுணிதம், துந்துபி, மத்தளம், கரடிகை, தமருகம், குடமுழா, மொந்தை, பறை, துடி, முழவு. 4. கனக்கருவி இதில் தாளம்.4

கோயில்களில் சுவாமி ஊர்வலம் வரும் பொழுது நாதஸ்வர இசையில் மல்லாரி இசை பாடிவார்கள். இந்த மல்லாரிக்கு உரிய ராகம் நட்டபாடை ஆகிய கம்பீரநாட்டை ஆகும். கோயிலில் இசை மரபில் இது தொடர்ந்து வரும் ஓர் இசை முறை என்பது குறிப்பிடத்தக்கது. புனிதவதி அம்மையார் எடுத்துக் கொண்ட இந்தப் பண்ணாகிய மாயா மாளவ கௌளை ராகமும், தென்னிந்திய இசை வரலாற்றில் இன்றளவும் மிகச்சிறந்த இடத்தை வகித்து வருகிறது. காரைக்கால் அம்மையார் என்று அழைக்கப்படும் புனிதவதி தாயார் அறுபத்திமூன்று நாயன்மார்களில் ஒருவராகப் போற்றப்படுகிறார். இன்றைக்கு ஏறத்தாழ 1500 ஆண்டுகளுக்கு முன்பு சிவபெருமானைத் தொழுது 3 பாடல் தொகுப்புக்களைத் தந்துள்ளார். மேற்கண்ட தகவல்களின் அடிப்படையில் இந்தியாவில் குறிப்பாக தமிழகத்தில் இசை முன்னோடி இசைத்தாய் என்கின்ற வகையில் 1995ம் ஆண்டு தஞ்சையில் நடைபெற்ற 8ம் உலகத் தமிழ் மாநாட்டில் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ ஜெயலலிதா அவர்கள் மாநாட்டின் இறுதி தீர்மானங்களில் ஒன்றாகக் காரைக்கால் அம்மையார் ‘தென்னிந்தியாவின் இசையின் தாய்’ என்று உலகறிய அறிவித்தார்.

**நிறைவுரை**

நமக்கு கிடைத்த தரவுகளின் அடிப்படையில் 3 முக்கியமான சந்தேகங்கள் வருகின்றன. இதில் 1 கேள்வி, 1500 ஆண்டுகளுக்கு முந்திய காலகட்டத்தில் வாழ்ந்த காரைக்கால் அம்மையார் பற்றிய தரவுகளில் கணவருடைய தகப்பனார் நீதிபதியாக இருந்திருக்கிறார். புனிதவதி அம்மையாரின் தகப்பனார் தனதத்தன் பெரிய வணிகராக இருந்திருக்கிறார். இந்தச் சூழலில் கணவர் பரமதத்தன் எவ்வாறு தன்னுடைய தகப்பனாருக்கும், மாமனாருக்கும், மனைவிக்கும் தெரியாமல் பாண்டிய நாட்டுக்குச் சென்றார். 2 வது கேள்வி இரண்டு மாங்கனிகளை வர்த்தவழியில் பெற்ற பரமதத்தன் தான் உணவுக்கு செல்வதற்கு முன்பே ஏன் பணியாளரிடம் கொடுத்து வீட்டிற்கு அனுப்ப வேண்டும். 3 வது கேள்வி திருமூலர்

தன்னுடன் சேர்த்து 8 பேர் சிதம்பரத்தில் தாண்டவ நடனம் பார்த்ததாகக் குறிப்பிடுகிறார். திருமூலருக்கு முன்பு அல்லது சம காலத்தவராக காரைக்கால் அம்மையார் வாழ்ந்தவராக இருந்தால், காரைக்கால் அம்மையார் தரிசித்த திருவாலங்காடு திருநடன தகவல் திருமூலர் ஏன் தெரியப்படுத்தவில்லை? என்பது போன்ற விடை தெரியாத, தரவுகள் கிடைக்காத வினாக்கள் இருந்தாலும், **63** நாயன்மார்களில் ஒரே ஒரு பெண் என்ற பெருமையைக் காரைக்கால் அம்மையார் பெறுகிறார். இவர்களுடைய சிலைகள் தமிழ்நாடு, கம்போடியா, வியட்நாம், இலங்கை போன்ற நாடுகளில் இன்றும் இருக்கிறது. நமக்குக் கிடைத்துள்ள தரவுகளில் உள்ள மூத்த திருப்பதிகம் பாடல்கள் மூலம் இயல், இசையின் முன்னோடி காரைக்கால் அம்மையார் என்பதை உறுதி செய்கிறார்.

இன்றைய வாழ்வியலில் விவாகரத்து, தனிமை, மனஉளைச்சல், தற்கொலைகள் இதுபோன்ற பல உளவியல் முறையில் பிரச்சனைகளுக்குத் தீர்வாக தன்னுடைய இறை பக்தியின் மூலமாகவும், வாழ்வியல் சோதனைகளை எதிர்கொண்டதன் மூலமும், இத்துடன் இயல், இசை துறைக்கு மிகச்சிறந்த பங்களிப்பை தந்து, உலக மாந்தர்களுக்கு முன்மாதிரியான ஆளுமையாக வாழ்ந்து காட்டியுள்ளார். பெண்ணியத்தை வணங்குவோம், போற்றுவோம், பின்பற்றுவோம்.

# பெண்கள் பலசாலிகள்

முனைவர் கா. கண்ணகி
திட்ட உதவியாளர்,
மெய்யியல் துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

கடவுள் பெண்களுக்குத்தான் குழந்தையைப் பெற்றெடுக்கும் பெரும் பொறுப்பைக் கொடுத்திருக்கிறார். தவிரவும் வீட்டில் உணவு சமைப்பது முதல் குழந்தைகளைக் கவனிப்பது. கணவருக்கான பணிவிடைகளைச் செய்வது, வீட்டை சுத்தமாக வைப்பது போன்ற பல்வேறு பணிகளைப் பெண்களே செய்கின்றனர். பெண்களே இந்நாட்டின் கண்கள் என்பார்கள். மேலும் பெண்களை மலரின் மென்மை, நிலவின் தன்மை, பனியின் வெண்மை, தென்றலின் அருமை, தேனின் இனிமை என்றெல்லாம் கூறுவார்கள்.

**"பொருளையும் பெரிதென் றெண்ணாள்**
**பூண்வேண் டாள்தனை மணந்தோன்**
**அருளையே உயிரென் றெண்ணும்**
**அன்பினால் வருத்தி றக்கும்**
**உருளைநற் கிழங்கில் தன்னை**
**உடையானுக் கிருக்கும் ஆசைத்**
**திருவுளம் எண்ணி எண்ணிச்**
**செவ்விள நகை செய்கிறாள்" 1**

சங்ககாலம் முதல் இக்காலம் வரையிலும் பெண்களைப் பற்றிச் சிறப்பாகப் பேசப்பட்டு வருகிறது. பெண்கள் பண்பாலும், வாழ்வியல் நெறிமுறைகளாலும் சிறந்தவர்கள். இப்படிப் பட்டப் பெண்களின் மகத்துவத்தைப் பற்றி புராணகால இதிகாசங்களிலும், இராமாயணம், மகாபாரதம், பகவத்கீதை, ஆன்மீகக் கதை, கட்டுரைகளிலும் கூறப்பட்டுள்ளது.

## புராணங்களில் பெண்கள்

பரமசிவன் தனது தேவியாகிய பார்வதியை இடப்பாகத்திலும், கங்கை என்னும் மற்றொரு பெண்ணைத் தலையிலும் வைத்துள்ளார். மேலும் மகாவிஷ்ணு தனது,

மனைவியாகிய லட்சுமிதேவியைத் தனது மார்பிலும், நான்முகனாகிய பிரம்மதேவன் தனது மனைவியை நாவிலும் வைத்துள்ளார் என்பதைப் புராணங்கள் மூலம் அறியலாம். அதுமட்டுமல்லாமல் சிவபெருமான் வலப்புறம் சிவனாகவும், இடப்புறம் சக்தியாகவும் அர்த்தநாரீசுவரராகக் காட்சியளிக்கின்றார். இதற்கு என்ன அர்த்தம் என்றால் சிவன் தன்னில் பாதியாகத் தன் மனைவியை நினைக்கின்றார் என்பதாகும். நமது உடம்பில் இருவரும் இருப்பதால்தான் யாரையாவது ஏன்டா சிவனே என்று உட்கார்ந்து இருக்கின்றாய், என்று கேட்டால் அதற்கு அவன் சக்தி இருந்தால் தானே வேலை செய்ய முடியும் எனக் கூறுவான். ஆகையால் அனைத்து சக்தியையும் கொடுப்பவள் பெண்தான். கைரேகை பார்த்தாலும், மருத்துவர்கள் நாடி பார்த்தாலும் பெண்ணிற்கு இடக் கையிலும், ஆணிற்கு வலக் கையிலும் பார்ப்பார்கள்.

## நவநதி தேவியர்கள்

**"தாவிமுதல் காவிரி நல்யமுனை கங்கை**
**சரசுவதி பொற்றாமரை புட்கரணி தெண்ணீர்**
**கோவியோடு குமரி வரு தீர்த்தம் சூழ்ந்த**
**குடந்தை கீழ் கோட்டத்தெம் கூத்தனாரே" 2**

என்று பாடி அருளுகின்றார். இராமருக்குச் சிவபெருமான் மந்திர உபதேசம் செய்தபோது நவ தீர்த்தங்களும் இங்கு வந்ததாக கூறுகின்றனர். தேவாரத்துள் குடந்தையில் கீழ் கோட்டத்துப் பிரான் பொங்கி வரும் காவிரி, நல்ல யமுனை, கங்கை, சரசுவதி பொற்றாமரை, புட்கரணி, தெள்ளிய நீர் கோதாவரி, ஆகிய நவத்தீர்த்தங்கள் சூழ்ந்திருக்க மையத்தில் வீற்றுள்ளார் என்பதைத் திருநாவுக்கரசர் கூறியுள்ளார். கங்காதேவி, பூமாதேவி, காவிரி, கோதாவரி, யமுனை, நர்மதா, சிந்து, வைகை, தாமிரபரணி இப்படி இந்தியாவில் ஓடும் பெரும்பான்மையான நதிகளுக்கு பெண்ணின் பெயர்களையே வைத்துள்ளார்கள். இந்தியாவைப் பாரதத்தாய் என்று கூறுகிறார்கள். இதன் மூலம் பெண்மைக்குக் கொடுக்கும் முக்கியத்துவத்தினை அறியலாம்.

## இயற்கையின் வடிவம்

இந்த உலகம் இயற்கையின் வடிவம். இந்த வடிவத்தைப் பெண்ணாக உருவகித்துக் கூறினார்கள். பூமிதேவி என்றும், பூதேவி என்றும், பூலோக மாதா என்றும் போற்றினார்கள். பெண் உயிர்களைத் தோற்றுவித்து வாழ்கின்றாள். மண்ணும் அப்படித்தான் மண்ணில் தோன்றி வாழும் உயிர்கள் கோடான கோடி. ஆகையால் மண்ணைப் பெண் என்று கூறியது உருவத்திற்குள் ஓர் உயரிய உருவமாகும். பொறுத்தார் பூமி ஆள்வார் என்ற பழமொழிக்கேற்பவும்,

**"அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை**
**இகழ்வார்ப் பொறுத்தல் தலை" 3**

என்ற குறளுக்கு ஏற்பவும் பெண்கள் அனைத்தையுமே சுமந்து வாழ்ந்து வருகின்றனர். இடப் புறம், வலப் புறம் முக்கியத்துவம் வாய்ந்தவையாகும். அதாவது நமது உடம்பிலேயே இடக்கால் பெண்ணுக்குச் சொந்தம், வலக்கால் ஆணுக்குச் சொந்தம். எனவேதான் நாம்

அமர்கின்ற போது இடக்கால் மீது வலக்காலை போடுகின்றோம். கை கட்டும் போதும், இடக்கை மீது வலக்கையைக் கட்டுகிறோம். நம்மை அறியாமலேயே இயற்கையாகவே நாம் இவ்வாறு செய்கின்றோம். பெண்கள் மூக்குத்தி அணிந்தால் கூட இடபக்க மூக்கில் தான் அணிய வேண்டும். மதுரையில் உள்ள மீனாட்சி அம்மனைப் பார்த்தால் அம்மன் இடபக்க மூக்கில் தான் மூக்குத்தி அணிந்திருக்கிறாள். அதேபோல் திருமணத்தில் தாலி கட்டும் போது பெண்ணை வலப் புறம் வைத்து தான் தாலி கட்டுவார்கள். தாலி கட்டி முடித்ததும் பெண்ணை இடப் புறம் மாற்றி அமர வைப்பார்கள். இதன் காரணம் அர்த்தநாரீசுவரரின் தத்துவமாகும்.

**தாய்மை உணர்வு**

ஒரு பெண் குழந்தையைப் பெற்றெடுக்கும் போது அவள் படும் வலியும், வேதனையும் வார்த்தைகளால் சொல்ல முடியாது. அப்பொழுது பெண் மறுபிறவி எடுக்கிறாள். பத்து மாதங்கள் தன் வயிற்றில் சுமந்து பிரசவமான பின்னரும் இரவெல்லாம் கண் விழித்து, அடிக்கடி பால் கொடுத்து, மருந்து கொடுத்து, தாங்கள் பத்தியம் இருந்து, பிள்ளைகளின் கழிவுகளைச் சகித்துக் கொண்டு, வாயைக் கட்டி, வயிற்றைக் கட்டி, பிள்ளைகள் வளரும் தருணம், தாய்மார்கள் படும் துன்பம் எவ்வளவு என்று விவரிக்க இயலாது.

எந்த ஒரு செயலையும் எடுத்துக் கொண்டாலும் ஆண்களை விட பெண்களுக்கு அதிக சுமை. நம் உடலில் உள்ள எலும்புகளில் கூட ஆண்களை விட பெண்களுக்கு ஒரு எலும்பு அதிகம். தாயின் கருவறையில் கூட பெண் சிசுவே 10 நாட்கள் அதிகமாகத் தங்கி பிறக்கிறாள். ஆகையால் கருவை சுமக்கும் பெண் வலிமையானவள் ஆகவும், உணர்வுகளையும், அன்பையும் ஒவ்வொருவருக்கும் பகிர்ந்து அளிப்பவளாகவும் இருக்கிறாள். இதனால் கடவுளின் சிறந்த படைப்பு பெண் என்றால் மிகையாகாது.

**சுவாசம்**

நாம் சுவாசிக்கும் பொழுது சூரிய கலையாகிய சிவன் பகுதியில் எட்டு அங்குலம் சுவாசமும், சக்தி பகுதியில் 16 அங்குலம் சுவாசமும் ஓடுகின்றன. நம் நாசியில் மூச்சு மாறி மாறி இயங்குவது அனைவரும் அறிந்ததே. சிறிது நேரம் இடப் புறம், சிறிதுநேரம் வலப் புறம் என்று மாறிமாறி, சுவாசம் இயங்குகிறது. இதனை அடிப்படையாகக் கொண்டு திருமூலர், பிறக்கும் குழந்தையின் பாலினம் என்னவாக இருக்கும் என்று கீழ்க்கண்டப் பாடலில் கூறுகிறார்.

> **"குழவியும் ஆணாம் வலத்தது வாகில்**
> **குழவியும் பெண்ணாம் இடத்தது வாகில்**
> **குழவியும் இரண்டாம் அபான னெதிர்க்கில்**
> **குழவி அலியாகுங் கொண்டகால் ஒக்கிலே"** 4

புணர்ச்சியின்போது, ஆணின் மூச்சு வலப்பக்க நாசியாகிய சூரியக்கலையில் இயங்கினால் பிறக்கும் குழந்தை ஆணாகவும், இடப்பக்க நாசியாகிய சந்திரக்கலையில் இயங்கினால் பிறக்கும் குழந்தை பெண்ணாகவும் இருக்கும் என்று அறியமுடிகிறது.

## 96 தத்துவங்கள்

*96 தத்துவங்களில் 36 அகத்தத்துவங்கள் சிவத்தின் கூறுகளாகவும், 60 புறதத்துவங்கள் சக்தியின் கூறுகளாகவும் உள்ளது. இதில் சிவனின் கூறுகளை விட சக்தியின் கூறுகளே அதிகமாகும். அதேபோல் பெண்களில் பத்தினி, சித்தினி, சங்கினி, அத்தினி, என்று நான்கு ஜாதியினர் உள்ளனர். ஆண்களில், மான், பட்சி, அசுவம் என்று மூன்று சாதியினர் உள்ளனர்.*

## நட்சத்திரங்கள்

*திருமணப் பொருத்தம் பார்க்கும்போது, பெண்ணின் நட்சத்திரத்தை முதன்மையாக வைத்து தான் ஆணின் நட்சத்திரத்தைப் பொருத்தம் பார்க்கின்றனர். பொதுவாக அனைத்து செயல்களிலும் அனைத்தையும் தாங்கிக் கொள்ளும் சக்தியும் சகிப்புத் தன்மையும் பெண்களுக்கு அதிகம் இருப்பதால்தான் 'அம்மை அப்பன்' என்று கூறுகின்றனர்.*

**"வன்மை உயர்வு மனித நலமெல்லாம்**
**பெண்மையினால் உண்டென்று பேச வந்த பெண் அழகே**
**நாய் என்று பெண்ணை நவில்வார்க்கும் இப்புவிக்குத்**
**தாய் என்று காட்ட தமிழருக்கு வாய்த்தவளே"** *5*

*ஆண் என்றாலே முரட்டுக்காளை, சிங்கம், சிறுத்தை, புலி என்று பலம் பொருந்திய விலங்குகளோடும், பெண் என்றால் மயில், மைனா, குயில், மான் என்று மென்மையான விலங்கு, பறவைகளோடும் ஒப்பிட்டுப் பார்க்கும் மனிதர்கள் அதிகம். வெளித்தோற்றத்தை வைத்து பார்த்தால் பெண்களை விட ஆண்கள் உயரத்திலும், எடையிலும், பலத்திலும் அதிக சக்தி வாய்ந்தவர்களாகத் தெரிந்தாலும், ஆரோக்கியத்தை வைத்து பார்க்கும் போது ஆண்கள், பெண்களை விட பின்தங்கியவர்களாக இருக்கிறார்கள் என்பதைப் பல மருத்துவ ஆய்வுகளில் முடிவாக இருக்கிறது.*

## நீண்ட ஆயுள்

*மாறிக்கொண்டே வரும் வாழ்வியல் சூழ்நிலையாலும், உணவு, பழக்கவழக்கங் களினாலும், மனிதர்களின் ஆயுட்காலமும் அதிகரித்துக் கொண்டே போகிறது. குறிப்பாக ஆண்களை விட பெண்களின் ஆயுட்காலம் அதிகரித்துக் கொண்டே போகிறது. என்பது உண்மை. உலக அளவில் 65 வயதை கடந்தவர்களில் 100 பெண்களுக்கு 77 ஆண்கள் என்று புள்ளிவிவரம் தெரிவிக்கின்றது. மூன்று பெண்களுக்கு ஒரு ஆண் தான் 85 வயதை கடந்து உயிர் வாழ்கிறார்கள் என்று தெரிகிறது. 100 வயது கடந்தவர்களுள் 4:1 என்று பெண், ஆண் விகிதாச்சாரம் உள்ளது. இந்த புள்ளி விவரங்களில் இருந்து ஆண்களின் சராசரி வாழும் திறன், பெண்களை விட குறைந்து காணப்படுகிறது. இறப்பு வீதம், குறிப்பாகச் சிறுவயதிலேயே இறக்கும் வீதத்திலும், பெண்களை விட ஆண்களே அதிகம். இன்றைக்கு ஆண்களை விட பெண்கள் தான் ஐந்து முதல் பத்து வயது வரை அதிகம் உயிர் வாழ்கின்றனர். உலக அளவில் 85 சதவீத பெண்கள் 100 வயது வரை வாழ்வதாகப் புள்ளிவிபரம் ஒன்று தெரிவிக்கிறது ஆண்கள்தான் அதிகளவில் மாரடைப்பினால் இறக்கின்றனர். பெண்களுக்கு மாரடைப்பு ஏற்படுவது குறைவுதான்.*

## ஹார்மோன் குறைபாடுகள்

மருத்துவ ஆராய்ச்சிகளின்படி பெண்களுக்கு சுரக்கும் ஈஸ்ட்ரோஜன் ஹார்மோன் நல்ல கொலஸ்ட்ரால் அளவை அதிகரிப்பதால், அவர்களுக்கு மாரடைப்பு வருவது தடுக்கப்படுகிறது. மாதவிடாய் நின்ற பிறகும் ஈஸ்ட்ரோஜனை மருந்தாக எடுத்துக் கொள்கிறது.

## பணியில் ஏற்படும் மன அழுத்தம்

பணி சார்ந்த சுமைகளை திறமையுடன் சமாளிப்பது மூலம் மனப்பதற்றம் கோபம், வலிப்பு போன்ற நோய்களிலிருந்து பெண்கள் தப்பிக்கின்றனர். அலுவலகப் பணிச்சுமைகளை பெரும்பாலும் அலுவலகத்தோடு நிறுத்திக் கொள்ளும் மனப்பக்குவம் பெண்களுக்கு உள்ளது. இதனால் மனதளவில் பணியின் காரணமாக ஏற்படும் மன அழுத்தங்கள் பெண்களுக்கு ஏற்படுவதில்லை. பெண்களின் உடல்நலம் குறித்து மகப்பேறு "மருத்துவர் சாதனா உடல், மனம் சார்ந்து பெண் பலவீனமானவளாக இருந்தாலும், இயற்கையான சில அமைப்புகளால் ஆண்களை விட நோயின் தாக்கம் குறைந்தவளாக பெண் இருக்கிறாள். இந்திய சூழ்நிலையில் புகைபிடித்தல், மது அருந்துதல் போன்ற கெட்ட பழக்கங்களுக்கு அதிகம் அடிமையானவர்களாக ஆண்களே இருக்கிறார்கள். இதனால் பலவிதமான நோய்களுக்கும், ஆண்கள் ஆளாகிறார்கள். ஆண்களின் ஆயுட்காலம், பெண்களை விட குறைகிறது. பெண்களின் உடலில் உருவாகும் இயற்கையான சுரப்பிகளாலும், அவர்களுக்கு மாரடைப்பு போன்ற நோய்கள் உண்டாவதில்லை.

## ஆளுமைத்திறன்

பெண்கள் இன்றைக்கு மருத்துவர்களாக, பொறியியல் வல்லுனர்களாக, ஆசிரியர்களாக, விமானம் ஓட்டுபவர்களாக பணிபுரிந்து வருகின்றனர். மிகப்பெரிய நிறுவனங்களில் சி.இ.ஓ பதவியை கூட பெண்கள் தான் நிர்வகிக்கின்றனர். அவர்களின் ஆளுமை திறன் அதிகம். இந்தியாவில் ருக்மணி லட்சுமிபாய், இந்திராகாந்தி, ஜெயலலிதா, சோனியாகாந்தி, மம்தாபானர்ஜி, மாயாவதி போன்ற பெண் தலைவர்களின் ஆளுமை திறன் உலக அளவில் பிரசித்தி பெற்றது.

## பன்முகத் திறமை

இயற்கையாகவே, பெண்கள் பன்முகத்திறன் படைத்தவர்கள். பிரச்சனைகளை எளிதில் கையாளுவார்கள் என்று உளவியல் நிபுணர்கள் நிரூபித்துள்ளனர். அன்னையாகவும், மனைவியாகவும், அதே சமயத்தில் அலுவலகத்தில் அதிகாரிகளாகவும், பணிபுரிந்து தங்களின் திறமையை நிரூபித்துள்ளனர்.

## நிறைவுரை

அன்பைப் பொழியும் அன்னையாகவும், அறிவைப் பொழியும் ஆசிரியையாகவும், அக்கறை செலுத்தும் சகோதரியாகவும், தோழமை காட்டும் தோழியாகவும், மனதோடு

கரைந்து விட்ட மனைவியாகவும், மகிழ்ச்சியை இரைக்கும் மகளாகவும், தாயான பின்பும் நம்மை குழந்தையாகவும், குழந்தையாய் பார்க்கும் பாட்டியாகவும் ஆண்களைச் சுற்றி பல பருவங்களிலும், உருவங்களிலும், நிறைந்திருக்கும் பெண்களைப் பலசாலிகள் என்றும், புத்திசாலிகள் என்றும், மேம்பட்ட திறமைசாலிகள் என்றும் அழைக்கலாம்.

# பெண்களின் வாழ்வியலில் தெங்கு

கா. செல்வகணபதி
முனைவர் பட்ட ஆய்வாளர், நாட்டுப்புறவியல் துறை,
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

உயிரினங்கள் இவ்வுலகில் வாழ்வதற்குப் பல்வேறு உயிருள்ள, உயிரற்ற பொருட்களுடன் பின்னிப் பிணைந்திருக்கின்றன. மனித வாழ்வானது அடிப்படைத் தேவைகளில் தொடங்கிப் பல்வேறு சடங்கு, வழிபாடு, மருத்துவம் எனத் தொடர் சங்கிலிபோல் அன்றாடம் ஒவ்வொரு நகர்விலும் ஒவ்வொரு பொருளுடன் பயன்பாடு இன்றியமையாததாக இருக்கிறது. இதனையே மானிடவியல் அறிஞர் பக்தவத்சல பாரதி அவர்கள், பொருளும் பண்பாடும் நாணயத்தின் இரு பக்கங்கள் போன்றவை. குறுக்குத் தெறித்தாற் போன்று மிகக் குறைந்தபட்ச வரையறையாகச் சொன்னால் பண்பாட்டின் கண்ணாடி புழங்குபொருட்கள் என்கிறார். அவ்வகையில் பெண்களின் வாழ்வியலிலும் பல்வேறுபட்ட நிகழ்வுகள் அரங்கேறுகின்றன. அவ்வப்போது எண்ணிலடங்காப் பொருட்களைச் சார்ந்ததாகவே அமைகின்றன. அவ்வரிசையில் பலதரப்பட்ட தாவரங்களும் அவற்றின்மூலம் கிடைக்கும் பொருட்களும் இன்றியமையாதவை.

ஏனெனில் தாவரங்கள் உலகின் ஒட்டுமொத்த உணவுச் சங்கிலியின்மூலம் அந்தத் தாவர வரிசையில் பிற நாட்டிலிருந்து நமது நாட்டிற்கு வந்ததாக அறிஞர்களால் கருதப்படும் தென்னை மரமானது நமது பண்பாட்டிலும் இரண்டறக் கலந்துள்ளது. அந்த வகையில் தென்னை மரத்தின் பல்வேறு பயன்களையும் பொருளியல் முக்கியத்துவத்தையும் வைத்து இந்தியாவில் விளையும் எந்த உணவுத் தாவரத்திற்கும் இல்லாத வகையில் பெருமைப்படுத்தும்விதமாகக் கற்பக விருட்சம் என்று சிறப்பிக்கின்றனர். அப்படிப்பட்ட தென்னை பெண்களின் வாழ்வியலில் எவ்வாறு முக்கியத்துவம் பெற்றுள்ளது என்பதை இக்கட்டுரை எடுத்துரைக்கிறது.

### சடங்கு நம்பிக்கைகளில் தென்னை

1.ஏழாங்காப்பிடுதல் - இது ஒரு பிறப்புச் சடங்காகும். குழந்தை பிறந்த ஏழாம் நாள் 'ஏழாங்காப்பிடுதல்' என்ற பெயரில் இந்தச் சடங்கு செய்யப்படுகிறது. அதில் பச்சரிசி, வெள்ளம், வறுகடலை ஆகியவற்றோடு முக்கியப் பொருளாகத் தேங்காயைப் பல் போன்று அல்லது துருவலாக்கிக் கலந்து கொடுக்கும் நம்பிக்கைச் சடங்கு கொண்டாடப்படுகிறது.

### பிள்ளைக்குப் பிள்ளை நேர்த்திக்கடன்

திருமணமாகிப் பல காலமாகக் குழந்தை இல்லாதவர்கள், தமக்கு விருப்பமான தெய்வங்களிடம் 'எனக்குப் பிள்ளை வரம் கொடு; நான் உனக்குத் தென்னம் பிள்ளையை நேர்த்திக்கடனாகத் தருகிறேன்' என்று வேண்டும் வழக்கம் தமிழகம் முழுவதும் பரவலாகக் காணப்படுகிறது. இதன் தாக்கமே சபரிமலைக்குச் செல்லும் ஐயப்பப் பக்தர்களும் தென்னம்பிள்ளையை எடுத்துச் செல்வதைக் காணலாம்.

### இளநீர் கண் திறத்தல் சடங்கு (வளைக்காப்புச் சடங்கு)

தமிழகத்தின் கடலூர் மாவட்டம், பண்ருட்டி வட்டாரத்தில் வளைக்காப்புச் சடங்கில் கர்ப்பிணிப் பெண்ணை அலங்கரித்து வளையலிடத் தயார் நிலையில் வைப்பர். பின்னர் அப்பெண் எளிதில் கண் திறப்பதற்கு (துளையிடுவதற்கு) ஏற்றாற்போல் உள்ள இளநீரைக் கதிர் அரிவாள் கொண்டு துளையிடச் செய்வர். இந்நிகழ்வினை 'இளநீர் கண் திறத்தல்' என்று பெயரால் வழங்கி வருகின்றனர். கண் திறந்த இளநீரைக் கர்ப்பிணிப் பெண்ணைக் குனிய வைத்து முதுகில் ஒரு பெரிய வாழை இலையின் நுனிப் பகுதி அவளது முகப்பக்கம் தரையை நோக்கி இருக்குமாறு விரித்து அதில் இளநீரை ஊற்றுவர். ஊற்றிய இளநீர் நேராகத் தரையை நோக்கி விழும்போது கீழே வைத்துள்ள செம்புக் குடத்தில் சிதறாமல் விழுந்தால் ஆண் குழந்தை பிறக்கும் என்றும் சிதறினால் பெண் குழந்தை பிறக்கும் என்றும் அவர்கள் நம்புகிறார்கள்.

இந்த நிகழ்வின்போது கோழியை அடை வைக்கும் தருணத்தில், தான் விருப்பம்போல் பெட்டைக் குஞ்சு பொரிக்க வேண்டும் அல்லது சேவல் குஞ்சு பொரிக்க வேண்டும் என்று கூறிக்கொண்டே முட்டைகளை அடுக்குவதுபோல "ஆண்பிள்ளை, ஆண்பிள்ளை" என்றோ அல்லது "பெண்பிள்ளை, பெண்பிள்ளை" என்றோ குழுமியிருக்கும் பெண்கள் கூச்சலிடுவார்கள்.

### பெண்கள் பாடும் தாலாட்டில் தென்னை

அழும் குழந்தைக்கு அம்மாவோ அல்லது மற்ற உறவினரோ நாவசைத்துப் பாடி, அந்தக் குழந்தையை உறங்க வைப்பர். இதனைத் தாலாட்டு என்பர். தால் என்றால் நாக்கு. நாவை அசைத்துப் பாடும் பாடல் என்று பொருள். வாய்மொழிப் பாடல்களுள் ஒப்பாரியும் தாலாட்டும் உயர்ந்த இடத்தைப் பிடித்துள்ளன என்பதை நாட்டார் வழக்காற்றியல் அறிஞர்கள் கூறுகின்றனர்.

**"பச்ச இழுப்ப வெட்டி**
**பால் வடியும் தொட்டில் கட்டி**
**பாங்குடனே உன்ன வளர்த்தேன்**
**பைங்கிளியே கண்ணுறங்கு!**
**தென்ன இளநீரான் தென மாவோட கலந்து**
**திகட்டாம ஊட்டிடுவேன்**
**தெய்வமே நீ கண்ணுறங்கு!**
**மானே மரகதமே**
**மாந்தோப்புப் பூ ரதமே**
**தேனே திரவியமே**
**தேங்காப் பூ ஒன் நிறமே!**

என்றவாறு பெண்கள் பாடும் பல்வேறு தாலாட்டுப் பாடல்களில் தென்னை உவமையாகக் கையாளப்படுகிறது.

### தேங்காய்க் கும்பம்

கரக விழாக்களில் தேங்காய் தாய்க்குடத்தின் மாற்றாகும். வளமைப் பெருக்கம் அல்லது கர்ப்பத்தானச் சடங்கு (*Fertility Cult*) வழிபாட்டு வடிவம் உரித்த மஞ்சள் பூசிய தேங்காய் சூலுற்ற கருவாக (கும்பம்) மதிக்கப்படுகிறது. கர்ப்பிணிப் பெண்ணின் வயிற்றிலுள்ள பனிக்குடம்போல் இளநீருள்ள தேங்காய் எண்ணப்படு வதால் சில கரக விழாக்களிலும் அம்மன் திருவிழாக்களிலும் இளநீர் முக்கிய வழிபாட்டுப் பொருளாக இடம்பெறுகிறது.

### பூப்புச் சடங்கில் தெங்கு

1. தாய்மாமன் பச்சையோலைக் குடிசை கட்டுதல் : பூப்புச் சடங்கில் முக்கியமான நிகழ்வு தாய்மாமனால் பூப்பெய்திய பெண்ணுக்குத் தாய்மாமனால் பச்சைத் தென்னை ஓலைக் குடிசை கட்டுவதாகும். இந்தச் சடங்கானது வளமையை உணர்த்துவதாகவும் உடல் குளிர்ச்சியை உண்டாக்குவதற்கான சூழலை உருவாக்குவதற்காகவும் செய்யப்படுகிறது.
2. விளக்குமாறு (துடைப்பம்) நம்பிக்கை : பூப்பெய்திய பெண் தூங்கும்போது அவள் அருகில் விளக்குமாறு வைக்கப்படுகிறது. இதனால் தீயசக்திகள் அப்பெண்ணைத் தீண்டாது என்று நம்புகிறார்கள். கிராமப்புறங்களில் இன்றும் இதைக் காணலாம்.

### பூப்புனித நீராட்டுப் பெண்ணாகத் தென்னை

**"பெத்த பிள்ளை கைவிட்டாலும்**
**வைத்த பிள்ளை கைவிடாது"**

என்ற சொலவடைக்குச் சொந்தமான தென்னம்பிள்ளையானது தனது முதல் பாளையை விடும் நிகழ்வினைத் தமிழகத்தின் பல்வேறு பகுதியைச் சார்ந்த மக்கள் தங்கள் வீட்டில் ஒரு பெண் பிள்ளை பூப்பெய்தும்போது நிகழ்த்துவதைப்போல் அந்தப் புதுப்பாளை ஈன்ற தென்னையைச் சுத்தம் செய்து, மஞ்சள் நீரால் குளிப்பாட்டி, புத்தாடை உடுத்தி, தங்க அணிகலன்களால் அலங்கரித்து, பூச்சூடி, மஞ்சள் குங்குமப் பொட்டு வைத்துப் பிறகு

சர்க்கரைப் பொங்கல் வைத்து, வெற்றிலை, பாக்கு, வாழைப்பழம், சூடம், சாம்பிராணி, பத்தி ஆகியவற்றுடன் வைத்துத் தேங்காய் உடைத்து வழிபடுவர். இந்த நம்பிக்கையின்மூலம் தமிழர்கள் தென்னம் 'பிள்ளை' என்று அழைத்துப் பழகிய தாவரத்தைக்கூடத் தன் வீட்டின் சொந்தப் பிள்ளையைப் போல் பார்க்கும் உன்னதமான பண்பாட்டு மாண்பை உணரலாம்.

**திருமணச் சடங்கில் தெங்கு**

திருமணம் என்பது மனிதனால் மனிதச் சமுதாயத்தின் நலன் கருதிப் படைத்துக்கொள்ளப்பட்ட ஒழுங்குமுறை. இது சமுதாயத்தில் உள்ள பல இனக்குழுக்களால் ஒவ்வொரு விதமாக நிகழ்த்தப்படுகிறது. அந்த வகையில் இந்துக்களின் திருமணச் சடங்கில் தென்னையின் பங்கு அளப்பரியது. அவை :

- திருமண நிகழ்வில் முக்கியமான ஒன்று பந்தல் இடுதல். அது தென்னங்கீற்றால் இடப்படுகிறது.
- பந்தலில் அலங்கரிக்க எத்தனை நெகிழிகள் வந்தாலும் குருத்தோலைக்கு நிகர் எதுவும் இல்லை. எனவே தென்னங் குருத்தோலையினைத் தோரணமாகப் பயன்படுத்துகின்றனர்.
- இந்துக்களின் தாலி கட்டும் நிகழ்வில் மஞ்சள் பூசிய தேங்காயின்மீது தாலியை வைத்து வழிபட்ட பிறகு அத்தாலியானது மணப்பெண் கழுத்தில் கட்டப்படுகிறது.
- திருமண நிகழ்வு நடந்து முடிந்த பிறகு வாழ்த்த வந்தவர்களுக்குக் கொடுக்கப்படும் தாம்பூலத்தில் முக்கியப் பொருளாகத் தேங்காய் உள்ளது. சில இடங்களில் தென்னம்பிள்ளையும் தாம்பூலமாக வழங்கப்படுகிறது.
- தமிழகத்தின் சில பகுதிகளில் குறிப்பிட்ட இனக்குழு மக்கள் திருமணத்தின்போது அப்பகுதியில் கிடைக்கும் மிகப் பழமையான, ஓர் இணை நெத்துத் (நெற்றுத்) தேங்காய்களை மாப்பிள்ளை வீட்டார், பெண் வீட்டாருக்குக் கொடுக்கும் சீர்வரிசைகளுடன் சேர்த்துக் கொடுப்பார்களாம். இதற்கு அவர்கள் கூறும் காணரம், தென்னை நீண்ட ஆயுளுக்கு அடையாளம். எனவே ஓர் இணைப் நெற்றுத் தேங்காய்களைக் கொடுப்பதால் மணமக்கள் தெங்குபோல் நீண்ட ஆயுளோடு வாழ்வார்கள் என்று நம்புகின்றனர். சீனாவில் குறிப்பாகக் கேண்டன் மாகாணத்தில் இவ்வழக்கம் இன்றும் உள்ளது.

**இறப்புச் சடங்கில் தெங்கு**

1. 1.குழந்தைப்பேறு, நெற்றுத் தேங்காய் நம்பிக்கை : தஞ்சைப் பகுதியின் திருவையாறு வட்டாரத்தைச் சுற்றியுள்ள சில பகுதிகளில் குறிப்பிட்ட இனக்குழு மக்கள் தங்கள் வீட்டில் மகப்பேரு இல்லாமல் இருக்கும் பெண்களைத் தங்களுடைய உறவினர்களில் யாரேனும் வயதில் முதிர்ந்தோர் இறப்பில் பங்கேற்று, இறந்த முதியவர்களின் கையிலிருந்து ஒரு நெத்துத் (நெற்றுத்) தேங்காயை வாங்கச் செய்வர். பிறகு இறந்தவரைக் குளிப்பாட்டிய இடத்திலிருந்து எடுக்கப்படும் ஈரமான மண்ணும் சேர்த்து அத்தேங்காயினைத் தன் வீட்டருகில் பதியமிடுவர். அத்தேங்காய் பிள்ளையாக வளரும்போது அந்தப் பெண்ணின் வயிற்றிலும் குழந்தை (பிள்ளை) வளரும் என்று நம்புகின்றனர். ஒத்தது

ஒத்ததைச் செய்யும் என்ற நம்பிக்கையிலேயே தாவர வளர்ச்சியோடு மனித வளர்ச்சி ஒப்பிடப்பட்டுத் தொடரும் மரபாக உள்ளது.

2. வழிகூட்டு விடுதல் : ஒருவர் இறந்தவுடனே அவரைக் குளியாட்டி அரிசி, ஊதுபத்தி, சூடம், வெற்றிலை, பாக்கு, வாழைப்பழம் போன்றவற்றுடன் தேங்காயை உடைத்து அவர் தலைமாட்டில் வைத்து வழிபடுவார்கள். அப்போது உடைக்கப்படும் தேங்காயை மகப்பேரு இல்லாமல் இருக்கும் பெண்கள் உட்கொண்டால் மகப்பேரு உண்டாகும் என்ற நம்பிக்கை தஞ்சை வட்டாரப் பகுதியிலும் பிற வட்டாரப் பகுதிகளிலும் உள்ளது.

## உணவிலும் மருத்துவத்திலும் தெங்கு

நாகரிக வளர்ச்சி என்ற பெயரில் இன்று மனிதகுலத்திற்குப் பல்வேறு பக்க விளைவுகளை ஏற்படுத்தும் மாற்றங்கள் நிகழ்ந்துகொண்டு இருக்கின்றன. அவற்றுள் முதன்மையானது உணவு. நம் முன்னோர்கள் 'உணவே மருந்து' என்ற கோட்பாட்டின் அடிப்படையில்தான் அன்றாடம் பயன்படுத்தி வந்த உணவினை வைத்திருந்தனர். அந்த மருத்துவக் குணம் கொண்ட உணவுமுறைகளில் பல்வேறு இயற்கைத் தாவர உணவுகளும் அடங்கும். அவற்றுள் தென்னை மரத்திலிருந்து கிடைக்கும் பொருட்கள் சார்ந்த உணவும் மருந்தும் அளப்பரியது. தென்னை மரத்தை அறியாதவர்கள் எவரும் இல்லை. தேங்காய்ப் பயன்பாடு இல்லாத வீடுகள் இல்லை. தென்னை மரத்தின் குருத்து, பூ, இளநீர், காய், வேர், அதிலிருந்து பெறப்படும் எண்ணெய் ஆகியவை மருத்துவப் பயனுடையவையாக உள்ளன. குறிப்பாகப் பெண்களின் வாழ்வியல் பயன்பாட்டில் முக்கிய இடத்தைப் பிடித்துள்ளது தென்னை.

மாதவிடாய்க் கோளாறு நீங்க : தென்னம்பாளையில் இருக்கும் வெண்மையான தென்னம்பூவை உருவி உரலில் நன்றாக இடித்து (துவைத்து) நூறு மில்லி அளவுக்கு எடுத்து அதே அளவு பசும்பாலில் கலந்து வெறும் வயிற்றில் தொடர்ந்து மூன்று நாட்கள் குடித்து வந்தால் பெண்களுக்கு உண்டாகும் மாதவிடாய்க் கோளாறு, பெரும்பாடு ஆகியன நிரந்தரமாகக் குணமடைகின்றன.

## கர்ப்பிணிப் பெண்களின் வயிற்றுவலி குணமாக

முற்றிய தேங்காயைத் துருவிப் பால் எடுத்து அதில் சம அளவு கரும்புச்சாறு சேர்த்துப் பருகிய உடனே வயிற்றுவலி நீங்கும். தேய்காய், இளநீர், தென்னம்பூ போன்ற தென்னை மரத்தின் மூலங்களால் தயாரிக்கப்படும் 'நாரிகேளாஞ்சனம்' என்ற மையைப் பெண்கள் கண் மையாகப் பூசலாம். இதனால் கண்வலி, கண்புரை, கண்தொற்று, கண் நோய்கள் பார்வைத் திறன் குறைதல் போன்றவை ஏற்படா. இதனை மாதவிலக்குச் சமயங்களிலும் கருவுற்றபோதும் எண்ணெய்க் குளியல் எடுத்த அன்றும் பயன்படுத்தாமல் இருப்பது உடல் நலத்திற்கு நல்லது.

## தேங்காய் அழகுப் பலன்கள்

தாவர எண்ணெய் வகைகளுள் தேங்காய் எண்ணெயில்தான் கிளிசரின் அளவு (13.5) அதிகம். கொப்பரையிலிருந்து எடுக்கும் எண்ணெயைவிடத் தேங்காய்ப் பாலிலிருந்து எடுக்கும் எண்ணெய் சருமத்திற்கு மிகவும் நல்லது. தேங்காய்த் துருவலை அடுப்பில் வைத்து வதக்கினால் எண்ணெய்போல மிதக்கும். அதனை அப்படியே எடுத்து மெல்லிய வெள்ளைத் துணியில் வைத்து அம்மைத் தழும்புகள் இருக்கும் இடத்தில் தொடர்ந்து ஒற்றி எடுக்க, அத்தழும்புகளும் கரும்புள்ளிகளும் மறையும்.

தேங்காய்ப் பாலிலிருந்து எடுக்கப்படும் எண்ணெய் கரும்புள்ளிகள், அம்மைத் தழும்புகள், தீப்புண், வெட்டுக்காயங்கள், பூஞ்சைத் தொற்றால் வரும் படர்தாமரை என அனைத்திற்கும் சிறந்த மருந்தாகும். இவை தவிர இன்னும் பலதரப்பட்ட தென்னை சார்ந்த உணவு மருத்துவம் பெண்களின் வாழ்வில் இரண்டறக் கலந்துள்ளன.

## பெண்களின் வேலைவாய்ப்பில் தெங்கு

பெண்களின் வாழ்வியலில் பொருளாதாரம் மிகவும் இன்றியமையாத ஒன்றாக உள்ளது. பலதரப்பட்ட வேலை வாய்ப்பினை அடிப்படையாகக் கொண்டு ஒவ்வொருவரின் பொருளாதாரம் அமைகிறது. இன்றைய காலக்கட்டத்தில் அனைத்துத் துறைகளிலும் பெண்கள் ஆண்களுக்கு நிகராக அல்லது ஆண்களைவிட உயர்ந்த நிலையிலான பணிகளில் இருந்து வருகின்றனர். தென்னைமரம் சார்ந்த முதன்மைத் தொழில்கள், இரண்டாம் நிலைத் தொழில்கள் எனப் பல்வேறு தொழில்கள் நம் நாட்டில் செயல்பட்டு வருகின்றன. அவை நாட்டின் பொருளாதாரத்திலும் பெரும் பங்கு வகிக்கின்றன. அத்தகைய தென்னை சார்ந்த தொழில்கள் பெண்களில் வேலைவாய்ப்பில் முக்கிய இடத்தைப் பிடிக்கின்றது. அவையாவன : தென்னந்தோப்புப் பராமரிப்பு, பாளைத்தொழில், கீற்று முடைதல், தென்னை நார்ப்பிரித்தல், கயிறாக்குதல், பஞ்சு உலர்த்துதல், தரை விரிப்பான் தயாரித்தல், கொப்பரை சார்ந்த பணி, சமையல் சார்ந்த பணி, உரிமட்டை ஏற்றுமதி செய்தல், சிரட்டை சார்ந்த பணிகள், தோப்புகள் சார்ந்த உரமிடுதல், களை எடுத்தல் போன்ற பல வேலை வாய்ப்புகள் தென்னையால் பெண்களுக்குக் கிடைக்கின்றன. ஏன் ஆண்களால் செய்யப்படும் வேலைகள் என்று கருதப்படுகின்ற தென்னை மரம் ஏறுதல், தேங்காய் உரித்தல் போன்றவற்றினைக்கூடப் பெண்கள் மிக எளிமையாகச் செய்யத் தொடங்கிவிட்டனர். இவை தரவிரத் தேங்காய் எண்ணெயைப் பயன்படத்திச் செய்யப்படும் பல்வேறு அழகு சாதனப் பொருட்கள் தயாரிப்பிலும் தேங்காய்ச் சிரட்டையினால் செய்யப்படும் பல்வேறு கைவினைப் பொருட்கள் தயாரிப்பிலும் பெண்கள் மிக நுட்பமாகப் பங்கேற்று வருமானம் ஈட்டி வருகின்றனர். தென்னை சார்ந்த பல்வேறு மதிப்புக் கூட்டுப் பொருட்கள் தயாரிப்பிலும் பெண்களின் பங்கு அளப்பரியது.

**முடிவுரை**

மனித வாழ்வில் பின்னிப் பிணைந்த பொருள்சார் பண்பாடானது தொடர்ந்து நிகழக்கூடியது. அவ்வரிசையில் இடம்பெறும் தாவர வழக்காறுகளும் அதன் பயன்பாடுகளும் போற்றுதலுக்கு உரியவை. தன் உடலில் அடிமுதல் நுனிவரை அனைத்துப் பாகங்களையும் மனிதகுலத்திற்குத் தந்து உதவும் கர்ப்பக விருட்சமாகப் போற்றப்படும் தெங்கின் (தென்னை மரத்தின்) பங்கு பெண்களின் வாழ்வியலில் மிக இன்றியமையாதது என்பது புலனாகிறது.

# இலக்கியத்தில் மகளிரின் பொருளாதாரத் தொழில்கள்

கா.முத்து மீனாள்,
முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ் உயராய்வு மையம்
பாத்திமா கல்லூரி மதுரை.

சங்ககாலத்தில் மக்கள் கூட்டம் கூட்டமாக வெவ்வேறு இடங்களில் தங்கி வாழ்ந்து வந்தனர். இவர்களிடம் சாதிப் பிரிவினைகள், குலப்பாகுபாடு போன்றவைக் காணப்படவில்லை. இவர்கள் தங்களுக்காக உணவைத் தேடுவதை முக்கிய பணியாகக் கொண்டிருந்தனர். நிலவுடைமைச் சமுதாயம் தோன்றிய பின்னர் ஏற்பட்ட உழைப்புக் கருவிகளின் வளர்ச்சியால் தொழில்கள் உருவாகத் தொடங்கின. தொழில்கள் அடிப்படையில் தான் சாதிகள் உருவாகத் தொடங்கின. தொழில்கள் நிலத்திற்கு நிலம் வேறுபட்டுக் காணப்பட்டது. அவ்வாறு உருவாகிய பல்வேறு தொழில்களில் மகளிரின் பங்களிப்பு எத்தகையது என்பதைப் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

### மகளிர் தொழில்கள்

தினைப்புனம் காத்தல், ஆநிரை மேய்த்தல், நெசவுத் தொழில், துணி வெளுக்கும் தொழில், மீன் விற்றல், உப்பு விற்றல், வள்ளைப்பாட்டுப் பாடுதல் போன்ற தொழில்களைச் சங்ககால பெண்கள் செய்துள்ளனர்.

### தினைப்புனம் காத்தல்

மலையும் மலைசார்ந்த இடமுமாகிய குறிஞ்சி நிலத்தின் முக்கிய விளைபொருள் தினையாகும். தினைக்கதிர்கள் முற்றி அறுவடைக்குரிய பருவத்தில் கதிர்களைப் பறவைகள் உண்ணவரும். அங்ஙனம் பறவைகளால் கதிர்களுக்குத் தீங்கு ஏற்படாதவாறு குறிஞ்சி நிலத்து இளமகளிர் தினைப்புனத்தைக் காவல் செய்தனர்.

தினைப்புனங்களில் கதிர்களைப் பறவைகள் கவர்ந்து உண்ணா வண்ணம் காவல் காக்க குறிஞ்சி நிலத்து இளமகளிரை அவர்தம் பெற்றோரே அனுப்பிவைப்பர்.

**. . . . . . வரையகச் சிறுதினைச்**
**செவ்வாய்ப் பாசினங் கடீஇயர்கொடிச்சி**
**அவ்வாய்த் தட்டையொ டவணை யாகென**
**ஏயள்மன் யாயும் நுந்தை வாழியர்**
**அம்மா மேனி நிரைதொடிக் குறுமகள்**
**சொல்லாயோ . . . . . .** **(நற்.134:3-8)**

**தந்தை வித்திய மென்றினை பைபயச்**
**சிறுகிளி கடிதல் பிறக்கியா வணதோ**
**குளிர்படு கையள் கொடிச்சி செல்கென** **(நற்.306:1-3)**

தலைவி தினைப்புனத்தைக் காக்க கிளிகடி என்னும் தட்டையைக் கொண்டு பறவைகளை விரட்டிய செய்தியை இவ்வரிகளால் அறியமுடிகிறது.

**துய்த்தலைப் புனிற்றுக்குரல் பால்வார் பிறைஞ்சித்**
**தோடலைக் கொண்டன ஏனல் என்று**
**துறுகல் மீமிசைக் குறுவன குழீஇச்**
**செவ்வாய்ப் பாசினங் கவருமின்று அவ்வாய்த்**
**தட்டையும் புடைத்தனை கவணையும் தொடுக்கென**
**எந்தைவந் துரைத்தனன்** **(நற்.206:1-6)**

தினைப்புனங்களில் கதிர்களை உண்ணவரும் கிளிகளை மட்டுமின்றிப் பிற பறவைகளையும் விரட்டியதற்கான குறிப்புகள் காணப்படுவதை இவ்வரிகள் எடுத்துரைக்கின்றன.

## ஆநிரை மேய்த்தல்

வேளாண்மைத் தொழிலின் துணைத்தொழிலாகக் கால்நடை வளர்ப்புத் தொழில் அமைகிறது. பண்டையத் தமிழர் கால்நடைகளின் பயனை நன்கு உணர்ந்திருந்தனர். சமுதாயப் பொருளாதார வலிமையைத் தீர்மானிக்கும் காரணிகளுள் ஒன்றாகக் கால்நடைகளின் எண்ணிக்கை அமைந்தது. கால்நடைவளர்ப்பு ஆண்களிடம் ஒப்படைக்கப்பட்டு இருந்தாலும் பால்கறத்தல் முதல் பால் சம்பந்தமான அனைத்துப் பொருள்களைப் பண்டமாற்றுதல் வரை பிற செயல்பாடுகள் அனைத்தும் பெண்களிடம் காணப்படுகின்றன. கால்நடைகளை மூலதானமாகக் கொண்டு குடும்பத்தையும் சமூகத்தையும் பெண்கள் மேம்படுத்தினர்.

பசுக்கூட்டங்களை அகன்ற முல்லை நிலத்தில் மேயவிட்டு, ஆயர்கள் சிறிய குன்றுகளில் மணமுடைய பூக்களை மாலையாய்க் கட்டி மகிழ்ந்தனர் என்பதை,

**படுமணி மிடற்ற பயநிரை ஆயம்**
**கொடுமடி உடையர்கோற் கைக் கோவலர் (அகம்.54:9-10)**

என்ற வரிகளால் அறியலாம்.

நாணய உருவாக்கத்திற்கு முன்பு பண்டமாற்று முறை நிலவியிருக்கிறது. அதாவது சங்ககால மக்களின் அன்றாடத் தேவையான அரிசி, பருப்பு, உப்பு, பால், தயிர், மீன்,

இறைச்சி முதலிய பொருள்களைக் காசு கொடுத்து வாங்காமல் பண்டமாற்று மூலம் நிறைவேற்றிக் கொண்டுள்ளனர். இவ்வாறாகப் பண்டமாற்று செய்வதில் சங்ககால மகளிர் ஈடுபட்டுள்ளதை இலக்கியங்கள் காட்டுகின்றன.

ஆய்மகள் மோர்விற்று அதற்கு ஈடாகப் பிறபொருள்களைப் பெற்றுத் தன் சுற்றத்தாரை உண்பித்தாள் என்பதை,

**. . . . . ஆய்மகள்**
**அளைவிலை உணவில் கிளையுடன் அருத்தி (பெரும்.65-66)**

என்ற வரிகள் மூலம் அறியமுடிகிறது. அவள் தான் விற்கும் நெய்க்கு ஈடாகப் பொன் பெறாமல், நன்குபால் கொடுக்கும் பசுக்களையும் எருமைகளையும் வாங்கித் தனது பால் பண்ணையைப் பெருக்கிக் கொண்டாள். இதன் மூலம் பெண்களின் புத்திசாலித்தனம் புலப்படுகிறது. இதனை,

**நெய்விலைக் கட்டிப் பசும்பொன் கொள்ளாள்**
**எருமை நல்லான் கருநாகு பெறூஉம்** (பெரும்.169-170)

இவ்வரிகளிலிருந்து முல்லைநில மக்களிடையே மகளிர்தம் சுற்றத்தினரைக் காக்கும் கடமையிலும், பொருளாதாரத்தை அதிகரிக்கும் பொருள்களைப் பெருக்குவதிலும் திறமையுடன் பாடுபட்டனர் என்பதை அறியமுடிகிறது.

## பருத்திப் பெண்டிர்

சங்ககாலத் தமிழர்கள் பருத்தி நூல் நெசவில் தலைசிறந்து விளங்கினர். நெசவுத் தொழிலுக்கு அடிப்படையான பருத்தி தமிழகத்தில் மிகுதியாகக் கிடைத்தது. ஆடவர் நெசவினை மிகநேர்த்தியாகச் செய்யப் பெரிதும் உதவியவர்கள் பெண்களே ஆவர். ஆடை நெய்யப் பயன்பட்ட பருத்தியை வில்லாலடித்து அதிலுள்ள கொட்டையும், கோதும் (சக்கை) நீக்கித் தூய்மைசெய்வர். இக்கருத்துக்களை,

**எஃகுறு பஞ்சிற்றாகி (நற்.247:4)**
**வில்லெறிபஞ்சி (நற்.299:7)**
**சிறையும் செற்றையும் புடையுநளெழுந்த**
**பருத்திப் பெண்டின் சிறுதீவிளக்கத்து** (புறம்.326:4-5)

இப்பாடலின் மூலம் மகளிர் இரவு நேரத்திலும் இத்தொழிலில் ஈடுபட்டது தெரியவருகிறது.

இத்தொழிலைச் செய்த பெண்டிர் 'பருத்திப் பெண்டிர்' எனப்பட்டனர். இங்ஙனம் நூல் நூற்பது பெண்களுக்குரிய தொழிலாய் அமையினும் கைம்பெண்களே பெரிதும் இத்தொழிலைச் செய்தனர் என்பதை,

**ஆளில் பெண்டிர் தாளில் செய்த**
**நுணங்கு நுண்பனுவல்** (நற்.351:1-2)

|ஆளில் பெண்டிர்| என்ற தொடர் பொருள்தேடிவந்து பாதுகாக்கும் கணவனை இழந்த கைம்மை மகளிரைக் குறிக்கும். இவர்கள் தொழில் செய்து உண்ணுமாறு முயன்று நுண்ணிய பஞ்சினை நூற்றனர் என்ற செய்தியை அறியமுடிகின்றது.

## புலைத்தி

பண்டைக் காலத்தில் மக்கள் தூய்மையான ஆடை உடுத்தினர். இதற்குப் பெருந்துணையாய் இருந்தவர் ஆடை வெளுக்கும் தொழிலில் ஈடுபட்ட பெண்களே ஆவார். இப்பெண்டிர் 'புலைத்தி' (புறம்.311) 'புலைத்தியர்' என்ற சொல்லால் அழைக்கப்பட்டனர் என்பதைச் சங்க இலக்கியச் சான்றுகளிலிருந்து அறியலாம். இப்பெண்கள் நாள்தோறும் களர்நிலத்தில் அமைந்த கிணற்றைத் தோண்டி, அங்குக் கிடைக்கும் நீரால் ஆடைகளை வெளுப்பர். களர்நிலத்தில் ஊறும் உவர்நீர் ஆடையில் பற்றிய மாசுக்களைப் போக்கும். தன்மையுடையாதலின் புலைத்தி களர்படு நிலத்தைத் தோண்டி அங்கு கிடைக்கும் நீரால் ஆடைவெளுக்கும் தொழிலில் ஈடுபட்டனர்.

**களர்படு கூவற் றோண்டி நாளும்**
**புலைத்தி கழீஇய தூவெள் ளறுவை** (புறம்.311)

மேலும், இப்புலைத்தியர் தம் தொழிலை அதிக கவனத்தோடு செய்தனர். ஆடைகளை நன்றாக ஆராய்ந்து பார்த்து அழுக்கு நீங்க நன்றாக வெளுத்தனர். இப்படிச் செய்வதில் சோர்வு கொள்ளாமல் தொடர்ந்து வேலை செய்தனர். இவ்வாறு துவைத்த துணிகளுக்குச் சோற்றுக் கஞ்சியிட்டு உலர்த்தினர்.

**உடைஓர் பான்மையிற் பெருங்கை தூவா**
**வறனில் புலத்தி எல்லித் தோய்ந்த**
**புகாப்புகர் கொண்ட புன்பூங் கலிங்கம்** (நற்.90:2-4)

**பசைவிரல் புலைத்தி நெடிதுபிசைந் தூட்டிய**
**பூந்துகில்** (அகம்.387:6-7)

**பசைகொன் மென்விரல் பெருந்தோட் புலைத்தி** (அகம்.34:11)

இவ்வரிகள் மூலம் புலைத்தியரின் தொழில் செய்யும் திறமை வெளிப்படுவதை உணரமுடிகிறது.

## மீன் விற்றல்

கடலும் கடல் சார்ந்த நிலப்பகுதி நெய்தல் நிலம் எனப்பட்டது. இப்பகுதியில் வாழ்ந்த மக்கள் கடலில் கலம் செலுத்தி மீன் பிடித்தலைத் தம் தொழிலாகக் கொண்டனர். கடலில் உள்ள மீன்களை எல்லாம் பிடித்து விட்டனரோ என்று எண்ணக்கூடிய அளவிற்கு ஏராளமான மீன்களைப் பிடித்துத் தங்கள் பாக்கத்தே குவித்து விடுவர். இவ்வாறு பரதவர் பிடித்துவரும் மீன்களைப் பரதவகுலப் பெண்டிர் ஊருக்குள் எடுத்துச் சென்று விற்றுவிட்டு அதற்கு ஈடாகத் தமக்குத் தேவையான பிறபொருளைப் பெற்றுவருவர். இக்கருத்தினை,

**ஓங்குதிரைப் பரப்பின் வாங்குவிசைக் கொளீ,**
**திமிலோன் தந்த கடுங்கண் வயமீன்**
**தழையணி அல்குல் செல்வத் தங்கையர்**
**விழவுஅயர் மறுகின் விலையெனப் பகரும்** (அகம்.320:1-4)

அதாவது தமையன்மார் கடலில் சென்று பிடித்துவந்த சுறாமீன்களை தங்கையர் வீதிகளில் சென்று விலைகூறி விற்றுவருவார் என்ற செய்தியை இவ்வரிகளில் காணமுடிகிறது.

மீன்பிடிக்கும் தொழிலில் ஈடுபட்ட பாணர்குடியில் பிறந்த பாண்மகள் ஆடவரால் பிடிக்கப்பட்ட மீனை எடுத்துச்சென்று விற்றுவருவாள். அவ்வாறு விற்றுவரும் போது மீனுக்குப் பதில் முத்துக்களையும் அணிகலன்களையும் பெற்றுவருகிறாள்.

**காலைத் தந்த கணைக்கோட்டு வாளைக்**
**கவ்வாங்கு உந்தி அஞ்சொல் பாண்மகள்**
**நெடுங்கொடி நுடங்கு நறவுமலி மறுகில்**
**பழஞ்செந் நெல்லின் முகவை கொள்ளாள்**
**கழங்குறள் முத்தமொடு நன்கலம் பெறூஉம்** *(அகம்.126:7-12)*

இவ்வரிகள் மூலம் பாண்மகள் மீன்விற்று வருவதோடு மட்டுமில்லாமல் பண்டமாற்று முறையும் செய்கிறாள் என்பது தெரிய வருகிறது.

## உப்பு விற்றல்

நெய்தல் நில மகளிரின் மற்றொரு தொழில் உப்பு விற்றல். உப்பு வணிகர் 'உமணர்' என்ற சொல்லால் குறிப்பிடப்பட்டுள்ளனர். உவர்நிலத்தில் விளையும் உப்பினை வண்டிகளில் ஏற்றிச்சென்று மற்ற இடங்களில் வாழும் மக்களுக்கு விற்பர். உமணர்கள் உப்புவிற்கச் செல்லும் போதுதம் குடும்பத்தோடு செல்வர். உப்பு வணிகரின் இளம் பெண்கள் ஊருக்குள் சென்று உப்பினைக் கூவிவிற்பர். இதனை,

**உமணர் காதல் மடமகள்**
**சில்கோல் எல்வளை தெளிர்ப்ப வீசி**
**நெல்லின் நேரே வெண்கல் உப்புஎனச்**
**சேரி விலைமாறு கூறலின்** *(அகம்.140:5-8)*

**நெல்லும் உப்பும் நேரே ஊரிர்**
**கொள்ளீரோ வெனச் சேரிதோறும் நுவலும்** *(அகம்.390:8-9)*

கையில் உள்ள வளையல் கலகல என்று ஒலிக்குமாறு நடந்தாள். கல்லுப்பினைத் தருவேன் அதற்கு ஈடாக நெல்லினைக் கொடுங்கள் என்று மென்குரலில் விலைகூறி உப்பினை விற்று வந்திருக்கிறாள்.

மேலும், நெல்லுக்கு நிகராக உப்பு இருந்திருப்பதும், உமணப்பெண் உப்பினைக் கொடுத்துவிட்டு அதற்கு ஈடாக மற்றொரு பொருளைப் பண்டமாற்று செய்துள்ளது தெரியவருகிறது.

## எயிற்றியர்

பாலை நிலத்தில் வாழ்ந்த மகளிர் எயிற்றியர் எனப்பட்டனர். இந்நிலத்தில் வாழும் மக்கள் பாலைநிலத்தைக் குத்திக் கிளறி அங்குக் கிடைக்கும் புல்லரிசையை எடுத்துவந்து

*தம் வீட்டின் முன்பு மரநிழலின் கிடக்கும் உரலில் அப்புல்லரிசியைப் போட்டு சிறிய உலக்கையால் குற்றிஎடுப்பர்.*

**ஈத்திலை வேய்ந்த . . . .**
**. . . . . . . . . .**
**இரும்புதலை யாத்த திருந்துகணை விழுக்கோல்**
**உளிவாய்ச் சுரையின் மிளிர மிண்டி**
**இருநிலக் கரம்பைப் படுநீராடி**
**நுண்புல் அடக்கிய வெண்பல் எயிற்றியர்**
**பார்வை யாத்த பறைதாள் விளவின்**
**நீழல் முன்றில் நிலவுரற் பெய்து**
**குறுங்காழ் உலக்கை ஒச்சி** *(பெரும்.88-97)*

*இதன் மூலம் பாலைநிலத்தில் வாழும் பெண்களும் தங்களுடைய உணவுத் தேவைக்காகவும், பொருளாதாரத்தினைப் பெருக்கிக் கொள்ளவும் ஏதேனும் ஒரு தொழிலில் ஈடுபட்டுவந்துள்ளது தெரிகிறது. இப்பாடலில் மகளிர் உரலில் நெல் இடிக்கும்போது அதனால் உண்டாகும் களைப்பு (அயர்வு) இல்லாமலிருக்க பாடுதல் இயல்பு. இவ்வாறு பாடும் பாட்டு 'வள்ளைப்பாட்டு' என்பதாகும். பாலைநிலத்தில் வாழும் பெண்கள் பாட்டினைப் பாடிக் கொண்டே வேலைசெய்வதை அறியலாம்.*

**முடிவுரை**

*சங்க இலக்கியக் குறிப்புகளின்வழி, பழந்தமிழக மகளிர் அடிப்படைத் தேவைகளின் நிறைவிற்கும் பொருளாதார மேம்பாட்டிற்கும் முக்கிய பங்காற்றியுள்ளனர். இவ்வகைச் செயல்பாடுகளைத் தனியாக மட்டுமின்றி தம் இல்லத் தலைவனோடு இணைந்தும் செய்துள்ளனர். தம்முடைய குடும்பத்தேவைகளை நிறைவுசெய்வது மட்டுமின்றித் தம் சுற்றத்தாரையும் பேணிக் காத்துள்ளனர் என்பதை இதன் வழியாக அறியமுடிகிறது.*

# 'கவர்னர் பெத்தா' என்னும் சிறுகதை சித்தரிக்கும் சமூகத்தில் பெண்கள் நிலை

கி. ஷீபா
முனைவர்பட்ட ஆய்வாளர்,
தமிழ் ஆய்வு மையம், தெ.தி. இந்துக்கல்லூரி,
நாகர்கோவில்.

பெண்ணியம், பெண்ணுரிமைப் போராட்டம், பெண் விடுதலை இயக்கம் போன்ற சொற்றொடர்கள் இக்காலக்கட்டத்தில் பரவலாக வழங்கி வருகின்றன. இது குறித்துப் பல தரப்பட்ட மக்களும் பல்வேறு கருத்துக்களைக் கொண்டிருக்கின்றனர். பெரும்பாலானப் பெண்கள், காலங்காலமாகப் பழகிப்போன, ஆணாதிக்க விதிமுறைகளுக்குக் கட்டுப்பட்டு தங்கள் வாழ்வில் அனுபவிக்கும் துன்பங்களையும், கொடுமைகளையும் மௌனமாகச் சகித்துக் கொண்டிருக்கின்றனர். அவை அனைத்தும் வெளிஉலகிற்கு வெளிச்சமாவதில்லை. இக்கருத்துக்களை வெளிப்படுத்தும் விதமாக ஆசிரியர் மீரான் மைதீன் தன் படைப்பினை உருவாக்கியுள்ளார்.

பொதுவாகச் சமூகத்தில் சில ஆண்டுகளுக்கு முன் வரை தனித்துச் செயல்பட்ட பெண்கள் மிகவும் குறைவு. பெரும்பாலும் இல்லை என்றே கூறலாம். தன் கணவனைச் சார்ந்தும் திருமணத்திற்கு முன்பு தந்தையைச் சார்ந்தும் இருப்பது பெண்ணின் கடமையாக விதிக்கப்பட்டிருந்தது. கல்வியறிவு மறுக்கப்பட்டிருந்தது. உலகத்தொடர்பு எதுவும் அறியாமலே தொலைவாகவே இருந்தது. குழந்தைத் திருமணம் வழியாக அவள் சந்திக்கும் ஆண் மகனே, ஆதி முதல் அந்தம் வரை அவளுக்கு எல்லாமாக இருந்தான். ஆண்கள் என்ற ஒரு மதிலின் பின்னால் இருந்தே உலகத்தைக் கண்டாள். கணவன் எடுக்கும் முடிவுகளையே தன் முடிவாகக் கொண்டாள். ஆனால் காலம் செல்லச்செல்ல பெண்கள் அவ்வாறு வாழ விரும்பவில்லை. ஒவ்வொரு ஆண்மகனுக்குப் பின்னால் செயல்பட்டு வந்த பெண் அவனுக்குச் சமமாக வந்திருக்கிறாள். தனிப்பட்ட முறையில் தனக்கான வெற்றிகளை ஈட்டிக் கொண்டு இருக்கிறாள். இவ்வாறு சமுதாயத்தில் உள்ள பெண்களின் பல்வேறு நிலையை ஆராயும் பொருட்டு இக்கட்டுரை அமைகிறது.

## இலக்கிய வட்டத்தில் பெண்கள்

தமிழில் வெளிவரும் இலக்கியங்களில் காலம் தோறும் பெண் பற்றிய கருத்தாக்கங்கள் ஆய்வு நோக்கில் பேசப்பட்டு வருகின்றன. சங்ககாலந்தொட்டு பெண், பெண்மை, பெண்ணுரிமை, பெண் விடுதலை, பெண்ணியம், பெண்களின் வாழ்க்கைப் பரிமாணங்கள் என்று பெண் குறித்து சமூகவியல் பார்வை செலுத்தப்பட்டுள்ளன. சிறுகதை, புதினம், கவிதை, கட்டுரை, மொழிப்பெயர்ப்பு, இணையதமிழ் என்று பல இலக்கியக் களங்களில் பெண்கள் பற்றிய நிலைகள் பேசப்பட்டு வருகின்றன.

பெண்களின் நிலை குறித்து பெண்களின் போராளி பெரியார் கீழ்க்காணும் நிலையில் எடுத்துக்காட்டுகின்றார். ஒர் ஆணுக்கு சமையல்காரியாகவும், ஓர் ஆணின் வீட்டிற்கு ஒரு வேலைக்காரியாகவும், ஓர் ஆணின் குடும்ப பெருக்கத்திற்கு ஒரு பிள்ளை விளைவிக்கும் பண்ணையாகவும் என்பதல்லாமல் பெண்கள் பெரிதும் எதற்குப் பயன்படுகிறார்கள், பயன்படுத்தப்படுகிறார்கள் என்று பெண்களின் நிலையினை வெளிப்படுத்திக் காட்டுகின்றார். பெண்களின் விடுதலைக்காகவும், பெண்கள் எதிர்கொள்ளும் சிக்கல்களை நீக்குவதற்காகவும், பெண்ணியப் போராளிகள் குரல் கொடுத்து வருகின்றனர். பாரதியார், பாரதிதாசன், பெரியார், கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை போன்றவர்களையும் கடந்து பல பெண்களும் பெண்ணுரிமைக்காகப் பேசுகின்றனர். இந்நூற்றாண்டில் பெண்களின் சிக்கல்களை இலக்கியங்களாக ஆண் படைப்பாளர்களும், பெண் படைப்பாளிகளும் பதிவு செய்து வருகின்றனர்'1. அவ்வகையில் ஆசிரியர் மீரான் மைதீன் தனது 'கவர்னர் பெத்தா' என்ற சிறுகதை தொகுப்பில் பெண்களின் சமூக நிலைப்பாட்டினை இனங்காணும் வகையில் படைத்துள்ளார்.

## பெண்ணியமும் குறிக்கோளும்

இன்றைய சூழலில் பெண்ணியவாதிகள் பெண்ணியத்தை இன சமூக கலாச்சார மத எல்லைகளைக் கடக்கும் அடிப்படை இயக்கமாகவே கருகிறார்கள். பெண்ணியம் பல்வேறு குறிக்கோள்களை கொண்டது.

- பெண்ணியம் என்பது அனைத்து வகைப்பெண்களுக்கும் சமஉரிமை கிடைக்கப் போராடுதல்
- ஆண், பெண் இருபாலரும் சமத்துவ உரிமைகளை ஒன்றாக இணைந்து நிலைநாட்டுதல்
- போதிய விழிப்புணர்வை ஏற்படுத்துதல்
- பொருளாதார சுதந்திரம் பெற்றுத் தருதல்
- ஆணாதிக்கத்தைக் கண்டறிந்து அகற்றுதல்
- பெண்களின் மீதான ஒடுக்குமுறைகளை களைதல்
- பெண்களின் நலனைப் போற்றிப் பாதுகாக்கும் சட்டங்களை வடிவமைத்து செயல்படுத்துதல்

போன்ற குறிக்கோள்களைக் கொண்டு பெண்ணியம் ஒரு இயக்கமாக அடையாளம் காணப்படுகிறது.

## கவர்னர் பெத்தா என்னும் சிறுகதையில் பெண்களின் சமூகநிலை

இந்த ஆய்வுக்கட்டுரையில் பெண்களின் சமூகநிலையை ஆராயும் பொருட்டு ஆய்வுக்கு உட்படுத்தப்படும் 'கவர்னர் பெத்தா' என்ற சிறுகதை தொகுப்பின் ஆசிரியர் மீரான் மைதீன் அஜ்னபி, ஓதி எறியப்படாத முட்டைகள், ஒச்சை, மஜ்னூன் என்ற நாவல்களும் கவர்னர் பெத்தா என்ற சிறுகதை உள்பட ரோசம்மாபீவி, சித்திரம்காட்டி நகர்கிறது கடிகாரம், பலாமரம் நிற்கும் வீட்டிற்குக் கிளிம்பிக் கொண்டிருக்கிறான் என்ற சிறுகதை தொகுப்புகளையும் எழுதிய எழுத்தாளர் ஆவார். இந்த சிறுகதைத் தொகுப்பில் தங்கக்கால், சம்மந்தக்குடி, கவர்னர் பெத்தா என்கிற சிறுகதையில் சமூகத்தில் பெண்களின் நிலை எவ்வாறு அமைந்துள்ளது என்பது பற்றி அழகாகத் தன் கதையின் மூலம் உணர்த்தியுள்ளார். இஸ்லாமியச் சமுதாயத்தில் உள்ள பெண்களுக்கு அக்காலத்தில் பல கட்டுப்பாடுகள் இருந்ததை நாம் இச்சிறுகதையின் மூலம் அறியலாம்.

## பெண்களின் அறியாமை நிலை

சமுதாயத்தின் சில பழக்கவழக்கங்கள் ஏன் செய்கிறோம்? என்ற சிந்தனை இல்லாமலே காலம் காலமாக மக்களால் பின்பற்றப்பட்டு வருகின்றன. இத்தகைய கண்மூடிப் பழக்கமெல்லாம் மண்மூடிப் போகட்டும் என்றார். வள்ளல் இராமலிங்க அடிகளார். தொடர்ச்சியாக வந்த சில பழக்க வழக்கங்களையும், பொய்மைச் சாத்திரங்கள் கூறும் தவறான சடங்குகளையும் சுய சிந்தனை இல்லாமல் கண்மூடித்தனமாக நம்புவதும், செய்வதும் தவறு. புதுமைகளைச் சிந்தித்துச் சீர்தூக்கிப் பார்த்து நமக்கு ஏற்றதெனில் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

**'பழையன கழிதலும் புதியன புகுதலும்**
**வழுவல காலவகையினானே'** *2*

என்ற வரிகள் மொழியின் இலக்கண விதிக்குக் கூறப்பட்டது என்றாலும், நம் வாழ்க்கைக்கும் அது பொருந்தும். அதன் கருத்து, பழைய விதிகள் நீங்குதலும், புதிய விதிகள் ஏற்படுதலும் உண்டு. அது தவறல்ல. அது காலத்தின் தன்மைக்கேற்ப மாறும்.

'தங்கக்கால்' என்னும் கதையில் பாத்திமுத்து சுகரா என்ற பெண்ணிற்கு ஏற்பட்ட தீராத கால்வலிக்குப் பல மருத்துவமனைக்குச் சென்றும் வலி தீரவில்லை. அறுபது வயது மதிக்கதக்க பெண்மணி. ஆனால் நல்ல உடல் ஆரோக்கியத்தோடு இருப்பது போன்ற உடல் தோற்றம். மருத்துவம் பார்த்தும் வலி தீரவில்லை என்றபோது அங்கு மூடநம்பிக்கையினால் ஏற்படுகின்ற அறியாமை புகுந்து கொள்கிறது.

மருத்துவமனைக்குப் பார்க்க வந்த பாத்திமுத்துவின் உறவினப்பெண்,

**'பிள்ளே.... நோயுக்கும் பார்க்கணும்..... பேயுக்கும்**
**பாக்கணும் எனக்கு பாக்க நோய் மாதிரி தெரியலே**
**சொல்லத சொல்லிட்டேன், பாக்கதும் பாக்காததும்**
**ஒனக்க இஷ்டம்.....'** *3*

என்று கூறினாள். இங்குக் குறிப்பிட்டுள்ள கதையின் வரிகளில் இருந்து மருத்துவத்தை விடவும் இதுபோன்ற நம்பிக்கைகள் மீது கொண்டுள்ள அறியாமை வெளிப்படுகிறது.

*அச்சத்தின் அடிப்படையில் ஏற்படும் பேய், மந்திரம், தந்திரம் இவற்றைப் பற்றிய நம்பிக்கை ஒழிய வேண்டும் என்கிறார் பாரதியார்.*

**'நெஞ்சு பொறுக்கு தில்லையே - இந்த**
**நிலைகெட்ட மனிதரை நினைந்துவிட்டால்**
**அஞ்சி அஞ்சிச் சாவார் - இவர்**
**அஞ்சாத பொருளில்லை அவனியிலே**
**வஞ்சனைப் பேய்கள் என்பார் - இந்த**
**மரத்தில் என்பார், அந்தக்குளத்தில் என்பார்**
**துஞ்சுது முகட்டில் என்பார், மிகத்**
**துயர்ப்படுவார் எண்ணிப் பயப்படுவார்'** *4*

*என்ற வரிகளின் மூலம் அச்சத்தில் உழன்று செய்வதறியாது திகைத்து நின்ற தம் சமகால இந்திய மக்களை எண்ணி நெஞ்சு வெதும்பி கூறுகிறார்.*

*இத்தகைய அறியாமை நிலை ஆண்களைவிட பெண்களையே அதிகமாகச் சூழ்ந்துக் கொள்கிறது. அறியாமையை அகற்றினால் மட்டுமே ஒரு பெண் தன்னிச்சையாக இவ்வுலகில் வாழமுடியும் என்பதை உணர வேண்டும்.*

## பெண் கல்வி

*சமுதாயத்தின் ஓர் அங்கமாகச் சரிபாதியாக திகழும் பெண்களுக்கு இச்சமுதாயமே பல பிரச்சனைகளை ஏற்படுத்தி வருகின்றது. அவற்றுள் ஒன்று பெண்கல்வி மறுக்கப்படல் ஆகும். இதன் காரணமாக ஒரு பாதி மக்கள் இருளிலும், ஒரு பாதி மக்கள் ஒளியிலும் வாழக்கூடிய அவலநிலை காணப்படுகின்றது. மேல்நாட்டு மக்களிடையே இவ்வேறுபாடு பெரும்பாலும் காணப்படுவதில்லை.*

*அதிகாரம் அறிவினால் கட்டப்படுகின்றது. இதனால் இயற்கையாகவே ஆண், பெண் உறவு முறையில் ஏற்படும் அதிகாரப்போட்டியில் தனது மேலாட்சியை காட்ட முயன்ற ஆண் சமூகம் முதலில் பெண்ணுக்கான அறிவு வளர்ச்சியைக் கட்டுப்படுத்தியது. இதற்காகப் பல தந்திரங்களைக் கையாண்டுள்ளது. பால்ய விவாகம், கற்புக்கோட்பாடு தாய்மையைக் கொண்டாடுவது, குழந்தைப்பேறு என்று பெண்களுக்குக் கற்பிக்கப்பட்ட வாழ்க்கை முறையைத் திணிக்கின்றார்கள். இது பெண்களின் அறிவு வளர்ச்சிக்குத் தடையாக அமைந்ததுடன் சுமையாகவும் மாறிவிடுகின்றது.*

*இஸ்லாம் ஆண், பெண் ஆகிய இருபாலருக்கும் கல்வி கற்பது அவசியம் எனக் கூறுவதாக எடுத்துரைக்கப்பட்டது. ஆனால் இஸ்லாமியச் சமுதாயத்தில் அன்று பெண்கள் முற்றிலும் கல்வியறிவு பெறவில்லை என்பது மீரான் மைதீன் படைப்புகளிலிருந்து தெரிகிறது. 'கவர்னர் பெத்தா' என்ற சிறுகதையில் கவர்னர் பாத்திமா பீவி என்ற பெண் இஸ்லாமிய சமுதாயத்தைச் சேர்ந்தவர் கவர்னர் அவ்வூருக்கு வருகை தர இருந்தார். அப்பொழுது தான் அங்குள்ள வயதான பெண்கள் அனைவரும் வியப்பாகச் செய்தியை கேட்டுக்கொண்டு இருந்தனர். பீர்மா பெத்தா என்ற வயதான பெண் கதையின் நாயகி என்றே கூறலாம். படிக்க ஆசை இருந்தும் வீட்டில் உள்ள பெற்றோரே படிக்க வைக்காமல் திருமணம் செய்து வைக்கும் நிலையே அங்கும் காணப்பட்டது. கவர்னர் வருகையை பார்த்துவிட்டுச் சென்று பீர்மா பெத்தா,*

**’நாசமா போனதுவோ.... நம்மள படிக்க வைக்காம**
**உட்டுட்டுதுவோ.... நம்மள மாதித்தானே இருக்கா...**
**எங்கம்மாகாரி நெலையளிஞ்சி நின்னுட்டா**
**பள்ளிகோடத்துக்குப் போட்டாளான்ன கேட்டதுக்கு....**
**பொட்ட புள்ள படிச்சி பெரிய கவர்னராட்டா ஆவப்பொற**
**ன்னா...’** *5.*

என்று மரியம் பெத்தாவிடம் கூறினாள்.

கதையின் இந்த வரிகளிலிருந்து பெண்கள் கல்வி மேல் ஆர்வம் இருந்தும் கல்வி மறுக்கப்பட்ட நிலையை நாம் அறியலாம்.

மீரான் மைதீன், சமுதாயத்தில் உள்ள இன்றையப் பெண்கள் கல்வியின் முக்கியத்துவத்தை உணரும் வகையில் கவர்னர் ஒரு பெண்ணாக இருப்பினும் கல்வியினால் அவர் அடைந்த நிலையையும் உணர்த்தி, படிக்காத பெண்களின் சமூக நிலையையும் வேறுபடுத்தி காட்டுகிறார். இக்கதையின் சில பெண்கள் பள்ளிக்கூடத்திற்குச் சென்றிருந்தும் பாதி வகுப்பிற்கு மேல் செல்வது தடைச் செய்யப்பட்டிருந்ததையும் நாம் அறியலாம். இதனை,

'செய்தூன் பெத்தா பேப்பரைக் கொண்டு வந்து பீர்மாவிடம் கொடுத்தாள். கவர்னர் பற்றிய செய்தியும் போட்டோவும் இருந்தது. எல்லாரும் படத்தை உற்றுப் பார்த்தார்கள். பீர்மாவுக்கு படிக்கத் தெரியாது. மரியத்துக்கும் அப்படித்தான், செய்தூனும் சேனதம்மாவும் எழுத்துக் கூட்டிப் படிப்பார்கள். எல்லாரும் முண்டியத்து அந்தப் பேப்பர் துண்டை எச்சி ஒழுக உற்றுப்பார்த்தனர்'**6.**

என்ற கதையின் வரிகளின் மூலம் ஆசிரியர் சமூகத்தில் காணப்பட்ட பெண்கல்வியின் நிலையை வெளிக்கொண்டு வர தவறவில்லை. 'இலக்கியம் எழுதுகின்றவன் தனி ஆளாக இருப்பினும் அது பயன்படுவது சமுதாயத்திற்குதான், சமுதாயத்தின் விளைபொருளை இலக்கியம். இலக்கியம் சமுதாயத்தையும் சமுதாயம் இலக்கியத்தையும் பாதித்தே வளர்ந்துள்ளன. எழுத்தாளன் சமுதாயத்தைச் சார்ந்தவன். ஒரு சமுதாயப் பார்வை கொண்டவன் என்பது அவனது படைப்புகளிலிருந்து தெளிவாகிறது'**7.**

பாரதிதாசன் போன்ற பல கவிஞர்கள் பெண் கல்விக்கு ஆதரவாக வலிமையான பாடல்களை எழுதினார்.

**’கல்வி இல்லாத பெண்கள் களர்நிலம்**
**அந்நிலத்தில் புல் விளைந்திடலம்! நல்ல**
**புதல்வர்கள் விளைதல் இல்லை!’** *8*

என்னும் பாடலை உதாரணமாகக் குறிப்பிடலாம்.

அவ்வகையில் தான் பெற்ற பிள்ளைகள் ஆணாக இருந்தாலும் பெண்ணாக இருந்தாலும் அவர்கள் இருவரையும் சம நோக்குடன் அவர்களை பராமரிக்க வேண்டும். பெண் வாழ்வு ஏற்றம் பெற கல்வி ஒன்றே வழி என பல சமூக நலவாதிகள் அன்றுமுதல் இன்றுவரை தன் படைப்புகளின் மூலம் வலியுறுத்தி வருகின்றனர்.

## பெண்ணுரிமை மறுக்கப்படல்

பாரதி விடுதலைப் பெண்களுக்குச் சில சமூக உரிமைகள் வேண்டும் என்று பட்டியலிட்டுக் காட்டியுள்ளார்.

- பால்ய மணம் கூடாது
- பெண்கள் தாங்கள் விரும்பியவரை மணம் செய்து கொள்ளும் உரிமை உண்டு. அதைப் பெற்றிருக்க வேண்டும். அவர்கள் விருப்பத்திற்கு மாறாகப் பிடிக்காத ஒருவரை வற்புறுத்தி மணம் செய்விக்கக்கூடாது.

> **’வற்புறுத்திப் பெண்களைக் கட்டிக்கொடுக்கும் வழக்கத்தைத்**
> **தள்ளி மிதித்திடுவோம்’** 9.

என்று குரல் கொடுக்கின்றார்.

'சம்மந்தக்குடி' என்ற கதையில் மூத்தமகள் ஜெரினாவிற்கு வரன் பார்க்கையில் பெற்றோர்கள், அப்பெண்ணின் விருப்பத்தைக் கேட்பதாக ஆசிரியர் குறிப்பிடவில்லை. பெற்றோருக்குத் தான் நேர்ந்தெடுக்கும் மருமகன் மற்றவர்கள் பெருமையுடன் பார்க்க வேண்டும் என்று எண்ணுவதாக அமைந்துள்ளது.

இதனை,

'அரேபியா மாப்பிள்ளை அஸ்மாவுக்குப் பிடித்துப் போய்விட்டது. அந்த அரேபியா மாப்பிள்ளைக்கே மகளைக் கட்டிக்கொடுக்க வேண்டும் என்பது அஸ்மாவின் தவமாக இருந்தது. பேச்சுவார்த்தையில் சிக்கல் ஏற்பட்டபோது மொய்து சாகிபு துணிந்து விட்டார். என்ன விலை ஆனாலும் அரேபியா மாப்பிள்ளையை அமுக்கிவிட வேண்டும்'.

என்ற கதையின் வரிகள் பெற்றோரின் விருப்பத்தை மட்டுமே உணர்த்துகின்றன.

மாப்பிள்ளை எந்த தொழில் செய்தாலும் பரவாயில்லை. படித்தவனா? பரவாயில்லை. ஆனால் வெளிநாட்டில் வேலை செய்கிறான் என்றால் எதுவும் பார்க்காமல் திருமணம் செய்து வைத்துவிடும் பழக்கம் சமூகத்தில் காணப்பட்டுள்ளது என்பதை ஆசிரியர் உணர்த்தியுள்ளார்.

பெண்களுக்கான கட்டுப்பாடுகளை அடுத்தடுத்த தலைமுறைக்குக் கொண்டுச்செல்ல வீட்டில் மூத்த பெண்களையே பழக்கி வைத்திருக்கிறார்கள். வீட்டிற்கு வரும் விருந்தாளிகளிடம் பெண் பிள்ளைகள் எவ்வாறு நடந்துக்கொள்ள வேண்டும் என்று சொல்லி கொடுக்கிறார்கள். ஆனால் ஆண்பிள்ளைகள் கவலையின்றி விளையாடிக்கொண்டு இருக்கின்றனர். பெண்ணிற்கு என்று தனித்தீர்மானங்கள் வைத்திருக்கிறது குடும்பம்.

## குடும்பத்தில் பெண் உணர்வின் வெளிப்பாடுகள்

ஆசிரியர் மீரான் மைதீன் தன் சிறுகதையின் மூலம் பெண்களின் இயல்பு நிலைகள், எதிர்கொண்ட பிரச்சனைகள், அடைந்த இன்னல்கள், ஏமாற்றங்கள், அடைந்துக்கொள்ள முடியாத ஆசைகள் அதனால் ஏற்படும் வலிகள் என்று அனைத்து கருத்துக்களையும் குறுகிய பகுதிக்குள் அழகாக எடுத்துரைக்கிறார்.

'சம்மந்தக்குடி' சிறுகதையில் மணவறையில் நறுமணம் காயும்முன் மனைவியை விட்டுப் பல ஆண்டுகள் பிரிந்து பிழைப்பிற்காகச் செல்லும் அரேபியா கணவன், அதனால் பெண்கள் அடையும் துயரங்கள் போன்றக் கருத்துக்கள் இடம்பெற்றுள்ளன.

'கல்யாணம் முடிந்த நாற்பதாவது நாள் கதவுக்குப் பின்னால் கண்ணீரோடு நின்ற ஜெரினாவின் கண்ணீரைக் கூட துடைக்க முடியாதவனாய்ச் சலீம் அரேபியாவுக்குப் புறப்பட்டுப் போனான். இருபது நாட்களுக்குப்பிறகு கடிதம் வந்தது. சுகசெய்திகளுக்குப் பிறகு உம்மாவின் சொல் கேட்டு நடக்க வேண்டும் என்று சலீமின் ஆணை. அவள் உண்டானதை உணர்ந்தபோது அவளின் அகம் சலீமின் முகத்தைத் தேடியது'11.

என்ற வரிகள் பெண்ணின் ஆசைகளும் வலிகளும் கண்ணீராக வெளி வருவதை ஆசிரியர் எடுத்துரைத்துள்ளார்.

பெண்கள் திருமணத்திற்குப் பின்பு தந்தையையும், சகோதரனையும் சார்ந்தும் பின்னர் கணவனையும், மகனையும் சார்ந்தும் வாழ்ந்து அவர்கள் வாழ்வை முடித்துக் கொள்கிறார்கள். கல்வி என்பது அவர்களுக்கு மறுக்கப்பட்டதால் தொழில் என்று வெளியே செல்வதற்கும் வாய்ப்பு இல்லை. அத்தகைய தருணத்தில் தன் தேவைகளைத் தன்னைச் சார்ந்த ஆண்களின் உதவியால் பூர்த்தி செய்து கொள்கிறாள். அதுவும் சில நேரம் கிடைக்கப் பெறாமல் மௌனமாகி விடுகிறாள். இதனைக் கவர்னர் பெத்தா என்ற கதையில் வரும் உரையாடலின் மூலம் அறியலாம்.

**'மௌனே...'**
**நிமிர்ந்து பார்த்தான்**
**'எனக்கொரு பட்டுகசவு வச்ச கவுணியும் சட்டையும்**
**தச்சி தாலே....'**
**'இப்போ எதுக்கு...'**
**'எனக்கு வேணும்....'**
**'பெருநாளுக்குதானே எடுத்தோம்..... அதுக்கெடையில**
**இப்போ எதுக்கு....'**
**பீர்மாவுக்கு என்ன சொல்வது எனத் தெரியவில்லை மௌனமாக நின்றாள்'12.**

என்ற உரையாடலில் தாயின் ஆசையை நிராகரிக்கும் மகனின் செயலை நாம் உணர முடிகிறது. இவ்வாறு பெண்கள் பிறரைச் சார்ந்து வாழும் நிலையில் தனது ஆசைகளை நிறைவேற்ற முடியாமல் தவிக்கும் மனவலி அவர்கள் கண்ணீரினால் வெளிப்படுகிறது.

**முடிவுரை**

இங்கு ஆய்வுக்கு உட்படுத்தப்பட்ட சிறுகதையான 'கவர்னர் பெத்தா', பெண்கள் சமூகத்தில் எந்த நிலையில் இருந்தார்கள் என்பதைப் பல கூறுகளாகக் காட்சிப்படுத்தி உள்ளது. ஆசிரியர் மீரான் மைதீன் பெண்ணீன் மனநிலையை சிறந்த உரையாடல்களின் மூலம் கொண்டு செல்வதால் எளிதில் உணரும் வகையில் அமைந்துள்ளது.

பல கனவுகளோடு வரும் பெண்கள் திருமணத்திற்குப் பின்பு குழந்தை, குடும்பம், சமையலறை என்ற குறுகிய வட்டத்திற்குள் அடங்கி விடுகிறார்கள். அவளின் மனவலியும்

வெளியே கேட்டது இல்லை. கல்வியானது சரிவரை கிடைக்கப்பெறாத வலிகள், ஆசைப்பட்டதை அடைய முடியாத கொடுமைகள், பெண்ணுக்குப் பெண்ணே எதிரி என்பது போல் புகுந்த வீட்டில் ஏற்படும் அவலநிலை, கல்வியறிவு இல்லாததனால் ஏற்படும் அறியாமை என்ற அனைத்து சூழ்நிலையிலும் பெண்கள் அகப்பட்டு கொள்கிறார்கள். இத்தகைய சூழ்நிலையை இந்த சிறுகதையின் மூலம் அழகாக எடுத்தியம்பியுள்ளார் ஆசிரியர். பெண்களின் வெவ்வேறு நிலையைத் தனது கதையின் மூலம் வேறுபடுத்தி காட்டியுள்ளார். இவ்வாறு சமூகத்தில் பெண்களின் நிலை எத்தகைய கொடுமைகளைச் சந்தித்து உள்ளது என்பதை நுணுகி ஆராய முடிந்தது.

# திருக்குறள் களவியல் காட்டும் தலைவியின் பண்புகள்

முனைவர் கு. சந்திரன்
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
மன்னர் சரபோசி அரசுக் கலைக்கல்லூரி, தஞ்சாவூர்.

வள்ளுவனது காமத்துப்பால் களவியல், கற்பியல் எனும் இருபெரும் பிரிவுகளை உள்ளடக்கியது. களவியல் தகை அணங்கு உறுத்தல் முதல் அலர் அறிவுறுத்தல் ஈறாக ஏழு அதிகாரங்களைக் கொண்டது. கூற்று அடிப்படையில் குறட்பாக்கள் அமைந்துள்ளன. இத்தகைய களவியலில் இடம்பெறும் தலைவியின் பண்புநலன்கள் குறித்து இக்கட்டுரை ஆராய்கிறது.

## தலைவியின் பண்புகள்

அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்ற பெண்களின் பண்புகளைத் தலைவி பெற்றிருந்தாலும் வள்ளுவன் வழி வேறு சில குணங்களுடன் தலைவி காட்சிப் படுத்தப்படுகின்றாள்.

## மென்மொழியாள்

பாலும் இனிமையானது, தேனும் இனிமையானது. இவை இரண்டினையும் விட இனிமையானது, பணிவு ததும்ப மென்மையான சொற்களால் பேசும் தலைவியின் பேச்சு என்பதை

பாலொடு தேன்கலந்த தற்றே பணிமொழி
வாலிஎயிறு ஊறிய நீர்1 (குறள்.1121)

என்ற குறள்வழி உணர முடிகின்றது.

*பணிமொழி என்றதனால் தலைவியின் பணிவையும் எடுத்துக்காட்டுவதாக அமைகின்றது. பாலினும் தேனினும் இனிய மொழியைப் பேசுபவள் தலைவி என்பதை அறிய முடிகின்றது.*

**நாணமுடையவள்**

*தலைவி நாணம் கொண்டதைச் சில குறட்பாக்கள் எடுத்துரைக்கின்றன. அவளது நாணம் பார்வை வழியாக வெளிப்பட்டதை அறிய முடிகின்றது.*

*தலைவன் தலைவியைப் பார்க்கின்றான். அவள் தலைவனை நேருக்குநேர் பார்க்காமல் நிலத்தைப் பார்க்கிறாள். தலைவன் உற்றுநோக்கிப் பார்க்காத போது, தலைவி தலைவனை முழுமையாகப் பார்த்து தன்னுள் இன்புறுவதை,*

**யான்நோக்கும் காலை நிலன்நோக்கும் நோக்காக்கால்**
**தான்நோக்கி மெல்ல நகும்2** (*குறள். 1094*)

*என்ற குறள்வழி ஆராய இடமளிக்கின்றது.*

*தலைவன் பார்க்காத போது தலைவி அன்பொழுக நாணத்துடன் பார்த்த பார்வை தலைவனின் அன்பை வேண்டின. அவ்வாறு பார்வை வழி காட்டிய குறிப்பு இருவருக்குமுள்ள அன்பாகிய பயிரை வளர்ப்பதற்குரிய நீரை ஊற்றின என்பதை,*

**நோக்கினாள் நோக்கி இறைஞ்சினாள் அஃது அவள்**
**யாப்பினுள் அட்டிய நீர்3** (*குறள்.1093*)

*என்ற குறள்வழியாக அறியமுடிகின்றது. தலைவியின் நாணத்துடன் கூடிய பார்வை, அன்பை வளர்ப்பதற்குரிய நீராகவும் அமைந்தது என்பதை அறிய முடிகின்றது.*

**அன்புடையாள்**

*கணவன் மேல் அன்பு கொண்டு வாழும் மனைவியர் உண்டு. வள்ளுவன் காட்டும் தலைவியின் அன்பு இயல்பான நிலையிலிருந்து மாறுபட்டுக் கற்பனை நிலையில் அமைந்துள்ளது.*

*நுட்பமான தன்மையுடைய தலைவனை, தலைவியின் மனதிலும் நினைவிலும் இருப்பான். தலைவியின் கண்களை விட்டு ஒருபோதும் வெளியேற மாட்டார். இமைத்தாலும் தலைவி தன் கண்களில் வைத்துத் தலைவனைப் பாதுகாக்கின்ற நிலையை,*

**கண்ணுள்ளின் போகார் இமைப்பின் பருவரார்**
**நுண்ணிய எம்காத லவர்4** (*குறள்.1126*)

*என்ற குறள்வழி அறிய முடிகின்றது.*

*கண்ணினுள் தலைவன் இருப்பதால் அவருக்குத் துன்பம் ஏற்படும் என எண்ணி மையிடவில்லை. கண்களுக்கு மையிடும் போது தலைவனின் திருஉருவம் மறைந்து விடும் என வருந்திய தலைவியின் அன்பை,*

**கண்உள்ளார் காதல் வராகக் கண்ணும்**
**எழுதேம் கரப்பாக்கு அறிந்து5** (*குறள்.1127*)

*என்ற குறள் வழியாகவும்,*

*தலைவன் நெஞ்சினுள் உறைவதால் அவரைச் சுட்டுவிடும் என்பதால் சூடான உணவை உண்பதில்லை என்ற தலைவியின் அன்பு நிலையை,*

**நெஞ்சத்தார் காதல வராக வெய்துண்டல்**
**அஞ்சுவதும் வேபாக்கு அறிந்து6** (*குறள்.1128*)

*என்ற குறள் வாயிலாகவும் அறிய முடிகின்றது.*

### நற்குணமுடையாள்

*அழகு என்பது காலத்திற்கேற்ப மாறக் கூடியது. அழியவும் கூடியது. ஆனால் குணமொன்றே கடைசிவரை நிலைபெறக் கூடியது. போற்றக் கூடியது.*

*தலைவி ஒளிபடைத்த அழகிய கண்களைக் கொண்டிருந்தாலும் அவளின் நற்குணங்களைத் தலைவன் மறப்பதுமில்லை. மீண்டும் நினைப்பதுமில்லை. மறக்காமல் எப்போதும் நினைத்துக் கொண்டிருப்பதை,*

**உள்ளுவன் மன்யான் மறப்பின் மறப்பு அறியேன்**
**ஒள்அமர்க் கண்ணாள் குணம்7** (*குறள்.1125*)

*என்ற குறள் தெளிவுபடுத்துகின்றது.*

*குணம் என்பதற்கு அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்று வரையறை கூறுவார் பரிமேலழகர். நற்குணமுடைய தலைவியை வள்ளுவள் வழியாக அறிய முடிகின்றது*

### தலைவியின் காதல் பின்பு

*தலைவன், தலைவி கண்ணில் இருப்பதால் இமைக்காமல் இருக்கின்றாள். இமைத்தால் மறைந்துவிடுவார் என எண்ணித் தலைவி உறங்கவில்லை. உறங்காது போனதால் வாடி வதங்கும் தன்னைப் பார்த்து, இதற்குக் காரணம் அன்பில்லாத தலைவனே என ஊர் மக்கள் பழிப்பதை,*

**இமைப்பின் கரப்பாக்கு அறிவல் அனைத்திற்கே**
**ஏதிலர் என்னும் இவ் ஊர்8** (*குறள்.1129*)

*என்ற குறள் வழியாகவும்,*

*தலைவி உள்ளத்தில் தலைவன் வசித்து வருகிறான். அருகில் இல்லை. உள்ளத்தில் குடிகொண்டிருப்பதை அறியாது, பிரிந்து தொலைவில் உள்ளான் என எண்ணிய ஊர்மக்கள் தலைவனை அன்பில்லாதவன் என்ப் பழிப்பதை,*

**உவந்து உறைவர் உள்ளத்துள் என்றும் இகந்துஉறைவர்**
**ஏதிலர் என்னும் இவ் ஊர்9** (*குறள்.1130*)

*என்ற குறள் வழியாகவும் அறிய முடிகின்றது.*

### தலைவியின் மடலேறாப் பண்பு

*தலைவி மேலுள்ள காமத்தை அனுபவித்துத் துன்புற்ற தலைவன், தலைவியை அடைய ஒரே வழி மடலேறுதல் என எண்ணுகிறான். மடலேறத் துணிந்ததற்குத் தலைவன்*

தலைவிமேல் கொண்ட அன்பே காரணமாகும். தலைவியின் அன்பால் தலைவன் மடலேறத் துணிந்தான் என்பதை ஐந்து குறட்பாக்கள் தெளிவுபடுத்துகின்றன.

தலைவன் நாணத்தை விடுத்து மடலேறத் துணிந்தான். கடல் போன்ற கமத் துன்பத்தால் வாடினாலும் தலைவி நாணத்தை விடுத்து மடலேறும் பழக்கம் உடையவள் அல்ல என்ற பெருமைக்குரியவள் என்பதை வள்ளுவர்,

**கடல்அன்ன காமம் உழந்தும் மடல்ஏறாப்**
**பெண்ணின் பெருந்தக்கது இல்10** *(குறள்.1137)*

என்ற குறள்மொழி எடுத்துரைப்பதிலிருந்து தெளிய முடிகின்றது.